தொல்காப்பியம்

உரைவளம்

பொருளதிகாரம்

களவியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொகுப்பும் குறிப்பும்
ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம்—பொருளதிகாரம்

(உரைவளம்)

களவியல்

தொகுப்பாளர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பிய [redacted] — வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு - 24

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Tolkāppiyam — Kaḷaviyal
Editor	:	A. SIVALINGANAR
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Madras-600 113.
Publication No.	:	212
Language	:	Tamil
Date of Publication	:	May 1995
Edition	:	First
Paper Used	:	Tamil Nadu Creamwove(m) 16kg
Size	:	21 × 14 cms
Printing types	:	10 point
No. of Copies	:	1200
No. of Pages	:	XII + 488
Price	:	Rs. 85/-
Printers	:	Pavai Printers Pvt. Ltd., Madras-14, Phone: 832441
Subject	:	Compilation of the Commentaries on Tolkāppiyam — Kaḷaviyal.

டாக்டர் ச சு. இராமர் இளங்கோ
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
சென்னை-113.

முன்னுரை

'என்றிவள் பிறந்தவள் என்றுலகறியா' தமிழ்த்தாயின் பெருமையை எடுத்தியம்பும் முதல் நூல் தொல்காப்பியம் ஆகும். எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமின்றி வாழ்வியலுக்கும் இலக்கணம் கூறும் நூல் தொல்காப்பியம். அந்நூலின் சிறப்பை விளக்கும் முகத்தான் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்களைக் கொண்டு தொல்காப்பியத் திட்டப் பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டது.

சிறப்புப்பாயிர உரை விளக்கத்துடன் எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களுக்கும், சொல்லதிகாரம் ஒன்பது இயல்களுக்கும் அவர் எழுதிய விளக்க உரைகள் முன்னரே வெளிவந்துள்ளன.

தொல்காப்பியம்—பொருளதிகாரம் தொடர்பான பொருளியல் உரைத் தொகுப்பும் 1994ல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் தொகுத்த தொல்காப்பியம்—களவியல் உரைவளம் என்னும் நூல் தற்போது வெளிவருகிறது.

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த பழம்பெரும் உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் மற்றும் பேராசிரியர் வெள்ளை வாரனார் முதலியோர்களுடைய உரைகளையும், தொல்காப்பியத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார் அவர்கள் எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்பையும் தக்க இடத்தில் தொகுப்பாசிரியர் மேற்கோள் காட்டுவதுடன் முற்கால இலக்கணம், பிற்கால இலக்கணம் முதலியவற்றை ஆங்காங்கே பொருந்தக்காட்டி தனது குறிப்புரையையும் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் கையெழுத்துப் படிகளைச் செம்மையான முறையில் மூல நூல்களோடு ஒப்பிட்டுப் பார்த்து திருத்தம் செய்தும் நூலின் முற்பகுதியில் அமைந்துள்ள சுருக்க விளக்கம், சூத்திர நுவல் பொருள் களவியலில் தொல்காப்பியர் உணர்த்திய வாழ்வியல் கூறுகள் ஆகியவற்றையும், நூலின் பிற்பகுதியில் அமைந்துள்ள சூத்திர முதற் குறிப்பு அகராதியையும் தொகுத்தெழுதிய முனைவர் ஆர். ஆளவந்தார் அவர்களுக்கும், இந்நூலைக் கவினுற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கும் நன்றி உரியது.

தொல்காப்பிய உரைவளத் திட்டத்தில் 24ஆவதாக இந்நூல் வெளிவருகிறது.

இயக்குநர்

சுருக்க விளக்கம்

அகம்.	—	அகநானூறு
ஆ.மொ.	—	ஆங்கில மொழி பெயர்ப்பு
இல.	—	இலக்குவனார்
இ.வி., இல.வி.	—	இலக்கண விளக்கம்
இளம்.	—	இளம்பூரணர்
இ-ள்.	—	இதன் பொருள்
இறை; இறையனராகப்.	—	இறையனார் அகப்பொருள்
உ-ம்.	—	உதாரணம்
எ-று.	—	என்றவாறு
என்-எனின்.	—	என் நுதலிற்றோ எனின்
ஐங்., ஐங்கு., ஐங்குறு.	—	ஐங்குறு நூறு
ஐந்திணையைம்.	—	ஐந்திணை யைம்பது
ஐந்திணை-எழு; ஐந்திணையெழு.	—	ஐந்திணை எழுபது
கம்ப. சூர்ப்ப.	—	கம்பராமாயணம் சூர்ப்பனகைப் படலம்
கலி., கலித்.	—	கலித்தொகை
களா.	—	களவியல்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
சிலப்-கானல்.	—	சிலப்பதிகாரம் கானல்வரி
சிவ.	—	சிவலிங்கனார்
தமிழ்; த.நெ.வி.	—	தமிழ் நெறி விளக்கம்
திணை-ஐம்.	—	திணைமொழி ஐம்பது
திணை. நூற்., திணை மாலை.திணை மாலை நூற்.	—	திணை மாலை நூற்றைம்பது
தொல். பொருள். கள.	—	தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்
நச்.	—	நச்சினார்க்கினியர்
நம்பி.	—	நம்பி அகப்பொருள்
நற்.	—	நற்றிணை
பி.இ.நூ.	—	பிற்கால இலக்கண நூல்கள்
பு.வெ-கைக்	—	புறப்பொருள் வெண்பாமாலை கைக்கிளைப் படலம்
பெருங்.	—	பெருங்கதை
மா. அ., மாறன்	—	மாறன் அலங்காரம்
முத்து.	—	முத்துவீரியம்
முத்து. கள.	—	முத்து-வீரியம் களவியல்
மெய்ப்., மெய்ப்பாட்	—	மெய்ப்பாட்டியல்
யா.வி.	—	யாப்பருங்கல விருத்தி
யா.வி.சூ.	—	யாப்பருங்கல விருத்தி சூத்திரம்
வெள்.	—	வெள்ளைவாரணனார்

சூத்திர நுவல் பொருள்

களவியலில்

தொல்காப்பியனார் உணர்த்திய வாழ்வியல் கூறுகள்

உலகில் உயிரினங்களில் மனித இனம் மட்டுமே பெற்ற தனிச் சிறப்பு அது பெற்றுள்ள மொழியேயாகும். கருத்தைப் பிறருக்கு அறிவிக்கவும், பிறர் கருத்தை அறியவும் மனிதன் மட்டுமே மொழியைப் பயன்படுத்துகிறான். பேசி அறிவித்து வந்தவன் கால வளர்ச்சியில் எழுதி அறிவிக்கவும் செய்தான்.

இவ் வுலகில் வழங்கி வருகின்ற மொழிகள் சுமார் தொள் ளாயிரத்துக்கு மேற்பட்டவை என்பர். அன்று முதல் இன்று வரை யும் அழிந்தொழியாமல் அமைந்தவை (எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், தமிழ் என்னும் ஐந்து மொழிகளே யாகும்) இவை உயர் தனிச் செம்மொழிகள் (classical languages) எனப் பெறும். அவ்வைந்தனுள் தமிழ் ஒழிந்த மற்ற நான்கு மொழிகளும் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே உலக வழக்கு அழிந்து ஒழிந்தன. ஆனால் தமிழ்மொழி ஒன்றுதான் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் அழிந்து ஒழியாமல் நிலை பெற்று வரும் பெருஞ் சிறப்பினையுடைய மொழியாக விளங்கி வருகிறது. உலக மொழிகள் கண்டிராத வாழ்வியல் கூறுகளாகிய அகப்பொருள் இலக்கணத்தையும், புறப்பொருள் இலக்கணத்தை யும் கொண்டு விளங்கி வருவதும் தமிழ்மொழி மட்டுமேயாகும்.

தொல்காப்பியர் இவ் வாழ்வியற் கூறுகளைத் தம் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் மூன்றாம் பகுதியாகிய பொரு ளதிகாரத்தில் கூறியுள்ளார். அவர் தாம் கூறும் வாழ்வியற் கூறு களில் ஒன்றாகிய அக வாழ்க்கையைப் பொருளதிகார அகத் திணையியல், களவியல், கற்பியல் என்ற மூன்று இயல்களில் கூறுகின்றார்.

ஒத்த குலமும் ஒத்த பண்புமுடைய காதலர்கள் ஒன்று பட்டுத் தாமே தேர்ந்து மணந்து கொண்டு இல்லறம் நடத்தும் உலகியல் வாழ்வியல் கூறுகளைக் கூறுவது களவியலும் கற்பிய லும் ஆகும். அவற்றுள் காதலர்கள் மணத்திற்கு முன்பு கண்டு கூடி இன்புற்று வாழும் களவொழுக்கத்தின் முறையைக் கூறும் இக் களவியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மூன்றாவது இயலாக அமைகிறது.

களவியலில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற நான்கு கூறுகளாகக் களவொழுக்கம் கூறப்படுகிறது.

ஒத்த குலமும் ஒத்த பண்புமுடைய காதலரிருவர் ஊழ்வலியால் தற்செயலாய்த் தாமே கண்டு கூடி இன்புறுதலே இயற்கைப் புணர்ச்சியாகும். காதலரிருவருள் காதலன் (தலைவன்) காதலி (தலைவி)யை விட குலத்திலும் பண்பிலும் மிக்கவனாக இருப்பினும் தவறில்லை.

இயற்கைப் புணர்ச்சியில் இன்பம் கண்ட காதலன் அடுத்த நாளும் 'தந்த தெய்வம் தரும்' என்று அங்கே சென்று, அவ்வாறே அதே நோக்கத்துடன் அங்கே வந்திருந்த காதலியைக் கண்டு கூடி இன்புறுதல் இடந்தலைப்பாடு ஆகும்.

இத் தகவலைத் தன் பாங்கனுக்குக் கூறி, அவன் மூலமாக அவள் அங்கே வந்திருப்பதை அறிந்து, அவ்விடம் சென்று, அவளைக் கண்டு கூடி இன்புறுதல் பாங்கற் கூட்டமாகும்.

இந் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அவளைத் தொடர்ந்து அடையும் வேட்கையால், காதலியின் உயிர்த் தோழியை அறிந்து, அவளை இரந்து வேண்டி, அத்தோழியின் உதவியால் தலைவியை அடைந்து கூடி இன்புறுதல் தோழியிற் கூட்டமாகும்.

களவுப் புணர்ச்சியில் தொடர்புடைய மாந்தர்களாகத் தலைவன், தலைவி, பாங்கன், தோழி, செவிலி, நற்றாய், தந்தை, தமையன்மார் என்ற எண்மர் களவு வாழ்வில் பங்கு பெறும் நிகழ்ச்சிகள் அமைந்துள்ள.

தலைவன்

ஊழ்வலியால் தலைவியை எதிர்ப்பட்ட பொழுது, அவள் அழகுச் சிறப்பைக் கண்டு வியந்து, அவள் மானிடப் பெண் அல்லள் தெய்வம் என்று ஐயுறுவான். அவள் அணிந்த மலரில் வண்டு மொய்த்தல், அவள் அணிந்துள்ள அணிகலன், கண் இமைத்தல், ஆண் மகனைக் கண்டு அஞ்சுதல் போன்ற செயல்களால் அவள் மானிடப் பெண்ணே என்று ஐயம் தவிர்வான்— பின்னர் அவள் கண் பார்வையால் அவள் குறிப்புணர்ந்து அவளை நெருங்கி மெய்தொட்டுப் பயிறல் போன்ற சில செயல்களால் இருவரும் உள்ள ஒத்த பண்பினராகிக் கூடி இன்புறுவர். பின்னர் பாங்கனிடம் கூறுதல், தலைவியின் உயிர்த் தோழியை

அறிதல், தோழியை இரந்து பின்நின்று வேண்டல், தலைவியை அடைந்து கூடி மகிழ்ந்து இன்புறுதல் போன்ற காலங்களிலும் தலைவியைப் பிரியும் பொழுது கலங்குதல் ஆகிய நிலைகளிலும் தலைவன் பேசும் நிலை களவு வாழ்க்கையில் இடம் பெறும். தலைவியைப் பெறாது காமம் கைம்மிக்க விடத்து மடலேறுவ தாகத் தலைவன் கூறுவதும் உண்டு.

தலைவி

தலைவனை எதிர்ப்பட்ட பொழுது தலைவனுக்கு நிகழ்வது போன்ற ஐயம் தலைவிக்கு நிகழாது. தலைவிக்கு ஐயம் நிகழ்ந் தால் அவளுக்கு அச்சம் தோன்றும் அது இயற்கைப் புணர்ச் சிக்குத் தடையாகும். தலைவி நாணமும், மடனும் உடையளா தலின், களவொழுக்கத்தில் குறிப்பான் அறிவித்தல் இன்றி வெளிப்படையாக வேட்கையைக் கூறமாட்டாள். களவொ ழுக்கக் காலத்தில் அவன் தலையளி மிகுதல் போன்ற சமயங் களில் தன்னிடம் உரிமையும், அவனிடம் பரத்தைமையும் தோன்றக் கூற வேண்டிய இடத்திலும், அயலார் மணம் பேசி வருதல் போன்ற இடத்திலும் தலைவியின் கூற்று நிகழ்தலும் உண்டு.

பாங்கன்

தலைவனின் உயிர்த் தோழன். ஆகவே தலைவனின் இரகசி யங்களை எல்லாம் அறிந்த இயல்புடையவன். தலைவனும் தன் செயல்களை அவனிடம் கூறி, அவன் மூலம் தலைவியை அடை தல் போன்ற நன்மைகளைப் பெறுவான்.

தோழி

தலைவியின் செவிலித்தாயின் மகள் தோழியாவாள். **தாய்த் தாய்க் கொண்டு உயிர் ஒன்றாய்** வருபவள். பாட்டிக்குத் தலைவி யின் செவிலித் தாயின் தாய் உயிர்த் தோழியாகவும், தாய்க்குச் செவிலித்தாய் உயிர்த் தோழியாகவும், தனக்கு அச் செவிலித் தாயின் மகள் தோழியாகவும் வருவது தாய்த் தாய்க் கொண்டு உயிர் ஒன்றாய் வரும் நிலையாகும். அகன் ஐந்திணைக் களவொ ழுக்கத்தில் தோழியின் பங்கு மிகச் சிறந்தது. இன்றியமை யாதது. இயற்கைப்புணர்ச்சி அறிந்து தோழியிற் கூட்டத்திற்கு உதவுதல் முதல் மணம் புரிந்து கொண்டு தலைவி தலைவன் இல்லம் செல்லும் வரை அவள் பணி இன்றியமையாதது. ‘உடன்போக்கு’ போன்ற காலங்களில் எல்லாம் குடும்பப் பண்

பிற்கும் பெருமைக்கும் இழுக்கு ஏற்படாதவாறு பணியாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உடையவள்.

செவிலி

நற்றாயின் தோழியே செவிலியாவாள். நற்றாய் போல் இருந்து தலைவியின் களவொழுக்கத்தைத் தன் மகள் மூலம் உணர்ந்து தானும் ஆய்ந்து அறிந்து, கவன்று, தலைவியைக் காக்க வேண்டிய முறையில் காத்து, நற்றாய்க்கு மரபு வழுவாமல் உணர்த்தி, அவள் மூலம் தந்தைக்கும் தமையன்மாருக்கும் உணர்த்தும் இயல்புடையவள்.

நற்றாய்

தன் ஐயத்தினாலும், செவிலியின் மூலமும் தன் மகளின் களவொழுக்கத்தினை உணர்பவள் நற்றாய். செவிலியைப் போலவே அதற்காக வருந்துவாள். தந்தைக்கும், தமையன் மாருக்கும் குறிப்பால் களவொழுக்கத்தினை உணர்த்துவாள். ஆனால் தந்தையைப் போலவோ தமையன்மாரைப் போலவோ சினம் கொள்ள மாட்டாள்.

தந்தை

நற்றாய்க் குறிப்பால் உணர்த்த, மகளின் களவொழுக் கத்தினை உணர்ந்தபொழுது சினமடைவான். பின்னர் ஆறுதலடைவான் மணத்திற்கு வேண்டிய செயல்களில் ஈடுபடுவான்.

தமையன்மார்

தந்தையைப் போலவே களவொழுக்கத்தினைக் குறிப்பால் உணர்ந்து சினம் கொள்வர். பின்னர் அடங்கி ஆறுதலடைவர்.

மணம்

களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல், வெளிப்பட்ட பின்னர் வரைதல் என மணம் இருவகையில் நிகழும். உடன் போக்கு நிகழும் காலங்களில் மணம் தலைவன் இல்லத்திலேயே நிகழ்வதும் உண்டு. அல்லது மீண்டு வந்து தலைவியின் இல்லத்தில் நிகழ்வதும் உண்டு.

உலகில் மனிதன் எப்படியாவது வாழ்ந்தால் போதும் (Survival of the fittest) என்ற கொள்கையுடன் வாழ்ந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் கூறுகளை இலக்கணமாகக் கொண்டு வாழ்ந்தனர் தொல்காப்பியர் காலத் தமிழ் மக்கள்.

தொல்காப்பியம்-பொருளதிகாரம்
(உரைவளம்)

களவியல்

களவு - யாழோர் கூட்டம்

89. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே (1)

ஆங்கில மொழிபெயர்ப்பு

இலக்குவனார்

In the five aspects of love interlinked with pleasure, wealth and virtue, the love-meeting is in the nature of one of the eight systems of the marriage of the vedic people, i.e., the marriage system of the celestials who find delight in the music of the lyre.

பிற்கால இலக்கண நூல்கள்

அவிநயம் (யா.வி. ஒழிபியல் 96)

மறைய அவர்க்கு மாண்டதோர் இடத்தில்
மெய்யுறு வகையுமுள் ளல்லது உடம்படாத
தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
களவெனப்படுவது கந்தருவ மணமே.

இறையனார் களவியல். 1

அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்.

நம்பி அகப்பொருள் 117

உளமலி காதற் களவெனப் படுவது
ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப.

தமிழ் நெறி விளக்கம் 14

முந்திய நூலோர் மொழிந்த எண் மணத்தினும்
கந்தருவ முறைமை களவெனப் படுமே.

முத்து வீரியம் 830

அவற்றுள் களவந் தணர்மறை மன்றல்
எட்டனுள் யாழோர் இயல்பின தாகும்.

இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், களவியல் என்னும் பெயர்த்து; களவொழுக்கம் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். அஃதாதல் ஈண்டு[1] உரைக்கின்றதனால் பயன் இன்றாம்; களவென்பது அறம் அன்மையின் [எனில்], அற்றன்று; களவு எனும் சொற் கண்டுழியெல்லாம் அறப்பாற் படாதென்றல் அமையாது. களவாவது, பிறர்க்குரியபொருள் மறையிற் கோடல், இன்னதன்றி, ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றலால் இஃது அறமெனப்படும். அன்னதாதல் இச்சூத்திரத்தானும் விளங்கும்.

அஃதற்றாக, மேலை ஒத்தினோடு இவ் வோத்திற்கு இயைபு என்னையெனின், மேல் கைக்கிளை முதற் பெருந்திணை இறுவாயாக எழுதிணை ஓதி அவற்றின் புறத்து நிகழுந்திணைகளும்[2]

1. ஈண்டு — அறவொழுக்கங்கூறும் இவ்வதிகாரத்தில்.
2. வெட்சி முதலிய ஏழு திணைகள்.

ஓதிப் போந்தார். அவ்வெழு திணையினும் ஒருதலை வேட்கை யாகிய கைக்கிளையும், ஒப்பில் கூட்டமாகிய பெருந்திணையும் ஒழித்து இருவரன்பும் ஒத்த நிலைமையாகிய நடுவண் ஐந்திணைக் கண்ணும் புணர்ப்பும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலு மாகிய உரிப்பொருள் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் நிகழுமாதலின் அவ்விருவகைக் கைகோளினுங் களவாகிய கைகோள் இவ்வோத்தினுள் உணர்த்துதலான் அவற்றின் பின் கூறப்பட்டது. இது நடுவணைந்திணைக் கண் நிகழும் பொருட் பாகுபாடாயின், அகத்திணையியலின் பின் வைக்கற்பாலது எனின், ஆண்டு வைக்கக் கருதின் ''வெட்சி தானே குறிஞ்சியது புறனே'' (புறத்திணை-1) என்னு மாட்டேறு பெறாதாம். அதனிடைக் களவியலும் கற்பியலும் கிடத்தலான் என்க.

மற்றும், அஃது யாங்ஙனம் உணர்த்தினாரோ எனின்,

''காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதன் மறையோர் ஆறே''
(செய்யுளியல்-178)

என்பதனான் இந்நால் வகையும் இதனுள் உரைக்கப்படுகின்ற தென்று கொள்ளப்படும். காமப் புணர்ச்சியெனினும், இயற்கைப் புணர்ச்சியெனினும், முன்னுறு புணர்ச்சியெனினும், தெய்வப் புணர்ச்சியெனினும் ஒக்கும். இவையெல்லாம் காரணப் பெயர். அஃதாவது[1], ஒத்தார் இருவர் தாமே கூடுங்கூட்டம். இடந் தலைப் பாடாவது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிற்றை ஞான்றும் அவ்விடத்துச் சென்று எதிர்ப்படுதல். பாங்கற் கூட்டமாவது, இப்புணர்ச்சி பாங்கற்கு உரைத்து, நீ யெமக்குத் துணையாக வேண்டுமென்ற அவன் குறிவழிச்[2] சென்று தலைமகள் நின்ற நிலையை யுணர்த்தச் சென்று[3] கூடுதல். தோழியிற் கூட்டமாவது, இவற்றின் பின்னர் இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல், இவை நான்கும் இம்முறையே நிகழும்

1. காமப்புணர்ச்சியாவது
2. அவன் குறிவழி—தலைவன் குறித்த இடம்
3. தலைவன் சென்று

என்று கொள்க. இனி இம்முறை நிகழாது இடையீடு பட்டும் வரும். அஃதாமாறு, தலைமகள் எதிர்பட்டுழி அன்புடையார் எல்லார்க்கும் இயற்கைப் புணர்ச்சி முட்டின்றிக் கூடுதல் உலகியல் அன்மையான் தலைமகளை யாதானும் ஓரிடத்து எதிர்ப்பட்ட தலைமகன் அவள் காதற்குறிப்புணர்ந்து நின்று, கூட்டத்திற்கு இடையீடு உண்டாயுழியும் ஆண்டுச் சென்ற வேட்கை தணியாது நின்று, முன்னை ஞான்று கண்டாற்போலப் பிற்றை ஞான்றும் காணலாகுமோ என ஆண்டுச் சேறலும், தலைமகளும் அவ்வாறே வேட்கையான் அடர்ப்புண்டு ஆண்டு வருதலும் ஆகிய வழிப் புணர்ச்சி நிகழும். ஆண்டு ஆயத் தாரானாதல் பிறரானாதல் இடையீடுபட்டுழித் தன் வருத் தத்தினைப் பாங்கற்கு உணர்த்தி அவன் தலைமகள் நின்றுழி யறிந்துகூற, ஆண்டுச் சென்று புணரும். அவ்விடத்தும் இடையீடு பட்டுழித் தோழி வாயிலாக முயன்றெய்தும். இவ்வாறும், ஒரோவொன்று இடையீடுபட்டு வருதலும் உளவாம். அவ்வா றாயின், இயற்கைப் புணர்ச்சி இடையீடுபட்டுழி வரைந்தெய்தல் தக்கதன்றோ எனின், வரைந்தெய்துந்திறம்[1] நீட்டிக்குமாயின் வேட்கை நிறுத்தலாற்றாதார் புணர்ச்சி கருதி முயல்ப. இவ்வாறு சான்றோர் செய்யுள் வந்தனவும் உளவோ எனின், சான்றோர் செய்யுட்களும் இவ்வாறு பொருள் கொள்ள ஏற்பன உள. அவையாவன

''மருந்தின் தீரா மண்ணின் ஆகாது
அருந்தவ முயற்சியின் அகற்றலும் அரிதே
தான்செய் நோய்க்குத் தான்மருந் தாகிய
தேன்இமிர் நறவின் தேறல் போல
நீதர வந்த நிறைஅருந் துயரம்நின்
ஆடுகொடி மருங்கின் அருளின் அல்லது
பிறிதில் தீரா தென்பது பின்நின்று
அறியக் கூறுதும் எழுமோ நெஞ்சே
நாடு வளங் கொண்டு புகழ் நடுதல் வேண்டித்தன்
ஆடுமழைத் தடக்கை அறுத்து முறை செய்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கைஅம் பெருந்துறை குனிதிரை தொகுத்த

---

1. மணம் செய்து அடையும் நிலை

விளங்குமுத்து உறைக்கும் வெண்பல்
பன்மாண் சாயல் பரதவர் மகட்கே''[1]

இதனுள் ''ஆடுகொடி மருங்கின் அருளின் அல்லது பிறிதில் தீராது'' என்பதனான் இயற்கைப் புணர்ச்சி இடையீடு பட்டு புணர்ச்சி கருதிக் கூறியவாறு காண்க.

''மயில்கொல் மடமொள்கொல் மாநீர்த்திரையுள்
பயில்வதோர் தெய்வங்கொல் கேளிர்—குயில் பயிரும்
கன்னி இளஞாழல் பூம்பொழில் நோக்கிய
கண்ணின் வருந்தும் என்நெஞ்சு''[2]

(திணைமொழி-43)

இதனுள் ஐயநிலையைப் பாங்கற்கு உரைத்தலின் புணர்ச்சி இன்றாயிற்று.

''கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம்
வகைசேர் ஐம்பால் தகைபெறவாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை

---

1. கருத்து: மனமே! பொற்கைப் பாண்டியனின் கொற்கை கடலில் விளையும் வெண் முத்துப்போலும் பல்லுடைய பரதவர் மகளிடம் சென்று, நீதரவந்த துயரம் நின்னா லல்லது மருந்தால் தீராது மண்ணால் தீராது தவ முயற்சியாலும் நீங்காது என்று சொல்வோம் எழுக என்பது இப்பாடலின் கருத்து. முதல் நாள் காட்சியின் போது புணர்ச்சி நிகழாது இடையீடு பட்டதால் பின் னாள் தன் நெஞ்சுக்குத் தலைவன் இவ்வாறு கூறினான் எனக் கொள்க. ஆடுகொடி மருங்கின்-அசையும் கொடி போலும் இடையுடையாளாகிய நின்னால். கொடி மருங்கு-உவமைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. தேனால் வரும் நோய்க்குத் தேனே மருந்தாவதுபோலத் தலைவியால் வந்தகாமநோய்க்குத் தலைவியே மருந்து என்க.
2. கருத்து ''பாங்கனே! பூம் பொழிலில் என்னை நோக்கி னவளின் கண்ணால் வருந்தும் என் நெஞ்சம் அவள் மயிலோ, நீர்த்தெய்வமோ மண்மகளோ என ஐயப் படும்'' எனப் பாங்கனிடம் கூறுவதால் இயற்கைப் புணர்ச்சி நிகழவில்லை என்பது புலப்படும். நிகழ்ந்த தாயின் ஐயப்பாடு நிகழாது.

நெடுந்தேர் வழங்கும் நிலவு மணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவிலாட்டி
அருளினும் அருளாள் ஆயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியல் மாநெஞ்சே என்னதூஉம்
அருந்துயர் அவலந்தீர்க்கும்
மருந்து பிறிதில்லை யான்உற்ற நோய்க்கே''[1]

(நற்றிணை-140

இதனுள் 'அருளினும் அருளாளாயினும்' என்றமையால் கூட்டமின்மையும் 'பின்னிலை முனியல்' என்றமையால் இரந்து பின்னிற்பானாகத் துணிந்தமையும், தோழியிற் கூட்டத்து இயற்கைப் புணர்ச்சிக்கு[2] ஒருப்பட்டமையும் உணர்க.

''நறவுக்கமழ் அலரிநறவு வாய்விரிந்து
இறங்கிதழ் கமழும் இசைவாய் நெய்தற்
கண்ணித் தலையர் கருங்கைப் பரதவர்
நின்னையர் அல்லரோ நெறிதாழ் ஓதி
ஒண்சுணங் கிளமுலை ஒருஞான்று புணரின்
நுண் கயிற்றுறுவலை நுமரொடு வாங்கிக்
கைதை வேலி இவ்வூர்ச்
செய்தூட்டேனோ சிறு குடியானே''[3]

---

1. கருத்து: நெஞ்சே! கீழ்க்காற்றால் கருத்த மேகம் மேற்கே எழுச்சியுற்றுப் பெய்தமையால் தழைத்த சந்தனத்தின் நறுமணமும் பிற மணமும் சேர்ந்த கூந்தலை வாரி அக்கூந்தல் புலருமிடத்து உதிர்த்த சந்தனத்தின் துகள்கள் காணும் கூந்தலுடைய ஆயக் கூட்டம் நிகழுமாறு தந்தையின் தேர் வழங்கும் முற்றத்தில் பந்தோடு செல்லும் அன்பற்ற தலைவி நம்பால் அருளினும் அருளாளாயினும் அவளைப் பின் நின்று இரங்கு தலை வெறாதே. ஏன் எனின் அவளால் வந்த இக்காம நோய்க்கு அவளே மருந்தாவதல்லது மருந்து பிறிதில்லை காண்.

2. தோழியிற் கூட்டத்துக்கு முன்னர் இடையீடுபட்டுப் புணர்ச்சியின்றி வந்தமையால் தோழியிற் கூட்டத்தின் முதற் புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சி எனப்பட்டது.

3. கருத்து: நீயிர் பெரியீர், சிறியேம் யாம் ஆதலின் நும்மொடு எம் தலைவிக்கு மணம் என்பது பொருந்தாது எனத் தோழி தலைவனைச் சேட்படுத்த போது தலைவன் கூறியது இது. தோழியே பரதவர் நின் தந்தையர். ஒரு நாள் சுணங்கு பரந்த இளமுலையா

பெரியீரெனச் சேட்படுத்த வழிக் ம்றியது;

''கூறுவம் கொல்லோ கூறலம் கொல்லெனக்
கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது
நயந்து நாம்விட்ட நன்மொழிநம்பி
அரைநாள் யாமத்து விழுமழை கரந்து
கார்விரை கமழுங் கூந்தற் றூவினை
நுண்ணூல் ஆகம் பொருந்தினள் வெற்பி
இளமழை சூழ்ந்த மடமயில் போல
வண்டு வழிப்படரத் தண்மலர்வேய்ந்து
வில் வகுப்புற்ற நல்வாங்கு குடச்சூல்
அம்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்
ஆன்ற கற்பிற் சான்ற, பெரிய
அம்மா அரிவையோ அல்லள் தெனாஅது
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பெயரிய வுருகெழு கவாஅன்
நேர்மலை நிறைசுனை உறையுஞ்
சூர்மகள் மாதோ என்னுமென் நெஞ்சே''[1]

(அகம்-118)

ளைப் புணரின் நான் அப்பரதவரிடமிருந்து கயிற்று வலையை வாங்கி வலை வீசி மீன் வளம் கொண்டு இவ் வூர்ச் சிறு குடியினை உண்பிக்க மாட்டேனோ? என்பது அவன் கூற்று. இதனால் யான் பெரியவன் என்ற நிலையில் இன்றி நும் நிலையில் இறங்கி வருவேன் என்றான்.

1. கருத்து: தோழியிற் கூட்டத்துப் பின்னர்த் தலைவன் தனக்குள் சொல்லியது. நான் தோழி மூலம் சொல்லி விட்ட சொல்லை நம்பித் (தலைவியானவள்) தான் கொண்ட காமத்தைச் சொல்வோமோ மாட்டோமோ என மயங்கி மறைத்துக் கொண்டு, மழைத் துளிகளை உள்ளடக்கிய கூந்தலாகிய தூவி உடம்பைப் போர்த் திருக்க நடுயாமத்தில் மழையில் நனைந்த மயில் போல மலையில் சாரலில் தன் காற் சிலம்பு ஒலியையடக்கி வந்து நம்மொடு கூடிச் செல்பவள் மண்ணுலக மடந்தை யல்லள்; கவிரம் என்னும் மலை அடுக்கங்களையுடைய பெருமலையில் உள்ள சுனையிடத் துறையும் தெய்வ மகளே எனக் கருதும் என் நெஞ்சம்,

இது தோழியிற் கூடிய தலைமகன் கூற்று.

> "அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்
> கவரி மடமா கதூஉம் படர்சாரல்
> கானக நாட மறவல் வயங்கிழைக்கு
> யானிடை நின்றபுணை[1]

(ஐந்திணையெழு-1)

இதனானே முந்துற்ற கூட்டமின்மையுணர்க. இனி ஒரு கூட்டமும் நிகழாது ஆண்டு வந்தடைவேட்கை இருவர்க்கும் தணியாது நின்று வரைந்தெய்தலும் ஒன்று. இவ்வகையினான் இக்களவொழுக்கம் மூவகைப்படும்.[2]

"இன்பமும்.........இயல்பே" என்பது சூத்திரம்.

இனி, இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், காமப் புணர்ச்சிக்கு இலக்கண வகையாற் குறியிடுதலை உணர்த்துதல் நுதலிற்று.

(இதன் பொருள்) இன்பமும் பொருளு.....காணுங்காலை என்பது- இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப்பட்டு, அன்பொடு புணர்ந்து நடுவண் ஐந்திணையிடத்து நிகழும் காமக் கூட்டத்தினை ஆராயுங் காலத்து என்றவாறு.

அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றதனால் கைக்கிளை பெருந்திணையை[3] ஒழித்து நின்ற முல்லை, குறிஞ்சி, பாலை,

---

1. தோழி தலைவனிடம் 'கானக நாட! யான் விளங்கும் இழையணிந்துள்ள தலைவிக்கு இடையேயுள்ள புணை யாவேன்; மறவாதே' என்றதால் இதற்கு முன்னர்ப் புணர்ச்சி நிகழவில்லை என்பது பெறப்படும்.

2. 1. இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் வரைந்தெய்துதல்.

   2. இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் நிகழ்ந்த பின்னர் வரைந்தெய்துதல்

   3. காட்சியளவில் நீங்கிப் புணர்ச்சியின்றி வரைந் தெய்துதல்.

3. கைக்கிளை ஒருவர் அன்பு ஒருவர்க்குப் புலனாகாமையின் அன்பொடு புணர்ந்ததன்று. பெருந்திணை அன்பின்றிக் காமம் காரணமாகக் கூடுவதும் அன்பெல்லையைக் கடந்து மிக்க காமத்தால் கூடுவதும் ஆதலின் அன்பொடு புணர்ந்ததன்று.

மருதம், நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன்பொடு புணர்ந்தவாறு என்னையெனின், கைக்கிளை பெருந்திணையைப் போலாமை, ஒத்த அன்பினராகிப் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் நிகழ்த்துப ஆகலானும் அவை நிகழுங்கால் அத்திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருப்பொருளும் துணையாகி நிகழுமாகலானும் இவை அன்பொடு புணர்ந்தன என்க. அஃதேல் ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பவும் அன்பொடு புணர்ந்தனவாம் எனின், அவை அன்புடையார் பலர் கூடி நிகழ்த்துபவை யாகலின், அன்பொடு புணர்ந்தனவாம்.

"அறத்திற்கே அன்பு சார்புஎன்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை* (குறள்-76)

என்பதனாலும் கொள்க.

இனி, இவ்வைந்திணையும் இன்பமும் பொருளும் அறமும் ஆயினவாறு என்னையெனின், புணர்தல் முதலாகிய ஐந்து பொருளும் இன்பந் தருதலின் இன்பமாயின. முல்லை முதலாகிய[1] ஐந்திணைக்கும் உறுப்பாகிய நிலமும் காலமும் கருப் பொருளும் இவற்றின் புறத்தாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்பனவும் வாகையுள் ஒரு கூறும் பொருளாகலானும் புணர்தல் முதலாகிய உரிப்பொருளான் வருவதோர் கேடின்மை யானும்[2] பொருளாயின. இவ்வொழுக்கங்கள் அறத்தின் வழி நிகழ்தலானும் பாலையாகிய வாகைப் படலத்துள் அறநிலை கூறுதலானும் இவை அறமாயின் அஃதேல், கைக்கிளை பெருந் திணையும் இவற்றின் புறமாகிய பாடாண்பாட்டும் காஞ்சியும் அறமுதலாகிய மூன்றுமன்றி அன்பொடு புணர்தல் வேண்டு மெனின் காஞ்சி அன்பொடு புணராமையும் பாடாண்பாட்டு

---

* அறியாதவர் அறச்செயல்களுக்குத்தான் அன்பு துணை யாகும் என்பர்; ஆனால் வீரச்செயல்களுக்கும் அவ்வன்பே துணையாம்.

1. குறிஞ்சி முதலாகிய என்றிருப்பின் நன்று

2. புணர்தல் பிரிதல் முதலிய உரிப்பொருள்களால் தலை மக்களுக்குக் கேடு இல்லாமையால் அவை ஒழுக்கப் பொருளாயின.

அன்பொடு புணர்தல் ஒருதலையன்மையும் அவ்வோத்தினுள்[1] கண்டு கொள்க. ஏனையிரண்டும்[2] அன்பொடு புணராமை மேற்சொல்லப்பட்டன. இனி அவை அறனும் பொருளுமாய் இன்பமாகா. அஃதேல் அறனும் பொருளும் ஆகாமையும் வேண்டுமெனின், குலனும் குணனுங் கல்வியும் உடையராகிய அந்தணர் என விசேடித்தவழி ஏனையோர்க்கு இம்மூன்று பொருளும் இயைதல் வேண்டுமென்னும் நியமம் இன்மையின் ஏற்ற வழிக் கொள்ளப்படும்.[3]

இனி, ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டம் என்பது புணர்தல் முதலாகிய உரிப்பொருளும் அந்நிலமும் காலமும் கருப்பொருளும் களவினும் கற்பினும் வருதலின் அவை ஒரோவொன்று இருவகைப்படும். அவற்றுள், புணர்ச்சியாகிய இருவகையினும்[4] களவாகிய காமக்கூட்டம் எனக் கொள்க.

இன்னும் அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம் என்றதனால் எல்லா நிலத்தினும்[1] காமக் கூட்டம் நிகழப் பெறும் என்று கொள்க. அவ்வாறாதல் சான்றோர் செய்யுளகத்துக் காண்க.

மறையோர் தேஎத்......யோரியல்பே என்பது—மறையோரிடத்தோதப்பட்ட மணம் எட்டனுள்ளும் துறையமை[2]

---

1. புறத்திணையியலில்.

2. கைக்கிளை, பெருந்திணை.

3. இயைதல் வேண்டும் என்னும் நியமம் இன்மையின் அதாவது இயைதலும் இயையாமையும் உண்மையின் அதுபோல 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என விசேடித்தவழி ஐந்திணை அன்பொடு புணர்தல் ஒரு தலையாதல்போலக் கைக்கிளையும் பெருந்திணையும் அன்பொடு புணர்தல் உண்மையும் இன்மையும் ஏற்ற வழிக் கொள்ளப்படும்.

4. புணர்ச்சியாகிய இருவகை—கற்புப் புணர்ச்சி களவுப் புணர்ச்சி.

5. முல்லை முதலிய நிலத்தினும்

6. துறை: சீறியாழ், பேரியாழ் எனவும் மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் எனவும் அமைவன;

நல்யாழினையுடையராகிய துணைமையோர் நெறி என்றவாறு.

மறையோர் என்றது அந்தணரை, தேஎம் என்றது அவரதாகிய நூலை. மணம் எட்டாவன, பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. பிரமமாவது கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியாயிருப்பானொருவனுக்குத் தானமாகக் கொடுப்பது. பிரசாபத்தியமாவது, மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகன் வேண்டிய வழி இருமுதுகுரவரும் இயைந்து கொடுப்பது. ஆரிடமாவது ஒன்றானும், இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுப்பது. தெய்வமாவது வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள்ளும் ஒருவற்கு வேள்வித்தீ முன்னர்க் கொடுப்பது. காந்திருவமாவது ஒத்த இருவர் தாமே கூடுங் கூட்டம். அசுரமாவது வில்லேற்றினானாதல் திரிபன்றியெய்தானாதல் கோடற்குரியெனக் கூறியவழி அது செய்தாற்குக் கொடுத்தல். இராக்கதமாவது தலைமகன் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது. பைசாசமாவது, களித்தார் மாட்டுந் துயின்றார் மாட்டுங் கூடுதல்.

''அறன்நிலை ஒப்பே பொருள்கோள் தெய்வம்
யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே
இராக்கதம் பேய்நிலை என்றிக் கூறிய
மறையோர் மன்றல் எட்டவை அவற்றுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் புணர்ப்பின தன்
பொருண்மை என்மனார் புலமையோரே''

என்பதனாலுங் கொள்க.

துறையமை நல்யாழ் துணைமையோராவார் கந்திருவர். அவர் இருவராகித் திரிதலின் துணைமையோர் என்றார். துணையன்பாவது[1] அவர் ஒழுகலாறோடொத்து மக்கண்

---

1. 'துணைமையோரியல்பாவது' என்றிருத்தல் வேண்டும். அவர் இயல்பாவது கந்தருவ ஆண் ஒருவனும் பெண் ஒருத்தியும் வேறு வேறிடத்திருந்து வந்தவர்கள் ஓரிடத்து எதிர்ப்பட்டபோதே உடலுறவு கொள்வது.

மாட்டு நிகழ்வது. ஈண்டுக் காமக் கூட்டமென ஓதப்பட்டது மணவிகற்பமாகிய எட்டனுள்ளுங் கந்திருவ மென்றவாறு. மாலை சூட்டல்[1] யாதனுள் அடங்குமெனின், அதுவும் ஒத்த அன்பின ராய் நிகழ்தலிற் கந்திருவப்பாற்படும்.

அறனும் பொருளும் இன்பமும் என்னாது இன்பமும் பொரு ளும் அறனும் என்றது என்னை எனின், பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவையாவன, போகம் நுகர் தலும் வீடுபெறுதலும் என். அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனை யறத்தார்க்கெய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத் திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக்காரிய காரணம் நோக்கி வைத்தார் என்க.

இதனாற் சொல்லியது ஈண்டுக் களவென்றோதப்படுகின்ற ஒழுக்கம் அறம்பயவாத புறநெறியன்று, வேதவிதியாகிய தந்திரம் என விகற்பமாகிய நெறி கூறியவாறு.[2]

நச்சினார்க்கினியர்

இவ்வோத்துக் களவு கற்பென்னுங் கைகோள் இரண்டனுள் களவு உணர்த்தினமையிற் களவியலென்னும் பெயர்த்தாயிற்று; பிறர்க்குரித்தென்று இருமுதுகுரவராற் கொடை யெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின் இதுபிறர்க் குரிய பொருளை மறையிற் கொள்ளுங் களவன்றாயிற்று. இது வேதத்தை 'மறைநூல்' என்றாற்போலக் கொள்க.[3]

---

1. முதற் காட்சியில் தலைவன் தலைவிக்குத் தன் மாலையை அணிந்து புணர்ச்சியின்றி நீங்கல்.

2. தந்திரம்-நூல்; அது ஒழுக்கத்தை யுணர்த்தும். வேத நெறியாகிய ஒழுக்கம் என அறத்தின் வகை கூறிய வாறு.

3. எளிதில் யார்க்கும் புலப்படாமல் நுண்ணியவாக மறைந்து கிடக்கும் பொருள்கள் மறை எனப்பட அவற்றைக் கூறும் நூல் (வேதம்) மறை எனப் பட்டது.

''களவெனப்படுவதியாதென வினவின்
வளை கெழு முன்கை வளங்கெழு கூந்தன்
முளையெயிற் றமர்நகை மடநல் லோளொடு
தளையவிழ் தண்டார்க் காமன்னோன்
விளையாட்டிடமென வேறு மலைச் சாரன்
மானினங் குருவியொடு கடிந்து விளையாடு
மாயமுந்தோழியு மருவிநன் கறியா
மாயப் புணர்ச்சி யென்மனார் புலவர்''

இக்களவைக் 'காமப்புணர்ச்சியும்' (187) என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்திற் கூறிய நான்கு வகையானும்[1] மேற்கூறுமாறு உணர்க.

இன்பத்திற்குப் பொதுவிலக்கணம் அகத்திணையியலுட் கூறி, அதற்கினமாகிய பொருளும் அறனுங் கூறும் புறத் திணையை அதன் புறத்து நிகழ்தலிற் புறத்திணையியலுட் கூறி, ஈண்டு அவ்வின்பத்தினை விரித்துச் சிறப்பிலக்கணங் கூறுதலின் இஃது அகத்திணையியலோடு இயைபுடைத்தாயிற்று.

'வழக்கு......நாடி' என்றலின் இஃது உலகியலெனப்படும்; உலகத்து மன்றலாவது குரவர் கொடுப்பதற்கு முன்ன ஒருவற்கும் ஒருத்திக்குங் கண்ணும் மனமுந் தம்முள் இயைவதே யென வேதமுங் கூறிற்றாதலின்.

இச்சூத்திரங் களவெனப்பட்ட ஒழுக்கம் உலகத்துப் பொருள் பலவற்றுள்ளும் இன்பம் பற்றித் தோன்றுமெனவும் அஃது இன்னதாமெனவுங் கூறுகின்றது.

(இதன் பொருள்.) இன்பமும் பொருளும் அறனும் என் றாங்கு - இன்பமும் பொருளும் அறனுமென்று முற்கூறிய மூவகைப் பொருள்களுள், அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்—ஒருவனொடு ஒருத்தியிடைத் தோன்றிய அன்போடு கூடிய இன்பத்தின் பகுதியாகிய புணர்தன் முதலிய ஐவகை

போல பிறர்க்குப் புலப்படாமல் தம்முள் காதலர் இருவர் மறைவாகக் கொள்ளும் ஒழுக்கம் களவு எனப் பட்டது. பிறர் பொருளை மறைவிற் கொள்ளும் களவு போன்றதன்று இக்களவு.

1. நான்கு வகை. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம்.

ஒழுக்கத்தினுள்; காமக் கூட்டங் காணுங்காலை-புணர்தலும்' புணர்தனிமித்தமு மெனப்பட்ட காமப் புணர்ச்சியை ஆராயுங் காலத்து, மறை ஓர் தேஎத்து[1] மன்றல் எட்டனுள்-வேதம் ஓரிடத்துக் கூறிய மண மெட்டனுள், துறை அமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பு-துறை அமைந்த நல்யாழினையுடைய பிரிவின்மையோரது தன்மை (என்றவாறு),

அன்பாவது,

''அடுமரந் துஞ்சு தோளாட வருமாய்ந்த
படுமணிப் பைம்பூணவருந்—தடுமாறிக்
கண்ணெதிர் நோக்கொத்த காரிகையிற் கைகலந்
துண்ணெகிழச் சேர்வதாமன்பு''.[2]

மன்றல் எட்டாவன: பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

அவற்றுட் பிரமமாவது; ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத் தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது;

''கயலே ரமருண்கண் கன்னிப் பூப்பெய்தி
யயல் பேரணிகலன்கள் சேர்த்தி—யியலி
னிர லொத்த வந்தணற்கு நீரிற் கொடுத்தல்
பிரமமண மென்னும் பெயர்த்து.''

பிராசாபத்தியமாவது: மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம் மகட்கு ஈந்து கொடுப்பது;

''அரிமத ருண்க ணாயிழை யெய்துதற்
குரியவன் கொடுத்த வொண்பொரு ளிரட்டி
திருவின் றந்தை திண்ணிதிற் சேர்த்தி

---

1. மறையோர் தேஎத்து என்பதற்கு இளம்பூரணர் அந்தணர் நூலில் எனப்பொருள் கொள்ள, நச்சினார்க்கினியர் மறை ஓர் தேஎத்து எனப்பிரித்து வேதம் ஓர் இடத்து எனப் பொருள் கொண்டமை காண்க.

2. பிறரைக் கொல்லும் சிலை மரத்தாலான வில் தொங்கும் தோளுடைய ஆடவரும் மணிப்பூணுடைய மகளிரும் எதிர்ப்பட்டு இருவர் நோக்கும் ஒத்த அழகில் ஈடுபட உள்ளத்தை நெகிழச் செய்வதே அன்பாவது.

யரியதன் கிளையோ டமைவரக் கொடுத்தல்
பிரித லில்லாப் பிரசா பத்தியம்''

ஆரிடமாவது: தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற் கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து நீரும் இவை போற் பொலிந்து வாழ்வீரென நீரிற் கொடுப்பது;

''தனக்கொத்த வொண்பொருடன் மகளைச் சேர்த்தி
மனைக்கொத்த மாண்புடையாற் பேணி-யினக்கொத்த
ஈரிடத் தாவை நிறீஇயிடையீவதே
ஆரிடத்தார் கண்டமண மாம்'',

தெய்வமாவது: பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒத்த ஒருவற்கு அவ்வேள்வித் தீமுன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

''நீளி நெடுநகர் நெய்பெய்து பாரித்த
வேள்வி விளங்கழன் முன்னிறீஇக்—கேள்வியாற்
கைவைத்தாம் பூணாளைக் காமுற்றாற் கீவதே
தெய்வ மணத்தார் திறம்''

ஆசுரமாவது:— கொல்லேறு கோடல் திரிபன்றியெய்தல் வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல்:

''முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத்
தகைநலங் கருதுந் தருக்கின ருளரெனி
னிவையிவை செய்தாற் கெளியண் மற்றிவளெனத்
தொகைநிலை யுரைத்த பின்றைப் பகைவலித்
தன்னவை யாற்றிய வளவையிற்றயங்க
றொன்னிலை யசுரந் துணிந்த வாறே''.

இராக்கதமாவது: தலைமகடன்னினுந் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது.

''மலிபொற்பைம் பூணாளை மாலுற்ற மைந்தர்
வலிதிற்கொண் டாள்வதே யென்ப—வலிதிற்
பராக்கதஞ் செய்துழலும் பாழி நிமிர்தோ
ளிராக்கதத்தார் மன்ற லியல்பு''.

பைசாசமாவது: மூத்தோர் களித்தோர் துயின்றோர் புணர்ச்சியும், இழிந்தோளை மணஞ் செய்தலும், ஆடை மாறுதலும்[1] பிறவுமாம்.

''எச்சார்க் கெளிய ரியைந்த காவலர்
பொச்சாப் பெய்திய பொழுதுகொ ளமையத்து
மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பி
னுச்சாவார்க் குதவாக் கேண்மை
பிசாசர் பேணிய பெருமைசா லியல்பே''

''இடைமயக்கஞ் செய்யா வியல்பினி னீங்கி
யுடைமயக்கி யுட்கறுத்த லென்ப—வுடைய
துசாவார்க் குதவாத வூனிலா யாக்கைப்
பசாசத்தார் கண்ட மணப்பேறு.''

இனிக் கந்தருவமாவது: கந்தருவ குமாரருங் கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்தது போலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது.

''அதிர்ப்பில்பைம் பூணாரு மாடவருந் தம்மு
ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப-கதிர்ப்பொன்யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்திருவர் கண்ட கலப்பு''.

என இவற்றானுணர்க.

களவொழுக்கம் பொதுவாகலின் நான்கு வருணத்தார்க்கும் ஆயர் முதலியோர்க்கும் (21) உரித்து. மாலை சூட்டுதலும்[2] இதன்பாற்படும். வில்லேற்றுதன் முதலியன பெரும்பான்மை அரசர்க்குரித்து. அவற்றுள் ஏறுதழுவுதல் ஆயர்க்கே சிறந்தது. இராக்கதம்[3] அந்தணரொழிந்தோர்க்கு உரித்து. வலிதிற் பற்றிப் புணர்தலின் அரசர்க்கு இது பெருவரவிற்றன்று. பேய்[4] இழிந்தோர்க்கே உரித்து. கந்தருவரின் மக்கள் சிறிது திரிபுடைமையிற் சேட்படை[5] முதலியன உளவாமென்றுணர்க.

---

1. ஒருவன் காதலியை அவன்போல் ஆடையுடுத்திச் சென்று அவளைச் சேர்வது.
2. மாலை சூட்டுதல்—மணம் விரும்பி வந்தோர் பலருள் தான் விரும்பிய ஒருவனுக்கு மாலை சூட்டுதல்-இதனைச் சுயம்வரம் என்பர்.
3. இராக்கதம் அந்தணரில் இழிபிறப்பினர்க்கும் உரியதே.
4. பேய்-எல்லா வருணத்தும் இழிந்தோர்க்குரியது.
5. சேட்படை: புணர்ச்சிக்கு ஒருப்படாதாள் போலத் தலைவனைச் சிறிது தூரம் நீக்குதல்.

அறத்தினான் பொருளாக்கி அப்பொருளான் இன்ப நுகர்தற் சிறப்பானும் அதனான் இல்லறங் கூறலானும் இன்பம் முற் கூறினார். அறனும் இன்பமும் பொருளாற் பெறப்படுதலின் அதனை இடைவைத்தார். போகமும் வீடுமென இரண்டுஞ் சிறத்தலிற் போகம் ஈண்டு கூறி வீடு பெறுதற்குக் காரணம் முற் கூறினார்.[1] ஒழிந்த மணங் கைக்கிளையும் பெருந்திணையுமாய் அடங்குதலின் இதனை 'அன்பொடு' என்றார். பொருளாற் கொள்ளும் மணமும் இருவர் சுற்றமும் இயைந்துழித் தாமும் இயைதலிற் கந்தருவப்பாற்படும். ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி முதலியவற்றிற்கும் அன்பொடு புணர்தலுங் கொள்ளப் படும்.

''அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை (குறள்-76)

என்றலின்,

கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையா தென்றற்குத் 'துறையமை' என்றார்.

சிவலிங்கனார்

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், களவு ஒழுக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) : இன்பமும் அதற்கு வேண்டிய பொருளும் அப் பொருளால் செய்யப்படும் அறமும் என்று சொல்லப்பட்ட அம் மூன்றிடத்து மேலும் அன்பொடு பொருந்திய குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்து திணைகளுள் ஒன்றாகிய காமக் கூட்டத்தை ஆராயும்போது அது, நூலோர் நூலில் கூறப்பட்ட எண்வகை மணங்களுள் இசைத்துறையமைந்த நல்ல யாழ்ப்பாணர் காமக் கூட்டத்தின் இயல்புடையதாகும் என்றவாறு.

ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வயத்தால் ஓரிடத்தெதிர்ப்பட்டுப் பிறரறியாமல் காமங் காரணமாகக் கூடும் கூட்டம் காமக் கூட்டம் எனப்படும். அது பிறரறியாமல் மறைவில் கூடுதலின்

---

1. புறத்திணையியற் காஞ்சித் திணையிற் கூறினார்.

களவுப் புணர்ச்சி எனப்படும்; ஊழ் (இயற்கை) வயத்தாற் கூடுதலின் இயற்கைப் புணர்ச்சி எனப்படும்; பின்னர் நிகழவிருக்கும் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் ஆகியவற்றுக்கு முன்னர் நிகழ்தலின் முன்னுறு புணர்ச்சி எனப்படும்.

அன்பொடு பொருந்தி நிகழும் ஐந்திணைகளாவன குறிஞ்சியொழுக்கமாகிய புணர்தல், பாலை ஒழுக்கமாகிய பிரிதல், முல்லையொழுக்கமாகிய ஆற்றியிருத்தல், நெய்தல் ஒழுக்கமாகிய இரங்குதல், மருதவொழுக்கமாகிய ஊடல் என்பன. அவற்றுள் புணர்தல் ஒழுக்கம் இங்கே காமக் கூட்டம் எனப்பட்டது. இவ்வைவகை யொழுக்கங்களும் களவு, கற்பு எனும் கைகோள் இரண்டிலும் நிகழ்வனவே என்றாலும் இங்கே களவில் நிகழ்வனவற்றைக் குறிக்கும். புணர்தல் குறிஞ்சியாகவும் களவில் நிகழும் வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல், உடன் போக்கு, ஒருவழித் தணத்தல் என்பன பாலையாகவும், அப்பிரிவுக் காலங்களில் தலைவி ஆற்றுதல் முல்லையாகவும், இரங்குதல் நெய்தலாகவும் அமையும். ஊடல் என்பது கற்புக் காலத்துச் சிறப்பது போல் களவுக் காலத்துச் சிறவாது; என்றாலும் விரைந்து வந்து மணந்து கொள்ளவில்லையே என்ற வருத்தம் ஊடலில் அடங்கும்.

காமக் கூட்டம் என்பது யாழ்ப்பாணர் கூட்டம் போல்வதாகும்.

நூலோர் வகுத்த தமிழர் திருமணம் எட்டு. அவையாவன, அந்தணர் திருமணம், அரசர் திருமணம், வணிகர் திருமணம், வேளிர் திருமணம், கைக்கிளைத் திருமணம், பெருந்திணைத் திருமணம், ஏறுதழுவல் திருமணம், யாழோர்த் திருமணம் என்பன. முதல் நான்கு திருமணங்களும் குலமுறைத் திருமணங்களாம். கொடுத்தற்குரியவர் கொடுப்பக் கொள்ளும் மணங்கள் அவை. அவரவர் குலத்தளவில் அமைவன. பின்னர் உள்ள மூன்றும் அவரவர் குலத்தளவிலும் வேற்றுக் குலத்தளவிலும் நிகழ்வன. யாழோர் திருமணம் என்பது பாணர் திருமணம்.

அவற்றுள் கைக்கிளைத் திருமணமாவது ஒருவன் ஒருத்தியைக் கண்டு விரும்பி அவள் விருப்பம் அறியுமுன்னே அவளைத் தக்கார் மூலம் மணந்து கொள்வது. காமம் சாலா இளையாளை விரும்பி மணப்பதும் கைக்கிளையாம்.

ஒருவன் தன்னின் வயதில் மூத்தாளை மணப்பதும், தான் விரும்பியவளையடைய இயலாதுவிடின், மடலேறுதல், தன்

காமத்தைப் பிறர்க்குப் புலப்படச் செய்தல் முதலியவற்றால் ஊர்ப் பெருமக்கள் துணையால் மணப்பதும் பெருந்திணை மணமாம்.

ஏறுதழுவல் முதலிய வீரங் காட்டி அதன் பரிசாக ஒருத்தியை மணப்பது ஏறுதழுவல் திருமணமாம். இதில் வில்லேற்றுதல், திரிபன்றியெய்தல் முதலிய வீரச் செயல்களும் அடங்கும்.

யாழோர் கூட்டம் என்னும் திருமணமாவது, வெவ்வேறு திசைகளிலிருந்து வரும் யாழோர் (யாழ்ப்பாணர்) ஒரு பொழி லகத்துத் தங்க, அவருள் ஒரு கூட்டத்தாருள் ஓர் இளைஞனும், பிறிதோர் கூட்டத்து ஓர் இளையளும் தனித்து எதிர்ப்பட்டுத் தம் உடம்பால் கூடிப் பின்னர் பெற்றோர் முறையாக மணந்து கொடுப்ப மணப்பது. யாழோர் தம் புரவலரை நாடி ஊர் ஊராய்ச் செல்பவராதலின் அவர்தம் திருமணம் அப்படி நடை பெறுவது வழக்கமாயிற்று. அவர் போலப் பறையர் கடம்பர் துடியர் மணமும் அமையும்.

மேற்கூறிய எண்வகைத் திருமணங்களோடு களவு மணம் என்பதொன்றும் நூலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். அக்களவு மணம் யாழோர் மணம் போல்வதாதலின் அதிலேயே அடக்கினர். அதனால் களவு மணம் யாழோர் கூட்டம் எனவும் படும். யாழோர் கூட்டம் யாழோரிடையே நடைபெறுவது. களவு மணம் ஒத்த குலத்தாரிடையோ வேற்று குலத்தாரி னடயோ நடைபெறுவது. அந்தணர் திருமணம் முதல் யாழோர் திருமணம் வரையுள்ள எட்டு திருமணங்களும் முறைப்படி நடப்பனவாதலின் மணந்த பின் நடைபெறும் ஒழுக்கம் கற் பொழுக்கம் எனப்பட்டு யாவாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் இவற்றுக்கு மாறாக அமைவது களவு மணம்.

முன்பின் அறியாத ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வயத்தால் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுக் கண்டு மனம் நெகிழ்ந்து அன்புடையராய் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய்க் காம மிகுதியால் அங்கேயே கூடிப் பிரிந்து, மீண்டும் இடந்தலைப் பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் எனப் பல காலம் புணர்ந்து ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல், உடன்போக்கு முதலிய நிகழ்ந்தி ஊரலர் முதலிய ஏற்று இறுதியில் மணஞ் செய்து கொள்ளுந்துணையும் நடந்து வரும் ஒழுக்கம், பிறர் அறியாக் களவொழுக்கம் ஆகும். இக்கள வொழுக்க முடிவு திருமணம் ஆதலின் அது களவு மணம் எனப்

படும். இக்களவு மணம் யாழோர் கூட்டம் போலமைதலின் அதனொடு ஒப்பித்தார் ஆசிரியர். அதனால் களவு மணம் யாழோர் மணத்தில் அடங்கத் தமிழ் நூலார் கண்ட மணம் எட்டாயிற்று.

மறை என்பது நூல். 'நரம்பின் மறைய' எனப் பிறிதோரிடத்தும் ஆசிரியர் ஆண்டார்.

மறையோர் தேஎத்து மன்றல் என்பதற்கு ஆரிய மணம் எனக் கொண்டு இளம்பூரணர் முதலியோர் கூறுவது பொருந்தாது.

ஆரிய மணம் எட்டாவன: பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் காந்தருவம் என்பன.

மேலே கூறப்பட்ட எண் வகை ஆரிய மணங்களுள் பிரமம் முதல் ஆசுரம் வரையுள்ள ஐந்து மணங்களும் தலைவியின் பெற்றோரால் மணந்து கொடுக்கப்படுவன. அதனால் மண மக்கள் மணந்த பின்னர் மன விருப்பத்தோடு இன்புற்று இல்லறம் நிகழ்த்துவர்.

தலைமகளின் தமரால் தரப்படாமலும் தலைமகள் விருப்பின்றியிருக்கவும் வலிதிற்பற்றிக் கூடும் இராக்கதத்தில் மன விருப்பில்லையாதலின் அக்கூட்டம் கற்பழிப்பின் பாற்படுமேயன்றி மணம் ஆகாது. கூடிய பின்னர் இனிய இல்லறமும் நிகழாது.

மூத்தோர் களித்தோர் துயின்றோருடன் கூடுவதாகிய பைசாசம் பின்னர் இல்லறத்துக்கு உரியதன்று ஆதலின் மணம் எனப் படாது. ஆடை மாற்றிக் கூடுவது அதாவது ஏமாற்றிக் கூடுவதும் மணம் ஆகாது.

மணம் என்னும் சொல் கலத்தல் என்னும் பொருளது. உடம்பாற் கலத்தலை மட்டும் தமிழர் மணம் என்னும் சொல்லாற் குறித்தல் இல்லை. உள்ளத்தாற் கலத்தலையும் மணம் என்னும் சொல்லாற் குறிப்பர். இராக்கதமும் பைசாசமும் கூட்டத்துக்கு முன்னும் பின்னும் அப்போதும் உள்ளத்தாற் கலத்தல் இல்லையாதலின் மணம் என்பதற்கே இடமில்லை. ஆரியர் இவற்றையும் மணம் எனக் கொண்டாலும் தமிழர் கொள்ளார். நன்று தீது நோக்காது, வாழ்வையும் கருதாது, மணம் என்னும் சொல்லுக்கு உடற் கலப்பு ஒன்றையே கருதிப் பொருள் கொண்டனர் ஆரியர். எனவே ஆரியர் கூறும் எண் வகை மணம், தமிழர் கூறும் எண் வகை மணத்தினும் வேறு

பட்டனவாம். அதனால் களவு மணம், ஆரியர் கூறும் கந்தருவ மணத்தோடு ஒக்கும் என்பது பொருந்தாது. பிரமமணத்திற் கூறப்படும் வயது அளவு தமிழர்க்கு ஏற்றதன்று எண் வகைத் தமிழ் மணங்களுள் கைக்கிளை, பெருந்திணை, ஏறுதழுவல், களவு மணம் ஆகிய நான்கற்கும் இலக்கியங்கள் உள. அந்தணர் மணம் முதலிய நான்கற்கும் இலக்கியங்கள் காண்டல் அரிது. ஆனால் அந்நான்கும் குலமுறை மணமாதலின் குலமுறை மணம் உண்டு என்பதற்குத் தொல்காப்பியத்திலும் பிறவற்றிலும் குறிப்புகள் உண்டு.

களவொழுக்கத்தில் தலைவன் தோழியை இரந்து குறையுறும் போது அவள், 'உலகியல்படி நீ நின் தமரைக் கொண்டு மணம் பேசி வந்து மணந்து கொள்க' எனக் கூறுவதும் (களவியல் 23) வேற்றுவரைவுவரின் அது மாற்றுதற்காகத் தோழியிடம் தலைவி அறத்தொடு நிற்பதும் (கள. 20) ஆகிய செய்திகள் ஒத்த குலத்தினர் மகட் பேசிவரும் செய்தியையே குறிப்பன வாகும். அன்றியும் 'நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு மகட்பாடஞ்சிய மகட்பால்'' (புறத்திணையியல் 48) எனவரும் மகட் பாற் காஞ்சியானது, வேந்தன் மகட்கொடை வேண்டிய போது மறக்குலத்தினன் அஞ்சுவதை அறிவிப்பதால் குலமாறுபாடு புலப்படுதலும் அறியலாம். ''களிறலைப்பக் கலங்கின காசு'' என்னும் புறப்பாடலில் (245) அரசனுக்கு அரச குலத்தார் அல்லாத குலத்துப் பெண் மறுக்கப்பட்டது காணலாம். எனவே நால்வகைக் குல மணமும் பழங்காலத் தமிழரிடை இருந்தமை யறியலாம்.

யாழ்ப்பாணருள் ஆடவர் மட்டும் தனித்துச் செல்வதில்லை. எப்போதும் மனைவியருடனேயே செல்வர். அதனால் அவர், 'யாழ்த்துணைமையோர்' எனப் பட்டனர்.

காட்சிக் காரணம்

90. **ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே (2)

ஆ. மொ.

இல.

Because of the command of God which is being one with them and high above them.

The lover and the lady-love meet together.
They being equal in status;
The lover being superior is not however forbidden

பி. இ. நூ.

அவிநயம்: (யா. வி. ஒழிபியல் 95)

ஊழ்வினை வயத்தால் ஒத்த இருவரும்
உள்ளம் நெகிழ்ந்து காதல் வயப்படுவர்
முறைசெய் வினையது முறையா உண்மையின்
ஒத்த இருவரும் உள்ளம் நெகிழ்ந்து

இறை. 2

அதுவே,

தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்

நம்பி. 118

புணர்ப்பதும் பிரிப்பதும் ஆகிய பால்களுள்
புணர்க்கும் பாலுட் பொருவிறந் தொத்து
கறைவேற் காளையும் கன்னியும் காண்ப
இறையோன் உயரினும் குறைவின்று என்மனார்

மா. அ. 7

நிலம் வேறு ஒன்றெனும் நிலைமையர் ஆகி
குலன்நலன் திருவுரு குறிக்கோளின் ஒன்றா
இறைவனும் இறைவியும் இருமையும் தொடர்ந்து
முறைபயில் பான்மை மூதுடை முதல்வன்
ஏவலின் கண்ணுறும் இயற்கைக் காட்சி
காவலன் உரினும் கடிநிலை யிலவே

இல. வி. 487

தொல்காப்பியச் சூத்திரமே.

இளம்

என்-எனின், இது காமக் கூட்டத்தின் கண் தலைமகனும் தலை மகளும் எதிர்ப்படுந்திறனும் அதற்குக் காரணமும் உணர்த்துதல் நுதலிற்று;

(இ-ள்.) ஒன்றே வேறே என்றிருபால்வயின்[1] என்பது ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறஞ் செய்துழி, அவ்விருவரையும் மறுபிறப்பினும் ஒன்றுவித்தலும், வேறாக்குதலுமாகிய இருவகை ஊழினும் என்றவாறு.

ஒன்றி உயர்ந்த பாலதாணையின் என்றது, இருவருள்ளமும் பிறப்புத்தோறும் ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையின் என்றவாறு,

உயர்ந்ததன் மேற் செல்லும் மன நிகழ்ச்சி உயர்ந்த பாலாயிற்று. காம நிகழ்ச்சியின் கண் ஒத்த அன்பினராய்க் கூடுதல் நல்வினையான் அல்லது வாராதென்பது கருத்து.

ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப என்பது, ஒப்பு பத்து வகைப்படும். அவை,

ஒப்பு பத்து வகைப்படும். அவை

''பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருபு நிறுத்த காமவாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே''
(மெய்ப்-உரு)

என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்துள் கூறிய பத்துமாம். அவற்றுள் பிறப்பாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆயர், வேட்டுவர், குறவர், நுளையர் என்றாற் போல வருங் குலம். குடிமையாவது அக்குலத்தினுள்ளார் எல்லாருஞ் சிறப்பாக ஒவ்வாமையின் அச்சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவைக் குடிமை என்றார்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்''
(குறள்)

எனப் பிறரும் குலத்தின் கண்ணே சிறப்பென்பது ஒன்றுண்டென்று கூறினாராகலின். ஆண்மையாவது, ஆண்மைத் தன்மை. அஃதாவது ஆள்வினையுடைமையும் வலிபெயராமையுமாம்.

''மொழியாததனை முட்டின்று முடித்தல்''
(மரபியல்)

---

1. ஒன்றே ...பால் என்பதற்கு நச். உரை பார்க்க.

என்பதனால்[1] தலைமகள் மாட்டுப் பெண்மையும் கொள்ளப் படும். அது பெண்டிர்க்கு இயல்பாகிய நாணம் முதலாயினவும் பெண்ணீர்மையும். ஆண்டென்பது, ஒருவரிருவர்[2] முதியரன்றி ஒத்த பருவத்தராதல் அது குழவிப் பருவங் கழிந்து[3] பதினாறு பிராயத்தானும் பன்னிரண்டு பிராயத்தானும் ஆதல். உரு என்பது வனப்பு. நிறுத்த காம வாயில் என்பது நிலைநிறுத்தப் பட்ட புணர்ச்சிக்கு வாயில். அஃதாவது ஒருவர் மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு. நிறை என்பது அடக்கம். அருள் என்பது பிறர் வருத்தத்திற்குப் பரியும் கருணை. உணர்வென்பது அறிவு. திரு என்பது செல்வம். இப்பத்து வகையும் ஒத்த கிழவெனும் கிழத்தியும் எதிர்ப்படுவர் எனக் கொள்க.

''மிக்கோ......இன்றே'' என்பது இக்குணங்களால் தலை மகன் மிக்கானாயினுங் கடியப்படாது என்றவாறு,

எனவே, இவற்றுள் யாதானும் ஒன்றினாயினும் தலைமகன் மிக்கானாயின் ஐந்திணையிற் கடியப்படும் என்ற வாறாம்[4]

''பாலதாணையின்....காண்ப'' என்பது—ஒருவரையொருவர் கண்டுழியெல்லாம் புணர்ச்சி வேட்கை தோற்றாமையிற் பாலதாணையான் ஒருவரை யொருவர் புணர்தற் குறிப்பொடு காண்ப என்றவாறு. மிக்கோனாயினும் என்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.[5] எற்றுக்கு, எதிர்மறையாக்கி. 'இழிந் தோனாயினும் கடியப்படாது.' என்றாற் குற்றமென்னை யெனின், செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி வருகின்ற பெருமையாதனின், இழிந்தானோடு உயர்ந்தாட் குளதாகிய கூட்டமின்மை பெருவழக்காதலின் அது பொருளாகக்* கொள்ளாம் என்பது,

---

1. சொல்லாததையும் சொன்னதோடு தடையின்றி முடித்துக் கொள்க என்னும் உத்தியால் ஆண்மை சொல்லப்பட்ட இடத்தில் சொல்லாத பெண்மையும் கொள்க.
2. தலைவன் தலைவியருள் யாரேனும் ஒருவரோ அல்லது இருவருமோ.
3. குழவிப் பருவம் காமத்துக்குரியதன்று ஆதலின் அது கழித்து.
4. ஐந்திணையின் நீக்கப்படும்; பெருந்திணையிற் சேர்க்கப் படும் என்பதாம்.
5. ஒத்தலைத்தழீ இயது.

* அது பொருளாக—உம்மை இறந்தது தழீஇயது என்பது பொருளாக.

ஈண்டுக் கிழவனும் கிழத்தியும் என ஒருவனும் ஒருத்தியும் போலக் கூறினாராயினும்.

> ''ஒரு பாற்கிளவியேனைப்பாற் கண்ணும்
> வருவகை தானே வழக்கென மொழிப''
> (பொருளியல்—26)

என்பதனாலும்[1] இந்நூல் உலக வழக்கே நோக்குதலானும் அவர் பலவகைப்படுவர், அஃதாமாறு அந்தணர், அரசர், வணிகர், வினைஞர்[2] என்னும் நால்வரொடும் அநுலோமர் அறுவரையும்[3] கூட்டப் பதின்மராவர், இவரை நால்வகை நிலத்தொடு உறழ நாற்பதின்மராவர், இவரையும், அந்நிலத்திற்குரிய ஆயர், வேட்டுவர், குறவர், பரதவர் என்னுந் தொடக்கத்தாரோடு கூட்டப் பலராவர், அவரையும் உயிர்ப்பன்மையான் நோக்க[4] வரம்பிலராவர்.

நச்.

இது, முற் கூறிய காமக்கூட்டத்திற்கு உரிய கிழவனுங் கிழத்தியும் எதிர்ப்படும் நிலனும் அவ்வெதிர்ப்பாட்டிற்குக்

---

1. ஒரு பாலில் சொல்லப்பட்டதாயினும் அச்சொல் மற்றைப் பாற் சொற்கண்ணும் வருவது உலக வழக்கு என்பர். அதற்கேற்ப இச்சூத்திரத்து கிழவன் கிழத்தி என ஒருவனையும் ஒருத்தியையும் கூறினாலும் கிழவர், கிழத்தியர் எனப் பன்மையிற் கூறியதாகக் கொள்ளல் வேண்டும். உலக வழக்குப் பலரையும் குறிப்பது ஆதலின் இந்நூலும் பலரை நோக்கியே ஒருமையாற் கூறியதாகும்.
2. வினைஞர்—வேளாளர்.
3. அநுலோமர் அறுவர் (1) பிராமணர் மற்றை வருணத்துப் பெண்டிருடன் கூடி அல்லது மணந்து பெற்றவர். (2) அரசர் தம் கீழ் வருணத்துப் பெண்டிருடன் கூடப் பிறந்தவர். (3) வணிகர் வேளிர் பெண்டிருடன் கூடப் பிறந்தவர் (4) வேளாளர் மேலுள்ள மூன்று வருணத்துப் பெண்டிருடன் கூடப் பிறந்தவர் (5) வணிகர் மேலுள்ள அரச அந்தணப் பெண்டிருடன் கூடப் பிறந்தவர். (6) அரசர் அந்தண வருணத்துப் பெண்டிருடன் கூடப் பிறந்தவர், இவருள் முதல் மூவரை அநுமலோமர் என்றும், பின் மூவரைப் பிரதிலோமர் என்றும் கூறுவர். இது ஆரிய வழக்கு. தமிழ் வழக்கு மாறானது.
4. உயிர்ப்பன்மையான் நோக்குதல்— தனித்தனி உயிர்களாகப் பார்த்தல்.

காரணமும் அங்ஙனம் எதிர்ப்படுதற்கு உரியோர் பெற்றியுங் கூறுகின்றது.

(இ-ள்):—ஒன்றே வேறே என்று இருபால் வயின்[1]—இருவர்க்கும் ஓரிடமும் வேற்றிடமும் என்று கூறப்பட்ட இரு வகை நிலத்தின் கண்ணும், ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்—உம்மைக் காலத்து எல்லாப் பிறப்பினும் இன்றியமையாது உயிரொன்றி ஒருகாலைக்கொருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் (273) ஆணையாலே, ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப—பிறப்பு முதலியன பத்தும் ஒத்த தலைவனுந் தலைவியும் எதிர்ப்படும், மிக்கோன் ஆயினும் கடி வரை இன்றே—அங்ஙனம் எவ்வாற்றானும் ஒவ்வாது தலைவன் உயர்ந்தோனாயினுங் கடியப்படா என்றவாறு.

'என்றிருபால் வயிற் காண்ப' எனப்பால் 'வன்பால் மென் பால்' போல நின்றது[2]. உயர்ந்த பாலை 'நோய் தீர்ந்த மருந்து. போற் கொள்க.[3] ஒரு நிலம் ஆதலை[4] முற் கூறினார். இவ்வொழுக்கத்திற்கு ஓதியது குறிஞ்சி நிலமொன்றுமே ஆதற் சிறப்பு நோக்கி வேறு நிலம் ஆதலைப்பிற் கூறினார்.[5]

குறிஞ்சி தன்னுள்ளும் இருவர்க்கும் மலையும் ஊரும் வேறா தலுமன்றித் திணை மயக்கத்தான் மருதம் நெய்தலென்னும் நிலப் பகுதியுள் ஒருத்தி அரிதின் நீங்கி வந்து எதிப்படுதல் உளவாதலுமென வேறுபட்ட பகுதி பலவும் உடன் கோடற்கு. ஒரு நிலத்துக் காமப் புணர்ச்சிப் பருவத்தானாயினாளை

---

1. இதற்கு இளம். உரைபார்க்க.
2. வன்பால் — வன்னிலம், மென்பால் — மென்னிலம் இது போல் இங்குப் பால் என்பது நிலம் என்னும் பொருளில் நின்றது.
3. நோய் தீர்ந்த மருந்து—நோய் தீர்தற்குக் காரணமான மருந்து அதுபோல 'உயர்ந்த பால்' என்பதற்கு 'உயர்தற்குக் காரணமான நிலம்' எனக் கொள்க.
4. ஒரு நிலம் ஆதல். தலைவன் தலைவியிருவரும் வாழும் நிலம் ஒன்றாதல்.
5. களவொழுக்க நிகழ்ச்சிகள் யாவும் புணர்ச்சியும் புணர்ச்சி நிமித்தமுமாக அமைதலின் களவோழுக்கத்துக் குரிய நிலம் குறிஞ்சி நிலம் ஒன்றேயாகும். பிற நிலம் உரியவாதல் சிறுபான்மையும் சிறப்பின்மையுமாம். அதனால் தலைவன் தலைவியர் நிலம் வேறு வேறாய் அமைவதைப் பிற்கூறினார் என்பது கருத்து.

ஆயத்தின் நீங்கித் தனித்து ஓரிடத்து எளிதிற் காண்டல் அரிதென்றற்குப் ''பாலதாணையிற் காண்ப'' என்றார். எனவே, வேற்று நிலத்திற்காயின் வேட்டை மேலிட்டுத் திரிவான் அங்ஙனந் தனித்துக் காணுங் காட்சி அருமையாற் பாலதாணை வேண்டுமாயிற்று.

(உ-ம்)

''இவனிவளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவுங்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில சிறு செருவுறுப மன்னோ
நல்லை மன்றம்ம பாலே மெல்லியற்
றுணை மலர்ப் பிணையலன்ன விவர்
மணமகிழியற்கை காட்டியோயே[1]

(குறுந்—229)

இஃது ஒருரென்றதாம்.

''காமஞ்செப்பாது கண்டது மொழிமோ''

(குறுந்—2)

என்றது, என் நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாதே சொல் என்றலிற் குறிஞ்சி நிலம் ஒன்றாயிற்று.

''இலங்கு மருவித்திலங்கு மருவித்தே
வாளி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை''.[2]

(கலி—41)

---

1. கருத்து. ஏ ஊழ் வினையே! இவன் இவனின் கூந்தலைப் பற்றவும் இவள் இவனின் புல்லிய தலையில் மயிரை வளைத்துப் பற்றவும் ஆகப் பிணங்கிய போது காதற் செவிலியர் தடுக்கவும் அயலவர் போலச் சிறிய சண்டை செய்வர். முன்னாளில் அதுகழிந்தது. இரண்டான மலரால் கட்டிய மாலை போலும் இவ்விருவர்க்கும் மணந்து மகிழும்படியாக இக்காலத்துக் காட்டினாய். நீ வாழ்க.

2. கருத்து: தான் சொன்ன சூளுறவைக் கைவிட்டுப் பொய்த்தவன் மலையாய் இருந்தும் இலங்கும் அருவியினையுடையதாய் இருந்ததே—இதில் பொய்த்தவன் மலை என்றதால் தலைவன் மலை வேறு என்பதும் தலைவி மலை வேறு என்பதும் புலனாம்.

என்புழிப் பொய்த்தவன் மலையும் இலங்கும் அருவித்தென வியந்து கூறித் தமது மலைக்கு நன்றி இயல்பென்றலிற் குறிஞ்சி யுள்ளும் மலை வேறாயிற்று.

"செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்றா யென்றவன்
பௌவ நீர்ச்சாய்க் கொழுதிப்பாவைதந் தனைத்தற்கோ
கௌவை நோயுற்றவர் காணாது கடுத்தசொல்
லொவ்வா வென்றுணராய் நீ யொருநிலையே[1]
யுரைத்தனை". (கலி—76)

இது, மருதத்துத் தலைவி களவொழுக்கங் கூறுவான் பௌவ நீர்ச் சாய்ப்பாவை தந்தான் ஒருவனென நெய்தனிலத்து' எதிர்ப் பட்டமை கூறியது. ஆணைவிதி கைகோளின் முதற்கட் கூறு தலிற் கற்பின் காறும் ஒன்றும் வேறுஞ் செல்லும். பாலது ஆணையும் அவ்வாறாம்.

மிகுதலாவது: குலங் கல்வி பிராயம் முதலியவற்றான் மிகுதல். எனவே, அந்தணர், அரசர் முதலிய வருணத்துப் பெண் கோடற்கண் உயர்தலும், அரசர் முதலியோரும் அம்முறை உயர்தலுங் கொள்க. இதனானே அந்தணர் முதலியோர் அங்ஙனம் பெண்கோடற்கட் பிறந்தோர்க்கும் இவ்வொழுக்கம் உரித்தென்று கொள்க. கடி—மிகுதி[2]

அவர் அங்ஙனங் கோடற்கண் ஒத்த மகளிர் பெற்ற புதல்வ ரோடு ஒழிந்த மகளிர் பெற்ற புதல்வர் ஒவ்வாரென்பது உணர்த்தற்குப் பெரிதும் வரையப்படாதென்றார். பதினாறு தொடங்கி இருபத்து நான்கு ஈறாகக் கிடந்த யாண்டொன்பதும் ஒரு பெண்கோடற்கு மூன்றியாண்டாக அந்தணன் உயரும் கந்தருவ மணத்து; ஒழிந்தோராயின் அத்துணை உயரார்.

---

1. கருத்து. அலர் தூற்ற ஒன்றும் இல்லையே என்று வருந்திய ஊர்மகளிர் ஆராயமலே என்னைப் பற்றித் தூற்றிய சொற்களை இவளைச் சாராது என்றுணராமல் அவர்கள் போலவே நீயும் உரைத்தது எது நோக்கி? செவ்விரல் மேலும் சிவக்க இத்தட்டையினைப் பறிக்க நீண்டகாலம் போக்கினாய் என்று கூறி பஞ்சாயத் தட்டையைப் பறித்துப் பாவை செய்து தந்துபோனானே ஒருவன் அது நோக்கியோ?

2. கடிவரையின்று என்பதற்கு நீக்கும் நிலைமையின்று எனப் பொருள் கொள்ளல் நன்று. மிகுதியும் வரையப் படாது எனப் பொருள் கொண்டமையால் மிகுதலாவது யாது என இவ்விளக்கம் எழுத வேண்டுவதாயிற்று.

இருபத்து நான்கிரட்டி நாற்பத்தெட்டாதல் பிரம முதலிய வற்றான் உணர்க. 'வல்லெழுத்து மிகுதல்'[1] என்றாற் போல மிகுதலைக் கொள்ளவே பிராயம் இரட்டியாயிற்று. கிழத்தி மிகுதல் அறக்கழிவாம். 'கிழவன் கிழத்தி' எனவே பல பிறப் பினும் ஒருவர்க்கு ஒருவர் உரிமை எய்திற்று. இங்ஙனம் ஒருமை கூறிற்றேனும் 'ஒரு பாற் கிளவி' (222) என்னுஞ் சூத்திரத்தான் நால்வகை நிலத்து நான்கு வருணத்தோர் கண்ணும் ஆயர் வேட்டுவர் முதலியோர் கண்ணுங் கொள்க.

இச் சூத்திரம் 'முன்னைய நான்கும்'[2] (52) எனக் கூறிய காட்சிக்கு இலக்கணங் கூறிற்றென்றுணர்க.

(உ-ம்)

> ''கருந்தடங் கண்வண்டாகச் செவ்வாய் தளிரா
> வரும்பிவர் மென்முலை தொத்தாப்-பெரும்
> பணைத்தோட்
> பெண்டகைப் பொலிந்த பூங்கொடி
> கண்டேங் காண்டலுங் களித்த வெங்கண்ணே''[3]
> (பு. வெ. கைக்-1)

இக்காட்சிக் கண் தலைவனைப் போல் தலைவி வியந்து கூறுதல் புலனெறி வழக்கன்மை உணர்க.

ஷேவள்.

இயற்கைப் புணர்ச்சிக்கண் ஒத்த அன்பினராய ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காணுமாறு கூறுகின்றது.

இ—ள்: ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் மனையறத்தின் பயனாக அவ்விருவரையும் பிறப்புத்தோறும் சேர்த்து வைப்பதும் பிரித்து விலக்குவதும் ஆகிய இருவகை யூழிலும் இருவர் உள்ளமும்

---

1. 'வல்லெழுத்து மிகுதல்' என்றவிடத்து வல்லெழுத்து இரட்டித்தல் எனப் பொருள் கொள்வது போல இங்கு மிகுதல் என்பது இரட்டித்தல் எனப் பொருள் கொள்ளப் பட்டது.

2. முன்னைய நான்கு என்பன இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழும் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் என்பன அக்காட்சிக்கு இச்சூத்திரம் இலக்கணம் கூறியது என்க.

3. கருத்து கண்ணே வண்டாக செவ்வாயே தளிராத முலையே அரும்பாகக் கொண்டு பெருந்தோளையுடைய ஒரு பெண் போல அமைந்த பூங்கொடியைக் கண்டேம்; கண்டதும் எம் கண்கள் களிப்புற்றன. இது தலைவன் தலைவியைக் கண்டு வியந்து கூறியது.

எக்காலத்தும் ஒன்றி வாழ்தற்கேற்ற நல்லூழின் ஆணையால் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முன் எதிர்ப் பட்டுக் காண்பர். தலைவன் உரு திரு முதலியவற்றால் மிக்க வனாயினும் குற்றம் இல்லை எ—று.

ஒன்றுவித்தலைச் செய்யும் நல்லூழினை 'ஒன்று' எனவும் வேறுபடுத்தலைச் செய்யும் போகூழினை 'வேறு' எனவும் கூறினார் ஆசிரியர்.

இவ்வாறு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்படும் முதற்காட்சிக்கு நல்லூழின் ஆணையே காரணம் என்பார் 'உயர்ந்த பாலது ஆணையின்' என்றும், அவ்வூழின் ஆணைக்குக் காரணமாவது அவ்விருவரும் பண்டைப் பிறப்புக்களிற் பயிலியது கெழீஇய நட்பு என்பார் 'ஒன்றியுயர்ந்த பாலது ஆணை' என்றும், பல பிறவியிலும் பழகிய அன்பின் தொடர்ச்சியே ஒருவரை யொருவர் இன்றியமையாதவராகக் காணுதற்குரிய காதற் கிழமையை வழங்கியது என்பார் 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்றும் கூறினார்.

பாலது ஆணையாவது வினை செய்த உயிர்கள் நுகர்தற் குரிய இருவினைப் பயன்கள் ஏனை யுயிர்கள் பாற் செல்லாது வினைகளைச் செய்த உயிர்களே நுகரும் வண்ணம் முறை செய்து நுகர்விப்பதாகிய இறைவனது ஆற்றல். இதனைப் 'பால் வரை தெய்வம்' (தொல். கிளவி-58) என்ற தொடராலும் ஆசிரியர் குறித்துள்ளமை காணலாம். தலைவனுக்கும் தலைவிக்கும் அமைந்த ஒத்த பண்புகளாவன பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு. நிறை, அருள், உணர்வு, திரு என்னும் இப்பத்துமாகும். காணுதல் என்றது தனக்குச் சிறந்தாராகக் கருதுதலை.

சிவலிங்கனார்

இச்சூத்திரம் தலைவனும் தலைவியும் முதன் முதலில் ஒருவரையொருவர் காணும் காட்சி பற்றியது.

> காட்சி பாலது (ஊழது) ஆணையின் நிகழ்வது. பாலது ஆணைக்குக் காரணம் தலைவனும் தலைவியும் பிறவி தோறும் பிரியாது ஒன்றிவரும் உயர்வேயாகும். அவ்வுயர்வே இப்பிறவியிலும் தலைவனும் தலைவியும் காண்பதற்குக் காரணம் ஆம். அவ்வுயர்வே பாலாக அமைந்து ஆணையிடும்.

என்பது இச் சூத்திரத்தால் விளங்குவது. ஆதலின் இளம்பூரணர் ''ஒன்றே வேறே . ...காண்ப'' என்பதற்கு,

> ''ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறஞ் செய்துழி
> அவ்விருவரையும் மறுபிறவியினும் ஒன்று
> வித்தலும் வேறாக்குதலுமாகிய இருவகை யூழி
> னும், இருவருள்ளமும் பிறப்புத் தோறும்
> ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்த
> ஊழினது ஆணையின்......காண்ப''

என்றுரைத்தது மிகப் பொருந்தும்.

நச்சினார்க்கினியர், 'ஒன்றியுயர்ந்த பாலது ஆணை' என்பதற்கு,

> ''உம்மைக் காலத்து எல்லாப் பிறப்பினும்
> இன்றியமையாது உயிர்ஒன்றி ஒருகாலைக்
> கொருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏது
> வாகிய பால்வரை தெய்வத்தின் ஆணை''

எனப் பொருள் உரைத்தார்.

இதில் ''உம்மைக் காலத்து எல்லாப் பிறப்பினும்......உயிர் ஒன்றி...சிறத்தற்கு ஏதுவாகிய பால்'' என்றதால் பிறவிதோறும் ஒன்றுவிக்காமல் வேறுபடுத்தும் பாலும் உண்டு என்பது பெறப் படும் எனக் கருதியதால், 'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்' என்பதற்கு வேறு பொருள் கூறுவது சிறக்கும் எனக் கருதினா ராவர். அதனால் அவர் அதற்கு,

''இருவர்க்கும் ஓரிடமும் வேறிடமும் என்று கூறப்பட்ட இரு வகை நிலத்தின் கண்ணும்'' என்று உரை கூறினார்.

இளம்பூரணர் உரையால் பால், ஒன்றுவிப்பதும் வேறுபடுப் பதும் என இருவகைப்படும் என்பதும், அவற்றுள் ஒன்றுவிக்கும் பாலே காட்சிக்கு ஆணையிடும் என்பதும் பெறப்படும். நச்சி னார்க்கினியர் உரையால், அக்கருத்துகளில் இரண்டாவது குறிப் பாகவும் முதலாவது வெளிப்படையாகவும் பெறப்படுதலோடு; காணும் நிலம் தலைவனுக்கும் தலைவிக்கும் உரிய ஓரிடமாகவோ அல்லது வெவ்வேறிடங்களுள் ஒன்றாகவோ அமையும் என்னும் கருத்தும் பெறப்படும். அதனால் நச்சினார்க்கினியர் உரை இச் சூத்திரத்துக்குச் சிறக்கும் என்னலாம்.

ஐயம்

91. சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்ட லான. (3)

ஆ. மொ.

இல.

They say that it they excel in their individual talents it is better to doubt one another, for there is no necessity for such doubt is either of them be inferior which signifies contempt.

பி.இ.நூ.

நம்பி. 120.

மடமான் நோக்கி வடிவம் கண்ட
இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்

மாறன். 8.

எய்திய இருவருள் சிறந்த இறைவன்மேற்று
அய்யுறல் என்ப அறிவுடையோரே

இல.வி. 489.

மடமான் நோக்கி வடிவும் கண்ட
இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்.

இளம்.

என்-எனின், ஐயம் நிகழும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒருவன் ஒருத்தியைக் கஸ்ணுற்றுழி அவ்விருவகையும் உயர்வுடையராயின் அவ்விடத்து ஐயம் சிறந்தது என்று சொல்லுவர், அவர் இழிபுடையராயின் அவ்விடத்து அவள் இழிபினையே சுட்டியுணர்தலான் என்றவாறு. சிறப்பு என்பது மிகுதி. ஐயமிகுதலாவது மக்களுள்ளாள் அல்லள் தெய்வமோ என மேலாயினரோடே ஐயுறுதல். சிறந்துழி என்பதற்குத் தலைமகள் தான் சிறந்துழியும் கொள்ளப்படும். அவனைக் கண்ட இடம் ஐயப்படுதற்குச் சிறந்துழியும் கொள்ளப்படும். உருவ மிகுதியுடையளாதலின் ஆயத்தாரிடைக் காணினும் தெய்வம் என்று ஐயுறுதல். இதனாற் சொல்லியது உலகத்துத்

தலைமகனும் தலைமகளுமாக நம்மால் வேண்டப்பட்டார்[1] அந்தணர் முதலாகிய நான்கு வருணத்தினும் ஆயர் வேட்டுவர் குறவர் பரதவர் என்னும் தொடக்கத்தினும் அக்குலத்தாராகிய குறுநில மன்னர் மாட்டும் உளராவரன்றே. அவரெல்லாரினும் செல்வத்தானும் குலத்தானும் வடிவானும் உயர்ந்த தலைமகனும் தலைமகளுமாயினோர் மாட்டே ஐயம் நிகழ்வது. அல்லாதார் மாட்டும் அவ் இழி மரபினையே சுட்டியுணரா நிற்குமாதலான் என்றவாறு,

'காராரப்பெய்த' என்னும் முல்லைக் கலியுள்
(கலித்-106)

''பண்ணித் தமர் தந்தொரு புறந்தைஇய
கண்ணி எடுக்கல்லா கோடேந்தகலல்குல்
புண்ணிலார் புண்ணாக நோக்கு முழு மெய்யுங்
கண்ணளோ ஆயமகள்''[2]

என ஐயமின்றிச் சுட்டியுணர்ந்தவாறு காண்க. இனி உயர்புள் வழி ஐயம் நிகழுமாறு:

''உயர் மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே''
(பொருளியல்-42)

எனறாராகலின், ஐயப்படுவான் தலைமகன் என்று கொள்க. தலைமகள் ஐயப்படாதது என்னையெனின், அவள் ஐயப்படுங் கால், தெய்வமோ என்று ஐயுறுல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும், அஃது ஏதுவாகக் காம நிகழ்ச்சி யுண்டாகாது.

---

1. நம்மால் விரும்பப்பட்டார், நம்மால் கொள்ளப்பட்டார் அவர் செல்வம் முதலியவற்றால் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஆவர். அவருள்ளும் உயர்ந்தாரிடமே-உயர்ந்த தலைவன் தலைவியரிடமே ஐயம் நிகழும். தாழ்ந்தாராயின் நிகழாது.

2. பொருள்: தமரால் புனையப்பட்டு ஒருபுறமாக தடவி வரும் மாலையை நீக்காத பக்கம் உயர்ந்த அகன்ற அங்குலையுடையாள் உடம்பிற் புண் இல்லாதவரும் உடம்பு முழுதும் புண் உண்டாகும்படிப் பார்க்கும்; அதனால் முழு உடம்பும் கண்ணாகவுடையவளோ அந்த ஆயர் மகள்? இதில் ஆயமகள் என்றது சுட்டியுணர்ந்தவாறு.

நச்.

இஃது எய்தாத தெய்துவித்து எய்தியது விலக்கிற்று. 'முன்னைய நான்கும்' (52) என்றதனாற் கூறிய ஐயந்தலைவன் கண்ணதே எனவுந் தலைவிக்கு நிகழுமோ என்னும் ஐயத்தை விலக்குதலுங் கூறலின்.

(இ-ள்): சிறந்துழி[1] ஐயம் சிறந்தது என்ப-அங்ஙனம் எதிர்ப்பாட்டின் இருவருள்ளுஞ் சிறந்த தலைவன் கண்ணே ஐயம் நிகழ்தல் சிறந்ததென்று கூறுவார் ஆசிரியர். இழிந்துழி இழிபே சுட்டலான-அத் தலைவனின் இழிந்த தலைவிக் கண் ஐயம் நிகழுமாயின் இன்பத்திற்கு இழிவே அவள் கருதும் ஆதலான் என்றவாறு.

தலைவற்குத் தெய்வமோ அல்லளோவென நிகழ்ந்த ஐயம், நூன் முதலியவற்றால் நீக்கித் தெய்வமன்மை உணர்தற்கு அறிவுடையனாதலும், தலைவிக்கு முருகனோ இயக்கனோ, மகனோவென ஐயம் நிகழின் அதனை நீக்கி உணர்தற்குக் கருவியிலள் ஆகலானும் இங்ஙனம் கூறினார். தலைவிக்கு ஐயம் நிகழின் அச்சமேயன்றிக் காமக் குறிப்பு நிகழாதாம். மகடூஉவின் ஆடூஉச் சிறத்தல் பற்றிச் 'சிறந்துழி' என்றார்.

(உ-ம்)

> ''அணங்கு கொலாய்மயில் கொல்லோ கணங்குழை
> மாதர் கொல்மாலு மென் னெஞ்சு''[2]
>
> (குறள்-1081)

எனவரும்

க. வா, சச்சிதானந்தம்

''ஒத்த கிழவனும் கிழத்தியும் பாலது ஆணையின் எதிர்ப் பட்டுக் காணும் போது அவர்க்குத் தோன்றும் ஐயம் சிறந்த தாகவே அமையும். இழிந்ததாக அமையாது; அமையின் காமக்

---

1. தலைவன் தலைவி ஆகிய இருவரில் தலைவன் சிறந்த வன் எனக் கொண்டு சிறந்துழி என்பதற்குத் தலைவன் கண் என்றும் இழிந்துழி என்பதற்குத் தலைவிக் கண் என்றும் உரைத்தார்.

2. கருத்து இங்கே தோன்றுபவள் அணங்கோ மயிலோ அல்லது பெருமை மிக்க காதணியணிந்துள்ள மண் மகளோ அறியாது மயங்கும் என் நெஞ்சம். தலைவன் முதற் காட்சிக் கண் ஐயப்பட்டது இது.

கூட்டத்துக்கு இடையூறாகும். அதனால் ''சிறந்துழி ஐயம் சிறந்தது' என்பதற்கு ''இனி நிகழவிருக்கும் காமக் கூட்டம் பொலிவு பெறுவதற்கு ஏற்ப ஒருவரையொருவர் உயர்ந்தாராக மதிக்கும் உணர்வு சிறந்தவிடத்து ஐயம் சிறந்ததாகும்; அவ்வாறின்றிக் காமக் கூட்டத்துக்கு இழிவு தோன்றுமாறு உணர்வு குறைபட்ட விடத்து அக்கூட்டத்துக்குக் குறைவையே சுட்டும் ஆதலினால்'' எனப் பொருள் கொள்வது சாலப் பொருந்தும்'' (இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் பத்தொன்பதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 2. பக். 105. அண்ணாமலை நகர் 1987)

சிவ.

(இ.ள்): பின்னர் நிகழும் இயற்கைப் புணர்ச்சிக்குக் காரணமாகச் சிறக்குமிடத்துத் தலைவன் தலைவியைப் பற்றி தெய்வமகளோ முதலியவாக ஐயப்படுதல் சிறப்புடையதாகும் என்பர்; அவ்வாறின்றி இயற்கைப் புணர்ச்சிக்குக் குறைபாடு டையதாகத் தோன்றுமாயின் அவ் வையம் அப்புணர்ச்சிக்கு இடையூறே தருதலின் சிறவாது என்பர்.

(''ஐயக் கிளவி ஆடூஉவிற்குரித்தே'' எனப் பின்னர்க் கூறு தலின் ஐயம் தலைவனுக்கே யுரியதென்க.) பிற்காலத்துச் சேக்கிழார் பரவையார் சுந்தரரை ''முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ, தன்னேரில் மாரனோ'' (பெரிய. தடுத்.) என ஐயப்பட்டதாகக் கூறியது அகப்புறக் கைக்கிளையின் பாற் சாரும்.

சிறந்துழி என்பதற்கு இளம்பூரணர், தலைவன் தலைவியர் எனச் சிறந்த இடம் என இருவரையும் தழுவிப் பின்னர் ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே என்பதனால் தலைவியை விலக்கினார். நச்சினார்க்கினியர் சிறந்துழி என்பதற்குத் தலைவனிடம் என்றும் இழிந்துழி என்பதற்குத் தலைவியிடம் என்றும் கொண் டார். வெள்ளைவாரணனார் சிறந்துழி என்பதற்குத் தலைவி எனக் கொண்டு ''தலைவி ஒத்த நலங்களாற் சிறந்து தோன்றிய வழி'' எனப் பொருள் உரைத்தார்.

ஐயம் இழிந்துழி இழிபே சுட்டலான ஐயம் சிறந்துழிச் சிறந்த தென்ப எனக் கூட்டுக.

சிறந்துழி என்பதற்கு ''காமக் கூட்டம் பொலிவு பெறுதற்கு ஏற்ப ஒருவரை யொருவர் உயர்ந்தாராக மதிக்கும் உணர்வு

சிறந்தவிடத்து எனப் பொருள் கொண்ட சச்சிதானந்தம் உரை சிறப்புடையதே. எனினும் 'உணர்வு சிறந்த விடத்து' எனச் சிறப்பை உணர்வின் மேல் ஏற்றுவதைவிட, ஐயத்தின் மேல் ஏற்றி, ''ஐயமானது காமப் புணர்ச்சிக்குச் சிறப்பைத் தருமாறு சிறந்ததாயின் அவ்வையமே சிறந்ததாம் எனக் கூறுவது இன்னும் சிறக்கும்.

ஐயத் தெளிவுக் காரணம்

92. வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்று
அன்னவை பிறவும் ஆங்கவை நிகழ
நின்றவை களையும் கருவி என்ப (4)

ஆ. மொ.

இல.

Beetle Ornament, Creeper, Flower, Eye, Confusion, Twinkling of the eye and fear. And such others which happen to be there are the means of clearing the doubt they say*

பி இ. நூ.

நம்பி. 121.

எழுதிய வல்லியும் தொழில்புனை கலனும்
வாடிய மலரும் கூடிய வண்டும்
நடைபயில் அடிவும் புடைபெயர் கண்ணும்
அச்சமும் பிறவும் அவள்பால் நிகழும்
கச்சமில் ஐயம் கடிவன வாகும்.

மாறன். 9.

அலம்வரல் கண்ணிமைப்பு அச்சம் உகக்கும்
மன்னுயிர்ப் பதனின் வாடுதல் வெயர்த்தல்
ஒளிர்கலன் வள்ளி வண்டுடன் நிழலிடுதல்
அடிநிலன் தோய்தல் அவண் நிகழ் ஐயம்
கடிவன வாகும் காவலன் தனக்கே.

---

* This is proved to be interpolated.

இல வி. 490

நம்பி அகப்பொருள் சூத்திரம் முழுவதும்.

இளம்.

என்-எனின், ஐயப்பட்டான் துணிதற்குக் கருவி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எண்ணப்பட்ட வண்டு முதலாகிய எட்டும் பிறவுமாகி அவ்விடத்து நிகழாநின்ற ஐயம் களையும் கருவி என்றவாறு.

ஐயமென்பது அதிகாரத்தான் வந்தது. ''நிகழா நின்றவை;' என்பது குறுகி நின்றது[1], வண்டாவது, மயிரின் அணிந்த பூவைச் சூழும் வண்டு, அது பயின்றதன் மேலல்லது செல்லாமையின் அதுவும் மக்களுள் ளாளென்றறிதற்குக் கருவியாயிற்று இழையென்பது அணிகலன். அது செய்யப்பட்டது எனத் தோற்றுதலானும் தெய்வப்பூண் செய்யா அணியாதலானும் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. வள்ளி என்பது முலையினும் தோளினும் எழுதிய கொடி. அதுவும் உலகின் உள்ளதாகித் தோன்றுதலின் (அதுவும்) கருவியாயிற்று, அலமரல் என்பது தடுமாறுதல் தெய்வமாயின் நின்றவழி நிற்கும். அவ்வாறன்றி நின்றுழி நிற்கின்றிலள் என்று சுழற்சியும்[2] அறிதற்குக் கருவியாயிற்று. இமைப்பென்பது கண்ணிமைத்தல். தெய்வத்திற்குக் கண் இமையாமையின் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. அச்சமென்பது ஆண்மக்களைக் கண்டு அஞ்சுதல். அது தெய்வத்திற்கு இன்மையான் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று, அன்னவை பிறவும் என்றதனான் கால் நிலந்தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல் கொள்க. இவை கருவியாகத் துணியப்படும் என்றவாறு* காட்சி முதலாகிய இத்துணையும் கைக்கிளைக் குறிப்பாம்[3]. இதற்குச் செய்யுள் வந்தவழி காண்க. இனிக்[4]

---

1. நிகழா நின்றவை என்பது நிகழ நின்றவை எனக் குறுகி நின்றது. காட்சிக் காலத்து நிகழ்கின்ற வண்டு மொய்த்தல் முதலியவை ஐயம் களையும் என்றவாறு.
2. சுழற்சி—கண்ணின் சுழற்சி

* ஐயத்தை நீக்கும் இவையே கருவியாகத் துணியப்படும் என்பது கருத்து.

3. கைக்கிளை என்பது இருவருள் ஒருவர் பாலுண்டாம் கேண்மை. இயற்கைப் புணர்ச்சியில் காட்சி முதல் ஐயம் வரையுள்ள இவை தலைவியின் உள்ளக் குறிப்பை அறிதற்கு முன்னர் நிகழ்வன ஆதலின் 'ஒரு மருங்கு பற்றியகேண்மையாகும். அதனால் கைக்கிளைக்குறிப்பு.
4. அடுத்து வரும் இரண்டு சூத்திரங்களில்

குறிப்பறிதல் கூறுகின்றாராகலின் அக்குறிப்பு நிகழும் வழி இவையெல்லாம் அகமாம். என்னை? இருவர் மாட்டுமொத்த நிகழ்ச்சியாதலான்[1], இவை தலைமகள் மாட்டுப் புலப்பட நிகழாது[2] ஆண்டுக் குறிப்பினாற் சிறிது நிகழுமென்று கொள்க. அவை வருமாறு:—

''உண்டாகண் அல்லது அடுநறாக்காமம் போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று'' (குறள்-1090)

எனவரும்[3]. பிறவும் அன்ன.

நச்.

இஃது ஐயுற்றுத் தெளியுங்கால் இடையது ஆராய்ச்சி யாதலின் ஆராயுங் கருவி கூறுகின்றது. வண்டு முதலியன வானகத்தனவன்றி மண்ணகத்தனவாதல் நூற்கேள்வியானும் உய்த்துணர்ச்சியானும் தலைமக்களை உணர்ப.

(இ-ள்) வண்டே-பயின்றதன்மேலல்லது செல்லாத தாது ஊதும் வண்டு. இழையே—ஒருவரால் இழைக்கப்பட்ட அணிகலன் கள். வள்ளி-முலையினுந் தோளினும் எழுதுந் தொய்யிற் கொடி. பூவே-கைக்கொண்டு மோந்து உயிர்க்கும் கழுநீர்ப்பூ. கண்ணே-வான்கண்ணல்லாத ஊன்கண். அலமரல்-கண்டறியாத வடிவு கண்ட அச்சாத்தாற் பிறந்த தடுமாற்றம். இமைப்பே-அக் கண்ணின் இதழ் இமைத்தல். அச்சம்-ஆண்மகனைக் கண்டுழி மனத்திற் பிறக்கும் அச்சம். என்று அன்னவை பிறவும்-என்று

1. காட்சி ஐயம் தெளிவு என்பன தலைமகன் மாட்டு மட்டும் நிகழ்வதாகக் கொள்ளின் கைக்கிளைக் குறிப் பாம். இருவர் மாட்டும் நிகழ்வதாயின் அகத்திணையாம்.

2. தலைவன் மாட்டு வெளிப்படையாக நிகழ்வது போலத் தலைவி மாட்டு நிகழாது. சிறிதளவு குறிப்பாக நிகழும்.

3. கள் பார்த்தவர்க்கு மகிழ்ச்சியைத் தராது; தன்னை யுண்டவர்க்கே மகிழ்ச்சியைத் தரும். காமம் என்பது காமம் உடையாரைக் கண்ட பொழுது கண்டவர்க்கு மகிழ்ச்சியைத் தரும் என்பது குறளின் கருத்து. காமம் உடையாரைக் காணும் போது காமம் உடையார்க்கு மகிழ்ச்சி தரும் என்றதனால், தலைவன் தலைவியைக் காணும் போது தான் கொண்ட காமம் போல அவளும் தன்னைக் கண்டு காமம் கொண்டவளாக இருத்தலை யுணர்தலால் தலைவி மாட்டும் ஐயம் நிகழ்ந்து தெளிவு கொண்ட பின்னர்க் காமக் குறிப்பு நிகழ்ந் துண்டு எனக் கொள்ளலாம். அதனால் அக்குறிப்பும் அகத்திணைப் பாற்படும்,

அவ்வெண்வகைப் பொருளும் அவை போல்வன பிறவும், அவண் நிகழ நின்றவை-அவ்வெதிர்ப்பாட்டின்கண் தான் முன்பு கண்ட வரையர மகள் முதலிய பிழம்புகளாய் ஈண்டுத் தன் மனத்து நிகழநின்ற அப்பிழம்புகளை. ஆங்குக்களையும் கருவி என்ப-முந்துநூற் கண்ணே அவ்வையம்நீக்குங் கருவியாமென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

எனவே, எனக்கும் அது கருத்தென்றார். இவையெல்லாம் மக்கட்குரியனவாய் நிகழவே தெய்வப்பகுதி மேற்சென்ற ஐயம் நீக்கித் துணியும் உள்ளம் பிறத்தலின் துணிவும் உடன் கூறிற்றே யாயிற்று.[1]

இனி, 'அன்னபிற' ஆவன—கால் நிலந்தோய்தலும் நிழலீடும் வியர்த்தலும் முதலியன.

''திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
போகித முண்கணு மிமைக்கு
மாகு மற்றிவளகலிடத் தணங்கே''[2]

(பு.வெ. கைக்-3)

இக்காட்சி முதலிய நான்கும் அகனைந்திணைக்குச் சிறப்புடைமையும் இவை கைக்கிளை யாராலும் 'முன்னைய நான்கும், (52) என்றுழிக் கூறினாம். இங்ஙனம் ஐயந்தீர்ந்துழித் தலைவியை வியந்து கூறுதலுங் கொள்க.

சிவ.

தலைவியைக் கண்ட தலைவனுக்கு அவள் மண்மகளோ தெய்வமகளோ என்றாவது, நம் நாட்டாளோ பிற நாட்டாளோ என்றாவது ஐயம் நிகழும். அவ்வையத்தை நீக்கும் கருவிகள் வண்டு முதலியன.

வண்டு:

தெய்வ மகளிர் கூந்தல்மலரில் வண்டு மொய்த்தல் இல்லை என்பது நூலால் அறிந்தது. அவள் கூந்தல்மலரில்

---

1. ஐயத்தைக் களைதல் கூறவே களைந்தபின் நிகழ்வது துணிவாதலின் துணிவும் உடன் கூறப்பட்டது என்றார்.
2. கருத்து ''இங்கே தோன்றிய இவளது நுதல் வியர்வு அரும்பும்; பூமாலை வாடும், கால் நிலம் தோயும், கண் இமைக்கும். இவை யாவும் மண்ணுலக மங்கையின் பால் நிகழ்வன வாதலின் இவள் மண்ணுலக மகளேயாவள்,''

வண்டு மொய்த்தலின் 'இவள் மண்மகளே' எனத் துணிவான்.

வண்டு தான் பயின்ற மலர்களிலேயே மொய்க்கும். பயிலாத மலர்களில் மொய்த்தல் இல்லை. இவள் கூந்தல் மலரில் மொய்க்கும் வண்டு நம் பக்கத்து வண்டு; இவள் கூந்தல் மலரும் நம் பக்கத்து மலர்; ஆதலின் இவள் நம் நாட்டாளே எனத் துணிவான்.

இழை:

தெய்வ மகளிர் அணிகலன் செய்யப்பட்டதாகாது. இவள் அணிகலன் செய்யப்பட்டதாகும். அதனால் இவள் மண்மகளே எனத் துணிவான்.

இவள் அணிந்திருக்கும் அணிகலன் நம் பக்கத்து அணிகலனாகும். பிற நாட்டார் அணியும் அணிகலன் அன்று; ஆதலின் இவள் நம் நாட்டாளே எனத் துணிவான்.

வள்ளி:

தோளில் கொடி எழுதி அழகுபடுத்துதல் தமிழர் வழக்கம். ஆதலின் இவள் தோளில் தொய்யிற் கொடி காணப்படுவதால் அவ்வழக்கம் இல்லாத தேவ மகளோ பிற நாட்டாளோ அல்லள் எனத் துணிவான்.

பூ:

தெய்வமகளிர் பூ வாடாமலர். இவள் கைக்கொண்ட பூ, மோந்ததனால் வாடிய பூவாகக் காணப்படுகின்றது. அதனால் தேவமகளல்லள். இவள் பூவைக் கைக்கொண்டுள்ள நிலையும் மோந்து மணம் நுகரும் முறையும் நம் பக்கத்து மகளே என்பதைத் தெரிவிக்கும். ஆதலின் இவள் நம் நாட்டாளே எனத் துணிவான்.

கண்:

கண்ணின் ஒளி தேவமகளிர் கண் ஒளிபோல் இல்லை. மண்மகளுக்குரிய விளக்கத்தில் இருக்கிறது. அதனால் தேவமகளல்லள். கண்ணில் எழுதிய மை நம் நாட்டவர் எழுதுவது போல் உள்ளது. ஆதலின் பிற நாட்டாளல்லள் எனத் துணிவான்.

அலமரல்:

நின்ற இடத்தில் நிற்காமல் இப்படியும் அப்படியுமாகச் சுழலல். இது பொதுவாக அச்சத்தால் நிகழ்வது. தெய்வமகள்

நின்ற இடத்தில் நிற்பள், ஆதலின் இவள் தேவமகள் அல்லள் எனத் துணிவான்.

இமைப்பு:

தெய்வப் பெண்ணின் கண் இமையாது. இவள் கண் இமைக்கின்றது. ஆதலின் இவள் மண்மகளே எனத் துணிவான்.

அச்சம்:

தேவப் பெண் அஞ்சுதல் இல்லை. இவள் அச்சம் உடையவளாகக் காணப்படுகிறாள். ஆதலின் இவள் மண்மகளே எனத் துணிவான்.

மேலே கூறிய கருவிகள் யாவும் ஒருங்கு நிகழும் என்பதில்லை. ஒன்றிரண்டன் நிகழ்ச்சியிலேயே ஐயம் நீங்கித் துணிவான் என்க.

''அன்னவை பிறவும் நிகழ நின்றவை ஆங்கண்களையும் கருவி என்ப'' எனக் கூட்டுக. அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ நின்று அவை (ஐயங்களைக்)களையும் கருவி எனினும் ஆம்.

நோக்கம்

93. நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும் (5)

ஆ. மொ.

இல.

The two eyes will play their parts to bring them together.

பி. இ. நூ.

நம்பி. 112.

அரிவை நாட்டம் அகத்து நிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப.

மாறன். 10, 11

கண் இணை புகுமுகம் புரிதலின் காரிகை
உள்நிறை வேட்கை உரவோற்கு உணர்த்தும்.

வழிநிலைக் காட்சியும் உள்ளப் புணர்ச்சியென்று
எழில் பெறு மேனும் இணைவிழைச் சின்றால்
கைக்கிளை என்பதும் கடன் எனத் தகுமே.

இல்.வி. 491

நம்பி அகச் சூத்திரமே

இளம்.

என்-எனின் மேல் தலைமகளை இத்தன்மையள் எனத் துணிந்த தலைமகன் குறிப்பறியாது சாரலுறின் பெருந்திணைப் பாற்படுமாகலானும், இக் கந்திருவ நெறிக்கு ஒத்த உள்ளத் தாராதல் வேண்டுமாதலானும், ஆண்டு ஒருவரோடொருவர் சொல்லாடுதல் மரபன்மையானும், அவருள்ளக் கருத்தறிதல் வேண்டுதலின், அதற்குக் கருவியாய உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாட்டம் இரண்டும் என்பது-தலைமகன் கண்ணும் தலைமகள் கண்ணும் என்றவாறு,

அடுவுடம்படுத்தற்கு என்பது-ஒருவர் வேட்கை போல இருவர்க்கும் வேட்கை உளதாகுங் கொல்லோ எனக் கவர்த்து[1] நின்ற இருவரது அறிவினையும் ஒருப்படுத்தற்கு என்றவாறு.

கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும் என்பது-தமது வேட்கை யொடு கூட்டி ஒருவர் ஒருவருக்கு உரைக்குங் காமக்குறிப்புரை யாம் என்றவாறு,

இதன் பொழிப்பு: இருவர்க்கும் கவர்த்து நின்ற அறிவை ஒருப்படுத்தற் பொருட்டு வேட்கையொடு கூட்டிக்கூறுங் காமக் குறிப்புச் சொல் இருவரது நாட்டமாகும் .என்றவாறு,

ஆகும் என்பதனை நாட்டம் என்பதனொடு கூட்டியுரைக்க இதற்குச் செய்யுள்.

''பானலந் தண்கழிப் பாடறிந்து தன்ஐமார்
நூல்நல நுண் வலையாற் கொண்டெடுத்த—கானற்

---

1. கவர்த்து நிற்றலாவது இருவர் அறிவும் இவர்க்கு நம்பால் வேட்கையுண்டோ இல்லையோ என இரு நிலையில் ஊசலாடி ஐயப்பட்டு நிற்றல்.

படுபுலால் காப்பாள் படைநெடுங்கண் நோக்கம்
கடிபொல்லா என்னையே காப்பு''[1]
(திணைமாலை நூற்-32)

கண்ணினான் அறிப என்றவாறு.

நச்.

இஃது, அங்ஙனம் மக்களுள்ளாளெனத் துணிந்து நின்ற தலைவன் பின்னர்ப் புணர்ச்சி வேட்கை நிகழ்ந்துழித் தலைவியைக் கூடற்குக் கருதி உரை நிகழ்த்துங்காற் கூற்று மொழியான் அன்றிக் கண்ணான் உரை நிகழ்த்து மென்பதூஉம் அது கண்டு தலைவியும் அக் கண்ணான் தனது வேட்கை புலப்படுத்திக் கூறுமென்பதுஉங் கூறுகின்றது; எனவே இது புணர்ச்சி நிமித்தமாகிய வழிநிலைக் காட்சி[2] கூறுகின்றதாயிற்று.

(இ-ள்) அறிவு-தலைவன் அங்ஙனம் மக்களுள்ளாளென்று அறிந்த அறிவானே, உடம்படுத்தற்கு-தலைவியைக் கூட்டத்திற்கு உடம்படுத்தற்கு, நாட்டம் இரண்டும் கூட்டி உரைக்கும்-தன்னுடைய நோக்கம் இரண்டானுங் கூட்டி வார்த்தை சொல்லும், குறிப்புரை நாட்டம் இரண்டும் ஆகும்-அவ் வேட்கை கண்டு தலைவி தனது வேட்கை புலப்படுத்திக் கூறுங் கூற்றுந் தன்னுடைய நோக்கம் இரண்டானுமாம் என்றவாறு.

'நாட்டமிரண்டும்' இரண்டிடத்துங் கூட்டுக[3]. உம்மை விரிக்க.[4] இங்ஙனம் இதற்குப் பொருள் கூறல், ஆசிரியர்க்குக்

---

1. பொருள்: நீல மலர் மிக்க கழியிடத்து மீன்கள் மிகப் படுதலை அறிந்து அண்ணன்மார்கள் வலை கொண்டு பிடித்த மீன்களைப் பறவைகள் கவராதபடிக் காப்பவளாகிய இத் தலைவியின் கண்கள் பறவைகளைக் கடியவில்லை என்னையே நோக்குகின்றன. என்னே அவளின் காக்கும் செயல்.
2. தலைவனும் தலைவியும் முதலில் எதிர்ப்படும் போது காணும் காட்சி பின்னர் நிகழும் ஐயத்துக்கு ஏதுவானது தொடர்ந்து ஐயம் நீங்கித் தத்தம் வேட்கையைப் புலப்படுத்தும் போது நிகழும் காட்சி மெய்யுறு புணர்ச்சிக்கு ஏதுவானது. அதனால் பின்னர் நிகழும் காட்சி வழிநிலைக்காட்சியாகும். வழிநிலை-தொடர் நிலை அல்லது பின்னிலை,
3. நாட்டம் இரண்டும் கூட்டியுரைக்கும், குறிப்புரை நாட்டம் இரண்டும் ஆகும் எனக் கூட்டப்பட்டது. முன்னது தலைவனுக்குரிய தொடர். பின்னது தலைவிக்குரிய தொடர்.
4. 'குறிப்புரையும்' என விரிக்க,

கருத்தாதல் 'புகுமுகம் புரிதல்' (261) என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தானுணர்க.

அதற்குப் பேராசிரியர் கூறிய உரையானுமுணர்க. ஒன்று ஒன்றை ஊன்றி நோக்குதலின் நாட்டமென்றார். நாட்டுதலும் நாட்டமும் ஒக்கும்.[1]

(உ-ம்)

நோக்கினா ணோக்கெதிர் நோக்குதாக்கணங்கு
தானைக் கொண்டன்ன துடைத்து.''[2] (குறள்-1082)

எனவரும்.

இது, புகுமுகம் புரிதல்[3] என்னும் மெய்ப்பாடு கூறியது.

(5)

வெள்.

மேற் குறித்த அடையாளங்களைக் கொண்டு ஐயம் நீங்கித் தலைமகளை இத்தன்மையள் எனத் துணிந்த தலைமகன் அவளது கருத்தறியாது அவளை அணுகுவனாயின் அச் செயல் பொருந்தாவொழுக்கமாகிய பெருந்திணையாய் முடியும். ஒத்த அன்பினால் நிகழ்தற்குரிய இக்களவொழுக்கத்திற்குத் தலைமகளது உள்ளக் கருத்தினைத் தலைமகன் உணர்ந்து கொள்ளுதல் முதற்கண் வேண்டப்படுதலின், தலைமகளது உள்ளக் கருத்தினைத் தலைமகன் குறிப்பால் உணர்தற்குரிய கருவி[4] கூறுகின்றது.

(இ-ள்): காதலர் இருவர் கண்களும், அவ்விருவரது அறிவினையும் ஒருப்படுத்தற்கு ஒருவர் ஒருவர்க்குத் தம் வேட்கையுடன் சேர்த்து நோக்கும் காமக் குறிப்புரையாகும், எ-று.

---

1. நாட்டப்-நாட்டுதல்—தொழிற்பெயர்: அம் தொழிற் பெயர் விகுதி.

2. பொருள்: என்னைப் டார்த்தவளை நான் பாக்க அவள் அதற்கு எதிராகப் பார்த்தலானது இயல்பாகவே தாக்கும் ஒரு தெய்வப் பெண் படையையும் கொண்டு தாக்குவது போலும் தன்மைத்தாம்.

3. புகுமுகம் புரிதல்: ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழி அவன் தன்னை நோக்குதற்கண் உள்ளம் விரும்பும் நிகழ்ச்சி.

4. இப்படித் தலைவனைப் பற்றிக் கூறினும் தலைமகனது உள்ளக் கருத்தினைத் தலைமகள் குறிப்பால் உணர்தற் குரிய கருவி கூறுகின்றது என்றும் கொள்க,

சிவ.

இச் சூத்திரம் குறிப்பறிதற் கருவி கூறுகின்றது.

(இ-ள்:) தலைவன் தலைவியரின் இரண்டு கண்களும், ஒருவர் அறிவை (உணர்வை) ஒருவர் அறிவொடு ஒருப்படுத் தற்குத் தத்தம் வேட்கையொடு காம உணர்வினைக் கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்.

அறிவை உடம்படுத்தலாவது இருவர் உணர்வும் ஒன்றா மாறு செய்தல். வேட்கையைக் கூட்டியுரைத்தலாவது காம வேட்கையைப் புலப்படுத்துதல். நாட்டம் இரண்டும் என்பதை இரண்டு நாட்டமும் எனக் கூட்டுக. குறிப்புரைக்குக் கருவி யாகிய நாட்டத்தைக் குறிப்புரையென்றார். குறிப்புரை குறிப்பு மொழி. மொழியாவது தனக்குள்ளே கூறிக் கொள்வது.

> நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
> யாப்பினுள் அட்டிய நீர்.'' (குறள். 1093)

இது தலைவன் தன்னுட் கூறியது. இப்படித் தன்னுட் கூறிக் கொள்வதை—தலைவன் வேட்கையை அவன் கண்கள் தலைவிக்குத் தெரிவிக்கும்.

குறிப்பறிந்த வழி நிகழ்வன

94. குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என் மனார் புலவர் (6)

ஆ.மொ.

இல.

If their look reciprocal, singns of love-making will takc place, so say the poets.

இளம்.

என்-எனின், மேலதற்கோர் புறனடைபுணர்த்துதல் நுத லிற்று.

(இ-ள்) ஒருவர் குறிப்பு ஒருவர் குறித்ததனைக் கொள்ளு மாயின், அவ்விடத்துக் கண்ணினான் வருங் குறிப்புரை நிகழும் என்றவாறு,

எனவே, குறிப்பைக் கொள்ளாதவழி அக்குறிப்புரை நிகழாது என்றவாறாம். இதனாற் சொல்லியது சண்ட காலத்தே வேட்கை முந்துற்ற வழியே இக்கண்ணினான் வருங் குறிப்பு நிகழ்வது, அல்லாத வழி நிகழாது என்றவாறு. இனிக் குறிப்பு நிகழுமாறும் அதன் வேறுபாடும், மெய்ப்பாட்டியலுள் கூறுப. ஈண்டும் சில உதாரணம் காட்டுதும்.

''நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.''[1]

(குறள்-1093)

எனவும்,

''அசை இயற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்''[2]

(குறள்-1098)

எனவும் வரும், பிறவும் அன்ன. தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிந்த வழியும் கூற்று நிகழாது, பெண்மையான்.

நச்.

இது புணர்ச்சியமைதி கூறுகின்றது.

(இ-ள்) குறித்தது—தலைவன் குறித்த புணர்ச்சி வேட்கையையே, குறிப்புக் கொள்ளுமாயின்—தலைவி கருத்துத் திரிவுபடாமற் கொள்ளவற்றாயின், ஆங்கு—அக்குறிப்பைக் கொண்ட காலத்து, அவை நிகழும் என்மனர் புலவர்—புகுமுகம் புரிதன் முதலாய் இருகையுமெடுத்தல் ஈறாகக் கிடந்த மெய்ப்பாடு பன்னிரண்டனுட் (261-263) பொறிநுதல் வியர்த்தல் முதலிய பதினொன்றும் முறையே நிகழுமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

''அவ்கவை'யும் பாடம். பன்னிரண்டாம் மெய்ப்பாடாகிய இருகையுமெடுத்தல் கூறவே முயக்கமும் உய்த்துணரக் கூறிய

---

1. பொருள்: தலைவன் கூறியது. அவள் என்னைப் பார்த்தாள்! பார்த்து நாணத்தால் தலை கவிழ்ந்தாள். அச்செயலானது—அக்குறிப்பானது அன்புப் பயிர் வளர அவள் பாய்ச்சிய நீராயிற்று.

2. பொருள்: தலைவன் கூற்று. யான் அவளைப் பார்க்க அவள் மெல்ல நகுகிறாள்; அதனால் அந்த அசையும் (நுடங்கும்) இயல்புடையாட்கு அவ்விடத்து ஓர் நல்லெண்ணக் குறிப்பு உண்டு என்பது புலப்படும்.

வாறு காண்க. அம்மெய்ப்பாட்டியலுட் கூறிய மூன்று சூத்திரத்தையும் ஈண்டுக் கூறியுணர்க.

(உ-ம்)

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனுமில'' (குறள்-1100)

''கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது''[1] (குறள்-1092)

இதனை நான்கு வருணம் ஒழிந்தோர்க்குங் கொள்க.

(உ-ம்)

''பானலந் தண்கழிப் பாடறிந்து தன்னைமார்
நூனல நுண்வலையாற் கொண்டெடுத்த—கானற்
படுபுலால் காப்பாள் படைநெடுங்கண்ணோக்கங்
கடிபொல்லா வென்னையே காப்பு''[2]
(திணை-நூற்-32)

இனி, முயங்கி மகிழ்ந்து கூறுவன.

''கோட்டலெதிர் முகைப் பசுவீமுல்லை
நாறிதழ்க் குவளையோடிடைப் படவிரைஇ
யைது தொடை மாண்ட கோதை போல
நறியநல்லோண் மேனி
முறியினும் வாயது முயங் கற்குமினிதே''[3]
(குறுந்-62)

''தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு''.[4]
(குறள்-1107)

---

1. கருத்து: அவள் கண்ணில் உள்ள என்னைக் களவு கொண்டு பார்க்கும் சிறிய நோக்கம் காமப் புணர்ச்சிக்கு உடன்படும் பாதியளவினதன்றி முழுமையும் உடையதாகும்.

2. பொருள் முன்னர் எழுதப்பட்டது. பக். ல் காண்க.

3. பொருள்: காந்தள் மலர் முல்லையரும்பு குவளை மலர் ஆகியவற்றை இடையிடை வைத்துத் தொடுக்கப் பட்டமாலை போலும் நல்ல மணமுடைய நல்லவளாகிய இவளின் மேனி தளிர் போலாயது; முயங்குதற்கும் இனிதாய் அமைவது—இது தலைவன் கூற்று.

4. தலைவன் கூற்று: தம் உழைப்பால் அமைத்த இல்லில் இருந்து கொண்டு தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்குப்

உரையிற் கோடலான் மொழிகேட்க விரும்புதலுங் கூட்டிய தெய்வத்தை வியந்து கூறுதலும் வந்துழிக் காண்க.

வெள்.

இது மேற் குறித்தவாறு காதலர் இருவரும் ஒருவர் குறிப்பினை மற்றவர் குறிப்பு ஏற்றுக் கொண்ட பின்னர் நிகழ்வதே அன்பின் ஐந்திணைக் களவொழுக்கமாம் என்பது உணர்த்துகின்றது.

(இ-ள்): ஒருவரது கண்ணின் குறிப்பு மற்றவரது கண்ணினாற் குறிக்கப்பட்ட உள்ளக் குறிப்பினை உள்ளவாறு ஏற்றுணரவல்லதாயின் பின் கூறப்படுவன நிகழும் என்று கூறுவர் உள நூலாசிரியர், எ. று.

ஆங்கவை என்றது-வேட்கை முதலாகச் சாக்காடு ஈறாகப் பின்னர்க் கூறப்படும் உணர்வு நிலைகளை.

இந்நூற்பாவில் வரும் 'அவை' என்னும் சுட்டு கண்ணினான் வரும் குறிப்புரையினைச் சுட்டியது எனக் கொண்டார் இளம்பூரணர். அவை என்பது புகுமுகம் புரிதல் முதலாக இருகையும் எடுத்தல் ஈறாகப் பின்னர் மெய்ப்பாட்டியலிற் கூறப்படும் மெய்ப்பாடு பன்னிரண்டனுள் 'பொறிநுதல் வியர்த்தல்' முதலிய பதினொன்றனையும் சுட்டியது எனக் கொண்டார் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் கூறும் கண்ணினான்வரும் குறிப்புரை மேலைச் சூத்திரத்தில் 'நாட்டம் இரண்டும் கூட்டியுரைக்கும் குறிப்புரை' என விளக்கப் பெற்றமையின் அதனையே இச் சூத்திரமும் சுட்டியது எனக் கொள்ளுதல் கூறியது கூறல் என்னும் குற்றத்தின்பாற் படுதலானும், இடம் வரையாது நூற்பாவில் வரும் 'அவை' என்னும் சுட்டு அதன் அணித்ததாக முன்னோ பின்னோ வுள்ளனவற்றைச் சுட்டுவதன்றி இவ்வியலின் மூன்றாம் இயலாகிய மெய்ப்பாட்டியலில் விரித்துரைக்கப்படும் பன்னிரண்டு மெய்ப்பாடுகளுள் பதினொன்றினை மட்டும் வரைந்து சுட்டுதல் இயலாததாகலாறும் உரையாசிரியர்கள் இருவரும் கூறும் உரைகள் தொல்காப்பியனார் கருத்தினைப் புலப்படுத்துவனவாக அமையவில்லை.

பகிர்ந்து கொடுத்து உண்பதால் வரும் இன்பம் போன்றது இந்த அழகிய மாமை நிறம் உடையாளிடம் பெறும் முயக்கம்.

சிவ.

இருவர் உணர்வும் ஒருவர் ஒருவர்க்குணர்த்திய உணர்வு களை உணருமானால் அதன் பின்னரே இனிவரும் இயற்கைப் புணர்ச்சிக்கு வேண்டிய வேட்கை, உள்ளுதல் முதலிய நிமித்தங் கள் முறையாக நிகழும் என்பர் புலவர்.

குறிப்பு என்றது—குறித்துணரும் உணர்வை. ஆங்கவை என்றது பின்னர் நிகழும் புணர்ச்சி நிமித்தங்களை.[1] ஆங்கு என்பது அசை நிலை எனினும் ஆம்.

தலைவன் இயல்பு

95. பெருமையும் உரனும் ஆடூஉ மேன (7)

ஆ. மொ.

இல.

Nobility and courage are the qualities of the Male.

பி. இ. நூ.

நம்பி. 35.

பொருவிறந் தோற்குப் பெருமையும் உரனும்
.........................மன்னிய குணங்கள்

இல. 404.

பொருவிறந் தோற்குப் பெருமையும் உரனும்
............மன்னிய குணங்கள்

முத்து. கள. 3.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன

இளம்.

என்-எனின், இது தலைமகற்கு உரியதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

---

1. வேட்கை ஒருதலையுள்ளுதல் (6) முதலியவற்றை

(இ-ள்) : பெருமையாவது - பழியும் பாவமும் அஞ்சுதல், உரன் என்பது - அறிவு.

இவையிரண்டும் ஆண் மகனுக்கு இயல்பு என்றவாறு, இதனானே மேற்சொல்லப்பட்ட தலைமகளது வேட்கைக் குறிப்புக் கண்ட தலைமகன், அந்நிலையே புணர்ச்சியை நினையாது, வரைந்து எய்தும் என்பது பெறுதும்.

''சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பத றிவு''[1] (குறள்—422)

என்பவாகலின். தலைமகன் இவ்வாறு கூறியதற்குச் செய்யுள்

''வேயெனத் திரண்டதோள் வெறிகமழ்வணர்
ஐம்பால்
மான்வென்ற மடநோக்கின் மயிரியல் தளர்பொல்கி
ஆய்சிலம்பு அரியார்ப்ப வளரொளி இழை இமைப்பக்
கொடியென மின்னென அணங்கென யாதொன்றும்
தெரிகல்லா இடையின்கட் கண்கவர்பு ஒருங்கோட
வளமைசால் உயர்சிறப்பின் நுந்தை தொல் வியனகர்
இளமையான் எறிபந்தோடிகத்தந்தாய் கேளினி''
பூந்தண்தார்ப்புலர் சாந்தின் தென்னவன் உயர்கடல்
தேம்பாய அவிழ்நீலத்தலர் வென்ற அமருண்கண்
ஏந்து கோட்டெழில்யானை யொன்னாதார்க்
கவன்வேலிற்
சேந்துநீ யினையையால் ஒத்ததோ சின்மொழி.
பொழிபெயல் வண்மையான் அசோகந்தண்காவினுள்
கழிகவின் இளமாவின் தளிரன்னாய் அதன்தலைப்
பணையமை பாய்மான்தேர் அவன் செற்றார்
நிறம் பாய்ந்த
கணையினு நோய் நெய்தல் கடப்பன்றோ கனங்குழாய்
வகையமை தண்தாரான் கோடுயர் பொருப்பின் மேல்
தகையிணர் இளவேங்கை மலரன்ன சுணங்கினாய்
மதவலி மிகுகடாஅத் தவன் யானை மருப்பினும்

1. பொருள்: மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்ல விடாது, அப்புலத்தின் நன்மை தீமை யாராய்ந்து தீய தனின் நீக்கி நல்ல தன்கட் செலுத்துவது அறிவு-பரி மேலழகர்.

தவவால் தக்கதோ காழ்கொண்ட இளமுலை
எனவாங்கு
இனையனகூற இறைஞ்சுபு நிலநோக்கி
நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போன்
மற்றாங்கே
துணையமை தோழியர்க் கமர்த்த கண்ணள்.
மன்யாங்குப் பெயர்ந்தாளென் அறிவகப்படுத்தே[1]
(கலித்-57)

''உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த
சிறுகரு நெய்தல் கண்போல் மாமலர்ப்
பெருந்தண் மாத்தழை யிருந்த அல்குல்
ஐய அரும்பிய சுணங்கின் வையெயிற்று
மையீர் ஓதி வாணுதற் குறுமகள்
விளையாட்டாயமொடு வெண்மணல் உதிர்த்த

---

1. பொருள்: தலைவன் பாங்கனிடம் தான் தலைவியைக் கண்டமை கூறியது. இது இயற்கைப் புணர்ச்சியில் மெய் யுறாது உள்ளப் புணர்ச்சியளவில் மீண்ட தலைவன் கூற்று.

தோளையும் கூந்தலையும் மடநோக்கினையும் மயிலிய லையும் உடையவளாய், சிலம்புப்பரல் ஒலிக்க அணிகள் ஒளிவீச, கொடியோ மின்னலோ தெய்வமோ எனத் தெரிய முடியாத இடையில் என் கண்ணைக் கவர்ந்து நின் தந்தை ஊரில் இளமை காரணமாகப் பந்தைக் கொண்டு ஓடியவளே! சொல்வதைக் கேள்.

தென்னவன் கூடலில் நீலமலர்போலும் நின் கண்கள், பகைவர்க்கு அத்தென்னவன் வேல் சிவந்தது போலச் சிவத்தல் நல்லதோ. வள்ளலாகிய அப்பாண்டியனின் அசோகந் தண்பொழிலில் இள மாமரத்தின் இளந்தளிர் போலும் மேனியாய்! அத்தென்னவன் பகைவரது உடலிற் பாய்ந்து சிவந்த அம்புபோல எனக்கு நீ துன்பம் செய்தல் கடத்தற்கரியதாம்.

வேங்கை மலர் போலும் சுணங்குடையவளே நின் இள முலை பாண்டியனின் யானை மருப்பினும் வருத்தும் வலியுடையதாம்; இது தக்கதோ.

என்றிப்படியான் கூறக் கேட்டு அவள் தலை தாழ்ந்து நிலம் பார்த்து எதையோ நெடிதாக நினைப்பாள் போல் தன் தோழியர் கூட்டத்தில் கலந்து தன் மனை யிடம் புக்காள் என் அறிவைக் கவர்ந்து.

புன்னை நுண் தாது பொன்னின் நொண்டு
மனைப்புறந் தருதியாயின் ஏனையதூஉம்
இம்மனைக் கிழமை யெம்மொடு புணரில்
தீதும் உண்டோ மாதராயெனக்
கடும்பரி நன்மான் கொடிஞ்சி நெடுந்தேர்
கைவல் பாகன் பையென இயக்க
யாந்தற் குறுகினம் ஆக ஏந்தெழில்
அறிவே யுண்கண் பனிவர லொடுக்கிச்
சிறிய இறைஞ்சினள் தலையே
பெரிய எவ்வம் யாமிவணுறவே''[1]

(அகம்-230)

இவை உள்ளப் புணர்ச்சியான் வரைதல் வேண்டிப் பாங்கற்கு உரைத்தன.

நச்.

இத்துணை மெய்யுறு புணர்ச்சிக்கு உரியனவே கூறி[2], இனி உள்ளப் புணர்ச்சியே நிகழ்ந்து விடும் பக்கமும் உண்டென்பதூஉம்

---

1. பொருள்: பாங்கனே! கொடிஞ்சி நெடுந்தேரைப் பாகன் மெல்ல இயக்கச் சென்று 'நெய்தல் மலர் போற் கண்ணும் அல்குலும் சுணங்கும் பல்லும் கூந்தலும் நுதலும் உடைய குறுமகளே! விளையாட்டுத் தோழிய ருடன் வெண்மணலில் புன்னைப் பூவுதிர்த்த தாதுக் களைப் பொன் எனக் கொண்டு கிளறிப் பின் மனைப் பக்கம் செல்வையாயின் எப்படியும் இம்மனைக்கு நினக்குள்ள உரிமையை என்னோடு கூடிச் சேர்வாய் ஆனால் தீது உண்டாகுமோ என்று சொல்லி யான் அவளைக் குறுகினேன் ஆக அவள் தன் கண்ணில் பனி வருதலைத் தடுத்து சிறிது தலைதாழ்த்தினாள் யான் பெரிய துன்பம் உறும்படியாக. இதுவே நடந்தது.

   இதில் புணர்ச்சி நடந்ததாகக் கூறாமையின் உள்ளப் புணர்ச்சியளவில் முதல் நாளிற் பிரிந்தான் தலைவன் என்பது பெறப்படும்.

2. இத்துணையும் கூறப்பட்டன உள்ளப் புணர்ச்சிக்கே யுரியவாய் மெய்யுறு புணர்ச்சிக்கு நிமித்த மாவனவே யன்றி 'மெய்யுறு புணர்ச்சிக்கு உரியனவே' எனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. —வெள்.

இவ்விருவகைப் புணர்ச்சிப்பின்னர்க் களவின்றி வரைந்து கோடல் கடிதில் நிகழ்தலுண்மெனபதூஉம் உணர்த்துகின்றது.

(இ-ள்): பெருமையும்—அறிவும் ஆற்றலும் புகழுங் கொடையும் ஆராய்தலும், பண்பும், நண்பும், பழிபாவ மஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமைப் பகுதியும், உரனும் —கடைப் பிடியும் நிறையுங் கலங்காது துணிதலும் முதலிய வலியின் பகுதியும், ஆடூஉ மேன—தலைவன் கண்ண என்றவாறு.

இதனானே உள்ளப் புணர்ச்சியே நிகழ்ந்து வரைந்து கொள்ளும் உலக வழக்கும், மெய்யுறு புணர்ச்சி நிகழ்ந்துழியுங் களவு நீட்டியாது வரைந்து கோடலும், உள்ளஞ் சென்றுழி யெல்லாம் நெகிழ்ந்தோடாது ஆராய்ந்து ஒன்று செய்தலும், மெலிந்த உள்ளத்தானாயுந் தோன்றாமல் மறைத்தலுந் தீவினை யாற்றிய பகுதியிற் சென்ற உள்ளம் மீட்டலுந் தலைவற்கு உரியவென்று கொள்க.

(உ-ம்)

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்ப தறிவு."[1]

(குறள்-422)

பெருமை நிமித்தமாக உரன் பிறக்கும். அவ்வுரனான் மெய்யுறு புணர்ச்சி இலனாதலும் உரியனென இதுவும் ஓர் விதி கூறிற்று. தலைவிக்கு மெய்யுறு புணர்ச்சி நடக்கும் வேட்கை நிகழாமைக்கும் காரணம் மேற்கூறுப. இனி இயற்கைப் புணர்ச்சி இடையீடு பட்டுழி இடந்தலைப் பாட்டின்கண் வேட்கை தணியாது நின்று கூடுபவென்றும், ஆண்டு இடையீடு பட்டுழிப் பாங்கனாற் கூடுபவென்றும் உரைப்போரும் உளர்.[2] அவர் அறியாராயினார்; என்னை? அவ்விரண்டிடத்தும் இயற்கைப் புணர்ச்சிக்கு உரிய மெய்ப்பாடுகள் நிகழ்ந்தே கூடவேண்டுதலின் அவற்றையும் இயற்கைப் புணர்ச்சியெனப் பெயர் கூறலன்றிக் காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும் பாங்கொடுதழாஅலும் என ஆசிரியர் வேறு வேறு பெயர் கூறாரென்றுணர்க.

---

1. கருத்து. மனதைச் சென்றவிடமெல்லாம் செல்ல விடாமல் தீமையினின்றும் நீக்கி நல்லதன்கண் செல்ல விடுவது அறிவாகும்.

2. கூறுவோர் இளம்பூரணர்.

சிவ.

களவொழுக்கம் பற்றிக் காட்சி முதலாகவுள்ளவற்றைக் கதை போலப் புலனெறி வழக்காகச் சொல்லிவர எண்ணிக் குறிப்பறிதல்வரை கூறி வந்த ஆசிரியர், தொடர்ந்து மெய்யுறு புணர்ச்சிக்குரிய ''வேட்கை ஒருதலையுள்ளுதல்'' முதலிய வுணர்வுகளைக் கூறாமல் தலைவன் குணங்களாகப் பெருமை யையும் உரனையும், தலைவி குணங்களாக அச்சம் நாணம் மடன் ஆகியவற்றையும் இடையே கூறியதன் நோக்கம், செய்யுள் நெறியையடிப்படையாகக் கொள்ளாமல் உலக வழக்கையடிப் படையாகக் கொண்டு குறிப்பறிந்த மாத்திரத்தே தன்பெருமை உரன் காரணமாக உள்ளப் புணர்ச்சியளவில் நின்று பிரிந்து மணந்து கொள்ள முயல்வதே நன்று என்னும் கருத்தேயாகும். அவளும் அச்சம் நாணம் மடன் காரணமாக மெய்யுறு புணர்ச்சியை விரும்பாது உள்ளப் புணர்ச்சியளவோடு பிரிந்து திருமணத்தை வேண்டி நிற்பதே நன்று என்பதும் கருத்தாம். அக் குணங்களையும் விஞ்சிக் காமம் மிக்குப் புணர்ச்சி வேட்கை மீதூருமாயின் வேட்கை ஒருதலையுள்ளுதல் முதலிய புணர்ச்சி நிமித்தங்கள் நிகழும் என்க.

தலைவியியல்பு

96. அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்'[1]
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப **(8)**

ஆ. மொ.

இல.

They say that fear, shyness and simplicity (in appearance) are predominantly the qualities of the female.

பி, இ. நா.

நம்பி. 35.

நன்னுதற் கச்சமும் நாணமு மடனும்
மன்னிய குணங்கள்.

1. முந்துறுத்த—நச். பாடம்.

இல. 404.

நன்னுதற் கச்சமும் நாணும் மடனும்
மன்னிய குணங்கள்.

முத்து. 832.

அச்சமு நாணு மடனு முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப.

இளம்.

என்-எனின், இது தலைமகட்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்): அச்சமும், நாணும், பேதைமையும் இப் மூன்றும் நாடோறு முந்துறுதல் பெண்டிர்க்கு இயல்பு என்றவாறு.

எனவே வேட்கையுற்றுழியும் அச்சத்தானாதல் நாணானாதல் மடத்தானாதல் புணர்ச்சிக்கு இசையாது நின்று வரைந்தெய்தல் வேண்டு[1]மென்பது போந்தது. இவ்வாறு இருவரும் உள்ளப் புணர்ச்சியால் நின்று வரைந்தெய்தி மெய்யுறும்.[2] இதற்குச் செய்யுள்

தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பின் பிணைத்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப்பாங்கரு
முல்லையுந் தாய பாட்டங்கால் தோழிநம்
புல்லினத்தாயர் மகளிரோடெல்லாம்
ஒருங்கு விளையாட அவ்வழிவந்த
குருந்தம் பூங்கண்ணிப் பொதுவன் மற்றென்னை
முற்றிழை ஏஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றான் எல்லாநீ
பெற்றேம் யாம்மென்று பிறர் செய்த இல்லிருப்பாய்
கற்றதிலை மன்றகாண் என்றேன் முற்றிழாய்
தாது சூழ் கூந்தல் தகைபெறத்தைஇய

---

1. வரைந்தெய்துதல் வேண்டும்—வரைந்தெய்துதலை விரும்புவள்.

2. மெய்யுறும்—மெய்யுறுவள் எனப் பொருள் கொள்க. இருவரும் மெய்யுறும் என்பது பிழை. 'மெய்யுறுப' எனப்பாடம் இருப்பின் நன்று.

கோதை புனைகோ நினக்கென்றான் எல்லாநீ
ஏதிலார் தந்த பூக்கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதராய்
ஐய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேல்
தொய்யிலெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புறம் நோக்கி இருத்துமோ நீ பெரிதும்
மையலை மாதோ விடுகென்றேன் தையலாய்
சொல்லிய வாறெல்லாம் மாறுமாறு யான்பெயர்ப்ப
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான் அவன்நீ
ஆயர் மகளிர் இயல்புரைத்தெந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவைமன்''[1] (கலித்-111)

இது தலைமகள் உள்ளப் புணர்ச்சியின் உரிமை பூண்டிருந்த வாறும் வரைந்தெய்தக் கூறலுற்றவாறும் காண்க.

நச்

இது, மேலதே போல்வதோர் விதியை உள்ளப்புணர்ச்சி பற்றித் தலைவிக்குக் கூறுகின்றது.

---

1. பொருள்: தோழீ! மனைத் தோட்டத்தில் ஆய மகளிர் எல்லாருடனும் விளையாடிய பொழுது ஒரு பொதுவன் வந்து மடநல்லாய் நீயாடும் இற்றில் புனையட்டுமா என்றான். அதற்கு யான், ஏடா! என்னை மணந்து வீடு கட்டித் தருவது அறியாம் இவள் தந்தையின் வீட்டில் இருக்கப் பெற்றேன் என்றிருக்கும் நீ உலகியல் அறியாய் என்றேன். அவன் மாலையை நின் கூந்தலில் புனைவேனோ என்றான். நான் அதற்கு, நீ மற்றவர் தந்த பூவைப் புனைவேனோ என்றாய் நீ தந்த பூவைப் புனைதலை அறியாய் என்றேன். அவன் மார்பில் தொய்யில் எழுதுவேனோ என்றான். அதற்கு நீ என்னை மணந்து கொண்டு வெளிப்படையாக எழுதுதல் வேண்டும் என்பதை என்பது நின் மனத்தில் இல்லை எவ்வளவுகால் எம் சுற்றத்தார் கோலம் செய்தலைப் பார்த்திருப்பேன், நீ பெரிது மயக்கம் உடையை என்றேன். இப்படியான் மறித்துக்கூற அவன் இனிக் களவொழுக்கம் நிகழாது என எண்ணி அலமந்தான் போலப் போனான். தோழியே! நீ அவனுக்கு ஆயமகளிரை மணக்கும் முறையை யறிவித்துத் தந்தையும் தாயும் இக் களவொழுக்கத்தை அறியும்படி அறத்தொடு நிற்பாயே யானால் அவன் கொண்ட துயரோடு யான் உற்ற துயரையும் களைந்தாய் ஆவாய்.

(இ-ள்): அச்சமும் - அன்பு காரணத்திற்றோன்றிய உட்கும் நாணும் - காமக்குறிப்பு நிகழ்ந்த வழிப் படுவதோர் உள்ளவொடுக்கமும், மடனும்-செவிலியர் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையும், முந்துறுத்த-இம்மூன்று முதலியன. நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப—எஞ்ஞான்றும் பெண் பாலார்க்கு உரியவென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

'முந்துறுத்த' என்றதனாற் கண்டறியாதன கண்டுழி மனங் கொள்ளாத பயிர்ப்பும், செயத்தகுவது அறியாத பேதைமையும், நிறுப்பதற்கு நெஞ்சுண்டாம் நிறையுங் கொள்க. மடன் குடிப் பிறந்தோர் செய்கையாதலின் அச்சமும் நாணும் போல மெய்யுறு புணர்ச்சியை விலக்குவதாம். தலைவி உடையளனவே, தலைவன் பெருமையும் உரனும் உடையனாய் வேட்கை மீதூர வும் பெறுமாயிற்று. இவை இவட்கு என்றும் உரியவாயின் இயற்கைப் புணர்ச்சிக்கு உரியளல்லளாமாயினும் இவ்விலக் கணத்தில் திரியாது நின்றேயும் புணர்ச்சிக்கு உரியளாமென் றற்குப் பன்னிரண்டு மெய்ப்பாடுவ் கூறினார். இவற்றானே புணர்ச்சி பின்னர்ப் பெறுதுமெனத் தலைவனைப் போல ஆற்றுவாளாயிற்று. இருவர் கண்ணுற்றுக் காதல் கூர்ந்த வழி யெல்லாங் கந்தருவமென்பது[1] வேதமுடிபாதலின் இவ்வுள்ளப் புணர்ச்சியுங் கந்தருவமாம்.

ஆதலான் அதற்கு[2] ஏதுவாகிய பெருமையும் உரனும் அச்சமும் நாணும் போல்வன கூறினார். இச்சூத்திரம் இரண்டும் நாடக வழக்கன்றிப் பெருப்பான்மை உலகியல் வழக்கே கூறலின் இக்கந்தருவம் இக்களவியற்குச் சிறப்பின்று, இனிக் கூறுவன மெய்யுறு புணர்ச்சி பற்றிய களவொழுக்கமாதலின்.

வெள்.

இது, தலைமகட் குரியதோர் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்:) தனது நிறை காவலுக்கு இடர் நேருமோ வென்னும் அச்சமும் பெண்மையியல்பாகிய நாணமும், தான் மேற்கொண்ட கொள்கையை நெகிழ விடாமையாகிய மடனும் முற்பட்டுத் தோன்றுதல் எக்காலத்தும் பெண்டிர்க்குரிய இயல் பாகும் என்பர் ஆசிரியர். எ—று.

---

1. இருவர் கண்ணுற்றுக் காதல் மிக்காராயின் அதுவே புணர்ச்சியாம் என்பது வேத முடிவு. கந்தருவப்—கந்தரு வரது புணர்ச்சி.

2. அதற்கு-உள்ளப் புணர்ச்சிக்கு

எனவே, இயற்கைப் புணர்ச்சியில் எதிர்ப்பட்ட தலைமகனும் தலைமகளும் தமக்கைக் காவர்த்து வேட்கை மீதூர்ந்த நிலையிற் புனலோடும் வழிப் புற்சாய்ந்தாற் போலத் தமக்குரிய இயல்பு களை நெகிழ விடுதல் கூடாமையின், தாம் எதிர்ப்பட்ட முதற் காட்சியிலே மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்படாது உள்ளப் புணர்ச்சியளவே ஒழுகி மணந்து கொண்ட பின்னரே கூடுதல் முறையாகும் என்பது இளம்பூரணர் கொண்ட கருத்தாகும்.

இயற்கைப் புணர்ச்சியின் முன் நிகழ்வன

97. வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்[1]
சிறப்புடை மரபினவை களவு என மொழிப (9)

ஆ. மொ.

இல.

It is said in the act of love-matcing the following features are quite natural:-

Ardent desire, brooding, Pining, Consolation, Breaking the limit of modesty, suspecting others as if they know their love affairs, delusion of seeing actions of their partner everywere, Forgetfulness, swooning and death.

பி.இ.நா.

நம்பி. 36

காட்சி முதலா சாக்காடு ஈறாக்
காட்டிய பத்தும் கைவரும் எனினே
மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே

இல. 405.

காட்சி வேட்கை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்

---

1. என்றச்—பாடம்,

நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்ற
ஐயிரண் டவத்தையும் பெய்கழல் காளையும்
புகுமுகம் புரிதல் முதல லாகிக்
காட்சி முதல் மூன்றையும் கருதிநன் நான்காய்
ஆட்சியின் அமைந்தா றாறுமெய்ப் பாடும்
முருந்திள முறுவலும் பொருந்துதல் உறினே
மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே.

முத்து. கள. 5.

தொல்காப்பியச் சூத்திரமே.

இளம்.

என்-எனின், மெய்யுறு புணர்ச்சி நிகழுங் காலம் உணர்த்துதல் நுதலிற்று.

மேல், ''பெருமையும் உரனும் ஆடூஉமேன'' எனவும்.

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப''. (தொல். கள-8)

எனவும் ஓதியவதனான் உள்ளஞ் சென்ற வழியும் மெய்யுறு புணர்ச்சி வரைந் தெய்தி நிகழ்ப என்றாராம். அவ்வழிச் சாக்காடெல்லையாகிய மெய்ப்பாடு வரின் மெய்யுற்றுப் புணரப் பெறு[1]மென்பது உணர்த்திற்று.

(இ-ள்:) வேட்கை முதலாகச் சாக்காடு ஈறாக ஓதப்பட்ட காமச் சிறப்புடையனவாற்றாற் களவு ஆமென்று சொல்லுவர் என்றவாறு.

ஆனும் ஆமும் எஞ்சி நின்றன.[2] இவற்றை அவத்தையென்ப. அஃதேல் அவை பத்துளவன்றே, ஈண்டுரைத்தன ஒன்பதா லெனின் காட்சி விகற்பமுங் கூறினார்; அஃது உட்படப்பத்தாம். காட்சி விகற்பமாகிய ஐயமுந் துணிவும் முதலது. வேட்கை இரண்டாவது என்று கொள்க.

---

1. 'புணரப் பெறுப என்பது' என்றிருப்பின் நன்று.
2. மரபினவையான் எனவும் களவுஆம் எனவும் இருத்தற் பாலன ஆன் ஆம் எஞ்சி மரபினவை, களவு என நின்றன. மரபு-சிறப்பு. மரபினவையான் — சிறப் புடையனவற்றால்,

வேட்கையாவது—பெறல் வேண்டுமென்னும் உள்ள நிகழ்ச்சி ஒருதலையுள்ளுதலாவது—இடை விடாது நினைத்தல்.

''உள்ளிக் காண்பென்போல்வன முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆரம் நாறும் அறல் போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே''[1]

(குறுந். 286)

மெலிதலாவது—உண்ணாமையான் வருவது, ஆக்கஞ் செப்பலாவது—உறங்காமையும் உறுவஒதலும் முதலாயின கூறுதல்.

''ஒண்தொடி அரிவை கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக் கடல் ஒலித்திரை போல
இரவினானுந் துயிலறி யேனே''[2] (ஐங்குறு. 172)

எனவரும்.

நாணு வரையிறுத்தலாவது—நாண் நீங்குதல்

''காமம் விடுவொன்றோ நாண் விடு நல்நெஞ்சே
யானோ பொறேனிவ் இரண்டு''[3] (குறள் 1247)

நோக்குவ எல்லாம் அவையே போறலாவது—தன்னாற் காணப்பட்டன எல்லாந் தான் கண்ட உறுப்பு போலுதல்.

---

1. பொருள்: முட்போலும் பல்லையும், செவ்வாயையும், அகிலும் சந்தனமும் நாறும் அறற்கூந்தலையும், கருங் கண்களையும் உடைய கொடிச்சியின் முறுவலொடு மதர்த்த நோக்கினையும் நாளும் நினைத்துக் கண்டு கொண்டிருப்பேன்—தலைவன் கூற்று.

2. பொருள்: தொடியணிந்த அரிவை என் நெஞ்சைக் கொண்டாள். அதனால் யான் தொண்டியில் கடலானது இரவினும் பகலினும் ஓயாது ஒலிப்பது போல இரவிலும் துயிலாதவனானேன்—தலைவன் கூற்று.

3. பொருள்: என் மனமே! அவள் பால் கொண்ட காமத்தை விடு அல்லது நாணத்தை விடு. இவ்விரண்டையும் கொண்டால் யான் தாங்க மாட்டேன்—தலைவன் நெஞ்சுக்குக் கூறியது.

"ஓங்கெழிற் கொம்பர் நடுவிதெனப் புல்லுங்
காந்தட்கிவரும் கருவிளம் பூக்கொள்ளும்
மாந்தளிர் கையில் தடவருமாமயில்
பூம் பொழினோக்கிப் புகுவன பின்செல்லுந்
தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடும்
நீள் கதுப்பிஃ தென நீர் அறல் உட்புகும்"[1]

என்றாற் போல்வன.

மறத்தல்—பித்தாதல். மயக்கமாவது—மோகித்தல். சாக்காடு—சாதல், இவற்றுள் சாதல் பத்தாம் அவத்தை யாதலால், ஒழிந்த எட்டுங் களவு நிகழ்தற்குக் காரணமாம் என்று கொள்க. இது தலைமகட்கும், தலைமகற்கும் ஒக்கும். இவற்றிற்குச் செய்யுள் வந்துழிக் காண்க.

நச்.

இது முதலாகக் களவிலக்கணங் கூறுவார் இதனான் இயற்கைப் புணர்ச்சி முதற்களவு வெளிப்படுந் துணையும் இருவர்க்கும் உளவாம் இலக்கணம் இவ்வொன்பதுமெனப் பொது விலக்கணங் கூறுகின்றார்.

(இ-ள்): ஒருதலை வேட்கை—புணராத முன்னும் புணர்ந்த பின்னும் இருவர்க்கும் இடைவிட்டு நிகழாது ஒரு தன்மைத்தாகி நிலைபெறும் வேட்கை, ஒருதலை உள்ளுதல்—இடைவிடாது ஒருவர் ஒருவரைச் சிந்தியா நிற்றல், மெலிதல்—அங்ஙனம் உள்ளுதல் காரணத்தான் உடம்புவாடுதல், ஆக்கஞ் செப்பல்—யாதானும் ஓர் இடையூறு கேட்டவழி அதனை ஆக்கமாக நெஞ்சிற்குக் கூறிக் கோடல், நாணு வரையிறத்தல்—ஆற்றுந் துணையும் நாணி அல்லாதவழி அதன் வரையிறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல்—பிறர் தம்மை நோக்கிய நோக்கெல்லாந் தன மனத்துக் கரந்து ஒழுகுகின்றவற்றை அறிந்து நோக்குகின்றாரெனத் திரியக் கோடல், மறத்தல்—விளையாட்டு

1. பொருள். என் நெஞ்சமானது அழகிய கொம்பைக் கண்டு அவளின் இடை எனத் தழுவும்; காந்தள் கருவிளம் பூக்களைக் கைவிரல்கள் எனக் கொள்ளும்; மாந்தளிரை மேனியெனத் தடவும்; பொழில் நோக்கிப் புகும் மயிலின் பின் அவள் சாயலை நினைந்து செல்லும்; மூங்கிலை அவள் தோள் எனத்தொடும்; நீரில் அறல் மணலை அவள் கூந்தல் என நீருள் புகும்.

முதலியவற்றை மறத்தல், மயக்கம்—செய்திறன் அறியாது கையற்றுப் புள்ளும் மாவும் முதலியவற்றோடு கூறல், சாக்காடு —மடலேறுதலும் வரைபாய்தலும் போல்வன கூறல், என்று அச்சிறப்பு உடை மரபினவை களவு என மொழிப—என்று சொல்லப்பட்ட அந்தச் சிறப்புடைத்தான முறையினையுடைய ஒன்பதுங் களவொழுக்கமென்று கூறுப என்றவாறு.

இயற்கைப் புணர்ச்சிக்கு இயைபுடைமையின் வேட்கை முற்கூறினார்.

சேட்படுத்தவழித் தலைவன் அதனை அன்பென்று கோடலும் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கியவழித் தலைவி அதனை அன்பென்று கோடலும் போல்வன, ஆக்கஞ் செப்பல், தலைவன் பாங்கற்குந் தோழிக்கும் உரைத்தலும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலும் போல்வன நாணுவரை யிறத்தல். களவதிகாரமாதலின் 'அவை' யென்னுஞ் சுட்டுக் களவை உணர்த்தும். கையுறை புனைதலும் வேட்டை மேலிட்டுக் காட்டுத் திரிதலுந் தலைவற்கு மறத்தல். கிளியும் பந்தும் முதலியன கொண்டு விளையாடுதலைத் தவிர்ந்தது தலைவிக்கு மறத்தல். சாக்காடாவன.

''அணிற் பல்லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழன்ன மாநீர்ச் சேர்ப்ப
விம்மை மாறி மறுமையாயினு
நீயாகிய ரென்கணவனை
யானாகியர் நின் னெஞ்சு நேர்பவளே''[1]

(குறுந்—49)

''நிறைந் தோர்த்தேரு நெஞ்சமொடு குறைந்தோர்ப்
பயனின் மையிற் பற்று விட்டொரூஉ
நயனின் மாக்கள் போல வண்டினஞ்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர

1. கருத்து: சேர்ப்பனே! இம்மை மாறி மறுமைப் பிறப்பு உண்டாயினும் அப்பிறப்பில் நீயே என் கணவனாதல் வேண்டும் யானே நின்நெஞ்சுக்கு உகந்தவளாதல் வேண்டும். இது தலைவனுடன் புணர்ச்சி பெறாது நீண்ட காலத்துத் தலைவி அவனிடம் கூறியது. கால நீட்டிப்பு சாக்காடனைய துயர் தருதலின் இவ்வாறு கூறினாள்.

மையன் மானின மருளப்பையென
வெந்தாறு பொன்னினந்தி பூப்ப
வையறி வகற்றுங் கையறு படரோ
டகலிரு வானமம்ம் மஞ்சினம்
பகலாற்றுப்படுத்த பழங் கண்மாலைக்
காதலற் பிரிந்த புலம்பினோதக
வாரஞ் ருறுநரரு நிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரினலைத்தலானா
தெள்ளற வியற்றிய நிழல் காண்மண்டிலத்
துள்ளூ தாவியிற் பைப் பயநுணுகி
மதுகை மாய்தல் வேண்டும் பெரிதழிந்
திதுகொல் வாழி தோழி யென்னுயிர்
விலங்கு வெங்கடு வளியெடுப்பத்
துலங்குமாப் புள்ளிற் றுறக்கும் பொழுதே''.[1]

(அகம்—71)

இவை தலைவி சாக்காடாயின : மடலேறுவனெக் கூறுதன் மாத்திரையே தலைவற்குச் சாக்காடு. இவை சிறப்புடைய வெனவே களவு சிறப்புடைத்தாம். இவை கற்பிற்கு ஆகா. இருவர்க்கும் இவை தடுமாறி வருதலின் 'மரபினவை' யெனப் பன்மை கூறினார்.

சிவ.

இச்சூத்திரம் களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு முதலியவற்றுக்கு முன்னர் நிகழும் இருவர் உணர்வுகளையும் கூறுகின்றது.

---

1. கருத்து: தலைவி தோழியிடம் கூறியது. தோழீ! இயல்பாகவே துன்பம் தரும் மாலையானது, காதலனைப் பிரிந்த தனிமையால் மேலும் துன்புறும்படி, புண்ணால் துயருறுவார் மார்பில் குறிவைத்துக் கூரிய வேலை யெறிவது போல அலைக் கழித்தல் அடங்காது; அதனால் என் உயிர், சூறாவளிக் காற்று வீச மரத்தினின்றும் எழும் புள்ளினைப்போல் என் உடம்பினைத் துறக்கும்போது கண்ணாடி மண்டிலத்து ஊதியபோது படியும் ஆவி மெல்ல மெல்லச் சுருங்குவதுபோல மிக அழிந்து தன் வலிமை குன்றியும். இதுவே என் இப்போதைய நிலை.

(இ-ள்): இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழ்வன.

வேட்கை—ஒருவரை யொருவர் அடைய வேண்டும் என்னும் விருப்பம்.

ஒருதலை யுள்ளுதல்—ஒருவரை யொருவர் அவ்வேட்கையால் இடையீடின்றி நினைத்தல்.

மெலிதல்—அந்நினைப்பு நீடுதலால் உடன் அடைய இயலாமையால் உள்ளம் உடம்பு மெலிதல்.

ஆக்கம் செப்பல்—அக்காட்சிக் காலத்து நிகழும் உணர்வுகளையும் செயல்களையும் தம் வேட்கைக்கு ஆக்கமாகவே கருதித் தம் நெஞ்சுக்குக் கூறுதல்.

நாணுவரையிறத்தல்—நாணம் நீங்குதல்.

நோக்குவ எல்லாம் அவையே போறல்—ஒருவரை ஒருவர் பார்க்கும் போது இருவர் மாட்டும் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம் தத்தமக்கு ஆதரவான நிகழ்ச்சிகளாகவே தோன்றுதல்.

மறத்தல்—தத்தம் பிறப்பு குடிமை முதலியவற்றை மறத்தல்.

மயக்கம்—தம்மை மறத்தல்.

சாக்காடு—இதுவரையும் ஒருவரையொருவர் அடையாமையால் ஏற்படும் செயலற்றவுணர்வு.

இவை யாவும் இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழும் உணர்வுகளாம், இவ்விடத்துத் தலைவனுக்குப் பேச்சு நிகழாது. இதன் பின்னரே தலைவன் 'முன்னிலையாக்கல், மெய்தொட்டுப் பயிறல்' முதலிய பேச்சுகளால் தலைவியை நெருங்கிப் புணர்வான்.

இனி இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் நிகழும் இடந்தலைப்பாடு முதலியவற்றுக்கு வேட்கை முதலியன ஆமாறு:

வேட்கை - புணராத முன்னிருந்த வேட்கை புணர்ந்த பின்னரும் குறையாதிருத்தல்.

ஒருதலை யுள்ளுதல் - இடைவிடாது ஒருவரையொருவர் நினைத்தல்.

மெலிதல் - அவ்வப் புணர்ச்சிப் பின்னர் நிகழும் பிரிவுகளால் மெலிவுறுதல்.

ஆக்கம் செப்பல் - இடையிடையே நிகழும் நிகழ்ச்சிகளை இடையூறான நிகழ்ச்சிகளாயினும் தம் உணர்வுகளுக்கும் செயல் களுக்கும் ஆக்கமாகவே கருதிக் கூறுதல்.

நாணுவரை யிறத்தல் - பழிபாவங்களுக்கு மடங்குவதாகிய நாண உணர்வு கைக்கொள்ளுமளவும் கொண்டிருந்து காமமிகும் போது அதைக் கடத்தல்.

நோக்குவ எல்லாம் அவையே போறல் - பார்க்கப்படும் பொருள்கள் யாவும் தலைவியுறுப்புகளாகத் தோன்றக் காணு தல். அதுபோலத் தலைவியும், தோன்றும் பொருள் யாவும் தலைவனை நினைவுபடுத்துவனவாகவே காணுதல்.

மறத்தல் - விளையாட்டு முதலியவற்றை மறத்தல்.

மயக்கம் - செய்வதறியாது புள் முதலியவற்றோடு மயங்கிக் கூறல்.

சாக்காடு - சாதற்குரிய நிகழ்ச்சிகளை மேற்கொள்வதாகக் கூறல் - அது மடலேறுதல், வரைபாய்தல் போல்வது.

இனி நோக்குவ எல்லாம் அவையே போறல் என்பதற்கு நச்சினார்க்கினியர், ''பிறர் தம்மை நோக்கிய நோக்கம் எல்லாம் தம் மனத்துக் கரந்து ஒழுகுகின்றவாற்றை அறிந்து நோக்குகின் றார் என்று திரியக் கோடல்'' என்பர். அது பொருந்தாது. அப்படிக் கொள்ளின் இருவர் பாலும் அச்சம் தோன்றிப் புணர்ச் சிக்கு இடையூறாம்.

தலைவன் செயல்

98. முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைநனி உறாஅது[1]
அந்நிலை அறிதல் மெலிவுவிளக் குறுத்தல்
தன்னிலை[2] உரைத்தல் தெளிவுஅகப் படுத்தல்என்று
இன்னவை நிகழும் என்மனார் புலவர் (10)

ஆ. மொ.

இல.

1. உறாஅது-பாடம் 2 தந்நிலை-பாடம்

In the course of love advances, the lovers indulge in addressing all, requesting all, to pay heed to their words, expressing great desire, wlthout much joy knowing the situation, explaining the reason for the pining, exclaiming about fate and making assurances-so say the poets*

இளம்.

என்-எனின், இஃது இயற்கைப் புணர்ச்சிக்குரியதோர் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

தனியனாய் தலைமகளை யெதிர்ப்பட்ட தலைமகன் தனது பெருமையும் அறிவும் நீக்கி வேட்கை மீதூரப் புணர்ச்சி வேண்டினானாயினும், தலைமகள் மாட்டு நிற்கும் அச்சமும் நாணும் மடனும் நீக்குதலும்[1] வேண்டுமன்றே. அவை நீக்குதற் பொருட்டு[2] இவையெல்லாம் நிகழுமென்பது உலகத்துள்ளார் இலக்கணமெல்லாம் உரைக்கின்றாராகலின் இவ்வாசிரியர் உரைக்கின்றவாற்றான் நிகழ்தல் பெரும்பான்மையாகவும்,

"சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி"[3]

(தொல்-களவியல்-11)

என ஓதுதலின் இவையெல்லாம் நிகழ்தலின்றிச் சிறுபான்மை வேட்கை மிகுதியாற் புணர்ச்சி கடிதின் முடியவும் பெறுமெனவுங் கொள்க.

இ-ள் : முன்னிலையாக்கல் என்பது—காமக் குறிப்புண்மை அறிந்த தலைமகன் வேட்கையாற் சார நினைத்தவழித் தலை மகளும் வேட்கைக் குறிப்புடையளாயினும் குலத்தின் வழி

---

* The commentator, Naccinarkiniyar says that these are the expressions of the lover after his meeting with his love in secret and after having intercourse with her. But in the original text there is nothing to suggest such views. So these are to be considered as themes common to both the lover and the loved. Ilampuranar is of the view that these occur before the natural union takes place.

1. நீங்குதலும் - பாடம்
2. நீங்குதற் பொருட்டு-பாடம்
3. வல்லே பெற்றுழி - முன்னிலையாக்கல் முதலியன இன்றிக் காமம் காரணமாக மெய்யுறு புணர்ச்சியை விரைவாகப் பெற்றவிடத்து.

வந்த இயற்கையன்மையான் நாணமும் அச்சமும் மீதூர அக் குறிப்பில்லாதாரைப்போல் நின்றுழி அவளை முன்னிலையாகப் படுத்துச் சில கூறுதல்.

''ஒள்ளிழை மகளிரோடோரையும் ஆடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் புனையாய்
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்
யாரையோ நின்தொழூதனம் வினவுதும்
கண்டார் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி மருங்கின் நிலைபெற்றனையோ
சொல் இனி மடந்தை என்றனென் அதன்எதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லிதழ் உண்கணும் பரந்தவால் பனியே[1]''

(நற்றிணை-155)

சொல்வழிப்படுத்தலாவது-தான் சொல்லுகின்ற சொல்லின்வழி அவள் நிற்குமாறு படுத்துக் கூறுதல்.

''சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகின் தாங்குதல் எளிதோ
கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலி விளையாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப் பேய்ப்பக் கடை மணி சிவந்த நின்
கண்ணே கதவஅல்ல நண்ணார்
ஆண்டலை மதிலராகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன்

1. பொருள். தோழியருடன் பாவை கொண்டாடும் விளை யாட்டையும் ஆடாமல் நெய்தற்பூ மாலையும் புனை யாமல் விரிந்த பூங்கானலிடத்து ஒரு பக்கத்து நிற்ப வளே! நீ கடற்கரைப் பெண் தெய்வமோ உப்பங்கழி யிடத்து ஆட்சி பெற்றவளோ யார் நீ சொல் நின்னைத் தொழுது கேட்கின்றேம் என்று கூறிய அளவில் அவள் சிறிது முறுவலித்தாள் கண்களில் பனியும் படர்ந்தது.

பெரும் பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத்தோளும் உடையவால் அணங்கே''[1]
(நற்றிணை-39)

நன்னயமுரைத்தலாவது — தலைமகளினது நலத்தினை யுரைத்தல்.

''சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ்வாய்
சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ்வாய்
ஊர்திரை வேலி யுழக்கித் திரிவாள் பின்
சேரல் மடவன்னஞ் சேரல் நடையொவ்வாய்''[2]
(சிலப்—கானல்—23)

நகைநனியுறாஅ அந்நிலையறிதலாவது—தலைமகன் தன் நன்னய முரைத்தலைக் கேட்ட தலைவிக்கு இயல்பாக அகத்து உளவாகும் மகிழ்வால் புறந்தோன்றும் முறுவற்குறிப்பு மிக்குத் தோன்றா அந்நிலையினைத் தலைவன் அறிதல்.

''மாண் இழை பேதை நாறிருங் கூந்தல்
ஆணமும் இல்லாள் நீர் உறை சூருடைச்
சிலம்பிற் கணங்காய் முயன்ற செறியியல்
நொதுமல் நோக்கைக் காண்மோ நெஞ்சே
வறிதால் முறுவற் கெழுமிய
நுடங்குமென் பணைவேய் சிறுகுடியோளே''[3]

---

1. பொருள் : பெண்ணே! நான் நின்னைத் தழுவிச் சில சொல்லின் அவற்றை ஏற்காமல் முகம் கவிழ்ந்து நாணுகின்றாய். திடீரெனக் காமம் அளவிறப்பின் என்னால் தாங்குதல் எளிதோ? புலியைக் குத்திக் கடைப்பகுதி சிவந்த யானைக்கோடு போன்று நின் கண்களும் சினவா நின்றன. அவை மட்டுமல்ல பாண்டியனின் கூடல் போன்ற வளமிக்க நின் தோள்களும் என்னை வருத்துதல் உடையன் காண்.

2. பொருள்: மட அன்னமே! ஊரும் அலை கடலாகிய வேலியை உழக்கித் திரியும் அப்பெண்ணின் பின்னே சேராதே; ஏன் எனின் அவள் நடையை ஒத்திராய்.

3. கருத்து: நெஞ்சே! சிறிது முறுவல் பொருந்திய சிறுகுடியோள் பேதையாக கூந்தலுடையளாய் ஆணம் இல்லாதவளாய் அச்சம் உடைய இம்மலையின் அணங்காகியிருந்து, நம்மை நோக்கும் நோக்கம் நொதுமல் நோக்கமாக இருப்பதைக் காண்போம்.

மெலிவு விளக்குறுத்தலாவது — தலைவன் அகத்துறும் நோயாற் புறத்து நிகழும் தளர்வினைக் குறிப்பான் எடுத்துக் கூறலும். உதாரணம் வந்துழிக் காண்க.

குறிப்பாவன:—புறத்துறுப்பாயவர்க்கின்றியமையாதன.

தன்னிலையுரைத்தலாவது—அப் புறநிகழ்ச்சியின் பொலி விழவைக் கண்ட தலைமகள் மாட்டுத் தலைவன் தன் உள்ள வேட்கை மீதூர்வினை நிலைப்படக் கூறுதல்

''சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்''

என்னும் நற்றிணைப் பாட்டுள்,

காமங் கைம்மிகில் தாங்குதல் எளிதோ

....

.... கடைமணி சிவந்த நின்

கண்ணே கதவ அல்ல'' (நற்றிணை 39)

எனத் தன்னிலையுரைத்தவாறு காண்க.

தெளிவு அகப்படுத்தலாவது—தலைவன் முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர் இயற்கைப் புணர்ச்சியினை விழைந்து நின்றானாக, அப் புணர்ச்சியினைக் கூறுவார். முன்னம் ஒத்த பண்புடைமை உள்ளத்து இருவர் மாட்டும் வேண்டுதலின் தலைமகள் பண்பினைத் தலைவன் அறிந்து அத் தெளிவை தன்னகப்படுத்துத் தேர்தல்.

''யாயும் ஞாயும் யாரா கியரோ'' (குறுந்—40)

என்னும் குறுந்தொகைப் பாட்டுள்,

''அன்புடை நெஞ்சந் தாங் கலந்தனவே.''

என இயற்கைப் புணர்ச்சி முன்னர்த் தலைவன் தலைவியர் உள்ளம் ஒத்த பண்பினைக் கூறியவாறு காண்க.

இதுகாறும் இயற்கைப் புணர்ச்சிக்குரிய திறன் கூறி, மேல் இயற்கைப் புணர்ச்சி நிகழுமாறு கூறுகின்றார். அஃதேல் தன்னிலை யுரைத்தலைத் தெளிவகப்படுத்தலுடன் இணைத்து மெய்யுறு புணர்ச்சியாக்கிய பின்னர்த் தோன்றும் துறையாகப் படுத்தாலோ எனின் அது சான்றோர் வழக்கின்றாதலானும், மெய்யுறு புணர்ச்சி முன்

''மெய் தொட்டுப் பயிறல்''. (களவியல்-11)

முதலியன யாண்டும் நிகழ்ந்தே தலைவிக்கு மெய்யுறு புணர்ச்சி நிகழுமாதலானும் அஃதன்றென்க.

நச்.

இஃது இன்பமும் இன்ப நிலையின்மையுமாகி புணர்தல் பிரிதல் கூறிய முறையானே இயற்கைப் புணர்ச்சி முற்கூறி[1] அதன் பின்னர்ப் பிரிதலும் பிரிதனிமித்தமுமாய் அத்துறைப் படுவன வெல்லாந் தொகுத்துத் தலைவற்கு உரியவென் கின்றது.

(இ-ள்): முன்னிலையாக்கல் — முன்னிலையாகாத வண்டு, நெஞ்சு முதலியவற்றை முன்னிலையாக்கிக் கோடல். சொல்வழிப் படுத்தல்—அச்சொல்லாதவற்றைச் சொல்லுவன போலக்கூறுதல். நன்னயம் உரைத்தல்—அவை சொல்லுவனவாக அவற்றிற்குத் தன் கழிபெருங்காதல் கூறுவானாய்த் தன்னயப்புணர்த்துதல். நகைநனி உறாஅது அந்நிலை அறிதல்—தலைவி மகிழ்ச்சி மிகவும் எய்தாமற் புணர்ச்சிக்கினமாகிய பிரிவு நிலை கூறி அவள் ஆற்றுந் தன்மை அறிதல். மெலிவு விளக்குறுத்தல்—இப்பிரிவால் தனக்குள்ள வருத்தத்தைத் தலைவி மனங்கொள்ளக் கூறுதலுந் தலைவி வருத்தங் குறிப்பான் உணர்ந்து அது தீரக் கூறுதலும். தம்நிலை உரைத்தல்—நின்னோடு பட்ட தொடர்ச்சி எழுமையும் வருகின்றதெனத் தமது நிலை உரைத்தல். தெளிவு அகப்படுத் தல்—நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன், பிரியின் அறனல்லது செய்தேனாவலெனத் தலைவி மனத்துத் தேற்றம்படக் கூறுதல். என்று இன்னவை நிகழும் என்மனார் புலார்—என்று இக்கூறிய ஏழும் பயின்று வரும் இயற்கைப் புணர்ச்சிப்பின் தலைவற்கு என்றவாறு.

முற்கூறிய மூன்றும் நயப்பின் கூறு. இஃது அறிவழிந்து கூறாது தலைவி கேட்பது காரியமாக வண்டு முதலியவற்றிற்கு உவகை பற்றிக் கூறுவது. 'நன்னயம்' எனவே எவரினுந் தான் காதலனாக உணர்த்தும். இதன் பயன்: புணர்ச்சியெய்தி நின்றாட்கு இவன் எவ்விடத்தான் கொல்லோ இன்னும் இது கூடுங்கொல்லோ இவன் அன்புடையன் கொல்லோ என நிகழும் ஐயம் நீங்குதல். இது பிரிதனிமித்தம். இவன் பிரியாவிடின் இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாம். ஆண்டு யாம் இறந் துபடுதலின் இவனும் இறந்துபடுவனெனைக் கருதப் பிரிவென்பதும் ஒன்று உண்டெனத் தலைவன் கூறுதல் அவட்கு மகிழ்ச்சியின்

---

1. இச்சூத்திரம் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர் நிகழ்வனவற்றைக் கூறுவதாக நச்சர். கூறினார். இளம் பூரணர் முன்னர் நிகழ்வனவாகக் கூறினார். பின்னவர் கூற்றே சிறக்கும்.

றென்பது தோன்ற 'நகை நனியுறாது' என்றார். 'புணர்தல் பிரிதல்' (14) எனக் கூறிய சூத்திரத்திற் புணர்தலை முற்கூறி ஏனைப் பிரிவை 'அந்நிலை' என்று ஈண்டுச் சுட்டிக் கூறினார். இதனால் தலைவிக்குப் பிரிவச்சங் கூறினார். தண்ணீர் வேட்டு அதனை உண்டு உயிர் பெற்றான் இதனான் உயிர் பெற்றே மெனக் கருதி அதன் மாட்டு வேட்கை நீங்காதவாறு போலத் தலைவி மாட்டு வேட்கையெய்தி அவளை அரிதிற்கூடி உயிர் பெற்றானாதலின் இவளான் உயிர் பெற்றேமென்றுணர்ந்து அவன் மேல் நிகழ்கின்ற அன்புடனே பிரியுமாதலின் தலைவற்கும் பிரிவச்சம் உளதாயிற்று. இங்ஙனம் அன்பு நிகழவும் பிறர் அறியாமற் பிரிகின்றேனென்பதனைத் தலைவிக்கு மணங் கொள்ளக் கூறுமென்றற்கு 'விளக்குறுத்தல்' என்றார். இதனானே வலியுறுத்தல் பெற்றாம். அஃது அணித்து எம்மிட மென்றும் பிறவாற்றானும் வற்புறுத்தலாம். மேலனவும் பிரிதனிமித்தம்.

(உ-ம்)

''கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற்றரிவை கூந்தலி
னறியவுமுளவோ நீயறியும் பூவே''[1]

(குறுந்-2)

இதனுள் 'தும்பி' என்றது முன்னிலையாக்கல்; 'கண்டது மொழிமோ' என்றது சொல்வழிப்படுத்தல்; 'கூந்தலின் நறியவும் உளவோ' என்றது நன்னயமுரைத்தல். 'காமஞ்செப்பாது' என்றது என்னிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாது மெய் கூறெனத் தன்இடம் அதுவாகக் கூறலின் இடணித்தென்றது; 'பயிலியது நட்பு' என்றது தந்நிலை யுரைத்தல்.

---

1. கருத்து: நாளும் பூவில் தேனைத் தேர்ந்துண்டு வாழும் தும்பியே! என் வினாவுக்கு என்னிடம் கொண்ட அன்பால் ஒருதலைப் பக்கமாக விடைகூறாது உண்மையிற் கண்டதைக் கூறுக. நட்பினையும் மயிலியலையும் எயிற்றினையும் உடைய இவ்வரிவை கூந்தலைப்போல நீயறியும் பூக்களில் நறுமணம் உள்ள பூக்களும் உண்டோ.

''பூவிடைப்படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரிதாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவேமாகிய புன்மைநா முயற்கே''[1]

(குறுந்-57)

மூற்பிறப்பில் இருவேமாய்க் கூடிப் போந்தனம். இவ்வுலகிலே இப்புணர்ச்சிக்கு முன்னர் யாம் வெவ்வேறாயுற்ற துன்பத்து இன்று நாமே நீங்குதற்கெய்திய பிரிவரிதாகிய காமத்துடனே இருவர்க்கும் உயிர் போவதாக, இஃதெனக்கு விருப்பமென் றான், என்பதனால் தந்நிலை யுரைத்தலும் பிரிவச்சமுங் கூறிற்று.

''குவளை நாறுங் குவையிருங் கூந்த
லாம்பனாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கினன்ன
நுண்பஃறுத்தி மாஅயோயே
நீயே, அஞ்சலென்றவென் சொல்லஞ்சலையே
யானே, குறுங்காலன்னங் குலவுமணற் சேக்குங்
கடல் சூழ் மண்டிலம் பெறினும்
விடல் சூழலன் யானின்னுடை நட்பே''[2]

(குறுந்-300)

---

1. கருத்து: தோழீ! உயிர் ஒன்றாய் உடல் இருவேறாகி யமைந்தேமாய் இருக்கும் இவ்வுலகில் பிரிவால் ஒருவரா கிய புன்மை (துன்பம்) நீங்கி உய்தல் வேண்டி, நீர்வாழ் மகன்றில் பறவைகள் தம் இடையே ஒருபூ இருப்பினும் அக்காலம் ஓராண்டு பிரிவுக் காலமாக உணரும்படியான நிலையில் அமைந்த எம்காமமொடு அவர் பிரிந்தவுடன் உயிர் போவதாக.

2. கருத்து: கூந்தலும் துவர்வாயும் அணங்கும் உடைய மாயோயே! நீ அஞ்சேல் என்று புணர்ச்சிப் பின் யான் கூறிய சொல்லை ஐயப்படாதே. கடல்சூழ் உலகம் முழுதும் நின்னைப் பிரிவதால் கிடைப்பதாயினும் நின் நட்பை யான் பிரியேன். பிரிவுக்கு அஞ்சல் என்றது பிரிவுண்டு என அச்சம் தோற்றுவித்தது. உலகம் பெறி னும் நட்புப் பிரியேன் என்றது நயப்பு உணர்த்தியது. வன்புறையுமாம்.

இது நயப்பும் பிரிவச்சமும் வன்புரையுங் கூறிற்று.

''யாயு ஞாயும் யாரா கியரோ
வெந்தையு நுந்தையு மெம்முறைக்கேளிர்
யானு நீயும் எவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெய்ந் நீர்போல்
வன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே'[1]

(குறுந்-40)

இது பிரிவரெனக் கருதிய தலைவி குறிப்புணர்ந்து தலைவன் கூறியது.

''மெல்லிய லரிவை நின்னல்லகம் புலம்ப
நிற்றுறந்தமை குவெனாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவாகு க யான் செலவுறு தகவே[2] (குறுந்-137)

''அறத்தா றன்றென மொழிந்த தொன்றுபடுகிளவி
யன்னவாக வென்னுநள் போல[3] (அகம்-5-16-8)

இவை தெளிவகப்படுத்தல்.

''அம்மெல்லோதி விம்முற்றழுங்கல்
எம்மலை வாழ்நரிரும் புனம்படுக்கிய
அரந்தின் நவியறுத் துறத்த சாந்தநும்
பரந்தேந் தல்குற் றிருந்து தழையுதவும்
பண்பிற்றென்ப வண்மையதனாற்
பல்கால் வந்து நம்பருவர நீர

1. கருத்து: தலைவீ! என் தாயும் நின் தாயும் யார்? எம் தந்தையும் நின் தந்தையும் என்ன உறவுடையர்? யானும் நீயும் இதற்கு முன்னர் எவ்விடத்துப் பார்த்தறிவோம்? செம்புலமாகிய மலையிடத்து வெவ்வேறிடத்துப் பெய்த மழைநீர் வீழ்ந்து ஓரிடத்துக் கலப்பதுபோல நம் இருவர் நெஞ்சமும் கலந்தன.

2. கருத்து: அரிவையே! நின் நலகம் தனிமைப்பட நின்னைப் பிரிவேனாயின் யான் மேற்கொள்ளும் தக்க வாழ்வில் என்பால் இரவலர் வாராத நாள்கள் பலவாகுக.

3. கருத்து: கூடினரைப் பிரிதல் அறநெறியன்று எனக் கூறிய பழஞ்சொல் அப்படி கிடக்கட்டும் என்பவள்போல,

அல்கலும் பொருந்துவ மாகலின்
ஒல்கா வாழ்க்கைத் தாகுமென்னுயிரே''[1]

இதுவும் அணித்து எம்மிடமென ஆற்றுவித்தது. 'பயின்று[2]' எனவே, பயிலாது வரும் ஆயத்துய்த்தலும், யான் போவலெனக் கூறுதலும், மறைந்து அவட் காண்டலும், கண்டு நின்று அவணில்ல கூறுவனவும், அவளருமை யறிந்து கூறுவனவும் போல்வன பிறவுங் கொள்க.

''யான்றற் காண்டொறும்''

என்னுஞ் செய்யுளுள்

''நீயறிந்திலை யானெஞ்சே
யானறிந்தேனது வாயாகுதலே''

என மறைந்து அவட் கண்டு நின்று தலைவன் அவளொடு நிகழ்ந்தது நினைஇ நெஞ்சிற்குக் கூறியது,

''காணா மரபிற்றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம் மொழிந்தனரே
யாஅநங் காண்டு மெம்மரும் பெறலுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணைக் கானுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே''[3]

---

1. கருத்து: அழகிய மெல்லிய கூந்தலுடையவளே! துன்புற்று வருந்தாதே. எம்முடைய மலைவாழ் குறவர் தினைப் புனம் அமைக்கக் கோடரி கொண்டு வெட்டி வீழ்த்த சந்தனமரம் நின் அல்குலுக்குத் தழையுதவும்படியான அணிமைத் தன்மையுடையது என்பர்; அதனால் நான் பலகால் வந்து நம் பிரிவுத் துயர் தீரத் தங்குதலும் மேற் கொள்வன் ஆகலின் என் உயிர் என் ஊரிலேயே தங்குதல் இல்லாத வாழ்க்கையுடையதாகும்.

2. கருத்து: சூத்திரத்தில் நிகழும் என்பதற்குப் பயின்றுவரும் என்று உரை கூறினார். அதனால் 'நிகழும் எனவே' என்பதற்குப் பதில் 'பயின்று' எனவே என்றார்.

3. கருத்து: உயிரானது காணமாட்டாத தன்மையுடையது என்றுரைப்பார் பொய் கூறினாராவார். அதனால் அவர் நாணவுமாட்டார் யான் என் உயிரைக் கண்டேன். அது கணைக் காலவயும், நுணுகிய இடையும் கருங் கண்ணையும் தோளையும் உடையது. அது சொல்லவும் சொல்லும், மென்மெல நடக்கும்,

ஆயத்தொடு போகின்றாளைக் கண்டு கூறியது. இதன் கண் ஆயத்துய்த்தமையும் பெற்றாம்.

இனி வேட்கை யொருதலை (100) என்னுஞ் சூத்திரத்திற் கூறியவற்றை மெய்யுறு புணர்ச்சிமேல் நிகழ்த்துதற்கு அவத்தை கூறினாரென்றும் இச் சூத்திரத்தைத் தலைவியை நோக்கி முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர் இயற்கைப் புணர்ச்சி புணருமென்றுங் கூறுவாரும் உளர்.[1] அவர் அறியார்; என்னை? ஈண்டு அவத்தை கூறிப் பின்னர்ப் புணர்ச்சி நிகழுமெனின் ஆண்டுக்[2] கூறிய மெய்ப்பாடு பன்னிரண்டும் வேண்டாவாம். அன்றியும், ஆறாம் அவதி கடந்து வருவன அகமன்மை மெய்ப்பாட்டியலிற் கூறலிற் பத்தாம் அவத்தையாகிய சாக்காடெய்தி மெய்யுறு புணர்ச்சி நடத்தல் பொருந்தாமையுணர்க. இனித் தலைவியை முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர் புணருமெனின் முன்னர்க் 'கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்,' (96) எனக் கண்ணாற் கூறிக் கூடுமென்றலும் 'இருகையு மெடுத்தல்' (263) எனப் பின்பு கூறுதலும் பொருந்தாவாம். அன்றியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையும் கூறிப் பிரிய வேண்டுதலானும் அது பொருந்தாதாம்.

மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற் றுத்தழால் இடையூ றுகிளத்தல்
நீடுநினைந் திரங்கல் கூடுதலுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேரா யமுறைப் புணர்ச்சி யென்ப

வென்.

இது இயற்கைப் புணர்ச்சிக் குரியதோர் திறன் கூறுகின்றது.

(இ-ள்): தனியிடத்தே தலைமகளை எதிர்ப்பட்ட தலைமகன் தனது பெருமையும் உரனும் நீங்க வேட்கை மீதூர்தலால் மெய்யுறு புணர்ச்சியை வேண்டினானாயினும் தலைமகள்பால் இயல்பாகத் தோன்றும் அச்சமும் நாணமும் மடனும் அதற்குத் தடையாய் முந்துற்று நிற்பனவாதலின் அத்தடைகள் நீங்குதற் பொருட்டுத் தலைமகளை முன்னிலைப் படுத்திச் சில மொழி களைக் கூறுதலும், தான் கூறும் அச்சொல்லின்வழி அவள் நிற்கும் படிச் சில சொற்கூறுதலும். அவளது நலத்தினை எடுத்துரைத் தலும் அது கேட்ட தலைமகள்பால் நகை மிகுந்துத் தோன்றாது முறுவற் குறிப்புத் தோன்றிய அந்நிலையினைக் கூர்ந்து அறி தலும், தன் அகத்தே நிகழும் நோயால் புறத்து நிகழும் தளர் வினைக் குறிப்பால் விளக்குதலும், தன் உள்ளத்து வேட்கை மீதூர்தலை நிலைப்படச் சொல்லுதலும் தலைமகளது உள்ளப்

1. இளம்பூரணர்
2. மெய்ப்பாட்டியலில் 13-15சூ. (புகுமுகம் புரிதல் முதலியன).

பண்பினைத் தான் அறிந்த தெளிவினைத் தன் மனத்தகத்தே தெரிந்து வெளிப்படுத்தலும் ஆகிய இவ்வுரையாடல்கள் தலைவன்பால் நிகழும் என்பர் உளநூற் புலவர், எ-று.)

நகை நனியுறா அந்நிலைமையாவது, நகை மிக்குத் தோன்றாது சிறிதே அரும்பித் தோன்றிய முறுவற் குறிப்பாகிய அந்நிலைமை.

இளம்பூரணர் கருத்தினை மறுத்தற்கு நச்சினார்க்கியர் எடுத்துரைக்கும் காரணங்கள் பொருத்தமற்றன. வேட்கை முதலாகச் சாக்காடு ஈறாக கூறப்பட்டவை களவொழுக்கத்துக்குச் 'சிறப்புடை மரபினவை' எனத் தொல்காப்பியனார் தெளிவாகக் குறித்துள்ளார். அவத்தை என்பன நல்லூழின் ஆணையால் ஓரிடத்து எதிர்ப்பட்ட ஒத்த அன்பினராகிய ஒருவன் ஒருத்தி என்னும் இருவர்க்கும் பொதுப்பட நிகழும் உணர்வு நிலைகளாம். புணர்ச்சிக்குக் காரணமாய் நிகழும் அவ்வுணர்வு நிலைகளை இயற்கைப் புணர்ச்சிக்கண் முன்னர்க் கூறுதலே முறை. இங்குச் சொல்லப்பட்ட உணர்வு நிலைகளின் வெளிப்பாடே பின்னர் மெய்ப்பாட்டியலில் விரித்துரைக்கப்படும் அகன்ஐந்திணை பற்றிய மெய்ப்பாடுகளாகும். வேட்கை முதல் சாக்காடீறாகச் சொல்லப்பட்ட இவ்வுணர்வுநிலைகள் களவொழுக்கத்திற்குச் சிறந்தன என இங்குக் குறித்ததல்லது இவற்றுட் சாக்காடு என்னும் அவத்தை (நிலை) எய்திய பின்னரே மெய்யுறு புணர்ச்சி நடக்கும் என்பது 'வேட்கையொரு தலையுள்ளுதல்' என வரும் தொல்காப்பிய நூற்பாவிலோ அதற்கு இளம்பூரணர் வரைந்துள்ள உரையிலோ யாண்டும் கூறப்படவில்லை. இயற்கைப் புணர்ச்சியில் எதிர்ப்பட்ட காதலர் இருவரும் தம் கண்ணினான் வரும் குறிப்பளவில் நின்று இன்முகமும் இன்சொல்லும் இன்றிப் பசுப்போல ஊமை நிலையில் கூடினார் என்றல் 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணை' யொழுகலாற்றுக்கு ஏற்புடையதன்றாம். எனவே இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியை எதிர்பட்ட தலைமகன் தலைவியை முன்னிலையாக்கல் சொல்வழிப் படுத்தல் முதலாகச் சில சொற்களைப் படிகால் முறைமையான் நிகழ்த்தித் தலைவியைக் கூடினான் என்றல் அவனது தலைமைக்கு ஏற்புடையதேயாகும். இங்ஙனம் இயற்கைப் புணர்ச்சிக்கண் உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்து மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதற்குமுன் தலைவியின்பால் நிகழ்வதற்குரிய மெய்ப்பாடுகளையே புகுமுகம் புரிதல் முதல் இருகையும் எடுத்தல் ஈறாக மெய்ப்பாட்டியலில் ஆசிரியர் விரித்துரைக்கின்றார். தலைவன் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையும்

நிகழ்த்திப் பிரிதல் இயற்கைப் புணர்ச்சியொடு தொடர்புடைய தாய் உடன் நிகழ்வதென்பது ''சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித், தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇ பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்'' என அடுத்துவரும் நூற்பா வால் இனிது விளங்கும். எனவே இந்நூற்பாவுக்கு இளம்பூரணர் கூறும் கருத்தும் விளக்கமுமே தொல்காப்பியனார் கருத்துக்கு ஏற்புடையவாதல் நன்கு தெளியப்படும்.

சிவ.

இச்சூத்திரம் இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழும் தலைவன் திறன் கூறுவதாக இளம்பூரணரும், இயற்கைப் புணர்ச்சிப் பின்னர்ப் பிரிவு நிகழுமாதலின் அதற்கு அஞ்சும் தலைவியைத் தன் கூற்று மூலம் தெளிவித்தல் தலைவன் கடமை யாதலின் பிரிதல் நிமித்தம் கூறுவது என்று நச்சினார்க்கினியரும் கூறினர்.

முன்னைய 'வேட்கை யொருதலை'. என்னும் சூத்திரம் இருவர் உணர்வுகளும் கூறுவதாய் இறுதி உணர்வு சாக்காடு எனக் கூறின்மையின் அந்நிலையிலேயே மெய்யுறு புணர்ச்சி நிகழுமாயின் இச்சூத்திரத்துக் கூறிய முன்னிலையாக்கல் முதலியன இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் நிகழும் பிரிவு நிமித்த மாகத் தலைவன் கூறியன என நச்சினார்க்கினியர் கொள்கை யையே உடன்படலாம். சாக்காட்டுணர்வின் முடிவில் மெய்யுறு புணர்ச்சி நிகழாமல் நீட்டிக்குமாயின் அப்போது இளம்பூரணர் கருத்துப்படி முன்னிலையாக்கல் முதலியன இயற்கைப் புணர்ச்சி யின் நிமித்தங்களாகவே கொள்ளலாம்.

எனவே இச்சூத்திரம், இயற்கைப் புணர்ச்சியின் முன்னர் நிகழும் தலைவன் கூற்றாகவும், பின்னர்ப் பிரிதல் நிமித்தமாகத் தலைவன் கூறும் கூற்றாகவும் இருவகைக்கும் ஏற்கும் உரை யிரண்டுக்கும் பொதுவாக அமைந்தது என்னலாம்.

களவில் தலைவன் கூற்று

99, மெய் தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம் பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந்து இரங்கல் கூடுதல் உறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்

பேராச் சிறப்பின இரு நான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்
குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயிற் பெற்று இரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டாது இரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்
கேடும் பீடும் கூறினும் தோழி
நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமார் உண்டே (11)

ஆ. மொ.

இல.

Moving closely with one another having the physical touch, making caresses, having the chance embracing, expressing the difficulties, pitying the delay expressed, having the meeting, having the emjoyment suddenly, including the vow that cannot be broken these "two-four', (eight) being the expressions of great importance; rejoicing over the enjoyment, wailing on seperation, thinking of things to come, expressing what is happening; loving the friend who has pointed out his faults, having the desired messenger-companian of the lady-love on the pretext of enquiring about their village and name, his loss-in such a way as to impress them that he is really seeking the hand of her lady-friend; (the lady) companion of the lady-love speaking out the truth, blaming her friend, making entreaties continuously in other ways of love-making. the act of embraccing after knowing his entreaties though her companian (Tholi) when the 'tholi' informed him of her forgetfulness after knowing their meeting without her aid,

and his expression of regard for his lady-love for her greatness in enduring her suffering:

'Tholi' having asked him to leave the place, and his expressions of his desire to ride over the horse made of the stem of Palmyra Leaves-these are the expressions which occur in the process of love making (on the part of the lover when meeting 'tholi').

இளம்.

என்......எனின் களவிற் கூட்டம் நான்கிடத்தும் தலைவன் கூற்று நிகழுமாறும், காதல் மிக்கு ஆற்றாமை கையிகப்பின் தலைவனாம் இயலும் கூறுதல் நுதலிற்று.

(இ-ள்): மெய்தொட்டுப் பயிறலாவது—பெருமையும் உரனு முடைய தலைமகன் தெளிவகப்படுத்தியது காரணமாகக் காதல் வெள்ளம் புரண்டோடத் தலைவியின் மெய்யைத் தீண்டிப் பயிறல்.

''தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்லிடுபு எடுத்த
நனந்தலைக் கானத்து இனந்தலைப் பிரிந்த
புன் கண் மடமான் நேர்படத் தன் ஐயர்
சிலைமாண் கடுவிசைக் கலை நிறத்தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல்வாளி
மாறு கொண்டன்ன உண்கண்
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே''[1] (குறுந்—272)

பொய் பாராட்டலாவது—தலைவியின் ஐம்பால் முதலிய கடை குழன்று சிதைவின்றேனும் அஃதுற்றதாக மருங்கு சென்று தொட்டான் ஓர் காரணம் பொய்யாகப் படைத்து உரைத்துப் பாராட்டல்,

---

1. பொருள்: காட்டிடத்துத் தன் இனத்தைப் பிரிந்து எதிர்ப்பட்ட மான்மீது அத்தலைவியின் அண்ணன்மார் எய்த அம்பைப் பறித்தபோது அதன் கடையில் சிவந்த குருதி தோன்றுவது போலச் சிவந்த கண்ணையுடைய அவளது தோளை இனிக் கூடப் பெறுவேனோ?—பாங்கனிடம் தலைவன் கூறியது.

"கடல் புக்குயிர் கொன்று வாழ்வர் நின்ஐயர்
உடல் புக்குயிர் கொன்று வாழ்வை மன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக் கிடுகும் இடையிழல் கண்டாய்"[1]

(சிலப்-கானல்-17)

இடம் பெற்றுத்தழாஅல் ஆவது—பொய் பாராட்டல் காரணமாத் தலைவி மாட்டு அணிமையிடம் பெற்றுத் தழுவக் கூறல். உதாரணம்,

"கொல்யானை வெண் மருப்பும் கொல்வல் புலியதளும்
நல்லானை நின்னையர் கூட்டுண்டு—செல்வார் தாம்
ஓர் அம்பினானெய்து போக்குவர் யான் போகாமை
ஈர் அம்பினானெய் தாய் இன்று"[2]

(திணைமாலை—22)

இடையூறு கிளத்தலாவது—நாண் மடனை நிலைக்களனாக் கொண்ட தலைவி தன் அறிவு நலன் இழந்து ஒன்றும் அறியாது உயிர்த்தனள் அஃது ஒக்குமோ எனின் ஒக்கும். புதிதாய்ப் புக்கார் ஊற்றுணர்வு என்றும் பயிலாத தம் மெல்லியல் மெய் யிற்பட அறிவிழப்பினும் உள் நெக்கு உயிர்க்கும் என்க. அது பற்றிப் புலையன் தொடு தீம்பால் போல் காதல்கூரக் கொம்பானும் கொடியானும் சார்ந்தாளைத் தலைவன் இப்பொழுது இவ்வூற்றின்பிற்கு இடையூறாய் நின்மனத்தகத்து நிகழ்ந்தவை யாவென வினவுதலும்.

நீடு நினைந்திரங்கலாவது—இருவர் இயலும் ஒருங்கு இணைந்தும் தலைவி பெருநாணால் பால்வழி உறுகவென

---

1. பொருள்: நின் அண்ணன்மார் கடலிற் சென்று மீன் முதலியவற்றைப் பிடித்து உயிர்வாழ்வர். நீயும் அவர் போல் என் உடம்பில் புகுந்து அங்குள்ள உயிரைக் கொன்று வாழ்வாய். நினக்கு நின்முலை பெரும் பாரமாகும் அதனால் சிறுகும் இடை. அதனை இழக்காதே.

2. பொருள்: நின் தமையன்மார் யானைக் கொம்பும் புலித்தோலும் நிறையாகக் கொண்டு ஒழுகுவர். தம் பக்கம் செல்வாரை ஓரம்பினால் எய்து போக்குவர். ஆனால் நீயோ இன்று நான் போகாதபடி இரண்டு அம்புகளால் (கண்களால்) என்னை எய்தாய்.

எண்ணி மாற்றமுங் குறியுங் காட்டாது கண்புதைப்பாளைத் தலைவன் புறம் ஓச்சி நிற்கவும் ஆண்டும் கலக்கலாம். பொழுது கூட்டாமைக்கு நினைந்து இரங்கல்.

கூடுதலுறுதலாவது—இங்ஙனமாய்க் காட்சி நிகழ்வின் பின்னர்ப் புணர்ச்சி எய்தலும்.

இதுவரை இயற்கைப் புணர்ச்சியாங் காரணங்கூறி கூடுதலுறுதலால் மெய்யுறு புணர்ச்சி கூறினார்.

இவற்றுக்குச் செய்யுள்.

''வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு''1

(குறள்-1108)

இது கூடுதலுறுதல். பிற வந்துழிக்காண்க.

சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி என்பது—இயற்கைப் புணர்ச்சிக்குக் களனாக மேற்கூறப்பட்டவற்றுடன் அவ் இன்பந் திளைத்தலையும் விரைவாக ஒன்றாய்ப் பெற்ற விடத்து.

இத் தெய்வப்புணர்ச்சிக்குப் பொருள் கூறுங்கால், பயிறல், பாராட்டல், தழாஅல், கிளத்தல், இரங்கல், உறுதல், நுகர்ச்சி, தேற்றம் என்று சொல்லப்பட்ட இரு நான்கு கிளவியும் என எண்ணப்படுத்துக.

''மெய் தொட்டுப் பயிறல்'', முதலாகக் ''கூடுதலுறுதல்'' வரை இயற்கைப் புணர்ச்சிக்கே உரிய கூறி,

''சொல்லிய நுகர்ச்சி'' முதல் ''இரு நான்கு கிளவி'' வரை இடந்தலைப்பாடும் சேர்த்து உணர்த்தினார். அற்றாயின் நுகர்ச்சியும் தேற்றமும் இயற்கைப் புணர்ச்சியன்றோ, இடந் தலைப்பாடாமாறு என்னையெனின், நன்று கடாயினாய், மெய்யுறுபுணர்ச்சியினைப் பால் கூட்டும் நெறிவழிப்பட்டு பெற்றார்க்கு மெய்தொட்டுப் பயிறல் முதல், அறு துறையே இன்றியமையாத் துறையாக, ஏனைய இரண்டும், இடந்தலைப் பாட்டிற்கும் சேர்ந்த துறையாகலின் பொதுப்பட இரண்டற்கும் நடுவே வைத்துச் செப்பம் ஆக்கினாரென்க. நுகர்ச்சியும் தேற்றமும் எனப் பிரித்துக் கூட்டுக.

---

1. கருத்து: ஒருவரை யொருவர் விரும்பும் இருவர்க்கும் காற்று இடையிற்புகுந்து பிளவு படாத முயக்கம் இனிதாகும்.

தீராத் தேற்றமாவது—இயற்கைப் புணர்ச்சியுடன் முடியாத தெளிவு.*

''வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்''[1]
(குறள்—1105)

இஃது இயற்கைப் புணர்ச்சித் துறையன்று. இடந்தலைப் பாட்டின் கண் தலைமகன் கூறியது. நுகர்ச்சி பெற்றது.

''கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள''[2] (குறள்—1101)

என்பதோ எனின், இயற்கைப் புணர்ச்சிக்கண் நுகர்ச்சியுற்றமை கூறிற்று என்க.

''எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நன்முதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறுஞ்
செந்நெல்வான் பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேர் இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோடுற்ற சூளே''[3] (குறுந்—53)

இஃது இயற்கைப் புணர்ச்சிப்பின்றை சொற்ற தீராத் தேற்ற வுரை. ''இன்னிசை யுருமொடு'' என்னும் அகப்பாட்டுள்

---

* இதற்கு நச். உரை பார்க்க.

1. பொருள்: எவ்வெவ் பொருளை எவ்வெக் காலத்தில் விரும்பிப் பெற்றோமோ அவ்வக் காலத்தில் அவ்வப் பொருளாற் பெறும் இன்பம்போல இன்பம் தருவது தோடமைந்த கன்னம் உடையாளின் தோள். இயற்கைப் புணர்ச்சியிற் பெற்ற இன்பம் ஓரளவே நிறைவு தருவது. இடந்தலைப் பாட்டில் பெற்ற இன்பமே மனநிறைவை யுண்டாக்குவது. ஆதலின் இக்குறள் இயற்கைப் புணர்ச்சித் துறையன்று.

2. பொருள்: ஒள்ளிய தொடியுடைய இத்தலைவியிடமே காட்சி, கேட்டல், உண்ணல், உயிர்த்தல், தோய்தல் என்னும் ஐவகையான ஐம்பொறி யுணர்வுகளும் உள்ளன.

3. பொருள்: மகிழ்ந! வெறியாடுகளத்தில் தூவப்பட்ட நெற்பொரி போல வெண்மணல் தோற்றமளிக்கும் நீர்த் துறை முன்றிலில் தலைவியின் கைப்பற்றி இனிப் பிரியேன் என்று சூரரமகளிரை முன்னிட்டுச் செய்த நின் சூளுறவு எம்மை வருத்தின—தோழி தலைவனிடம் கூறியது.

''நின்மார் படைதலின் இனிதாகின்றே
நும்மில் புலம்பினும் உள்ளுதொறும் நலியும்''[1]
(அகம்—58)

என்றது இடந்தலைப் பாட்டில் நேர்ந்த தேற்றம்.

''பேராச் சிறப்பின்'' எட்டு என்றல்,

பேரும் சிறப்பின ஆறு என்றலை எடுத்தோத்தாற்[2] காட்டி நின்றது.

இதுவரை இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும். 'வாயில் பெட்பினும்' என்னுமளவும் பாங்கற் கூட்டம். மேல் தொடர்பவை தோழியிற் கூட்டம்.

பெற்ற வழி மகிழ்ச்சியும் என்பது—இடந்தலைப்பாட்டினை யொட்டி நிகழும் இன்பினைப் பெற்றவழி அகத்துத் தோற்றும் பெருமகிழ்வும்.

''நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றாள் இவள்''[3] (குறள்—1104)

''ஒடுங்கீ ரோதி ஒண்ணுதற் குறுமகள்
நறுந்தண் நீரளா ரணங்கினளே
இனையள் என்றவட் புனையளவு அறியேன்

---

1. பொருள்: நும்முள் ஏற்பட்ட தனிமையில் நின்னை நினையும்தோறும் (வருந்தும் வாடைக் காற்றில் ஓரிடத்து நின் வருகையை நினைந்து இவள் நிற்கும் நிலையானது) நின்மார்பைப் புல்லுவதினும் இனிமை யாகும்.

2. எடுத்தோத்தால்—எடுத்துக் கூறியதால், மெய்தொட்டுப் பயிறல் முதல் தீராத் தேற்றம் வரை எடுத்துக் கூறப் பட்டதால். நுகர்ச்சி, தேற்றம் தவிர்த்த ஆறும் பேரும் சிறப்பின என்க.

3. கருத்து: இவளை நீங்கின் சுடுவதும் நெருங்கின் தண் ணென ஆவதும் ஆகிய நெருப்பை இவள் எங்குப் பெற் றாள்?—தலைவன் கூற்று.

சில மெல்லியவே கிளவி
அணைமெல் லியல்யான் முயங்குங்காலே''[1]

(குறுந்—70)

இவை புணர்ச்சியான் மகிழ்ந்ததற்குச் செய்யுட்கள்.

பிரிந்த வழிக் கலங்கலாவது—இவ்வாறு கூடின தலைமகள் பிரிந்தவழிக் கலக்கமுறுதலும் என்றவாறு.

''என்றும் இனியளாயினும் பிரிதல்
என்றும் இன்னாள் அன்றே நெஞ்சம்
பனி மருந்து விளைக்கும் பருஉக் கண் இளமுலைப்
படுசாந்து சிதைய முயங்குஞ்
சிறுகுடிக் கானவன் பெருமட மகளே''[2]

எனவரும்.

இத்துணையும் இடந்தலைப்பாடு. பெற்றவழி மகிழ்தலும் பிரிந்தவழிக் கலங்கலும் பாங்கற் கூட்டத்தினுந் தோழியிற் கூட்டத்தினும் நிகழும்.

நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும் என்பது—காம நுகர்ச்சி யொன்றனையும் நினையாது இவளாலே நமக்கு இல்லறம் இனிது நடக்குமென்று உட்கோடலும். நிற்பவை—இல்லறவினை.

''தேரோன் தெறுகதிர் மழுங்கினுந் திங்கள்
தீரா வெம்மையொடு திசை நடுக்கு உறுப்பினும்
பெயராப் பெற்றியில் திரியாச் சீர்சால்

---

1. கருத்து: நெஞ்சமே! கூந்தலும் நுதலும் உடைய அரிவையானவள் உடனிருக்கும் போது தண்ணென்னும் தன்மையள்; பிரியுங்கால் வருத்தம் செய்பவள்; அவள் இயல்பை உணர்வதல்லது இப்படிப்பட்டவள் எனச் சொல்ல அறியேன். சில சொல்ல நினைத்தாலும் அவை மெல்லியனவாம். அவள் உடல் இயல்பு அணையுங் காலத்தில் பஞ்சு மெத்தை போலும். அவ்வளவே சொல்ல இயலும்—புணர்ச்சிப் பின்னர்க் கூறியது.

2. கருத்து: நெஞ்சமே! நம்மால் இளமுலையொடு முயங்குதற்குரிய கானவன் பெருமட மகள் கூடும் அப்பொழுது இனியள். பிரியும் அப்போழுதும் இன்னாதவளாவள். என் செய்வாம்—தலைவன் நெஞ்சொடு கூறியது.

குலத்தில் திரியாக் கொள்கையுங் கொள்கையொடு
நலத்தில் திரியா நாட்டமும் உடையோய்
கண்டதனளவையிற் கலங்குதி யெனின் இம்
மண்திணி கிடக்கை மாநிலம்
உண்டெனக் கருதி உணரலன்யானே.''[1]

இது நிற்பவை நினைஇக் கழறியது.

''இடிக்குங் கேளிர் நுங் குறையாக
நிறுக் கலாற்றினோம் நன்று மற்றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்றிந்நோய் நோன்று கொளற் கரிதே''[2]
(குறுந்—58)

இது நிகழ்பவை உரைத்தது.

குற்றங்காட்டிய வாயிலாவது—தலைவன் மாட்டுச் சோர்வானும் காதல் மிகுதியானும் நேர்வுற்ற பழிபாவங்களை எடுத்துக் காட்டும் பாங்கன்.

பெட்பினும்—அத்தகைய பாங்கன் இவ்வியல் புண்டைப் பால் வழியது என எண்ணி இவ்வாறு தலைமகன் மறுத்தவழி அதற்குடன்படல். அவ்வழி, நின்னாற் காணப்பட்டாள் எவ்விடத்தாள்? எத்தன்மையாள்? எனப் பாங்கன் வினாவுதலும்

---

1. பொருள்: பாங்கன் கூற்று. தலைவ! சூரியன் தன் வெம்மை மழுங்கினாலும் திங்கள் தீராத வெம்மையால் திசைகளை நடுங்கச் செய்தாலும் குணத்தில் திரியாக் குலத்தின் கொள்கையையும் அதனால் பெறும் நலத்தில் திரியாத நாட்டமும் உடையோய் நீ. அவளைக் கண்ட அளவில் மனங் கலங்குகிறாய் எனின் யான் இம்மண் திணிஞாலம் உண்டு என்று கருதி யுண்மை யுணராதவனாவேன். இதன் கருத்து இவ்வுலகம் இருத்தலின் அதற்கேற்ப நீ இனி இல்லறத்துக்கு முயல வேண்டும் என்பதாம்.

2. பொருள்: என்னை இடித்துரைக்கும் பாங்கனே! என்னை அவளொடு சேர்த்து வைப்பதாகிய செய்து நிறைவேற்றும் குறையை நின்னுடையதாகக் கொள்வது நல்லது. யான் அவள் பால் கொண்ட காமநோயானது ஞாயிறு காயும் பகற்பொழுதில் பாறையில் உள்ள வெண்ணெய் உருகிப் பரப்பதுபோல உடலெங்கும் பரவுகிறது. தாங்கிக் கொள அரிதாம்.

அதற்குத் தலைமகன் இடமும் உருவுங் கூறுதலும், அவ்வழிப் பாங்கன் சென்று காண்டலும், மீண்டு தலைமகற்கு அவள் நிலைமை கூறலுமெல்லாம் உளவாம். அவ்வழிப் பாங்கன் வினாதலும் தலை மகன் உரைத்தனவும் உளவாம். பாங்கன் வினாயதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க. அவ்வழித் தலைமகன் உரைத்தற்குச் செய்யுள்:—

''எலுவ சிறாஅர் ஏமமுறு நண்ப
புலவர் தோழ கேளாய் அத்தை
மாக்கடல் நடுவண் எண்நாட் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றியாங்குக்
கதுப்பயல் விளங்குந் திருநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே[1]

(குறுந்—129)

''கழைபாடு இரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று
அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக் குறுமாக்கள் தாளங் கொட்டுமக்
குன்றகத்ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூரோளே நாறு மயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத்ததுவே பிறர்
விடுத்தற் காகாது பிணித்த என் நெஞ்சே[2]

(நற்றிணை—95)

இன்னும் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் வரைந் தெய்தல் வேண்டிக் கூறினவுங் கொள்க.

---

1. பொருள்: நண்பனே! கருங்கடல் நடுவண் எட்டாம் நாள் பிறை தோன்றியது போலக் கூந்தலின் பக்கத்துத் தோன்றும் (அவளது) நுதல், புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைக் கட்டுமாறு என்னைக் கட்டியது.

2. கருத்து: கழைக் கூத்தாடு மகள் ஆடிய கயிற்றில் மந்தியானது தன் குட்டி தன்னைப் பற்றித் தொங்க அக்கயிற்றில் ஏறி ஆடக் குறவர் மக்கள் தாளம் கொட்ட அமைந்த குன்றத்தில் உள்ளது சிற்றூர்.

அச் சிற்றூரில் உள்ளாள் கொடிச்சி. அக் கொடிச்சி யின் கையிடத்ததாயிற்றுப் பிறரால் விடுவிக்க முடியாத அவளால் பிணிக்கப்பட்ட என் நெஞ்சம்.

''முலையே முகிழ் முகிழ்த்தனவே தலையே
கிளைஇய குரல கிழக்கு வீழ்ந்தனவே
செறிநிறை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சில தோன்றினவே அணங்குதற்கு,
யான்தன் அறிவல் தானறியலளே
யாங்கா குவள் கொல்தானே
பெருமுது செல்வன் ஒருமட மகளே''[1]

(குறுந்—337)

[இது பாங்கனை நின்னை அணங்காக்கியாள் எவ்விடத்தவள் எவ்வியலினள் என்று வினாய் அறிந்தது].

இவ்வாறு கேட்ட பாங்கன் அவ்வழிச் சென்று கண்டதற்குச் செய்யுள்.

''இரவினானும் இன்துயில் அறியாது
அரவுறு துயரம் எய்தும் தொண்டித்
தண்ணறு நெய்தல் நாறும்
பின்னிருங் கூந்தல் அணங்குற்றோரே.[2]

(ஐயங்குறு—173)

என வரும்.

இச் சூத்திரத்துள் கூற்று வரையறுத்துணர்த்தாமை பாங்கற் கூற்றும் அடங்கற்குப் போலும்.

பெட்ட வாயில் பெற்றிரவு வலியுறுப்பினும் என்பது—மேற் சொல்லியவாற்றான் உடம்பட்ட பாங்கனால் தலைமகளைப் பெற்றுப் பின்னும் வரைந்தெய்தலாற்றாது களவிற் புணர்ச்சி வேண்டித் தோழியை இரந்து பின்நின்று கூட்டக் கூடுவன்

---

1. பொருள்: அவட்கு முலை முகிழ்த்தன; தலைக் கூந்தல் கீழே தொங்குமளவில் வந்தது; பற்கள் முறையாக விழுந்து நிரம்பி முளைத்தன. பருவத்தை யறிவிக்கும் சுணங்கும் அவளிடம் தோன்றின. என்னை வருத்துதற் கேற்க அறிகுறிகலை யான் அவளிடம் அறிவேன். ஆனால் அவள் அதனையறியாள். என்னாகுவாளோ?—தலைவன் கூற்று.

2. பொருள்: தொண்டியில் உள்ள நெய்தல் மலர் மணம் வீசும் பின்னப்பட்ட கரிய கூந்தலையுடைய இவளால் வருத்தப்பட்டோர் இரவிலும் இனிய தூக்கத்தை யறியாமல் மணியிழந்த நாகம் போல வருத்தம் எய்துவர்.

என்னும் உள்ளத்தனாய் அவ்விரத்தலை வலியுறுத்தினும் என்றவாறு.

வலியுறுத்தலாவது, தான் வழிமொழிந்தது யாது தான் அவ்வாறு செய்குவல் என்றமை.

பெட்ட வாயிலால் தலைமகளைக் கண்டு கூறியதற்குச் செய்யுள்.

"கடல் புக்குயிர் கொன்று வாழ்வர் நின்ஐயர்
உடல்புக்குயிர் கொன்று வாழ்வை மன்நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக்கிடுகு மிடையிழவல் கண்டாய்"[1]

(சிலப்-கானல்-17)

இன்னும் பெட்ட வாயில் பெற்று என்பதற்கு இரட்டுற மொழிதல் என்பதனால் தலைமகள் தான் விரும்பப்பட்ட தோழியாகி எமக்கு வாயில் நேர்வாள் இவள் எனப்பெற்றுப் பின்னிரந்து குறையுற நினைப்பினும் என்றுமாம். அதற்குச் செய்யுள்.

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டு புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலும் மாண்ட
மாரிப்பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வரிந் உறழுங் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிர் அன்னோளே"[2]

(குறுந்-222)

இரவு வலியுறுத்தற்குச் செய்யுள் வந்த வழிக் கண்டு கொள்க.

---

1. கருத்து: நின் தமையன்மார் கடலிற் புகுந்து அங்குள்ள மீன் முதலிய உயிர்களைக் கொன்று வாழ்வர். நீயும் என் உடல் புகுந்து என் உயிரைத் துன்புறுத்தி வாழ்வை. நின்முலை பாரமானது. அது தாங்க மாட்டாது இடை சிறுகும். அதை இழவாதே.

2. கருத்து: மழைக் காலத்து மழைநீர் கொண்ட பித்தி அரும் பின் புறம் போன்ற கண்ணும் மழைத் துளியையேற்ற தளிர்போலும் மேனியும் உடைய நம் தலைவி தன் தோழியர் கூட்டத்துள் அங்குத் தோன்றும் ஒருத்தி

''கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம்
வகை சேர்ஐம்பால் தகை பெறவாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள் படுகூழைப்
பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவு மணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவிலாட்டி
அருளினும் அருளாளாயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியல் மாநெஞ்சே என்னதூஉம்
அருந்துயர் அவலந் தீர்க்கும்
மருந்து பிறிதில்லையான் உற்ற நோய்க்கே''[1]

(நற்றிணை-140)

என்னும் பாட்டும் ஆம்.

இத்துணையும் பாங்கற் கூட்டம்.

ஊரும் ...பகுதியும் என்பது — ஊராயினும், பேராயினுங், கெடுதியாயினும், பிறவாயினும் நீர்மையினால் தன் குறிப்புத் தோன்றக் கூறித் தலைமகன் தோழியைக் குறையுறும் பகுதியும் உண்டு என்றவாறு. அவற்றுள் ஊர்வினாயதற்குச் செய்யுள்:

''அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணிக்
கன்று கால் யாத்த மன்றப் பலவின்
வேர்க் கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெரும்பழம்
குழவிச் சேதா மாந்தி அயலது

தலைப்புணைக் கொண்டால் தானும் கொள்ளும்; கடைப்புணைக் கொண்டால் தானும் கடைப்புணை கொள்ளும். அவள் புணையை விட்டு நீரில் சென்றால் தானும் புணையைவிட்டு நீரில் சென்றாடும். எனவே அவ் வொருத்தியே அவளுக்கு உயிர்த் தோழியாவாள் என்பது நமக்குப் புலப்படும்.

1. பொருள்: நெஞ்சமே! சந்தனத்தோடு பிற நறுமணப் பொருள்கள் கூட்டிய நெய்பூசி உலர்ந்த காலத்துச் சந்தனத் துகள்கள் படியும் படியான கூந்தலும் பெரிய கண்ணும் உடைய தோழியர் கூட்டத்துடன் தந்தையின் தேர் செல்லும் முற்றத்தில் ஆடிப் பந்தொடு பெயரும் அவள் நமக்கு அருளினும் அருளாளாயினும் நமது அரிய துயராகிய துன்பத்தைத் தீர்க்கும் மருந்து அவளன்றிப் பிறிது இல்லையாதலின் நீ அவள் பின் நின்று இரத்தலை முனியாதே.

வேய்பயில் இறும்பின் ஆம் அறல் பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீர் ஆயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென எழுந்த
செங்கேழ் ஆடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய் புனங் காவலும் நுமதோ
கோடேந் தல்குல் நீள் தோளீரே''[1]

(நற்றிணை-213)

பெயர் வினாயதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க. கெடுதி வினாயதற்குச் செய்யுள்:

''நறை பரந்த சாந்தம் அறஎறிந்து நாளால்
உறை யெதிர்ந்து வித்திய ஊழ் ஏனல்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாள்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன ஈண்டு''[2] (திணை மாலை-1)

''இல்லுடைக் கிழமை யெம்மொடு புணரில்
தீதும் உண்டோ மாதரீரே''

என்றது பிறவாறு வினாயது. பிறவுமன்ன.

தோழி குறை......இடனுமாருண்டே என்பது — தோழி குறையைத் தலைமகளைச் சார்த்தி மெய்யுறக் கூறுதலும், அமைதியா திரப்பினும், மற்றைய வழியும், சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும், அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கிற் கேடும் பீடும் கூறுதலின் நீக்கலினாகிய நிலைமையும் நோக்கி மடல்மா கூறுதலும் உண்டு தலைமகன்கண் என்றவாறு,

'தலைமகன்கண்' என்பது ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது.[3] உம்மையாற் பிற கூறுதலு முண்டென்றவாறு. புணர்ச்சி

---

1. பொருள்: அல்குலும் தோளும் உடையவர்களே! நும் சிறுகுடியாது என யான் வினவவும் நீவிர் சொல்லவில்லை. அது கிடக்க. இத்தினைப் புனம் காவலும் நும்முடையதேயோ இதனையேனும் கூறுங்கள்.

2. பொருள்: நறை எனும் கொடி படர்ந்த சந்தன மரத்தை வெட்டி நிலமாக்கி பருவக் காலத்தில் மழையையேற்று விதைத்த தினை முற்றிய இப்புனத்தின் கண் காவல் செய்யும் தாமரை முகத்தீர்! இப்பக்கம் அம்பு பாயப்பட்ட மான் ஒன்று போந்ததோ-நீவிர் கண்டீரோ?

3. சூத்திரத்தில் 'தலைமகன்கண்' என்பதில்லையாதலின் பொருள் செல்லும் ஆற்றலாற் கொள்ளப்பட்டது.

நிமித்தமாகத் தலைமகன் இரத்தலுங் குறையுறுதலும் மடலேறுவல் எனக் கூறுதலும் பெறுமென்றவாறு.

ஈண்டு, குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல் என்றது—தோழி கூற்றுள் அருமையினகற்சி யென்று ஓதப்பட்டது. தண்டாதுரைத்தலாவது — தலைமகன் பலகாலுஞ் சென்று இரத்தல். மற்றையவழி என்பது—பின்வரவென்றல் முதலாயின. சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகை என்பது—முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்துணர்த்தலென ஓதப்பட்டது. அறிந்தோளயர்ப் பென்பது—பேதைமை யூட்டல் என ஓதப்பட்டது. கேடு கூறுதலாவது—உலகுரைத் தொழிப்பினும் என ஓதப்பட்டது. பீடு கூறுதலாவது—பெருமையிற் பெயர்ப்பினும் என ஓதப்பட்டது. நீக்கலினாகிய நிலைமை என்பது—அஞ்சி அச்சுறுத்தலென ஓதப்பட்டது. இவையெல்லாந் தோழி கூற்றினுட் காணப்படும்.

தோழியைக் குறையுறும் பகுதி வருமாறு:

''தோளும் கூந்தலும் பல பாராட்டி
வாழ்தல் ஒல்லுமோ மற்றே செங்கோல்
குட்டுவன் தொண்டி அன்ன எற்கண்டு
நயந்துநீ நல்காக் காலே[1] (ஐங்குறு-178)

இனி மடலேறுதல் என்பதற்கு செய்யுள்:

''மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுங் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமங் காழ் கொளினே''.[2]

(ஐங்குறு-17)

---

1. பொருள்: தோழீ! தொண்டி போலும் வளமும் அழகும் கொண்ட என்னுடைய இரந்து குறையுற்று வருந்தும் நிலை கண்டும் நீ இரங்கி இவளை என்னுடன் சேர்த்து வையாத போது யான் இவள் தோளையும் கூந்தலையும் பலவாகப் பாராட்டி இல்வாழ்க்கையை மேற்கொள்ளுதல் கூடுமோ?

2. பொருள்: காமம் உறுதிப்பட்டு மிகுமானால் அது கொண்டோர் குதிரையென்று பனைமடலால் செய்யப்பட்ட குதிரையில் ஏறி ஊர்ப்பூ என்று எருக்கம் பூமாலை சூடுப. ஊர்த் தெருவில் பலராலும் ஆர்ப்பாட்டம் செய்யவும் பெறுப. பிறிதும் ஆகுப.

அவ்வழித் தலைமகன் கூறிய சொற்கேட்டு, இஃது அறிவும் அருளும் நாணமும் உடையார் செய்யார் எனக் கூறிய வழித் தலைமகன் கூறியதற்குச் செய்யுள்,

''நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்
இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்[1] (குறள்-1133)

எனவும்,

''அறிகிலா ரெல்லாரும் என்றேயென் காமம்
மறுகில் மறுகும் மருண்டு''[2] (குறள் 1139)

எனவும் வரும். பிறவுமன்ன. மடல்மா கூறாது பிற கூறியதற்குச் செய்யுள்:

''பணைத் தோட் குறுமகள் பாவைதைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போம் அறிதலும் அறியார்
முறையுடை அரசன் செங்கோல் வையத்து
யான் தற் கடவின் யாங்காவது கொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் அழுங்கல் ஊரே''.[3] (குறுந்-276)

இவ்வாறு இரந்து பின்னிற்றலும் மடலேறுவல் என்றலும் கைக்கிளை பெருந்திணைப் பாற்படுமோ எனின், அவ்வாறு வருவன அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாமாறு வருகின்ற சூத்திரத்தான் விளங்கும்.

---

1. பொருள்: நாணமும் ஆண்மையும் இவளைக் காணு முன்னெல்லாம் உடையனாயிருந்தேன். இன்று காமுற் றார் காமுற்றவற்றைப் பெறாதுவிடின் ஏறும் மடலை யான் உடையேனாயினேன்.

2. பொருள்: என் காமம் வெளிப்படாதிருந்ததால் யாரும் அறியவில்லை என்று நினைத்து அது தெருவில் பரவி மயங்கிச் சுழல்வதாகின்றது.

3. பொருள்: யான் மூங்கில் போலும் தோளுடைய குறு மகள் போல் பாவை எழுதியதையும், அதற்காகப் பஞ்சாய்க்கோரையைத் தேடிச் சென்றதையும் பாவையின் முலையில் தொய்யில் எழுதியதையும் அவளைக் காத்திருக்கும் இவ்வூரார் அறியார். யான் அரசவையில் கூறி அவளைத் தர வேண்டுவனாயின் இவ்வூர் என்னாகும். பெரிதும் பேதைமையுடையது இவ்வூர்; பாவம் இவ்வூர்.

நச்.

இது, மேல் இயற்கைப் புணர்ச்சிப் பகுதியெல்லாங் கூறி அதன்வழித் தோன்றும் இடந்தலைப்பாடும் அதன்வழித் தோன்றும் பாங்கற் கூட்டமும் அவற்றுவழித் தோன்றுந் தோழியிற் கூட்டமும் நிகழுமிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்து மாறும் ஆற்றாமை கையிகந்து கலங்கிய வழி அவன் மடன்மா கூறுமாறுங் கூறுகின்றது. இதனுள் 'இருநான்கு கிளவியும்' என்னுந் துணையும் இடந்தலைப்பாடும் 'வாயில் பெட்பினும், என்னுந் துணையும் பாங்கற் கூட்டமும் ஒழிந்தன தோழியிற் கூட்டமுமாம்.

(இ-ள்): மெய்தொட்டுப் பயிறல்—தலைவன் தலைவியை மெய்யைத் தீண்டிப் பயிலா நிற்கும் நிலைமை என்றால், இயற்கைப் புணர்ச்சிப் பின்னர்ப் பெருநாணினளாகிய தலைமகள் எதிர் நிற்குமோவெனின் தான் பிறந்த குடிக்குச் சிறந்த வொழுக்கத்திற்குத் தகாதது செய்தாளாதலின் 'மறையிற்றப்பா மறையோனொருவனை மறையிற் றப்பிய மறையோன்' போலவும் 'வேட்கை மிகுதியான் வெய்துண்டு புண்கூர்ந்தார்.'' போலவும்[1] நெஞ்சும் நிறையுந் தடுமாறி இனிச் செயற்பாலதியாதென்றும் ஆயத்துள்ளே வருவான் கொல் என்னும் அச்சங் கூறவும் வாரான் கொல் என்னுங் காதல் கூரவும்,[2] புலையன்றீம்பால் போன் மனங் கொள்ளா அனந்தருள்ளம்[3] உடையளாய், நாணு மறந்து காதலீர்ப்பச் செல்லும்; சென்றும் நின்றாளைத் தலைவன் இவ்வொழுக்கம் புறத்தார் இகழப் புலனாய் வேறு பட்டாள் கொல்லோ எனவும் அங்ஙனம் மறைபுலப்படுதலின் இதனினூங்கு வரைந்து கொள்ளினன்றி இம்மறைக்கு உடம்படாளோ வெனவுங் கருதுமாறு முன்புபோல் நின்ற தலைவியை மெய்யுறத் தீண்டி நின்று குறிப்பறியு மென்றற்குத் தொடு மென்னாது 'பயிறல்' என்றார்.

---

1. மறையிற்றப்பா......புண்கூர்ந்தார் போலவும் மறைவழியொழுகுதல் தவறாத ஒருவனிடம் மறைவழியிற் றவறியவன் உள்ளுக்குள்ளே கலக்கமுடையவனாகத் தோன்றுதல் போல மனக் கலக்கமும், சூடானதையுண்டு வாயிற் புண் உற்றார் துடித்துப்பின் அது நீக்கும் வழியை ஆய்தல் போலவும்.
2. காதல் கூர்தல்—வந்தால் கண்டு மகிழலாமே எனும் அன்பு மிகுதல்.
3. அனந்தர் உள்ளம்—மயக்கவுள்ளம்.

பொய் பாராட்டல்—அங்ஙனந்தீண்டி நின்றுழித் தலைவி குறிப்பறிந்து அவளை ஓதியும் நுதலும் நீவிப் பொய் செய்யா நின்று[1] புனைந்துரைத்தல்; சிதைவின்றேனுஞ் சிதைந்தன போல் திருத்தலிற் 'பொய்' என்றார்.

இடம் பெற்றுத் தழாஅல்-அவ்விரண்டனானுந் தலைவியை முகம் பெற்றவன் அவணோக்கிய நோக்கினைத் தன்னிடத்திலே சேர்த்துக் கொண்டு கூறல்.

இடையூறு கிளத்தல்—அவள் பெருநாணினளாதலின் இங்ஙனங் கூறக் கேட்டுக் கூட்டத்திற்கு இடையூறாகச் சில நிகழ்த்தியவற்றைத் தலைவன் கூறல். அவை கண் புதைத்தலுங் கொம்பானுங் கொடியானுஞ் சார்தலுமாம்.

நீடுநினைந்திரங்கல்—புணர்ச்சி நிகழாது பொழுது நீண்டதற்கு இரங்கி இரக்கந் தோன்றக் கூறல்.

கூடுதல் உறுதல் — நீடித்ததென்று இரங்கினானென்பது அறிந்தோள் இவன் ஆற்றானாகி இறந்துபடுவனெனப் பெருநாணுக் கடிது நீங்குதல்.

சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி—தலைவன் தான் முற்கூறிய நுகர்ச்சியை விரையப் பெற்றவழி; பெற்றவழி என்பதனைப் பெறுதலெனப் பெயர்ப்படுத்தல் அக்கருத்தாற் பெறுதும்.[2]

தீராத் தேற்றம்[3] உளப்படத் தொகைஇ—என்ஞான்றும் பிரியாமைக்குக் காரணமாகிய சூளுறுதல் அகப்படத் தொகுத்து,

---

1. பொய் செய்யா நிற்றலாவது கூந்தல் ஒப்பனை குலையாதிருக்கவும் குலைந்ததாகத் திருத்துதலும் நுதல் வியர்வை கொள்ளாதிருக்கவும் கொண்டதாகத் துடைத்தலும் போல்வன செய்து நிற்றல்.

2. பெற்றுழி என்பது பெற்றால் என எச்சப் பொருளாகவோ பெறுதற்கண் என ஏழாம் வேற்றுமைப் பொருளாகவோ வரும். அது இங்குப் பெறுதல் என்னும் தொழிற் பெயர்ப் பொருளில் ஆளப்பட்டுள்ளது. பயிறல் நாட்டல் முதலியன தொழிற் பெயர்களாகவுள்ளன. அவற்றொடு சேர்த்துக் கூறும் பெற்றுழி என்பதும் தொழிற் பெயராகவே ஆகும். அக் கருத்தால் என்றது முன்னர்த் தொழிற் பெயர்களைக் கூறிய கருத்தால் என்பதாம்.

3. தீராத் தேற்றம்-விட்டுப் பிரியாமைக்குக் கூறும் தெளிவுரை. அதாவது சூளுரை.

புணர்ச்சி நிகழ்ந்துழியல்லது தேற்றங்கூறல் ஆகாதென்றற்கு 'வல்லே பெற்றுழித் தீராத் தேற்றம்' என்றார், முன் தெளிவகப் படுத்த பின் நிகழ்ந்த ஆற்றாமை தீர்தற்குத் தெய்வத்தொடு சார்த்திச் சூளுறுதலின் இத்தேற்றமும் வேண்டிற்று.

பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்—குறையாச் சிறப் பினவாகிய இவ்வெட்டும். தாமேகூடும் இடந்தலைப்பாடும், பாங்கனாற்குறிதலைப்பெய்யும் இடந்தலைப்பாடும் ஒத்த சிறப் பினவாதற்குப் ''பேராச்சிறப்பின்'' என்றார்.

எனவே இடந்தலைப்பாடு இரண்டாயிற்று தோழியிற் கூட்டம் போலப் பாங்கன் உரையாடி இடைநின்று கூட்டாமை யிற் பாங்கற் கூட்டம் என்பதனைத் தலைமகன் பாங்கனைக் கூடுங் கூட்டமென்று கொள்க.

உதாரணம்

''உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்'' (குறள்-1106)

இஃது என் கை சென்றுறுந்தோறும் இன்னுயிர் தளிர்க்கும் படியான் தீண்டப்படுதலின் எனப் பொருள் கூறவே மெய் தீண்டலாயிற்று.

''தீண்டலு மியையவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்லிடுபெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமானேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசைக் கலை நிறத்தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்னவுண்க
ணாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே''[1]
(குறுந்-272)

கழறிய பாங்கற்குக் கூறுந் தலைவன், இவனான் இக் குறை முடியாது, நெருநல் இடந்தலைப் பாட்டிற் கூடியாங்குக் கூடுவல், அது கூடுங்கொல் என்று கூறுவான் அற்றைஞான்று மெய் தொட்டுப் பயின்றதே கூறினான்.

''சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழநின்
திருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்

1. கருத்து: பக்கம் 79ல் காண்க.

காமங் கைம்மிகிற் றாங்குத லெளிதோ
கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலி விளையாடிய புசர்முக வேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ வல்ல நண்ணா
ராண்டலை மதிலராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்தவடு போர்ச் செழியன்
பெரும் பெயர்க் கூடலன்னநின்
கரும்புடைத் தோளுமுடைய வாலணங்கே[1]

(நற்றிணை-39)

இஃது, அங்ஙனம் மெய்தீண்டி நின்றவன் யான்தழீஇக் கொண்டு கூறின் அதனை ஏற்றுக் கொள்ளாயாய் இறைஞ்சி நின்று நாணத்தாற் கண்ணைப் புதைத்தியென, இடையூறு கிளத்தல் கூறிக், 'காமங்கைம்மிகிற்றாங்குத லெளிதோ' வென 'நீடு நினைத்திரங்கல்' கூறிப், புலியிடைத்தோய்ந்து சிவந்தகோடு போல என்னிடைத் தோய்ந்து காமக் குறிப்பினாற் சிவந்த கண்ணெனக் கூடுதலுங் கூறிற்று. இனித் தனியே வந்தன.

''கடல்புக்குயிர் கொன்று வாழ்வர் நின்னைய
ருடல்புக்குயிர் கொன்று வாழ்வை மன்னீயு
மிடல்புக்கடங்காத வெம்முலையோபார
மிடர்புக்கிடுகு மிடையிழவல் கண்டாய்[2]

(சிலப் கானல்-17)

இது பொய் பாராட்டல்

---

1. கருத்து: நங்கையே! யான் நின்னைத் தழுவிச் சில கூறின் அவற்றை ஏலாது முகம் தாழ்ந்து கண் புதைத்து நாணுகின்றாய். காமமானது கைகடந்து மிகுமாயின் தாங்குதல் எளிதோ? புலியைக்குத்திய வேழத்தின் மருப்பின் நுனி குருதியால் சிவந்து காணப்படுதல் போல கடைமணி சிவந்த நின் கண்கள் மட்டுமா என்னைச் சினவா நிற்கின்றன? பாண்டியனின் மதுரை போலும் தொய்யில் எழுதப் பெற்ற நின்தோள்களும் அல்லவா வருத்துகின்றன.

2. கருத்து: நின் தமையன்மார் கடலிற் புகுந்து வலைவீசி அங்குள்ள உயிர்களைக் கொன்று விற்று வாழ்வர். நீயும் என் உடலில் புகுந்து என் உயிரைக் கொன்று வாழ்வாய். நின் விரும்பத்தக்க முலையோ மிக்க பாரமுடையதாகும். அதனால் துன்புற்றுச் சிறுகும் இடை. அதனை இழந்து விடாதே.

''கொல்யானை வெண்மருப்புங் கோள்வல் புலியதளு
நல்யாணர் நின்னையர் கூட்டுண்டு—செல்வார்தா
மோரம்பினா னெய்து போக்குவர்யான் போகாமை
யீரம்பி னாலெய்தா யின்று''[1] (திணைமாலை-22)

இஃது இடம் பெற்றுத் தழாஅல்.

''இலங்குவளை தெளிர்ப்ப வலவ னாட்டி
முகம்புதை கதுப்பின ளிறைஞ்சிநின் றோளே
புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே''[2] (ஐங்குறு-197)

இது கூடுதலுறுதல்

''வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்'' (குறள்-1105)

இது நுகர்ச்சி பெற்றது.

''எம் மணங்கினவே மகிழ்ந முன்றி
னனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
வெக்கர் நண்ணிய வெம்மூர் வியன்துறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரா மகளிரொ டுற்ற சூளே''[3] (குறுந்—53)

இதனுள் ''இராத் தேற்ற''த்தைப் பின்னொருகால் தலைவி தேர்ந்து தெளிவொழித்துக் கூறியவாறு காண்க.

---

1. கருத்து: பக்கம் 80ல் காண்க.

2. கருத்து: விளங்கும் வளையொலிக்கத் தன் காலால் நண்டுகளை ஆட்டி முகத்தை மறைக்கும் கூந்தல் உடையளாய்த் தலை தாழ்ந்து நின்றாள். அவள் தனிமை கொள்ளக் காரணமாம் மாலைப் பொழுது மறையப் பின்னர்த் தன் நலமிக்க மார்பினை யான் முயங்கத் தரும்.

3. கருத்து: மகிழ்ந! எம் மூரில் உள்ள நீர்த்துறையில் அன்று நீ எனது முன்கையைப் பற்றி இனிப் பிரியேன்; பிரியின் தரியேன் எனச் சூரர மகளிர்மேல் வைத்துச் சூளுறவு செய்தது எம்மை இப்போது வருத்தியது.

இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவி கருத்தெல்லாம் உணர்த்தானாயினுங் காவன்மிகுதியானுங், கரவுள்ளத்தானும் இரண்டாங் கூட்டத்தினும் அவள்நிலை தெளியாது ஐயுறுதலுங் கூறி, மூன்றாவதாய் மேல்நிகழும் பாங்கற் கூட்டத்தின் பின் நிகழும் இடந்தலைப்பாட்டினும் ஐயுறவு உரித்தென்று மெய் தொட்டுப் பயிறன் முதலியன அதற்குங் கூறினார். அன்றியும் மக்களெல்லாம் முதல் இடை கடையென மூவகைப் படுதலின் அவர்க்கெல்லாம் இது பொதுவிதியாகலானும் அமையும்.

''எண்ணிய தியையா தாங்கொல் கண்ணி
யவ்வுறு மரபி னுகர்ச்சி பெறுகென
வரிவண் டார்க்கும் வாய்புகு கடாஅத்த
வண்ணல் யானை யெண்ணருஞ் சோலை
விண்ணுயர் வெற்பினெம் மருளி நின்னி
னகலி னகலுமெ னுயிரெனத் தவலி
வருத்துய ரவலமொ டணித்தெம் மிடமெனப்
பிரிந்துறை வமைந்த வெம்புலம்புநனி நோக்கிக்
கவல்வுறு நெஞ்சமொடு கவலுங் கொல்லோ
வாய நாப்பண் வருகுவன் கொல்லென
வுயவுமென் னுள்ளத் தயர்வுமிக லானே'',[1]

இது, வருவான் கொலென்னும் அச்சமும், வாரான் கொல் லென்னுங் காதலுங் கூர்ந்து தலைவி கூறியது.

இனிச் 'சொல்லிய' என்றதனானே இன்னும் இப்புணர்ச்சி கூடுங்கொலெனக் கூறுவனவும் இன்னுந் தெய்வந் தருமெனக் கூறுவனவும், தலைவியை எதிர்ப்பட்ட இடங் கண்டுழி அவனாகக் கூறுவனவும் காட்சிக்கு நிமித்தமாகிய கிள்ளையை வாழ்த்து வனவும் தலைவி தனித்த நிலைமை கண்டு வியப்பனவும் முன்னர்த் தான் நீங்கிய வழிப் பிறந்த வருத்தங் கூறுவனவும்

1. கருத்து: எண்ணரும் யானையுடைய சோலை சூழ்ந்த மலையிடத்தில் நின்னிற் பிரியின் என் உயிர் பிரியும்; என் ஊர் அண்மையில் உள்ளது என்று கூறிய போது அவரைப் பிரிந்து உறைதற்கு அமைந்த என் தனிமையை நினைந்து செல்வோமோ மாட்டோமோ எனக் கவர்த்த நெஞ்சமொடு தன் ஊரிலேயே கவலை கொண்டு தங்கி விடுவானோ. அல்லது நாம் ஆயக் கூட்டத்துடன் இருக்கும் போது களவு புலப்பட வந்துவிடுவானோ என இரு வகையில் வருந்துவன் யான். அதனால் அவன் மாலைதங்கு மார்பை நுகரும் நுகர்ச்சியைப் பெறுவே னாக என எண்ணும் எண்ணம் இயையாதாமோ ஒன்றும் அறியேன்.

அணியணிந்து விடுத்தலும் இவை போல்வன பிறவும் இடந் தலைப்பாட்டிற்குக் கொள்க.

(உ-ம்).

''வெள்ள வரம்பி னூழி போகியுங்
கிள்ளை வாழிய பலவே யொள்ளிழை
யிரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டியவ்வே''[1]

(ஐங்குறு-281)

இது கிள்ளை வாழ்த்து,

''நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்[2] (குறள்-1104)

இது நீங்கியவழிப் பிறந்த வருத்தங் கூறியது.

''அல்குபட ருழந்த வரிமதர் மழைக்கட்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குற்
றிருமணி புரையு மேனி மடவோள்
யார்மகள் கொல்லி வடந்தை வாழியர்
துயர முறீஇயின ளெம்மே யகல்வய
லரிவன ரரிந்துந் தருவனர் பெற்றுந்
தண்சேறு தாஅய் மதனுடை நோன்றாட்
கண்போ னெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டி
தன்றிறம் பெறுகவிவ ளீன்ற தாயே''[3]

(நற்றிணை-8)

---

1. கருத்து: கரிய கூந்தலுடைய கொடிச்சியானவள் தன் தோள்களால் இத்தினைப்புனங் காவலை மேற்கொண்டாள் என்பதைக் கிளிகள் காட்டின ஆகலின் அவை வெள்ளம் என்பதை வரம்பாகவுடைய ஊழிக்காலம் முடிந்தாலும் தாம் முடியாமல் வாழ்வனவாகுக.

2. கருத்து: நீங்கினால் சுடுவதும் குறுகினால் குளிர்வதும் ஆகிய நெருப்பை எங்குப் பெற்றாள் இவள்?

3. கருத்து: எம்மைத் துயரப் படுத்தினாள் இவள் யார் மகளோ! அரிவார் அரிந்து போகவும் மலர் பறித்துத் தருவார் பறித்துப் போகவும் குறையாமல் சேற்றில் தாவிய தாளுடைய நெய்தலானது போர் போலப் பூக்கும் படியான பொறையன் என்பானது தொண்டி என்னும் நகரின் வளமெல்லாம் இவளையீன்ற தாயானவள் பெறுவாளாக.

என்பதும் அது. ஏனையவற்றிற்குச் சான்றோர் செய்யுட்கண் வருவன உளவேற் காண்க.

பெற்றவழி மகிழ்ச்சியும்—சொல்லிய நுகர்ச்சி யெல்லே பெற்றுழி அவன் மனம் மகிழும் மகிழ்ச்சியும்.

'பேராச் சிறப்பின்' என்றதனாற் பாங்கனால் நிகழும் இடந்தலைப் பாட்டிற்கும் இது கொள்க.

(உ-ம்)

''ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமக
ணறுந்தண் ணீர ளாரணங் கினளே
யினைய ளென்றவட் புனையளவ றியேன்
சிலமெல் லியவே கிளவி
யணைமெல் லியல் யான் முயங்குங்காலே''[1]

(குறுந்-70)

பிரிந்தவழிக் கலங்கலும்—அங்ஙனம் புணர்ந்து பிரிந்துழிஅன்பு மிகுதியால் தான் மறைந்து அவட் காணுங்கால் ஆயத்திடையுஞ் சீறூரிடையுங் கண்டு இனிக் கூடுதல் அரிதெனு இரங்கலும்.

(உ-ம்)

''குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாஅங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே''[2]

(குறுந்-128)

''இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி

---

1. கருத்து: பக்கம் 84ல் காண்க.

2. கருத்து: நெஞ்சமே! கிழக்குக் கடற்கரையில் உள்ள சிறகிழந்த நாரை பொறையனுடைய மேலைக் கடற் கரையில் தொண்டித் துறையில் உள்ள அயிரை மீனை உண்ண வாயைத் திறந்தது போல நெடுந் தொலைவில் உள்ளவளும் அடைவதற்கு அரியவளுமாகிய அவளை நினைகின்றாய்: அதனால் வருந்துகின்றாய். அப்படிப் பட்ட ஊழ் உடையை போலும் நீ.

நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே''[1] (குறுந்-120)

எனவரும்.

'வழி' என்றதனாற் பிரியலுறுவான் கூறுவனவுங் கொள்க.

''வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாதல்
அதற்கன்ன ணீங்கு மிடத்து[2] (குறள்-1124)

இது, மூன்றாங் கூட்டத்தினையுங் கருதலின் ஈண்டு வைத்தார். இது முதலாகப் பாங்கற் கூட்டமாம்.

'கலங்கலும்' எனவே அக்கலக்கத்தான் நிகழ்வனவெல்லாங் கொள்க. அவை தலைவன் பாங்கனை நினைத்தலும் அக் கலக்கங் கண்டு பாங்கன் வினாவுவனவும் அதுவே பற்றுக் கோடாக உற்றதுரைத்தலும் பிறவுமாம்.

(உ-ம்)

பண்டையை யல்லைநீ யின்று பரிவொன்று
கொண்ட மனத்தை யெனவுணர்வல்—கண்டாயா
னின்னுற்ற தெல்லா மறிய வுரைத்தியாற்
பின்னுற்ற நட்பினாய் பேர்த்து''[3]

எனவும்,

''வஞ்சமே யென்னும் வகைத்தாலோர் மாவினாய்த்
தஞ்சந் தமியனாய்ச் சென்றேனென்—னெஞ்சை
நலங்கொண்டார் பூங்குழலா ணன்றாயத் தன்றென்
வலங்கொண்டாள் கொண்டா ளிடம்''[4]
(திணை மாலை-9)

எனவும்,

---

1. கருத்து: நெஞ்சமே! நம் காதலி நல்லவள் என்பதை நீ அறிந்தது போல அடைதற்கு அரியவள் என்பதை அறியா யாயினாய். அதனால் வறியவன் உலக இன்பத்தை விரும்பினாற்போல் அவளை அடைய விரும்பினாய். அது நடவாது.

2. கருத்து: உடன் இருக்கும் போது உயிர்க்கு வாழ்தல் ஆகிய அத்தன்மையுடையள்; விட்டு நீங்கும் போது அவ்வுயிர்க்குச் சாதல் அத்தன்மையள்.

3. கருத்து: பின்னிப் பிணைந்த நட்புடையாய்! நீ முன் போல் இல்லை. துன்பம் ஒன்றுடைய மனத்தனாய் உள்ளாய் என்பதை உணர்ந்தேன். நினக்குற்ற துயரெல் லாம் யான் அறிய பெயர்த்து உரைப்பாயாக.

4. கருத்து: அம்புபட்ட மான் ஒன்று இவ்வழி வந்ததோ என்று ஒரு வினாவை விடுத்துச் சென்றேன். தன்

''எலுவ சிறாஅ ரேமுறு நண்ப
புலவ தோழா கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளக்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றா லெம்மே[1]

(குறுந்-129)

எனவும் வரும்.

நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்—நிற்பவை நினைஇ உரைப்பினும் நிகழ்பவை உரைப்பினும் என உரைப்பி னென்பதனை முன்னுங் கூட்டுக.

அது கேட்ட பாங்கன் உலகத்து நிலைநிற்கின்ற நற்குணங் களை அவனை நினைப்பித்துக் கழறிக் கூறினும் அக் கழறிய வற்றை மறுத்துத் தன் நெஞ்சின் நிகழும் வருத்தங்களை அவற்குக் கூறினும்.

(உ-ம்):

''குன்ற முருளிற் கொடித்தேரோய் குன்றியுள்
ஒன்று மொழிவ துளதாமோ—நன்றறிந்து
தாமுறையே செய்வார் தகவிலவே செய்தக்கால்
யார்முறை செய்பவோ மற்று''[2]

எனவும்,

''தேரோன் றெறுகதிர் மழுங்கினுந் திங்க
ளூரா வெம்மையோடு திசைநடுக் குறுப்பினும்
பெயராப் பெற்றியிற் றிரியாச் சீர்சால்
குலத்திற் றிரியாக் கொள்கையுங் கொள்கையொடு

தோழியர் கூட்டத்து இருந்த அவள் என் வெற்றியைக் கொண்டதோடு என் நெஞ்சத்தையும் தனக்குத் தங்கும் இடமாகக் கொண்டாள். இது மாயமோ என வியக்கும் வகைமை யுடையதாகும்.

1. கருத்து: பக்கம் 86ல் காண்க.

2. கருத்து: கொடி கட்டிய தேருடையாய்! மலையே உருளின் அதனிடமுள்ள குன்றிமணிகளுள் ஒன்றேனும் உருளாது விடுமோ? நன்று தீதறிந்து முறையான நல்லதே செய்பவர் தகாத தீயது செய்வாரானால் உலகில் எவர் தாம் முறை செய்பவராவார்?

நலத்திற் றிரியா நாட்டமு முடையோய்
கண்டத னளவையிற் கலங்குதி யெனினிம்
மண்டிணி கிடக்கை மாநில
முண்டெனக் கருதி யுணரலன் யானே''[1]

எனவும் இவை நிற்பவை நினைஇக் கழறின.

''காமங் காம மென்ப காம
மணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புன்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோளோயே[2]

(குறுந்-204)

இதுவும் அது.

''நயனும் நண்பும் நாணுநன் குடைமையும்
பயனும் பண்பும் பாடறிந் தொழுகலு
நும்மினு முடையேன் மன்னே கம்மென
வெதிர்த்த தித்தி யேரிள வனமுலை
விதிர்த்து விட்டன்ன வந்நுண் சுணங்கி
னைம்பால் வகுத்த கூந்தற் செம்பொற்
றிருநுதற் பொலிந்த தேம்பா யோதி
மூதுநீ ரிலஞ்சி பூத்த குவளை
யெதிர்மலர்ப் பிணைய லன்னவிவ
ளரிமதர் மழைக்கண் காணா வூங்கே''[3]

(நற்றிணை-160)

---

1. கருத்து: பக்கம் 85ல் காண்க.
2. கருத்து: பெரிய தோளோய்! காம நோய் காம நோய் எனச் சொல்வர் உலகினர். காமம் அணங்குமன்று பிணியும் அன்று. அதை ஆராயின் மேட்டு நிலத்தில் தழைத்த முதிராத இளம்புல்லைக் கிழட்டுப் பசு ஒன்று நாவினால் தடவி இன்புறுவது போலும் புதிய இன்பமே யாகும்.
3. கருத்து: பாங்கனே! கலந்த உறவும் நட்பும் நாணமும், கொடையும், நற்குணமும், உலக நடையறிந்து ஒழுக லும் ஆகிய யாவும் நின்னைக் காட்டிலும் மிகவுடைய னாய் இருந்தேன். எப்போதெனின், வனமுலை மேற் சுணங்கினையும் ஐம்பாலாக வகுத்த கூந்தலையும் உடைய ஒருத்தியின் குவளை மலர்களை எதிர்எதிர் வைத்துக் கட்டினாற் போன்ற இருகண்களையும் நான் பார்த்ததற்கு முன்னேயாம்.

''இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றும்ற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே''[1]
(குறுந்-58)

இவை நிகழ்பவை உரைத்தன.

இப்பன்மையான்[2] வேறுபடவருவன வெல்லாங் கொள்க.

குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்—அங்ஙனந் தலைவற்கு நிகழும் குற்றங்களை வெளிப்படக் காட்டிய பாங்கன் அவன் ஆற்றாமை மிகுதி கண்டு அதனை நீக்குதற்கு விரும்பினும்:

அது நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்து எத்தன் மைத்து என வினாவும்.

(உ-ம்) :

''பங்கயமோ துங்கப் பனிதங்கு மால்வரையோ
வங்கண் விசும்போ வலைகடலோ—எங்கோஇச்
செவ்வண்ண மால்வரையே போலுந் திருமேனி
யிவ்வண்ணஞ் செய்தார்க் கிடம்''[3]

என வரும்.

அது கேட்டுத் தலைவன் கழியுவகை மீதூர்ந்து இன்னவிடத்து இத் தன்மைத்து என்னும்.

(உம்) :

''கழை பாடிரங்கப் பல்லியங் கறங்க
வாடுமக ணடந்த கொடும்புரி நோன்கயிற்
றதவத் தீங்கனி யன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்க ணிரும்பொறை யேறி விசைத்தெழுந்து

---

1. கருத்து பக்கம் 85ல் காண்க.
2. பன்மை-நிற்பவை, நிகழ்பவை என்னும் பன்மை வாய்பாடுகள்.
3. கருத்து: நண்பனே! நின் உடம்பை இப்படி வருத்திய வர்க்கு வாழிடம் தாமரையோ, பனிமலையோ, வானோ, கடலோ எவ்விடம் கூறுக.

குறக்குறு மாக்க டாளங் கொட்டுமக்
குன்றகத் ததுவே குழுமிளைச் சீறூர்
சீறூரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையத் ததுவேபிறர்
விடுத்தற் காகாது பிணித்தவென் னெஞ்சே''[1]

(நற்றிணை-95)

இஃது இடங்கூறிற்று.

''கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
னெஞ்சு பிணிக்கொண்ட வஞ்சி லோதி
பெருநா ணணிந்த சிறுமெல் லாக
மொருநாள் புணரப் புணரி
னரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே''[2]

(குறுந்-280)

இது தன்மை கூறிற்று.

மீட்டுங் 'குற்றங் காட்டிய' என்றதனானே இக் கூட்டத்திற்குரிய கூற்றாகிச் சான்றோர் செய்யுட்கண் வேறுபடவருவன வெல்லாங் கொள்க.

''காயா வீன்ற கணவீ நாற்றம்
மாயா முன்றில் வருவளி தூரக்கு
மாகோள் வாழ்நர் சிறுகுடி யாட்டி
வேயேர் மென்றோள் விலக்குநர்
யாரோ வாழிநீ யவ்வயிற் செலினே''[3]

இது பாங்கனை நீ யாண்டுச் செல்ல வேண்டுமென்றது.

---

1. கருத்து: பாங்கனே! கழைக் கூத்தாடுவாள் அமைத்த கயிற்றில் குரங்குக் குட்டி ஆடுவதைப்பார்த்து குறவர் சிறுவர்கள் தாளம் கொட்டும்படியான குன்றத்தில் இருப்பது ஒரு சிற்றூர். அச்சிற்றூரில் இருப்பவள் மண முள்ள கூந்தலையுடைய கொடிச்சி. அவள் கையகத்துப் பிணிப்புண்டது என் நெஞ்சம். அதனைப் பிறர் விடுவிக்க இயலாது.
2. கருத்து: நண்பனே! வாழி! என் நெஞ்சைப் பிணித்துக் கொண்ட குறுமகளின் மெல்லிய ஆகத்தை ஒரு நாளா யினும் புல்லப் பெறுவேனாயின் அதுபோதும்; அரை நாள் வாழ்க்கையையும் யான் விரும்பேன்.
3. கருத்து: காட்டுப் பசுக் கட்டியுள்ள முற்றத்தில் காயா மலர் மணத்தை அங்குவரும் காற்று மிகச் செய்யும்படி யான பகைப்புலப் பசுவைக் கொண்டுவரும் வீரர் வாழும் சிறுகுடியில் உள்ளாளது மூங்கில் போலும் தோளை நீ அவள் இருக்குமிடம் சென்று கூடினால் தடுப்பவர் யார்?

''என்னுறு நோய் தீர்த்தற் கிருபிறப்பி னான்மறையோன்
தன்னுறுநோய் போலத் தளர்கின்றான்...இன்னிய
சுற்றத்திற் நீர்ந்த சுடரிழையைச் செவ்வியாற்
றெற்றெனக் கண்ணுறுங்கொ லென்று,'[1]

(பாரதம்)

இது குறிவழிச் சென்ற பாங்கன் அவ்விடத்துக் காணுங் கொலென்று ஐயுற்றது.

''அளிதோ தானே யருண்மிக வுடைத்தே
களிவாய் வண்டினங் கவர்ந்துண் டாடு
மொளிதார் மார்பி னோங்கெழிற் குரிசிலைப்
பிரியாத் துயரமொடு பேதுயிர்த் தகன்ற
கிளியோர் மழலைக் கேழ்கிளர் மாத
ரார்ந்த சுற்றமொடு தமரி னீக்கத்
தானே தமியள் காட்டிய
வானோர் தெய்வம் வணங்குவல் யானே[2]

இது குறிவழிச் சென்ற பாங்கன் தலைவியை எளிதிற் காட்டிய தெய்வத்தை வணங்கியது.

''கண்ணென மலருங் குவளையு மடியெனத்
தண்ணெனுந் தடமலர் தயங்குதா மரையு
முலையென முரணிய கோங்கமும் வகையெழின்
மின்னென நுடங்கு மருங்குறு மணியென
வயின்வயி னிமைக்கும் பாங்குபல் லுருவிற்

1. கருத்து: இரு பிறப்புடைய நான்மறை வல்ல பாங்கன், யான் தன் தோழியர் முதலிய சுற்றத்தின் நீங்கித் தனித்து வந்த சுடரிழையைத் தெளிவாக அடைந்து மகிழ்வேனோ என்று என் துயரைத் தன்துயர் போலக் கொண்டு என்துயரைப் போக்கத் தளர்கின்றான்.

2. கருத்து: ஓங்கு எழிற்குரிசிலாகிய என் நண்பனை நேற்றுப் பிரியாத துயரத்தொடு துன்பப்படச் செய்து நீங்கிய மாதரைத் தன் தோழியர் கூட்டத்தின் சுற்றத்தி னின்றும் நீங்கித் தனித்து வந்துள்ள இவளை யான் எளிதிற் பார்க்கக் காட்டிய வானோர் தெய்வத்தை யான் வணங்குகின்றேன். தெய்வம் இரக்கம் உடையது. அருள் மிகவுடையதாகும்.

காண்டகு கமழ்கொடி போலுமென்
ணாண்டகை யண்ணலை யறிவுதொலைத் ததுவே''[1]

இஃது இவள்போலும் இறைவனை வருத்தினாளெனப் பாங்கன் ஐயுற்றது.

''கண்ணே, கண்ணயற் பிறந்த கவுளழி கடாஅத்த
வண்ணல் யானை யாரியர்ப் பணித்த
விறற்போர் வானவன் கொல்லி மீமிசை
யறைக்கான் மாச்சனை யவிழ்ந்த நீலம்
பல்லே, பல்லரண் கடந்த பசும்பூட் பாண்டியன்
மல்குநீர் வரைப்பிற் கொற்கை முன்றுறை
யூதை யீட்டிய வுயர்மண லடைகரை
யோத வெண்டிரை யுதைத்த முத்தம்
நிறனே, திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த
விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழ
னலனணி யாங்கிற் போகிய மாவி
னுருவ நீள்சினை யொழுகிய தளிரே
யென்றவை பயந்தமை யறியார் நன்று
மடவர் மன்றவிக் குறவர் மக்க
டேம்பொழி கிளவி யிவளை
யாம்பயந் தேமெம் மகளென் போரே''[2]

இது தலைவியை வியந்தது.

''பண்ணாது பண்மேற்றேன் பாடுங் கழிக்கான
லெண்ணாது கண்டாருக் கேரணங்கா—மெண்ணாது

---

1. கருத்து: என் ஆண்தகை அண்ணலாகிய நண்பனை அறிவு தொலையுமாறு செய்த ஒன்று, கண் என மலரும் குவளையையும் அடியெனத் தாமரையையும் முலையெனக் கோங்க அரும்பையும் இடையென நுடங்கும் மின்னலையும் கொண்ட உருவத்தையுடைய இக் கொடி போலும்.

2. கருத்து: இவட்குக் கண் கொல்லிமலைச் சுனையிற் பூத்த நீலம்; பல்லானது பாண்டியனது கொற்கைத் துறையில் மணலில் கடலலை தந்த முத்து. நிறமானது தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனின் நலனழகு போன்ற மாந்தளிர். எனவே நீலம் கண்ணையும் முத்து பல்லையும் தளிர் உடம்பையும் பயந்தன என்றறியாதவர் இவள் நாம் பெற்றெடுத்த மகள் என்பர். என்னே மடமை.

சாவார்சான் றாண்மை திரிந்திலார் மற்றிவளைக்
காவார் கயிறுரீஇவிட் டார்[1] (திணைமாலை-47)

பாங்கன் தலைவனை வியந்தது.

"பூந்த ணிரும்புனத்துப் பூசல் புரியாது பூழியாடிக்
காந்தட் கமழ குலையாற் காதன் மடப்பிடி தன்
கவுள்வண் டோச்ச
வேந்தன் போனின்ற விறற்களிற்றை வில்லினாற்
கடிவார்தங்கை
யேந்தெழிலாக மியைா தியைந்த நோயியையும்
போலும்"[2]

இது, தலைவற்கு வருத்தந் தருமென அவனை வியந்தது.

"விம்முறு துயரமொடு வெந் நோயாகிய
வெம்முறு துயரந் தீரிய சென்ற
நான்மறை நவிற்றிய நூனெறி மார்பன்
கண்டனன் கொல்லோ தானே தண்டாஅ
புருவக் கொடுவிற் கோலிப் பூங்கட்
செருவப் பகழியிற் சேர்த்தழி வுறீஇ
யேத்தொழில் தொடங்கிஏ முறுத்தகன்ற
மடமா னோக்கிற் றடமென்றோளியைத்
தண்டழை ததும்பிய வின்னிழ லொரு சிறை
யுடனாடாயத்து நீங்கி
யிடனா நின்ற வேமுறு நிலையே"[3]

என்னுஞ் செய்யுளுங் கொள்க.

---

1. கருத்து: யாழினை மீட்டாமலேயே பண்மேற் சேரும் படி வண்டுகள் பாடும் கானலில் ஒன்றும் ஆராயாது வந்து காண்பவர்க்கே இவள் அழகிய தெய்வமாவாள். உலக வாழ்வை எண்ணாது இறைவனை நினைந்து சாவாரது உறுதிப் பாட்டிற்கும் மாறுபட்ட இவளைக் கொல்லேற்றைக் கயிறுருவி விட்டாற் போல இவள் உற்றார்கள் இங்கே ஆடவரைத் துன்புறுத்த விட்டார்கள்.

2. கருத்து: பிடியானையானது புனத்தில் போரின்றியே புழுதி படிந்த பூந்தளிரும் காந்தட் குலையும் கொண்டு களிற்றின் கன்னத்தில் உள்ள வண்டுகளை ஓட்ட வேந்தன் போல் நின்ற யானையை வில்லால் ஓட்டுப வரின் தங்கையானவளது எழில் ஆகத்தைப் பொருந்தாமையால் வந்த நோய் உடையை போலும்.

3. கருத்து: என் துயரைப் போக்குவதற்காகச் சென்ற நான்மறைவல்ல பாங்கன் புருவவில் வளைத்துக் கண்

இனிப் பாங்கன் தலைவி தன்மை தலைவற்குக் கூறுவனவும் இடங்காட்டுவனவுஞ் சான்றோர் செய்யுளுள் வரும் வழிக் காண்க. ஆண்டுச் சென்ற தலைவன் இடந்தலைப் பாட்டிற் கூறியவாற்றானே கூடுதல் கொள்க. அங்ஙனங் கூடிநின்று அவன் மகிழ்ந்து கூறுவனவும் பிறவுங் கொள்க.

''வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்''[1] (குறள்-1105)

எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோ
ளொண்ணுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே''[2]
(ஐங்குறு-175)

இது,பாங்கற் கூட்டங் கூடி நீங்குந் தலைவன் நீ வருமிடத்து நின் தோழியோடும் வரல் வேண்டுமெனத் தலைவிக்குக் கூறியது.

'' நெய்வளை ரைம்பா னேரிழை மாதரை
மெய்ந்நிலை திரியா மேதகு சுற்றமொ
டெய்துத லரிதென் றின்னணை மிரங்கிக்
கையறு நெஞ்சமொடு கவன்றுநனி பெயர்ந்தவென்
பைத லுள்ளம் பரிவு நீக்கித்
தெய்வத் தன்ன தெரியிழை மென்றோ
ளெய்தத் தந்த வேந்தலொ டெம்மிடை
நற்பாற் கேண்மை நாடொறு மெய்தல்
அப்பாற் பிறப்பினும் பெறுகமற் றெமக்கே''[3]

அம்பு சேர்ந்து நண்பனை அழிவுறச் செய்து அம்புப் போர்த் தொடங்கிய கண்ணையும் தோளையும் உடைய அவளை தழை நிறைந்த மர நிழலில் தோழியர் கூட்டத்தின் நீங்கி என் வருகைக்காக ஏமுற்று நிற்கும் நிலையைக் கண்டானோ?

1. கருத்து: பக்கம் 82ல் காண்க.

2. கருத்து: எனக்கு விரும்பி நின் நலத்தை இப்போது அருளினாய் என்றாலும் இனி நின் தோழியுடன் மெல்ல மெல்ல நடந்து வருக.

3. கருத்து: நெய் பூசப்பட்ட கூந்தலுடைய மாதரை நாம் அவள் சுற்றத்தாரிடத்திருந்து அடைதல் நமக்கு அரிது என்று வருந்திய நெஞ்சத்தோடு கவலைப்பட்டுப் பிரியும்

அங்ஙனங் கூடிநின்று தலைவன் பாங்கனை உண்மகிழ்ந்து உரைத்தது. இவன் பெரும்பான்மை பார்ப்பானாம். இத்துணையும் பாங்கற் கூட்டம்.

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்—அங்ஙனம் அவனைப் புணைபெற்று நின்ற தலைவன் தலைவிக்கு வாயிலாதற்கு உரியாரை யாராய்ந்து பலருள்ளுந் தலைவியாற் பேணப் பட்டாள் தனக்கு வாயிலாந் தன்மையையுடைய தோழியை அவள் குறிப்பினான் வாயிலாகப் பெற்று இவளை இரந்து பின்னிற்பலென வலிப்பினும்,

மறைந்து தலைவியைக் கண்டு நின்றான் அவட்கு அவள் இன்றியமையாமை கண்டு அவளை வாயிலெனத் துணியும்.

(உ-ம்):

''தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளுங்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகி
னாண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
செவ்வரிந் உறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே''[1]

(குறுந்-222)

இது, தலைவி அவட்கு இனையளென்று கருதி அவளை வாயிலாகத் துணிந்தது. அன்றித் தோழி கூற்றெனில் தலைவியை அருமை கூறினன்றி இக்குறை முடிப்பலென ஏற்றுக் கொள்ளாள் தனக்கு ஏதமாமென்று அஞ்சி; அன்றியுந் தானே குறையுறுகின்றாற்கு இது கூறிப் பயந்ததூஉமின்று.

''மருந்திற் றீராது மணியி னாகா
தருந்தவ முயற்சியி னகறலு மரிதே
தான்செய் நோய்க்குத் தான் மருந்தாகிய
தேனிமிர் நறவின் றேறல் போல

உள்ளத்தின் துயரைப் போக்கி நேரிழையாகிய அவளின் தோளை யான் அடையச் செய்த நண்பனொடு எனக்குள்ள நல்ல நட்பு நாடோறும் வாய்க்க அடுத்த பிறவியிலும் பெறுவேனாக.

1. கருத்து பக்கம் 88ல் காண்க.

நீதர வந்த நிறையழி துயரநின்
ஆடுகொடி மருங்குனின் னருளி னல்லது
பிறிதிற் றீரா தென்பது பின்னின்
றறியக் கூறுக மெழுமோ நெஞ்சே
நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டித்தன்
னாடுமழைத் தடக்கை யறுத்துமுறை நிறுத்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கையம் பெருந்துறை குனிதிரை தொகுத்த
விளங்கு முத்துறைக்கும் வெண்பற்
பன்மாண் சாயற் பரதவர் மகட்கே'',

என்னுஞ் செய்யுள் இரவு வலியுற்றது.[1]

ஊரும் பெயரும் கெடுதியும் பிறவும் நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித் தோழியைக் குறையுறும் பகுதியும்—தோழியை இரந்து பின்னிற்றலை வலித்த தலைவன் தலைவியுந் தோழியும் ஒருங்கு தலைப் பெய்த செவ்வி பார்த்தாயினும் தோழி தனித்துழியாயினும். நும்பதியும் பெயரும் யாவையெனவும் ஈண்டு யான் கெடுத்தவை காட்டுமினெனவும், அனையன பிறவற்றையும் அகத்தெழுந்ததோர் இன்னீர்மை தோன்றும் இக்கூற்று வேறோர் கருத்து உடைத்தென அவள் கருது மாற்றானும் அமையச் சொல்லித் தோழியைத் தன் குறை யறிவிக்கும்.

வினாவுவான் ஏதிலர் போல ஊரினை முன்வினாய்ச் சிறிது உறவு தோன்றப் பெயரினைப் பின் வினாய் அவ்விரண்டினும் மாற்றம் பெறாதான் ஒன்று கெடுத்தானாகவும் அதனை அவர் கண்டார் போலவும் கூறினான். இவன் எண்ணியதோர் குறையுடையனென்று அவள் கருதக் கூறுமென்பார் 'நிரம்ப' என்றார்.

கெடுதியாவன:- யானை, புலி முதலியனவும் நெஞ்சும் உணர்வும் இழந்தேன், அவை கண்டீரோவெனவும் வினாவுவன பலவுமாம்.

---

1. கருத்து: நெஞ்சமே! பொற்கைப் பாண்டியனின் கொற்கைத் துறையில் உள்ள முத்துப் போலும் பல்லும் சாயலும் உடையவளிடம் சென்று, நின்னால் எமக்குண்டான நோய் மருந்தால் தீராது மணியாலும் தீராது தவஞ் செய்தாலும் தீராது. தேனால் வந்த நோய்க்குத் தேனே மருந்தாவது போல நின்னால் வந்த வருத்தம் நீ யருளின் அல்லாமல் பிறிதொன்றால் தீராது என்று அவள் பின்னே நின்று அறியுமாறு கூறுவோம், எழுவாயாக.

'பிறவும்' என்றதனால் வழிவினாதலுந் தன்னொடு அவரிடை உறவு தோன்றற்பாலனவுங் கூறுதலுங் கொள்க.

(உ-ம்)

''அருவி யார்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெருங்பழங்
குழவிச் சேதா மாந்தி யயலது
வேய்பயி லிறும்பினா மறல் பருகும்
பெருங் கல்வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீ ராயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென வெழுந்த
செங்கே ழாடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனங் காவலு நுமதோ
கோடேந் தல்கு லீரோ ளீரே''[1]
(நற்றிணை-213)

இஃது ஊரும் பிறவும் வினாயது.

''கல்லுற்ற நோய்வருத்தக் காலு நடையற்றேன்
எல்லுற் றியானும் வருந்தினேன்—வில்லுற்ற
பூங்க ணிமைக்கும் புருவமதி முகத்தீர்
ஈங்கிதுவோ நும்முடைய வூர்''[2]

இஃது ஊர் வினாயது

''செறிகுர லேனற் சிறுகிளி காப்பீ
ரறிகுவே னும்மை வினாஅ—யறிபறவை

---

1. கருத்து: நீள் தோள் உடைய மகளிரே! ஊர்ப் பொது மன்றத்தில் உள்ள கன்றுகள் கட்டி வைக்கப்பட்டுள்ள பலா மர வேரில் பழுத்த பழச் சுளைகளைப் பசுக்கள் தின்று அருவி நீரைப் பருகும்படியான நுமது சிறுகுடி யாது என யான் வினவச் சொல்லுங்கள். சொல்ல வில்லை யென்றால் இத்தினைப் புனங் காவல் நுமதோ என்பதையேனும் சொல்லுங்கள்.

2. கருத்து: கல் தைத்ததால் நோய் உற்ற காலும் நடத் தலையற்றேன். இப்பகற்போதெல்லாம் யானும் சுற்றி வருந்தினேன். பூங்கண்ணும் மதிமுகமும் உடையீர் இங்குக் காணப்படும் இதுவா நம்முடைய ஊர்.

யன்ன நிகர்க்குஞ்சீ ராடமை மென்றோளி
ரென்ன பெயரிரோ நீர்''[1]

இது பெயர் வினாயது,

''நறைபரந்த சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு'',[2] (திணை மாலை-1)

''தங்குறிப்பி னோருந் தலைச்சென்று கண்டக்கா
லெங்குறிப்பி னோமென் றிகழ்ந்திரார்—நுங்குறிப்பின்
வென்றிபடர் நெடுங்கண் வேய்த்தோளீர் கூறீரோ
வன்றி படர்ந்த வழி''
வன்றி—பன்றி

''தண்டு புரைகதிர்த் தாழ்குரற் செந்தினை
மண்டுபு கவரு மாண்டகிளி மாற்று
மொண்டொடிப் பணைத்தோ ளொண்ணுத லிளையீர்
கண்டனி ராயிற் கரவா துரைமின்
கொண்டன குழுவி னீங்கி மண்டிய
வுள்ளழி பகழியோ டியங்கியோர்
புள்ளி மான்கலை போகிய நெறியே''[3]

இவை கெடுதி வினாயின.

''மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ''[4]
(அகம்-110)

---

1. கருத்து: நெருங்கிய கதிருடைய தினைப் புனம் காப்பவர்களே! அன்னப் பறவை ஒத்த நடைச்சீரையும் அசையும் மூங்கில் போலும் தோளையும் உடைய வர்களே! உங்களை ஒன்று கேட்டறிவேன் என்ன பெயருடையீர் நீங்கள்? கூறுக.

2. கருத்து: பக்கம் 90ல் காண்க.

3. கருத்து: தினைக்கதிரை யுண்ண வரும்கிளிகளை ஓட்டு கின்ற இளையவர்களே! தன் கூட்டத்தின் நீங்கி அம்பு பட்டவுடம்புடன் ஒரு மான் போன வழியைப் பார்த்தீ ராயின் கூறுமின்.

4. மெல்லிய பரந்த இலையில் நீவிர் இடும் உணவையுண்டு ஆரவாரமிக்க சிறு குடியில் தங்கினால் என்ன குறை வரும்?

"இல்லுடைக் கிழமை யெம்மொடு புணரிற்
றீது முண்டோ மாத ரீரே"

எனவும் வருவன 'பிறவும்' என்றதனாற் கொள்க.

குறையுறாஉம் பகுதி, குறையுறு பகுதி எனவுமாம்;[1]

எனவே, குறையுறுவார் சொல்லுமாற்றானே கண்ணி முதலிய கையுறையோடு சேறலுங் கொள்க. பகுதியென வரையாது கூறலில் தனித்துழிப் பகுதி முதலியனவும் இருவருமுள்வழி இவன் தலைப்பெய்தியுடையன் எனத் தோழி உணருமாறும் வினாவுதல் கொள்க. இவை குறையுறவுணர்தலும் இருவரு முள்வழி அவன் வரவுணர்தலுமாம். முன்னுறவுணர்தல் 'நாற்றமுந் தோற்றமும்' (114) என்புழிக் கூறும் மதியுடம்பாடு மூவகையவென மேற் கூறுப.

தோழி குறை அவட்சார்த்தி மெய்யுறக் கூறலும்—தோழி இவன் கூறுகின்ற குறை தலைவியிடத்தேயாய் இருந்ததென்று அவண் மேலே சேர்த்தி அதனை உண்மையென்று உணரத் தலைவன் கூறுதலும்

(உ-ம்)

"கருங்கட லுட்கலங்க நுண்வலை வீசி
யொருங்குடன் றன்னைமார் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாதர்
அணங்காகு மாற்ற வெமக்கு"[2]

"பண்பும் பாயலுங் கொண்டன டொண்டித்
தண்கமழ் புதுமலர் நாறு மொண்டொடி
யைதமர்ந் தகன்ற வல்குற்
கொய்தளிர் மேனி கூறுமதி தவறே[3] (ஐங்குறு–176)

இவை வெளிப்பட்டன. இவற்றின் வேறுபாடு உணர்க.

---

1. குறையுறாஉம்பகுதி - குறையை அறிவுறுத்தும் பகுதி (தோழி தாயர்க்கு அறிவுறுத்தல்) குறையுறு பகுதி-குறையுற்று நிற்கும் பகுதி (தலைவன் செயல்)

2. கருத்து: தன் தமையன்மார் கருங்கடலுட்புக்கு அது கலங்க வலைவீசிக் கொண்டுவந்த கொழுத்த மீன் உணங்கலைக் கவரவரும் புட்களை ஓட்டும் மாதரே எமக்கு மிகவும் அணங்காவாள்.

3. கருத்து : தொடியினையும் அல்குலையும் தளி

''குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சி லோதி யசையியற் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவ
டன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே[1]

(ஐங்குறு-299)

இஃது இருவரும் உள்வழி வந்த தலைவன் தலைவி தன்மை கூறவே இவள் கண்ணது இவன் வேட்கையென்று தோழி குறிப்பான் உணரக் கூறியது.

குன்றநாடன்—முருகன்—அவள் தந்தையுமாம்.

''உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுஞ் செவ்வாய்க் கமழகி
லார நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கட் கொடிச்சி
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே''[2]

(குறுந்-286)

இதுவும் அது.

இது முதலியவற்றைத் தலைவன் கூற்றாகவே கூறாது தோழி கூறினாளாகக் கூறி அவ்விடத்துத் தலைவன் மடன்மா கூறுமென்று பொருள் கூறின் 'நாற்றமும் தோற்றமும் (114) என்னுஞ் சூத்திரத்துத் தோழி இவற்றையே கூறினாளென்றல் வேண்டாவாம். அது கூறியது கூறலாமாகலின்.

தண்டாது இரப்பினும்-இடந்தலைப்பாடு முதலிய கூட்டங்களான் அமையாது பின்னும் பகற் குறியையும் இரவுக் குறியையும் வேண்டினும்.

ரன்ன மேனியையும் உடைய தோழியே! என் பண்பினையும் தூக்கத்தையும் தான் கொண்டு எனக்கு அவை இல்லையாம்படிச் செய்தாள் நின் தோழி அதற்கு யான் செய்த தவறு யாது?

1. கருத்து: மலைநாடன் மலையிற் சுனைக்கண் பூத்த குவளையானது கொடிச்சியின் கண்போல் மலர்தல் அரிது. மயிலுக்கும் இவள் சாயல்போல் அமைதல் அரிது.

2. கருத்து: முள் எயிறு செவ்வாய் அறல்போற் கூந்தல் மழைக்கண் ஆகியவற்றையுடைய கொடிச்சியின் மூரலை முறுவலையும் மதைய நோக்கத்தையும் இன்று நினைத்துப் பார்த்து மகிழ்வேன்.

(உ-ம்)

''கொண்டன் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோ லிணர பெருந்தண் சாந்தம்
வகைசே ரைம்பா றகைபெற வாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ணாய முவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கு நிலவுமணன் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
யருளினு மருளா ளாயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியன்மா நெஞ்சே யென்னதூஉ
மருந்துபிறி தில்லை யானுற்ற நோய்க்கே''[1]

(நற்றிணை-140)

இதில் பரிவிலாட்டியையென இரண்டாவது விரிக்க.

''கடுந்தே ரேறியுங் காலிற் சென்றுங்
கொடுங்கழி மருங்கி னடும்புமலர் கொய்துங்
கைதை தூக்கியு நெய்தல் குற்றும்
புணர்ந்தாம் போல வுணர்ந்த நெஞ்சமொடு
வைகலு மினைய மாகவுஞ் செய்தார்ப்
பசும்பூண் வேந்த ரழிந்த பாசறை
யொளிறுவே லழுவத்துக் களிறுபடப் பொருத
பெரும்புண் ணுறுநர்க்குப் பேஎய் போலப்
பின்னிலை முனியா நம்வயி
னென்னென நினையுங்கொல் பரதவர் மகளே''[2]

(நற்றிணை-349)

தோழி நம்வயிற் பரதவர்மகளை யென்னென நினையுங் கொலென்க.

---

1. கருத்து: நெஞ்சே! தந்தையின் நெடுந்தேர் வந்து போகும் மணல் முற்றத்தில் விளையாடிய பந்தோடு செல்லும் அன்பற்றவளாகிய தலைவியை இத்தோழி நமக்கு இரங்கி சேர்த்துக் குறைமுடிக்கினும் முடியாது விடினும் பெரிதும் வருந்தி இவள்பின் நின்று இரத்தலை வெறுக்காதே. ஏன் எனின் யான் உற்ற நோய்க்கு இவளையன்றி மருந்து பிறிது இல்லை.
2. கருத்து: நெஞ்சமே! தலைவிக்காக நாம் தேர் ஏறிச் சென்றும் உப்பங்கழியிடத்துள்ள அடும்ப மலர் பறித்துத் தொடுத்தும் தாழைமலர் எடுத்தும் நெய்தற் பூக்களைப் பறித்தும் நாளும் இப்படியே அவளைப் புணர்ந்தது போலும் மகிழ்வுடன் துன்புற்றுவரவும் தோழியானவள்

''பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப்பெய்
தாலொத்த வைவனங் காப்பாள்கண்—வேலொத்தென்
னெஞ்சம்வாய்ப் புக்கொழிவு காண்பா ளெவன்
கொலோ
வஞ்சாயற் கேநோவல் யான்''[1]
(திணை. மாலை. நூற்-19)

இவை பகற்குறி இரந்தன.

''எல்லு மெல்லின் றசைவுபெரி துடையன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண...வொருவன்[2]
(அகம்-110-112)

எனத் தலைவன் இரவுக்குறி வேண்டியதனைத் தோழி கூறிய வாறு காண்க. இன்னும் 'இரட்டுறமொழிதல்' என்பதனால் 'தண்டாது' என்பதற்குத் தவிராது இரப்பினுமெனப் பொருள் கூறிக் கையுறை கொண்டு வந்து கூறுவனவும், நீரேவுவனயான் செய்வேனெனக் கூறுவனவும், தோழி நின்னாற் கருதப் படுவாளை அறியேனென்றுழி அவன் அறியக் கூறுவனவும், பிறவும் வேறுபட வருவன வெல்லாம் இதன்கண் அடக்குக.

(உ-ம்)

''கவளக் களியியன்மால் யானைசிற் றாளி
தவழத்தா னில்லா ததுபோற்—பவழக்

இரங்காமையின் அதற்காக வெறுக்காமல் போர்க்களத் தில் புண்பட்டுக் கிடக்கும் வீரர்களை அவர்கள் உயிர் போமளவும் காத்து நிற்கும் பேய்கள்போல இத்தோழி தலைவியை நம்முடன் புணர்க்க முடிவுகொள்ளும் வரையிலும் அவளை இரந்து பின்னிற்றற்கு வெறுப்பில் லாமல் இருக்கும் நம்மிடம் தோழியானவள் பரதவர் மகளாகிய தலைவியைப் பற்றி என் என்று நினை வாளோ? நம்மிடம் சேர்க்க நினைவாளோ மாட் டாளோ.

1. கருத்து: பால் போன்ற அருவியில் ஆடிப் பலபூக்களை யும் கொண்டு வந்து பரப்பினாற் போலவுள்ள ஐவன நெல்லைக் கொண்ட புனத்தைக் காப்பவள்போலத் தன் வேல் ஒத்த கண்களை நெஞ்சுவழிப் புகுத்தி என் உயிர் போவதைக் காண வேண்டி உடம்பில் தங்குமாறு செய்தாள். அவள் மேனியின் சாயலுக்கே யான் மிக வருந்துவேன்.

2. கருத்து: பகலும் ஒளியிழந்தது. தளர்வு மிகவுடையேன் மெல்லிலையில் விருந்துண்டு சிறு குடியில் தங்கினென்ன குறைவரும்...என்றான் ஒருவன்.

கடிகை யிடைமுத்தங் காண்டொறு நில்லா
தொடிகை யிடைமுத்தந் தொக்கு''[1]

(திணைமாலை-42)

நின் வாயிதழையும் எயிற்றையுங் காணுந்தோறும் நில்லா என் கையிடத்தில் இருக்கின்ற பவளக்கொடியும் முத்தும் என்க.

''நறவுக்கம ழலரி நறவு வாய்விரிந்து
நிறந்திகழ் கமழு மிணைவாய் நெய்தற்
கண்ணித் தலையர் கருங்கைப் பரதவர்
நின்னைய ரல்லரோ நெறிதா ழோதி
யொண்சுணங் கிளமுலை யொருஞான்று புணரி
னுண்கயிற் றுவலை நுமரொடு வாங்கிக்
கைதை வேலி யிவ்வூர்ச்
செய்தூட் டேனோ செறிதொடி யானே''[2]

''அறிகவளை யைய விடைமடவா யாயச்
சிறிதவள்செல் லாளிறுமென் றஞ்சிச்—சிறிதவள்
நல்கும்வாய் காணாது நைந்துருகி யென்னெஞ்ச
மொல்கும்வா யொல்க லுறும்''[3]

எனவரும். (திணைமாலை-17)

மற்றைய வழியும்-குறியெதிர்ப் பட்டுங்கையுறை மறுக்கப் பட்டுங் கொடுக்கப் பெற்றும் இரந்து பின்னின்றான் அங்ஙனங்

---

1. கருத்து: இவளின் கையிடைப்பட்ட தொடிகளின் முத்துகள் திரண்டு இவளின் வாயிடையுள் முத்துகளை (பற்கள)ப் பார்க்குந் தோறும் புலிக்குட்டி நடைகற்பினும் அதற்கு எதிராக அஞ்சி நில்லாத கவளம் கொள்ளும் மதஇயல்புடைய பெரிய யானை போல நில்லாமல் தோற்கும்.

2. கருத்து: நெறிந்த தாழ்ந்த கூந்தலுடையாளே! கண்ணித் தலையரும் கருங்கைப் பரதவரும் நின் தமையன் மார் அல்லரோ? நின் இளமுலையுடையாளை ஒரு நாள் நான் புணரப்பெறின் அப்பரதவருடை வலை கொண்டு வீசி அதனால் வரும் வளம் கொண்டு நுங்களை உண்ணச் செய்ய மாட்டேனோ?

3. கருத்து: தோழியே. உண்டோ இல்லையோ என ஐயுறும் படியான இடையானது சிறிது அவள் நடவாளாயபோதே ஒடியும் ஒடியும் என அஞ்சும் என் நெஞ்சம். சிறிது அவள் எனக்கு அருள் செய்யும் இடம் காணாமல் நைந்து உருகி அவள் நடக்கும் போதெல்லாம் தான் தளர்ந்து வருந்துவதாயிற்று.

குறியெதிர்ப்பாடின்றி ஆற்றானாய் இரந்து பின்னிற்றலை மாறுமவ்விடத்தும்:

(உ-ம்)

''நின்செயல் செத்து நீபல வுள்ளிப்
பெரும்புன் பைதலை வருந்த லன்றியு
மலைமிசைத் தொடுத்த மலிந்து செனீத்தந்
தலைநாண் மாமலர் தண்டுறைத் தயங்கக்
கடல்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
றறல்வார் நெடுங்கயத் தருநிலை கலங்க
மாலிருள் நடுநாட் போகித் தன்னையர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்
கவ்வாங் குந்தி யஞ்சொற் பாண்மக
ணெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பிற் பல்வே லெவ்வி
நயம்புரி நன்மொழி யடக்கவு மடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத வன்னி போல
விளிகுவை கொல்லோ நீயே கிளியெனச்
சிறிய மிழற்றுஞ் செவ்வாய்ப் பெரிய
கயலென வமர்த்த வுண்கட் புயலெனப்
புறந்தாழ் பிருளிய பிறங்குகுர லைம்பான்
மின்னேர் மருங்குற் குறுமகள்
பின்னிலை விடாஅ மடங்கெழு நெஞ்சே''[1]

(அகம்-126)

எனவும்,

''மாய்கதில் வாழிய நெஞ்சே நாளு
மெல்லியற் குறுமக ணல்லக நசைஇ
யரவிரை தேரு மஞ்சுவரு சிறுநெறி
யிரவி னெய்தியும் பெறாஅ யருள்வரப்

---

1. கருத்து: மடநெஞ்சே! குறுமகளாகிய தோழியின் பின்னின்று இரத்தலை விடாது நீ துன்புற்று வருந்தலன்றியும், எவ்வி என்பான் நன்மொழி சொல்லவும் கேளானாகித் திதியனின் காவல் மரமாகிய புன்னையை வெட்ட விரும்பிச் சென்று போரிட்டு மாய்ந்த அன்னி என்பவனைப் போல நீ இறந்து படுவையோ.

புல்லென் கண்ணை புலம்புகொண் டுலகத்
துள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாகக்
காமங் கைம்மிக வுறுதர
வானா வரும்படர் தலைத்தந் தோயே''[1]

(அகம்–258)

எனவும் வருவன, தன்னெஞ்சினை இரவு விலக்கியன.

சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும் - தான் வருந்திக் கூறுகின்ற கூற்றினைத் தலைவியைச் சார்த்தித் தலைவன் கூறலின் இவ்வாறு ஆற்றானாய் இங்ஙனங் கூறினா னென்று அஞ்சித் தோழி உணராமல் தலைவிதானே கூடிய பகுதி யினும்,

''களஞ்சுட்டுக் கிளவி கிழவியதாகும்''

(தொல். பொ. கள. 29)

என்பதனால் தலைவியாற் குறிபெற்றுந் தோழியை இரக்கும்.

(உ-ம்)

''அயத்துவளர் பைஞ்சாய் முருந்தி னன்ன
நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வா
யாகத் தரும்பிய முலையள் பணைத்தோண்
மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயு மறியா மறையமை புணர்ச்சி
பூசற் றுடியிற் புணர்புபிரிந் திசைப்பக்
கரந்த கரப்பொடு நாஞ்செலற் கருமையிற்
கடும்புனன் மலிந்த காவிரிப் பேர்யாற்று
நெடுஞ்சுழி நீத்த மண்ணுநள் போல
நடுங்கஞர் தீர முயங்கி நெருந
லாக மடைதந் தோளே வென்வேற்
களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
யொளிறுநீ ரடுக்கத்து வியலகம் பொற்பக்

---

1. கருத்து: நெஞ்சமே! நாளும் குறுமகளது மார்பை விரும்பி இரவில் பாம்பும் இரைதேடும் சிறுவழியில் வந்து குறியிடம் சேரினும் அவள் வருதலைப் பெறாய் ஆயினை. புல்லென்ற கண்ணுடையையாய்த் தனிமை கொண்டு உலகத்தார்க்கெல்லாம் நகையாகக் காமம் நமக்கு அளவு கடக்கத் துயரந்தந்தாள் அவள். என் செய்வது இனி இரவில் வாரற்க நின் துயர் மாய்க. வாழி.

கடவு ளெழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே''[1] (அகம்-62)

''அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கிள ணுணங்கிடைப்
பொங்கரி பரந்த வுண்க
ணங்கலிழ் மேனி யசைஇய வெமக்கே''[2]
(ஐங்குறு-174)

எனவரும்.

'வகை' என்றதனானே இதனின் வேறுபட வருவனவுங் கொள்க.

''தளிர்சேர் தண்டழை தைஇ நுந்தை
குளிர்வாய் வியன்புனத் தெற்பட வருகோ
குறுஞ்சுனைக் குவளை யடைச்சி நாம் புணரிய
நறுந்தண் சார லாடுகம் வருகோ
வின்சொன் மேவலைப் பட்டவெ னெஞ்சுணக்
கூறினி மடந்தைநின் கூரெயி றுண்கென
யான்றன் மொழிதலின் மொழியெதிர் வந்து
தான்செய் குறிநிலை யினிய கூறி
யேறுபிரி மடப்பிணை கடுப்ப வேறுபட்
டுறுகழை நிவப்பிற் சிறுகுடிப் பெயருங்

---

1. கருத்து: கொல்லிப் பாவை போலும் மாயோளாகிய தலைவி தன்னுடன் கொண்ட பேயுமறியாத மறைந்த புணர்ச்சியை ஊரவர் கூடியும் தனித்தும் அலரெழுப்புவதால் இனி அவ்வொழுக்கத்தில் நாம் செல்லற்கு அரிதாகிய காரணத்தால் அது நினைந்து காவிரி வெள்ளத்தில் படிந்து குளிப்பவள் போல் என் மார்பில் நேற்றுக் கிடந்தனள். இன்று அல்லகுறிப்படலாயிற்று. இது தலைவன் அல்லகுறிப்பட்ட வழித் தன் நெஞ்சுக்குக் கூறியது.

2. கருத்து: தெய்வம் உடைய குளிர்ந்த துறையுடைய தொண்டி நகரில் மணம்கமழ் சோலையில் அணியினையும் உண்கண்ணினையும் விளங்கு மேனியையும் உடைய இவள் தன்னையடைய விரும்பி மெலிந்துள்ள எனக்குத் தன்னைக் கூடுதற்குரிய இடம் இது எனக் குறித்தாள். இனிச் சென்று கூடுவேனாக.

கொடிச்சி செல்புற நோக்கி
விடுத்த நெஞ்சம் விடலொல் லாதே''[1]
(நற்றிணை-204)

''இரண்டறி கள்விநங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நண்ணுற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சார்ந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
யமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே''.[2]
(குறுந்-312)

எனவரும்.

அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கிற் கேடும் பீடுங் கூறலும்—மதியுடம்பட்ட தோழி நீர் கூறிய குறையை யான் மறந்தேனெனக் கூறுமாயின், அவ்விடத்துத் தன்னொடு கூடாமையால் தலைவி மருங்கிற் பிறந்த கேட்டையும் அவள் அதனை ஆற்றியிருந்த பெருமையையுங் கூறுதலும்,

(உ-ம்)

''ஒள்ளிழை மகளிரோ டோரையு மாடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் புனையாய்

---

1. கருத்து: மடந்தையே! யான், நின் தந்தையின் கிளிகடி கருவியால் காக்கப்படும் தினைப் புனத்து பகல் மறையும் போது வரலாமா? முன்னே புணர்ந்த மலைச் சாரலில் மீளவும் விளையாட வரலாமா? நின் எயிற்றைச் சுவைப்பேன் என்று நான் அவளிடம் கூறவே, அவள் தான் குறித்த குறியிடம் என்னை அழைத்து வந்து நாளை கூடலாம் என்ற இனிய சொல்லைக் கூறி ஆணைப் பிரியும் பெண் மான் போல் சென்றவளின் புறம் பார்த்து நின்ற நெஞ்சமே! வந்து அவளை அப்போதே கூடியிருக்க வேண்டாவோ? விடலாமோ!

2. கருத்து: நெஞ்சே! நம் காதலி மாறுபட்ட இரண்டு நடத்தையுடைய கள்வியாவாள். ஒன்று நள்ளிரவில் மணம் கமழ நம்பால் வந்து பயிலுங்கால் முகத்தால் விரும்பி இனிது நோக்குவாள். காலையில் தம்மவரோடு பயிலுங்கால் நம்மைக் காண்புழி ஏதிலாள் போல விரும்பா முகத்தாளாகி நோக்குவள். இது மற்றொன்று.

விரிபூங் கானலொரு சிறை நின்றோ
யாரை யோநிற் றொழுதனம் வினவுதுங்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பி னமர்ந்துறை யணங்கோ
விருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை யென்றனெ னதனெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லித முண்கணும் பரந்த வாற்பனியே''.[1]

(நற்றிணை-155)

''தண்டழை செரீஇயுந் தண்ணெனை வுயிர்த்துங்
கண்கலுழ் முத்தங் கதிர்முலை யுறைத்து
மாற்றின ளென்பது கேட்டன மாற்றா
வென்னினு மவளினு மிகந்த
வின்னா மாக்கட்டிந் நன்ன ரூரே''[2].

''தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் றொண்டி யன்னவெற்
கண்டு நயந்துநீ நல்காக் காலே''[3]

(ஐங்குறு-178)

என வரும். அயர்த்தது அவள் அருமை தோன்றுதற்கு.

தோழி நீக்கலினாகிய நிலைமையும் நோக்கி—தோழி இவ் விடத்துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்பட நிறுத்தலிற் றனக்கு உண்டாகிய வருத்தத்தையும் பார்த்து,

உம்மை:- சிறப்பு. இதுவே மடன்மா கூறுதற்கு ஏதுவாயிற்று.

''நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல

---

1. கருத்து: பக்கம் 67-ல் காண்க.

2. கருத்து: தழை செருகியும் பெருமூச்சு விட்டும் முலையில் கண்ணீர்த் துளிகளை யுறைத்தும் இப்படியாத் தன் துயரை ஆற்றினள் என்பதைக் கேட்டோம். துயரைத் தாங்க முடியாத என்னிலும் அவளினும் நீங்கிய கொடிய மக்களையுடையது இந்த நல்ல ஊர்.

3. கருத்து: பக்கம் 91ல் காண்க.

வுள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
யரிதயர் வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
வகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே''[1]
(குறுந்-29)

''பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவ
ளுருத்தெழு வனமுலை யொளிபெற வெழுதிய
தொய்யில் காப்போ ரறிதலு மறியார்
முறையுடை யரசன் செங்கோல் வையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
வளிதோ தானே யிவ்வழுங்க லூரே''[2] (குறுந்-276)

'' உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
துருக்கங் கமழு மென்றோள்
துறப்ப வென்றி யிறீஇயரென் னுயிரே''[3]
(சிற்றட்டகம்)

மடன்மா கூறும் இடனுமாருண்டே – அச் சேட்படையான் மடலேறுவலெக் கூறும் இடனும் உண்டு என்றவாறு.

நோக்கி மடன்மா கூறுமென்க. உம்மையான் வரைபாய் வலெனக் கூறும் இடனும் உண்டென்றவாறு,

(உ-ம்)

''விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி

---

1. நெஞ்சமே! மழை நீரை ஏற்ற பசுமட் கலம் போல உள்ளம் தாங்கலாற்றாத ஆசை வெள்ளத்தில் நீந்தி நின்னால் பெறற்கரிய ஒன்றினை புகழ் நீங்கிப் பழி பரவுமாறு பெற விரும்புகின்றனை. அதற்குப் போராடவும் செய்கிறாய். அப்போராட்டம் நின் குறையை மரத்துள்ள மந்தி குட்டியை மார்புறத் தழுவிக் கொள்ளுமாறு போல மனம் கொளக் கேட்குநரைப் பெறுவையாயின் மிக நன்றாம்.

2. கருத்து பக்கம் 92-ல் காண்க.

3. கருத்து: உரைப்பாயாக, தோழீ! நீ சொல்வது சிறந்த தன்று. என் தோளை அவர் துறப்பர் என்றாய், அத னால் என் உயிர் போவதாக.

வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
யொருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிழ்கவி ரசைநடைப் பேதை
மெலிந்தில ணாம்விடற் கமைந்த தூதே''[1]

(குறுந்-122)

இது நெஞ்சொடு கிளத்தல்.

''நாணாக நாறு நனைகுழலா ணல்கித்தன்
பூணாக நேர்வளமும் போகாது—பூணாக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து[2]

(திணைமாலை-16)

இது தோழிக்குக் கூறியது. இவை சாக்காடு குறித்தன.

''மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே''[3]

(குறுந்-17)

இதனுட் 'பிறிதுமாகும்' என்றது வரைபாய்தல்.

---

1. கருத்து: நெஞ்சமே! தலைவி நம் நிலை கண்டு சிறிதும் உளம் நெகிழ்ந்தாள் இல்லை. நம் குறை முடிக்க அவள்பால் செலுத்திய தூதோ (தோழியோ) என்றால் நம்மை பனைமடலாலாகிய குதிரைக்கு மணியும் மாலையும் பூட்டி யாம் எலும்பு மாலையணிந்து கொண்டு பிறர் இகழ அக்குதிரைமேல் தோன்றி ஒரு நாள் மட்டும் நாணத்தை விட்டுத் தெருவில் திரியும் படித் தூண்டுகிறது. யாம் மடலேறாது என் செய் வோம்.

2. கருத்து:நாகமலர் நாறும் கூந்தலாள் என்மேல் இரங்கித் தன் அணி மார்பகத்தைத் தர நேர்ந்தாலல்லாமல் என் மார்பில் உள்ள எலும்பு மாலையணி நீங்காது. தெருவில் மனம் ஒத்து மடல் மாமேல் நின்றேன். இனி இரண்டாவதாகச் சொல்வது ஒன்றுண்டோ? இல்லை.

3. கருத்து: காமம் காழ் கொள்ளுமானால் பனைமடலைக் குதிரையாகக் கொண்டும் செலுத்துவர். மாலை என்ற பெயரில் எருக்கம்பூ மாலையைச் சூடுவர். தெருவில் நின்று பிறரால் தூற்றி ஆரவாரிக்கவும்படுவர். தம் எண்ணம் நிறைவேறவில்லையெனின் சாதலும் செய்வர்.

'இடன்' என்றதனால் தோழி பெரியோர்க்குத் தகாதென்ற வழித் தலைவன் மறுத்துக் கூறுவனவும் பிறவும் வேறுபட வருவனவும் கொள்க.

''நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடை
யேன்
காமுற்றா ரேறும் மடல்[1] (குறள்-1133)

இனி, 'இடனும்' என்ற உம்மையைப் பிரித்து நிறீஇ இருநான்கு கிளவியும் மகிழ்ச்சியுங் கலங்கலுங் கூறும் இடனும் உண்டு, உரைப்பினும், பெட்பினு, மூவப்பினு மிரப்பினும் வகையினுங் கூறும் இடனும் உண்டு. பகுதிக் கண்ணும் மற்றைய வழிக் கண்ணுங் கூறும் இடனும் உண்டு. மெய்யுறக் கூறலும் பீடுங் கூறலும் உண்டெனை முடிக்க.

சிவ.

இச் சூத்திரம் தலைவன் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துக் கூறுகின்றது. இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம் பாங்கியற் கூட்டம் எனும் நான்கு இடங் களிலும் தலைவன் வெளிப்படையாகக் கேட்போர் முன்னிலை யில் கூறும் கூற்றுகள் அவை.

மெய்தொட்டுப் பயிறல்முதல் கூடுதலுறுதல் ஈறாக உள்ளன இயற்கைப் புணர்ச்சியில் நிகழ்வன. முன்னர்த் தெளிவகப் படுத்திய தலைவன் உடன் புணர்ச்சி பெறானாயின் மெய் தொட்டுப் பயிறல் முதல் கூடுதலுறுதல் இறுதியாகக் கூற்று நிகழ்த்தித் தலைவியைக் கூடுவான். இவை இயற்கைப் புணர்ச்சி முன்னர் நிகழும் கூற்றுகளாம். தெளிவகப்படுத்திய நிலை யிலேயே இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்ததாயின் மெய் தொட்டுப் பயிறல் முதல் கூடுதல் உறுதல் வரையுள்ளன யாவும், இயற்கைப் புணர்ச்சி பெற்ற தலைவி உடன் பிரிய நேரும்போது அவள் உள்ளம் பிரிவுபற்றி எண்ணி அங்கேயே தடுமாறும்போது தலைவன் அஃதுணர்ந்து அவற்றால் கூற்று நிகழ்த்தித் தெளிவிப் பன். எனவே மெய்தொட்டுப் பயிறல் முதலிய ஆறும் இயற்கைப் புணர்ச்சி நிகழும் நாளிலேயே முன்னரும் பின்னருமாக நிகழ்வன எனக் கொள்ளல் வேண்டும்.

---

1. கருத்து: முன்னெல்லாம் நாணமும் நல்ல ஆண்மையும் உடையனாய் இருந்தேன். இன்றோ ஒருவர்பால் காமம் கொண்டார் ஏறும் மடலையுடையனானேன்.

சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதலும் தீராத் தேற்றமும் இடந்தலைப்பாட்டுக்குரியன.

இனி மெய் தொட்டுப் பயிறல் முதல் தீராத் தேற்றம் ஆகியவற்றைத் தொகைக் கொடுத்துப் 'பேராச் சிறப்பின் இரு நான்கு கிளவியும்' என்றமையால் அவ்வெட்டுமே ஒரு கூட்டத்துக்குரியன எனக் கொள்ளின் இடந்தலைப்பாடு என்னும் ஒன்றற்கேயுரியன என்னலும் ஆம். அப்படியாயின் அவ்வெட்டும் இரண்டாம் நாள் இடந்தலைப் பாட்டிற்கேயுரியன என்னலாம். இங்கோர் ஐயம் எழும். அதாவது இயற்கைப் புணர்ச்சியில் கூடினார் இருவரும் புணர்ந்தவுடனேயே யாதோர் கூற்றும் இன்றிப் பிரிந்தனரா என்பது அது. அதனால் மெய்தொட்டுப் பயிறல் முதலிய ஆறும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த அப்பொழுதே நிகழ்வன எனக் கொள்வதே சிறக்கும்.

இனி இயற்கைப் புணர்ச்சி முடிந்து பிரிவு நேரும்போது தலைவிக்கு வரும் ஐயம் நீக்க வேண்டித் தலைவன் செய்யும் சூளுறவுக்கு இடம் யாதெனின் கூடுதல் உறுதல் என்பதைக் கொள்ளலாம். பிரியேன் தரியேன் எனக் கூறி மீண்டும் கூடுதற்குச் சூளுறவு கொள்ளும் என்ற கருத்திலேயே கூடுதலுறுதல் அமைந்தது என்னலாம்.

தீராத் தேற்றம் சூளுறவாகும் என நச்சினார்க்கினியர் கொண்டதில் இடந்தலைப்பாட்டில்தான் சூளுறவு நிகழும் என்பதாக அமைந்தது. அதனினும் இயற்கைப் புணர்ச்சி முடிந்த பின்னர் அப்போதே சூளுறவு நிகழ்ந்ததாகக் கொள்வதே முறை.

100. **பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்**
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக்கு இயல்பே (12)

ஆ. மொ.

இல.

If the lover is advised to cease from his loving on account of any reason in a polite manner, if he is pining on account of the intense love, if 'tholi' laughs at him

joyfully, if he finds pleasure in having his lady-love and if he meets her unexpectedly on the way, the act of expression may take place (on his part)

இளம்.

என்—எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ-ள்) : மேல் தலைமகன் 'மடல்மா கூறும் இடனுமா ருண்டே' என்றார். இஃது அவன் மடல்மா கூறுதற்கு நிமித்த மாகிய நீக்கத்தினை மாறுபட்டுக் கூறாத் தலைமகள் இயல்பைக் கூறிப் பெயர்ப்பினும், அஃதறிந்து தாம் உடன்படத் தலைமகன் வருத்தத்தினான் மெலிகின்றமை கூறிய இடத்தினும் தலைமகன் குறையை மறுப்புழி அன்பு தோன்ற நக்க இடத்தும், தோழி உடன்பாடுற்றவழியும் தலைமகனும் மேற் சொல்லப்பட்ட மடல்மா கூறுதல் இடையூறுபடுதலும் தோழியிற் கூட்டத்திற்கு இயல்பு என்றவாறு.

. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை[1]

பண்புறப் பெயர்ப்பினும்—தலைமகள் இளமைப் பண்பு கூறிப் பெயர்த்த வழித் தலைமகன் கூறியது. அதற்குச் செய்யுள்:

''குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி
வளையள் முளைவாள் எயிற்றள்
இளைய ளாயினும் ஆரணங் கினளே''[2]

(ஐங்குறு-256)

பரிவுற்று மெலியினும்—பரிந்த வுள்ளத்துடன் மெலிதலுறு தலும். பரிவுற்றுத் தோழி மெலிதலாவது 'உடம்படுவளியாள்'[3] என்றாற்போல வருவது.

---

1. ஆற்றிடையுறுதலும் என்பதில் உள்ள உம்மை முன் சூத்திரத்திலுள்ள மடன்மா கூறுதலைத் தழுவுதலின் இறந்தது தழீஇய எச்சவும்மை.
2. மடமகள் கொடிச்சி இளையளாயினும் என்னை மிக வருத்தினாள் எனத் தலைவன் கூறியது தோழி தலைவி யின் இளமைப் பண்பு கூறியபோது அதை மறுத்துக் கூறியதாம்.
3. உடம்படு அளியாள் — கூட்டத்துக்கு உடன்படுத்து மாறு இரங்கத் தக்கவள். பரிந்த உள்ளத்துடன் மெலிது லாவது-தோழி தலைவனின் இரந்து பின்னிற்றலுக் கிரங்கித் தன் எண்ணத்தில் நெகிழ்தல். அதாவது கூட்டு விக்க உடன்படல்-முன்னர் நீக்கி நிறுத்தும் எண்ணத்தி லிருந்தவள் அதனின் மெலிதல் (—நெகிழ்தல்)

அவ்வழித் தலைமகன் கூற்று;

''தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்குந் துயர்.''[1]

(குறள்—1135)

அன்புற்று நகினும்—அன்பு தோன்றும் உள்ளத்துடன் நக்க காலும் கூற்று நிகழும். அன்புற்று நக்கவழித் தலைமகன் கூறிய தற்குச் செய்யுள்:—

''நயனின் மையிற் பயனிது என்னாது
பூம்பொறிப் பொலிந்த அழலுமிழ் அகன்பைப்
பாம்புயிர் அணங்கி யாங்கும் ஈங்கிது
தகாஅது வாழியோ குறுமகள் நகாஅது
உரைமதி யுடையுமென் உள்ளஞ் சாரல்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த ஆயிழை மழைக்கண்
உறாஅ நோக்க முற்றவென்
பைதல் நெஞ்சம் உய்யு மாறே.''[2]

(நற்றிணை—75)

அவட்பெற்று மலியினும்—தோழி உடம்பாட்டினைப் பெற்று மகிழ்தல். இரட்டுற மொழிதலான் தலைமகளை இரு வகைக் குறியினும் பெற்று மகிழினும் என்றும் கொள்க.

---

1. (இவ் ஆற்றாமையும் மடலும் நுமக்கு எவ்வாறு வந்தன என்றாட்குச் சொல்லியது) மாலைப் பொழுதின் கண் அனுபவிக்கும் துயரினையும் அதற்கு மருந்தாய மடலி னையும் முன் அறியேன்; இப்பொழுது எனக்கு மாலை போலத் தொடர்ந்த சிறு வளையினை யுடையாள் தந்தாள்.

2. கருத்து: குறுமகள் (தோழீ)! நின்னிடம் இரக்கம் இன்மையால் இன்னபடிச் சொல்வது பயன் எனக்கருதா மல் பாம்பு கடித்ததுபோல என்னை நகைத்துக் கூறியது தகாது. நீ நகைத்து உரைப்பதால் என் நெஞ்சம் உடை யும். ஆயிழையின் கருங் கண்களின் பொருந்தாத பார்வையுற்ற என் நெஞ்சம் துன்புறுதலின் நீங்கி உய்யுமாறு நகையாடாது என் குறை நேர்ந்து நல்லன கூறுக.

(உ-ம்)

"எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோள்
நன்னுதல் அரிவையொடு மென்மெல இயலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே"[1]
(ஐங்குறு-175)

இது அவட் பெற்று மலியுந் தலைவன் கூற்று.

இனி, உள்ளப் புணர்ச்சியானின்றி யியற்கையிடையீடுபட்டுழி, பின் தலைமகள் குறியிடங் கூறியவழி யதனைப் பாங்கற் குரைத் தற்குச் செய்யுள்:

"அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கினள் நுணங்கிழைப்
பொங்கரி பரந்த உண்கண்
அங்கலிழ் மேனி அசையியல் எமக்கே"[2]
(ஐங்குறு-174)

எனவுஞ் சிறுபான்மை வரும்.

" காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று"[3]
(குறள்-1114)

இது தலைவியைப் பகற்குறிக்கண்பெற்று மலிதல்.

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்"[4] (குறள்-1116)

இஃது இரவுக்குறிக்கண் தலைவன் அவட்பெற்று மலிந்தது.

---

1. கருத்து: பக்கம் 109-ல் காண்க.
2. கருத்து: பக்கம் 121-ல் காண்க.
3. கருத்து: குவளை மலரானது இவள் கண்ணைக் காணின் ஒவ்வேம் என்று தான் கவிழ்ந்து நிலத்தைப் பார்க்கும்.
4. கருத்து: மீனானது மதியையும் மடந்தை முகத்தையும் பார்த்து உண்மையறியாமல் தானிருந்த விடத்திலேயே கலங்கிக் கிடந்தது.

''மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி''[1] (குறள்-1118)

என்பதும் அது.

ஆற்றிடை உறுதலும்—தான் சேறும் ஆற்றிடை இடையூறு உண்டாய விடத்தும் கூற்று நிகழும். இரட்டுற மொழிதலான் வரைவிடை வைத்துப் பிரிந்தான் தான் சேறும் ஆற்றின் கண் வருத்தமுற்றுக் கூறலும் கொள்ளப்படும்.

''குருதி வேட்கை உருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவின் நாள்மேயல் ஆரும்
மாரி எண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருதல் எவனெனப் பலபுலந்து
அழுதனை உறையும் அம்மா அரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி அன்னநின்
ஆய்நலம் உள்ளி வரினெமக்கு
ஏமம் ஆகும் மலைமுதல் ஆறே''[2]
(நற்றிணை-192)

இந் நற்றிணைப் பாட்டு தலைவி ஆற்றினது அருமை செப்பத் தலைவன் செப்பியது.

---

1. கருத்து: ஏ மதியே! இப் பெண்ணின் முகம்போல ஒளிவிட ஆற்றல் உடையையானால் நீயும் ஒருவரால் காதவிக்கப்படுவாய்

2. கருத்து: புலிகள் யானைகளைக் கொல்லத் திரிந்து கொண்டிருப்பதும் பூழியர் நிலத்து ஆடுகள் மேய்வது போலக் கரடிகள் வைகறையில் மேய்ந்து கொண்டிருப்பதும் ஆகிய மலைச் சாரல் வழிகளில் நீ என்னை விரும்பி வருவதுஎன்னை என்று அழுது தங்கும் அரிவையே! கொல்லி மலையின் மேற்குப் பகுதியில் தெய்வத்தால் புனையப்பட்ட பாவையானது இள வெயிலில் தோன்றினாற் போல ஒளிதரும் நின்மெய்யை நினைத்து வந்தால் அம்மெய்யின் ஒளியே மலைச் சாரல் வழிக்குத் துணையாகும். ஆதலின் வழியருமை கருதி வருந்தாதே.

''ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையினம் ஆரும் முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே''[1]

(குறுந்-235)

இக் குறுந்தொகைப் பாட்டு தலைவன் வரைவிடை வைத்துச் சேறுவான் கூறியது.

நச்.

இதுவும் இரந்து பின்னிற்புழித் தலைவன் கூற்று நிகழுமாறு கூறுகின்றது.

(இ—ள்): பண்பிற் பெயர்ப்பினும்—தோழி தலைவியது இளமை முதலிய பண்பு கூறி அவ்வேட்கையை மீட்பினும்;

(உ-ம்)

''குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்ற
ளிளைய ளாயினு மாரணங் கினளே''[2]

(ஐங்குறு-256)

இஃது இளையளெனப் பெயர்த்துழித் தலைவன் கூறியது.

பரிவுற்று மெலியினும்—இருவகைக் குறியிடத்துந் தலைவியை எதிர்ப்படும் ஞான்றும் (எதிர்ப்பட்ட ஞான்றும் எதிர்ப்படா நின்ற ஞான்றும்) பலவாயவழி அவன் பரிந்த உள்ளத்தனாய் மெலியினும்.

---

1. கருத்து: வாடை காற்றே நெல்லிக் கனியை மான் கூட்டம் அருந்தும் முற்றத்தையுடைய சிறு வீட்டை யுடையோளது நல்ல ஊர் பாம்பின் தோல் தொங்குவது போல் கிடந்தொழுகும் அருவியையுடைய மலை யிடத்ததுவாகும்.

2. கருத்து: பக்கம் 128-ல் காண்க.

(உ-ம்)

"ஆனா நோயொ டழிபடர்க் கலங்கிக்
காமம் கைம்மிகக் கையறு துயரங்
காணவு நல்கா யாயிற் பாணர்
பரிசில் பெற்ற விரியுளை நன்மான்
கவிகுளம்பு பொருத கன்மிசைச் சிறுநெறி
யிரவலர் மெலியா தேறும் பொறைய
னுரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயி
னகலிலைக் காந்த ளலங்குலைப் பாய்ந்து
பறவை யிழைத்த பல்க ணிறாஅற்
றேனுடை நெடுவரைத் தெய்வ மெழுதிய
வினைமாண் பாவை யன்னோள்
கொலைசூழ்ந் தனளா னோகோ யானே"[1]

(நற்றிணை-185)

இது பகற் குறியிற் பரிவுற்றது.

"ஓதமு மொலியோ வின்றே யூதையுந்
தாதுளர் கானற் றவ்வென் றன்றே
மணன்மலி மூதூ ரகனெடுந் தெருவிற்
கூகைச் சேவல் குராலொ டேறி
யாரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழறு
மணங்குகால் கிளரு மயங்கிரு ணடுநாட்
பாவை யன்ன பலராய் வனப்பிற்
றடமென் பணைத்தோண் மடமிகு குறுமகள்
சுணங்கணி வனமுலை முயங்க லுள்ளி

---

1. கருத்து: பாங்கனே! பொறையனின் கொல்லிமலை மேற்கே தேன்கூடுகளையுடைய அடுக்கத்தில் தெய்வம் செய்து வைத்த பாவை போல்வாள் என்னைக் கொல்லச் சூழ்ந்தாள். அதனால் பொறுக்க முடியாத துன்பத்தைத் தாங்கிக் காமம் மிகவும் செயலற்ற துயரம் யான் உற்றதைக் கண்டும் காணாதாய் போல அவளைச் சேர்த்து வைக்காயானால் நான் என் செய்வேன். இப்படி அமைந்த ஊழ்வினையையே யான் நோவேன்.

மீன்கண் டுஞ்சும் பொழுதும்
யான்கண் டுஞ்சேன் யாதுகொ னிலையே''[1]

(நற்றிணை-319)

இஃது இரவுக் குறியிற் பரிவுற்றது.

''மழைவர வறியா மஞ்ஞை யாலு
மடுக்க னல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
யாந்த னுள்ளுபு மறந்தறி யேமே''[2] (ஐங்குறு-298)

''களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது''[3] (குறள்-1145)

எனவும் வரும்.

இன்னும் 'பரிவுற்று மெலியினும்' என்றதனானே புணர்ந்து நீங்குந் தலைவன் ஆற்றாது கூறுவனவும், வறும்புனங் கண்டு கூறுவனவும், இற்செறிப்பறிவுறுப்ப ஆற்றானாய்க் கூறுவனவும், தோழி இற்புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொளீஇக் கூறுவனவும், இரவுக் குறிக்கண் வருகின்றான் தலைவியை ஐயுற்றுப் பாங்கற்குக் கூறுவனவும், பிறவும் வேறுபட வருவன வெல்லாம் இதன் கண் அமைக்க.

''என்று மினிய ளாயினும் பிரித
லென்று மின்னா ளன்றே நெஞ்சம்

---

1. கருத்து: இருள் மயங்கிய நள்ளிரவில் கடலும் ஒலியடங்கியது; ஊதைக் காற்றும் 'தௌ' என ஒலியடங்கியது. சதுக்கங்களில் கூகையானது தன் பெடையுடன் கூடி அச்சம் தோன்றக் குழறும். பேய்களும் நடமாடும். இப்படிப்பட்ட நேரத்தில் குறுமகளின் முலையை முயங்க எண்ணி மீன் கண் உறங்கும் இரவெல்லாம் யான் கண் உறங்கவில்லை. எந்நிலை யாதாகுமோ? அறியேன்.

2. கருத்து: மழை வரவறிந்து அகவும் மயில் வாழும் மலையடுக்கத்து நல்ல ஊரில் உள்ள கொடிச்சியானவள் தான் எனக்கு அருளாளாயினும் யான் அவளை நினைத்து மறந்தேனில்லை.

3. கருத்து: காமம் அலரால் வெளிப்பட இனியதாதல் கள்ளுண்பவர் அதனை யுண்டு மயங்க மயங்க அக் கள்ளுண்டலையே விரும்பினாற் போலும்.

பனிமருந்து விளைக்கும் பருஉக்க ணிளமுலைப்
படுசாந்து சிதைய முயங்கும்
சிறுகுடிக் கானவன் பெருமட மகளே''[1]

''கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
யாடா வடகினுங் காணேன்போர்—வாடாக்
க்ருங்கொல்வேன் மன்னர் கலம்புக்க கொல்லோ
மருங்குல்கொம் பன்னாண் மயிர்''[2]
(திணைமாலை-4)

''பெறுவ தியையா தாயினு முறுவதொன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே திண்டேர்க்
கைவள ரோரி கானந் தீண்டி
யெறிவளி கமழு நெறிபடு கூந்தன்
மையீ ரோதி மாஅ யோள்வயி
னின்றை யன்ன நட்பி னிந்நோ
யிறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறினே''[3] (குறுந்-199)

''நோயு மகிழ்ச்சியும் வீடச் சிறந்த
வேய்வனப் புற்ற தோளை நீயே
யென்னுள் வருதியோ வெழினடைக் கொடிச்சி

---

1. கருத்து: நெஞ்சமே! சாந்தம் சிதைய முயங்கும் கானவன் மடமகள் முயங்குங்கால் என்றும் இனியளாயினும் பிரியுங்கால் என்றும் இன்னாதவளே யாவள்.

2. கருத்து; மாறன் மதுரை யன்ன தலைவியை விளையாட்டிடத்தும் காணேன். அவள் மயிர்கள் வளர்ந்து திரண்டு மன்னர் முடியாகப் போயினவோ. இதில் அடா அடகு-சமையல் பெறாத கீரை-அது பண்ணைக் கீரை. பண்ணை என்பது விளையாட்டு. மன்னர் கலம் என்பது முடி. இங்கு முடியாக வளர்ந்து பருவம் காட்ட அன்னை இற்செறித்தாள் என்பது குறிப்பு.

3. கருத்து: நெஞ்சே! வள்ளல் ஓரியின் மலர்மிக்க கானத்தை அளவி வருதலால் மணம் நாறும் காற்றுப் போலும் மணம் மிக்க கூந்தலையுடைய மாயோளை நாம் அடைவது இயல்வதன்று. நாம் அடையும் நோயும் உண்டு. அவள்பால் கொண்ட நட்பு இம்மையில் அழிதல் இன்றி மறுமையும் தொடர்ந்து நிலைபெறும். ஆதலின் மறுமையில் அவளை அடையலாம். வாழி.

முருகுபுணர்ந் தியன்ற வள்ளி போலநின்
னுருவுகண் ணெறிப்ப நோக்கலாற் றலனே
போகிய நாகப் போக்கருங் கவலைச்
சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தல்
சேறா டிரும்புற நீறொடு சிவண
வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்பழீஇக்
கோணாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்குஞ் சிறுகுடி யானே''[1]

(நற்றிணை – 82)

''மயில்கொன் மடவாள்கொன் மாநீர்த் திரையுட்
பயில்வதோர் தெய்வங்கொல் கேளீர்—குயில்பயிலுங்
கன்னி யிளஞாழற் பூம்பொழி னோக்கிய
கண்ணின் வருந்துமென் னெஞ்சு''[2]

(திணை மாலை-49)

அன்பு உற்று நகினும்—தோழி குறைமறுப்புழி அன்பு தோன்ற நகினும்.

(உ-ம்)

''நயனின் மையிற் பயனிது வென்னாது
பூம்பொறிப் பொலிந்த வழலுமி ழகன்பைப்
பாம்புயி ரணங்கி யாங்கு மீங்கிது
தகாஅது வாழியோ குறுமக ணகாஅ
துரைமதி யுடையுமெ ன்னுள்ளஞ் சாரற்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்

1. கருத்து: காம நோயும் அதனால் வந்த உடம்பின் தளர்ச்சியும் நீங்க முயங்கியதால் அழகுபெற்ற தோளை யுடைய தலைவீ! சிறுகுடிக்கண் முருகனொடு கூடி உடன் போக்கினைக் கொண்ட வள்ளிபோல என்னொடு உடன் போக்கினை மேற்கொள்வாயா?

2. கருத்து: கேளிரே பொழிலிடத்திருந்தவள் மயிலோ மடந்தையோ கடலுறை தெய்வமோ. அறியாமல் அழியாத இளஞாழலுள்ள பூம்பொழிலையே நோக்கிய கண்ணோடு என் நெஞ்சம் வருந்தா நிற்கும்,

சேயரி பரந்த மாயிதழ் மழைக்க
ணுறாஅ நோக்க முற்றவென்
பைத னெஞ்ச முய்யு மாறே''[1] (நற்றிணை-75)

இஃது அன்புற்று நக்குழித் தலைவன் கூறியது.

அவட் பெற்று மலியினும்—தோழி உடம்பாடு பெற்று மனம் மகிழினும்,

(உ-ம்)

''எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோ
ளொண்ணுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே''[2]

(ஐங்குறு-175)

இஃது அவட் பெற்று மலிந்து தலைவன் கூறியது.

இன்னும், 'அவட் பெற்று மலியினும்' என்றதற்கு 'இரட்டுற மொழிதல்' என்றதனாற் தலைவியைப் பகற் குறியினும் இரவுக் குறியினும் பெற்று மகிழினும் என்று பொருளுரைக்க.

''நன்றே செய்தவுதவி நன்று தெரிந்
தியாமென் செய்குவ நெஞ்சே காமர்
மெல்லியற் கொடிச்சி காப்பப்
பல்குர லேனற் பாத்தருங் கிளியே''[3]

(ஐங்குறு-288)

இது பகற் குறிக்கட் கிளி புனத்தின்கட் படிகின்றதென்று தலைவியைக் காக்க ஏவியதனை அறிந்த தலைவன் அவளைப் பெற்றேமென மகிழ்ந்து கூறியது.

---

1. கருத்து: பக்கம் 129-ல் காண்க.
2. கருத்து: பக்கம் 109-ல் காண்க.
3. கருத்து: தினைப் புனத்திற் பரவி வரும் கிளிகள் நமக்கு நல்லதே செய்தன. அவற்றுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லேம். கிளிகள் தினைக்கதிர் உண்ண வந்தமையால் தினைப்புனம் காக்கத் தாய் தலைவியை அனுப்பினாள். அதனால் அவளை நாம் அடைந்து மகிழ்ந்தோம். இந்த உதவிக்கு யாம் என் செய்வோம் என்பது கருத்து.

''காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று''
(குறள்-1114)

இஃது இரவுக் குறிக்கண் அவட்பெற்று மலிந்தது.

''கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக்
கரந்த காமங் கைந்நிறுக் கல்லாது
நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி
யரைநாள் யாமத்து விழுமழை கரந்து
கார்விரை கமழுங் கூந்தற் றூவினை
நுண்ணூ லாகம் பொருந்தினள் வெற்பி
னிளமழை சூழ்ந்த மடமயில் போல
வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து
வில்வகுப் புற்ற நல்வாங்கு குடச்சூ
லஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோ
ளான்ற கற்பிற் சான்ற பெரிய
அம்மா வரிவையோ வல்ல டெனாஅ
தாஅய் நன்னாட் டணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பெயரிய வுருகெழு கவாஅ
னேர்மலர் நிறைசுனை யுறையுஞ்
சூர்மகள் மாதோ வென்னுமென் னெஞ்சே''[1]
(அகம்-198)

என வரும்.

''விண்ணகம் விளக்கல் வேண்டி நம்மிற்
பிரியினும் பிரியுமோ பெருந்தோட் கொடிச்சி
வானஞ் சூடிய திலகம் போல
வோங்கிரு விசும்பினுங் காண்டு
மீங்குங் காண்டு மிவள்சிறு நுதலே''[2]

இதுவும் அது.

---

1. கருத்து: என் நெஞ்சே! நாம் விட்ட நன்மொழி நம்பி கண் மலர் வேய்ந்து அம் சிலம்பு ஒலியடக்கி மயில்போல் அஞ்சி வந்து நடுயாமத்துப் புணர்ந்து செல்வோள் மண் மடந்தையல்லள்; சுனையிடத்து உறையும் சூரர மகளா வாள்-தலைவன் கூற்று.

2. கருந்து: கொடிச்சியின் நுதலை விசும்பில் வானம் சூடிய திலகம் போல விளங்கக் காண்போம். இம் மண்ணுலகி

ஆற்றிடை உறுதலும்—தலைவன் செல்லும் நெறிக்கண் இடையூறு தோன்றின இடத்தும் என்றது, தலைவியுந் தோழியும் வரும் வழியருமை கூறியவழித் தலைவன் கூற்று நிகழுமென்றவாறு.

(உ-ம்)

''குருதி வேட்கை யுருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கு
மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவி னாண்மேயல் பரக்கு
மாரி யெண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருத லெவனெனப் பலபுலந்
தழுதன ளுறையு மம்மா வரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்
மாணல முள்ளி வரினெமக்
கேம மாகு மலைமுத லாறே''[1] (நற்றிணை-192)

எனத் தலைவி ஆற்றினதருமை கூறியதற்குத் தலைவன் கூறியது.

''இரட்டுற மொழிதல்'' என்பதனான் 'ஆற்றிடையுறுதற்கு' வரைவிடைவைத்துப் பிரிந்தான் ஆற்றிடை வருத்தமுற்றுக் கூறுவனவுங் கொள்க. அது போகின்றான் கூறுவனவும் மீண்டவன் பாங்கற்குக் கூறுவனவுமாம்.

''ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே''[2] (குறுந்-235)

லும் காண்போம். நம்மொடு இங்குக் கூடியிருக்கும் இவள் தன் நுதலால் வானை ஒளி பெறச் செய்ய வேண்டி நம்மைப் பிரிவாளோ?

1. கருத்து பக்கம் 131-ல் காண்க.

2. கருத்து: பக்கம் 132-ல் காண்க.

"கவலை கெண்டிய வகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே யுணர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோ ளறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடித் தந்தை யூரே"[1]

(குறுந்-233)

அவ்வினைக்கு இயல்பே-அத் தோழியிற் கூட்டத்திடத்துத் தலைவன் கூற்று நிகழ்வதாகிய இலக்கணம் ஆம் என்றவாறு,

சிவ.

இச் சூத்திரமும் தலைவன் கூற்று நிகழுமிடம் கூறுகின்றது.

அவ்வினைக்கு இயல்பு என்பது பொதுப்படத் 'தலைவன் கூற்று வினைக்கு இயல்பு' என்று நால்வகைக் களவுப் புணர்ச்சிக்கும் பொதுப்படக் கொள்ளுமாறு அமையினும் தோழியிற் கூட்டத்து நிகழும் கூற்று என்றே கொள்ளுதல் வேண்டும். என்னை? பண்பு கூறிப் பெயர்த்தலும், அன்புற்று நகுதலும்' ஆற்றிடை கூறுதலும் ஆகிய செயல்கள் தோழிக்கே யுரியன வாதலின் என்க.

இச் சூத்திரத்துக்கு உரையாளர் அனைவர் உரைகளையும் கொண்டு கூற்றைப் பெருக்கிக் கொள்ளலாம்.

பாங்கன் நிமித்த வகை

101. பாங்கன் நிமித்தம் பன்னிரண்டு என்ப (13)

ஆ.மொ.

இல.

---

1. பாங்கனே! உயர்ந்தோர்க் களித்து மிஞ்சிய சோற்றை யாவர்க்கும் இல்லையென்னாது வழங்குவோனாகிய அவளின் தந்தை யூரானது, கவலைக்கிழங்கு தோண்டிய குழியில் கொன்றைப் பூக்கள் உதிர்ந்து செல்வரின் மூடி திறந்த பேழை போல் தோன்றும் படியாக மழையை ஏற்கும் முல்லை நிலத்தின் கண்ணது. அதோ தோன்றுவது காண்.

They say that the activities of the companian to help the hero in the love affairs are twelve.

பி. இ. நூ.

இறை. 3.

ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்
பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்
.........தலைப் பெயல் மரபே.

தமிழ். 16.

வினாதலும் விடுத்தலும் கழறலும் மறுத்தலும்
நோதலும் யாண்டென இன்னுழி என்றலும்
மாதரைக் காண்டலும் மன்னிய வகுத்தலும்
கிழவோற் கிசைத்தலும் ஆற்றான் கிளத்தலும்
பழவரை விடுத்தலும் பாங்கற் கூட்டம்.

நம்பி. 126, 127.

சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற்கூட்டல் என்று
ஆங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.

தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
தலைவனை உற்றது வினாதலும் தலைவன்
உற்றது உரைத்தலும் கற்றறி பாங்கன்
கழறலும் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலும்
கிழவோற் பழித்தலும் கிழவோன் வேட்கை
தாங்கற் கருமை சாற்றலும் பாங்கன்
தலைவனைத் தழுவலும் தலைவனோ டழுங்கலும்
எவ்விடத் தெவ்வியற்றென்றலும் அவன் அஃது
இவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்கன்
இறைவனைத் தேற்றலும் குறிவழிச் சேறலும்
இறைவியைக் காண்டலும் இகழ்ந்ததற் கிரங்கலும்
தலைவனை வியத்தலும் தலைவியை வியத்தலும்
தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறலும்
தலைவன் சேறலும் தலைவியைக் காண்டலும்

கலவியின் மகிழ்தலும் புகழ்தலும் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலும் என்றிங் கெட்டுநா லாறும்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

மாறன். 28, 29.

சார்தல் வினாதல் செப்பல் எதிர்மறை
நேர்தல் கூடல் கூட்டம் என்றாங்குப்
பார்புகழ் எழுவகை பாங்கற் கூட்டம்.

செம்மல் பாங்கனைச் சேர்தலும் பாங்கன்
செம்மலொடு உற்றது வினாதலும் செம்மல்
உற்ற துரைத்தலும் மற்றவன் கழறலும்
உரவோன் கழற்றெதிர் மறுத்தலும் உரவோற்
பழித்தலும் வேட்கை கழித்தற் கருமை
சாற்றலும் தன்மனத்து அழுங்கலும் தலைவனோடு
ஏற்றற்கு அழுங்கலும் ஏகுஅவன் என்றலும்
எவ்விடத் தெவ்வியற் றென்றலும் இறைவன்
அவ்விடத் தவ்வியற் றென்றலும் பாங்கன்
இறைவனைத் தேற்றலும் குறிவழிச் சேறலும்
இறைவியைக் காண்டலும் இறைவியை எளிதின்
காட்டிய கடவுளைக் கண்ணுற் றிறைஞ்சலும்
வாள்தடங் கண்ணியை மதித்தவன் வியத்தலும்
இகழ்ந்ததற் கிரங்கலும் இறைவன் தன்னையே
புகழ்ந்தவன் வியத்தலும் புரவலன் தன்னொடு
நவ்வியங் கண்ணி நன்னிலை யுரைத்தலும்
செவ்வி செப்பலும் செம்மல் அங்கு ஏகலும்
இணை மலர்க் குழலியை இறைவன் காண்டலும்
புணர்தலும் புகழ்தலும் பூங்கொடி தன்னைப்
பாங்கியொடு வருகெனப் பகர்ந்து பின்னர்
ஆயத் துய்த்த லொடு அம்மூ வொன்பதும்
ஏய பாங்கன் கூட்டத்து விரியே.

இல. 504, 505.

கம்பி. 126 127. சூத்திரங்களே

முத்து. 836.

நினைதலும் வினாதலும் உற்ற துரைத்தலும்
கழறல் மறுத்தலும் கவன்று உரைத்தலும்
வலியழி வுரைத்தலும் விதியொடு வெறுத்தலும்
நொந்து கூறலும் நோதல் நீங்கி
இயலிடங் கேட்டலும் இயலிடங் கூறலும்
வற்புறுத்தலுங் குறிவழிச்சேறல் காண்டலும்
வியந்து ரைத்தலும் மெல்லியல் தன்னைக்
கண்டமை கூறலும் கருத்துக் கேற்பச்
செவ்வி செப்பலும் அவ்விடத் தேகலும்
ஈங்கிவை நிற்ப விடந்தலை தனக்கும்
ஆங்கவண் மெலிதலும் பொழில் கண்டு மகிழ்தலும்
நீங்கா மகிழ்வொடு நிலை கண்டு வியத்தலும்
தளர்வகன் றுரைத்தலும் மொழிபெற வருந்தலும்
கண்புதைக்க வருந்தலும் நாண்விட வருந்தலும்
நண்பொடு சென்றுபோய் நன்மருங் கணைதலும்
இன்றியமையா மையியம் பலும் ஆயத்து
உய்த்தலும் நின்று வருந்தலும் பிறவும்
துன்று பாங்கன் துறையென மொழிய

இளம்.

என்—எனின்—பலவகை மணத்திற் பாங்கராயினார் துணையாகுமிடம் இத்துணையென வரையறுத் துணர்த்துதல் நுதலிற்று.

பாங்கராயினர் துணையாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு வகை யென்வாறு.

நிமித்தம் என்பது நிமித்தமாகக் கூடும் கூட்டம், அக்கூட்டம் நிமித்தமென ஆகு பெயராய் நின்றது. பாங்கராற் கூட்டம் பாங்கர் நிமித்தமென வேற்றுமைத் தொகையாயிற்று. அவை யாவன: பிரமம் முதலிய நான்கும் கந்திருவப் பகுதியாகிய களவும், உடன் போக்கும் அதன் கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும், காமக்கிழத்தியும், காதற்பரத்தையும், அசுரம் முதவாகிய மூன்றுமென இவை,

நச்.

இது, மேற் பாங்கி நிமித்தங் கூறிய அதிகாரத்தானே பாங்கனிமித்தங் கூறுகின்றார். 'வாயில் பெட்பினும்' (102) என்ற பாங்கனிமித்தம் போலாது இது வேறுபடக் கூறலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது. என்னை? பாங்கன் தலைவியை எதிர்ப்பட்டு வந்து தலைவற்கு உரைத்தலன்றிக் காளையரொடு கன்னியரை உலகியலாற் புணர்க்குமாறு புணர்க்குந் துணையே யாகலின்.

(இ-ள்): அகனைந்திணையும், அல்லாத வழிப் பாங்கன் கண்ணவாகிய நிமித்தம் பன்னிரு பகுதியவாம், என்றவாறு.

எண்வகை மணத்தினும் இடைநின்று புணர்க்கும் பார்ப்பான் இருவகைக் கோத்திரம் முதலியனவும் தானறிந்து இடைநின்று புணர்த்தல் வன்மை அவர் புணர்தற்கு நிமித்தமாதலின் அவை அவன்கண்ணவெனப்படும். இவனைப் பிரசாபதியென்ப. நிமித்தமுங் காரணமும் ஒன்று. காரணம் பன்னிரண்டெனவே காரியமும் பன்னிரண்டாம். அவை எண் வகை மணனுமாதலின் அவற்றைக் கைக்கிளை முதலிய ஏழு திணைக்கும் இன்னவாறு உரியவென வருகின்ற சூத்திரங்களாற் பன்னிரு பகுதியும் அடங்கக் கூறுப. அவ்வாற்றானே பிரமம் பிராசாபத்தியம் ஆரிடந் தெய்வம் எனவும், முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனவும், அசுரம் இராக்கதம் பேய் எனவும் பன்னிரண்டாம். பிரமம் முதலிய நான்கற்கும் பாங்கன் ஏதுவாகலின் இவ்வாறு பிரமசரியங் காத்தானெனவும்,

இவன் இன்ன கோத்திரத்தான் ஆதலின் இவட்கு உரியனெனவும், இவளை இன்னவாற்றாற் கொடுக்கத் தகுமெனவும், இன்னோனை ஆசாரியனாகக் கொண்டு வேள்வி செய்து மற்றிக் கன்னியைக் கொடுக்கத் தகுமெனவுஞ் சொல்லிப் புணர்க்குமென்பது. இனி, யாழோர் கூட்டத்துள் ஐந்திணையுமாயிற் பாடலுட் பயின்ற வகையானே முதல் கரு உரிப்பொருள் வரையறைபற்றி முறை சிறந்து வருதலும் பெயர் கொளப் பெறாமையும் உடையவன்றே, அவ்வாறன்றி ஈண்டுக் கொள்கின்ற யாழோர் கூட்டத்து ஐந்திணையுமாயின் அவ்வந் நிலத்தியல்பானும் பிறபாடை யொழுக்கத்தானும் வேறுபட்ட வேறுபாடு பற்றியுஞ் சுட்டியொருவர்ப் பெயர் கொடுத்தும் வழங்குகின்ற உலகியலான் எல்லாரையும் இடைநின்று புணர்ப்பாருள்வழி அவ்வந் நிமித்தங்களும் வேறுவேறாகி வரும் பாங்கன் நிமித்தங்களையுடைய எனப்பட்டன.

இங்ஙனம் ஐந்திணைப் பகுதியும் பாங்கனிமித்தமாங்கால் வேறுபடுமெனவே, புலனெறி வழக்கிற்பட்ட இருவகைக் கைகோளும் போல இவையென்பதூஉம், அவ்வந் நிலத்தின் மக்கட்குத் தக்க மன்றலும் வேறாகலின் அவர்க்கும் பாங்கர் உளரென்பதூஉம், இவ்வாற்றான் எண்வகை மணனும் உடனோதவே இவையும் ஒழிந்த எழுவகை மணனும்போல அகப்புறமெனப்படு மென்பதூஉங் கொள்க.

இனி, அசுரத் தன்மையாளைக் குரவர் இன்னவாறு கொடுப்பர் நீயுஞ் சேறி யென்று ஒருவன் பாங்கு படக் கூறலும், இவனை அவட்குக் காட்டி இவன் இன்னனென்று ஒருவன் இடைநின்று கூறலும் உண்மையின், அதுவும் பாங்கனிமித்த முடைத்து இராக்கதத்திற்கும் இத்தன்மையாள் இன்னுழி இருந்தாளென்று பாங்காயினார் கூறக் கேட்டு, ஒருவன் வலிதிற் பற்றிக் கோடலின் இதுவும் பாங்கனிமித்த முடைத்து. பேய்க்கும் பொருந்துவது அறியாதான் இடை நின்று புணர்ப்பின் அதற்கும் அது நிமித்தமாம். இப்பன்னிரண்டுந் தொன்மையுந்தோலு (550—1) மென்ற வனப்பினுள் வருவன.

வெள்.

பாங்கா நிமித்தம் பன்னிரண்டென்ப. இது களவொழுக்கத்தில் தலைவன் தலைவி இருவரும் கூடுதற்கு நிமித்தமாவன பன்னிரண்டு என்பர் ஆசிரியர், எ-று.

அவையாவன காட்சி ஐயம் துணிவு என இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர்க் கூறிய மூன்றும், குறிப்பறிதலின் பயனாய்த் தோன்றும் வேட்கை முதல் சாக்காடீறாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் ஆகும். இவை பன்னிரண்டுமே அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டத்திற்குக் காரணமாவனவாதலாற் பாங்காம் நிமித்தம் எனப்பட்டன. பாங்காம் நிமித்தம் என்பது பாங்கு ஆம் நிமித்தம் எனப் பிரியும். பாங்கு—துணை. நிமித்தம்-காரணம் 'பாங்கா நிமித்தம்' என்பதே ஏடெழுதுவோரால் 'பாங்கர் நிமித்தம்' எனப் படிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். 'பாங்கர் நிமித்தம்' என்பது இளம்பூரணர் கொண்ட பாடம்.

சிவ.

பாங்கற் கூட்டத்தின் தொகையும் வகையும் கூறத் தொடங்கி இச் சூத்திரத்தால் விரி கூறப்படுகின்றது.

(இ-ள்): பாங்கன் காரணமாக நிகழும் கூட்டம் பன்னிரண்டு என்பர்.

பன்னிரண்டாவன:

1. காமம் சாலா இளமையோள்வயின் ஏமம் சாலா இடும்பை யெய்திய தலைவனை அவளொடு கூட்டுவது.

2. காமக் கூட்டத் தொடக்கத்தில் காட்சி ஐயம் துணிவு நிகழ்ந்தவுடன் மேலும் புணர்ச்சிக்கு முயலாமல் பாங்கனைக் கொண்டு கூடலாம் என எண்ணித் தலைவன் பாங்கனை அணுக அவனால் கூடுவது.

3. இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் இடந்தலைப்பாடு கொண்டோ கொள்ளாமலோ பாங்கன் நிமித்தமாகக் கூடுவது.

4. தோழி களவொழுக்கத்தில் உடன்போக்குக்குத் துணை நிற்பதுபோல் பாங்கன் துணை நிற்க உடன்போவது.

5. களவொழுக்க முடிவில் தலைவன் தலைவியரின் உற்றார் உறவினருடன் பேசி, மணவினை நிகழ்ச்சிக்குத் துணையாக நிற்க மணந்து கூடுவது

6. கற்பொழுக்கத்தில் தலைவி ஊடலை நீக்கத் துணை நிற்க அதனால் கூடுவது.

7. காமக்கிழத்தியின் ஊடல் நீக்கத்துக்குத் துணை நிற்கக் கூடுவது.

8. காதற் பரத்தையின் ஊடல் நீக்கத்துக்குத் துணை நிற்கக் கூடுவது.

9. களவொழுக்கத்தில் தலைவியைத் தலைவன் அடைய இடையூறுகள் நிகழ அதாவது பெற்றோர் உடன்படாமை போலும் தடைகள் நிகழத் தலைவன் மடல் ஏறுவானாயின் அது காரணமாகப் பாங்கன் முன்னின்று இருவரையும் சேர்த்து வைக்க மணந்து கூடுவது.

10. தன்னின் வயதில் மூத்தாளை விரும்பிய தலைவனைப் பாங்கன் முன்னின்று அவளுடன் சேர்த்து வைக்க மணந்து கூடுவது.

11. தலைவன் ஒருத்தியை விரும்பித் தேறுதல் இல்லாமல் காமம் மிக்கபோது பாங்கன் துணை நின்று மணம் புணர்த்தக் கூடுவது.

12. தான் விரும்பியவளை அடைய முடியாத போது காம மிகுதியினால் அவளை வலிதிற் கொண்டு செல்லப் பாங்கன் துணை புரிவதன் மூலம் கூடுவது.

உரையாளர்கள் பிரமம் பிரசாபத்தியம் முதலிய ஆரிய மணங்களையுட் கொண்டு கூறியவுரைகள் தமிழ் மரபுக்கு ஏலாமை யறிக. இது முன்னரும் கூறப்பட்டது.

பாங்கர் பலராதலின் 'பாங்கர் நிமித்தம்' எனப் பாடங் கொண்டார் இளம்பூரணர். பலராயினும் ஒருவனே உயிர்ப் பாங்கனாதல் இயலும் ஆதலின் நச்சினார்க்கினியர் 'பாங்கன் நிமித்தம்' எனப் பாடம் கொண்டார். ஆரியத் தொடர்பாக உரை வகுத்ததை ஏலாத வெள்ளைவாரணனார் பாங்காம் நிமித்தம் எனப் பாடம் கொண்டு, 'இயற்கைப் புணர்ச்சிக்குப் பாங்காகும் நிமித்தம்' எனவுரை கொண்டு, காட்சி. ஐயம், துணிவு, வேட்கை, உள்ளுதல் முதலாகச் சாக்காடு ஈறாகவுள்ள பன்னிரண்டும் பாங்காம் நிமித்தம் என்றார்.

இயற்கைப் புணர்ச்சி முன்னர் நிகழும் காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல் என்பனவற்றைக் கூறி வேட்கை முதலிய இருவர் உணர்வும் கூறிப் பின்னர்த் தலைவனின் கூற்றாக முன்னிலையாக்கல் முதலிய கூறி இயற்கைப் புணர்ச்சியை முடித்த ஆசிரியர், பின்னர் மெய் தொட்டுப் பயிறல் முதலிய நிகழ்ச்சிகளால் தலைவனுக்குக் கூற்று நிகழுமாறு கூறுவார் இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டம் ஆகிய வற்றில் கூற்று நிகழுமாறு கூறியவர் அடுத்துப் பாங்கற் கூட்டம் பற்றிக் கூற வேண்டுமாதலினாலும் தொடர்ந்து தோழியிற் கூட்ட விவரம் கூறுகினறாராதலினாலும் 'பாங்கன் நிமித்தம்' என்னும் பாடமே சிறக்கும். 'பாங்கா நிமித்தம்' என்பது பொருந்தாது.

கைக்கிளைக் குறிப்பு

102. முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே (14)

ஆ. மொ.

இல.

The first three belong to 'Kaikilai' (One side love).

இளம்.

என்-எனின், மேற் சொல்லப்பட்ட பன்னிருவகையினும் கைக்கிளைப் பாற்படுவன வகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்). எண் வகை மணத்தினுள்ளும் முன்னையவாகிய அசுரம் முதல் மூன்றும் கைக்கிளைப் பாற்படும் என்றவாறு.

நச்.

(இவர் உரையினை அடுத்த சூத்திரத்தில் காண்க.)

வென்.

இது மேற்கூறியவற்றுள் கைக்கிளைப்பாற் படுவன இவை யென்கிறது.

(இ-ள்): மேற் கூறப்பட்ட நிமித்தம் பன்னிரண்டுடள் முற் கூறப்பட்ட காட்சி ஐயம் துணிவு என்பன மூன்றும் அன்பின் ஐந்திணைக் குரியவாதலேயன்றி ஒருதலைக் காமமாகிய கைக்கிளைக்குரிய குறிப்புக்களாகவும் அமையும் எ-று.

சிவ.

இச் சூத்திரம் பாங்கன் நிமித்தம் பன்னிரண்டனுள் முதல் மூன்றும் கைக்கிளைப் பாற்படும் என்கின்றது.

(இ-ள்) : முன்னேயுள்ள மூன்றும் கைக்கிளைத் திணையிற் குறிக்கப்படுவனவாகும்.

தலைவன் கொண்ட விருப்பம் இளமையோள் அறியாளாத லாலும். காட்சி ஐயம் துணிவு நிகழ்ந்த போது தலைவி விருப்பம் தலைவன் அறியானாதலாலும் அவையிரண்டும் ஒரு தலைக் காமமான கைக்கிளையின்பாற்படும். அன்பின் ஐந்திணைக் கள வொழுக்கத்தைச் சார்ந்ததாயினும் பாங்கற் கூட்டத்தில் பாங்கன் தலைவனொன்று இருப்பது தலைவி அறியாளாதலாலும் பாங்கன் தலைவன் பக்கமாக இருத்தலாலும் பாங்கற் கூட்ட மும் கைக்கிளைக் குறிப்பில் அடங்கும்.

முன்பின் என்பன இட முன்னாகக் கொண்டு இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் உரை கூறினர். இங்கு காலமுன், காலப் பின்னாகக் கொண்டு உரை கூறப்படு கின்றது.

பெருந்திணை

103. பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே (15)

ஆ. மொ.

இல்.

The last four belong to 'Perunthinai' (Unnatural love).

இளம்.

என்-எனின், மேற் சொல்லப்பட்டவற்றுள்ளும் பெருந் திணைக் குரியன வுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) : எண்வகை மணத்தினுள் பிரமம் முதலிய நான் கும் பெருந்திணைப்பாற்படும் என்றவாறு.

நச்.

முன்னைய..............................குறிப்பே

பின்னர் ....பெறுமே

மேற் பன்னிரண்டெனப்பட்ட எண்வகை மணத்தினுள் ஏழினை எழுதிணையுள் இன்னதிணைப் பாற்படும் என்கின்றது.

(இ-ள்) : முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே— இதற்கு முன் நின்ற அசுரமும் இராக்கதமும் பைசாசமுங் கைக் கிளை யென்றற்குச் சிறந்திலவேனுங் கைக்கிளையெனச் சுட்டப் படும். பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே—பின்னர் நின்ற பிரமம் பிராசாபத்தியம் ஆரிடந் தெய்வமென்னும் நான்கினையும் பெருந்திணை தனக்கு இயல்பாகவே பெறு மெனவுங் கூறப்படும் என்றவாறு,

மன்றல் எட்டு என்ற வரலாற்று முறை[1]யானே வாளாது பன்னிரண்டென்றா ரென்பதே பற்றி ஈண்டும் அம்முறையானே

1. வரலாற்று முறை – வழிவழி யாவராலும் எளிதில் உணரப்பட்டு வழங்கி வரும் முறை. மணம் எட்டு என்பன யாவையெனத் தொல்காப்பியர் கூறாமல் 'மன்றல் எட்டு' எனத் தொகையிற் கூறியதால் அவ் வெட்டும் யாவை என்பது எல்லாராலும் எளிதில் அறியப் பட்டவை என்பது புலனாம். அவ்வாறே யாங்

இடவகையான் 'முன்னைய மூன்றும்' 'பின்னர் நான்கும்' என்றார். எனவே இனிக்கூறும் 'யாழோர்மேன' (106) ஐந்தும் ஒன்றாக அவ்விரண்டற்கும்[1] இடையதெனப் படுவதாயிற்று. வில்லேற்றியாயினுங் கொல்லேறு தழீஇயாயினுங் கொள்வ லென்னும் உள்ளத்தனாவான் தலைவனே யாதலின் அதனை முற்படப் பிறந்த அன்பு முறை பற்றி ஒருதலைக் காமமாகிய கைக்கிளை யென்றார். இராக்கதம் வலிதின் மணஞ் செய்தலா தலின் அதுவும் அப்பாற்படும்.[2] பேயும் அப்பாற்படும்.

இவை முன்னைய மூன்றுங் கைக்கிளையாயவாறு 'காமஞ் சாலா யிளமை யோள் வயிற்' (50) கைக்கிளை சிறப்புடைத் தென்றற்குப் 'புல்லித் தோன்றும்' (50) எனக் கூறி, இதனை வாளாது 'குறிப்பு' என்றார். ஆண்டுப் பிற்காலத் தன்றிக் காட்சிக்கண் மணம் அதற்கின்மையின் ஈண்டு மணங் கூறும் வழிக் கூறாது அகத்திணையியலுட் கூறினார். 'ஏறிய மடன்மா' முதலியவற்றைப் 'பெருந்திணைக் குறிப்பே' (51) எனக் கூறி, ஈண்டும் 'பெருந்திணை பெறுமே' என்றார் அவை சிறப்பில இவை சிறப்புடைய வென்றற்கு,

இந் நான்கும் ஒருதலைக் காமம் பற்றி நிகழாமையானும் ஒருவனோடொருத்தியை எதிர்நிறீஇ அவருடம்பாட்டோடு புணர்க்குங் கந்தருவ மன்மையானும் அவற்றின் வேறாகிய பெருந்திணையாம்.

வெள்.

இது பெருந்திணைப்பாற்படுவன இவையென்கிறது.

(இ-ள்) : மேற் குறித்தவற்றுள் நோக்குவவெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு எனப் பின்னர்க் கூறிய நான்கு நிலைகளும் ஒத்த அன்பால் நிகழும் வழி அன்பின் ஐந்திணை யாதலேயன்றி ஒவ்வாக் காமத்தால் நிகழும் வழிப் பெருந்திணைக்குரிய பொருந்தா நிலைகளாகவும் கொள்ளப் பெறும் எ-று.

கன் நிமித்தம் பன்னிரண்டும் யாவை யென்பது எல்லா ராலும் அறியப்பட்டதாகும் என்பது கருத்து.

1. அவ்விரண்டு-முன்னைய மூன்று (கைக்கிளை) பின்னர் நான்கு (பெருந்திணை).

2. கைக்கிளையின் பாற்படும்.

சிவ.

இச்சூத்திரம் பாங்கன் நிமித்தம் பன்னிரண்டனுள் பின்னர் உள்ள நான்கும் பெருந்திணைப் பாற்படும் என்கின்றது.

(இ-ள்) : பின்னர் உள்ள ஏறிய மடற்றிறம் முதலியவற்றின் நிமித்தங்கள் பெருந்திணைப்பாற் படுவனவாகும்.

ஏறிய மடற்றிறம் முதலிய நான்கும் தலைவன் தலைவியரிடையே ஒத்த அன்பால் நிகழ்வனவல்ல வாதலின் பெருந்திணைப் பாற்படுவனவாம்.

களவு ஐங்நிலத்துக்கும் உரியது

104. முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐங்நிலம் பெறுமே (16)

ஆ.மொ.

இல.

The proper love, which is in the nature of the love of people having the lyre always with them will have the remaining five aspects.

இளம்.

என்-எனின், மேற் சொல்லப்பட்ட ஒருதலைக்காமமும் பொருந்தாக்காமமு மன்றி, ஒத்த அன்பின் வருங் கூட்டம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) : முதல் என்பது நிலமும் காலமும். நிலத்தொடும் காலத்தொடும் பொருந்திய கந்திருவர்பாற்பட்டன கெடுதலில் லாத சிறப்பினையுடைய ஐந்து வகைப்படும் என்றவாறு.

முதலொடு புணர்ந்த என்றாரேனும் (வந்தது கண்டு வாராதது முடித்தல்' (மரபியல் 112) என்பதனால் ஒழிந்த கருப்பொருளும் உரிப்பொருளும் கொள்ளப்படும். நிலம் என்பது இடம். இதனாற் சொல்லியது, ஒத்த காமமாகிக் கருப் பொருளோடும் புணர்ந்த கந்திருவநெறி[1] இடவகையான் ஐந்து

1. கருப் பொருளொடும் புணர்ந்த கந்தருவ நெறி என்றது கருப்பொருள் கொண்டு பாடப்பட்ட செய்யுளை நோக்கியது.

வகைப்படும் என்றவாறு. அவையாவன; களவும், உடன்போக்கும், இற்கிழத்தி, காமக்கிழத்தி, காதற்பரத்தையும் எனச் சொல்லப்பட்ட ஐவகைக் கூட்டம்.

இச் சொல்லப்பட்ட பன்னிரு வகைப்பட்ட கூட்டத்திற்கும் பாங்கராயினார் நிமித்தமாக வேண்டுதலின், அவற்றுள் தலைவற்கும் தலைவிக்கும் ஒத்த காதலுள்வழிப் பாங்கராயினாரால் நிகழும் நிகழ்ச்சி கந்திருவப்பகுதியாகவும் ஒருதலை வேட்கையாகிய வழி இவரால் வரும் நிகழ்ச்சி கைக்கிளையாகவும் ஒப்பில் கூட்டமாகியவழிப் பெருந்திணையாகவும் கொள்க. ஐந்நிலம் என்பதனை முல்லை குறிஞ்சி முதலாயின வென்றார் உளராலெனின் 'முதலொடு புணர்ந்த' என்பதனால் நிலம் பெறுமாதலான்[1] நிலம் என்பதற்கு 'வேறு பொருள்' உரைத்தல் வேண்டுமென்க. அஃது அற்றாக் இற்கிழத்தி, காமக்கிழத்தி என்பார் உள்ளப் புணர்ச்சியானாதல் மெய்யுறு புணர்ச்சியானாதல் வரையப்பட்டாராகப்[2] பொருட் பெண்டிராகிய காதற்பரத்தையர் கூட்டம் ஒத்த காமமாகியவாறென்னையெனின் அரும் பொருளானாதல், அச்சத்தானாதல் அன்றி அன்பினாற் கூடுதலின் அதுவுங் கந்திருவப்பாற்படும். அவ்வாறன்றி அவரைப் பிறிது நெறியாற் கூடுவாராயின் இவன் மாட்டுத் தலைமை இன்றாமென்பது உணர்ந்து கொள்க.[3]
அஃதாமாறு

''அன்னை; கடுஞ்சொல் அறியாதாய் போலநீ
என்னைப் புலப்பது ஒறுக்குவேன் மன்யான்
சிறுகாலை இற்கடை வந்து குறிசெய்த

---

1. முதலொடு புணர்ந்த யாழோர்மேன—முதற் பொருளொடு புணர்க்கப் பட்டனவாகிய கந்தர்வர்பாற்பட்ட செய்யுள்கள். முதல் என்பது நிலமும் காலமும். நிலமும் காலமும் கூறப்படுவன குறிஞ்சி முதலிய நிலங்கள். அதனால் முதலொடு புணர்ந்த என்ற அளவில் குறிஞ்சி முதலியன அடங்கும்.

2. வரையப்பட்டாராக – தலைவனுக்குரியர் என்று வரையறுக்கப்பட்டாராக.

3. அவ்வாறன்றி...இன்றாம் என்பது; அன்பினாற் கூடுதலின்றி அச்சத்தானாதல் பொருளானாதலாகிய பிறிது

அவ்வழி என்றும் யான் காணேன் திரிதர
எவ்வழிப் பட்டாய் சமனாக இவ்வெள்ளல்''[1]

(கலித்-97)

எனவும் ''கண்டேனின் மாயங் களவாதல்'' என்னுங் கலியுள்,

''...நோயும் வடுவுங் கரந்து மகிழ்செருக்கிப்
பாடுபெயல் நின்ற பானாள் இரவில்
தொடிபொலி தோளும் முலையுங் கதுப்பும்
வடிவார் குழையும் இழையும் பொறையா
ஒடிவது போலும் நுசுப்போ டடிதளரா
வாராக் கவவின் ஒருத்திவந் தல்கல்தன்
சீரார் நெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவம் மிதித்த தமையுமோ''[2]

(கலித்-90)

எனவும், பரத்தையர் அன்பினாற் கூறியவாறும் இவர் இற்கிழத்தியும், காமக்கிழத்தியும் அன்மையும் அறிந்து கொள்க. இவ்வகை வருவன ஐந்து நிலனாய் வரும். அஃதேல், மருதக் கலியுள்,

---

நெறியால் ஆடவரைக் கூடுவராயின் அந் நிலையில் தலைவனிடம் கூடும் கூட்டத்தில் தலைவனுக்குத் தலைமையின்றாம் என்பது.

1. கருத்து: நீ செய்த குறியிடத்து நாளும் வந்து நின்னைக் காணாமல் யான் திரிய நீ எவ்விடம் சென்றாய் எனச் சிறுகாலையில் எம் வீட்டின் வாசலில் வந்து நின்னைக் கடுஞ்சொல் சொல்லிப் புலந்ததைப்பற்றி ஒன்றும் அறியாதாய் போல நடுநின்று என்னை இகழும் இகழ்ச்சிக்கு என்னையான் ஒறுத்துக் கொள்வதன்றி வேறு என் செய்வேன். நீ அப்படிப்பட்ட பரத்தன்.

2. கருத்து: தானுற்ற காம நோயும் அதனால் எழுந்த அலரும் மறைத்து மகிழ்ச்சியைப் பெருக்கி, மழைபெய்த பாதியிரவில், தொடி, தோள், முலை, கூந்தல், அணியும் ஆகியவை பாரமாக அமையத் தளரும் இடையோடு, அடி தளர்ந்து வந்து தழுவுதலோடு தங்குதலையுடைய ஒருத்தி தன் சிலம்புசிலம்ப நின்கதவை மிதித்த செயல் அமையுமோ?

"................"
அடக்கமில் போழ்தின்கண் தந்தை காமுற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்கான்''
(கலித்-82)

எனவும்,

'வழிமுறைத்தாய்' எனவும் 'புதியோள்' எனவும் இவ்வாறு கூறக் கேட்கின்ற காமக்கிழத்தியுமென மனைவியர் நால்வருளர். அவரெல்லாரையும் கூறாது மனைக் கிழத்தியர் இருவர் என்ற தனாற் பயன் இன்றெனின், அவரெல்லாரும் இற்கிழத்தியும், காமக்கிழத்தியுமென இரண்டு பகுப்பினுள் அடங்குப. அன்றியும், இவர் நால்வரொடு பரத்தையுட்பட ஐவர் கந்திருவப் பகுதியர் என உரைப்பினும் அமையும்.

''பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே''
(பொருளியல்-28)

என ஓதுதலானும், தலைவற்குப் பிரமம் முதலாக வரும் நான்கு வருணத்துப் பெண்பாலாரும் பரத்தையும் என ஐந்து வகைப் படுமென்பதூஉம் ஒன்றெனக் கொள்க.

நச்.

இஃது அப்பன்னிரண்டனுள் இடையதாய் ஒழிந்த ஐந்துங் கூறுகின்றது.

(இ-ள்): முதலொடு புணர்ந்த யாழோர்மேன—மேற் கூறிய நடுவணைந்திணையுந் தமக்கு முதலாக அவற்றோடு பொருந்தி வரும் கந்தருவமார்க்கம் ஐந்தும், தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே—கெடலருஞ் சிறப்பொடு பொருந்திய ஐவகை நிலனும் பெறுதலின் அவை ஐந்தெனப்படும் என்றவாறு.

எனவே, முதற் கந்தருவம் ஐந்துமேயன்றி அவற்றோடு பொருத்தமுடைய கந்தருவம் இவ்வைந்துமென வேறுபடுத்தினார். இவை அப்பன்னிரண்டனுட் கூறாநின்ற ஐந்தும் முதலொடு புணர்ந்தவென்றே ஒழியாது பின்னும் 'யாழோர் மேன' என்றார். இவையும் கந்தருவமே என்றற்கு. இவையும் ஒருவன் ஒருத்தி யெதிர் நின்று உடம்படுத்த லொப்புமையுடைய. 'கெடலருஞ் சிறப்பு' எனவே முதல், கரு, உரிப் பொருளானுங் களவென்னுங் கைகோளானும் பாங்கி புணர்த்தலின்மையானும் இலக்கணங் குறைப்பட்டதேனுஞ் சுட்டியொருவர்ப் பெயர்

கொள்ளப்பட்டுக் கற்பியலாகிய இல்வாழ்க்கையும் பெற்று வருதற் சிறப்புடைய இவையும் ஐந்நிலம் பெறுதலேயன்றி யென்றானாம். இது புலனெறியன்றி உலகியலாகலின் உல கியலாற் பாலைநிலனும் ஆண்டு வாழ்வார்க்கு மன்றலும் உளதாகலிற் பாலையும் கூறினான். எனவே, ஐம்புலத்து வாழ் வார் மணமும் செய்யுளுட் பாடியக்கால் இழுக்கின்று என்றான்.

வெள்.

இஃது அன்பின் ஐந்திணைக்குச் சிறந்தன இவை என் கின்றது.

(இ-ள்): முதல் கரு உரியென்னும் திணைக் கூறுபாட்டுடன் பொருந்திய யாழோர் நெறியையொத்த காமக் கூட்டம் வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரை யிறத்தல் என்னும் கெடுதலில்லாத சிறப்பினை யுடைய ஐந்து நிலைகளையும் தனக்குச் சிறந்த நிலைக்களன் களாகக் கொள்ளும், எ-று,

தவல் அருஞ் சிறப்பு—கெடுதலில்லாத சிறப்பு; அருமை ஈண்டு இன்மை குறித்து நின்றது.

சிவ.

இச் சூத்திரம் பாங்கன் நிமித்தம் பன்னிரண்டனுள் இடை நின்ற ஐந்தும் அகன் ஐந்திணைப் பாற்படும் என்கின்றது.

(இ-ள்): முதல் கரு உரி எனும் மூன்று பொருள்களோடு சேர்ந்தனவும் யாழோர் கூட்டத்தின் பாற்படுவனவும் ஆன களவு கற்பு எனும் கைகோள் இரண்டன்பாலும் சாரும் இடை நின்ற ஐந்து கூட்டங்களும் கெடலரிய சிறப்பினையுடைய குறிஞ்சி முதவிய ஐந்து நிலங்களின் பாற்பட்டு அகவொழுக்கங் களாகும்.

உடன்போக்கு நிமித்தம் களவில் அடங்க களவின் முடிவாகிய வரைவும், ஊடல் நீக்கு நிமித்தமும் கற்பில் அடங்கும். இவை பற்றிய செய்யுள்கள் முதல் கரு உரிப் பொருள்களோடும் குறிஞ்சி முதலிய ஐந்நிலங்களுள் ஒன்றோடும் வரும். அப்படி வரச் செய்யும் செய்யுள்கள் அகத்திணைப் பாற்படும்.

இனிப் பாங்கா நிமித்தம் பன்னிரண்டு எனப் பாடங் கொண்ட வெள்ளைவாரணனார், தாம் கூறிய பன்னி

ரண்டனுள் காட்சி ஐயம் துணிவு என்னும் முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பு எனக் கொண்டது பொருந்தும். ஆனால் நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு எனப் பின்னர்க் கூறப்பட்ட நான்கும் பெருந்திணை பெறும் எனக் கூறியது பொருந்தாது. ஏன் எனின் அந்நான்கும் தலைவன் தலைவியர் இருவர் உள்ளத்திலும் பிறர் அறியாமல் நிகழ்வன ஆதலின் அகத்துக்கு உரியனவேயன்றி புறத்தைச் சார்ந்ததான பெருந்திணைக் குரியனவல்ல. வேட்கை முதல் நாணுவரை யிறத்தல் வரையுள்ள ஐந்தும் காமக் கூட்டம் சிறத்தற்குரியன என்பது பொருந்துமேனும் நாணுவரை யிறத்தல் நோக்குவ எல்லாம் அவையே போறல் போலும் உணர்வுகளைப் போன்ற உணர்வே யாதலின் அதுவும் பெருந்திணைப்பாற் படுமேயன்றி அகவுணர்வின்பாற் படாது. ஆதலின் பாங்கன் நிமித்தம் முதல் இச்சூத்திரம் வரை வெள்ளைவாரணனார் உரை ஏற்புடைத்தாமோ எனின் ஆகாது என்க.

தலைவன் தலைவி கூற்று

105. இருவகைக் குறிபிழைப்பு ஆகிய இடத்தும்
காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும்
தான் அகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்
காட்சி ஆசையின் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்குஎதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்
தாளாண் எதிரும் பிரிவி னானும்
நாணுநெஞ்சு அலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்
வரைவு உடம்படுதலும் ஆங்கு அதன் புறத்தும்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோன் மேன என்மனார் புலவர்

ஆ. மொ.

இல.

If she fails to meet her lover in the two places fixed for meeting respectively in day and night, if the time is passing on without having the chance of meeting him, when wailing over the thought of seeing his signs which he might have left to indicate his arrival—for he would not leave the place without going there; at the act of accepting him as an un-invited guest, when he enters into the house in an un-expected time, at the act of welcoming him as a guest, at the time of departure for participating in the war, at the act of shedding the modesty which is annoying her, at the act of contradicting the words of 'tholi' in defending her lover when 'tholi' despises him for not having fixed the time for marriage, at the act of agreeing to the marriage and at the act of refusing the marriage other than one she expected—these are the circumstances where the expressions by lady-love take place-so say the poets.

இளம்.

இது தோழியிற் கூடிய தலைமகன் வரைந்தெய்துங்காறும் கூறும் பொருண்மை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) : இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும் என்பது-பகற்குறியும் இரவிற்குறியும் பிழைப்பாகிய இடத்தும் என்றவாறு. பகற்குறி இரவிற்குறி யென்பது எற்றாற் பெறுது மெனின்

"குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்ற தென்ப" (களவியல்-140)

என்பதனாற் கொள்க. அக் குறிக்கண் தலைவி வரவு பிழைத்த விடத்துத் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு,

"மழைவர வறியா மஞ்ஞை யாலும்
அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி
தானெம் மருளாள் ஆயினும்
யாந்தன் உள்ளுபு மறந்தறி யேமே"[1]

(ஐங்குறு-298)

இது, குறிபிழைத்த வழித் தோழிக்குச் சொல்லியது.

1. கருத்து: மழைவர வறிந்து மயிலாடும் மலைப் பக்கங் களையுடைய நல்லூரில் உள்ள கொடிச்சியானவள்

இல்லோன் இன்பங் காமுற் றாஅங்கு
அரிது வேட்டனையால் நெஞ்சே காதலி
நல்லா ளாகுதல் அறிந்தாங்கு
அரியா ளாகுதல் அறியாதோயே[1] (குறுந்-120)

இது குறி பிழைத்த வழி உள்ளத்திற்குச் சொல்லியது.

காணாவகையிற் பொழுது நனி இகப்பினும் என்பது—தலைமகளைக் காணாவகையிற் பொழுது மிகவும் கடப்பினுங் கூற்று நிகழும் என்றவாறு,

செய்யுள்:

''உள்ளிக் காண்பென் போல்வல் முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆரம் நாறும் அறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே''[2]
(குறுந்-286)

எனவரும்.

தானகம்புகாஅன் பெயர்தல் இன்மையிற்..... பொழுதினும் என்பது—காணாவகையிற் பொழுது மிகக் கழிந்துழிக் காட்சியாசையினாற் குறியிடத்துச் சென்று ஆண்டுக் காணாது கலங்கி வேட்கையான் மயக்கமுற்றுச் செயலற்று நிற்குங் காலத்தினுங் கூற்று நிகழும் என்றவாறு.

புகான் என்பது முற்று வாய்பாட்டான் வந்த வினையெச்சம்.[3] செய்யுள் வந்த வழிக் காண்க.

புகாஅக்காலை புக்கெதிர்ப்பட்டுழிப்......கண்ணும் என்பது-தான் புகுதற்குத் தகுதியில்லாத காலத்துக்கண் அகம்புக்கெதிர்ப்பட்டுழி அவரால் நீக்கப்படாத விருந்தின் பகுதியனாகிய வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

நமக்கு இரங்காளாயினும் யாம் அவளை நினைந்து மறவாதுள்ளேம்.

1. கருத்து: பக்கம் 101-ல் காண்க.
2. கருத்து: பக்கம் 60-ல் காண்க.
3. புகான்-புக மாட்டான்-வினை முற்று. அது 'புகானாய்' என வினையெச்சப் பொருளில் வந்தது.

செய்யுள் :

'' இரண்டறி களவின்நம் காத லோனே
முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நண்ணுற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங் கதுப்பு எண்ணெய்நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோர் அன்னள் வைகறை யானே''[1]

(குறுந்-312)

எனவரும்.

வேளாணெதிரும் விருப்பின் கண்ணும்-என்பது தலைவி உப காரம் எதிர்ப்பட்ட விருப்பின் கண்ணும் கூற்று நிகழும் என்ற வாறு.

அது குறிவழிக் கண்டு கூறுதல். அவ்வழித் தலைவிக்குக் கூறிய செய்யுள்:

''சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
நலம்பெறு கையினென் கண்புதைத் தோயே
பாயல் இன்துணை யாகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயல துளரோஎன் நெஞ்சமர்ந் தோரே''[2]

(ஐங்குறு—293)

இது தலைவி கண்புதைத்த வழித் தலைவன் கூறியது.

''குருதி வேட்கை உருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மரம்பயில் சோலை மலியப் பூழியர்

1. கருத்து பக்கம் 122-ல் காண்க.

2. கருத்து: மலையில் கமழும் காந்தள் குலை போலும் கைகளால் என் கண்களைப் புதைத்தவளே! உறக்கத் திற்கு இனிய துணைவியாகிப் பருத்த தோள்களையும் மயிலின் மாட்சியையும் உடைய மடந்தையே! என் நெஞ்சத்து அமர்ந்தவர் நீயல்லது வேறு உளரோ. இல்லை.

உருவத் துருவின் நாள்மேயல் ஆரும்
மாரி எண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருதல் எவனெனப் பலபுலந்து
அழுதனை உறையும் அம்மா அரிவை.
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி யன்னநின்
ஆய்நலம் உள்ளி வரினெமக்கு
ஏமம் ஆகும் மலைமுத லாறே''[1] (நற்றிணை-192)

எனவும் வரும்.

தாளாண் எதிரும் பிரிவினானும் என்பது—தாளாண்மை எதிரும் பிரிவின் கண்ணும் என்றவாறு, எனவே நெட்டாறு சேறலன்றி அணிமைக்கண் பிரிவென்று கொள்க.

''இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி அருவியின் வெண்டேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீசு கொள்ளியிற் பைம்பயிர் துமியக்
காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மாண் ஆகம் அடைந்துவக் குவமே''[2]

(குறுந்-189)

பிரிந்தவழிக் கூறியதற்குச் செய்யுள்:-

''ஓம்புமதி வாழியோ வாடை, பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் அருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி

---

1. கருத்து: பக்கம் 131-ல் காண்க.

2. கருத்து: தேர்ப்பாகனே! இன்றே சென்று நாளையே திரும்புவோம். மலையினின்றும் விழும் அருவியின் வேகம் போலத் தேரை விரைவு படுத்தி அதன் சக்கரம் விசும்பிலிருந்து வீசும் கொள்ளிகள் அழிப்பது போல் பயிர்களை அழிக்கக் காற்றின் வேகம் போல் வந்து மாலைப் பொழுதிலேயே மனையகம் வந்து அவளின் மார்பைத் தழுவி மகிழ்வோம்.

மரையினம் ஆரும் முன்றில்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே''[1]

எனவும் வரும்.

நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும் என்பது—நாணந் தலைவி நெஞ்சினை வருத்துதலானே நீக்கி நிறுத்துதற் கண்ணும் என்றவாறு.

அஃது, அலராகும் என்றஞ்சி நீக்குதல். அவ்வழித் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு. அவ்வழி இவ்வாறு கூறுகின்றது, புனைந்துரையென்றுக் கருதிக் கூறுதலும் மெய்யென்று கருதிக் கூறுதலும் உளவாம்.

''களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது''[2] (குறள்-1045)

இது புனைந்துரையென்று கருதிக் கூறியது.

''உறாஅதோ ஊரறி கௌவை அதனைப்
பெறுஅது பெற்றன்ன நீர்த்து''[3] (குறள்-1143)

'ஊரறிந்த கௌவை நன்றே காண்; அதனைக் குற்றமாகக் கொள்ளாது பெறாது பெற்ற நீர்மைத்தாகக் கொள்' என்றமை யானுந் தமர் வரைவுடன்படுவர் எனக் கூறியவாறாம்.
இது மெய்யாகக் கொண்டு கூறியது.

வரைதல் வேண்டி......புல்லிய எதிரும் என்பது—வரைந்து கோடல் வேண்டித் தோழியாற் சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த கிளவி பொருந்திய எதிர்ப்பாட்டுக் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது பின்னுங் களவொழுக்கம் வேண்டிக் கூறுதல்.

---

1. கருத்து: ஆயிழை! நின் வருத்தம் தவிர்க, வாழி. பாம்பின் தொங்கும் தோலை ஒக்கும் அருவி யொழுகும் மலையின் அணியது வாகும் நெல்லிக் காயை மானினம் உண்ணும் முற்றத்தையுடைய புல்லால் வேயப்பட்ட குடிசையையுடைய நல்லோள் ஊர்.

2. கருத்து: பக்கம் 134ல் காண்க.

3. கருத்து: வெளிப்படையாக அன்பிலாதவர் சொல்வது போல் சொன்னாலும் அகத்தே பகை யுணர்வில்லாதவர் சொல் அது என்பது விரைவில் உணரப்படும்.

''நல்லுரை இகந்து புல்லுரைத் தாஅய்
பெயல் நீர்க்கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதால் அம்மநின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே''[1]

(குறுந்-29)

எனவரும்.

வரைவுடம்படுதலும்-தோழி கூறிய சொற் கேட்டு வரைவுடம் படுதற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

'' ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பின்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பல் மடந்தை
பரிந்தனென் அல்லனோ இறையிறை யோனே''[2]

(குறுந்-52)

எனவரும்.

ஆங்கதன் புறத்தும் என்பது—அவ்வரைவு நிகழ்ச்சிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. செய்யுள் வந்த வழிக் காண்க.

புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇ என்பது—குற்றம் பட வந்த மறுத்தலொடு கூட என்றவாறு.

அஃது அவர் மறுத்தற் கண்ணுந் தலைமகன் மாட்டுக் கூற்று நிகழும் என்றவாறு அதற்குச் செய்யுள்:

''பொன்அடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையுள்
திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி

---

1. கருத்து: பக்கம் 124ல் காண்க.

2. கருத்து : கூந்தலையும் வெண்பல்லையும் உடையவளே! நீ மலையுறை தெய்வத்தால் வருத்தமுற்றவள்போல் நடுங்குவதைப் பார்த்து யானும் சிறிது சிறிதாக இரங்கி வருந்தினேன்-அல்லனோ.

அசையின ளிருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும்
பெறலருங் குரைய ளாயின் அறந்தெரிந்து
நாமுறை தேஎ மரூஉப்பெயர்ந் தவனொடு
இருநீர்ச் சேர்ப்பி னுப்புடன் உழுதும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பில்
தருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
கண்திரள் முத்தங் கொண்டு ஞாங்கர்த்
தேன்இமிர் அகன்கரைப் பகுக்குங்
கானலம் பெருந்துறைப் பரதவன் நமக்கே''[1]

(அகம்-280)

எனவரும்.

'கிழவோன்மேன என்மனார் புலவர்' என்பது-இச்சொல்லப் பட்டனவெல்லாம் கிழவோன் இடத்தன என்றவாறு.

கூற்றென்னாது பொதுப்படக் கூறுதலான் உள்ள நிகழ்ச்சியும் கூற்றும் கொள்ளப்படும்.

நச்.

இது, மேற்றலைவற்குரிய கிளவி கூறிப் பாங்கனிமித்தம் அவன் கண் நிகழும் பகுதியுங்கூறி அம்முறையானே தலைவிக் குரிய கிளவி கூறுகின்றது.

(இ-ள்) : இருவகைக் குறி பிழைப்பு ஆகிய இடத்தும்— இரவுக் குறியும் பகற் குறியும் பிழைத்தவிடத்தும்.

---

1. கருத்து: ஆய்தொடிக் குறுமகளைக் கலம் நிறை விழுப் பொருள் கொடுப்பினும் பெறுதற்கு அரியவள். நாம் நம்மூரை விட்டு அவளூர் சென்று அவள் தந்தையைச் சார்ந்து உப்புப் பொதியுடன் திரிந்தும் கடலில் அவனுடன் தோணியிற் சென்றும் அவன் வயமாகியும் அவனைப் பணிந்தும் சார்ந்தும் இருப்பின் அவனே அறம் நோக்கியுணர்ந்து அவளைத் தருவானோ. இது தலைவன் தலைவியைப் பெறலரிது என்று உணர்ந்து கூறியது. விழுப் பொருள் கொடுப்பினும் பெறல் அரியள் என்பதால் அவள் தந்தை மறுப்பன் எனும் உணர்வு தலைவனிடம் இருத்தல் காணலாம்.

(உ-ம்)

''முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைத்த சிறுபொற் குடம்பைக்
கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெட் டையகவும் பானாட் கங்குன்
மன்றம் போழு மினமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயிறுறந் தனவாற் றோழியென் கண்ணே''[1]

(குறுந்-301)

''கொன்னூர் துஞ்சினு மியாந்துஞ்ச லமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே''[2] (குறுந்-138)

''ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெறாஅன்
மாறினெ னெனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரனொச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானாக''[3]

எனவரும், (கலி-46)

---

1. கருத்து: தோழீ! முழவு போலும் அடிப்பாகம் உடைய பனை மரத்தின் பனை மடலிலே கட்டிய கூட்டில் இருக்கும் ஆண் அன்றிலைக் கடிய சூல் கொண்டுள்ள பெண் அன்றில் அழைக்கும்படியான நள்ளிரவில் தலைவன் தேர் வாராதாயினும் வருவது போல எண்ணிக் கொண்டு அத் தேரின் மணியோசையானது செவியில் ஒலிப்பதாகக் கேட்டு அதனால் என் கண்கள் துயில் ஒழிந்தன.

2. கருத்து: தோழீ! நள்ளிரவில் ஊரார் தூங்கினாலும், யான் எம்மூர்ப் பக்கத்தில் உள்ள ஏழிற்பாலை மரத்தின் அப்பால் மயிலின் காலடிபோலும் இலைகளையுடைய நொச்சியானது உதிர்க்கும் பூக்கள் விழுகின்ற போது எழும் ஒலிகளைக் கேட்டு உறங்காதிருந்தேன்.

3. கருத்து: தலைவனைக் கூடுதல் விருப்பால் நடுஇரவில் அவன் செய்யும் அடையாளத்தை நோக்கியிருந்து

''இருள்வீ நெய்த லிதழகம் பொருந்திக்
கழுதுகண் படுக்கும் பானாட் கங்கு
லெம்மினு முயவுதி செந்தலை யன்றில்
கானலஞ் சேர்ப்பன் போலநின்பூ
நெற்றிச் சேவலும் பொய்த்தன்றோ குறியே[1]

இது, தன்னுட் கையாறெய்திடு கிளவி.

''புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ''[2]
(சிலப்-கானல் 33

எனவும் இவை குறி பிழைத்துழித் தன்வயினுரிமையும் அவன் வயிற் பரத்தைமையும் படக் கூறியனவாம்.

குறிபிழைத்தலாவது—புனலொலிப் படுத்தலும் புள்ளெடுப்புதலும் முதலியன. குறியெனக் குறித்த வழி அவனானன்றி அவை வேறோர் காரணத்தான் நிகழ்ந்துழி அதனைக் குறியென நினைந்து சென்று அவை அவன் குறியன்மையின் அகன்று மாறுதலாம். பகற்குறிக்கு உதாரணம் வந்துழிக் காண்க.

காணா வகையிற் பொழுது நனி இகப்பினும்—குறி வழிச் செல்லுந் தலைவனை இற்றை ஞான்றிற் காண்டல் அரிதென்று கையறுவதோராற்றாற் பொழுது சேட்கழியினும்.

நொச்சிப்பூ விழும் ஒலியை அவன் செய்யும் அடையாளம் என நினையும் செவியோடு வருந்தியிருந்தேனாக, அவன் பாதியிரவில் என்னை அடையப் பெறாதவனாய் இப்படியே பகற் கூட்டத்தையும் விலக்கினாள் என்று கூறி மனத்தே வருத்தம் கொள்ளும் என்று கூறுவர்.

1. கருத்து: பாதியிரவில் எம்போலவே வருந்தும் செந்தலை அன்றிற் பேடையே! கானலஞ் சேர்ப்பன் குறியிடம் வாய்க்கப் பெறாத எம் போலவே நீயும் நின் ஆண் அன்றிற் செய்த குறியை வாய்க்கப் பெறவில்லையோ.

2. கருத்து: துன்பம் மிக்க மாலைப் பொழுதில் தனிமையால் வருந்தும் என் கண்போலத் தூக்கம் இல்லை என்பதில்லாமல் நன்றாகத் தூங்கும் நெய்தற் பூவே! நீ காணும் கனவில் வன்கண்ணராகிய தலைவன் வரக் காண்பையோ? காண்பாயாயின் கூறுக.

என்றது, தாய் துஞ்சாமை ஊர் துஞ்சாமை காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல் நாய் துஞ்சாமை போல்வனவற்றால் தலைவன் குறியின்கண் தலைவி வரப் பெறாமல்[1] நீட்டித்தலாம்.

(உ-ம்)

''இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவவாய் ஞமலி குரையாது மடியிற்
பகலுரு வுறழ நிலவுக்கான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலத் தொருநாள்
நில்லா நெஞ்சத் தவர் வாரலரே
யதனால், அரிபெய் புட்டிலார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே''[2]

(அகம்-122)

---

1. தலைவனைக் குறியின்கண் தலைவி வரப் பெறாமல் என்க.

2. கருத்து: தோழீ! நம் களவொழுக்கமானது தித்தனது உறையூர்ப் புறங்காடு போலப் பல தடைகளையுடை

''கருங்கால் வேங்கை வீயுகு துறுக
விரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே''[1]
(குறுந்-47)

''வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி லெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி லெழாதாய்க் குறாஅலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்''[2]
(யா.வி.சூ. 87 மேற்கோள்)

இதுவுமது.

தானகம் புகாஅன் பெயர்த லின்மையிற் காட்சி ஆசையிற் களம் புக்குக் கலங்கி வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும்— அங்ஙனங் காணா வகையிற் பொழுது நனி யிகந்து தலைவி குறி தப்பியக்காலுந் தலைவன் குறியிடம் புகுந்தல்லது பெயரா னென்பது தான் அறியுமாதலின் ஆண்டுப் புகுந்தவன் தான்வந்து நீங்கினமை அறிதற்கு ஒரு குறிசெய்தன்றி வாளாது பெயரா னன்றே? அக்குறி காணுங் காட்சி விருப்பினாற் றலைவி பிற்றை ஞான்று விடியலிற் சென்று ஆண்டைக் குறிகண்டு கலங்கி அவனை எதிர்ப்படுதல் வேட்கையளாகிச் செய்வதறியாது மயக்கத்தோடு கையறவு எய்தும் பொழுதின் கண்ணும்.

யது. அத்தடைகளாவன : ஊர் துஞ்சாது; ஊர் துஞ்சின் தாய் துஞ்சாள்; அவள் துஞ்சின் ஊர்க் காவலர் விரைகுவர்; அவர் துஞ்சின் நாய்கள் குரைக்கும்; அவை துஞ்சின் நிலவு எழும்; நிலவு மறையின் கூகை குழறும்; கூகை மடியின் கோழி கூவும்; எல்லாம் அடங்கியபோது அவர் குறியிடம் வருதலிலர்—தலைவி கூற்று.

1. கருத்து: நெடிய காலம் தங்கும் வெண்ணிலவே! யாங் கொள்ளும் களவொழுக்கத்துக் கிடையூறாக இரவிலே வேங்கை மலர் வீழ்ந்துள்ள பாறைகள் புலிபோலத் தோற்றமளிக்கும் காட்டிடத்து வருதலின் நீ நல்லவன் இல்லை.

2. கருத்து: வேங்கைப் புலி நடமாடும் சிறுநெறியில் என் கேள்வன் வரும் போது வெண் திங்களே! நீ எழுந்து ஒளி தராதே. அப்படி எழாத நின்னை நீண்ட நாகத்தின் பற்கள் உறாதனவாகுக.

'தான்' என்றது தலைவனை. இரவுக்குறியினை 'அகம்' என்றார். இரவுக்குறி எயிலகத்தது* என்பதனால் குறியிற் சென்று நீங்குவனெனவே காட்சி அவன் மேற்றன்றிக் குறி மேற்றாம். குறி, மோதிரம் மாலை முத்தம் முதலியன கோட்டி னுங் கொடியினும் இட்டு வைத்தனவாம். இவை வருத்தத்திற்கு ஏதுவாம். இது விடியல் நிகழு மென்றற்குப் 'பொழுது' என்றார். எனவே காண்பன விடியலிற் காணுமென்றார். 'மயங்கும்' என்றதனால் தோழியும் உடன்மயங்கும். அது

> ''இக்காந்தண் மென்முகைமேல் வண்டன்றஃ
> திம்முகையிற்
> கைக்காந்தண் மெல்விரலாய் காணிதோ—புக்குச்
> செறிந்ததுபோற் றோன்றுந் தொடுபொறி யாம்பண்
> டறிந்ததொன் றன்ன துடைத்து''[1]

புகாஅக் காலைப் புக்கு எதிர்ப்பட்டுழிப் பகாஅ விருத்தின் பகுதிக் கண்ணும்—உண்டிக் காலத்துத் தலைவி யில்லத்துத் தலைவன் புக்கெதிர்ப்பட்டவழி நீக்கி நிறுத்தாத விருந்து ஏற்றுக் கொள்ளும் பகுதிக் கண்ணும்.

எனவே, மனையகம் புகுதற்கு ஒவ்வாத மிக்க தலைவன் புகுந்தால் இஃதொன்றுடைத் தெனத் தேராது தாய் அவனை விருந்தேற்று நீக்கி நிறுத்தற் பகுதியுந் தழீஇயினவாறாயிற்று,

புகாஅக் கால மாதலிற் பகாவிருந் தென்றான்.* விடியற்கால மாயிற் றலைவன் புகானெனவும், புகாக் காலத்துப் புக்க ஞான்றாயின் அவர் விருந்தேற்றுக் கோடல் ஒருதலை யென்று

---

* தலைவி மனையின் மதிலிடத்தது.

1. கருத்து: காந்தள் போல் மெல்லிய விரலுடைய தலைவியே! இதோ காணப்படுவது காந்தள் முகையில் தங்கிய வண்டன்று. இந்த முகையில் (மொட்டில்) உள்ளே சென்று செறிந்ததுபோற் றோன்றுவது தொடு பொறி (மோதிரம்) ஆகும். இது நாம் முன்னமேயே அறிந்ததொன்றாம் தன்மையுடையதாகும். அதனால் இரவு தலைவன்வந்து தான் வந்ததற்கு அடையாளமாக இத்தொடுபொறியை இம்மொட்டில் வைத்துச் சென் றான் போலும். என் செய்வோம்.

* இதனால் உணவு நேரத்தில் வந்தவரை உணவு கொள்ளச் செய்வது தமிழர் மரபு எனக் கொள்ள லாம்,

புகும் என்றுங் கொள்க. தலைவி காட்சியாசையிற் கலங்கியதற் கேற்பத் தலைவற்குங் காட்சியாசை கூறிற்று. அது,

''சுடர்த்தொடீஇ கேளாய் தெருவி னாமாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றாளென யானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னாயிவ னொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான் போனோக்கி நகைக்
கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்''[1] (கலி-51)

இது, புகாக் காலத்துப் புக்கானை விருந்தேற்றுக் கொண் டமை பின்னொரு காலத்துத் தலைவி தோழிக்குக் கூறியவாறு காண்க.

---

1. கருத்து: சுடர்த் தொடியுடைய தோழியே! கேட்பா யாக. முன்னொரு நாள் யாம் சிற்றிலிழைத்து ஆடிய போது அச்சிற்றிலைச் சிதைத்து மாலையையும் பந்தை யும் எடுத்துக் கொண்டு ஓடித் துன்புறுத்தினன் ஒரு சிறு பட்டி. அவன் பின்பொருநாள் அன்னையும் யானும் வீட்டில் இருந்தபோது வந்து உண்ணு நீர் வேட்டேன் என்றான். அன்னை என்னைப் பார்த்து நீரூட்டி வா என்றாள். யான் நீரொடு சென்ற போது என் வளைய லணிந்த முன் கையைப் பற்றித் தொல்லை தந்தான். உடனே அன்னையே இவன் செய்ததைப் பார் எனக் கூக்குரலிட்டேன். அன்னை வந்து என் என்றாள். யான் உடனே நீர் விக்கினான் என்றேன். அன்னை அவனை முதுகைத் தடவிக் கொடுத்தாள். அப்போது

"அன்னை வாழ்க பலவே தெண்ணீ
ரிருங்கடல் வேட்ட மெந்தை புக்கெனத்
தார்மணி நெடுந்தேர் நீவி யானுமோர்
எல்லமை விருந்தின னென்ற
மெல்லம் புலம்பனைத் தங்கென் றோளே"[1]

இது தோழி கூற்றுமாம்.

'ஒன்றிய தோழி' யென்றதனால் தோழி கூற்று வந்துழிக் காண்க.

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ வன்னை
யொருநா, ணகைமுக விருந்தினன் வந்தெனப்
பகை முகவூரிற் றுஞ்சலோ விலளே"[2]

(குறுந்-292)

அவன் என்னைக் கொல்வதுபோல் கடைக்கண்ணால் பார்த்துச் சிரித்தான்.

1. கருத்து: என் தந்தை கடலில் மீன் வேட்டைக்குப் புக்கானாக மெல்லம் புலம்பனானவன் வந்து இவ் விரவில் யான் விருந்தினனாக வந்தேன் என்றானாகத் தாயும் அப்படியே தங்குக என்றாள். தாய் பல காலம் வாழ்க.

2. கருத்து: தோழி! ஒரு நாள் நம் தலைவன் விருந்தாக நம் வீட்டிற்கு வந்தானாக அன்று தொடங்கி நம் தாயானவள் ஐயப்பட்டுப் போர்க்களத் தருகுள்ள ஊரார் தூங்காதது போலத் தூங்காமல் காத்து வருகிறாள். நீராடச் சென்ற ஒரு பெண் நீர்வழி வந்த பசுங்காயைத் தின்ற தவறுக்காக அவள் தந்தை எண்பத்தொரு யானைகளுடன் அவள் போற் பொன்னாற் செய்யப்பட்ட பாவை ஒன்றைத் தண்டமாக இறுப்பவும் கொள்ளானாய் அப் பெண்ணைக் கொலை செய்த நன்னன் என்பான் செல்லும் நரகத்தில் நம் தாய் சேர்வாளாக.

இது புகாக் காலத்துத் தலைமை மிக்க தலைவன் புக்கதற்கு விருந்தேலாது செவிலி இரவுந் துயிலாதாளைத் தலைவி முனிந்து கூறியது.

வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்—அங்ஙனம் விருந்தா தலேயன்றித் தலைவி வேளாண்மை செய்ய எதிர் கொள்ளக் கருதுதல் காரணத்தால் தோழி அவனை விருந்தேற்றுக் கோடற் கண்ணும்.

என்றது, தலைவி அவற்கு உபகாரஞ் செய்யக் கருதி அதனைக் குறிப்பாற் கூறத் தோழி அவனை விருந்தாய்த் தங்கென்னும்.

(உ-ம்)

''நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
நுணங்குமண லாங்க ணுணங்கப் பெய்ம்மார்
பறிகொள் கொள்ளையர் மறுக வுக்க
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
யெல்லை தண்பொழிற் சென்றெனச் செலீஇயர்
தேர்பூட் டயர 'வேஎய்வார் கோற்
செறிதொடி திருத்திப் பாறுமயிர் நீவிச்
செல்லினி மடந்தை நின்றோழியொடு மனையெனச்
சொல்லிய வளவை தான்பெரிது கலிழ்ந்து
தீங்கா யினளிவ ளாயிற் றாங்காது
நொதுமலர் போலப் பிரியிற் கதுமெனப்
பிறிதொன் றாகலு மஞ்சுவ லதனாற்
சேணின் வருநர் போலப் பேணா
யிருங்கலி யாணரெஞ் சிறுகுடித் தோன்றின்
வல்லெதிர் கொண்டு மெல்லிதின் வினைஇத்
துறையு மான்றின்று பொழுதே சுறவு
மோதமல்க கடலின் மாறா யினவே
யெல்லின்று தோன்றல் செல்லா தீமென
வெமர் குறை கூறத் தங்கி யேமுற
விளையரும் புரவியு மின்புற நீயு

மில்லுறை நல்விருந் தயர்த
லொல்லுதும் பெருமநீ நல்குதல் பெறினே''[1]

(அகம்-300)

இதனுள், 'தான் பெரிது கலுழ்ந்து தீங்காயினள்' எனவே அக் குறிப்புத் தலைவன் போகாமற் றடுப்பக் கூறியதென்று உணர்ந்து தோழி கூறினாள்.

வாளாண் எதிரும் பிரிவினானும்—வாளாண்மை செய்தற்கு ஒத்த பிரிவு தோன்றிய வழியும்.

ஆண்டுத் தலைவி மேற்றுக் கிளவி. மூவகைப் பிரிவினும் பகை வயிற் பிரிவு விதந்தோதி அதிகாரப்பட்டு வருகின்ற களவினுள் அவை நிகழப்பெறா. இதுவாயின் வரைவிடை வைத்துப் பிரிய வும் பெறும் அரசர்க்கு இன்றியமையாத பிரிவாகலின் என்பது கருத்து. ஓதலுந் தூதும் வரைவிடை வைத்துப் பிரிவிற்குச் சிறந் தில வென்றானாம். இப்பிரிவு அரசர்க்கு உரித்தென்பது 'தானே சேறலும்' (27) என்னும் சூத்திரத்தாற் பெறுதும்.

வாளாண்மைக்கு ஏற்ற பிரிவெனவே முடியுடை வேந்தரே வலிற் பிரியும் அரசர் கண்ணது இப்பிரிவென்க. சிறுபான்மை அவ்வேந்தற்கும் உரித்து. 'வெளிப்படை தானே' (141) என்பத னுள் இப்பிரிவில்லை என்பராதலின்; அது

''பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனாம் வனப்பார விடுவதோ

---

1. கருத்து: பெரும! நீ நின்தேரினின்றும் தலைவியை இறக்கி நின் தோழியொடு மனைக்குச் செல்க எனச் சொல்லிய அளவில், அவள் பெரிதும் கவலையுற்றாள். அக் கவலையைப் பொருட்படுத்தாமல் ஏதிலர்போல நீ பிரியின் அவள் இறப்பினும் இறப்பாள் என நான் அஞ்சு கிறேன். எனவே என் சொல்லைக் கேட்பாயானால், நீ எம் சிறூருக்குவரின் எங்கள் வீட்டினர் நின்னை அழைத்து வினாவி நீபோதற்கு வரும் இடையூறுகளாக பொழுது மயங்குதல், கடலலை பெருகிக் கரையேறுவ தால் அதனாலடித்து வரப்பட்ட சுறாக்கள் பகையாதல், பகலொளி மறைந்து இருள் வருதல் முதலிய சொல்லித் தங்கும்படிக் கூறுவர். நீயும் இன்பம் எய்துமாறு எம் வீட்டில் நல்ல விருந்தாக நின்னை ஏற்று உபசரிப் போம்,

புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்ப னுதிபொர முற்றிய கடும்பனி''[1]
(கலி-31)

இதனுட் பனியெதிர் பருவங் குறிஞ்சியாகலிற் களவிற் பிரிந் தான் வாளாணெதிரும் வென்றி தோழிக்குத் தலைவி கூறிய வா‌று. இஃது அவன்வயிற் பரத்தைமை கருதாதது.

நாணு நெஞ்சு அலைப்ப விடுத்தற் கண்ணும்—தலைவிக்கு இன்றியமையாத நாணுத்தான் அவள் நெஞ்சினை அலைத்தலின் அவள் அந்நாணினைக் கைவிடுதற் கண்ணும், அஃது உடன் போக்கினாம் வரைவுகடாவும் வழியும் வேட்கை மீதூர்ந்து நாண் துறந்துரைத்தல் போல்வன.

''அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கொம்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே''[2] (குறுந்-149)

இஃது உடன்போக்கு வலித்தமையின் நாண் துறந்து கூறியது.

வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர்கிளவி புல்லிய எதிரும்—வரைதல் விருப்பினால் தோழி தலைவற்கு வரைவு கடாய்க் கூறிய புரைதீர் கிளவியைத் தலைவி பொருந்தி நின்றே இயற்பழித்தற்கு மறுத்தாள்போல் நிற்கும் எதிர் மறையையும்.

---

1. கருத்து: பூ மொட்டுப் போலும் மேல்வாய்க் கீழ்வாய்ப் பற்கள் பொரும்படி புதலைச் சூழ்ந்து மூடும் பனி யானது, பகைவென்று திறை கொண்ட தேர்மேல் வருபவரது வகையமைந்த தலைமையமைந்த அழகைத் துய்க்க விடுமோ? விடாது.

2. கருத்து: நம் நாணம் மிக இரங்கத் தக்கது. இதுநாள் வரை நம்மோடிருந்து உழன்று வந்தது. இப்பொழுது பூங்கொம்புகளையுடைய மணலின் சிறிய கரையானது நீரலை நெரிக்க நெரிக்கச் சிறிது சிறிதாகக் கரைந்தது போல காமம் நெரிக்க நெரிக்க கையகப் படாமல் ஒழிந்தது.

புரைதீர் கிளவி—தலைவனுயர்பிற்கு ஏலாது இயற்பழித்து உரைக்குங் கிளவி. அது, ''பாடுகம்வா வாழி தோழி'' என்னுங் குறிஞ்சிக் (41) கலியுள்,

''இலங்கு மருவித் திலங்கு மருவித்து
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை''. (கலி-41)

எனத் தோழி இயற்பழித்தவாய்பாட்டான் வரைவு கடாவ அதனை உடம்பட்டுப் பழித்தற்கு உடம்படாதாள்.

''பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
வஞ்சலோம் பென்றாரைப் பொய்த்தற் குரியனோ
குன்றக னன்னாடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
றிங்களுள் தீத்தோன்றி யற்று''[2]
(கலி-41)

எனத் தலைவி இயற்பட மொழிந்து எதிர் மறுத்தவாறு காண்க.

''அருவி வேங்கைப் பெருவரை நாடற்
கியானெவன் செய்கோ வென்றியா னது
நகையென வுணரே னாயி
னென்னா குவைகொ னன்னுத னீயே''[3]
(குறுந்-96)

இதுவும் இயற் ப்ழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது.

---

1. தான் சொன்ன சூளுறவைப் பொய்த்தவன் மலையாய் இருந்தும் அது விளங்கும் அருவியினை யுடைத்தாய் இரா நின்றது.

2. தானுற்ற சூளைப் பொய்த்தற்குரியனோ. பிரியேன் என்று அஞ்சுதலை விடுக என்று கூறித் தெளிவிக்கப் பட்டவரைப் பொய்த்தற்கு உரியனோ. அப்படி வாய்மையில் பொய் தோன்றுமாயின் அது திங்களில் தீத்தோன்றியது போலாகும்.

3. நல்ல நுதலையுடைய தோழியே! நீ தலைவன் (நாடன்) நல்லது செய்யாததற்கு யான் என் செய்வேன் என்று கூறினாய். அக் கூற்றை நீ நகையாகக் கூறினாய் என்று நான் கொள்ளாக்கால் நீ என்ன ஆவாய் தெரியுமா?

வரைவு உடன்படுதலும்—தலைவற்குத் தலைவி தமர்வரை வுடம்பட்டதனைத் தலைவி விரும்புதலையும்;

(உ-ம்)

''இலையமர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரு
மலையக நாடனும் வந்தான்மற் றன்னை
யலையு மலைபோயிற் றின்று''[1] (ஐந்-எழு-3)

''ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றா
யினியது கேட்டின் புறுக விவ்வூரே
முனாஅ, தியானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மரந்தை யன்னவெங்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே''[2]
(குறுந்-34)

தமரான் ஒறுக்கப்பட்டு ஓவாராய்த் துயருழத்தல் ஆகாதென ஆற்றுவிக்குஞ் சொற்களான் மறுத்துரைப்பவுந் தேறாராய்த் தனித்து இருப்பார் உறக்கங் காரணமாக எழுந்த கௌவை கேளாது வரைந்தெய்திய மாற்றங் கேட்டு இவ்வூரும் இன்புறுக என்பதாம்.

ஆங்கதன் புறத்துப் புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇ—அவன் வரைவு வேண்டினவிடத்து அவ்வரைவு

---

1. கருத்து: இலையுடைய காட்டு மல்லிகை பரந்த சோலையில் காந்தட் குலையில் வண்டுகள் ஒலிக்கும் படியான மலை நாடனும் வரைவொடு வந்தான். இனி நம்மைத் தாய் அலைக்கும் அலையும் போயிற்று.

2. கருத்து: விட்டு நீங்காது உடன் இருக்கும் தாயர் கண்டிககவும், தலைவர் மணம் பேசிவரத் தந்தையர் மறுப்பவும் தனித்துத் துயர் உறும் மகளிர் இனி இனிய இவ்வுரை கேட்டு இன்புறுக. அவ்வுரையாவது வண்டாழங் குருகுகள் பகைவரையட்ட வீரர் ஆர்ப்பரிக்கும் ஒலிகேட்டு அஞ்சும் படியான குட்டுவன் மரந்தை நகர் போலும் வளமிக்க தலைவிக்கு உரிய தலைவன் தான் காதலித்த அவனே யாவான் என்பதே.

புறத்ததாகியவழித் தலைவி தன்னுயர்பு உண்டாகத்தோன்றியது மறுத்தலோடே முற்கூறியவற்றைத் தொகுத்து:

'அதன் புறம்' எனவே அதற்கு அயலாகிய நொதுமலர் வரைவாயிற்று. 'தலைவி தன் குடிப் பிறப்புங் கற்பும் முதலிய உயர்ச்சிக்கு ஏற்ப அதனை மறுத்துத் தலைவன் வரையுமாறு நீ கூறெனத் தோழிக்குக் கூறுமென்றற்குப் 'புரைபட வந்த மறுத்தல்' என்றார்.

"வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த
வோரிப் புதல்வ னழுதன னென்பவோ
புதுவ மலர்தைஇ யெமரென் பெயரால்
வதுவை யயர்வாரைக் கண்டு மதியறியா
வேழையை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழி யவனுழைச் சென்று;
சென்றியா னறிவேன் கூறுக மற்றினி
சொல்லறியாப் பேதை மடவைமற் றெல்லா
நினக்கொரூஉ மற்றென் றகலகலு நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யனைத்தாகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு
தருமணற் றாழப்பெய் தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் தனித்தே யொழிய
வரிமணன் முன்றுறைச் சிற்றில் புனைந்த
திருநுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்தும்
தெருமரல் கைவிட் டிருக்கோ வலர்ந்த
விரிநீ ருடுக்கை யுலகம் பெறினும்
அருநெறி யாயர் மகளிர்க்கு
இருமணங் கூடுத லில்லியல் பன்றே"[1] (கலி-114)

எனவரும்

---

1. கருத்து. இஃதோர் உரையாடல் வகையில் அமைந்த பாடல்.

தலைவி: தோழீ! தலைவன்பால் சென்று நம்மவர் என் பெயரைச் சொல்லி புதுமலர் புனைந்து எனக்குத்

"மள்ளர் குழீஇய விழவி னானும்" (குறுந்-31)

என்பதுமாம்.

இச் சூத்திரத்து உருபும் எச்சமுமாயவற்றைக் 'கிழவோண்மேன' என்பதனோடு முடித்து, முற்றிற்குக் கிளவியென ஒரு பெயர் வெளிப்படுத்து முடிக்க. புல்லிய எதிரையும் உடன் படுதலையும் மறுத்தலுடன் தொகுத்தது.

கிழவோள் மேன என்மனார் புலவர்—தலைவியிடத்தன கிளவியென்று கூறுவர் புலவர் என்றவாறு.

வெள்.

இது தோழியின் உடன்பாடு பெற்றுத் தலைமகளைக் கூடிய தலைவன் தலைவியை மணந்து கொள்ளுங்காறும் நிகழ்வன வற்றைத் தொகுத்துக் கூறுகின்றது.

திருமணம் அயர்தலைக் கண்டும் நீ வாளா இருத்தலபல் ஊரவர் மயிர் புறம்புதைய உள்ள மகன் தான் மணம் முடிக்க இயலாது அழுதனன் என்று சொல்வார்களோ. நீ அறிவுடையாய் இல்லை என்று சிரித்துச் சொல்லி வருக.

தோழி: அவ்வாறே சென்று சொல்லி வருவேன். இனி எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதைக் கூறு.

தலைவி: மடவாய்! நீ அவ்னிடம் சென்று இப்படிச் சொல். ஏடா! நின் குரவரிடம் சென்று அவள் வதுவை எனக்கேயாக வேண்டும் என்று சொல்ல அறியாதவனானாய். நீ மடவை. அதனால் அவள் மணம் நினக் குரியதன்றாய் விடும். அது நீண்ட காலத்தில் இல்லை அவள் மணம் நினக்கே வருவதாக நினைப்பாயாக என்று இப்படி நீ சொல்லும் சொல் இருத்தல் வேண் டும். நீ சொல்வதை அவன் ஏவலாகக் கொள்ளுமாறு கூறுக. இன்னும் கேள். ஆயத்தின் நீங்கி அவனுடன் புணர்ந்த ஒரு மணத்தை நம் நெஞ்சம் அறியும். நம் சுற் றத்தார் நடத்தும் திருமணம் வேறொருவனிடத்ததாய் இருக்க இது இரண்டாவது திருமணமாகும். உலகமே பெறினும் ஆயர் குடிப்பிறந்தார்க்கு இரண்டு திருமணம் இயல்பன்று என்பதை நினைந்து வருந்தும் வருத்தத்தை யான் விடுவேனோ? விடுவேனாயின் யான் பிறந்த குடிக்குப் பழுதுண்டாம். என் கற்பும் நீங்கும்.

(இ-ள்): பகற்குறி இரவுக்குறியென்னும் இருவகைக் குறிகளும் தப்பிய நிலையிலும், தலைமகளைக் காண இயலாதவாறு பொழுதும் நீட்டித்த நிலையிலும், தான் தலைமகளது இல்லத்திற்குப் புகப்பெறானாகிக் களவொழுக்கத்தின் மீளுதல் இன்மையால் தலைமகளைக் காணுதல் வேண்டும் என்னும் பெருவிருப்பத்தால் மீண்டும் குறியிடத்தே சென்று காணப் பெறாது கலக்கமுற்று வேட்கையால் மயங்கிச் செயலற்று நிற்கும் காலத்தினும், உணவுண்ணுங் காலத்தில் தலைமகளது மனைக்கண் விருந்தினனாகப் புகுந்து தலைமகளை எதிர்ப்பட்ட போது அவளுடைய சுற்றத்தாரால் தள்ளத் தகாத விருந்தாக ஏற்று உபசரிக்கப் பெற்ற நிலையிலும் தலைமகளும் தோழியும் விருந்து உபசரிப்பாராக விரும்பி எதிரேற்ற நிலையிலும், தாளாண்மையினை மேற்கொண்டு வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியும் நிலையிலும், களவு அலராகி வெளிப்பட்டு விடுமோ என்னும் அச்சத்தோடு நாணம் தலைவி நெஞ்சினை வருத்துதலால் தலைமகளை விலகி ஒழுகுதற் கண்ணும், தலைவியை மணந்து கொள்ளுதல் வேண்டித் தோழி கூறிய குற்றந் தீர்ந்த சொல்லினையேற்றுப் பொருந்திய எதிர்ப்பாட்டின் கண்ணும், தோழி கூறிய சொற் கேட்டு வரைவுடம் படுதற் கண்ணும், அங்கு அவ்வரைவு புறத்ததாய வழிக் குற்றம் பட நேர்ந்த தமர் வரைவு மறுத்தலொடு கூட இங்குக் கூறப் பட்டன வெல்லாம் தலைமகன் மேலன என்பர் ஆசிரியர், (எ-று),

இந் நூற்பாவில் 'தான் அகம்புகாஅன்' என் புழித் 'தான்' தலைவனை யாகலானும் 'நாணு நெஞ்சலைப்ப விடுத்தல்' என் புழி 'விடுத்தல்' தொழிலாகலானும் வரைதல் வேண்டித் தோழி செப்புதல், தலைவனை நோக்கியாகலானும் 'கிழவோன் மேன' என இளம்பூரணர் கொண்ட பாடமே தொல்காப்பியனார் கருத்துக்கு ஏற்புடையதென்பதும், 'கிழவோள் மேன' என நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் அத்துணைப் பொருத்த முடைய தன்றென்பதும் நன்கு புலனாகும். 'கிழவோன் கூற்று' என்னாது 'கிழவோன் மேன' எனப் பொதுப்படக் கூறினமை யின் இவ்விடங்களில் தலைவனது உள்ள நிகழ்ச்சியும் கூற்றும் உடன் கொள்ளப்படும்.

சிவ.

இச் சூத்திரம் தலைவன் தலைவி இருவர்க்கும் உரியதாகக் கொள்ளலாம். 'கிழவோன் மேன' என இளம்பூரணரும் 'கிழ

வோள் மேன' என நச்சினார்க்கினியரும் கொண்டாலும் இளம்பூரணர் பாடமே நன்று. கிழவோன் கூற்று என்னாது 'கிழவோன் மேன' என்றமையால் 'கிழத்தி மேன' எனவும் கொள்ளலாம் எனக் கொண்டு இருவர்க்கும் உரிய நிலையிலேயே உரையும் உதாரணங்களும் கொள்ளலாம்.

கிழவன் என்பது 'கிழவோன்' எனவரும். அன் விகுதி ஆன் ஆகிப் பின் 'ஓன்' ஆகும்.

தலைவிக்குக் கூற்று நிகழுமாறு

106. காமத் திணையிற் கண்ணின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயின் ஆன. (18)

ஆ. மொ.

இல.

For the modesty and simplicity in the act of love belong to the feminine nature, her amorousness will be known only by gesture and environment in accordance with the code of love.

இளம்.

என்பது மேல் தலைவற்குரிய கிளவி கூறி. இனித் தலைவிக் குரிய கிளவி கூறுகின்றாராகலின் முற்பட அவள், தலைவனைக் கண்ணுற்றவழிவரும் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

தலைவியிடத்து நிலைமை பெற்று வருகின்ற நாணமும் மடனும் பெண்மைக்கு அங்கமாகலின், காமவொழுக்கத்தின் கண் குறிப்பினானும் இடத்தினானுமல்லது வேட்கை புலப்பட நிகழாது தலைவியிடத்து என்றவாறு.

காமத்திணை என்பதனைக் குறிப்பென்பதற்கு முன்னே கூட்டியுரைக்க. அச்சமும் இயல்பன்றோவெனின், அதுவும் வேட்கைக் குறிப்பினான் நீங்குமென்ப. அச்சமுள்வழி

வேட்கை நிகழாமையின். வேட்கையுள்வழி நாணும் மடனும் நீங்காவோ எனின், அது வருகின்ற சூத்திரத்தாற் கூறுப.

இதனாற் சொல்லியது தலைவி தலைவனை எதிர்ப்பட்டு முன்னிலையாக்கல் முதலாகத் தலைவன் மாட்டு நிகழ்ந்தமை போலத் தலைவி மாட்டு நிகழ்பவை உளவோவெனின், அவள் மாட்டுக் குறிப்பினானாதல், சொல்லுதற்குத் தக்க விடத்தினா னாதல், தோற்றுவதல்லது, புலப்பட்டு நிகழாதென்றவாறா யிற்று.

''உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று''. (குறள்-1090)

என்றது தலைவனைக் கண்ட தலைவி வேட்கைக் குறிப்பினால் தன்னுள்ளே கருதியது.

இடம் பற்றி வேட்கை தோற்றியதற்குச் செய்யுள்.

"..
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணா மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர்க என்ன நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும்என் கட்கே''[1]

(அகம்-110)

எனத் தன் குறிப்புக் காலத்தாற் கூறுதலாற்றாது பின் இடம் பெற்றுழிக் கூறியவாறு காண்க.

---

1. கருத்து: கடலில் கொடியசையும் கப்பல் வரும் தோற் றத்தைக் காண்போம் என்று சொல்லிக் காலாற் சிற்றிலைச் சிதைத்துப்போன தோழியர் பலருள் என் னொருத்தியை மட்டும் குறித்த பார்வையோடு, நன்னுத லாய்! நான் போகவா எனக் கேட்டு நான் போக எனச் சொல்ல என்னையே பார்த்துத் தன் நெடிய தேரைப் பற்றி நின்றான் அவன். அக்காட்சி இன்னும் என் கண்ணிடத்ததாகும்.

நச்.

இஃது உள்ளப்புணர்ச்சிக்கு உரியவாறு மெய்யுறுபுணர்ச்சிக் கண்ணும் நிகழுமென்ற நாணும் மடனுங் குறிப்பினும் இடத்தினும் வருமெனக் கூறுதலின் 'அச்சமு நாணும்', (99) என்பதற்குப் புறநடையாயிற்று. இதனை ஈண்டுக் கூறினான், இடத்தின் கண்வரும் நாணும், மடனுந் தந்தன்மை திரிந்து வருமென்பதூஉம், அது கூற்றின்கண் வருமென்பதூஉங் கூற்று நிகழ்கின்ற இவ்விடத்தே கூறவேண்டுதலின். எனவே, இது முதலிய சூத்திரம் மூன்றும் முன்னர்த் தலைவிக்குக் கூற்று நிகழுமென்றற்குக் கூற்று நிகழுங்கால் நாணும் மடனும் நீங்கக் கூறும் என்று அக் கூற்றிற்கு இலக்கணங் கூறினவேயாயிற்று.

(இ-ள்) : அவள் வயின் ஆன நாணும் மடனும் பெண்மைய ஆதலின்—தலைவியிடத்து உளவாகிய நாணும் மடனும் பெண்மைப் பருவத்தே தோன்றுதலையுடையவாதலின், காமத்திணையிற் கண்ணின்று குறிப்பினும் வரூஉம்—அப் பருவத்தே தோன்றிய காமவொழுக்கங் காரணமாக அவை கண்ணின் கணின்று குறிப்பினும் வரும். வேட்கை நெறிப்பட இடத்தினும் வரூஉம்—அன்றி வேட்கை தன்றன்மை திரியாது வழிப்படுதலாலே கரும நிகழ்ச்சிக்கண்ணும் வரும்; அல்லது வாரா—அவ்வீரிடத்துமல்லது அவை வாரா என்றவாறு.

இயற்கைப் புணர்ச்சிக்கண் உரியவாகக் கூறும் பன்னிரண்டு மெய்ப்பாட்டானுங் குறிப்பின்கண் நாணும் மடனும் நிகழ்ந்தவாறுணர்க.

> ''ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
> கருமநிகழ்ச்சி யிடமென மொழிப''

என்னுஞ் செய்யுளியற் (510) சூத்திரத்தான் இடமென்றதனைக் கருமநிகழ்ச்சி என்றுணர்க.

அஃதாவது இடந்தலைப்பாடும் பாங்கொடுதழாஅலும் தோழியிற்புணர்வுமாம். இவற்றின் கண்ணும் நாணும் மடனும் நிகழுமென்றான். இனித் தோழியிற் புணர்வின்கண் வரும் நாணும் மடனுந் தந்தன்மை திரிந்து வருமென மேலிற் சூத்திரத்தாற் கூறுகின்றான்.

வெள்.

ஒத்த அன்பினரான தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுக் கண்ணுற்ற நிலையில் தலைமகள் பால் வேட்கை தோன்றுமாறு கூறுகின்றது.

(இ-ள்): அன்பின் ஐந்திணை யொழுகலாற்றில் தலைமகளது கண்ணின் குறிப்புடன் ஒன்றி வெளிப்படும் நாணமும் மடனும் ஆகிய இவை பெண்மைக்குரிய இன்றியமையாப் பண்புகளா தலின் தலைவியின் வேட்கை, குறிப்பினாலும் இடத்தினாலும் அன்றிக் கூற்றினால் வெளிப்படுமளவுக்கு அவ்விடத்தில் முறை மைப்பட மிக்குத் தோன்றுதல் இல்லை எ-று.

வேட்கை குறிப்பினும் இடத்தினும் அல்லது அவள் வயின் நெறிப்பட வாரா என இயையும். தலைமகள் உள்ளத்தே தோன்றும் வேட்கையுணர்வுகள் அவளது சொல்லால் வெளிப் படாமைக்குக் காரணம் கூறும் நிலையில் அமைந்தது.

''காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணமும் மடனும் பெண்மைய வாதலின்''

எனவரும் தொடராகும். காமத்திணை—காமப் புணர்ச்சி, அன்பின் ஐந்திணை யொழுகலாறு. கண்நின்று வருதலாவது கண்ணின் குறிப்புடன் ஒன்றி நின்று வெளிப்படுதல். பெண் மைய—பெண்மையிடத்தன. குறிப்பு வினைமுற்று. அவள் என்றது தலைவியை.

107. காமம் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளஎன மொழிப (19)

ஆ. மொ.

இல.

For there is no look which cannot reveal the love, the two (modesty and simplicity) exist for the safety.

இளம்.

என்பது, மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

வேட்கையுரையாத கண் உலகத்தின்மையால் தலைவன்

ஏமுறற் பொருட்டு நாணும் மடனும் உளவாம் என்றவாறு.

இதனாற் சொல்லியது மேல் தலைவிக்கு இயல்பாய்க் கூறப்பட்ட அச்சமும் நாணும் மடனும் என்பனவற்றுள் வேட்கையால் அச்சம் நீங்கின வழி நாணும் மடனும் நீங்காவோ என்றையுற்றார்க்கு அவை தலைமகற்கு ஏமமாதற் பொருட்டு நீங்காவாம் என்பதூஉம், வேட்கைக் குறிப்புக் கண்ணினான் அறியலாமென்பதூஉம், உணர்த்தியவாறு. என்னை? நாணும் மடனும் இல்லாதாரைத் தலைமக்கள் அவமதிப்பாராதலால்.

(உ-ம்)

''கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்''[1] (குறள்-1173)

இதனுள் 'கடலன்ன காமம் உழந்தும்' என்றதனான் வேட்கை மிக்க நிலையினையும் 'மடலேறாப் பெண்' என்றமையான் நாணும் மடனும் நீங்கா நிலையினையும் கூறுதல் காண்க.

''கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'' (குறள்-1100)

இதனுள் அகத்து நிகழ் வேட்கையினைக் கண்ணினால் அறியக் கிடந்தமை கூறியவாறு காண்க.

நச்.

இது, கருமநிகழ்ச்சிக்கண் வரும் நாணும் மடனுந் தந்தன்மை திரிந்து வருமென்கின்றது.

(இ-ள்): சொல்லாக் காமம் இன்மையின்—கரும நிகழ்ச்சியிடத்துக் கூற்று நிகழாத காமம் புலனெறி வழக்கின்கணின்மையின், இரண்டும் ஏமுற நாட்டம் உளவென மொழிப—முற்கூறிய நாணும் மடனுந் தந்தன்மை திரிந்துவர நாட்டுதல் உளவென்று கூறுவர் புலவர் என்றவாறு.

என்றது, தோழியிற் கூட்டத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவளென்பதூஉம், நிகழுங்கால் நாணும் மடனும் பெரும்பான்மை

1. கருத்து: கடல்போல் பரந்த காமத்தால் துன்புற்றாளாயினும் அது காரணமாக மடல் ஏறாத பெண்மை போலப் பெருமை வாய்ந்தது இல்லை.

கெட்டு அக்கூற்று நிகழுமென்பதூஉம் அங்ஙனங் கெடுதலையும் முந்து நூற்கண் ஆசிரியர் நாட்டுதல் உளவென்பதூஉங் கூறிய வாறாயிற்று.

''தேரே முற்றன்று நின்னினும் பெரிதே''
(கலி-74)

''பேரேமுற் றாய்போல முன்னின்று விலக்குவாய்''
(கலி-113)

என்றாற்போல மயக்கம் உணர்த்திற்று,

இனி நாணும் மடனுங் கெட்டகூற்றுத் தோழியை நோக்கிக் கூறுமென மேற் கூறுகின்றான்.

வெள்.

இது காதலர் இருவர் தம்முள் எதிர்ப்பட்டுக் காணும் காட்சியில் தலைமகளது உள்ளத்தே தோன்றும் வேட்கை தனித்து மீதூர்ந்து வெளிப்படாது நாணொடும் மடனொடும் பிரிவின்றித் தோன்றுதற்குரிய காரணம் கூறுகின்றது.

(இ-ள்) : உள்ளத் தெழுந்த வேட்கையை வெளிப்படுத்தாத காதலர் கண்கள் உலகத்தில் இல்லாமையால் (ஒத்த காதலர் இருவரிடையே நிகழ்தற்குரிய களவொழுக்கமாகிய இவ்வொழுக வாறு) ஏமம் (பாதுகாவல்) உடையதாதற் பொருட்டு முன் குறித்த நாணமும் மடனுமாகிய பெண்மைக் குணங்கள் இரண்டும் தலைமகள் பால் நீங்காது உள்ளனவாம் என்று கூறுவர் சான்றோர், (எ-று)

சொல்லுதல்—வெளிப்படுத்தல். நாட்டம்—கண். ஏமம் ஏம் என மருவியது. ஏமம்—பாதுகாவல். உற—உறுதற் பொருட்டு. இரண்டும்—முன்னைய சூத்திரத்திற் கூறப்பட்ட நாணமும் மடனும்.

மகளிர்பால் என்றும் நீங்காது உளவாதற்குரிய அச்சம் நாணம் மடன் என்னும் மூன்றனுள் முதற்கண்ணதாகிய அச்சம் வேட்கை காரணமாக நீங்கினும் நாணம் மடன் என்னும் இரண்டும் தலைமகள்பால் எக்காலத்தும் நீங்காது உள்வாம் என்பது கருத்து.

108. சொல்எதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான (20)

ஆ. மொ.

இல.

As speaking against his words is rare on her part, the expressions of non-speech devolve on her.

இளம்.

என்பது, இதுவும் தலைவி மாட்டு ஒரு கூற்றுச் சொல் நிகழு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

தலைவன் இயற்கைப் புணர்ச்சி கருதிக் கூறுஞ் சொல்லெதிர் தான் வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்குடம்பட்ட நெறி யைக் கூறுதல் அருமையுடைத் தாதலான் அதற்கு உடம்பாடல் லாத கூற்றுமொழி தலைவியிடத்தன என்றவாறு; என்றது இசை வில்லாதாரைப் போலக் கூறுதல்.

(உ-ம்)

"யாரிவன் என்னை விலக்குவான் நீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு
சொல்லலோம் பென்றார் எமர்"[1]

எனவரும் இதன்பின்,

"....................
எவன் கொலோ

---

1. கருத்து: என்னை விலக்குவானாகிய இவன் எனக்கு என்ன உறவுடையவன்? (என்று புலந்து கூறுவாள் போல் கூறி நேரே) தாமரைப் பூவினைக் கொடுத்த கல்லாத இடையர்குலப் பொதுவனே! எம் சுற்றத்தார் நும் களவொழுக்கத்தை அறிந்தார்போல எம்மொடு பேசுதலை விடுக என நின்னிடம் கூறினார். ஆதலின் நீ இவ்விடம் விட்டுப் பெயர்க,

மாயப் பொதுவன் உரைத்த உரையெல்லாம்
வாயாவ தாயின் தலைப்பட்டாம் பொய்யாயின்
சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்
ஆயித முண்கண் பசப்பத் தடமென்தோள்
சாயினும் ஏஎர் உடைத்து''[1] (கலித்-112)

என உடம்பாடு கூறினாளாதலின் முற்கூறியது அல்ல கூற்றாயிற்று.

நச்.

இது நாணும் மடனும் பெரும்பான்மை நிகழாத கூற்றுத் தோழிக்குத் தலைவி கூறுமென்கின்றது.

(இ-ள்) : எதிர்சொல்—அங்ஙனம் நாணும் மடனும் நீங்கிய சொல்லை; அவள்வயின் மொழிதல் அருமைத்து அல்ல ஆகலின்-தோழியிடத்துக் கூறுதல் அருமையுடைத்தல்ல வாகையினாலே; கூற்று மொழி ஆன—குறிப்பானன்றிக் கூற்றாற் கூறும் மொழி தலைவிக்குப் பொருந்தின என்றவாறு.

எதிர்தல்—தன்றன்மை மாறுபடுதல், ''ஒன்றிய தோழி யொடு'' (41) என அகத்திணையிற் கூறுதலானும், 'தாயத்தி னடையா (221) எனப் பொருளியலிற் கூறுதலானும் அவள் வயின் நாணும் மடனும் நீங்கிய சொல்லைக் கூறுதலும் பொருந்துமென்றான். அவை முற்காட்டிய உதாரணங்களுள்,

''கூடுதல் வேட்கையாற் குறிபார்த்து' (கலி-46)

எனவும்,

''வளைமுன்கைபற்றி நலியத் தெருமந்திட்டு (கலி-51)

எனவும்,

''காமநெரிதரக் கைந் நில்லாதே'' (குறுந்-149)

எனவும்,

கூறிய வாற்றானும், மேற் கூறுகின்ற உதாரணங்களானும் நாணும் மடனும் நீங்கிக் கூற்று நிகழ்ந்தவாறுணர்க.

---

1. கருத்து: மாயப் பொதுவனாகிய அவன் உரைத்த உரை யெலாம் எப்படிப் பட்டனவோ? உண்மையான ஆயின் அவனொடு மனைவாழ்க்கைப் பட்டோமாவோம். பொய்யாயின் நின் உண்கண் பசலையடைய மென் தோள்கள் மெலியினும் உன்மேனி ஓர் அழகுடைத் தேயாம்,

'சூத்திரத்துட் பொருளன்றியும்...படுமே' (658)
என்பதனான் இவ்விலக்கணம் பெறுதற்கு இம் மூன்று சூத்திரத்திற்கும் மாட்டுறுப்புப்படப் பொருள் கூறினாம்.

இனிக் கூற்று நிகழுங்கால் நாணும் மடனும் பெண்மையவாதலிற் குறிப்பினும் இடத்தினுமன்றி வேட்கை நெறிப்படவாராவென்று பொருள் கூறிற் 'காட்டிய உதாரணங்கட்கு மாறுபாடாகலானுஞ் சான்றோர் செய்யுட்களெல்லாங் குறிப்பும் இடனுமன்றிப் பெரும்பான்மை கூற்றாய் வருதலானும் ஆசிரியர் தலைவன் கூற்றுந் தலைவி கூற்றுந் தோழி கூற்றுஞ் செவிலி கூற்றுமெனக் கூற்றுஞ் சேர்த்து நூல் செய்தலானும் அது பொருளன்மையுணர்க.

வெள்.

இத் தலைமகன் தன் வேட்கையைக் குறிப்பினாலன்றிக் கூற்றினாற் புலப்படுத்துதல் இல்லை என்கின்றது.

(இ-ள்) : இயற்கைப் புணர்ச்சிக் கண் தலைவன் தன்னை நோக்கி வினவும் வினாவுக்குத் தலைவி வெளிப்பட மறுமொழி கூறுதல் என்பது அவளது பெண் தன்மைக்கு மிகவும் அருமையுடையாததலின் கூற்று மொழியல்லாத குறிப்பு மொழிகளே அவள்பால் தோன்றும், எ—று,

'அல்ல கூற்று மொழி' என்றது கூற்று மொழியல்லாத குறிப்பு மொழிகளை.

> தாமுறு காமத்தன்மை தாங்களே உரைப்பதென்பது
> ஆமென லாவதன்றால் அருங்குல மகளிர்க்கம்மா
> (கம்ப. சூர்ப்ப. 45)

என்பதும் இங்கு நினைக்கத் தகுவதாம்.

களவின்கண் தலைவன் வினாவும் சொல்லிற்குத் தலைவி எதிர்மொழி கூறுதல் என்பது மிகவும் அரிதாகலின் அந்நிலையில் கூற்றல்லாத குறிப்பு மொழிகளே அவள்பால் தோன்றும் என்றவாறாம். 'அல்ல கூற்று மொழி' என்றது கூற்று மொழியல்லாத குறிப்பு மொழியினை.

சிவ.

காமத் திணையின், காமம் சொல்லா, சொல்லெதிர் என்னும் மூன்று சூத்திரங்களும் தலைவியின் நாணும் மடனும்

பற்றியன என்பதில் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஒத்த கருத்தினரே. என்றாலும் சூத்திரங்களுக்குப் பொருள் கொண்ட வகையில் மாறுபடுகின்றனர்.

1. தலைவி நாண் மடம் அச்சம் இயல்பாகவுடையவள். அதனால் இயற்கைப் புணர்ச்சியின் முதற் காட்சியில் தலைவன்பால் சென்ற வேட்கை காரணமாக அவட்குக் கூற்று நிகழுமோ எனின் நிகழாது. எனினும் தன் கண்ணின் குறிப்பால் தன் வேட்கையைப் புலப்படுத்துவாள். சொல்லால் புலப்படுத்த மாட்டாள். பிறிதொரு காலத்தில் அவ் வேட்கையைப் பற்றித் தக்க இடம் வாய்ப்பின் புலப்படுத்துவாள்.

2. உலகில் காமக்குறிப்பை யுணர்த்தாத கண் இல்லை அதனால் தலைவியின் கண் இரண்டும் தன் வேட்கைக் குறிப்பினைத் தலைவனுக்கு உணர்த்தும். அப்போது அவளுக்கு இயல்பாக உள்ள அச்சம் நீங்கும். அச்சம் இருந்தால் வேட்கை நிகழாது. அதனால் வேட்கை நிகழவே அச்சம் நீங்கி விடும். ஆனால் நாணும் மடனும் நீங்கா. ஏன்எனின் நாண் மடம் நீங்கியவளைத் தலைவன் மதியான்; விரும்பான். அதனால் நாணும் மடனும் வேட்கையைப் புலப்படுத்தும்போது நீங்காது தலைவன் வேட்கைக்கு ஏமமாக அமையும். அதாவது தலைவன் அன்பு சிறப்பதற்கு உரியவாக அமையும்.

3. இயற்கைப் புணர்ச்சியின் முதற் காட்சியில் தலைவன் தன் வேட்கையினைப் புலப்படுத்திப் பேசும் பேச்சின் எதிரே உடம்பட்டவளாகத் தன் வேட்கையைக் கூற்றால் கூறுதல் இயலாது ஆதலின் உடன்படாதவள் போலக் கூறுதல் உண்டு.

இளம்பூரணர் இவ்வாறு மூன்று சூத்திரங்களுக்கும் உரை கூறினர். இனி நச்சினார்க்கினியர் கூறியது வருமாறு:

1. நாணமும் மடனும் பெண் தன்மையன ஆதலின் அவை இயற்கைப் புணர்ச்சியில் தலைவிக்குக் கூற்று நிகழுமிடத்துக் காமவொழுக்கம் காரணமாகக் கண்ணில் பொருந்திக் குறிப்பாக வெளிப்படும்.

2. அந் நாணமும் மடனும் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டங்களாகிய கருமநிகழ்ச்சி யிடங்களில், கூற்று நிகழாத செய்யுள் வழக்கு—புலனெறி வழக்கு இல்லாமையால் அவ்வழக்கில் அதாவது அச் செய்யுளில் அந்நாணமும் மடனும் தம் தன்மை திரிந்து வரப் பாடப்படுதல் உண்டு. நாணமும் மடனும் தம் தன்மை திரிதலாவது கெடுதல்.

3. நாணமும் மடனும் நீங்கிய கூற்றைத் தோழியிடம் கூறுதல் அருமையன்று ஆதலின் கூற்றாற் கூறுதல் தலைவிக்குப் பொருந்தும்.

இளம்பூரணர் உரை நாணமும் மடனும் எவ்விடத்தும் தலைவிக்கு நீங்காது நிற்கும் என்பதை யுணர்த்த, நச்சினார்க்கினியர் உரை தலைவி தன் வேட்கையைக் குறிப்பாற் கூறும் இடத்தில் நீங்காதிருப்பினும் இடந்தலைப்பாடு முதலிய இடங்களில் அவை நீங்கும் என்பதை யுணர்த்துகிறது.

தலைவி கூற்று நிகழ்த்த வேண்டின் நாணமும் மடனும் என்னவாகும் என்பது கூறப்பட வேண்டுவதாம்.

இயற்கைப் புணர்ச்சியின் முதற் காட்சியில் தலைவிக்குத் தலைவன்பால் வேட்கை மீதூர்தலின் அதனைக் கண்ணாற் குறிப்பாகவே புலப்படுத்தச் செய்யும் நாணும் மடனும். இடந்தலைப்பாடு முதலிய இடங்களிலும் அவை தலைவியிடம் அமைந்து கிடக்கும் என்பது முதற் சூத்திரப் பொருளாம். அவ்வாறு அமைந்து கிடப்பது ஏன்? வேட்கை தோன்றியவுடன் அச்சம் நீங்குவதுபோல அவையும் நீங்க வேண்டாவோ எனின் அவை நீங்கின் தலைவன் தலைவியைக் குறைவாக எண்ணும். அதனால் அவை அவளிடம் நீங்காமலே பொருந்தியிருக்கும் என்பது இரண்டாம் சூத்திர உரை.

தலைவி தன் வேட்கையைத் தலைவனுக்குப் புலப்படுத்துவதாயின் அவன் சொல்லுக்கு நேராகத்தான் சொல்லால் புலப்படுத்துதல் அருமையுடைத்து (முடியாது) ஆதலின் குறிப்பாகவே புலப்படுத்தும் என்பது மூன்றாம் சூத்திரவுரை.

எனவே இச் சூத்திரம் மூன்றும் இயற்கைப் புணர்ச்சியை நோக்கிச் கூறப்பட்டனவே என்னலாம். நாணமும் மடனும் தம் தன்மை திரிந்து (நீங்கி) வரும் என நச்சினார்க்கினியர் கூறுவது அத்துணைச் சிறப்பின்று.

மேலும் தலைவி கூற்று

109. மறைந்துஅவற் காண்டல் தற்காட் டுறுதல்
நிறைந்த காதலிற் சொல்எதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்துஎதிர் கோடல்

பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்
இட்டுப்பிரிவு இரங்கினும் அருமைசெய்து அயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த்து அழுங்கினும்
நொந்துதெளிவு ஒழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வரும்தொழிற்கு அருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரின்அது மாற்றுதற் கண்ணும்
நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையிற்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்
பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினும் களவு அறி வுறினும்
தமர்தற் காத்த காரண மருங்கினும்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்
பொழுதும் ஆறும் புரைவது அன்மையின்
அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்
காமம் சிறப்பினும் அவன்அளி சிறப்பினும்
ஏமம் சான்ற உவகைக் கண்ணும்
தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தையும்
அன்ன உளவே ஓரிடத் தான (21)

ஆ. மொ.

இல.

Being hidden on seeing him, in showing herself, in failing in her attempt to expose his faults owing to intense love, in refusing to adore him, in the reception after the refusal, in showing her faultless smile a little, being caught in his hanas, when she is at confusion, when modesty sweeps over her, when she bemoans over his departure at a short distance, when he forgets her, making his appearance rare in her place, when she ignores his arrival, when she sings after leaving him, being grieved when losing serenity of mind, when fear prolongs, when she bemoans at his departure, on having him in her over-joy, when the go-between ('Vāyil') narrates the difficulties in his coming, when unheeding the words of 'Vāyil' being guarded in the house losing her patience and balance of mind, when she reveals her secret worthy of keeping in mind, when nobody pleads on her revealing, when trying to preveut the marriage, depriving her life with somebody, when she hides the happenings being known in normal way, having known through the friendship of "Tholi" the need of the lady-love on her meeting with the lover caused by fate, at the exposition of her great qualities in eight aspeots of her love dear to her, on feigned attempt of riding the horse of Palymyra-stems, when 'tholi' being helpless consoles her lady by removing the tears on her face, at the fear of 'Bachanalian' dance (Veriyattu), at her confusion on having signs similiar to those of her lord, when the marriage comes to be celebrated, when the secret love is being known, at the reasons for being guarded by her relatives, at the lovers coming to the places formerly fixed for meeting her and at his return being disappointed, and on knowing this when she puts the blame upon herself for his disappointment on seeing the places without him, at the description of his great qualities established without fault, at the thought of their sufferings when the time and route are unsuitable for his arrival, when the feeling of love abunds when his caresses exceed the limit and during

the joy of uninterrupted pleasure, the expressions take place because of her right and of his love for some other lady (on the part of the lady-love.)

இளம்.

என்றது, தலைவிக்கு இயற்கைப் புணர்ச்சி முதலாகக் களவின்கட், 'குறிப்பினு மிடத்தினுமல்லது' (களவியல்-18) நிகழ்ச்சியில்லாவற்றினும் கூற்று நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்): மறைந்தவற் காண்டல் என்பது—தன்னைத் தலைவன் காணாமல் தான் அவனைக் காணுங் காட்சி.

தற்காட்டுறுதல் என்பது—தன்னை அவன் காணுமாறு நிற்றல்.

நிறைந்த......மழுங்கல் என்பது—நிரம்பிய வேட்கையால் தலைவன் கூறிய சொற்கேட்டு எதிர்மொழி கூறாது மடிந்து நிற்றல்.

இம்மூன்றிடத்தினுங் கூற்று நிகழாது.

வழிபாடு மறுத்தல் என்பது—அதன்பின் இவன் வேட்கைக் குறிப்புக் கண்டு சாரலுற்றவழி அதற்கு உடம்படாது மறுத்தல்.

அது குறிப்பினானும் கூற்றினாலும் வரும்.

மறுத்தெதிர் கோடல் என்பது—மறுத்தாங்கு மறாது பின்னும் ஏற்றுக் கோடல்.

பழிதீர்... .தோற்றல்—குற்றந்தீர்ந்த முறுவல் சிறிது தோற்றுவித்தல்.

அது புணர்தற்கு உடன்பாடு காட்டி நிற்கும் இவை ஆறு நிலையும் புணர்ச்சிக்கு முன் நிகழும். ஈண்டுங் குறிப்பு நிகழ்ச்சி யல்லது கூற்று நிகழ்ச்சி அருகியல்லது வாராது. அவற்றுள் சில வருமாறு:—

''இகல் வேந்தன் சேனை'' என்னும் முல்லைக்கலியுள்

மாமருண் டன்ன மழைக்கண்சிற் றாய்த்தியர்
நீமருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையவை
யாமுனியா ஏறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை

நீஎவன் செய்தி பிறர்க்கு
யாம்எவன் செய்தும் நினக்கு[1]

இது வழிபாடு மறுத்தது. இன்னும் இதனுள்,

''தேங்கொள் பொருப்பன் சிறுகுடி எம்ஆயர்
வேந்தூட்டு அரவத்து நின்பெண்டிர் காணாமல்
காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையுள் நின்பெண்டிர் கேளாமை
ஆம்பற் குழலாற் பயிர்பயிர் எம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி.''[2] (கலத்-108)

இது மறுத்தெதிர் கோடல்.

பழிதீர் முறுவல் சிறிதே தோற்றற்கு உதாரணம்:—

''அன்னையோ,
மன்றத்துக் கண்டாங்கு சான்றார் மகளிரை
இன்றி அமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ எமர்காண்பர் நாளையுங்
கன்றொடு சேறும் புலத்து''[3] (கலத்-110)

இதனுள் 'அன்னையோ' என்பது நகையொடு கூடிய சொல்.

1, 2. கருத்து: மான்போல் மருளும் கண்ணுடையராய சிறிய ஆய்ச்சியர்களிடம் நீ மருட்டும் சொற்களைக் கூறு. யான் மருளேன். பல பசுக்களை வெறாது கூடும் ஏறு போல நீ தினமும் பத்து மகளிரைக் காமுற்றுக் கூடும் கண்குத்திக்கள்வன் மகன் அல்லையோ. நீ பிறர்க்கு யாது செய்வை; யாம் நினக்கு என் செய்வோம். ......தேனைக் கொண்ட பொதிய மலைக்குரியோன் சிறு குடியில் உள்ள எம் ஆயர் வேந்தன் வாழத் தெய் வத்துக்கு மடை கொடுக்கும் விழாவுக்கு வந்த பெண்டிர் நின்னைக் காணாமலும், குரவைக் கூத்துக்கு வரும் நின் பெண்டிர் கேளாமலும் காஞ்சி நீழலில் செய்த குறியிடத்து வந்து ஆம்பற் பண் அமைந்த குழலால் அழைப்பாயாக.

3. கருத்து: அப்படிப்பட்டவனா நீ. ஊர் மன்றத்துச் சான்றோர் மகளிரையின்றி வாழேன் என்று பலவும் சொல்க. ஆனால் இங்கு எமர் நின்னைக் காண்பர். நாளையும் யாங்கள் கன்றோடு மேய்ச்சல் புலம் செல் வோம். ஆண்டு வருக.

கைப்பட்டுக் கலங்கினும் என்பது—தலைவன் கையகப்பட்ட பின்பு என் செய்தேமாயினேம் எனக் கலக்கமுறினும் என்றவாறு.

நாணுமிக வரினும் என்பது—தலைவிக்கு முன்புள்ள நாணத்தினும் மிக நாணம் வந்துழியும் என்றவாறு.

இட்டுப் பிரிவிரங்கினும் என்பது—தலைவன் இட்டு வைத்துப் பிரிவன் என அஞ்சியதற்கு இரக்கமுறினும் என்றவாறு.

அருமை செய்தயர்ப்பினும் என்பது—தலைவன் வருதற்குக் காவலாகிய அருமை செய்ததனால் அவனும் வருதலைத் தவிரினும் என்றவாறு,

வருதலைத் தவிர்தலை அயர்ப்பு என்றார். அன்றியும் புறத்து விளையாடுதற்கு அருமை செய்ய மயக்கம் வரினும் என்றுமாம். செய்தென்பதனைச் செயவெனத் திரிக்க.

வந்தவழி எள்ளினும் என்பது—தலைவன் வந்தவிடத்து அலராகு மென்றஞ்சி இகழ்ந்த வழியும் என்றவாறு.

விட்டுயிர்த் தழுங்கினும் என்பது—மறையாது சொல்லி இரங்கினும் என்றவாறு.

நொந்து தெளிவொழிப்பினும் என்பது—தலைவன் தெளிவித்த தெளிவை நொந்து, அதனை யொழிப்பினும் என்றவாறு.

அச்சம் நீடினும் என்பது—தலைவன் வருகின்றது இடையீடாக அச்சம் மிக்குழியும் என்றவாறு.

பிரிந்தவழிக் கலங்கினும் என்பது—தலைவன் பிரிந்தவழிக் கலக்கமுறினும் என்றவாறு.

அது தாளாணெதிரும் பிரிவு.[1]

பெற்றவழி மலியினும் என்பது—தலைவனோடு கூட்டம் பெற்றவழி மகிழினும் என்றவாறு.

வருந்தொழிற்கு அருமை வாயில் கூறினும் என்பது—தலைவன் வருதற்கு இடையீடாகக் காவலர் கடுகுதலான் ஈண்டு வருதல் அரிதெனத் தோழி தலைவிக்குச் சொல்லினும் என்றவாறு.

---

1. சூ. 17.

கூறிய...காலையும் என்பது—தோழி இவ்வாறு கூறியதனை மனம் கொள்ளாத காலத்தினும் என்றவாறு.

மனைப்பட்டு....அருமறையுயிர்த்தலும் என்பது — புறத்து விளையாடுதல் ஒழிந்து மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்குச் சூழ்தலமைந்த அரிய மறைப் பொருளைச் சொல்லலும் என்றவாறு.

எனவே சிதையாதவழித் தோழிக்குச் சொல்லாளாம் என்பது போந்தது. வேட்கை மறைக்கப்படுதலின் மறையாயிற்று.

'கைப்பட்டுக் கலங்கல்' முதலாகக் 'கூறிய வாயில் கொள்ளாக் காலை' யீறாகச் சொல்லப்பட்ட பன்னிரு வகையினும் தலைமகள் தோழிக்கு உரைக்கப் பெறும். அஃது உரைக்குங்கால் மனைப்பட்டுக் கலங்கி மேனி சிதைந்த வழியே உரைக்கப் பெறுவது. ஆண்டும் இதற்கு என் செய்வோம் என உசாவுதலோடுகூடத் தனது காதன்மை தோன்ற உரைக்கும் என்றவாறு. மனைப்படாக்கால் அவனைக் காண்டலால் உரைக்க வேண்டுவதில்லை யென்றவாறாயிற்று. இப்பன்னிரண்டும் ஒருத்தி மாட்டு ஒருங்கு நிகழ்வன அல்ல. இவ்விடங்கள் உரைத்தற்கு இடமென இலக்கணங் கூறியவாறு.

அவற்றுள் கைப்பட்டுச் கலங்கியதற்குச் செய்யுள்:—

'கொடியவுங் கோட்டவும்' என்னுங் குறிஞ்சிக் கலியுள்,

''நரந்தநா றிருங்கூந்தல் எஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரல்அமை ஒருகாழ்
விரன்முறை சுற்றி மோக்கலும் மோந்தனன்
நறாஅவிழ்ந் தன்னஎன் மெல்விரற்போது கொண்டு
செறாஅச் செங்கண் புதைய வைத்துப்
பறாஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்
தொய்யில் இளமுலை இனிய தைவந்து
தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி அளிக்கும்
மையல் யானையின் மருட்டலும் மருட்டினன்;

அதனால்,

அல்லல் களைந்தனன் தோழி நந்நகர்
அருங்கடி நீவாமை கூறி னன்றென
நின்னொடு சூழ்வல் தோழி நயம்புரிந்
தின்னது செய்தாள் இவளென
மன்னா உலகத்து மன்னுவது புரைமே.''[1]

(கலித்-54)

இதனுட் கைப்பட்டுக் கலங்கியவாறும் அருமறை உயிர்த்தவாறும் இவ்வாறு செய்யாக்கால் இறந்துபடுவன் என்னுங் குறிப்பினளாய் 'மன்னா வுலகத்து மன்னுவது புரையும்' எனவுங் கூறியவாறு காண்க.

நாணுமிக வந்ததற்குச் செய்யுள்:

''நோக்குங்கால் நோக்கித் தொழூஉம்பிறர் காண்பார்
தூக்கிலி தூற்றும் பழியெனக் கைகவித்துப்
போக்குங்காற் போக்கும் நினைந்திருக்கும் மற்றுநாம்
காக்கும் இடமன் றினி''[2] (கலித்-63)

இது நாணம் மிக்கவழித் தோழியொடு உசாவியது.

---

1. கருத்து: தோழீ! நரந்தப்பூ நாறும் கூந்தல் முழுதும் பற்றிப் பிடித்து அதில் புனைந்த ஒரு மலர்க் கொத்து மாலையைத் தன் விரலிற் சுற்றி மோந்து பார்க்கவும் செய்தான். நறவ மலர் விரிந்தது போன்ற என் மென் விரல்களைக் கொண்டு தன் செங்கண் மறைய வைத்துக் கொல்லன் உலைமூக்குப்போல உயிர்த்தலும் உயிர்ப்பன். என் தொய்யில் எழுதிய இளமுலைகளைத் தடவி பிடியை மயக்கும் காம மயக்கம் உடைய களிறு போல என்னை மயக்கவும் மயக்குவான். அதனால், என் துயர் நீக்கினேன். தோழீ! அவனொடு அரிய மணத்தை நீக்காமல் வேண்டி நின்னோடு சூழ்வேன். அப்படிச் செய்வாயாயின் தாயிடம் அறத்தொடு நின்று இப்படிப்பட்ட ஒரு மணத்தை நிகழச் செய்தாள் இத் தோழி எனும் வார்த்தை நில்லாவுலகத்து நிலை பெறும்.

2. கருத்து: நாம் பார்க்குங்கால் நம்மைப் பார்த்துத் தொழும். பிறர் காணுவரே என்று ஆய்தல் இல்லாத அவன் அப்படித் தொழுவதால் பிறரால் பழிதூற்று வன் என எண்ணிப் போகச் செய்தால் போக வருந்திப் போகாமல் இருக்கும். எனவே இனி நாம் அவனை வாராதே எனத் தடுக்கும் இடம் இல்லை.

இட்டுப் பிரிவிரங்கியதற்குச் செய்யுள்:

''அம்ம வாழி தோழி காதலர்
பாவை யன்னஎன் ஆய்கவின் தொலைய
நல்மா மேனி பசப்பச்
செல்வேம் என்பதம் மலைகெழு நாட்டே''[1]

(ஐங்குறு-221)

எனவரும்.

அருமை செய்தயர்த்தற்குச் செய்யுள்?

''நெய்தற் புறவின் நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலுட் கண்டநாட் போலானாற்
செய்த குறிவழியும் பொய்யாயின் ஆயிழாய்
ஐயகொல் ஆன்றார் தொடர்பு''[2]

(திணை மொழி-41)

எனவரும்.

வந்தவழி யெள்ளியதற்குச் செய்யுள்:

கண்திரள் முத்தம் மயக்கும் இருண்முந்நீர்ப்
பண்டங்கொள் நாவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டேன் எனத்தெளிந்தேன்
நின்ற உணர்விலா தேன்''[3]

(ஐந்திணையெழு-56)

---

1. கருத்து: தோழி வாழி நம் காதலர் பாவையின் அழகு போலும் என் அழகு அழியவும் நல்ல மேனி பசலை யடையவும் நம்மைப் பிரிந்து தம் மலை நாடு நோக்கிச் செல்வேன் என்பர்.
2. கருத்து: ஆயிழையாய்! நெய்தற் பூக்கள் நிறைந்த படப்பையில், நிறைந்த கால்வாய்களையுடைய தாழைக் கானலுள் சேர்ப்பனை முதல் நாளில் கண்டதுபோல இன்று காணப்பட்டான். அதாவது அரியன் ஆனான், அவன் செய்த குறியிடங்களும் பொய்த்தன. அதனால் ஆன்றமைந்த அவர் தொடர்பு ஐயந்தானோ?
3. கருத்து: கண்போல் திரண்ட முத்துகளைப் பயக்கும் கடலில் பண்டங்களாகக் கொள்ளும் நாவாய்கள் வழங்கும் துறைவனைக் கானலிடத்துக் கண்டது போலத் தெளிவடைந்தேன். இதற்கு முன் இருந்த உணர்வு இப்போது இல்லாத யான்.

இதனுள் 'பின்னும் வருவன் என்றிருந்தேன், அதனான் எள்ளினேன்' என்பது கருத்து.

"..............
ஏறிரங் கிருளிடை இரவினிற் பதம்பெறாஅன்
மாறினென் எனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரல்நொச்சிப்
பாடோர்க்கும் செவியோடு பைதலேன் யானாக"[1]

(கலித்-46)

இஃது எள்ளினாயென நினைத்தான் என்ற வழிக் கூறியது.

விட்டுயிர்த் தழுங்கியதற்குச் செய்யுள்:

பிணிநிறந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
மணிமலை நாடன் வருவன்கொல் தோழி
கணிநிற வேங்கை மலர்ந்துவண் டார்க்கும்
மணிநிற மாலைப் பொழுது"[2] (திணைமொழி-9)

எனவும்,

"மரையா உகளும் மரம்பயில் சோலை
உரைசார் மடமந்தி ஓடி உகளும்
புரைதீர் மலைநாடன் பூணேந் தகலம்
உரையா உழக்கும்என் நெஞ்சு"[3]

(கைந்நிலை-6)

எனவும் வரும்.

நொந்து தெளிவொழித்தற்குச் செய்யுள்:

"மன்றத் துறுசுற் கருங்கண் முசுஉகளுங்
குன்றக நாடன் தெளித்த தெளிவினை

---

1. கருத்து: பக்கம் 164-ல் காண்க.

2. கருத்து: தோழீ! மணிமலை நாடன் பிணி நிறமாகிய பசலை நீங்கி தோள் பருக்கக் காலத்தைக் கணிக்கும் பொன்னிற வேங்கை மலரில் அமர்ந்து வண்டார்க்கும் இந்த அழகிய மாலைப் பொழுதில் வருவானோ?

3. கருத்து: காட்டுப்பசு துள்ளித் திரியும் சோலையில் மந்திகள் துள்ளியோடும்படியான மலை நாடனது மார்பானது என் நெஞ்சைத் தேய்த்து அங்கேயே நடமாடிக் கொண்டிருக்கும்.

நன்றென்று தேறித் தெளிந்தேன் தலையளி
ஒன்றுமற் றொன்றும் அனைத்து''[1]

(ஐந்திணையெழு-9)

எனவரும்.

அச்சம் நீடினும் என்பதற்குச் செய்யுள்:

''மென்தினை மேய்ந்த தறுகட் பன்றி
வன்கல் அடுக்கத்துத் துஞ்சு நாடன்
எந்தை யறிதல் அஞ்சிக்கொல்
அதுவே மன்ற வாரா மையே''[2] (ஐங்குறு-261)

எனவும்,

''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்
கொடியர் அல்லர்எங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழிய ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே''[3]

(குறுந்-87)

எனவும் வரும்.

பிரிந்த வழிக் கலங்கியதற்குச் செய்யுள்,

''வருவது கொல்லோ தானே வாராது
அவணுறை மேவலின் அமைவது கொல்லோ

---

1. கருத்து: மன்றத்து உற்ற கல்லில் முசுக்கலை துள்ளித் திரியும்படியான குன்றநாடன் இயற்கைப் புணர்ச்சியின்போது தெளிவித்த தெளிவினை எனக்கு நல்லதைச் செய்யும் என்று தெளிந்தேன். அந்த ஒன்றும் எப்போதும் எனக்கு நல்லதையே செய்யும் அத்தன்மை யதாகும்.

2. கருத்து: தினை மேய்ந்த பன்றி மலையடுக்கத்து உறங் கும்படியான மலை நாடனாகிய தலைவன் இங்கு வாராமைக்குக் காரணம் எம் தந்தையை அஞ்சியதே போலும்! ஆம். அதுவேதான் உறுதியான காரணமாம்.

3. கருத்து: ஊர் மன்றத்துள்ள கடம்ப மரத்துத் தெய்வம் கொடியவரை அழிக்கும் என்பர். சிறிதும் கொடிய ரல்லர் எம் தலைவர். என் நுதல் தானே பசந்தது. என் தோள்தானே நெகிழ்ந்தது. இதற்கு அவர் காரணர் அல்லர்.

புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
இருவி இருந்த குருவி வெருவுறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
குன்றுகெழு நாடனொடு சென்றஎன் நெஞ்சே''[1]

(ஐங்குறு-295)

எனவும்,

''அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே''[2]

(குறுந்-5)

எனவும்,

''மணிநிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்
அணிநலம் உண்டகன் றான் என்றுகொ லெம்போல்
திணிமண லெக்கர்மேல் ஓதம் பெயர்ந்து
துணிமுந்நீர் துஞ்சா தது''[3]

(ஐந்திணையெழு-60)

எனவும்,

''கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து''[4] (குறள்-1127)

எனவும்,

---

1. கருத்து: தினைப் புனங் காப்பார் மூட்டிய கொள்ளிக்கு அஞ்சிய மயில் புகலிடம் சென்று பின்பு கதிர் கொய்த தாளில் தங்கிய குருவிகள் அஞ்சுமாறு தன் சிறகை விரித்துப் பந்தாடு மகளிர்போல் ஆடும் குன்ற நாடனொடு சென்ற என் நெஞ்சம் திரும்பி வருமோ வாராது அங்கேயே அமைவதுவோ அறியேன்.

2. கருத்து: தோழீ! தலைவன் (புலம்பன்) பிரிந்தானாக என் கண்கள் உறங்காவாயின. இதுதான் காமநோயோ.

3. கருத்து: மணல் எக்கர் மேல் அலை பாயும் கடலானது இரவுக்குறி சேர்ந்து வந்து தூங்காதே எம்மைப்போல கொண்டிருப்பதற்குக் காரணம் எம்மைப்போலத் தனது கடற்கரைச் சேர்ப்பன் தன் நலன் உண்டு நீங்கினான் என்பதோ.

4. கருத்து: காதலர் கண்ணிடத்திருத்தலால் என் கண்ணையும் மையெழுத மாட்டேன். ஏன் எனின் அது அவரை மறைக்கும்.

"நெஞ்சத்தார் காதல வராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"[1] (குறள்-1128)

எனவும் வரும்.

உறங்காமையும், உண்ணாமையும் கோலஞ் செய்யாமையும் வருத்தம் பிறவுஞ் சொல்லுதல். இவ்வழி நீ வருந்தாதி நின் மாட்டு அன்பு பெரிதுடையன் எனத் தோழி ஆற்றுவித்தவழி ஆற்றாமையாற் கூறியதற்குச் செய்யுள்:

"சிறுதினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்
மருந்தும் அறியுங்கொல் தோழியவன் விருப்பே"[2]

(ஐங்குறு-262)

எனவரும்.

பெற்றவழி மலியினு மென்பதற்குச் செய்யுள்:

"அம்ம வாழி தோழி பன்மாண்
நுண்மணல் அடைகரை நம்மோ டாடிய
தண்ணந் துறைவன் மறைஇ
அன்னை அருங்கடி வந்து நின்றோனே"[3]

(ஐங்குறு-115)

எனவும்,

"முளைவளர் முதல" என்னும் அகப்பாட்டினுள்
"..............வேட்டோர்க்கு

---

1. கருத்து: நெஞ்சத்தில் காதலர் இருத்தலால் சூடான உணவை அவர்க்குச் சுடும் என்றஞ்சி உண்ண மாட்டேன்.

2. கருத்து: தோழீ! தினைமேய்ந்த பன்றி தன் துணையுடன் வதியும் மலைநாடன் வருவதே என் நோய்க்கு மருந்தாம். இதை அவன் உள்ளம் (விருப்பம்) அறியுமோ.

3. கருத்து: தோழீ! கேட்பாயாக. நுண்ணிய மணல் சேர்ந்த கடற்கரையில் நம்மொடு ஆடிய தண்ணந் துறைவன் இன்று மறைந்து கடத்தற்கரிய தாயின் காவலமைந்த வீட்டின் புறத்தே வந்து நின்றான்.

அமிழ்தத் தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்கமுந்
தண்டாக் காதலும் தலைநாள் போன்மே''[1]

(அகம்-332)

எனவும்,

''பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலரே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே''[2]

(குறுந்-355)

எனவும்,

''அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின அளியமென் தோள்கள்
மல்லல் இருங்கழி மலரும்
மெல்லம் புலம்பன் வந்த வாறே''[3] (ஐங்குறு-120)

எனவும் வரும்.

வருந்தொழிற் கருமை வாயில் கூறியவழித் தலைவி கூறிய தற்குச் செய்யுள்:

---

1. கருத்து: விரும்பியவர்க்கு அமுதம் இனிமை பயப்பது போன்ற அவரது மார்பத்தின் வண்டு இடைபோக முடியாதபடி முயக்கமும் குறையாத காதலும் முதல் நாள்போல அமைந்தன.

2. கருத்து: வெற்ப! மேகம் பரந்து மறைத்தலின் விசும்பு தெரியவில்லை. மழைநீர் பெருகி ஓடுதலின் நிலம் தெரியவில்லை. ஞாயிறு மறைதலின் இருள் மிகுந்தது. பலரும் தூங்கும் இந்த நள்ளிரவில் எப்படி வந்தாய்? எம் சிறுகுடியை எப்படி அறிந்தாய்? யான்மிக வருந்துவன்.

3. கருத்து: தோழி! கேட்பாயாக மெல்லம் புலம்பன் இன்று வந்தமையால் நலம் கெட்டிருந்த என் தோள்கள் நலம் பெற்று நல்லவாயின.

''அருங்கடி அன்னை காவல் நீவிப்
பெருங்கடை இறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண வாய்விட்டு
அகல்வயற் படப்பை அவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னாள்
கருவி வானம் பெய்யா தாயினும்
அருவி ஆர்க்கும் அயந்திகழ் சிலம்பின்
வான்றோய் மாமலைக் கிழவனைச்
சான்றோய் அல்லை என்றனம் வரற்கே''[1]

(நற்றிணை-365)

எனவரும்.

கூறியவாயில் கொள்ளாக் காலத்துத் தலைவியுரைத்தற்குச் செய்யுள்:-

''கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தின் இனிய பழங்கவுட்கொண்
டொல்லென வோடு மலைநாடான் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை''[2]

(கைந்நிலை-7)

எனவரும்.

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தற்குச் செய்யுள்:

''பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்
எலவென்று இணைபயிரும் ஏகல்சூழ் வெற்பன்

---

1. கருத்து: தோழீ! மாமலைக் கிழவனை 'நீ சான்றோன் அல்லன்'' என்று கூறி வருவதற்குத் தாயின் காவலைக் கடந்து வீட்டின் கடைவாசலையும் கடந்து ஊர்ப் பொது மன்றத்தில் பகலிலேயே வாய்விட்டு அவன் ஊர் யாது என வினவித் தெரிந்து செல்வோம் வருக.

2. கருத்து: ஆண் குரங்கு கல் மலையேறி வாழைக் கனியைக் கன்னத்தில் அடக்கிக் கொண்டு விரைவாக ஓடும் மலைநாடன் கேண்மை பற்றிச் சொல்லத் தொடங்கினால் என் கை வளையல்கள் சரியும்.

புலவுங்கொல் தோழி புணர்வறிந் தன்னை
செலவுங் கடிந்தாள் புனத்து''[1]

(திணை மொழி-10)

எனவும்,

''பொழுதும் எல்லின்று பெயலும் ஓவாது
கழுதுகண் பனிப்ப வீசும் அதன்றலைப்
புலிப்பல் தாலிப் புதல்வர்ப் புல்லி
அன்னாய் என்னும் அன்னையும் மன்னோ
என்மலைந் தனன்கொல் தானே தன்மலை
ஆரம் நாறு மார்பினன்
மாரி யானையின் வந்து நின்றோனே''[2]

(குறுந்-161)

எனவும் வரும்.

இவையெல்லாம் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின் நிகழ்வன. உள்ளப் புணர்ச்சியான் உரிமை பூண்டிருந்தவரும் இவ்வாறு கூறப்பெறும் என்று கொள்க. ஆண்டு மனநிகழ்ச்சி ஒருப்பட்டு நிற்றலின்.

உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல என்பது— இவ்வாறு கூறாக் காலத்து உயிர் செல்லுமாறு சொல்லுதலும் என்றவாறு.

ஈண்டு, உயிர்த்தல் என்பது சுவாதம் எனினும் அமையும், இந் நிகழ்ச்சியைத் தோழிக்கு நாணத்தால் உரையாளாயின் நோயட வருந்தும் என்றவாறு.

---

1. கருத்து: தோழீ! அன்னையானவள் நாம் காதலனைப் புணர்ந்ததை யறிந்துப் புனங்காக்கச் செல்லும் செலவை நீக்கினாள். அதனால் இனிப் பகற்குறி வாயாது. அதனால் பலாப்பழம் பெற்ற ஆண் குரங்கு எல என்று பெண் குரங்கை அழைக்கும்படியான மலை நாடன் புலந்து கொள்ளுமோ?

2. கருத்து: தோழீ! பொழுதும் இருண்டது. மழையும் விடாமல் பேயும் கண் சிம்புளிக்கப் பெய்யும். அவற்றுக்கு மேலும் நம் தாய் தன் புதல்வனைத் தழுவியபடி என்னை அன்னாய் என விளிக்கும். இந் நிலையில் தலைவன் மழையில் நனைந்த யானைபோல் வந்தனன். பின் அவன் என் செய்தானோ.

உதாரணம்:—

''தழையணி அல்குல் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
அம்மெல் லாகம் நிறைய வீங்கிய
கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின
யாங்கா குவள்கொல் பூங்குழை என்னும்
அவல நெஞ்சமொ டுசாவாக்
கவலை மாக்கட்டிப் பேதை யூரே''[1]
(குறுந்-159)

இது யாங்காகுவளென உயிர் செலவு குறித்து நின்றது.

''இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே''[2] (குறுந்-98)

எனவரும்.

வேற்றுவரைவு ...... தன் பிழைப்பாகத் தழீஇத்தேறலும் என்பது—வேற்று வரைவுவரின் அது மாற்றுதல் முதலாகத் தமர் தற்காத்த காரணப்பக்கம் ஈறாக நிகழும்வழித் தன்குறி தப்பித் தலைவன் எதிர்ப்படுதலில்லாக் காலத்து வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன்குறையாக வுடம்பட்டுத் தேறுதலும் என்றவாறு.

ஆண்டுக் கலக்கமின்றித் தேறுமென்பது கூறினாராம்.

அவ்வழி வேற்று வரைவுவரின் அது மாற்றுதற் கண்ணும் என்பது—பிறனொருவன் வரையவரின் அதனை மாற்றுத்தற் காகவும்தன் குறி தப்பும் என்றவாறு,

---

1. கருத்து: முலைகள் இவள் மார்பக முழுதும் பருத்துச் செப்புடன் ஒத்தன. அதனால் இவள் இனி எந்நிலை யுடையள் ஆவளோ என ஆராயாநின்ற கவலையை யுடைய மாக்களை உடையது இவ்வறிவற்ற வூர்.

2. கருத்து: தோழீ! நம் மனைத் தோட்டத்துப் புதரில் தழைத்துப் படர்ந்த மாரிக் காலப் பீர்க்கம் பூக்களைப் பறித்துக் கொண்டு தலைவர் இருக்குமிடம் சென்று இம்மலரின் நிறம் போலாயினள் அவள் என்று சொல்லு வார் உளராயின் நன்று.

நெறிப்படு ...... மறைப்பினும் என்பது—கூட்டம் உண்மை வழக்கியலால் நாடுகின்ற காலத்து மெய் வேறுபாடு நிகழ்ந்துழி, தோழி அறியாமலும் செவிலி அறியாமலுந் தலைவி மறைப்பினும் என்றவாறு.

பொறியின் ...... இயல்பின் கண்ணும் என்பது — பொறியென்பது ஊழ். ஊழாற் கட்டப்பட்ட புணர்ச்சியைக் குறித்து ஒற்றுமைப்பட்ட நண்பினானே தலைவன் வரைதற்குக் குறையுறுகின்றதனைத் தெளிந்த தலைவி செய்தற்கு அருமையமைந்த எண்வகையினாற் பெருமை இயைந்த இயல்பினளாகி நிற்றற் கண்ணும் என்றவாறு.

எண்வகையாவது மெய்ப்பாட்டியலுள் மனன் அழிவில்லாத கூட்டம் என ஓதுகின்ற,

> ''முட்டுவயிற் கழறல் முனிவு மெய்ந் நிறுத்தல்
> அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
> தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
> காதல் கைம்மிகல் கட்டுரை யின்மை''
>
> (மெய்ப்பாட்-23)

என்பன. அவற்றுள்,

முட்டு[1]வயிற் கழறல் ஆவது - களவொழுக்கம் நிகழா நின்றுழி நிலவு வெளிப்பாடு, காவலர் கடுகுதல், தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, தலைவன் குறிவருவதற்கு இடையீடுபடுதல், இவ்வழிக் களவொழுக்கத்தினாற் பயனின்மை கூறல். அவ்வாறு கூறி இனி இவ்வொழுக்கம் அமையுமென வரைந்தெய்துதல் காறும் புணர்ச்சியை விரும்பாது கலக்கமின்றித் தெளிவுடையளாம்.

முனிவு[2]மெய்ந்நிறுத்தல் ஆவது — இவ்வொழுக்கத்தினான் வந்த துன்பத்தைப் பிறர்க்குப் புலனாகாமை மெய்யின் கண்ணே நிறுத்தல்,

அவ்வழியும் வரைந்தெய்தல் சான்றமையும் புணர்ச்சியெனக் குறிவழிச் செல்லாளாம்.

அச்சத்தின் அகறல் ஆவது—இதனைப் பிறரறிவர் என்னும் அச்சத்தினானும் குறிவழிச் செல்லாளாம்.

---

1. முட்டு—தடை. 2, முனிவு—சிறு வெறுப்பால் வந்த துன்பம்.

அவன் புணர்வு மறுத்தல் ஆவது—தலைவன் புணர்ச்சியில் வழியும் குறிவழிச் செல்லாளாம்.

தூது முனிவின்மை ஆவது—அவ்வழித் தலைவன் மாட்டுத் தூதாகி வருஞ் சொற் கேட்டலை முனிவின்மை.

துஞ்சிச் சேர்தல் ஆவது—உறங்காமையின்றி யுறக்கம் நிகழ்தல்.

காதல் கைம்மிகல் ஆவது—இவ்வாறு செய்யுங் காதல் அன்பின்மையன்றி அன்பு மிகுதல்.

கட்டுரையின்மை ஆவது—கூற்று நிகழ்தலின்மை.

இவையெல்லாம் கலக்க மில்லாத நிலைமை யாதலிற் பெருமை சான்ற இயல்பாயின.

பொய்தலை யடுத்த மடலின் கண்ணும் என்பது—பொய்ம் மையால் மடலேறுவன் எனத் தலைவன் கூறிய வழியும் வெறுத்த உள்ளத்தளாய்க் குறிவழிச் செல்லாளாம்.

கையறு தோழி கண்ணீர் துடைப்பினும் என்பது—தோழி கையினால் தலைவி கண்ணீர் துடைத்தவழியுங் குறிவழிச் செல்லாளாம்.

வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும் என்பது—தலைவி வேறுபாடு எற்றினாயிற்றெனச் செவிலி வெறியாட்டுவிக்க வரும் அச்சத்தினானுங் குறிவழிச் செல்லாளாம்.

குறியின் ஒப்புமை மருடற் கண்ணும் என்பது—தலைவன் செய்த குறியை ஒப்புமைபற்றிச் சென்று அஃது அல்வழி மருளு தற் கண்ணும் குறிவழிச் செல்லாளாம்.

அஃதாவன புள்ளெழுப்புதல் போல்வன. அவை பெற்றுப் புள்ளரவம் எழும். அவ்வாறு மருளுதல்.

வரைவு தலைவரினும் என்பது—தலைவனை வரைய வருகின்ற நாள் அணித்தாகவரினும் குறிவழிச் செல்லாளாம்.

களவறிவுறினும் என்பது—களவினைப் பிறர் அறியினும் குறிவழிச் செல்லாளாம்.

தமர் தற்காத்த காரணமருங்கினும் என்பது—தன்னைத் தமர் காத்த காரணப் பக்கத்தினும் என்றவாறு.

அஃது ஐயமுற்றுக் காத்தல்.

அவற்றுள் வேற்றுவரைவுவரின் அது மாற்றுதற்குத் தலைவி கூறிய செய்யுள்:—

"அன்னை வாழிவேண் டன்னை புன்னை
பொன்நிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை என்றும் யாமே இவ்வூர்
பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே"[1]

(ஐங்குறு-110)

எனவரும்.

நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தமை மறைத்தற்குச் செய்யுள்:-

"துறைவன் துறந்தெனத் துறையிருந் தழுதஎன்
மம்மர் வாண்முக நோக்கி அன்னைநின்
அவலம் உரையென் றனளே—கடலென்
பஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை சிதைத்ததென் றேனே"[2]

எனவரும்.

முட்டுவயிற் கழறற்குச் செய்யுள்:-

"இரும்பிழி மாரி அழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சில்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்

---

1. கருத்து: தாயே! இதனைக் கேள். பூக்கெழு துறைவனை யான் எம் தலைவன் என்றேம். அது கொண்டு இவ்வூர் வேறாக நினைத்துக் கூறியது. ஊழ்வினையானது அவர் கூற்றுப் படியும் ஆக்குமோ. அது வாழ்க.

2. கருத்து: துறைவன் துறந்தானாக அழுத என் முகம் பார்த்து அன்னையானவள் நின் துயர்க்குக் காரணம் யாது என வினவினாள். அதற்கு யான் கடல் சிதைப்பது போல ஒருவன் பஞ்சாய்க் கோரையாற் செய்த பாவை கொண்டு வந்து எம் விளையாடும் சிறிய வீட்டைச் சிதைத்தான் என்றேன்.

இலங்குவேல் இளையர் துஞ்சின் வைஎயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவவாய் ஞமலி மகிழாது மடியிற்
பகலுரு உறழ நிலவுக்கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே
திங்கள்கல் சேர்பு கணையிருள் மடியின்
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்
எல்லா மடிந்த காலை யொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, அதனால்
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநங் களவே''[1]

(அகம்-122)

எனவரும்.

முனிவு மெய்ந்நிறுத்தற்குச் செய்யுள்:-

''நோமே நெஞ்சே நோமே நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி

---

1. கருத்து: தோழீ! நம் களவொழுக்கமானது தித்தனது உறந்தை நகரச் சுடுகாடுபோலப் பல முட்டுப்பாடுகளை யுடையதாம். அவையாவன விழா இல்லாதிருக்கவும் ஊர் துயிலாது. ஊர்த் தெருவும் கடைவீதிகளும் அடங்கின் தாய் துயிலாள். தாய்துயிலினும் காவலர் துயிலாது விரைவர். அவர் துயிலின் நாய் மகிழ்ந்துகுரைக்கும். நாய் மடியின் விசும்பில் நிலவு வெளிப்பட்டு விளங்கும். நிலவு மறைந்து மிக்க இருள்மடியின் யாமத்தில் கூகை குழறும். அது அடங்கின் வீட்டுக் கோழி கூவும். எல்லாமே அடங்கின் ஒரு நாளில் காதலர் வாரார்.

அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோமே நெஞ்சே''[1] (குறுந்—4)

எனவரும்.

அச்சத்தின் அகறற்குச் செய்யுள்:

''பேணுப பேணார் பெரியோர் என்பது
நாணுத்தக் கன்றது காணுங் காலை
உயிரோர் அன்ன செயிர்தீர் நட்பின்
நினக்கியான் மறைத்தல் யாவது மிகப்பெரிது
அழிதக் கன்றால் தானே கொண்கன்
யான்யாய் அஞ்சுவல் எனினுந் தான்எற்
பிரிதல் சூழான் மன்னே இனியே
கானல் ஆயம் அறியினும் ஆனாது
அலர்வது அன்றுகொல் என்னு மதனால்
புலர்வது கொல்அவன் நட்பென
அஞ்சுவல் தோழி என்னெஞ்சத் தானே''[2]

(நற்றிணை-72)

எனவரும்.

அவன் புணர்வு மறுத்தற்குச் செய்யுள்:

''யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யான்எவன் செய்கோ

---

1. கருத்து: நெஞ்சுநோம். நெஞ்சுநோம். இங்கே யான் இமையைச் சுடுவது போலும் வெப்பமான கண்ணீரைத் தாங்கி இருத்தற்கு வாராது அங்கேயே அமைந்த நம் காதலர் இங்கு இன்னும் வாராதமைதற்கு நெஞ்சு நோம்.

2. கருத்து: தோழீ! பெரியோர் தாம் விரும்பியொழுக வேண்டுவனவற்றை விரும்பியொழுகார் என்னும் சொல்லை ஆயுங்கால் நாணத்தக்கதாய் இருக்கின்றது. உயிரன்ன நட்பினையுடைய நினக்கு யான் மறைப்பது என்ன உளது? அது மிக வருந்தத் தக்கது. முன்னெல்லாம் தலைவனிடம் யான் தாய்க்கு அஞ்சுவேன், ஆதலின் வாரற்க என்றாலும் தான் நம்மை விட்டுப் பிரியக் கருதான். அது கழிந்தது. இப்பொழுதோ கானலில் விளையாடும் தோழியர் கூட்டம் அறிவதாயினும் அடங்காமல் எங்கே வெளிப்பட்டு விடுமோ என்று அஞ்சி கூறுவன். அதனால் என் நெஞ்சினுள்ளே அவன் நட்பு இல்லையாய் விடுமோ என அஞ்சுகிறேன்.

திணைத் தாளன்ன சிறு பசுங்கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்குங்
குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே''[1]

(குறுந்-25)

எனவரும்.

தூது முனிவின்மைக்குச் செய்யுள்:—

''புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியின் தோன்று நாடன்
தீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தாம்வரைந் தனையமென விடுகம் தூதே''[2]

(குறுந்-106)

எனவரும்.

துஞ்சிச் சேர்தற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க.

காதல் கைம்மிகுதற்குச் செய்யுள்:—

''கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கு மாகா தென்னைக்கும் உதவாது

---

1. கருத்து: தலைவன் என்னொடு கூடிய காலத்தில் கண்டார் யாருமில்லை. அத் தலைவனாகிய தலைவன் ஒருவனேயாவான். நீரோடுமிடத்தில் நீர்வழியோடும் ஆரல் மீனை இரைக்காகப் பார்த்துக் கொண்டிருக்கும் செங்கால் குருகு மட்டும் அப்போது இருந்தது.

2. கருத்து: தோழீ! மலைச் சரிவில் உள்ள இற்றி மரத்தின் வெள்ளிய வேர்கள் மலைவீழ் அருவிபோலத் தோன்றும் நாடனாகிய தலைவன் தீதிலா நெஞ்சத்தன் என்னும் சொல்லுடன் தூதுவன் வந்தான். நாமும் அவன் சொல்லை நெய் பெய்யப் பெற்ற தீயானது மேலும் விளங்க எரிவதுபோல மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு அவனிடமே யாங்களும் தலைவன் முதலில் மணந்தகாலத்தனைய பொலிவினேம் என்று சொல்லி விடுவேம்.

பசலை உணீஇயர் வேண்டுந்
திதலை அல்குல்என் மாமைக் கவினே''[1]

(குறுந்-27)

எனவரும்.

கட்டுரையின்மைக்குக் கூற்று நிகழாது.

பொய்தலை யடுத்த மடலின்கண் தலைமகள் கூறிய செய்யுள் வந்த வழிக் காண்க.

கையறு தோழி கண்ணீர் துடைத்தற்குஞ் செய்யுள்:—

''யாம்எம் காமந் தாங்கவுந் தாம்தம்
கெழுதகை மையின் அழுதன தோழி
கன்றாற்றுப் படுத்த புன்தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
ஏறா திட்ட ஏமப் பூசல்
விண்தோய் விடரகத் தியம்பும்
குன்ற நாடற் கண்ட எங் கண்ணே''[2] (குறுந்-241)

எனவரும்.

வெறியாட்டிடத்து வெருவினாற் கூறியதற்குச் செய்யுள்:-

''நம்முறு துயரம் நோக்கி அன்னை
வேலவற் றந்தனள் ஆயினவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறியெயிற் றோயே''[3]

(ஐங்குறு-241)

எனவரும்.

---

1. கருத்து: தோழீ! கன்றும் உண்ணாமல் கறக்கும் கலத்திலும் வீழாமல் நிலத்தில் சொரிந்து பயன்படாத் ஆவின்பால்போல என் அழகினை எனக்கும் பயன் படாமல் என் தலைவற்கும் பயன்படாமல் பசலையே உண்ண விரும்பும்.

2. கருத்து: தோழீ! யான் என் காம நோயைத் தாங்கி நிற்கவும் குன்ற நாடனைக் கண்ட என் கண்கள் தாமே அவனிடத்துக் கொண்ட அன்பின் உரிமையால் அழுதன. யான் என் செய்வேன்.

3. கருத்து: செறிந்த பற்களையுடையாய்! தாயானவள்

குறியின் ஒப்புமை மருடற்குக் கூறிய செய்யுள்:—

''அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரிமா பூண்ட
மணியரவம் என்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தேன் ஒளியிழாய்
உள்ளுருகு நெஞ்சினேன் யான்''[1] (ஐந்திணை-50)

''..
கனைபெயல் நடுநாள்யான் கண்மாறக் குறிப்பெறாஅன்
புனையிழாய் என்புழி நினக்குரைக்குந் தானென்ப
துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளின்றன்
அளிநசைஇ ஆர்வுற்ற அன்பினேன் யானாக''[2]
(கலித்-46)

எனவரும்.

வரைவு தலைவந்தவழிக் கூறிய செய்யுள்:—

''கொல்லைப் புனத்த அகில்சுமந்து கல்பாய்ந்து
வானின் அருவி ததும்பக் கவினிய
நாடன் நயமுடையன் என்பதனால் நீப்பினும்
வாடல் மறந்தன தோள்''[3] (ஐந்திணையெழு-2)

நாமுற்ற துயரம் நோக்கி வேலனை வெறியாட்டயரத் தந்தாள். அவ்வேலன் நமக்கு நாடனொடு உள்ள நட்பினை அறிவானோ?

1. கருத்து: ஒளிமிக்க அணிகளை யுடையவளே! உள்ளே உருகும் நெஞ்சினேனாகிய யான் கடற்சேர்ப்பனாகிய தலைவனின் தேரில் பூட்டிய குதிரையின் மணியோசை என்று கேட்டு எழுந்து குறியிடம் சென்றேன். ஆனால் அங்கே கனி விரும்பும் பறவைகளின் ஓசை கேட்டு மீண்டேன்:

2. கருத்து: புனையிழாய்! மழை வேண்டிப்பாடும் வானம் பாடிப் பறவைபோல் அவன் அருள்வேண்டி நிறைந்த அன்புடையேன்யானாக இருக்க, அவன் நான் பகல் நடு நாளில் இடம் மாறிய காரணத்தால் பகற்குறிவாய்க்கப் பெறாமல் அதற்கான பழியை என்பால் சார்த்தி நினக்குக் கூறும்.

3. கருத்து: மழை பெய்ததால் அருவியானது கல்லில் பாய்ந்து அகில் சுமந்து ததும்பியோடும் மலைநாடன் குளுறவு காக்கும் பண்பு முதலிய வுடையனானமையின் இப்போது பொருள் காரணமாகப் பிரிந்தாலும் என் தோள்கள் வாடலை மறந்தன.

நயமுடைய னென்றதனான் வரைவு தலைவந்தமை யறிந்து கூறினாளாம்.

''இலைபடர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்தள் இனவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
அலையும் அலைபோயிற் றின்று''[1]

(ஐந்திணையெழு-3)

எனவரும்.

களவறிவுற்றவழிக் கூறிய செய்யுள்:—

''யாங்கா குவமோ அணிநுதற் குறுமகள்
தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்று
எவ்வாய்ச் சென்றனை அவணெனக் கூறி
அன்னை யானாள் கழறமுன் னின்று
அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன் காண்டலும் இலனே
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந் தாடிற்றும் இலனென நினைவிலை
பொய்யல் அந்தோ வாய்த்தனை யதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே யன்னை
செலவொழிந் தனையா லணியை நீபுனத்தே''[2]

(நற்றிணை-147)

எனவரும்.

---

1. கருத்து: குவளை படர்ந்த சோலையில் காந்தளில் வண்டு ஊது மலைநாடன் வரைவோடு வந்தான். அதனால் அன்னையின் அலைக்கும் அடியும் நீங்கியது.

2. கருத்து: குறுமகளே! மலைச் சாரலில் தினைக் கதிரைப் பைங்கிளிகள் கவர நீ அங்கு எங்கே சென்றாய் என்று நம் தாய் இடித்துக் கேட்க, நீ அன்னையே கிளி கடியும் தட்டையையுடைய யான் பெருவரை நாடனை அறியவும் அறியேன்; பார்க்கவும் இல்லை; மலர்களைக் கொய்து சுனையில் பாய்ந்து அவனொடு ஆடவும் இல்லை என்று நினைவில்லாமல் பொய்யும் கூறாமல் உண்மையைக் கூறிவிட்டாய். அதுகேட்டு அன்னை தலை தாழ்த்தினாள். அதனால் நின்னைக் காவலில் நீக்கினமையால் நீ தினைப் புனத்துச் செல்லுதலை விட்டாய். ஐயோ பாவம். இனி நாம் எப்படியாவமோ.

தமர் தற்காத்த காரணப் பக்கத்திற்குக் கூறிய செய்யுள்:-

''பெருநீர் அழுவத் தெந்தைதந்த'' என்னுங் களிற்றியானை நிரையுள்,

''பல்பூங் கானல் அல்கினம் வருதல்
கவ்வை நல்லணங் குற்ற இவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
எல்லையும் இரவும் என்னாது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணல் கொட்குமோர் தேருண் டெனவே''[1]

(அகம்-20)

எனவரும்.

தன்குறி தள்ளிய தெருளாக்காலை வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன் பிழைப்பாகத் தழீஇத் தேறிய தற்குச் செய்யுள்:—

'இருள் கிழிப்பது போல்' என்னும் களிற்றியானை நிரையுள்,

''வாள்நடந் தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்குங் கல்லடர்ச் சிறுநெறி
அருள்புரி நெஞ்சமோ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனும் அல்லன் தந்த
நீதவ றுடையையும் அல்லை நின்வயின்

---

1. கருத்து: தலைவி கூற்று

தோழீ! கானலிடத்துத் தலைவனொடு மர நிழலில் தங்கி, நண்டின் குழிந்த வளைகளைத் தோண்டி, ஊசலாடி, குரவைக் கூத்து வெறுக்கின் கடலில் தோழிய ருடன் நீராடி, தழைகளையுடுத்தி இப்படித் தங்கி வருதலைப் பற்றிப் பெண்டிர் கூறும் அலரை அன்னை உட்கொண்டு, கடற் பெருந்துறையிடத்துப் பகலும் இரவும் இயங்கும் ஓர் தேர் உண்டு என்று எண்ணி நம்மைக் காவற்படுத்தினாள்.

ஆனா அரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே''[1] (அகம்-72)

எனவரும்.

வழுவின்று...அன்னவுமுளவே என்பது—வழுவின்று நிலைஇய இயற்படு பொருண் முதலாக 'ஏமஞ் சான்ற உவகை'யீறாகச் சொல்லப்பட்ட இடங்களில் தன்னிடத்து உரிமையும் அவனிடத்துப் பரத்தைமையும் அன்னவையும் நிகழப்பெறும் என்றவாறு.

அன்ன என்பது அவை போல்வன என்றவாறு.

ஓரிடத்துக் கண் என்றதனால் இவ்வாறு எல்லார் மாட்டும் எவ்விடத்தும் நிகழாது என்றவாறாம். எனவே மேற்குறிப்பினும் இடத்தினுமல்லது (களவியல்-18) கூற்று நிகழாதென்பதனை மறுத்து ஓரிடத்துக் கூற்று நிகழும் என்றவாறாம்.

அவற்றுள் வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும் என்பது—தலைவனை இயற்பழித்தவழி அவன் குற்றமிலனாக் நிலைநிறுத்தப்பட்ட இயற்பட மொழிந்த பொருண்மைக் கண்ணும் தன் வயின் உரிமைதேன்றவும் அவன் வயிற் பரத் தமை தோன்றவும் கூறும் தலைவி என்றவாறு.

இரண்டினுள் ஒன்று தோன்ற உரைக்கு மென்றவாறு. எனவே இரண்டுந் தோற்ற வருவனவுமுளவாம்.

பொழுது மாறும்.....சிந்தைக் கண்ணும் என்பது—தலைவன் வருங்காலமும் இடனும் குற்றமுளவாதலான் ஆண்டு அழிவு வந்த சிந்தைக் கண்ணும் தலைமகள் தன் வயின் உரிமையும் அவன் வயிற் பரத்தைமையும் தோன்றக் கூறும் என்றவாறு.

காமஞ் சிறப்பினும் என்பது—தலைமகன் மாட்டு வேட்கை மிகினும் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் உரைக்குந் தலைவி என்றவாறு.

---

1. கருத்து: தலைவி கூற்று.

தலைவன் சிறைப்புறத்தானாகக் கூறியது. வாள் போலும் கூரிய கற்கள் நிறைந்த நடப்பதற்கு அரிய நெறியும், கடக்க நினைப்பவர் அஞ்சத்தக்க கற்கள் அடர்ந்த சிறிய நெறியும் ஆகிய வழி கடந்து அருளுள் ளத்துடன் வந்த தலைவனும் கொடியனல்லன்; குறியிடம் தந்த நீயும் தவறுடையையல்லை; உனக்குத் துன்பம் விளைவித்த யானே தவறுடையேன்.

அவன் அளி சிறப்பினும் என்பது—தலைவன் தலையளி மிக்க வழியும் தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தைமையும் தோன்றக் கூறும் என்றவாறு.

ஏமஞ்சான்ற உவகைக் கண்ணும் என்பது-ஏமம் பொருந்திய மகிழ்ச்சி வந்துழித் தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தை மையும் தோன்றக் கூறும் என்றவாறு. அஃதாவது இவன் வரைந்தல்லது நீங்கான் என்னும் உவகை.

அவற்றுள், வழுவின்று நிலைஇய இயற்படுபொருட்கண் கூறியதற்குச் செய்யுள்:—

''அடும்பம லங்கொடி உள்புதைந் தொழிப்ப
வெண்மலர் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடியன் ஆயினும் ஆக
அவனே தோழிஎன் னுயிர் காவலனே''[1]

(ஐங்குறு-6)

எனவரும்.

''பொழுது மாறும் புரைவ தன்மையின் அழிவுதலைவந்த சிந்தையால் தலைவி கூறிய செய்யுள்:—

''கொடுவரி வேங்கை பிழைத்துக் கோட்பட்டு
மடிசெவி வேழம் இரிய—அடியோசை
அஞ்சி யொதுங்கும் அதருள்ளி ஆரிருள்
துஞ்சா சுடர்த்தொடி கண்''[2]

(ஐந்திணையைம்-16)

''வளைவாய்ச் சிறுகிளி விழைதினை கடியச்
செல்கென் றாளே அன்னை எனநீ

---

1. கருத்து: அடும்பங் கொடியானது கொடி மறைந்து புதையும்படி மலர்களை விரிக்கும் தண்ணந்துறைவனா வன், கொடியவனாயினும் ஆகுக. அவனே என் உயிர்க் குக் காவலன் ஆவான்.

2. கருத்து: தலைவனே! நீ இரவுக்குறி வந்து கூடிப் பிரிந்த வுடன் தலைவியின் கண்கள், வேங்கைப் பிடியினின்றும் தப்பியோடிய யானையானது, தன் நடையொலி கேட்டு அவ்வேங்கை வருமோ என அஞ்சி மெல்ல நடக்கும்படியான வழியில் நீ செல்ல நேருமோ என அஞ்சியதால் துயிலாவாயின.

சொல்லின் எவனாந் தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகல் உழந்த
குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிருள் நடுநாள் வருதி
சாரல் நாட வாரலோ எனவே''[1] (குறுந்-141)

எனவரும்.

காமமிக்கவழிக் கூறிய செய்யுள்:—

''அம்ம வாழி தோழி நலனே
இன்ன தாகுதல் கொடிதே புன்னை
அணிமலர் துறைதொறு விரிக்கும்
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா தோர்க்கே''[2]
(ஐங்குறு-117)

இது தன்வயின் உரிமை.

''நன்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்து
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்றி
நனந்தலை உலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே''[3] (குறுந்-6)

இஃது அவன்வயின் பரத்தைமை.

''கொடுந்தாள் அலவ குறையாம் இரப்பேம்
ஒடுங்கா ஒலிகடற் சேர்ப்பன்—நெடுந்தேர்

---

1. கருத்து: தோழீ! தலைவனிடம் எம் அன்னையானவள் எங்களை நோக்கித் தினைப் புனத்துக் கிளிகளைக் கடியச் செல்க என்றாள் எனவும், இனி நீ பகலில் வாராமல் நடு இரவில் வருக எனவும் சொல்லின் நினக்கு என்ன குறை வரும்.

2. கருத்து: தோழீ! கேட்பாயாக. அழகிய மலர் துறைதொறும் பூக்கும் மணிநீர்ச் சேர்ப்பனை மறவாதவர்க்கு அவனால் தரப்பட்ட நலன் இப்படிப் பொலிவிழத்தல் கொடிதேயாம்.

3. கருத்து: நள் என்ற ஒலியுடையதாயிற்று நடு இரவு. ஊர் மாக்களும் பேச்சடங்கி இனிதாகத் துயின்றனர். வெறுப்பின்றி உலகமும் துஞ்சின. துயிலாதவள் யான் ஒருத்தியே.

கடந்த வழியைஎங் கண்ணாரக் காண
நடந்து சிறையாதி நீ''[1] (ஐந்திணையைம்-42)

அவனளி சிறந்தவழித் தலைவி கூறிய செய்யுள்:

''சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுலர் அகலம்
உள்ளின் உள்நோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொல் அன்னாய்''[2]
(குறுந்-150)

''மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்து
ஆமா சுரக்கும் அணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்''[3] (ஐந்திணையெழு-4)

எனவரும்.

ஏமஞ் சான்ற உவகைக்கண் கூறிய செய்யுள்:—

''ஓங்கல் இறுவரைமேற் காந்தள் கடிகவினப்
பாம்பென ஓடி உருமிடிப்பக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தவந் நாள்போலா
ஈங்கு நெகிழ்ந்த வளை''[4] (திணைமொழி-3)

எனவரும்.

---

1. கருத்து: வளைந்த காலுடைய நண்டே! யாம் நின்னை ஒரு குறை வேண்டியிரப்பேம். ஒலியடங்காத சேர்ப்பனது நெடுந்தேர் கடந்த வழிச்சுவட்டை எம் கண்ணாரக் காணும் பொருட்டு நீ நடந்து நடந்து அழித்து விடாதே.
2. கருத்து: தோழீ! மலைநாடனின் மார்பை நினைத்தால் உள்ளத்தில் நோய் மல்கும். புல்லினால் அந்நோய் நீங்கும். இது என்ன வியப்பு.
3. கருத்து: ஊர்மன்றத்துள்ள பலாவின் சுளைகள். பொருந்திய இனிய பழத்தை உண்டு வந்த மந்தியானது தன் முலையை வருடவே தன் கன்று வருடுவதாக எண்ணிக் காட்டுப் பசுவானது பால் சுரக்கும்படியான மலை நாடனை யாம் பிரிவது இல்லை.
4. கருத்து: மலைப் பக்கங்களில் காந்தள் மணம் கமழப் பாம்பு என்னும்படி வளைந்த மின்னலுடன் மேகம்

பரத்தைமை தோன்ற வந்ததற்குச் செய்யுள்:—

"..

கணங்கொள் இடுமணற் காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் தளிக்கும்
மணங்கமழ் ஐம்பாலார் ஊடலை ஆங்கே
வணங்கி உணர்ப்பான் துறை"[1] (கலித்-131)

என்னும் பாட்டினுள் தான் ஊடினாளாகவும் மகிழ்ந்தவாறும் அவன் வயிற் பரத்தைமை கூறியவாறுங் காண்க.

இச்சூத்திரத்தாற் சொல்லியது: 'மறைந்தவற் காண்டல்' முதலாக ஓதப்பட்ட அறுவகைப் பொருண்மையும், 'கைப்பட்டுக் கலங்கல்' முதலாகக் 'கூறிய வாயில் கொள்ளாக் காலை' ஈறாக வரும் மகிழ்ச்சியினால் மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழி எண்ணுதல் சான்ற அருமறையைச் சொல்லுதலும், இவ்வாறும் எண்ணந்தான் உரையாக் காலத்துத் தன்னுயிர் செல்லுமாறு உரைத்தலும், 'வேற்றுவரைவு வரின் அது மாற்றுதல்' முதலாகத் 'தமர்த்தற்காத்த காரணப் பக்கம்' ஈறாகத் தன் குறிபிழைக்க நிற்கப்பெறும் எனவும், அவ்வழித் தலைவன் வந்து பெயர்ந் துழிக் கலக்கமின்றித் தெளிதலும், 'வழுவின்று நிலைஇய இயற்படுபொருள்' முதலாக 'ஏமம் சான்ற உவகை', ஈறாகத் தான் உரியளாகிய நெறியும் தலைவன் அயலாகிய நிலையும் போலவரிற் சொல்லப் பெறும் எனவும் குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை நெறிப்பட்டவாறாகத் தலைவிக்குக் கூற்று நிகழுமிடமும் உணர்த்தியவாறு.

நச்.

இதனுள் தலைவி கூற்று நிகழ்த்துமாறு கூறுகின்றான் சில கூற்றுக்களுள் தன் வயின் உரிமையும் அவன் வயிற்பரத்தைமை

இடிப்பதனால் பிரிந்தார் வருந்தும்படியான பூங்குன்ற நாடன் நம்மைப் புணர்ந்த அந்த நாளைப் போலச் செறிந்தில்லாமல் இந்நாளில் வளைகள் நெகிழ்ந்தன.

1. கருத்து: மணம் கமழும் கூந்தலுடையார் ஊடலை வணங்கித் தெளிவிப்பான் நீர்த் துறையானது மிக்க அலையிடு மணலால் நீல மலர் வருந்த மாறுபட்ட பெரிய திரைகள் வந்து மணலைக் கரைத்து வருத்தம் போக்கி யருள்செய்யும்.

யும் பட நிகழ்த்தவும் பெறுமென்கின்றான். 'அவன் வயின்' எனவே 'தன்' என்றது தலைவியையாம், உரிமை களவிலே கற்புக்கடம் பூண்டொழுகல், எனவே, புலவியுள்ளத் தாளாகவும் பெறுங் களவினென்பது கருதிப் பரத்தையுமுள என்றான். ஊடலும், உணர்த்தலும் வெளிப்பட நிகழாமையின் இவை புலவிப் போலி. பரத்தை—அயன்மை. அவன்கட் பரத்தைமை யின்றேனுங் காதன் மிகுதியான் அங்ஙனங் கருதுதல் பெண் தன்மை. உம்மை எதிர்மறையாகலின் இவ்விரண்டும் இலவாதலே பெரும்பான்மை.

(இ-ள்): மறைந்து அவற் காண்டல்—தலைவன் புணர்ந்து நீங்குங்கால் தன் காதன் மிகுதியால் அவன் மறையுந் துணை யும் நோக்கி நின்று அங்ஙனம் மறைந்தவனைக் காண்டற் கண்ணுந் தோழிக்குக் கூற்றாற் கூறுதலுள:

(உ-ம்)

''கழிப்பூக் குற்றும் கான லல்கியும்
வண்டற் பாவை வரிமண லயர்ந்தும்
இன்புறப் புணர்ந்து மிளிவரப் பணிந்துந்
தன்றுயர் வெளிப்படத் தவறில் நந்துயர்
அறியா மையி னயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ மெல்லம் புலம்பன்
தகைஇய சென்றவென் னிறையி னெஞ்ச
மெய்தின்று கொல்லோ தானே யெய்தியுங்
காமஞ் செப்ப நாணின்று கொல்லோ
உதுவ காணவ ரூர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானு
மெக்கர்த் தாழை மடல்வயி னானு
மாய்கொடிப் பாசடும் பரியவூர் பிழிபு
சிறுகுடிப் பரதவர் பெருங்கடன் மடுத்த
கடுஞ்செலற் கொடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமொடி கந்துமா யுமே''[1]

(அகம்-330)

---

1. கருத்து : மென்னிலமாகிய நெய்தல் நிலத்தலைவன் நம்மொடு கழிப்பூப் பறித்தும் கானலில் தங்கியும்

''அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு'' என்பது தன் வயினுரிமை, 'இகந்து மாயும்' என்பது அவன்வயிற் பரத்தைமை.

தற்காட்டுறுதல்—தன்னை அவன் காணாவகை நாணான் மறைந்து ஒழுகினுந் தன் பொலிவழிவினை அவற்குக் காட்டல் வேண்டுதற் கண்ணும்; அது,

''இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே''[1] (குறுந்-98)

'இன்னளாயினள்' என்றது தற்காட்டுறுதல். 'செப்புநர்ப் பெறினே' என்பதனாற் களவாயிற்று. கற்பிற்கு வாயில்கள் செப்புவார் உளராதலின். இதற்கு இரண்டும் உள.

நிறைந்த காதலிற் சொல் எதிர் மழுங்கல்—தலைவி காதன் மிகுதியால் தலைவன் பரத்தைமையை எதிர்கூற நினைந்து கூற்றெய்தாது குறைபடுதற் கண்ணும்:

(உ-ம்)

''பிறைவனப் பிழந்த நுதலும் யாழநி
னிறைவரை நில்லா வளையு மறையா
தூரலர் தூற்றுங் கௌவையு நாணிட்
டுரையவற் குரையா மாயினு மிரைவேட்டுக்

மணலில் வண்டலம் பாவை விளையாட்டயர்ந்தும் மகிழ்ச்சியுறக் கூடியும் பணிந்தும் மகிழ்ந்தவன் பிரியும் போது நமக்குண்டாம் துயரை யறியாமல், தனக்குண் டாம் துயரொன்றையே கருதிச் சோர்ந்த நெஞ்சுடன் துயர் வெளிப்படச் செல்வன். அவன் செல்லும் தேர் அவ்விடத்தே தோன்றுதலைக் காண்பாயாக. அத்தேர் மணற்குவியல் மேல் ஏறியும், தாழை மடல்களினிடத் தும் அடும்பங்கொடி யறுபட ஏறியும் இறங்கியும் செல் கிறது. அதன் தோற்றமும் மறைவும், பரதவர், கடலில் செலுத்தும் படகுகள் ஏற்ற இழிவுடன் சென்று மறை வது போலும்.—தலைவி தோழியிடம் கூறியது.

1. கருத்து: பக்கம் 205-ல் காண்க.

கடுஞ்சூல் வயவொடு கானலெய் தாது
கழனி யொழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடன்மீ னொய்யு
மெல்லம் புலம்பற் கண்டுநிலை செல்லாக்
கரப்பவுங் கரப்பவுங் கைம்மிக்
குரைத்த தோழி யுண்க ணீரே''[1]

(நற்றிணை-263)

இஃது 'யாம் உரையாமாயினுங் கண் உரைத்தன' என்றலின் இரண்டுங் கூறினாள்.

வழிபாடு மறுத்தல்—வருத்த மிகுதியால் தலைவனை வழி படுதலை மறுத்துக் கூறுமிடத்தும்.

(உ-ம்)

''என்ன ராயினு மினிநினை வொழிக
வன்ன வாக வுரைய றோழியா
மின்ன மாகநத் துறந்தோர் நட்பெவன்
மரனா ருடுக்கை மலையுறை குறவ
ரறியா தறுத்த சிறியிலைச் சாந்தம்
வறனுற் றார முருக்கிப் பையென
மரம்வறி தாகச் சோர்ந்துக் காஅங்
கறிவு முள்ளமு மவர்வயிற் சென்றென
வறிதா லிகுளையென் யாக்கை யினியவர்
வரினு நோய்மருந் தல்லர் வாரா
தவண ராகுக காதல ரிவணங்

---

1. கருத்து: தோழீ! நம் நுதலின் பொலிவிழப்பையும் கைவளை நெகிழ்வதையும் ஊரவர் மறைவாக இன்றி நேரே அலர் தூற்றுவதையும் நாணத்தால் உரைக்க வேண்டிய அவரிடம் நாம் உரையேம் ஆயினும், சூல் கொண்ட பெண் நாரை இரை தேடக் கானலில் செல் லாது கழனியிலேயே தங்க அதற்கு ஆண் நாரை மீன் இரையைக் கொடுக்கும் நாடனாகிய தலைவனைக் காணும்போது மறைத்தாலும் நம்மையும் மீறிக் கண்ணீர் அவர்க்கு உரைத்து விட்டன.

காமம் படரட வருந்திய
நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே''[1]
(நற்றிணை-64)

''உள்ளினுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே''[2] (குறுந்-102)

எனவரும்.

''நீயுடம் படுதலின் யான்றர வந்து
குறிநின் றனனே குன்ற நாட
னின்றை யளவை சென்றைக் கென்றி
கையுங் காலு மோய்வன வொடுங்கித்
தீயுறு தளிரி னடுங்கி
யாவது மில்லையான் செயற் குரியதுவே''[3]
(குறுந்-383)

---

1. கருத்து: தோழி! தலைவர் எத்தகைய சிறப்பினரா யினும் அவரிடம் தூதுவிட இனி நினையாதே. அவர் நம்மைக் கைவிட்டார் என்று வருந்தாதே. நாம் இப்படி வருந்த நம்மைப் பிரிந்தோர் நட்பு நமக்கு என்ன பயன் தரும்? மரநார் பின்னிய ஆடையுடைய மலைக் குறவர் அறியாது அறுத்த சந்தன மரம் நீர் சொரிந்து பட்டது போல நம் அறிவும் உள்ளமும் அவர் கைவிட்டமையால் அவர் பால் சென்று நம் உடம்பு இறக்கும் தன்மை யுடையதாயிற்று. இனி அவர் வரினும் என் நோய்க்கு மருந்தாவார் இல்லை. அதனால் அவர் தம்மூரிலேயே இருப்பாராக. இவ்வூரினரும் நம் காமம் வருத்த வருந்திய நம் துன்பத்தைக் காணாதாராகுக.

2. கருத்து: யாள் கூடிய தலைவரை நினைப்பின் உள்ளம் துன்புறும் ; நினையாதிருக்கவும் அவ்வளவையில் அமைவதன்று உள்ளம். அவர்பால் கொண்ட காமமோ விசும்பளவில் பரவும் பெருமை வாய்ந்தது. இவ்வா றமைய விட்ட தலைவன் அருளாளன் அல்லன்.

3. கருத்து: தலைவி! நீ தலைவனுடன்போக இசைந்த மையால் நான் சொல்லி அழைக்க வந்து அவ்விடத்து நின்றான் குன்ற நாடன். ஆனால் நீயோ இன்றொரு நாள் கழியட்டும் நாளை அவனுடன் செல்வேன் என் றாய். யான் அது கேட்டுக் கையும் காலும் செயலறத் தீயிடைப்படும் தளிர்போல உடம்பு நடுங்கிச் செயற் குரியது இன்றி நின்றேன்.

இத்தோழி கூற்றே 'சென்றைக்க' என்றதனால் தலைவி மறுத்தமை பெற்றாம்.

மறுத்து எதிர்கோடல்—அங்ஙனம் வழிபாடு மறுத்த தலைவியே அவனை ஏற்றுக் கோடலை விரும்பியக் கண்ணும்: அது,

"கௌவை யஞ்சிற் காம மெய்க்கு
மெள்ளற விடினே யுள்ளது நாணே
பெருங் களிறு வாங்க முறிந்துநிலம் படாஅ
நாளுடை யொசிய லற்றே
கண்டிசிற் றோழியவ ருண்டவென் னலனே"[1]

(குறுந்-112)

இது, 'நாணேயுள்ளது கற்புப்போம்' என்றலின் மறுத்தெதிர் கோடலாம்.

பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்—தன் கற்பிற்கு வரும் பழி தீர்ந்த தன்மையால் தன்கண் தோன்றிய மகிழ்ச்சியைச் சிறிதே தோழிக்குத் தோற்றுவித்தற் கண்ணும்.

தலைவனால் தோன்றிய நோயும் பசலையும் முருகனால் தீர்ந்ததென்று அவன் கேட்பிற் கற்பிற்குப் பழியாமாதலின் 'பழி' யென்றார்.

(உ-ம்)

"அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதரும்
கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்ல
லிதுவென வறியாள் மறுவரற் பொழுதிற்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவ ளிவளென
முதுவாய்ப் பெண்டி ரதுவாய் கூறக்

1. கருத்து: தோழீ! ஊரவர் அலருக்கு அஞ்சின் காமம் தேயும். ஊரவர் எள்ளலுக்கு அஞ்சிக் காமத்தை விட்டால் (கற்புக்கெட) நிற்பது நாண் ஒன்றே; இங்ஙன மாதலின் அவர் உண்ட என் நலன் களிற்று யானையால் முறிக்கப்பட்ட கிளைபோல ஆயிற்று.

களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநா
ளார நாற வருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி
னொளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர் காவல ரறியாமைத்
தன்னசை யுள்ளத்து நன்னசை வாய்ப்ப
வின்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனெ னல்லனோ யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குலந்தமை கண்டே''[1] (அகம்-22

இதனுட் பழிதீர அவன் வந்து உயிர் தளிர்ப்ப முயங்கி நக்க நிலையைத் தோழிக்குத் தலைவி கூறியவாறு காண்க.

கைப்பட்டுக் கலங்கினும்—தலைவி குறிப்பினன்றி எதிர்ப் பட்ட தலைவன் ஒருவழி அவளை அகப்படுத்தவழிக் காட்சி விருப்பினளாயினும் அப்பொழுது அவள் கலங்கினும்.

எனவே, காட்சி விருப்பினை மீதூர்ந்து கலக்கம் புலப் பட்டது தலைவன்வயிற் பரத்தைமை கருதி.

''கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாம்பூம் பொலங்கோதைத்
தொடி செறி யாப்பமை யறி'' (கலித்-54)

---

1. கருத்து: தலைவி தோழியிடம் கூறியது. தோழீ! கான் கெழு நாடனாகிய தலைவன் மார்பைக் கூடியதால் வந்த என் நோயைக் காரணம் அறியாமல் முருகனை வழிபடத் தீரும் என்று முதிய பெண்டிர் கூற, அதனால் முருகனை வேலன் மூலம் ஆற்றுப்படுத்தும் அந்நடு நாளில் யானையாகிய இரையைத் தேடிப் பதுங்கி வரும் புலியைப் போல என்னைப் புணர வேண்டிக் காவ லர்க்குப் பதுங்கி வந்து புணர அந்நோய் நீங்கியது. அந் நீக்கம் வேலன் வெறியாட்டால் நீங்கியதாக எண்ணிய போது சிரித்தேன்.

என்னுங் குறிஞ்சிக் கலியுள் 'அதனா லல்லல் களைந்தனன் றோழி' எனக் கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைக் 'களைந்தே' னெனத் தலைவியுரையெனத் தோழிக்கு உரைத்தற்கட் கூறிய வாறு காண்க. இவ்வுதாரணம் ஆண்டுக் காட்டுதும்.

''உறுகழி மருங்கி னோதமொடு மலர்ந்த''
(அகம்-230)

என்னும் பாட்டுத் தலைவன் இதனைக் கூறியது,

நாணு மிக வரினும்—தலைவனை எதிர்ப்பட்ட தலைவி தன் பெருநாணுடைமை கூறித் தலைவனை ஏற்றுக்கொள்ளாது நிற்பினும்;

(உ-ம்)

''விளையா டாயமொடு வெண்மண லழுவத்து
மறந்தனந் துறந்த காழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தனம் வளர்த்தது
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கி
னிறைபடு நீழல் பிறவுமா ருளவே''[1]
(நற்றிணை-172)

---

1. கருத்து: புதிய பாணரது விளரிப் பண்போல வலம்புரிச் சங்கு ஒலிக்கின்ற நீர்த்துறைத் தலைவ! ஒரு கால் எம் அன்னையானவள் எம்மைப் பார்த்து ''விளையாடும் தோழியர் கூட்டத்தோடு விளையாடி மறந்து விட்டுச் சென்ற புன்னைக் காயானது முளைத்துவிட அதைப் பால் விட்டு வளர்த்தோம். அதனால் உங் களுக்கு முன்னமேயே எம் மகள்போல் வளர்த்தலின் உங்கட்கு இப் புன்னை அக்கா முறையுடையதாகும்'' என்று கூறினாள். அதனால் இப்புன்னைமர நிழலில் கூடுதற்கு நாணுகிறோம். நீ கூடக் கருதினால் இப்பக்கத் தில் வேறு மர நீழலும் உண்டு.

இதனுள் 'அம்ம நாணுதும்' எனப் புதிதுவந்ததோர் நாணு மிகுதி தோன்ற மறுத்துரைத்தலின் தன்வயினுரிமையும் அவன் வயிற் பரத்தைமையுங் கூறினாள்.

இட்டுப் பிரிவு இரங்கினும்—சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழித் தலைவி இரங்கினும்.

கற்பினுட் சொல்லாத பிரிதலையும் இட்டுப் பிரிவென்ப, களவுபோல நிகழ்பொருள் உணர்த்திப் பிரிதலருமையின்.

(உ-ம்)

''யானே யீண்டை யேனேயென் னலனே
யானா நோயொடு கான லஃதே
துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே''[1] (குறுந்-97)

'தம்மூரான்' என்றலின் ஓதன் முதலிய பிரிவின்றி அணித் தாயவழிப் பிரிந்தானென அவ்விரண்டும் பயப்பக் கூறியவாறு காண்க.

''சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானல்
விரிநீர்ச் சேர்ப்ப னீப்பி னொருநம்
இன்னுயி ரல்லது பிறிதொன்
றெவனோ தோழி நாமிழப் பதுவே''[2]

(குறுந்-334)

இதுவும் அது. இவை களவினுட் புலவிப்போலியாம்.

அருமை செய்து அயர்ப்பினும்—முற்கூறிய இட்டுப் பிரிவே யன்றித் தலைவன் தன்னை அரியனாகச் செய்துகொண்டு தம்மை மறப்பினும்.

---

1. கருத்து: தோழீ! யான் சிறைப்படுத்தப்பட்டு இங்குள் ளேன். என் நலம் துன்பத்தோடு தலைவனைப் புணர்ந்த கானலிடத்ததாயிற்று. தலைவனோ தம்மூரில் உள் ளான். எங்களவொழுக்கம் அலராகிப் பொதுவிடத்த தாயிற்று.

2. கருத்து: தோழீ! சேர்ப்பன் நம்மைப் பிரியின் நாம் இழப்பது உயிர் அல்லது பிறிது யாது?

அது தண்டாதிரத்தலை (102) முனிந்த மற்றைய வழித் தலைவன் தானும் அரியனாய் மறைந்தான் போன்று காட்டினும் அவ்விரண்டுங் கூறுதலாம்.

(உ-ம்)

''தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந் துணர்க வென்ப மாதோ
வழுவப் பிண்ட நாப்ப ணேமுற்
றிருவெதி ரீன்ற வேற்றிலைக் கொழுமுளை
சூன்முதிர் மடப்பிணை நாண்மேய லாரு
மலைகெழு நாடன் கேண்மை பலவின்
மாச்சினை துறந்த கோண்முதிர் பெரும்பழம்
விடரளை வீழ்ந்துக் காங்குத் தொடர்பறச்
சேணுஞ் சென்றுக் கன்றே யறியா
தேக லடுக்கத் திருண்முகை யிருந்த
குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிரு
மின்னு மோவா ரென்றிறத் தலரே''[1]
(நற்றிணை-116)

தீங்கு செய்தாரையும் பொறுக்கிற்பார் நம்மைத் துறத்தலின் நாம் அரியேமாகியது பற்றித் தாமும் அரியராயினார் போலுமென அவ்விரண்டுங் கூறினாள்.

''நெய்தற் படப்பை நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலிற் கண்டநாட் போலானாற்
செய்த குறியும்பொய் யாயினவாற் சேயிழா
யையகொ லான்றார் தொடர்பு''[2] (திணை-ஐம்-41)

இதுவுமது.

---

1. கருத்து: தீமையைச் செய்தவரிடத்தும் பெரியவர்கள் அத்தீமை செய்தோர் தாமே நன்கு அறிந்து இனிச் செய்யாது உணர்வாராக எனப் பொறுப்பர் என்று கூறுவார்கள். அப்படியே நம்மைப் பிரிந்தார் தாமே உணர்க என நாம் இருப்போம். மலை நாடனாகிய அவரது கேண்மை, மலை விடர்ப்பில் விழுந்த முதிர்ந்த பலாப் பழம் வீணாவதுபோலத் தொடர்பற்றுச் சென்று விட்டது. அப்படியாகவும் குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர் என்னைப் பற்றி யலர் தூற்றுவதை இன்னும் நிறுத்தாராயினர். என்னே!
2. கருத்து: பக்கம் 197ல் காண்க.

வந்தவழி எள்ளினும்—பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைவன் வந்த ஞான்றும் பெறாத ஞான்றைத் துன்ப மிகுதியாற் பெற்றதனையுங் கனவு போன்று கொண்டு இகழ்ந் திருப்பினும்.

(உ-ம்) :

''மானடி யன்ன கவட்டிலை யடும்பின்
றார்மணி யன்ன வெண்பூக் கொழுதி
யொண்டொடி மகளிர் வண்ட லயரும்
புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
யுள்ளேன் றோழி படீஇயரென் கண்ணே''[1]

(குறுந்-243)

''வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்''[2] (குறள்-1179)

''இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு''[3] (குறள்-1152)

'வரிற்றுஞ்சா' எனவும் 'புன்கணுடைத்து' எனவும் வரவும் பிரிவும் அஞ்சி இரண்டும் நிகழக் கூறினாள். இது முன்னிலைப் புறமொழி.

''கண்டிரண் முத்தம் பயக்கு மிருமுந்நீர்ப்
பண்டங்கொ ணாவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டே னெனத்தெளிந்தே
னின்ற வுணர்விலா தேன்''[4]

(ஐந்-எழு-61)

---

1. கருத்து: தோழி! சேர்ப்பனை இனி நான் நினையேன். என் கண்களும் துயிலும்.

2. கருத்து: காதலர் வாராதபோது கண் துயிலா. வந்த போதும் அவர் வாராத நாளில் உண்டான துன்பத்தை எண்ணி வந்ததையும் கனவாகக் கருதித் துயிலா. இவ் விரண்டிடத்துமாகப் பெரிய துன்பம் உற்றன கண்கள்.

3. கருத்து: முன்னர் அவர் பார்வை புணர்ச்சி கருதி இன்பத்தையுடையதாயிருந்தது. அவர் இப்போது புணர்ந்த புணர்ச்சி இனிப் பிரிவரே என நினைப்ப தால் துன்பம் உடையதாயிருந்தது.

4. கருத்து: பக்கம் 197ல் காண்க.

இது முன்பு இன்பந் தருவனென உணர்ந்துநின்ற உணர்வு ஈண்டில்லாத யான் புணர்ச்சி வருத்தந் தருமென்று தெளிந்தே னென்றாளென்க.

விட்டு உயிர்த்து அழுங்கினும்—கரந்த மறையினைத் தலைவி தமர்க்கு உரைத்தற்குத் தோழிக்கு வாய்விட்டுக் கூறி, அக்கூறிய தனையே தமர் கேட்பக் கூறாது தவிரினும்.

உயிர்த்தல்-கூறுதல்.

(உ-ம்) :

வலந்த வள்ளி மரனோங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமக
ளின்னா விசைய பூசல் பயிற்றலி
னேக லடுக்கத் திருளளைச் சிலம்பி
னாகொள் வயப்புலி யாகுமஃ தெனத்த
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாட
னெஞ்சமர் வியன்மார் புடைத்தென வன்னைக்
கறிவிப் பேங்கொ லறிவியேங் கொல்லென
விருபாற் பட்ட சூழ்ச்சி யொருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை
யின்னுயிர் கழிவ தாயினு நின்மகள்
ஆய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே"[1]

(அகம்-52)

இது சிறைப்புறம்.

---

1. கருத்து : தோழியிடம் தலைவி கூறியது. தோழீ! என் உடல் நோயானது நாடனது அகன்ற மார்பைக் காரணமாகக் கொண்டது என்ற செய்தியை நம் தாயி டத்துக் கூறுவமோ மாட்டோமோ என இருபால் சென்ற நின் ஆராய்ச்சியானது, சொல்வோம் என ஒரு பக்கமாக முடிவு பெற்றது. அப்போது இவ்வுயிர் உடலை விட்டுச் செல்வதாயினும் தாயரிடத்து நின் மகள் உடல் நோய்க்குக் காரணம் காமநோய்தான் காரணம் என்று சொல்லாதே.

நொந்து தெளிவு ஒழிப்பினும்—வரைவு நீட்டித்துத் தலைவன் சூளுற்ற வழி அதற்கு நொந்து தெளிவிடை விலங்கினும்:

(உ-ம்)

''மன்றத் துறுகற் கருங்கண் முசுவுகளுங்
குன்றக நாடன் றெளித்த தெளிவினை
நற்றென்று தேறித் தெளிந்தேன் றலையளி
யொன்றுமற் றொன்று மனைத்து''[1]

(ஐந்-எழு-9)

எனவரும்.

'எம் மணங்கினவே' (குறுந்-53) என்பது தலைவி கூறக் கேட்டுத் தோழி கூறியது. அதுவும் இதனாற் கொள்க.

அச்சம் நீடினும்—தெய்வம் அச் சூளுறவிற்கு அவனை வருத்துமென்றுந் தந்தை தன்னையர் அறிகின்றாரோ வென்றுங் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கும் உண்மை கூறுதற்கும் அஞ்சிய அச்சம் நீட்டிப்பினும்:

(உ-ம்):

''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதுங்
கொடிய ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே''[2]

(குறுந்-87)

''மென்றினை மேய்ந்த சிறுகட் பன்றி
வன்க லடுக்கத்துத் துஞ்சு நாட
னெந்தை யறித லஞ்சிக்கொ
லதுவே தெய்ய வாரா மையே''[3]

(ஐங்குறு-261)

---

1. கருத்து: பக்கம் 199ல் காண்க.
2. கருத்து: பக்கம் 199ல் காண்க
3. கருத்து: பக்கம் 199ல் காண்க.

''புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுநம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்திவ்வூ
ரினையளென் றெடுத்தோதற் கனையையோ நீயென
வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி
செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்றா யென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந்
தனைத்தற்கோ
கௌவைகோ யுற்றவர் காணாது கடுத்தசொல்
ஒவ்வாவென் றுணராய்நீ யொருநிலையே யுரைத்ததை
ஒடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தனைத்தற்கோ
விடுந்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய வந்ததை
வரிதேற்றாய் நீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய்
தனைத்தற்கோ
புரிபுநம் மாயத்தார் பொய்யாக வெடுத்தசொ
லுரிதென வுணராய்நீ யுலமந்தாய் போன்றதை

எனவாங்கு,

அரிதினி யாயிழா யதுதேற்றல் புரிபொருங்
கன்றுநும் வதுவையு ணமர்செய்வ தின்றீங்கே
தானயந் திருந்ததிவ் வூராயி னெவன்கொலோ
நாஞ்செயற் பால தினி''[1]

(கலி-76)

எனவரும்.

---

1. கருத்து: தோழியே! நம் அணிகளைத் திருத்தியும் நாம் நீராடும்போது நம்மைக்காக்கப் புறம்திரிந்தும், தொய்யில் எழுதியும், நம் வீடுவந்து ஏவலை வணங்கிச் செய்தும், நம்மைக் கூட நினைந்து வருந்தும் நெடுந்தகையாளன் பக்கத்தில் இவன் இவளுடன் கூட்டம் உடையான் என இவ்வூரார் கூறுவனவற்றைக் கேட்டு நீ அப்படியா என வினவுகின்றாய். நான் கூறுவதைக் கேட்பாயாக.

அலர் தூற்ற வாய்ப்பில்லாதபோது அதற்காக வருந்தும் இவ்வூர் மகளிர் அலர் தூற்றல் தகாது என்று

பிரிந்தவழிக் கலங்கினும்—களவு அலராகாமல் யான் பிரிந்துழித் தலைவி கலங்குவளென்று அஞ்சித் தலைவன் பிரியாது உறைதலிற் பிரிவைக் கருதப் பெறாத தலைவி அவ்வாறன்றிப் பிரிந்துழிக் கலங்கினும்.

(உ-ம்)

''மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டே ரேறிக்
கலங்குகடற் றுவலை யாழி நனைப்ப
வினிச்சென் றனனே யிடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொ றோழியென்
றேங்கமழ் திருநுத லூர்தரும் பசப்பே''[1]

(குறுந்-205)

எண்ணாமல் ஐயப்பாட்டிற் கூறிய அலரைப் பொருந்தாது என உணராமல் நீயும் வினவியது சாய்க்கோரையைப் பறிக்க முடியாமல் செவ்விரல் மேலும் சிவக்க நெடுநேரம் கடத்தி விட்டாய் என்று சொல்லி அச்சாய்க் கோரையைப் பறித்துப் பாவை செய்து நமக்குத் தந்த காரணத்துக்காகவோ? ஊரினரால் தீயர் என்று விலக்கப்பட்ட மகளிர் அலர் கூறல் தீயது என உணராமல் சொன்ன அலரைக் கெடும்படித் தவிராமல் என்னைக் கோபித்தது, கயத்தில் போக முடியாமல் நாம் மீள, உடனே அவன் கயத்திற் சென்று மலர் பறித்துப் புறஇதழை ஒடித்து நமக்குத் தந்ததற் காகவோ?

ஆயத்தார் பொய்யாகக் கூறிய அலர்ச் சொல்லை இது இவட்கு உரித்தாகும் என்று நினைந்து அறியாமல் என்னை வினவுவது, அவன் தொய்யில் எழுத அறியாய் என்று சொல்லிக் கைப்பற்றித் தோளில் கரும்பு எழுதிப் பிறவும் தொய்யிலாக எழுதியதற்காகவோ என்று இப்படி யான் உனக்குக் கூறும்படியாகத் தோழீ! உன்னைத் தேற்றல் அரிது; அன்று நம் சுற்றத்தார் செய்யவிருக்கும் நம் வதுவையை இன்று இவ்வூரே நினைக்குமாயின் நாம் என் செய்யவல்லேம்.

1. கருத்து : தோழீ! சேர்ப்பன் தேர் ஏறி இப்பொழுது தான் சென்றனன். இப் பசலை அப்பிரிவினை எங்ஙனம் அறிந்ததோ அறியேன். அது என் நெற்றி முழுவதும் பரவியது. எங்ஙனம் ஆற்றுவேன்.

''குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை ஞெகிழ்த்தோர்க் கல்ல லுறீஇயர்
சென்ற நெஞ்சஞ் செய்வினைக் குசாவாய்
ஒருங்குவர னசையொடு வருந்துங் கொல்லோ
அருளா னாதலி னழிந்திவண் வந்து
தொன்னல னிழந்தவென் பொன்னிற நோக்கி
யேதி லாட்டி யிவளெனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே''[1]

(நற்றிணை-56)

''வருவது கொல்லோ தானே வாரா
தவணுறை மேவலி னமைவது கொல்லோ
புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
யிருவி யிருந்த குருவி வெருவுறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
குன்றுகெழு நாடனொடு சென்றவென் னெஞ்சே''[2]

(ஐங்குறு-295)

''பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்மணன் மேலேறித்—தெரிப்புறத்

---

1. கருத்து: குராமலரில் வண்டு படிய எழும் நறுநாற்றத்தைக் காற்று கலந்து வீச. அதனைத் துய்த்துக் காணும் அழகிய நேரத்தில் வளைநெகிழ்த்துச் சென்றாரை, எண்ணித் துன்பம் அடைதலின், அவர்பாற் சென்ற என் நெஞ்சமானது,அவரது வினைக்குத் துணையாய் இருந்து முடித்துவிட்டு அவரோடு வருதற்காக அவருடன் வருந்தியிருக்கிறதோ அல்லது அவர் நம்மை அருளாமையால் வருந்தி இங்கு வந்து பார்த்து முன்னிருந்த அழகு கெட்டுப் பசலை பரவியிருக்கும் என்னைப் பார்த்து இவள் நம் தலைவியல்லள்; யாரோ என எண்ணி என்னைத் தேடி வருத்தத்துடன் போய் விட்டதோ? அறியேன் தோழீ!

2. கருத்து பக்கம் 200ல் காண்க.

தாழ் கடற்றண்சேர்ப்பன் றாரகல நல்குமே
வாழியாற் காணாமோ யாம்''[1]

(ஐந்-ஐம்-43)

எனவரும்.

பெற்ற வழி மலியினும்—தலைவி இடையீடின்றித் தலைவனை எதிர்ப்படப் பெற்ற ஞான்று புதுவது மலியினும்.

வரைவு நீட்டித்த காலத்துப் பெற்றவழி மலிவை வெளிப்படக் கூறுதலும், வரைவு நீட்டியாதவழிப் பெற்றவழி மலிவை வெளிப்படுத்தாமையும் உணர்க.

(உ-ம்) :

''இன்னிசை யுருமொடு கனைதுளி தலைஇ
மன்னுயிர் மடிந்த பானாட் கங்குற்
காடுதேர் வேட்டத்து விளிவிடம் பெறாஅது
வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழைத்
தேனாறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை
கூதிரிற் செறியுங் குன்ற நாட
வனைந்துவர லிளமுலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே
நும்மில் புலம்பினு முள்ளுதொறு நலியுந்
தண்வரல சைஇய பண்பில் வாடை
பதம்பெறு கல்லா திடம்பார்த்து நீடிய
மனைமர மொசிய வொற்றிப்
பலர்மடி கங்கு னெடும்புற நிலையே''[2]

(அகம்—58)

---

1. கருத்து : கூடற் சுழியானது தண்சேர்ப்பனின் மார்பு மாலையை நமக்குத் தருமேல் (அவனொடு கூட்டத்தை யுறுதிப்படுத்துமேல்) நாம் பல்லி முட்டையிடும் புன்னை மரத்துத் தாது உதிர்ந்து வரியாகக் காணப் படும் மணல் மேட்டில் ஏறி அக்கூடற் சுழியினை இழைத்துக் காண்போம் வா.

2. கருத்து : குன்ற நாட! நீயில்லாத தனிமையில், நின்னை நினையுந்தோறும் வருத்தும் மிகும்படியான வாடைக் காற்றில் இரவில் நின் வருகையைப் பெறாமல் நீ

முயக்கம் இனிதென மகிழ்ந்து கூறுவாள் நும்மில் புலம்பால் வாடைக்கு வருந்தினே மென்றலின் இரண்டுங்[1] கூறினாள்.

"அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின வளியமென் றோள்கண்
மல்ல லிருங்கழி மல்கும்
மெல்லம் புலம்பன் வந்த மாறே"[2]

(ஐங்குறு-120)

"அம்ம வாழி தோழி பன்மா
ணுண்மண லடைகரை நம்மோ டாடிய
தண்ணந் துறைவன் மரீஇ
யன்னை யருங்கடி வந்துநின் றோனே"[3]

(ஐங்குறு-115)

எனவரும்.

இவை தோழிக்குக் கூறியன. "பெற்றவழி மலியினும்' எனப் பெறுபொருள் இன்னதெனவும் இன்னார்க்குக் கூறுவதெனவும் வரையாது கூறவே, பிறர் பெற்று மலிந்து பிறர்க்குக் கூறு வனவுங் கொள்க.

"அம்ம வாழி தோழி யன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை
மாலைப் பெய்த மணங்கம ழுந்தியொடு
காலை வந்த முழுமுதன் காந்தள்

வரும் காலத்தை நோக்கித் தாழ்ந்து வீட்டின் மரத்தை அது ஒடியுமாறு அணைத்துத் தங்கியிருக்கும் நிலை யானது, நின் மார்பை முலைகள் அழுத்த இரு கைகளும் சுற்றிப் புறமுதுகை வளைய முயங்கும் முயக்கத்தினும் இனிதாகும்—தலை வரைவு நீட்டித்து வந்த தலைவ னிடம் கூறியது

1. இரண்டு–தன் வயின் உரிமையும் அவன் வயின் பரத்த மையும்.

2. கருத்து : தோழீ! கேட்பாயாக. புலம்பன் வந்த கார ணத்தால் இரங்கத்தக்க மென் தோள்கள் அழகுமிக நல்லவாயின.

3. கருத்து : தோழீ! கேட்பாயாக. கடற்கரையில் நம் மோடாடிய தலைவன் நம் அன்னையின் காவலமைந்த வீட்டின் புறத்தே வந்து நின்றான்.

மெல்லிலை குழைய முயங்கலு
மில்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே''[1]

(குறுந்-361)

இது பெற்ற வழி மகிழ்ந்து தோழிக்கு உரைத்தது. இதற்கும் இரண்டுங் கூறிளாள்.

வரும் தொழிற்கு அருமை வாயில் கூறினும்—தலைவன் இடைவிடாது வருதற்கு ஆண்டு நிகழும் ஏதம் பலவற்றானும் உளதாம் அருமையை வாயிலாகிய தோழி கூறினும் தலைவிக்குக் கூற்று நிகழ்தலுள; அது

''நன்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சு
மோர்யான் மன்ற துஞ்சா தேனே''[2] (குறுந்-6)

இதனுட்பொழுது சென்றதில்லையென்றும், மாக்கள் இன்னுந் துயின்றிலரென்றும் அருமையை வாயில் கூறியவழித் தலைவி யாமமும் நள்ளென்றும் மாக்களுந் துயின்றும் வந்திலரென வருந்திக் கூறியவாறு காண்க.

நாம் ஏவிய தொழில் ஏற்றுக் கொண்டு வருகின்றவன், ஒரு காரணத்தானன்றி வாராதொழியுமோ வென்று தலைவி கொள்ளுமாறு கூறுமென்றற்குத் தொழிலென்றார்.

கூறிய வாயில் கொள்ளாக் காலையும்—தலைவற்குக் குறை நேர்ந்து வாயிலாகிக் குறைநயப்பக் கூறியவழியும் பிறவழியுந், தோழி கூற்றினைத் தலைவி ஏற்றுக் கொள்ளாத காலத்துக் கண்ணும்: வாயில்—தோழி.

---

1. கருத்து: தோழி! பிரிந்த தலைவனின் மலையினின்றும் மாலையில் பெய்த மழை வெள்ளத்தில் அடித்துவரப் பட்ட காந்தள் செடியானது மறுநாட் காலையில் நம் மனையருகே மிதந்து வந்தது. அதனை யான் தழுவி யதையும் வீட்டில் கொணர்ந்து நட்டு வளர்த்ததையும் விலக்காத அன்னையின் நன்றியைக் கருதுங்கால் உயர்ந்த வானோர் உலகமும் சிறிதாகும்.

2. கருத்து: பக்கம் 218ல் காண்க.

(உ-ம்)

''தெருவின்கட், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்''[1] (கலி-60)

எனத் தோழி கூற்றினை மறுத்தது.

''தோளே தொடி நெகிழ்ந்தனவே கண்ணே
வாளீர் வடியின் வடிவிழந் தனவே
நுதலும் பசலை பாயின்று திதலைச்
சில்பொறி யணிந்த பல்கா ழல்குன்
மணியே ரைம்பான் மாயோட் கென்று
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வை தூற்ற
நாமுறு துயரஞ் செய்யல ரென்னுங்
காமுறு தோழி காதலங் கிளவி
யிரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த
தோய்மடற் சின்னீர் போல
நோய்மலி நெஞ்சிற் கேமமாஞ் சிறிதே''[2]
(நற்றிணை-133

இது, தோழி கூற்றினை நன்கு மதியாது கூறினாள்.

---

1. கருத்து: தோழியே! தெருவில் கலங்குவாரைப் பார்த்து அதற்குக் காரணம் நாம் என்று நீ நின் மேற்கொள்வது என்னை? வாரணவாசி என்னும் ஊரினர் பிறர் வருத்தத்தைத் தம் வருத்தமாகக் கொள்வர். அது வாரண வாசிப்பதம் எனப்படும். அப்பதத்தை நீ நின்மேற் கொள்வதிற் பயன் யாது?

2. கருத்து: என்பால் அன்புறும் தோழியே! கொடிய வாய் உடைய நம்மூர்ப் பெண்டிர்கள், மணிக்காழ் அல்குலும் நீலமணி போலும் கூந்தலும் உடைய இப் பெண்ணுக்குத் தோள்கள் தொடிகளையிழந்தன. கண்கள் வாளால் பிளக்கப்பட்ட மாவடுப் போலும் அழகையிழந்தன. நுதலும் பசலை பரவியது. காரணம் யாதாம் என அலர் தூற்ற நம்மைத் துயரப்படுத்த மாட்டார் நம் தலைவர் என நீ சொல்லும் இச்சொல், கொல்லன் உலை நெருப்பில் பனைமடலால் தெளிக்கும் நீரானது சிறிது நெருப்பைத் தணிவித்தாற்போல நோய்மிக்க என் நெஞ்சுக்குச் சிறிது காவலாயிருந்தது.

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்—காப்பு மிகுதிக் கண் மனையகப்பட்டுக் கலங்கி உணர்வு அழிந்தவழித் தலைவி ஆராய்ச்சி யுடைத்தாகிய அருமறையினைத் தோழிக்குக் கூறு தலும் உள.

(உ-ம்)

''கேளா யெல்ல தோழி யல்கல்
வேணவா நலிய வெய்ய வுயிரா
வேமான் பிணையின் வருந்தினே னாகத்
துயர்மருங் கறிந்தனள் போல வன்னை
துஞ்சா யோவென் குறுமக ளென்றலிற்
சொல்வெளிப் படாமை மெல்லவெ னெஞ்சிற்
படுமழை பொழிந்த பாசறை மருங்கிற்
சிரல்வா யுற்ற தளவிந் பரலவற்
கான்கெழு நாடற் படர்ந்தோர்க்குந்
கண்ணும் படுமோ வென்றிசின் யானே''[1]

(நற்றிணை-61)

இதனுள், 'துஞ்சாயோ' எனத் தாய் கூறியவழி மனைப்பட்டுக் கலங்கியவாறும் 'படர்ந்தோர்க்கு' என மறையுயிர்த்தவாறுங் கண்படாக் கொடுமை செய்தானென பரத்தைமை கூறியவாறுங் காண்க.

''பொழுது மெல்லின்று பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசு மதன்றலைப்
புலிப்பற் றாலிப் புதல்வற் புல்லி
யன்னா யென்னு மன்னையு மன்னோ
வென்மலைந் தனன்கொ றானே தன்மலை

---

1. கருத்து: தோழீ! நான் கூறுவதைக் கேட்பாயாக. நேற்றிரவில் அவர் பால் கொண்ட காமம்மிக பெருமூச் செறிந்து அம்புபட்ட மான்பிணைபோல வருந்தினே னாக, அது கண்ட அன்னை என் துயர் அறிந்தாள்போல மகளே இன்னும் தூங்கவில்லையோ என்றாள். அப்போது என் நெஞ்சுக்குள்ளாகக் கான்கெழு நாடனை நினைத்தவர்க்குக் கண்ணும் உறங்குமோ எனக் கூறிக் கொண்டேன்.

யார நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே''[1]

(குறுந்-161)

''பலவின் பழம்பெற்ற பைங்கட் கடுவ
னெலவென் றிணைபயிரு மேகல்சூழ் வெற்பன்
புலவுங்கொ றோழி புணர்வறிந் தன்னை
செலவுங் கடிந்தாள் புனத்து''[2]

(திணை-ஐம்-10)

இவையும் அது.

இன்னும் 'மனைப்பட்டுக் கலங்கி' என்றதனாற் காப்புச் சிறைமிக்க கையறுகிளவிகளுங் கொள்க.

''சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெ மொண்டுறைத் துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
வாங்கட் டீம்புன லீங்கட் பரக்குங்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
னிழைநெகிழ் பருவரல் செப்பா தோயே''[3]

(நற்றிணை-70)

''கூர்வாய்ச் சிறுகுருகே குண்டுநீ ருட்கிடந்த
வார லிரைகருதி நித்தலும் நிற்றியா

---

1. கருத்து: பக்கம் 204ல் காண்க.
2. கருத்து: பக்கம் 204ல் காண்க,
3. கருத்து: நீர்த்துறையில் கழுவிய வெள்ளாடை மடி போலும் சிறகுடைய வெள்ளாங் குருகே! அவரூர் இனிய நீர் எம்மூரில் வந்து பரக்கும் ஊரினராகிய தலைவரிடம் அவர் பிரிவால் என் அணி நெகிழும்படியான துன்பத்தை அவரிடம் சென்று சொல்லாயாயினாய்; இனி எம்மூர்த் துறையில் கெளிற்று மீனையுண்டு அவர் ஊர்க்குப் பெயர்கிறாய். அங்கே என்துயர் கூறும் அத்தகைய அன்புடையையாய் கூறுவையோ அல்லது மறதியால் ஒழிவையோ கூறுக.

னேரிணர்ப் புன்னைக்கீழ்க் கொண்கன் வருமெனப்
பேருண்க ணீர்மல்க நின்றாண்மற் றென்னாயோ''[1]

''ஒண்டுவி நாராய்நின் சேவலு நீயுமாய்
வண்டூது பூங்கானல் வைகலுஞ் சேறிராற்
பெண்டூது வந்தே மெனவுரைத்தெங் காதலரைக்
கண்டீர் கழறியக்காற் கானல் கடிபவோ''[2]

இவை காப்புச் சிறைமிக்க கையறு கிளவி.

உயிராக் காலத்து உயிர்த்தலும்-தலைவனோடு தன்றிறத்து ஒருவரும் ஒன்று உரையாதவழித், தனதாற்றாமையால் தன்னோடும் அவனோடும் பட்டன சில மாற்றந் தலைவி தானே கூறுதலும் உள:

தோழி மறைவெளிப்படுத்துக் கோடற்கு வாளாது இருந்துழித், தலைவன் தன்மேல் தவறிழைத்தவழி இரண்டும் படக் கேட்போரின்றியுங் கூறுதலாம்.

(உ-ம்):

''உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடி
கானலஞ் சேர்ப்பன் கொடுமை யெற்றி
யானாத் துயரமொடு வருந்திப் பானாட்
டுஞ்சா துறைநரொ டுசாவாத்
துயிற்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்தே''[3]

(குறுந்-145)

---

1. கருத்து: கூர்வாய்ச் சிறுகுருகே! ஆழமான நீருட் கிடந்த ஆரல் மீனாகிய இரையை விரும்பி நாளும் இங்கே நிற்பாய். புன்னை மரத்தின் கீழே தன்தலைவன் வரும் என்று எண்ணிக் கண்ணீர் மல்க நின்றாள் இவள் என்ன விளையுமோ?

2. கருத்து: ஒள்ளிய தூவியுடைய நாரையே! நீயும் நின் ஆண் நாரையும் நாளும் வண்டு ஊதும் பூங்கானலில் நிற்கின்றீர்கள். அங்குவரும் எம் காதலரைக் கண்டு நின் பெண்ணுக்குத் தூதாக வந்தேம் என்று கூறி அவளையடைக எனக் கழறியுரைத்தால் இக்கானலிடத் திருந்து நுங்களை ஓட்டி விடுவார்களோ?

3. கருத்து: தோழி! கானலஞ்சேர்ப்பன் பிரிந்த கொடுமை நினைந்து நீங்காத் துயரோடு வருத்தமுற்று நள்ளிரவி லும் துயிலாது கிடப்பவரை வினவி அறியாமல் உறங்கு

''தழையணி யல்கு றாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
வம்மெல் லாக நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புட னெதிரின
யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னு
மவல நெஞ்சமொ டுசாவாக்
கவலை மாக்கட்டிப் பேதை யூரே''[1]

(குறுந்-159)

எனவரும்.

உயிராதாள் தோழியாயினாள்; அவள் தலைவி கூறுவன கேட்டதற்கும் பொய்த்துயில் கொள்ளும்.

'உயிர்த்தலும்' எனப் பொதுப்படக் கூறியவதனால் தோழிக்குக் கூறுவனவுங் கொள்க.

''பேணுப பேணார் பெரியோ ரென்பது
நாணுத்தக் கன்றது காணுங் காலை
யுயிரோ ரன்ன செயிர்தீர் நட்பி
னினக்கியான் மறைத்தல் யாவது மிகப்பெரி
தழிதக் கன்றாற் றானே கொண்கன்
யான்யா யஞ்சுவ லெனினுந் தானெற்
பிரிதல் சூழான் மன்னே யினியே
கான லாய மறியினு மானா
தலர்வந் தன்றுகொ லென்னு மதனாற்
புலர்வது கொல்லவ னட்பெனா
வஞ்சுவ றோழியென் னெஞ்சத் தானே''[2]

(நற்றிணை-72)

எனவரும்.

கின்ற மாக்களையும் நீண்ட இரவையும் உடையதாக லான் இவ்வூர் இனி நாம் வாழ்வதற்குத் தகுதியுடைய தன்று.

1. கருத்து பக்கம் 205ல் காண்க.

2. கருத்து பக்கம் 210ல் காண்க

உயிர்செல வேற்றுவரைவுவரின் அது மாற்றுதற் கண்ணும்—இறந்துபாடு பயக்குமாற்றால் தன்றிறத்து நொதுமலர் வரையக் கருதிய ஞான்று அதனை மாற்றுதற் கண்ணும்.

(உ-ம்):

''அன்னை வாழிவேண் டன்னை புன்னை
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
யென்னை யென்று மியாமே யிவ்வூர்
பிறிதொன் றாகக் கூறு
மாங்கு மாக்குமோ வாழிய பாலே''[1]

(ஐங்குறு-110)

''பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சார
லிருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவோ னென்று
மன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவிங் வழுங்க லூரே''[2]

(குறுந்—385)

எனவரும்.

நெறிபடு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்—தோழி கூட்டமுண்மை வழக்கியலால் நாடுகின்ற காலத்துக், கண் சிவப்பும் நுதல் வேறுபாடும் முதலிய மெய்வேறுபாடு நிகழ்ந்துழி, அவற்றைத் தோழி அறியாமலுஞ் செவிலி அறியாமலுந் தலைவி தான் மறைப்பினும்:

(உ-ம்)

''கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பு
மொண்டொடி மகளிர் தண்டலையல் குலுங்

---

1. கருத்து: பக்கம் 208ல் காண்க.
2. கருத்து: பலாப்பழம் உண்ணும் குரங்குக்கூட்டம் வேடன் அம்புக்கு அஞ்சி போர்க்குதிரைபோலத் தாவி மலைப் பக்கத்து மூங்கிற்கோல் அசையப் பாயும்படியான மலையடுக்கத்தையுடைய தலைவன், என்றும் இயற்கைப் புணர்ச்சிக்காலத்திருந்தது போலும் மாறாத நட்பினனாக இருக்கவும் அவனை விட்டு வரைவு குறித்துப் புதியவரை யுடையது இவ்வூர்.

காண்டொறுங் கவினை யென்றி யதுமற்
றீண்டு மறந்தனையாற் பெரிதே வேண்டாய்
நீயெவன் மயங்கினை தோழி
யாயினுஞ் சிறந்தன்று நோய்பெரி துழந்தே''[1]

காதன் மிகுதியாற் கவினை யெனற்[2]பாலாய் வேறு பட்டனையென்று எற்றுக்கு மயங்கினையெனத் தலைவி தன் வருத்தம் மறைத்தாள்.

''துறைவன் துறந்தெனத் துறையிருந் தழுதவென்
மம்மர் வாண்முக நோக்கி யன்னைநின்
அவல முரையென் றனளே கடலென்
பைஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை சிதைத்த தென்றேனே''[3]

இது செவிலிக்கு மறைத்தது.

ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள் —தான் அவளென்னும் வேற்றுமையில்லாத நட்பினாலே தோழி தனக்கு வந்து கூறிய குறையை, பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கித் தெளிந்தோள்—முன்னர்த் தெய்வப் புணர்ச்சி நிகழ்ந்தமை நோக்கி அது காரணத்தான் முடிப்பதாகத் தெளிந்த தலைவி, அருமை சான்ற நால் இரண்டு வகையில்—தான்முன் அருமை அமைந்து நின்ற நிலையால் தலைவன் தன்கண் நிகழ்த்திய மெய் தொட்டுப் பயிறன் (102) முதலிய எட்டினாலே, பெருமை சான்ற இயல்பின்கண்ணும்—தனக்கு உளதாம் பெருமை கூறு தற்கு அமைந்ததோர் இயல்பின் கண்ணும்.

---

1. கருத்து: தோழீ! முன் எல்லாம் கண் தோள் கூந்தல் அல்குல் ஆகியவற்றைப் பார்த்து ஒண்தொடி மகளே! அழகுடையாய் என்று கூறினாய். இன்று அதை மிகவும் மறந்து விட்டாய். நீ மயங்கியது ஏன்? எனக்காகத் துன்பப்பட்டு வருந்தியது தாயைக் காட்டிலும் சிறப்பு டையதாயிற்று.
2. கவினை எனற் பாலாய் — அழகுடையை என்று சொல்லும் பான்மையுடைய நீ.
3. கருத்து: துறைவன் என்னைப் பிரிந்தானாக அழுத என் முகம் பார்த்து அன்னையானவள் நின் துயரைக் கூறுக என்றாள். அதற்கு யான் கடலலையானது பஞ்சாய்க் கோரைப் பாவையை அடித்துச் சென்ற தோடு என் சிற்றிலையும் சிதைத்தது என்றேன்.

என்றது, தலைவன் இத்துணை இளிவந்தன செய்யவும் யான் நாணும் மடனும் நீங்கிற்றிலேனென்று தன் பெருமை தோழிக்குக் கூறுதலாம்.

(உ-ம்)

''மின்னொளி ரவிரற லிடைபோழும் பெயலேபோற்
பொன்னகைத் தகைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்
போழிடை யிட்ட கமழ்நறும் பூங்கோதை
யின்னகை யிலங்கெயிற்றுத் தேமொழித் துவர்ச்
செவ்வாய்

நன்னுதா னினக்கொன்று நவிலுவாங் கேளினி
நில்லென நிறுத்தா னிறுத்தே வந்து
நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ
யைதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலும் மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று

எனவாங்கு

அனையன பலபா ராட்டிப் பையென
வலையர் போலச் சோர்பத னொற்றியென்
நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி காணூஉப்
புலையர் போலப் புன்க ணோக்கித்
தொழலுந் தொழுதான் தொடலுந் தொட்டான்
காழ்வரை நில்லாக் கடுங்களி றன்னோன்
றொழூஉந் தொடூஉமவன் றன்மை
யேழைத் தன்மையோ வில்லை தோழி[1] (கலி-55)

---

1. கருத்து: மேகம் போலும் கூந்தலில் நறிய மாலையி னையும் இனிய நகையுடைய பற்களையும் செவ்வாயை யும் நுதலையும் உடைய தோழியே! இப்போது சில கூறுவம் கேட்பாயாக. ஒருவன் வந்து போகாதேநில் எனக்கூறி நுதலைப் பார்த்து நுதல் தேய்ந்தது ஆனால்

இதனுட் 'பாராட்டி' எனப் பொய்பாராட்டலும் 'சோர் பதனொற்றி' என நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி கூறுதலிற் கூடுதலுறுதலும் 'புலையர்போல நோக்கி' என நீடு நினைந்திரங் கலும் 'தொழலுந் தொழுதான்' என இடம் பெற்றுத்தழாஅலும் 'தொடலுந் தொட்டான்' என மெய்தொட்டுப் பயிறலும், அவனிகழ்த்தியவாறுங்கூறி, மதத்தாற் பரிக்கோலெல்லையில் நில்லாத களிறுபோல வேட்கை மிகுதியான் அறிவினெல்லையில் நில்லாதவனெனத் தீராத் தேற்றமும் ஒருவாற்றாற் கூறித் தனக்குப் பெருமை சான்ற இயல்பைப் பின்னொருகால் தோழிக்குக் கூறியவாறு காண்க.

இனித் தலைவற்குப் பெருமை அமைந்தன எட்டுக் குணமென்று கூறி, அவற்றை,

> ''இளமையும் வனப்பு மில்லொடு வரவும்
> வளமையுந் தறுகணும் வரம்பில் கல்வியுந்
> தேசத் தமைதியும் மாசில் சூழ்ச்சியும்''
>
> (பெருங்-1-36-89-91)

எனப் பொருள் கூறின் ''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் (75) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய எண்கள் அவை கூறிய வட நூல்களில் வேறே எண்ணுதற்கு உரியன சில இல்லாமல் எண்ணினாற்போல, ஈண்டும் இளமை முதலிய எட்டும் ஒழிய வேறெண்ணுதற்கு உரியன எட்டுந் தலைவற்கின்றாகக் கூறல் வேண்டும். ஈண்டு அவ்வாறின்றித் தலைவற்கு உரியனவாகப் பலவகைகளான எவ்வெட்டுளவாகக் கூறக் கிடந்தமையின் அங்ஙனம் ஆசிரியர் இலக்கணங் கூறாரென மறுக்க. அன்றியும் எட்டும் எடுத்து ஓதுபவென்றும் உதாரணமின்றென்றும் மறுக்க.

பிறையில்லை; முகம் மறுவற்றது ஆயினும் மதியன்று, தோள் மூங்கில் தன்மையது எனினும் அது பிறக்கும் இடமன்று; கண் பூப்போன்றது ஆனால் அது பிறக்கும் சுனையன்று; சாயல் உண்டு ஆனால் மயிலன்று. சொற் சொல்லத்தளரும் ஆனால் கிளியன்று என இப்படி என் உறுப்புகளைப் பாராட்டி வலைஞர் விலங்குச் சோர்வு பார்ப்பதுபோல என் நெஞ்சழிந்த செவ்வி பார்த்து புலையர் நோக்குவதுபோல் எட்டி மருண்டு நோக்கித் தொழுதான். பின் தொட்டான். பாகரது குத்துக்கோல் அளவில் நில்லாத யானை போன்றுக் காமம் மீதூர நின்றவன் தொழவும் தொடவும் செய்வதால் அவன் குணத்தில் அறியாமையுண்டோ, இல்லை.

இனி, 'முட்டுவயிற் கழறன், முனிவு மெய்நிறுத்தல், அச்சத் தினகறல், அவன் புணர்வு மறுத்தல், தூதுமுனிவின்மை, துஞ்சிச் சேர்தல், காதல் கைம்மிகல், கட்டுரையின்மை' என்பன எட்டு மென்று (271) அவற்றை ஈண்டுக் கொணர்ந்து பொருள் கூறிற்[1] கூற்றுக் கூறுகின்றவிடத்து மெய்ப்பாடு கூறின் ஏனை மெய்ப்பாடு களுங் கூற்றுக் கூறுகின்றவிடத்தே கொணர்ந்து கூற்றினுள் அடங்கக்கூறல் வேண்டுமென்று மறுக்க.

பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்[2]—பொய்யினைத் தலைக்கீடாகவுடைய மடலின் கண்ணும்:

அது, மடன்மா கூறியவழி அம் மடலினை மெய்யெனக் கொண்டாள் அதனைப் பொய்யெனக் கோடலாம்.[3]

(உ–ம்):

''வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
யவையினும் பலவே சிறுகருங் காக்கை
யவையினு மவையினும் பலவே குவிமட
லோங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுள சினையே''

இது, மடன்மா கொள்ளக் குறித்தோனைப் பறவைக் குழாந் தம்மை மடலூர விடாவென விளையாட்டு வகையாற் பொய்யென்று இகழ்ந்தது.

கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்—தலைவியை ஆற்றுவித்துக் கையற்ற தோழி தலைவி கண்ணீரைத் துடைப் பினும்,

(உ–ம்):

''யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையினா னழுதன தோழி

---

1. கூறுவார் இளம்பூரணர்.
2. இத் தொடர்க்கு இளம். உரையினும் நச். உரை சிறந்தது. இளம். உரையால் தலைவன் பொய் கூறுவன் என அவன் தலைமைக்கு இழுக்கு நேரும்.
3. பொய்யெனக் கோடல்—பொய் எனக் கொண்டாள் போலக் கூறல்.

கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்ப்பத நோக்கி
யேறா திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்புங்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே''[1]

(குறுந்-241)

இது தன் ஆற்றாமைக்கு ஆற்றாத தோழியை ஆற்றுவிக்கின்றாள் அவ்விரண்டுங் கூறியது.

வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்—தலைவி வேறுபாடு எற்றினானாயிற்றென்று வேலனை வினாய் வெறியாட்டு எடுத்துழித் தலைவி அஞ்சும் அச்சத்தின் கண்ணும்:

அது பண்டேயுந் தன் பரத்தைமையான் நெகிழ்ந்தொழுகுவான், இன்று நம் ஆற்றாமைக்கு மருந்து பிறிதுமுண்டென்றறியின் வரைவு நீடுமென்று அஞ்சுதல்.

(உ-ம்) :

''பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅற்
றுனியில் கொள்கையொ டவர்நமக் குவந்த
வினிய வுள்ள மின்னா வாக
முனிதக நிறுத்த நல்க லெவ்வஞ்
சூருறை வெற்பன் மார்புறத் தணித
லறிந்தன ளல்ல ளன்னை வார்கோற்
செறிந்திலங் கெல்வளை நெகிழ்பத நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பிரீஇ
முருக னாரணங் கென்றலி னதுசெத்
தோவத் தன்ன வினைபுனை நல்விற்
பாவை யன்ன பலராய் மாண்கவின்
பண்டையிற் சிறக்கவென் மகட்கெனப் பராஇக்
கூடுகொ ளின்னியங் கறங்கக் களனிழைத்
தாரணி யயர்ந்த வகன்பெரும் பந்தர்

---

1. கருத்து : பக்கம் 212ல் காண்க.

வெண்போழ் கடம்பொடு சூடி யின்சீ
ரைதமை பாணி யிரீஇக் கைபெயராச்
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையிற் றூங்கல் வேண்டி
னென்னாங் கொல்லோ தோழி மயங்கிய
மையற் பெண்டிர்க்கு நொவ்வ லாக
வாடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயி னிம்மறை
யலரா காமையோ வரிதே யஃதாஅன்
றறிவ ருறுவிய வல்லல்கண் டருளி
வெறிகமழ் நெடுவே ணல்குவ னெனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்த லதனினு மரிதே''[1]

(அகம்-98)

'இன்னாவாக்கி நிறுத்த எவ்வம்' என்பது அவன் வயிற் பரத்தைமை. 'உயிர் வாழ்தல் அரிது' என்பது தன் வயினுரிமை. அவை வெறியஞ்சியவழி நிகழ்ந்தன.

குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்—இரவுக்குறி வருந் தலைவன் செய்யுங்குறி பிறிதொன்றனான் நிகழ்ந்து தலைவன் குறியை ஒத்தவழி, அதனை மெய்யாக உணர்ந்து தலைவி

---

1. கருத்து : தலைவி தோழியிடம் கூறியது. தோழீ குளிர்ந்த மலையின் அடுக்கத்தில் தலைவன் நமக் களித்த இன்பம் இடையீட்டால் துன்பமாக அதனால் வந்த என் பெருந்துன்பமானது அத்தலைவன் மார்பால் தான் தணியும் என்பதைத் தாய் அறியாளாய் என்கை வளை நெகிழ்தலைப் பார்த்து உடல் மெலிவின் காரணத்தைக் கட்டுவிச்சியிடம் வினவ, அவள் அரிசி தினை முதலியன கொண்டு அது முருகனாலாயது எனக் கூற, அதுகேட்டு வேலனைக் கொண்டு வெறி யாடின் என்ன நேருமோ? வெறியாடிய பின்னரும் என் நோய் தீராதாயின் ஊரில் இக்களவொழுக்கம் வெளிப் படாதிருத்தல் அரிதாகும். அதனினும் தலைவன் இந் நோய் பிறிதொன்றால் வந்தது எனப் பிறர் கூறக் கேட்பின் யான் உயிர் வாழ்தல் அரிதாகும்.

மயங்கிய வழியும்; புனலொலிப் படுத்தன் முதலிய அவன் செயற் கையானன்றி இயற்கையான் நிகழ்ந்துழிக் குறியினொப்புமை யாம்.

(உ-ம்) :

''மெய்யோ வாழி தோழி சாரன்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
றான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே''[1]

(குறுந்-121)

கோடு ஆற்றப் பாயாது வேண்டியவாறு பாய்ந்து அதனை முறித்த முசுப்போல, நாங்குறிபெறுங் காலத்து வாராது புள் தாமே வெறித்து இயம்புந் துணையும் நீட்டித்துப் பின்பு வரு தலிற் குறிவாயாத்தப்பு அவன் மேல் ஏற்றி, அதற்குத் தோள் பசந்தனவென்று, பின்னொருநாள் அவன் வந்துழித் தோழியை நோக்கி இவ்வரவு மெய்யோவெனவே, அவ்விரண்டும் பெற்றாம்.

''அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமா பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கணிவிரும்பு
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுருகு நெஞ்சினேன் யான்''[2]

(ஐந்-ஐம்-50)

இதுவும் அது.

வரைவு தலைவரினும்—களவு வெளிப்பட்ட பின்னராயினும் முன்னராயினும் வரைந்தெய்துதற் செய்கை தலைவன்கண்

---

1. கருத்து தோழீ! முன்னே தலைவன் வந்தான் என எண்ணிக் குறியிடம் சென்று ஏமாற்றம் உற்றேன். ஆண் குரங்கு தாங்கும் வலியில்லாத கொம்பில் பாய்ந் தமையால் அதன் பாரத்தைத் தாங்காது முறிந்த தவறு குரங்கினதாகவும் கொம்பினிடத்துச் சார்த்திக் கூறு மாறு போலத் தலைவன் குறியிடம் வாராத தவற்றுக்கு என் தோள்கள் பசலையுற்றன. இன்றும் அவன் வந்தானாக நீ கூறுவது மெய்யோ பொய்யோ யான் அறிகிலேன்.

2. கருத்து: பக்கம் 213ல் காண்க.

நிகழினும் ஆண்டு முற்காலத்து நிகழ்ந்த ஆற்றாமை பற்றி அவ்விரண்டுங் கூறும்.

(உ-ம்)

"நன்னா டலைவரு மெல்லை நமர்மலைத்
தம்நாண்தாம் தாங்குவா ரென்னோற் றனர்கொல்
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ"[1] (கலி-39)

என நாண் தாங்கி ஆற்றுவாரும் உளரோவெனவுங் கனவிற் புணர்ச்சி கடிதுமெனவும் இரண்டுங் கூறினாள்[2]

"கொல்லைப் புனத்த வகில்சுமந்து கற்பாய்ந்து
வானி னருவி ததும்பக் கவினிய
நாட னயமுடைய னென்பதனா னீப்பினும்
வாடன் மறந்தன தோள்"[3] (ஐந்-எழு-2)

'நயனுடையன்' என்பதனால் வரைவு தலைவந்தமையும், 'நீப்பினும்' என்பதனால் அவன்வயிற் பரத்தமையுங் கூறினாள்.

களவு அறிவுறினும்—தம் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகத் தலைவன் ஒழுகினும், ஆண்டும் அவ்விரண்டுங் கூறும்.

---

1. கருத்து: நாணம் மிக்குவரும்காலத்துத் நம் நாணைத் தாங்குவார் என்ன தவம் செய்தனரோ? அப்படி நாம் நாண் தாங்கியிருந்தமையின் வேங்கை மலர்த் தாது சொரியும் பாறையுள்ள முற்றத்தில் நனவிலேயே தலைவனுடன் புணர்ச்சி நடக்குமோ? அப்படி நடக்கு மானால் அவனைக் கனவிற் புணர்தலை நாம் கடிவோம் அன்றோ.

2. ஆற்றுவார் உளரோ என்றதால் தான் ஆற்றுவதாகத் தன் வயின் உரிமையும் கனவிற் புணர்ச்சி கடிதும் என்று கூறுவதால் அவன் வாராமை சுட்டி அவன் வயின் பரத்தமையும் கூறியவாறு.

3. கருத்து: பக்கம் 213ல் காண்க.

(உ-ம்)

''நாண்மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து
மால்கடற் றிரையி னிழிதரு மருவி
யகலிருங் கானத் தல்கணி நோக்கித்
தாங்கவுந் தகைவரை நில்லா நீர்சுழல்
போதெழின் மழைக்கண் கலுழ்தலி னன்னை
யெவன்செய் தனையோநின் னிலங்கெயி றுண்கென
மெல்லிய வினிய கூறலின் வல்விரைந்
துயரினுஞ் சிறந்த நாணு நனிமறந்
துரைக்கலுய்ந் தனனே தோழி சாரற்
காந்த ளூதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பி னிமிரும்
வான்றோய் வெற்பன் மார்பணங் கெனவே''[1]

(நற்றிணை-17)

யான் அவனை எதிர்ப்பட்ட இடங்கண்டு அழுதேனாக அதனைக்கண்டு நீ எவன் செய்தனையென வினாய அன்னைக்கு, இம் மறையினைக் கூறலுற்றுத் தவிர்ந்தேனெனத் தாய் களவறி வுற்றவாறு கூறக் கருதி, அவன்வயிற் பரத்தைமை கூறிற்று.

தமர் தற்காத்த காரண மருங்கினும்—அங்ஙனங் களவறி வுற்ற அதன்றலைச் செவிலி முதலிய சுற்றத்தார் தலைவியைக் காத்தற்கு ஏதுவாகிய காரணப் பகுதிக் கண்ணும்.

ஆண்டுந் தமரை நொந்துரையாது அவன்வயிற் பரத்தைமை கூறும்.

காரணமாவன:— தலைவி தோற்றப் பொலிவும் வருத்தமும் அயலார் கூறும் அலருமாம்.

---

1. கருத்து; தோழீ! மலையிற் பெய்த மழை கடலலை போல் அருவியாக இழிந்து கானலிடத்துத் தங்கும் அழகைப் பார்த்து இவ்விடம் தலைவன் புணர்ந்த இடம் என்ற நினைவு வரவே, கண்கலுழ அது கண்ட அன்னை ஏன் அழுகிறாய் மகளே! முத்தம் தருவேன்' என்று இனியன கூறலின், அவளுக்கு வான்தோய் வெற்பன் மார்பைப் பிரிந்தமையால் வந்த வருத்தத்தால் அழா நின்றேன் எனக் கூறத் தொடங்கி உடனே நிறுத்தி விட்டுத் தப்பினேன்.

(உ-ம்)

''அடும்பி னாய்மலர் விரைஇ நெய்த
னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்த
லோரை மகளி ரஞ்சியீர் ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனோ டொருநா
ணக்கு விளையாட லுங் கடிந்தன்
றைதேய் கம்ம மெய்தோய் நட்பே''[1]

(குறுந்-401)

இது வேறுபாடு கண்டு இற்செறித்தமை தன்னுள்ளே கூறியது.

''பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
யெக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூச றூங்கிக்
கொண்ட லிடுமணற் குரவை முனையின்
வெண்டலைப் புணரி யாயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகைப்
பல்பூங் கான லல்கினம் வருதல்
கௌவை நல்லணங் குற்ற வெவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
யெல்லையு மிரவு மென்னாது கல்லென

---

1. கருத்து: அடும்ப மலரையும் நெய்தல் மலரையும் கலந்து தொடுத்த மாலையுடைய கூந்தலையுடைய நீர் விளையாட்டு மகளிர்க்கு அஞ்சிய குளிர்ந்த நண்டுகள் கடலில் விரைதற்குக் காரணமான துறைத் தலைவனொடு அவள் மெய்யைத் தோய்தற்குக் காரணமான நட்பினால் உண்டான உடல்வேறுபாடு என்றேனும் ஒரு நாள் மகிழ்ந்து விடுதலையும் விலக்கியது. இது வியத்தற் குரியதாம்.

வலவ னாய்ந்த வண்பரி
நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே''[1]
(அகம்-20)

''பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழித் துழவும் பானாட் டனித்தோர்
தேர்வந்து பெயரு மென்ப வதற்கொண்
டோரு மலைக்கு மன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளி
ரிளையரு முதியரு முளரே
யலையாத் தாயரொடு நற்பா லோரே''[2]
(குறுந்-246)

இவை பிறர் கூற்றால் தமர் காத்தன.

''முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமொடி யாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென

---

1. கருத்து: தோழீ! மீன் உண்ணுங்கலிற்படுபுள்ளை ஓட்டியும், புன்னை நிழலில் தங்கி நண்டின் வளையைத் தோண்டியும் தாழை விழுதுக் கயிற்றில் ஊசலாடியும் மணலிற் குரவையாடியும் அது வெறுத்தால் ஆயத்தாரோடு கடல் ஆடியும் பூந்தழை தைத்தும் இப்படியாகக் கானலில் நாம் தங்கி வருதற்கு, ஆரவாரமிக்க தெய்வம் உறையும் இவ்வூரிலுள்ள கொடுமை கூறுதலையேயறியும் பெண்டிர்கள் இரவும்பகலும் வலவன் ஒட்டப் பரிபூணும் ஓர் தேர் இப் பெருந்துறையில் சுழன்று கொண்டிருக்கும் எனக் கூறிய சொற்கேட்டு அன்னையானவள் நம்மை இற்செறித்தாள்.

2. கருத்து. தோழீ! நம் கடற்கரைப் பக்கமாக நள்ளிரவில் தனித்து ஓர் தேர் வந்து பெயர்ந்தது என்பர். அது கொண்டு நம் அன்னை நம்மை அலைக்கும். இவ்வூரில் இளையரும் மடப்பம் உடையோருமான பிற மகளிரும் தம் தாயரொடு அவர் வருந்தாத நல்வினையுடையோராய் இருந்தனர்.

வொண்சுடர் நல்லி லருங்கடி நீவித்
தன்சிதை வறித லஞ்சி யின்சிலை
யேறுடை யினத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி யீங்கோர்''
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மக
ளிச்சுரம் படர்தந் தோளே யாயிடை
யத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செய்யே னித்தலை
நின்னொடு வினவுதல் கேளாய் பொன்னொடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்குல்
ஆய்சுனைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே''[1]

(அகம்-7)

என்றன தோற்றப் பொலிவாற் காத்தன. இதற்கும் அவ் விரண்டும் உள.

---

1. கருத்து; முகட் போக்கிய செவிலி வழியில் மான்பிணை கண்டு வினவியது. பிணைமானே! கானவன் மகளாகிய என் மகளை நோக்கி "நீ பேதையல்லை; அறிவுடைய வள்; முலை அரும்பின; பற்கள் வளர்ந்து விளங்கின; கூந்தல் முடிக்கப்பட அமைந்தது; தழையுடையும் கொண்டாய் அதனால் ஊரில் திரியும் தோழியருடன் எங்கும் போகாதே. இவ்வூர் இடங்கள் காக்கும் தெய்வங்கள் உடையன. இவை காரணமாக நீ காவலில் வைக்கப்பட்டாய். வீட்டின் வாசற்படியிடத்தும் போகாதே. நீ பேதையில்லை; பெதும்பைப் பருவத்தை; ஏன் புறவிடம் போனாய்'' என்று யான்கூற அதுகேட்டு அவள் குற்றத்தை நானறிந்தமையுணர்ந்து அஞ்சி வீட்டுக் காவலைக் கடந்து வலையைத் தப்பிய பெண் மான்போல ஒரு தலைவனொடு இச்சுர வழியிற் சென்றனள். வெட்சியாரைப் பின் தொடரும் கரந்தை யார்போல அவள் செல்லும் நெறிகளிலெல்லாம் ஓடி அவளைக் காணப் பெறேன். நின்னொடு வினவுவன். கூறுவாயாக.

தன்குறி தள்ளிய தெருளாக்காலை வந்தனன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன் பிழைப்பாகத் தழீஇத் தேறலும்—தலைவி தன்னாற் செய்யப்பட்ட குறியிடங்கள் இற்செறிப்பு முதலியகாரணங்களான் இழக்கப்பட்டனவற்றை, இவை இழக்குமென முந்துறவே உணராத காலத்து, முற்கூறிய குறியிடமே இடமாக வந்து தலைவன் கூடாது பெயர்தலால், தமக்குப் பயம்படாத வறுங்களத்தை நினைந்து, அதனைத் தலைவற்கு முந்துறவே குறிபெயர்த்திடப்பெறாத தவறு தன்மேல் ஏற்றிக் கொண்டு, தோழியையும் அது கூறிற்றிலளெனத் தன்னொடு தழீஇக் கொண்டு தலைவி தெளிதற்கண்ணும்: ஆகவே அவன் தவற்றைத் தன் தவறு ஆக்கினளாம். தழீஇ—தோழியைத் தழீஇ அத்தவறு அவன்கட் செல்லாமல் தனதாகத் தேறிளாள்.

(உ-ம்):

''விரியிணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
றெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தாரன்
அஞ்சிலை யிடவ தாக வெஞ்செலற்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
வருதல் வாய்வது வான்றோய் வெற்பன்
வந்தன னாயி னந்தளிர்ச் செயலைக்
காவி லோங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசன் மாறிய மருங்கும் பாய்புடன்
ஆடா மையிற் கலுழ்பில தேறி
நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலங்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி யெடுத்தல் செல்லாத் தடக்குரற்
குவவுப் பொறையிறுத்த கோற்றலை யிருவிக்
கொய்தொழி புனமுநோக்கி நெடிது நினைந்து
பைதலன் பெயரலன் கொல்லோ வைதேய்கு
அயவெள் ளருவி சூடிய வுயர்வரைக்
கூஉங் கணஃதெம் மூரென
வாங்கதை யறிவுறன் மறந்திசின்யானே''[1]

(அகம்-38)

---

1. கருத்து: தலைவி கூற்று. ''தோழீ! வான் தோய் வெற்பன் இங்கு (தினைப்புனத்து) வருதல் மெய்ம்மை,

இதனுள் ஊசன் மாறுதலும் புனமுந் தன்குறி தள்ளிய இடன், மறந்திசின் என்றது தெருளாக்காலை, கூஉங் கண்ணது ஊரென உணர்த்தாமையின்; இடையீடு படுவதன்றி அவன் கண் தவறுண்டோவெனத் தன் பிழைப்பாகத் தழீஇயினாள் இது சிறைப்புறமாக வரைவு கடாயது.

வழுவின்றி நிலைஇய இயற்படு பொருளினும்—வழுட்படுத்த லின்றி நின்ற இயற்பட மொழிதற் பொருண்மைக் கண்ணும்:

'வழுவின்றி நிலைஇய' என்றதனால் தோழி இயற்பழித் துழியே இயற்பட மொழிவதென்க. தலைவன் வழுவைத் தோழி கூறியதற்குப் பொறாது தான் இயற்பட மொழிந்ததல்லது, தன் மனத்து அவன் பரத்தைமை கருதுதலுடைமையிற் பொருள் வேறு குறித்தாளாம்,

(உ-ம்)

''அடும்பம னெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னாயினு மாக
வவனே தோழி யென்னுயிர் காவலனே''[1]

(ஐங்குறு-144)

''தொடிநிலை நெகிழச் சாஅய்த் தோளவர்
கொடுமை கூறின வாயினுங் கொடுமை
நல்வரை நாடற் கில்லை தோழியென்
னெஞ்சிற் பிரிந்த தூஉமிலரே தங்குறை
நோக்கங் கடிந்ததூஉ மிலரே
நிலத்தினும் பெரிதே நேர்ந்தவர் நட்பே''[2]

எனவரும்.

வந்தானாயின் ஊஞ்சல் இல்லாத வறிய இடத்தையும், நீர் தெளிந்து நீலம் புதியதாக மலர்ந்த சுனையையும் கதிர்கள் கொய்யப்பட்ட தாள்கள் உள்ள புனத்தையும் பார்த்து நீள நினைந்து துன்புற்றவனாய்த் திரும்பிப் போகாமல் வருந்துவன் அல்லவா? தினைப்புனலிடத் திருந்து கூப்பிடு தூரத்தது எம் ஊர் என்பதை யான் அறிவுறுத்த மறந்து விட்டேன். அதனால் என் அழகு கெடுக—இது தலைவன் சிறைப்புறத்தானாக தலைவி கூறியது.

1. கருத்து: பக்கம் 217-ல் காண்க.
2. கருத்து: தோழி; தொடி தன் நிலை சாய்ந்து நெகிழத் தோள்கள் அவர் கொடுமை கூறினாலும் வரை

இஃது அகன்று உயர்ந்து தாழ்ந்தவற்றுட் பெரிதாகிய நட்புடையவன் எனக் கூறியது. ஒரு காலைக்கு ஒருகாற் பெருகுமென்றுங் கூறினாளாயினும் நமது நட்புப்போல் ஒரு காலே பெருத்ததில்லையென இரண்டுங் கூறினாள்.

பொழுதும் ஆறும் புரைவது அன்மையின் அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்—தலைவியுந் தோழியுந் தலைவன் இரவுக்குறி வருங்காற் பொழுதாயினும் நெறியாயினும் இடையூறாகிப் பொருந்துதலின்மையின், அழிவு தலைத்தலை சிறப்ப வந்த ஆராய்ச்சிக் கண்ணும்:

ஆண்டும் அவ்விரண்டும் நிகழும்.

(உ-ம்)

“மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோ ரன்ன கொடுமையோ டின்றே
யாமங் கொளவரிற் கனைஇக் காமங்
கடலினு முரைஇக் கரைபொழி யும்மே
யெவன்கொல் வாழி தோழி மயங்கி
யின்ன மாகவு நன்னர் நெஞ்ச
மென்னொடு நின்னொடுஞ் சூழாது கைம்மிக்
கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே”[1] (அகம்-128)

நாடற்குக் கொடுமையில்லை. அவர் என் நெஞ்சை விட்டுப் பிரிந்ததும் இல்லை. நம்மை நோக்கும் நோக்கத்தைத் தமக்குள்ள குறையாகக் கூறும்படித் தவிர்ந்ததும் இல்லை. அதனால் அவர் நட்பு நிலத்தினும் பெரிது.

1. கருத்து: தோழீ! மன்றம் ஒலியடங்கி மனைகளிலுள்ளாரும் துயின்றனர். கொல்வதுபோல நடுயாமம் வந்தது. காமம் கடலினும் பெரிதாய்க் கைகடந்து செல்லும். நாம் இந்நிலையிலிருக்க நம் நெஞ்சம்

காமங் கரைபொழியா நிற்கவும் என்ன நன்றி கருதி இருவரொடுஞ் சூழாது சென்றது நெஞ்சென இரண்டுங் கூறினாள். மனைமடிந்தன்றென்பது பொழுது; சிறு நெறியென்பது ஆற்றின்னாமை; இதனைப் பொருளியலுட் (210) கூறாது தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தமையும் பற்றி ஈண்டுக் கூறினார்.

''குறையொன் றுடையேன் மற்றோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல் வேண்டு மின்னே
யரவழங்கு நீள்சோலை நாடனை வெற்பில்
இரவரா லென்ப துரை''[1]

(ஐந்-எழு-14)

'வளை வாய்ச் சிறுகிளி' என்னுங் (141) குறுந்தொகையும் அது.

காமஞ் சிறப்பினும்—தலைவி காமஞ் சிறந்து தோன்றினும்:

(உ-ம்)

''ஒலியவிந் தடங்கிய யாம நள்ளெனக்
கலிகெழு பாக்கந் துயின்மடிந் தன்றே
தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்
துணைபுண ரன்றி லுயவுக்குரல் கேட்டொறுந்
துஞ்சாக் கண்ண டுயரடச் சாஅய்
நம்வயின் வருந்து நன்னுத லென்ப
துண்டுகொல் வாழி தோழி தெண்கடல்
வன்கைப் பரதவ ரிட்ட செங்கோற்
கொடுமுடி யவ்வலை பரியப் போக்கிக்

மயங்கி என்னையும் நின்னையும் கேளாது கடந்து கானநாடன் வரும் நெறியில் படுகுழிவழி இருளில் மிதித்து வரும் இடம் நோக்கி அவர் தம் தளரடியினைத் தாங்கச் சென்றது. இது என்னையோ. தலைவி கூற்று.

1. கருத்து: தோழீ! நின்பால் வேண்டும் குறை ஒன்றுடையேன். ஒரு நிலையில் நில்லாத என் உயிர்க்குக் காவல் செய்ய வேண்டி நீ நாடனிடம் அரவு வழங்கும் வெற்பில் இரவில் எம் பொருட்டு வாராதே என்பதை உரைப்பாயாக.

கடுமுர ணெறிசுறா வழங்கு
நெடுநீர்ச் சேர்ப்பன்ற னெஞ்சத் தானே''[1]

(நற்றிணை—303)

''ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
யிறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
விரைகொண் டவையும் விரையுமாற் செலவே''[2]

(குறுந்-92)

''கொடுந்தா ளலவ குறையா மிரப்பே
மொடுங்கா வொலிகடற் சேர்ப்ப—னெடுந்தேர்
கடந்த வழியையெங் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ''[3]

(ஐந்-ஐம்-42)

''முடமுதிர் புன்னைப் படுகோட் டிருந்த
மடமுடை நாரைக் குரைத்தேன்—கடனறிந்து
பாய்திரைச் சேர்ப்பன் பரித்தேர் வரக்கண்டு
நீதகா தென்றே நிறுத்து''[4]

---

1. கருத்து: தோழீ! நெடுநீர்ச் சேர்ப்பன் தன் நெஞ்சுக் குள்ளாகவே, ''ஊர் ஒலியடங்கி நடு இரவாகவும் கள்ளின் களிப்பு மிக்க பாக்கமும் துயில்கின்றது. கடற் கரைச் சேர்ப்பன் தன்நெஞ்சத்தில் ''மன்றத்துப் பனை மடலிற் கட்டிய வீட்டில் இருந்து அன்றிற் பறவை துணையுடன் புணருங்கால் எழும் ஒலியைக் கேட்டுத் துயிலாத கண்ணளாய்த் துன்பம் வருத்த நம்மிடம் கொண்ட அன்பினால் வருந்துமோ நம் தலைவி'' என்னும் எண்ணம் உண்டோ. தோழி வாழ்வாயாக.

2. கருத்து: ஞாயிறு மறைந்த அகன்ற விசும்பில் பறக்கும் பறவைகள் தாம் தங்குமாறு வழியயலில் உயர்ந்துள்ள கடம்ப மரத்தில் தங்கியுள்ள தம் குஞ்சுகளின் வாயில் செருகுதற்கென்று தாம் தேடிக் கொண்ட இரையை உடைமையால் விரைந்து சென்றன. நம் காதலர் அவ்வாறு இல்லறம் செய்ய முயன்றிலரே.

3. கருத்து: பக்கம் 219-ல் காண்க.

4. கருத்து: புன்னைக் கிளையில் இருந்த மடநாரைக்கு நான் உரைத்தேன். அது யாதெனின், 'எனக்கு நீ செய்யும் கடமையாக நினைத்துச் சேர்ப்பன் தேர்வரப்

அவன் அளி சிறப்பினும்—தலைவிக்குக் காமமிக்க கழிபடர் சிறந்தாற் போல்வது தலைவன்கட் சிறந்துழி, அது காரணத் தால் அவன் அளி சிறந்து தோன்றினும்; இவ்வாறு அரிதின் வருகின்றான் வரைகின்றலனென அவ்விரண்டுந் தோன்றும்:

(உ-ம்)

''இருள்கிழிப் பதுபோன் மின்னி வானந்
துளிதலைக் கொண்ட நளிபெய னடுநாண்
மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை யேற்றை
யிரும்புசெய் கொல்லரிற் றோன்று மாங்கண்
ஆறே யருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பனிக்குஞ் சூருடை முதலைய
கழைமாய் நீத்தங் கல்பொரு திரங்கல்
அஞ்சுவந் தமிய மென்னாது மஞ்சுசுமந்
தாடுகழை நரலு மணங்குடைக் கவாஅ
னீருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
விருங்களிறட்ட பெருஞ்சினை வுழுவை
நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர வீர்க்கும்
வாணடந் தன்ன வழக்கருங் கவலை
யுள்ளு நருட்கும் கல்லடர்ச் சிறுநெறி
யருள்புரி நெஞ்சமொ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனு மல்லன் றந்த
நீதவ றுடையையு மல்லை நின்வயி
னானா வரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே'.

(அகம்-72)

'வந்தோ' னென்பது அவனளி சிறத்தல், 'தவறுடையே' னென்பது தன்வயினுரிமை, 'கொடியனுமல்ல' னென்பது அவன்வயிற் பரத்தைமை.

பார்த்து அவனிடம் நீ இப்படி இரவில அரிய வழியில் வருதல் தகாது என்று நிறுத்தி விடுக' என்பதாம்.

1. கருத்து: தோழீ! நம் தலைவன் நம்மைச் சந்திக்கவரும் வழியானது, நெருப்புப் பொறி பரக்கக் கொல்லன்

"சேணோன் மாட்டிய நறும்புகை நெகிழி
வான மீனின் வயின்வயி னிமைக்கு
மோங்குமலை நாடன் சாந்துபுல ரகல
முள்ளி னுண்ணோய் மிகுமினிப்
புல்லின் மாய்வ தெவன் கொலன்னாய்"[1]

(குறுந்-150)

இதுவும் அது.

ஏமஞ்சான்ற உவகைக் கண்ணும்-நால்வகைப் புணர்ச்சியால் நிகழுங் களவின்கண் எஞ்ஞான்றும் இடையீடுபடாமற் றலைவன் வந்து கூடுதல், இன்பத்திற்குப் பாதுகாவல் அமைந்த உவகையினைத் தலைவி எய்தியக் கண்ணும்.

அஃது எஞ்ஞான்றுங் கூட்டம் பெற்றமையான் மகிழ்ந்து கூறுதலாம்.

(உ-ம்):

"நோயலைக் கலங்கிய மதனழி பொழுதிற்
காமஞ் செப்ப லாண்மகற் கமையும்
யானென், பெண்மை தட்ப நுண்ணிதிற் றாங்கிக்
கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
மண்ணாப் பசுமுத் தேய்ப்பக் குவியிணர்ப்
புன்னை யரும்பிய புலவுநீர்ச் சேர்ப்ப

உலைக்களத்து இரும்படிப்பது போலக் கரடியானது மின்மினிப் பூச்சிகள் பறக்கப் புற்றாஞ் சோற்றை யகழும்படியான அரிய மரபினையுடையது. கடந்து வரும் யாறுகள் முதலைகளை யுடையன. இவற்றால் நாம் அஞ்சுவம் என்று கருதாமல், பெண் புலிக்காக ஆண் பன்றியினைக் கொன்ற ஆண் புலியானது அதனைப் பாம்பு உமிழ்ந்த மணியொளியில் உதிரம் புலர இழுத்துச் செல்லும்படியான வருத்துதலையுடைய மலைச் சரிவில் தன் வேலே தனக்குத் துணையாக நம்மை அருளிச் சிறு வழியில் வந்த அவன் கொடியன் அல்லன். அவனை எனக்குத் தந்த நீயும் தவறுடையை இல்லை. நினக்கு இப்படியொரு துன்பத்தைக் கொடுத்த யானே தவறுடையேன்.

2. கருத்து : பக்கம் 159-ல் காண்க.

னென்ன மகன்கொ றோழி தன்வயி
னார்வ முடைய ராகிய
மார்பணங் குறுநரை யறியா தோனே''[1]

(நற்றிணை-94)

'மண்ணாப் பசுமுத்தேய்ப்ப நுண்ணிதிற்றாங்கிப் பெண்மை தட்ப' வென மாறிக் கழுவாத பசியமுத்தந் தனது மிக்க ஒளியை மறைத்துக் காட்டினாற்போல் யாமும் புணர்ச்சியால் நிகழ்ந்த மிக்க நலனைப் புலப்படாமல் அரிதாகத் தாங்கிப் பெண்மையாற் றகைத்துக் கொள்ளும்படியாகத் தன் மார்பால்வருத்த முற்றாரைக் கண்டு அறியாதோனாகிய சேர்ப்பனை என்ன மகனென்று சொல்லப்படுமென மகிழ்ந்து கூறினாள். ஆர்வ முடையராக வேண்டி மார்பணங்குறுநரை அறியாதோனென்க. அலராமற் குவிந்த கொத்தையுடைய புன்னைக்கண்ணே புலால் நாற்றத்தையுடைய நீர்தெறித் தரும்பிய சேர்ப்பனென்ற தனால் புன்னையிடத்துத் தோன்றிய புலானாற்றத்தைப் பூ விரிந்து கெடுக்குமாறு போல வரைந்து கொண்டு, களவின் கண் வந்த குற்றம் வழிகெட ஒழுகுவனென்பது உள்ளுறை. 'இரண்டறிகளவின்' (குறுந்-312) என்னும் பாட்டினுள் தோற்றப் பொலிவை மறைப்பளெனத் தலைவன் கூறிய வாறும் உணர்க.

மறைந்தவற் காண்டன் முதலிய ஆறற்கும் உம்மையும் உருபும் விரித்து ஏனையவற்றிற்கு உம்மை விரிக்க; உம்மை விரிக்கவேண்டுவனவற்றிற்கு உம்மையும், இரண்டும் விரிக்க வேண்டுவனவற்றிற்கு இரண்டும் விரித்து, அவற்றிற்கும் ஏனை வினையெச்சங்கட்கும் கூற்று நிகழ்தலுளவென முடிக்க. கூற்று அதிகாரத்தான் வரும். உயிராக் காலத்து உயிர்த்தலு முளவென முடிக்க.

---

1. கருத்து: தோழீ! காம நோய் அலைக்கழிக்க அதனால் கலக்கமுற்று வருந்தியபோது அருகு வந்து இனியமொழி கூறி ஆற்றுவித்தல் ஆண் மகனுக்குரிய செயல். அவ்வாறு வந்து ஆற்றுவிக்காமல் யானே என் காமப் புணர்ச்சியால் ஏற்பட்ட மேனியழகைக் கம்மியன் கழுவாத முத்து தன் ஒளியை மறைத்திருப்பது போல மறைக்கும்படியாகத் தன் மார்பால் துன்புறும் என்னை அறியாத நம் தலைவன் என்ன மகன் என்று கூறப்படுவான்.

ஓரிடத்தான தன்வயின் உரிமையும், அவன் வயிற் பரத்தையும் உள—இக்கூற்று முப்பத்தாறனுள் ஒரோவிடங்களிலே தன்னிடத்து அன்பிற்கு உரிமையுண்டாகவும் அவனிடத்து அயன்மை உண்டாகவும் கூற்று நிகழ்தலுள:

ஆன்—ஆனவென ஈறுதிரிந்தது.

அன்னவும் உள—அவை போல்வன பிறவும் உள என்றவாறு.

'அன்னபிற' என்றதனான் இன்னுந் தலைவி கூற்றாய் இவற்றின் வேறுபட வருவனவெல்லாம் இதனான் அமைக்க.

''பிணிநிறந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
வணிமலை நாடன் வருவான்கொ றோழி
கணிநிற வேங்கை கமழ்ந்துவண் டார்க்கு
மணிநிற மாலைப் பொழுது''[1]

(திணை-ஐம்-9)

இது தலைவி இரவுக்குறி நயந்து கூறியது.

''பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே
யெல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே''[2]

(குறுந்-355)

இஃது இரவுக் குறிவந்த தலைவனை நோக்கிக் கூறியது.

''கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
யஞ்ச லோம்பி யார்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை யென்குறை
சொல்லல் வேண்டுமாற் கைதொழு திரப்பல்
பல்கோட் பலவின் சார லவர்நாட்டு
நின்கிளை மருங்கிற் சேறி யாயின்
அம்மலை கிழவோற் குரைமதி யிம்மலைக்

1. கருத்து : பக்கம் 198-ல் காண்க.
2. கருத்து: பக்கம் 202-ல் காண்க.

கானக் குறவர் மடமகள்
ஏனல் காவ லாயின ளெனவே''[1]

(நற்றிணை-102)

எனவும்,

''ஓங்க விறுவரைமேற் காந்தள் கடிகவினப்
பாம்பென வோடி யுருமிடித்துக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தவந் நாட்போலா
வீங்கு நெகிழ்ந்த வளை''[2]

(திணை-ஐம்-3)

எனவும்,

''மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்''[3] (ஐந்-எழு-4)

எனவும் வரும்.

''அவருடை நாட்ட வாயினு மவர்போற்
பிரித றேற்றாப் பேரன் பினவே
யுவக்கா ணென்று முள்ளுவ போலச்
செந்தார்ச் சிறுபெடை தழீஇப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியே''[4]

இது பகற் குறிக்கண் தலைவனீட ஆற்றாது தோழிக்குக் கூறியது.

---

1. கருத்து: தினைக்கதிரைக் கொய்த பைங்கிளியே! தினைக்கதிரைக் கொய்தமையால் அஞ்சாதே. நீ நிறைய அதனை உண்டு உன் பசிக்குறையைத் தீர்த்துக் கொண்ட பின் என் குறையை முடிப்பாயாக. நின்னைக் கைதொழுது வேண்டுகிறேன். பலா மரங்களையுடைய மலைச்சாரல் நாட்டவர் ஊரில் உள்ள நின் சுற்றத்தாரி டைச் செல்வாயாயின் அம்மலை கிழவோனிடம் கானக் குறவர் மடமகள் தினைப்புனங்காவல் செய்பவளா னாள் என்பதை உரைப்பாயாக.
2. கருத்து: பக்கம் 219-ல் காண்க
3. கருத்து : பக்கம் 219-ல் காண்க.
4. கருத்து: தோழி! சிறு பெடையைத் தழுவித் தினைப் புனம் படரும் கிளிகளை இதோ பார். அவை தலைவ னுடைய நாட்டில் இருப்பன வாயினும் அவர்போல ஒன்றையொன்று பிரிதலைத் தெளிய மாட்டா.

தலைவிக்குக் கூற்று நிகழுமிடம் சில.

110. வரைவுஇடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரைஎனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே (22)

ஆ. மொ.

இல.

There are occasions when the lady-love herself may make expressions at the time of his separation having the marriage postponed, at his unexpected arrival and meeting with her family members and at requesting her 'tholi' for divulging the secret to the parents and her sufferings to her lover.

இளம்.

இதுவும் தலைவி மாட்டுச் சொல் நிகழுமிடம் **உணர்த்துதல்** நுதலிற்று.

(இ-ள்): தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கு கின்றான், இன்னநாள் வரைந்து கொள்வல் எனக் கூறித் தோழியிற் கூட்டத்திற்கு முயலாது தணந்தவழி யதனைத் தோழி ஐயப்படுங்* குறிப்புத் தோன்றாமை மறைத்தொழுகிய தலைவி, அவன் வருந்துணையும் ஆற்றாது வருத்தமுறினும் வரையாத நாளின்கண் மறைந்தொழுகாநின்ற தலைவன் செவிலி முதலாயினாரை முட்டினவழியும், இவ்வொழுக்கத் தினை நின் தோழிக்கு உரையெனத் தலைவன் கூறிய வழியும் தலைவி தானே கூறுங் காலமும் உள என்றவாறு.

உம்மை எதிர்மறை யாதலாற் கூறாமை பெரும்பான்மை. காலமும் என்றது இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாங் காலம். அக்காலத்துத் தோழி மதியுடம்படாமல் அறிவிக்கும் என்றவாறு.

இனி வரைவிடை வைத்த காலத்து வருத்தமுற்ற வழிக் கூறிய செய்யுள்:—

"புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கட்வுட் கிட்ட சில்குரல்

அறியா துண்டனம் மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வேர்த்துற்று நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே''[1]

(குறுந்-105)

எனவரும்.

வரையா நாளிடை வந்தோன் முட்டியவழித் தலைவி கூறிய தற்குச் செய்யுள்:—

''தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை
மாழைமான் நோக்கின் மடமொழி—நூழை
நுழையு மடமகன் யார்கொலென் றன்னை
புழையும் அடைத்தாள் கதவு''[2] (கைந்நிலை-59)

எனவும்,

''அறியா மையின் அன்னை அஞ்சிக்
குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்
விழவயர் துணங்கை தழுவுகஞ் செல்ல
நெடுநிமிர் தெருவிற் கைபுகு கொடுமிடை
நொதும லாளன் கதுமெனத் தாக்கலின்
கேட்பார் உளர்கொல் இல்லைகொல் போற்றென
யாணது பசலை என்றனன் அதனெதிர்
நாணிலை எலுவ என்றுவந் திசினே
செறுநரும் விழையுஞ் செம்ம லோனென

---

1. கருத்து: சூர்மலை நாடன் நம்மொடு கொண்ட நட்பு பொய்த்ததனால் நீர் மலிந்த கண்களொடு நினைத்தல் மாத்திரையே அமைந்தது.

2. கருத்து: மடமொழியே! குருகுபோல் மலர்தரும் தாழை வளர்ந்த துறைவனைப் பார்த்து அன்னை யானவள் புறக்கடை வாயில் வழியாக் வந்துபோம் அறிவிலியாவன் என்று கூறி, கதவின் துளையையும் நாம் பாராதபடி அடைத்தாள். இனி நாம் என் செய்வேம்.

நறுநுதல் அரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே''[1]
(நற்றிணை-50)

எனவும் வரும். இதன்கண் என்றானென ஒருசொல் வருவிக்க.

உரையெனத் தோழிக்கு உரைத்தற்குச் செய்யுள்:—

''பொன்இணர் வேங்கை கவினிய பூம்பொழிலுள்
நன்மலை நாடன் நலம்புனைய—மென்முலையாய்
போயின திந்நாள் புனத்து மறையினால்
ஏயினார் இன்றி இனிது''[2] (ஐந்திணையைம்-11)

எனவரும்.

இன்னும், ''உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்'' என்பதற்குத் தலைவற்கு உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும் என்றுமாம்.

உதாரணம் :

''என்னைகொல் தோழி அவர்கண்ணும் நன்கில்லை
அன்னை முகனும் அதுவாகும்—பொன்னலர்

---

1. கருத்து: அன்னையே (தலைவியே)! என் அறியாமை யாலே நினக்கு அஞ்சி, நம் தலைவன் குழையணிந்து மாலைசூடி தொடியணிந்து மகளிர் கோலத்துடன் துணங்கைக் கூத்தாடும் இடத்தில் வளைத்துக் கொள்ள லாம் என்று நான் செல்ல, அவன் நெடிய தெரு முடிந்து வேறுமோர் தெரு கூடுமிடத்தில் யாரோபோல வந்து எதிர்ப்பட்டானாக, அவனைப் பார்த்து இப்படிப்பட்ட உன்னைக் கேட்பார் உளரோ இல்லையோ என்றேன். அதற்கு அவன் தன்னை ஒரு பெண்ணாகக் கொள்ளும் படி என்னைப் பற்றிய பசலை மிக அழகியது என்றான். அதற்கு எதிராக, பகைவரும் விரும்பும் அழகிய தலை மையுடைய தலைவனே இவன் என்று வணங்காமல் என் சிறிய குணம் பெரியதானமையினால் ஆராயாமலே துணிச்சல் கொண்டு ஏய்! நீ நாணம் உடையை அல்லை என்று கூறி வந்து விட்டேன்.

2. கருத்து : வேங்கைப் பூங்கொத்து அழகு செய்யும் பொழிலில் நன்மலை நாடன் நம் நலனைப் புனைந் துரைக்க இந்நாள் இனியதாகப் போயினது எப்படி எனின் அப்புணர்ச்சிக்கு இடையூறாக வந்தவர் இல்லாமல்.

புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல தில்லென் றுரை''[1]

(ஐந்திணையெழு-58)

எனவரும்.

நச்.

இதுவும் அதிகாரத்தால் தலைவி கூற்று இன்னவாறுமாம் என்கின்றது.

(இ-ள்) : வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்—வரைவு மாட்சிமைப்படா நிற்கவும் பொருள் காரணத்தான் அதற்கு இடையீடாகத் தலைவன் நீக்கி வைத்துப் பிரிந்த காலத்துத் தலைவி வருத்தமெய்தினும்.

ஆண்டுத்[2] தோழி வினவாமலும் தானே கூறுமென்றான் ஆற்றுவித்துப் பிரிதல் களவிற்குப் பெரும்பான்மை இன்மையின் 'வைத்த' என்றது நீக்கற் பொருட்டு. வருந்துதல்—ஆற்றுவிப் பாரின்மையின் வருத்தமிகுதலாம்.

வரையா நாளிடை வந்தோன் முட்டினும்—வரையா தொழுகுந் தலைவன் ஒரு ஞான்று தோழியையானும் ஆயத்தையானுஞ் செவிலியையானுங் கதுமென எதிர்ப்பினும்:

உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்—நொதுமலர் வரைவிற்கு மணமுரசியம்பியவழியானும் பிறாண்டானுந் தோழிக்கு இன்னவாறு கூட்டம் நிகழ்ந்ததெனக் கூறி அதனை நமரறியக் கூறல் வேண்டுமென்றுந் தலைவற்கு நம் வருத்த மறியக் கூறல் வேண்டுமென்றுங் கூறுதற் கண்ணும்; தானேகூறும் காலமும் உளவே—இம் மூன்று பகுதியினுந் தோழி வினவாமல் தலைவி தானே கூறுங் காலமும் உள என்றவாறு.

உம்மையால் தோழி வினவிய இடத்துக் கூறலே வலி யுடைத்து.

---

1. கருத்து : தோழீ! அவரிடத்தும் விரைந்து வரைந்து கொள்ளும் நல்லெண்ணம் இல்லை. தாயின் முகமும் (களவறிதலின்) அதுபோல் நன்றாக இல்லை. அதனாற் சேர்ப்பனிடம் நின்னையன்றி வேறு துணையில்லை யாதலின் விரைந்து வரைந்துகொள் என்று உரைப் பாயாக.
2. ஆண்டு -தலைவன் பொருள் காரணத்தான் பிரிந்த விடத்தும்.

(உ-ம்) :

''அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழும் பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
றகாஅன் போலத் தான்றீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
முத்துநிரை யொத்த முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே''[1]

(குறுந்-26)

''யாரு மில்லைத் தானே கள்வன்
றானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே''[2]

(குறுந்-25)

இவற்றுள் துறந்தான் போலவும் மறந்தான் போலவுங் கருதித் 'தான் தீது மொழியினும்' எனவும், 'யானெவன் செய்கோ' எனவுந் தோழி வினவாக்காலத்து அவன் தவற்றை வரைவிடை வைத்தலின் ஆற்றாமைக்கு அறிவித்தாள்.

''பகலெரி சுடரின் மேனி சாயவும்
பாம்பூர் மதியி னுதலொளி கரப்பவு
மெனக்குநீ யுரையா யாயி னினக்கியான்
உயிர்பகுத் தன்ன மாண்பினே னாகலி
நீகண் டிசினால் யானே யென்றுநனி
யழுங்க லான்றிசி னாயிழை யொலிகுர

---

1. கருத்து: நாடனாகிய தலைவன் தான் சொன்ன சொல்லைக் காவாமல் பிரிந்து தகான் ஆயினான் எனக் கொண்டவள் போலத் தான் (தலைவி) உயிர் நீப்பதாகத் தீயமொழியை மொழியினும், அக்கொடிய தலைவன் ஒழுக்கத்தை ஆண் குரங்கும் அறியும்; அது தன் கண்ணாற் கண்டதைப் பொய்யாது.

2. கருத்து: பக்கம் 211-ல் காண்க.

வேனல் காவலி னிடையுற் றொருவன்
கண்ணியன் கழலன் தாரன் றண்ணெனச்
சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டஃதே நினைந்த நெஞ்சமொ
டிஃதா கின்றியா னுற்ற நோயே''[1]

(நற்றிணை-128)

இது, தோழி வினாவிய வழித் தலைவி கூறியது.

'வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்' என்பதனைத் 'தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்' (666) என்னுந் தந்திரவுத்தியாகக் கொண்டு அதன்கண் வேறுபட வருவன வெல்லாங் கொள்க.

''உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
யருந்துய ருழத்தலு மாற்றா மதன்றலைப்
பெரும்பிறி தாக லதனினு மஞ்சுது
மன்னோ வின்னு நன்மலை நாடன்
பிரியா வன்பி னிருவருமென்னு
மலரதற் கஞ்சினன் கொல்லோ பலருடன்
றுஞ்சூர் யாமத் தானுமென்
னெஞ்சத் தல்லது வரவறி யானே''[2]

(குறுந்-302)

இது வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கூறியது.

---

1. கருத்து: ஆயிழையே! என்னைப் பார்த்து நீ பகலில் எரியும் சுடர்போல் நின் மேனிஒளி சாய்ந்தது. பாம்பு ஊர்ந்த மதிபோல் நுதல் ஒளி மறைந்தது. இப்படி நின் கண் நிகழவும் எனக்கு நீ காரணம் கூறவில்லையாயின் யான் உயிரைப் பிரித்து நிலையையுடையேனாவேன் யானே காண்கிறேன் என்று மிக வருந்தினாய். இப்போது காரணம் கூறுவேன். தினைப்புறம் காவல் உற்றபோது இடையில் கண்ணியனாய்க் கழலனாய்த் தாரனாய் உள்ள ஒருவன் வந்து என் சிறிய புறத்தைத் தழுவினான். அதன் காரணமாக அதையே நினைத்த நெஞ்சத்துடன் யானுற்ற நோய் இப்படியாகியது.
2. கருத்து: தோழீ! கூறுவாயாக. தலைவனைப் பிரிந்த தால் வரும் துயரால் வருந்துதலும் தாங்கேம். அதனால் இறத்தற்கும் அஞ்சுவேம். நம் தலைவன் அவனும் அவளும் பிரியா நண்பினராயினர் எனும் ஊரவர் சொல்லுக்கு அஞ்சினானோ? பலரும் தூங்கும் நள்ளிரவிலும் கூட என் நெஞ்சில் வருவதல்லது நேரில் லந்திலன். இது உயர்ந்ததன்று.

''அது கொறோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை
யுடைதிரைத் துவலை யரும்புந் தூநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே''[1]

(குறுந்-5)

என்னும் பாட்டும் அது.

''தோழி வாழி மேனாட் சாரற்
கொடியோர் குன்றம் பனிப்ப நெடிதுநின்று
புயறொடங் கின்றே பொய்யா வானக்
கனைவர லழிதுளி தலைஇ
வெம்முலை யாகம் நனைக்குமெங் கண்ணே''[2]

இது வரைவிடைப் பருவங் கண்டு ஆற்றாது தோழிக்குக் கூறியது.

''பணிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
கிளிவா யொப்பி னொளிவிடு பன்மலர்
வெருகுப்பல்லுருவின முல்லையொடு கஞுலி
வாடை வந்ததன் றலையு நோய்பொரக்
கண்டிசின் வாழி தோழி தெண்டிரைக்
கடலாழ் கலத்திற் றோன்றி
மாலை மறையுமவர் மணிநெடுங் குன்றே''[3]

(குறுந்-240)

இது பருவங் கண்டு ஆற்றாது தோழிக்குக் கூறியது.

---

1. கருத்து : தோழீ! மெல்லம் புலம்பன் நம்மைப் பிரிந்தானாக என் கண்கள் துயில் பெறாவாயின. அதுதான் காம நோயோ.

2. கருத்து: தோழீ! முன்நாளில் குன்றம் குளிர மழை பெய்யத் தொடங்கியது பொய்யாத மேகம். அதனால் என் கண்கள் மிக்க துளிகளைக் கொண்டு முலை மார்பை நனைக்கும்.

3. கருத்து: அவரை மலர்கள் முல்லையொடு கலக்கும்படி வாடைக் காற்று வீசும். அதற்கு மேலும் யான் கண்டு ஆற்றியிருத்தற்கமைந்த தலைவன் மலையும் மாலையில்

"நோயுங் கைம்மிகப் பெரிதே மெய்யுந்
தீயுமிழ் தெறலின் வெய்தா கின்றே
ஒய்யெனச் சிறிதாங் குயிரிய பையென
முன்றிற் கொளினே நந்துவள் பெரிதென
நிரையே நெஞ்சத் தன்னைக் குய்த்தாண்
டுரையினி வாழி தோழி புரையி
னுண்ணே ரெல்வளை நெகிழ்த்தோன் குன்றத்
தண்ண னெடுவரை யாடித் தண்ணென
வியலுறை முள்கிய வளியென்
பசலை யாகந் தீண்டிய சிறிதே"[1] (நற்றிணை-236)

இது வரைவிடை ஆற்றாமை மிக்குழி அவன் வரையின் முள்கிய காற்று என் மெய்க்கட்படினும் ஆற்றலாமென்றது.

"அம்ம வாழி தோழி யவர்போ
னம்முடை வாழ்க்கை மறந்தன்று கொல்லோ
மனையெறி யுலக்கையிற் றினைகிளி கடியுங்
கான நாடன் பிரிந்தெனத்
தானும் பிரிந்தன்றென் மாமைக் கவினே"[2]

இது வன்புறை யெதிரழிந்தது.

சிறுபுன் மாலை சிறுபுன் மாலை
தீப்பனிப் பன்ன தண்வளி யசைஇச்

கடலில் மூழ்கும் கலம்போல இருளில் மறையும். அதனால் பிரிவை ஆற்றதில்லேன்.

1. கருத்து: தோழீ! எனக்கு நோய் மிக்கது; உடம்பும் வெப்பம் உடையதாயிற்று. இனி உய்யேன். ஒரு கால் அவனது மலையிற்பட்ட காற்று என் மெய்யைத் தீண்டினால் உய்வேன். ஆதலின் அது படும்படியாக அன்னையிடம் சென்று என்னை முற்றத்திலே கிடத்தினால் உய்வேன்' என்று சொல்வாயாக.

2. கருத்து: வீட்டில் குத்தும் உலக்கை ஓசையால் புனத்துக் கிளியைக் கடியும்படியான கான நாடன் நம்மைப் பிரியவே என் மாமையழகு தானும் என்னைவிட்டுப் பிரிந்தது. நம்முடன் உடனுறை வாழ்க்கையை மறந்து விட்டதோ அக்கவின்.

செக்கர் கொண்ட சிறுபுன் மாலை
வைகலும் வருதியா லெமக்கே
யொன்றுஞ் சொல்லாயவர் குன்றுகெழு நாட்டே''[1]

இது மாலைப் பொழுது கண்டு வருந்திக் கூறியது.

இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

''கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே''[2]

(குறுந்-30)

இது வரைதற்குப் பிரிய வருந்துகின்றது என்னென்றாட்குக் கனவு நலிவுரைத்தது.

''ஆடமை குயின்ற வவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் றுதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
வின்பல் லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலியா டுமயில்

---

1. கருத்து: தீத்தெளிப்பதுபோல் உள்ள காற்றுடன் அசைந்து சிவந்த நிறங் கொண்டுவரும் சிறிய புல்லிய மாலைக் காலமே! தினமும் எம்மை வருத்த வருகிறாய். ஆனால் அவரது குன்ற நாட்டிற் சென்று அவரிடம் ஒன்றும் சொல்லவில்லையே!

2. கருத்து: தோழீ! கேட்பாயாக. நேற்றையிரவில் பொய் வல்ல தலைவன் நனவுபோலக் கனவில் மெய்யுறப் பொருந்தி மருட்ட விழித்துப் படுக்கையைத் தடவினேன். யான் மிக இரங்கத் தக்கவள்.

விழவுக்கள விறலியிற் றோன்று நாட
னுருவ வல்விற் பற்றி யம்புதெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினாஅய்ப்
புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோரியா னாகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணொடு ஞெகிழ்தோ ளேனே"[1]

(அகம்-82)

அவனை ஆயத்தார் பலருங் கண்டாரென வந்தோன் முட்டிய வாறும் அவருள் நெகிழ்தோளேன் யானேயெனத் தானே கூறியவாறுங் காண்க.

"தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை
மாழைமா னோக்கின் மடமொழி—நூழை
நுழையு மடமகன் யார் கொலென் றன்னை
புழையு மடைத்தாள் கதவு"[2] (கைந்நிலை-59)

"நகைநீ கேளாய் தோழி யல்கல்
வயநா யெறிந்து வன்புறந் தழீஇ

---

1. கருத்து: தோழீ! மூங்கில் துளைவழி வரும் ஒலி குழலிசையாக அருவியோசை முழவின் ஒலியாக மான் குரல் பெருவங்கிய ஒலியாக வண்டொலி யாழிசையாக குரங்குகள் காண்போராகப் பக்கமலையிடத்தில் உலவியாடும் மயில்கள் நடன மாதராகத் தோன்றும் நாடன் ஒருவன், தன்னால் எய்யப்பட்ட அம்பு பாய்ந்த யானையை இவ்வழி வந்ததோ என வினவி நின்றான். அவனைக் கண்டோர் பலர்; அவருள் ஓர்யான் மட்டும் படுக்கையிற் கிடந்து நீர்வார் கண்ணொடு நெகிழும் தோளுடையேனாய் ஆகுவது என்னை?

2. கருத்து: பொன்னிற மான்போலும் கண்ணும் மென் மொழியும் உடைய தோழீ! தாழை வெண் சங்குபோல் பூவீனும் தண்ணந்துறைவனைக் கண்டு நூழை வழி நுழையும் இளைஞன் யார் என்று சொல்லிக்கொண்டே நாம் பார்த்துவிடாதபடிக் கதவின் சாவித் துளையை அடைத்தாள் நம் தாய்.

யிளைய ரெய்துதன் மடக்கிளை யோடு
நான்முலைப் பிணவல் சொலிய கானொழிந்
தரும்புழை முடுக்க ராட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் றொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலன் முன்பிற்றன் படைசெலச் செல்லா
தருவழி விலக்குமெம் பெருவிறல் போன்மென
வெய்யாது பெயருங் குன்ற நாடன்
செறியரி னுடக்கலிற் பரீஇப் புரியவிழ்ந்
தேந்துகுவவு மொய்ம்பிற் பூச்சோர் மாலை
யேற்றிமிற் கயிற்றி னெழில்வந்து துயல்வர
வில்வந்து நின்றோற் கண்டன ளன்னை
வல்லே யென்முக நோக்கி
நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே''

(அகம்-248)

இவை வந்தோன் செவிலியை எதிர்த்துழிக் கூறியன.

''கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலங்கோதைத்
தொடிசெறி யாப்பமை யரிமுன்கை யணைத்தோளா
யடியுறை யருளாமை யொத்ததோ நினக்கென்ன
நரந்தநா றிருங்கூந்த லெஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரலமை யொருகாழ்
விரன்முறை சுற்றி மோக்கலு மோந்தன
னறாஅவ்விழ்ந் தன்னவென் மெல்விரற் போதுகொண்டு
செறாஅச் செங்கண் புதைய வைத்துப்
பறாஅக் குருகி னுயிர்த்தலு முயிர்த்தனன்
றொய்யி லிளமுலை யினிய தைவந்து

தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி யளிக்கு
மையல் யானையின் மருட்டலு மருட்டினன்;
அதனால்,
அல்லல் களைந்தனன் றோழி நந்நக
ரருங்கடி நீவாமை கூறி னன்றென
நின்னோடு சூழ்வ றோழி நயம்புரிந்
தின்னது செய்தாளி வளென
மன்னா வுலகத்து மன்னுவது புரைமே''[1]

(கலி-54)

எனக் கைப்பட்டுக் கலங்கிப் புணர்ச்சி நிகழ்ந்தமை கூறி 'அருங்கடி நீவாமைக் கூறின் நன்' றெனத் தமர்க்குக் கூறுமாறு தோழிக்குத் தலைவி கூறினாள். சுரிதகத்து இருகாற்றோழி யென்றாள் நாணுத் தளையாக மறைகரந்தவாறு தீரத் தோழிக்கு முகமனாக.

''எரியகைந் தன்ன செந்தலை யன்றில்
பிரியின் வாழா தென்மோ தெய்ய
துறைமேய் வலம்புரி துணைசெத் தோடிக்

1. கருத்து: தோழி! கூந்தலையும் முன் கையையும் தோளையும் உடையவளே என என்னை விளித்து, நின் அடிக்கண் யானை உறைதலுக்கு நீ அருளாதிருப்பது தக்கதோ, எனச் சொல்லி மகரவாய்ச் சுட்டியணிந்த கூந்தலில் ஒரு மாலையைத் தன் விரலாற் சுற்றி மோந்து பார்த்தலும் செய்தான். என் விரலைப் பற்றித் தன் கண்ணில் வைத்துக் கொல்லன் உலை மூக்குப்போல் (துருத்திபோல)ப் பெருமூச் செறிந்தான். தொய்யில் எழுதிய இளமுலைகளைத் தடவிக் கொடுத்து அத் தொய்யிற் குழம்புபட்ட கையாலேயே மையலால் பிடியைத் தழுவும் களிறுபோல என் உடல் முழுதும் தடவி மயக்கினான். அதனால், அவன் கையிலகப்பட்ட வருத்தத்தைப் போக்கினேன். நான் நின்னொடு கேட்பது இதுவே. தாயிடம் சென்று நின்மகள் ஒருவனை விரும்பிக் கற்புக் கடம் பூண்டாள் என்று சொல்லி (அறத்தொடு நின்று) நம் மனையிலேயே அவனொடு மணம் நீங்காமல் செய்வாயானால் நிலையா வுலகத்து புகழ் நிலைக்கும். அறிக.

கருங்கால் வெண்குருகு பயிறரும்
பெருங்கடற் படைப்பையெஞ் சிறுநல் லூரே''[1]

இஃது அன்றில் பிரியின் வாழாதெனக் கூறென்றது.

''ஐயோ வெனயாம் பையெனக் கூறிற்
கேட்குவர் கொல்லோ தாமே மாக்கடற்
பருஉத்திரை தொகுத்த நுண்கண் வெண்மண
லின்னுந் தூரா காணவர்
பொன்னி னெடுந்தேர் போகிய நெறியே''[2]

இஃது அவர் இன்னும் போவதற்கு முன்னே நம் வருத்தத்தை வெளிப்படக் கூறென்றது.

''என்னைகொ றோழி யவர்கண்ணு நன்கில்லை
யன்னை முகனு மதுவாகும்—பொன்னலர்
புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல தில்லென் றுரை''[3]

(ஐந்-எழு-58)

இது தலைவற்குக் கூறென்றது.

இவை தலைவி அறத்தொடு நிற்றற் பகுதி, தோழிக்கே உரைத்தற்குத் தோழிக்கென்றார்.

---

1. கருத்து: கடற்றுறையில் மேயும் வலம்புரிச் சங்கு தன் துணையைத் தேடிச் சென்று கரிய காலுடைய வெண் சங்கினை (துணையை) அடைந்து புகும் கடற்பக்கத்தை யுடைய எம் சிறிய நல்லூரில் நெருப்புக் கொழுந்து விட்டெரிவது போலும் கொண்டையை யுடைய அன்றில் தன் துணையைப் பிரியின் வாழாது என்பதைத் தலைவனிடம் கூறுவாயாக—தோழியிடம் கூறியது.

2. கருத்து: இக் கடற்கரைப் பக்கத்தில் அவர் தேர் சென்ற வழியைக் கடலலைகள் தொகுத்த மணல் இன்னும் தூர்க்கவில்லை. அதனால் அவர் அண்மையில்தான் சென்று கொண்டிருப்பார். நாம் நம் துன்பத்தை மெதுவாகக் கூறினும் அவர் கேட்பர் போலும்.

3. கருத்து: பக்கம் 270-ல் காண்க.

111\. உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆங்கவை பிறவும் தோன்றுமன் பொருளே (23)

ஆ. மொ.

இல.

When the lady-love goes to her lover on her own accord having the Sayings of the ancients in mind that the modesty is more essential than life, and chastity is more essential than modecty and when she expresses the words which betray her mental weakness, there will be found love themes.

இளம்.

இதுவும் அது.

(இ-ள்) : 'உயிரினும் நாண் சிறந்தது. அதனினும் குற்றந் தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது' என முன்னோர் கூற்றை யுட்கொண்டு தலைவனுள்ள விடத்துச் செல்லலும் வருத்தமில்லாச் சொல்லைத் தலைவி சொல்லுதலுமாகிய அவ்வகை பிறவுந் தோன்றும் அவை பொருளாம் என்றவாறு.

மன் ஆக்கத்தின் கண் வந்தது. எனவே இவ்வாறு செய்தல் பொருளல்ல என்று கூறற்க என்றவாறு. இதனுள் நாணத்தினும் கற்புச் சிறந்த தென்றவாறு.

நொதுமலர் வரைவு நோக்கிக் கூறுவது:

"அறிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனிய
வான்பூங் கரும்பில் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீழ்ந்துக் காஅங்குத்

தாங்கும் அளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே''[1]

(குறுந்-149)

''கோடீ ரிலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுஇனி வாழியென் நெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தா ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே''[2]

(குறுந்-11)

இது காமக் கிழவனுள்வழிப்படுதல்.

தாவில் நன்மொழி கூறியதற்குச் செய்யுள்:

''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதுங்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇய பசந்தன்று நுதலே
ஞெகிழிய ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே[3]

(குறுந்-87)

எனவரும்.

---

1. கருத்து: தோழீ! நாணம் என்பது மிக இரங்கத்தக்கது. அது நம்மொடு நீண்ட காலம் இருந்து துன்புற்றது. இப்போது கரும்புப் பாத்தியில் உள்ள மணல் சிறுகரை தண்ணீர் நெரிக்கக் கரைந்ததுபோல அந் நாணம் காமம்மிக்கு நெரிக்க நம்மிடம் நில்லாது மறைந்தது.

2. கருத்து: நெஞ்சமே! நாடொறும் வளைகழலத் துயிலாத கண்ணொடு தனிமையில் இவ்வூரில் உறைதலினின்றும் தப்புவோம். நீயும் என்னுடன் எழுக. வடுகரது பகைப் புலமாகியதும் கட்டி என்பானதுமாகிய நல்ல நாட்டுக்கு அப்பாலுள்ள மொழிபெயர்த்தேயத் (வேறுதேயத்) தில் இருப்பவராயினும் நம் தலைவருடை நாட்டைச் சென்று சேர முடிவு கொண்டு விட்டேன்.

3. கருத்து: பக்கம் 199-ல் காண்க,

நச்.

இது தலைவி கூற்றிற்குச் சிறப்பில்லன கூறி, அவையும் அகப்பொருளாம் என்கின்றது.

(இ-ள்) : உயிரினும் நாண் சிறந்தன்று—எல்லாவற்றினுஞ் சிறந்த உயிரினும் மகளிர்க்கு நாண் சிறந்தது. நாணினுஞ் செயிர்தீர் கற்புக் காட்சி சிறந்தன்று—அந் நாணினுங் குற்றந் தீர்ந்த கற்பினை நன்றென்று மனத்தாற் காணுதல் சிறந்தது, எனத் தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு—என்று முன் னுள்ளோர் கூறிய கூற்றினைப் பொருந்திய நெஞ்சுடனே, காமக் கிழவன் உள்வழிப்படினும்—தலைவன் இருந்தவிடத்தே தலைவி தானே செல்லினும், தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும் மனவலியின்றிச் செல்வாமெனக் கூறும் நன்மொழியினைத் தலைவி தானே கூறினும், பொருள் தோன்றும்—அவை அகப் பொருளாய்த் தோன்றும், ஆவகை பிறவும் மன்பொருள் தோன்றும்—அக் கூற்றின் கூறுபாட்டிலே பிற கூற்றுக்களும் மிகவும் அகப்பொருளாய்த் தோன்றும் என்றவாறு.

என்றது, தலைவி கூற்று, சிறுபான்மை வேறுபட்டு வருவன வற்றைக் கற்புச் சிறப்ப நாண் துறந்தாலுங் குற்றம் இன்றென் றற்குச் 'செயிர்தீ' ரென்றார். 'நன்மொழி'யென்றார் கற்பிற் றிரியாமையின்; அவை இன்னோரன்ன வழி நெஞ்சொடு கிளத்தல் போல்வன, இவள் கூற்றுத் தோழிக்குந் தலைவற்குமே தோன்றுவதென்க.

மன்—ஆக்கம், இழிந்த பொருளும் உயரத் தோன்றலின்

''மள்ளர் குழீஇய விழவி னானு
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை ஞெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே''[1]

(குறுந்-31)

---

1. கருத்து: வில்வீரர் குழுமிய வில்விழா விடத்திலும், மகளிரின் துணங்கைக் கூத்திடத்தும் வேறிடத்தும் எங்கும் மாட்சிமிக்க என் தலைவனைக் காணேன். யானும் ஓர் ஆடுகளமகளே. அவனும் ஓர் ஆடுகள மகனே. (ஆடுகளமகள்—களங் குறித்து அங்கு ஆடும் மகள்)

யாண்டுங் காணேனென அவனை வழிபட்டுக் கூறினமையிற் கற்பின்பாலதாய்த் தோழியுந் தலைவனும் பெண்டன்மையிற் றிரியக் கருதாது நன்கு மதித்தவாறு காண்க.

''அருங்கடி யன்னை காவ னீவிப்
பெருங்கடையிறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண நாண்விட்
டகல்வயற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னாட்
கருவி வானம் பெய்யா தாயினு
மருவி யார்க்கும் கழைபயின னந்தலை
வான்றோய் மாமலை நாடனைச்
சான்றோ யல்லை யென்றனம் வரற்கே''[1]

(நற்றிணை-365)

''கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
யீங்கிவ ணுறைதலு முய்குவ மாங்கே
யெழுகினி வாழியெ னெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழி பெயர்தே எத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நட்பே''[2]

(குறுந்-11)

இவை தோழிக்கும் நெஞ்சிற்கும் கூறியன.

''ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை

---

1. கருத்து : தோழீ! மழை பெய்யாதாயினும் அருவி ஆர்க்கும் மலை நாடனைப் பார்த்து நீ எம்மைக் கை விடுதலின் சான்றோய் அல்லை என்று கூறி வருவதற் காகத் தாயின் காவலையும் நீங்கி பெரிய வாயிற் கடையையும் கடந்து ஊர்ப் பொது மன்றத்தையடைந்து பகற்போதிலேயே பலரும் காண வாய்விட்டு அவன் ஊர் யாதென வினவுவதற்குச் செல்வேமோ வாழி.

2. கருத்து: பக்கம் 281ல் காண்க.

தூங்குதோற் றுதிய வள்ளுகிர் கதுவலிற்
பாம்புமத னழியும் பானாட் கங்குலு
மரிய வல்லம னிகுளை பெரிய
கேழ லட்ட பேழ்வா யேற்றை
பலாவம லடுக்கம் புலர வீர்க்குங்
கழைநரல் சிலம்பி னாங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பு மவர்நாட்
டெண்ணரும் பிறங்கன் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீயிரிச் சுர
மறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே''[1]

(அகம்-8)

என்னும் அகப்பாட்டும் அது.

இங்ஙனம் வந்துழியுங் கற்புச் சிறந்ததாம்.

---

1. கருத்து: தோழீ! ஈசல் வழங்கும் புற்றிலே குரும்பி யாகிய உணவை அகழ்ந்தெடுத்த கரடியின் கூரிய கரிய நகங்கள் படுதலால் பாம்பு வலியழியும்படியான பாதி யிரவும் அவர்க்கு வருதற்கு அரிய அல்ல. எப்போதென் றால் கூறுவேன். பன்றியைக் கொன்ற புலி அதனைப் பலாமர மலையடுக்கத்தில் ஈர்த்துச் செல்லும் படியான மலையில் சுரபுன்னையொடு வாழையும் மலிந்த படுகுழி யில் களிறு வீழ்ந்ததாக அதன் வருத்தம் போக்கி எழச் செய்ய அருகேயுள்ள மரத்தை ஒடிக்கும் ஓசையானது விடர்களில் ஒலிக்கும்படியான அவர் நாட்டிலே, அள வில்லா மலையடுக்கத்தில் வழி மயங்காமல் மின்னல் ஒளியில் சிறிது சிறிதா ஒதுங்கி வந்து மழையில் நனைந்த முதுகில் பரந்த தன் கூந்தலின் நுனியைப் பிழிந்து வழி தவறி வந்த நீயிர் வரும் சுரவழியருமையை யறியவும் அறிதிரோவெனக் கேட்பவர் இருந்தால் அப்போது.

இனிப் பிறனாற் கொள்வன வருமாறு.

"பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலு
ணன்மலை நாட னலம்புனைய—மென்முலையாய்
போயின சின்னாள் புனத்து மறையினா
லேயினா ரின்றி யினிது"[1]

(ஐந்-ஐம்-11)

"கானலஞ் சிறுகுடிக் கடன்மேம் பரதவர்
நீனிறப் புன்னைக் கொழுநிழ லசைஇத்
தண்பெரும் பரப்பி னொண்பத நோக்கி
யங்க ணரில்வலை யுணக்குந் துறைவனொ
டலரே, யன்னை யறியி னிவணுறை வாழ்க்கை
அரிய வாகு நமக்கெனக் கூறிற்
கொண்டுஞ் செல்வர்கொ றோழி யுமணர்
வெண்க லுப்பின் கொள்ளை சாற்றிக்
கணநிரை கிளர்க்கு நெடுநெறிச் சகடம்
மணன்மடுத் துரறு மோசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉ
மிருங்கழிச் சேர்ப்பிற்றம் மிறைவ னூர்க்கே"[2]

(நற்றிணை-4)

எனவரும்.

"விழுந்தண் மாரிப் பெருந்தண் சாரற்
கூதிர்க் கூதளத் தலரி நாறு
மாதர் வண்டி னயவருந் தீங்குரன்
மணநாறு சிலம்பி னசுண மோர்க்கு
முயர்வரை நாடற் குரைத்த லொன்றோ
துயர்மருங் கறியா வன்னைக் கிந்நோய்
தணியுமா றிதுவென வுரைத்த லொன்றோ
செய்யா யாகலிற் கொடியை தோழி
மணிகெழு நெடுவரை யணிபெற நிவந்த

---

1. கருத்து: பக்கம் 269-ல் காண்க.
2. கருத்து : தோழீ! துறைவனிடம் ஊரலர் பற்றித் தாய் அறியின் புலால் உணக்க இங்கு உறையும் வாழ்க்கை நமக்கு அரிதாகும். (இற் செறிப்பாள் தாய்) என்று கூறிவால் தம் ஊர்க்கு நம்மைக் கொண்டு சேர்வரோ?

செயலை யந்தளி ரன்னவென்
மதனின் மாமெய்ப் பசலையுங் கண்டே''[1]

(நற்றிணை-244)

இஃது அறத்தொடு நிற்குமாறு தோழிக்குத் தலைவி கூறியது. இன்னும் அதனானே தோழியைத் தலைவி ஆற்றுவித்தலுங் கொள்க.

''நெகிழ்ந்த தோளும் வாடிய வரியுந்
தளிர்வனப் பிழந்த என்றிறனு நோக்கி
யாஞ்செய்வ தன்றிவள் துயரென வன்பின்
அழாஅல் வாழி தோழி வாழைக்
கொழு மட லகலிலைத் தளிதலைக் கலாவும்
பெருமலை நாடன் கேண்மை நமக்கே
விழுமமாக வறியுந ரின்றெனக்
கூறுவை மன்னோ நீயே
தேறுவென் மன்யா னவருடை நட்பே''[2]

(நற்றிணை-309)

எனவரும்.

''துறுகல லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்றநாட

---

1. கருத்து : நுண்ணிய இடையையும் அல்குலையும் இனிய சொல்லையும் உடையவளே! கழிமுள்ளிப் பூமாலையைக் கூந்தலில் சூடித் தோழியருடன் கடலில் ஆடி என் அரிய இனிய உயிரை வவ்விய நீ யார் என்று நாம் அவனால் வருந்துதலை யறியானாய் நம்மால் அவன் வருந்தியவன்போல் கூறியதும் என்னை யிரந்து நின்றதும் ஆகிய செயல் எனக்கு நகையாகின்றது.

2. கருத்து: தோழீ! என்னுடைய நெகிழ்ந்த தோளையும் புலர்ந்த வரிக் கோலத்தையும் தளிர் அழகை இழந்த என் உடம்பின் பொலிவின்மையும் கண்டு என்னாலல்லவா இவட்கு இவை விளைந்தன என்று என்பால் கொண்ட அன்பால் அழாதே. நாடன் நட்பு நமக்குத் துன்பமாக இருக்கவும் அதை அறிபவர் இல்லையே என்று கூறுவாய். அவருடைய நட்பைப் பற்றி யான் நன்றாகத் தெளிந்துள்ளேன். அதனால் ஆற்றி யிருப்பேன்.

னெஞ்சு களனாக நீயலென் யானென
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே''[1]

(குறுந்-36)

இதுவும் அது.

வெள்.

இது தலைவி தன் களவொழுக்கத்தினைத் தோழிக்குத் தானே கூறுதற்குரிய இன்றியமையாமை கூறுகின்றது.

(இ-ள்): 'எல்லாவற்றினும் சிறந்த உயிரைவிட மகளிர்க்கு நாணம் என்னும் பண்பே இன்றியமையாச் சிறப்பானது; அத்தகைய நாணத்னதவிடக் குற்றமற்ற நல்லறிவின் வெளிப் பாடாகிய கற்புடைமையே இன்றியமையாச் சிறப்பினதாகும்' என முன்னோர் வாய்மொழியைப் பொருந்திய நெஞ்சத்துடனே தனது காதற்குரிய தலைவன் இருந்த விடத்தே தானே செல்லு தலை விரும்பிய நிலையிலும், தனது பிரிவுத் துயரத்தைப் பொறுக்கும் மனவன்மையின்றித் தலைவன் உள்ள விடத்தே செல்வாம் என்னும் நன்மொழியினைத் தலைவி கூறுதற்கண்ணும் அவைபோன்ற கூற்றுவகை பிறவற்றின் கண்ணும் தலைமகள் பால் காதல் மிகுதியாகிய மிக்க பொருகள் தோன்றும். (எ-று).

சிவ.

''இச்சூத்திரம் தலைவி கூற்றிற்குச் சிறப்பில்லன கூறி அவையும் அகப்பொருளாம் என்கின்றது'' என நச்சினார்க் கினியர் கூறுவதே பொருந்தும். இளம்பூரணர் கருத்தும் அதுவே. வெள்ளை வாரணனார் ''தலைவி தன் களவொழுக் கத்தினைத் தோழிக்குத் தானே கூறுதற்குரிய இன்றியமை யாமை கூறுகின்றது'' என்றது பொருந்தாது; தலைவன் இருக்குமிடம் செல்லுதலும், செல்வாம் எனத் தோழிக்குக்

---

1. கருத்து: தோழீ! பொற்றைக் கல்லின் பக்கத்துள்ள மாணை என்னும் கொடி தூங்கும் களிற்றின்மேல் படரும் படியான மலைநாடனானவன் நல்ல தோளை மணந்த காலத்துத் தன் நெஞ்சே அவைக் களமாகக் கொண்டு நின்னைப் பிரியேன் என்று கூறிக் கெடாத சூளுறவு உற்ற நின்னிடத்துத் துன்பம் தருவதாகுமோ!

கூறுதலும் தோழி களவொழுக்கம் அறிந்து இருவரையும் புணர்த்திய பின்னரே நிகழ்வனவாதலின். அன்றியும் அவனி ருக்குமிடம் செல்ல நினைப்பதும் செல்வதும் சொல்வதும் களவில் ஒருவழித்தணத்தல் போலும் செயல்களால் தலைவன் வரவும் வரைவும் நீட்டித்த வழியாதலும் காரணமாம்.

தோழி கூற்று

112. நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வருஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகு உரைத்து ஒழிப்பினும்
அருமையின் அகற்சியும் அவள் அறிவுறுத்துப்
பின்வா என்றலும் பேதைமை ஊட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சிஅச் சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமொடு
எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயம் செப்பிப்
பொறுத்த காரணம் குறித்த காலையும்
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்
குறைந்தவட் படரினும் மறைந்து அவள் அருகத்
தன்னொடும் அவளொடும் முன்னமுன் தளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்
எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்

செங்கடு மொழியால் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை யடுத்த வன்புறைக் கண்ணும்
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையற வரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செய்கை தாய்க்கு எதிர்மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்
பிறன்வரைவு ஆயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறன்எனப் படுதல்என்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையினும்
தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன (24)

ஆ. மொ.

இல

After having ascertained that her lady wants to have union with her lover by means of seven reactions in her exhibited by fragrance, appearance, behaviour, meals, the nature of hiding her usual actions, movements and practice; when she tries to find out the truth without failing in her usual duty to her mistress by means of dubious statements which may be either true of false; when she turns him back without yielding to his request on the pretext of his honour, when she turns him away on the pretext

of the nature of the world, on informing the rareness of seperation from others, when asking him to meet her after meeting the lady-love; when attributing ignorance, when informing the knowledge of their previous union, being afraid when making him fear, at the union after informing the lady to join the lover, the union having taken place-including this—the eight expressions having made completely;

On indicating the reasons for delaying him on false pretext being told, on saluting him after the union having taken place, being sympathatic on approaching her, having hidden the passion on account of modesty, when being informed of her the knowledge of three unions between him and her, and when the entreaty takes place in various ways, when desiring to inform the lord after having the good will of the lady, when thinking of many jokes which cannot be understood, when the lover desires the union on unwanted seperation, when desiring the way of great hospitablity, on having understood the feigned ignorance after having the union, on the part of requesting him to protect her, when the Lady-love becomes disheartened by her harsh words, on emphasising his love to her, she being seperated with deep love towards him, when perturbed on knowing the calamities on the way, when the watch over her becomes very strict to the extent of making the lady helpless, when requesting him to marry on account of his intense love, and of the greatness of his country, village, family, tribe, birth and nobility, refraining from fixing the place and time to meet, when establishing the innocence of the lady by discarding the rumour as false and giving evidences of truth for clearing the doubt of the mother, when he is detained, when efforts are being made to know the sufferings of the lady by means of 'kalam,* when examining the feasiblity of the marriage with others when refusing to his marriage, when being expressions to the

* 'Kalam' - the place where the fore-cast will be made by means of same device peculiar to this occassion.

mother in the two ways of addressing directly and emphasising the virtue, when questioning the delay in marrying after obtaining the consent of the parents, and on insisting to be patient assuring the celebration of the marriage soon—these are the thirty two occassions where the maid makes her expressions.

இளம்.

என்றது, களவொழுக்கத்தின்கண் தோழிக்குரிய கிளவி யெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்): நாற்றமு............நாட்டத்தானும் என்பது—நாற்ற முதலாகச் சொல்லப்பட்ட ஏழினானும் புணர்ச்சிக்கு முந்துற்ற நிலைமையை உட்கொண்டு வரும் மனநிகழ்ச்சி யேழினும் புணர்ச்சி யுண்மையறிந்த பின்றை மெய்யினானும் பொய் யினானுந் தலைவி குலத்தினுள்ளார் நிலைமையிற் பிழையாது பலவாகி வேறுபட்ட கவர்த்த பொருண்மையையுடைய ஆராய்தற் கண்ணும் என்றவாறு.

நாற்றம் என்பது—பூவினானும் சாந்தினானும் தலைவன் மாட்டுளதாகிய கலவியால் தலைவி மாட்டுளதாய நாறுதல்.

தோற்றம் என்பது—புணர்ச்சியான் வரும் பொற்பு.

ஒழுக்கம் என்பது— ஆயத்தாரொடு வேண்டியவா றொழுகு தலன்றித் தன்னைப் பேணியொழுகுதல்.

உண்டி என்பது—உண்ணும் அளவிற் குறைதல்.

செய்வினை மறைத்தல் ஆவது—பூக்கொய்தலும் புனலா டலும் போலும் வினைகளைத் தோழியை மறைத்துத் தனித்து நிகழ்த்துதல். அன்றியும் தலைவன் செய்த புணர்ச்சியாகிய கருமத்தினைப் புலப்பட விடாது தோழியை மறைத்தலும் என்றுமாம்.

செலவினும் என்பது—எத்திசையினும் சென்று விளையாடு வாள் ஒரு திசையை நோக்கிச் சேறல்.

பயில்வினும் என்பது—ஓரிடத்துப் பயிலுதல்

புணர்ச்சி எதிர்ப்பாடு ஆவது—புணர்வதற்கு முந்துற்ற காலம்,

உள்ளுறுத்தல் ஆவது—உட்கோடல்

உணர்ச்சி ஏழாவது—நாற்ற முதலாகச் சொல்லப்பட்ட வற்றால் வரும் மனநிகழ்ச்சி ஏழும்.

பல்வேறு கவர் பொருள் நாட்டம் என்பது—ஒன்றோ டொன்று ஒவ்வாத வேறுபட்டனவாகி இருபொருள் பயக்கும் சொற்களாலே யாராய்தல்.

அவற்றுள் சில வருமாறு;—

''கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலும்
நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோள் மடந்தை
யாங்கா யினள்கொல் என்னும்என் நெஞ்சே''[1]

(சிற்றெட்டகம்)

இது தலைவி தோற்றங் கண்டு பாங்கி கூறியது. பிறவும் அன்ன.

குறையுறற் கெதிரிய கிழவனை மறையுற என்பது—கள வொழுக்கத்தின் கண்ணே யுறுதற்காகத் தனது குறையைச் சொல்ல வேண்டி எதிர்ப்பட்ட தலைவனை யென்றவாறு.

மறையுற என்பதனை முன்னே கூட்டுக.

பெருமையிற் பெயர்ப்பினும் என்பது—தலைவனது பெருமை யான் நீக்கலும் என்றவாறு.

''இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே
நிணச்சுறா உறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ
புலவு நாறுதும் செலநின் றீமோ
பெருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை

1. கருத்து: தலைவிக்குக் கண்களும் செவ்வரி பரந்தன. நுதலானது வியர்த்து வண்டு மொய்க்கும் படியாயிற்று. வளைந்த மூங்கில் போலும் தோளுடைய மடந்தை யானவள் என் ஆயினள் என வருந்தும் என் நெஞ்சம்.

நும்மொடு புரைவதோ அன்றே
எம்ம னோரிற் செம்மலும் உடைத்தே''[1]

(நற்றிணை-45)

எனவரும்.

உலகுரைத் தொழித்தல் என்பது—உலகத்தார் மகட்கொள்ளு மாறு கொள்ளெனக் கூறுதல்.

''கோடீர் எல்வளைக் கொழுமடற் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தெண்கழிச் சேயிறாற் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ''[2]

(ஐங்குறு-199)

இன்னும் உலகுரைத் தொழித்தல் என்றதனாற் கையுறை மறையுங் கொள்க.

''நீடுநீர்க் கானல் நெருநலும் நித்திலங் கொண்டைய வந்தீர்
கோடுயர் வெண்மணற் கொற்கையெம் ஊரிவற்றாற் குறையிலேமியாம்
ஆடுங் கழங்கும் அணிவிளக்கும் அம்மனையும்
பாடியவைப்பனவும் பந்தாடப் படுவனவும் பனிநீர் முத்தம்''[3]

---

1. கருத்து: தலைவ! இவள் கடலில் மீன் பிடிக்கும் பரதவர் மகள்; நீ கொடியாடும் கடைத் தெருக்களை யுடைய ஊரில் விரைந்தோடும் தேருடைய செல்வர் மகன். சுறா மீனைக் காயவைத்தல் வேண்டி அதைக் கவர வரும் காக்கையை ஓட்டும் இழிந்த எமக்கு உன் நலன் எப்படிப் பொருந்தும். யாங்கள் புலால் நாற்றம் நாறுவேம்; அது பொறாத உயர்ந்த நீ எட்டி நிற்பா யாக. அதனால் எம் வாழ்க்கை உன்னொடு பொருந்தி வராது. எங்கள் குலத்திலும் நின் போன்ற செல்வரை எம் மரபு உடையதாகும்.
2. கருத்து: அழகிய கழியில் சிவந்த இறால் மீன் படுகின்ற தண்கடற் சேர்ப்பனே! வளையலையும் கூந்தலையும் தொடியையும் உடைய மடவரலை நீ விரும்பிக்கொள்ள நினைவாயாயின் உலக வழக்குப்படி மணம் பேசி வந்து மணந்து கொள்வாயாக.
3. கருத்து: ஐய! முத்தைக் கையுறையாகக் கொண்டு தினமும் வந்தீர். எம் கொற்கையூர் முத்துகளாற் குறை

அருமையின் அகற்சியும் என்பது—தலைவியைக் கிட்டுதற்கு அருமை கூறி யகற்றுதல்.

(உ-ம்)

''நெருநலும் முன்னா ளெல்லையும் ஒருசிறைப்
புதுவை யாகலின் அதற்கெய்த நாணி
நேரிறை வளைத்தோள்நின் தோழி செய்த
ஆருயிர் வருத்தங் களையா யோவென
எற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
எம்பதத் தெளியள் அல்லள் எமக்கோர்
கட்காண் கடவுள் அல்லளோ பெரும
வால்கோன் மிளகின் மலயங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரும்
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே''[1]

எனவரும்.

அவளறிவுறுத்துப் பின்வாவென்றலும் என்பது — நின்னாற் காதலிக்கப்பட்டாட்குச் சென்று அறிவித்துப் பின்னர் என் மாட்டுவா என்றவாறு.

அவற்றுள் நீயே சென்று அறிவி என்றதற்குச் செய்யுள்:—

''தன்னையுந் தான்நாணுஞ் சாயலாட் கீதுரைப்பின்
என்னையும் நாணப்படுங் கண்டாய்—என்னைய
வேயேர்மென் தோளிக்கு வேறாய் இனியொருநாள்
நீயே யுரைத்து விடு''[2]

யில்லாதது. கழங்கு, விளக்கு, அம்மனைக்காய், பாட வைப்பன, பந்தாடப்படுவன எல்லாமே முத்துகள்தாம். அதனால் நீ கொண்டுவந்ததை நீயே கொண்டு செல்க.

1. கருத்து: தலைவ! நேற்றும் அதற்கு முன் தினமும் நீ புதியவன் ஆதலின் புணர்ச்சிக்குக் கூற நாணி என்னைப் பார்த்து, நின் தோழி செய்த வருத்தத்தைப் போக் காயோ என்று குறையிரந்தாய். என் தோழியானவள் யான் குறையிரந்து சொல்லும் அளவுக்கு எமக்கு எளியவள் அல்லள். யாம் வணங்கும் கடவுள் அவள். அன்றியும் அவள் மன்னவன் மகள்.

2. கருத்து: தன் ஒழுக்கம் நினைந்து தன்னையே தான் நாணப்படுவாள். நின் குறையினைச் சொன்னால்

பின்வா வென்றற்குச் செய்யுள்:—

''நாள்வேங்கை பொன்விளையும் நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடியர் என்னையன்மார்-
கோள்வேங்கை
அன்னையால் நீயும் அருந்தழையாம் ஏலாமைக்கு
என்னையோ நாளை எளிது''[1]

(திணைமாலை-2)

எனவரும்.

பேதைமை யூட்டல் என்பது—நேரினும் அவள் அறிவா ளொருத்தி யல்லள் என்று தலைவற்குக் கூறல்.

(உ-ம்)

''நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வேண்டி—எறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு''[2]

(திணைமாலை-24)

இன்னும், பேதைமையூட்டல் என்பதனால் தோழிதான் அறி யாள் போலக் கூறுதலுங் கொள்க.

என்னையும் காணநாணப் படுவாள். அதனால் வேறொரு நாளில் நீயே அவளிடம் நின் குறையை உரைத்துவிடு,

1. கருத்து: வேங்கை மரம் புதிதாகப் பொன்போற் பூக்கும் மலை நாடனே! கொலைவல்ல புலிபோற் கொடியர் என் தமையன்மார். நீயும் அவ்வேங்கைபோல் வாய். அதனால் இருவரிடையே போர் எழும். நீ தரும் அரிய தழையுடையை யாம் ஏற்காமைக்கு அதுவே காரணம். எனவே நீ நாளைவரின் கூட்டம் எளிதாகும். என்ன கூறுகிறாய்.

2. கருத்து: தலைவ! தகரம் வகுளம் ஆகியவற்றை வெறும் புதர்களாகக் கருதியதுபோல் விரும்பாது வெட்டி யெறிந்து செந்தினையை விரும்பி விதைப்பாராகிய குறவர்க்குத் தங்கையாகிய தலைவி பிறர் கொண்ட நோய்க்கு வருந்தும் ஆற்றலுடையளோ; அல்லள்.

(உ-ம்)

"புன்தலை மந்திக் கல்லா வன்பறழ்
குன்றுழை நண்ணிய முன்றில் போகாது
எரியகைந்து அன்ன வீததை இணர
வேங்கையம் படுசினைப் பொருந்திக் கைய
தேம்பெய் தீம்பால் வெளவலிற் கொடிச்சி
எழுதெழில் சிதைய அழுத கண்ணே
தேர்வண் சோழர் குடந்தை வாயில்
மாரியங் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயலுறு நீலம் போன்றன விரலே
பாஅய அவ்வயிறு அலைத்தலின் ஆனாது
ஆடுமழை தவழுங் கோடுயர் பொதியின்
ஓங்கிருஞ் சிலம்பில் பூத்த
காந்தளங் கொழுமுகை போன்றன சிவந்தே"[1]

(நற்றிணை-379)

எனவரும்.

முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்துரைத்தலும் என்பது—முன்னுறு புணர்ச்சி முறையே நிறுத்துக் கூறலும் என்றவாறு.

நிறுத்தக் கூறலாவது நீங்கவிடாது உடன்பட்டுக் கூறல். இன்னும் முன்பு கூடினாற்போலக் கூட அமையுமென்று கூறுதல். உதாரணம் வந்தவழிக் காண்க.

அஞ்சி அச்சுறுத்தலும் என்பது—தான் அச்சமுற்று அஞ்சின தன்மையைத் தலைவற்கு அறிவித்தலும் என்றவாறு. அது யாய் வருவளென்றானும் தமையன்மார் வருவரென்றானும் காவலர் வருவரென்றானும் கூறுதல்.

---

1. கருத்து: தலைவ! எம் தோழி தான் பருகுதற்குக் கையிற் கொண்ட பாலை வேங்கை மரக் கிளையில் இருந்த புன்தலை மந்தியின் குட்டியானது வவ்வியதால் தன் அழகு சிதையுமாறு அழுதாள். அழுத்தால் இவள் கண்கள் சோழரது குடவாயில் என்னும் ஊரில் மழை பெய்ததால் நிரம்பிய அகழியில் மலர்ந்து மழைத்துளிகளை ஏற்ற நீலமலர்கள் போன்றன. இவள் விரல்கள் தன் வயிற்றில் அடித்துக் கொண்டதால் காந்தள் மலர் போலச் சிவந்தன. நீ அறிக.

(உ-ம்)

''யானை உழலும் அணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்
ஏனலுள் ஐய வரவுமற் றென்னைகொல்
காணினுங் காய்வர் எமர்''[1]

(திணை மொழி-6)

எனவரும்.

உரைத்துழிக் கூட்டமொடு என்பது—நின்னாற் காதலிக்கப் பட்டாள் யாவள் என வினாயவழி இத்தன்மையாள் எனச் சொல்லக் கேட்ட தோழி அவளும் நின் தன்மையாள் என இவனோடு கூட்டியுரைத்தலும் என்றவாறு.

ஓடு எண்ணின் கண் வந்தது.[2]

(உ-ம்)

''நெறிநீர் இருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவன் ஆட்டலும் ஆட்டாள்
திருநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றாள்
செறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச்
சேர்கேன்''[3]

எனவரும்.

---

1. கருத்து: யானைகள் திரியும் மலைக் கானத்து வாழ்க்கையையுடைய குறவர் மகளிர் யாங்கள். உயர் குலத்தாராகிய தாங்கள் இத்தினைப் புனத்துள் வருதல் என் கருதி? ஐய! நும்மை எம்மவர் காணினும் காய்ந்து தீங்கு விளைப்பர்.

2. கூட்டமொடு என்பதற்குக் கூட்டியுரைத்தலொடு என்பது பொருள். உரைத்துழிக் கேட்டலும் கூட்டியுரைத்தலும் எனக் கோடலின் ஒடு எண்ணின் கண் வந்தது என்றார்.

3. கருத்து: எம் தலைவி கழிநீலமும் சூடவில்லை. நண்டுகளைப் பிடித்து ஆட்டவும் இல்லை. நுதல் வேர்க்க எதையோ சிந்தித்துக் கொண்டே இருக்கின்றாள். தண்ணிய சேர்ப்பனே! யான் என் சொல்லி அவளிடம் செல்வேன். இதில் தலைவன் போலவே தலைவியும் தனிமையினால் வருந்துவதாகக் கூறியது கண்டுணர்க.

எஞ்சாது கிளத்த இருநான்கு கிளவியும் என்பது—ஒழியாது கூறிய எட்டுக் கூற்றும் என்றவாறு. முன்னைப் புணர்ச்சிமுறை யறிந்தாளாதலின் அவன் இரந்து பின்னின்றுழி ஈண்டுக் கூறிய எல்லாம் அவன் உள்ளக் கருத்தறியுந் துணையும் தழீஇக் கொண்டு கூறினல்லது ஒழித்தல் பொருளாகக் கூறாள் என்பது கொள்ளப்படும். இவை எட்டும் குறையுறவுணர்தலின் பகுதி.

வந்த கிழவனை மாயஞ் செப்பிப் பொறுத்த காரணங் குறித்த காலையும் என்பது—மாயம் சொல்லி வந்த கிழவனைத் தலைவி பொறுத்த காரணம் குறித்த காலையும் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

அவ்வழித் தலைவன் குறிப்பும் தலைவி குறிப்பும் உணர்தலும் தலைவன் கேட்டதற்கு மாற்றம் கூறுதலும் உளவாம். மாயம் செப்பி வந்த கிழவன் என மாற்றுக. மாயம் செப்புதலாவது யானை போந்ததோ மான் போந்ததோ எனக் கூறல்.

''இரந்து குறையுறாது கிழவியுந் தோழியும்
ஒருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கும் உரியன் என்ப''.

(இறையனாரகப்-6)

என்பதனாற் குறையுற வுணர்தல் நிகழ்ந்துழி இது நிகழா தென்று கொள்க.

அதன்கண் குறிப்பு உணர்வதற்குச் செய்யுள்:—

''வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்தோள் குறவர் மகளிரேம்
சோர்ந்து குருதி ஒழுகமற் றிப்புறம்
போந்ததில் ஐய களிறு''[1] (திணைமொழி-8)

எனவும்,

---

1. கருத்து: ஐய! யாங்கள் வேங்கை மலர மணம் கமழும் தண்ணிய மலையில் வாழும் மகளிர். யாங்கள் கிளி கடியும் இப்புனத்தில் நின்னால் வேலெறியப்பட்டதால் குருதி சோரக் களிறு வந்ததில்லை,

"நெடுஞ்தேர் கடைஇத் தமியராய் நின்று
கடுங்களிறு காணீரோ என்றீர்—கொடுங்குழையார்
யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்துள்
ஏனற் கிளிகடிகு வார்"[1]

எனவும்

"ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
நரந்தங் கண்ணி இவனோ டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் நாணினர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே"[2]

எனவும் குறிப்புணர்ந்து இருவரும் முள்வழி அவன் வர வுணர்தல்.

(ய) புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும் என்பது—மேற்சொல்லப்பட்ட மூவகையானும் புணர்ச்சியுண்மை பொருந்தியபின் தலைவன்கண் தாழ நிற்றற்கண்ணும் என்றவாறு.

அது நீ கருதியது முடிக்கற்பாலை எனவும் நீ இவளைப் பாதுகாத்தல் வேண்டுமெனவும் இவ் வகை கூறுதல்.

---

1. கருத்து: ஐயனே! தேர் கடவி வந்து தமியராய் இங்கு நின்று எம்மைப் பார்த்து இவ்வழி வந்த கடிய யானையைக் கண்டீரோ என வினவுகின்றீர். தம் புனத்துள் தினையைக் கொய்ய வரும் கிளிகளை ஓட்டுவாராகிய வளைந்த காதணியுடைய மகளிர் யானை வரும் வழியை நினைந்து நின்று கொண்டிருப்பரோ?

2. கருத்து: இவள் (தலைவி) புனங் காப்பவளும் அல்லள். இவனும் (தலைவனும்) மான் ஓடிவந்த வழியில் அதைத் தேடி வருபவனும் இல்லை. இவளோடு இவனிடை மறைந்த உள்ளம் கருதிய எண்ணம் வேறுஒன்று உண்டு. இருவரும் நமக்கு முன்னே நாணம் கொண்டார்போலக் காட்டித் தமக்குள்ளாகக் காட்சியின்பத்தால் மறைவாக கள்ளுண்டார் தம்முளே கொள்ளும் மகிழ்ச்சிபோல இருவரும் தம்முளே மகிழ்வர். தம் கண்களாலேயே பேச்சும் கொள்வர்.

(உ–ம்).

“..

அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவுவில் மேலசைத்த கையை ஓராங்கு
நிரைவளை முன்கையென் தோழியை நோக்கிப்
படுகிளி பாயும் பசுங்குரல் ஏனல்
கடிதல் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும் இவளே
,..
கடுமா கடவுறூஉங் கோல்போல் எனைத்தும்
கொடுமையிலை யாவது அறிந்தும் அடுப்பல்
வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
உழையிற் பிரியிற் பிரியும்
இழையணி அல்குல்என் தோழியது கவினே”[1]

(கலித்-50)

எனவரும்

குறைந்து அவட் படரினும் என்பது—மேல் தலைவன் புணர்ச்சியுண்மையறிந்து தாழநின்ற தோழி தானுங் குறையுற்றுத் தலைவி மாட்டுச் செல்லுதற் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

இக்கிளவி இரந்து பின்னின்ற தலைவன் உள்ளப் புணர்ச்சியுள் வழியும் குறையுற்று மெய்யுறுபுணர்ச்சி வேண்டித் தலைவி மாட்டுச் செல்லுங் காலத்தும் ஒக்கும்.

---

1. கருத்து: தலைவ! வில்லில் வைத்த கையையுடையனாய் வந்து என் நோக்கி புனங் காவலைக் கைவிடுமாறு செய்து விட்டாய். இனி நீ நெடிதாக இவளை நினைத் தலைப் பாதுகாப்பாயாக ......இயல்பாகவே விரையும் குதிரையைச் சாட்டை கொண்டு விரைவுபடுத்துவது போல இயல்பாகவே கொடுமை நின்கண் இல்லையாயினும் சாரலில் வருடைமான் குட்டியை வளர்ப்பவர் போல இவளைப் பாராட்டி நின்னிடம் ஓம்படையாகச் சேர்ப்பன். இவளது அழகு நீ இவளைப் பக்கத்தினின்றும் பிரியின் பிரிந்துபோம்; அறிக.

(உ-ம்)

“வளைஅணி முன்கை வால்எயிற் றின்னகை
இளையர் ஆடுந் தழையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தேர் அண்ணலைக் கண்டிகும் யாமே”[1]

(ஐங்குறு-198)

எனவரும்.

மறைந்து அவள் அருகத் தன்னொடும் அவளொடும் முன்னம் முன்தளைஇப் பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும் என்பது—மேல் தலைவி மாட்டுத் தோழி குறைநயப்பிக்கச் சென்றவழித் தோழி சொல்லும் குறிப்புமொழிக்கு அவள் மறைந்து அரியளாகத் தன்னொடும் அவளொடும் குறிப்பினை முன்னர்த் தடுத்துக்கொண்டு வழிபட்டு முயலும் பலவேறு பக்கத்தின் கண்ணும் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

மறைத்தலாவது—தன் மனத்து நிகழ்ச்சியை ஒளித்தல். அருகுதலாவது—இசைவிலாதாரைப்போல நிற்றல். முன்ன முன் தளைதலாவது — கூற்றினானன்றிக் குறிப்பினானுணர்த்தல். ‘முதன் முன்றளைஇ’ என்று பாடமாயின், மனத்தினானும், மொழியினானும், உடம்பினானும் ஒருங்கே அளவி என்றுமாம்.

பின்னிலை நிகழும் பல்வேறு மருங்காவது—வழிபாடு கொடு வருங் கூற்றுவேறுபாடு. எனவே தலைவிக்குத் தழையும் கண்ணியும் கொண்டு ஒருவன் நம் புனத்தயல் வாராநின்றான் எனவும், அவன் என்மாட்டு ஒரு குறையுடையன் போலும் எனவும், அருளுவார்க்கு இஃது இடமெனவும், அவன் குறை மறுப்பின் மடலேறுவல் எனக் கூறிப் போந்தான் பின்பு வரக் கண்டிலேன் எனவும், இந்நிகரன கூறுதல். அவை வருமாறு:

“புனைபூந் தழைஅல்குல் பொன்அன்னாய் சாரல்
தினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து

---

1. கருத்து: வளையணிந்த முன் கைகளையும் வெண்பல் விளங்கும் முறுவலையும் உடைய இள மகளிர் ஆடும் முறுக்கவிழும் மலர்களுடைய கானலிடத்து குறுந்துறை யாண்டுளது என வினவி நின்ற நெடிய தோள்கள் உடைய அண்ணலைக் காண்போம் வருக.

மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவல் உற்றதொன் றுண்டு''[1]
(ஐந்திணையைம்-14)

எனவும்,

''நெய்யொடு மயக்கிய உழுத்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் தலையது
செயலையம் பகைத்தழை வாடும் அன்னாய்''[2]
(ஐங்குறு-211)

எனவும்,

இலைசூழ்செங் காந்தள் எரிவாய் முகையவிழ்த்த
ஈர்ந்தண் வாடை
கொலைவேல் நெடுங்கட் கொடிச்சி கதுப்புளருங்
குன்றநாடன்
உலைபடு வெந்நோய் உழக்குமால் அந்தோ
முலையிடை நேர்பவர் நேரும் இடனிது
மொய்குழலே

எனவும்,

''புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி

---

1. கருத்து: தோழீ! நாம் மலைச்சாரலில் தினைப்புனம் காத்திருந்தேமாக நம்மிடத்து தான் எய்தமான் இவ்வழி வந்ததா என வினவுவார்போல வினவினாலும் தாம் வினவ நினைத்ததொரு காரியம் உண்டு.

2. கருத்து : அன்னாய்! நெய்யொடு கலந்து உடைத்து உழுந்து மணிகளைப் பரப்பி வைத்தாற்போல செந் நிறமும் பச்சையிலையும் வெண்மலரும் உடைய வய லைக் கொடி படரும் மலையுச்சியில் உள்ள அசோகத் தழையைத் தலைவன் கொண்டு வந்து கொடுத்ததை நாம் ஏற்காதுவிடின் வாடும். அதனால் அதை ஏற்போ மாக.

3. கருத்து: தோழீ! செங்காந்தள் முகையை மலர்விக்கும் வாடைக் காற்றானது கொடிச்சியின் கூந்தலை ஆற்றும் குன்றநாடனானவன் நீருலையானது படும் வெப்பம் போன்ற வெப்ப நோயால்துன்புறும். அந்தோ பாவம்! இவ்விடம் தம் காதலியர் முலையிடத்தைத் தோய்பவர் தோய்தற்குரிய இடமாகும்.

உணர்வொழியப் போன ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரியைம் பாலாய் வண்ணம் உணரேனால்''[1]
(சிலப்-கானல்-31)

எனவும்,

''தன்குறையீ தென்னான் தழைகொணருந் தண்சிலம்பன்
நின்குறை யென்னும் நினைப்பினனாய்ப் பொன்
குறையும்
நாள்வேங்கை நீழலும் நண்ணான் எவன்கொலோ
கோள்வேங்கை அன்னான் குறிப்பு''[2]
(திணை மாலை-41)

எனவும்,

''ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல நல்நாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலிழுமென் நெஞ்சே''[3]
(குறுந்தொகை-176)

எனவும்,

---

1. கருத்து: ஐம்பால் உடையவளே! துணையோடு ஆடும் நண்டைப் பார்த்துப் பின் இக் கானலிடத்து என்னையும் பார்த்துப் போனான் சேர்ப்பன். அவன் உள்ளத் தன்மையை யான் அறியேன்.

2. கருத்து: தண்சிலம்பன் தன் காரியம் இது என்று கூறவில்லை. தழையுடை கொண்டுவரும். நின்னால் முடிக்கப்படும் குறையுடையேன் என்னும் நினைப்பினனாய் வேங்கை நிழலிலும் சென்று சேரவில்லை. கோள் வேங்கை போன்ற அவனது உள்ளக் குறிப்புதான் யாதாம்?

3. கருத்து: ஒரு நாள் வந்திலன். இரு நாள் வந்திலன். பல நாளும் வந்து பணிந்த மொழி கூறி என் நல்ல நெஞ்சத்தை நெகிழச் செய்தனன். பின்னர் என் நெகிழ்ச்சியறியாது போய்விட்டான். பற்றாகும் அத்தலைவன் யாண்டுளனோ. என் நெஞ்சமானது வேற்றுப் புலத்துப் பெய்த மழை நீர் கலங்கினாற் போலக் கலங்குகின்றது.

''மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி
அம்மலைக் கிழவன் நம்நயந் தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்
நீயுங் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டு மறுதரற்கு
அரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே''[1]

(நற்றிணை-32)

எனவும் வரும்.

நன்னயம் பெற்றுழி நயம் புரியிடத்தினும் என்பது—தலைவி குறை நயந்தமை பெற்றவழி அத்தலைவி நயம்பொருந்தும் இடத்தினுங் கூற்று நிகழும் என்றவாறு.

தலைமகள் குறைநயந்தமை தலைமகற்குக் கூறிய செய்யுள்:-

''நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வைகலும்
ஆரல் அருந்திய வயிற்ற
நாரை மிதிக்கும் என்மகள் நுதலே''[2]

(குறுந்-114)

எனவும்,

---

1. கருத்து: தோழீ! மாயோன் போலும் மலைப் பக்கத்தில் பலராமன் போலும் அருவி ஒழுகும் அழகிய மலைக்குரியோன் நம்மை விரும்பி நாளும் வந்து வருந்தினான் என்று யான் கூறிய உண்மையான சொல்லை நீ தெளியாயாய் நின்றாய். இனி நீயும் என்னை நீக்கி விட்டு நின் பிற தோழியரோடும் அவனைப் பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்து அவனொடு அளவளாவுதல் வேண்டும். அவன் குறை நயப்பு மறுத்தற்கரிது. பெரியோர் தம்மிடம் நட்புக்கொள்ள வந்தவரை ஆராய்ந்து நட்புச் செய்தல் அல்லது நட்புச் செய்து பின்னர் ஆராய்தல் இல்லை. இதை மனதிற் கொள்க.

2. கருத்து: கொண்க! நெய்தற் பரப்பிடத்தில் என் பாவையைக் கிடத்தி விட்டு நினது குறியிடம் வந்தேன்.

''கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலால் புள்கடிவான் புக்க—தடம்புல்ஆம்
தாழைமா ஞாழல் ததைந்துயர்ந்த தாழ்பொழில்
ஏழைமான் நோக்கி இடம்''[1]

(திணைமாலை-44)

எனவும் வரும்.

இன்னும் 'நயம்புரி யிடத்தும்' என்றதனால் களவொழுக்கம் நிகழாநின்றுழிக் கூறுங் கூற்றும் ஈண்டே கொள்க. அது தலைவன் வருமெனவும் வந்தா னெனவுங் கூறுதலும் தலைமகன் பகற் குறிக் கண் நீங்கியவழிக் கூறுதலும் எனப் பலவாம்.

''கவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்
பெயர்பட வியங்கிய இளையரும் ஒலிப்பர்
கடலொடு வியலிடைப் பொலிந்த நறுந்தழை
திதலை யல்குல் நலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்பன்
இற்பட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானாள்
பூவிரி கானல் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணா
அல்லல் அரும்படரே காண்சுநாம் இறிதே''[2]

(நற்றிணை-307)

இஃது வருகின்றான் எனக் கூறியது.

எங்களைப் போக விடுவாயாக. ஏன் என்னின் இரவும் வருகிறது. என் பாவையின் நெற்றியை ஆரல் மீனை யுண்ட வயிற்று நாரை மிதித்தலும் கூடும் ஆதலின்.

1. கருத்து: புலால் நாற்றத்தைப் புன்னைப் பூக்கள் போக்கும் துறைவனே! காய வைத்த புலாலில் வந்து படும் பறவைகளைக் கடிவதற்காக வந்து சேர்ந்த ஏழை யாகிய மான்போலும் நோக்கத்தையுடையவள் பயிலும் இடமானது தாழையும் ஞாழலும் செழித்துயர்ந்த பொழிலாகும்.

2. கருத்து: தோழீ! தலைவனின் தேர் மணியும் ஒலித்தது. உடன்வரும் இளையரும் ஆர்த்தனர். கடலாடும் இவ் விடத்தில் நின் அல்குல் நலம் பாராட்ட இப்பொழுதே வருவன். இப்பாதியிரவில் புணர்தற்குக் குறித்த இடத்

''நிலவு மறைந்தன்று இருளும் பட்டன்று
ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை அன்ன நப்புறம் காக்குஞ்
சிறந்த செல்வத்து அன்னையுந் துஞ்சினள்
கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக்கொண் டாங்கு
நன்மார்பு அடைய முயங்கி மென்மெலக்
கண்டனம் வருகஞ் செல்மோ தோழி
கீழு மேலுங் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு போலத்
தமியன் வந்தோன் பனியலை நீயே''[1]

(நற்றிணை-182)

இது வந்தான் எனக் கூறியது.

''நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுகக்
கல்சேர் மண்டிலஞ் சிவந்து சினந்தணியப்
பல்பூங் கானலும் அல்கின் றன்றே
இனமணி ஒலிப்பப் பொழுதுபடப் பூட்டி
மெய்ம்மலி காமத்து யாந்தொழுது ஒழியத்
தேருஞ் செல்புறம் மறையும் ஊரோடு
யாங்கா வதுகொல் தானே தேம்பட
ஊதுவண்டு இமிருங் கோதை மார்பின்

தில் வந்து பொழிலிலே நின்னைக் காணாமல் வருந்தும். அவன் வருத்தத்தைப் பார்ப்பதற்காக நம்மனையருகில் வளைத்து காணும் புன்னை மரத்தின் அடியில் மறைந்து நிற்போம். வருக,

1. கருத்து: தோழீ! நிலவு மறைந்தது; இருளும் மிருந்தது. ஓவியம் போன்ற வீட்டில் பாவை போன்ற நம்மைப் பாதுகாக்கும் அன்னையும் தூங்கினாள்; அதனால் கெடுத்துப்போக்கிய நல்ல அணிகலன்களை மீள எடுத்துக் கொண்டாற்போல, நம்மை இற்செறித்தலால் நாம் காணாதிருந்த தலைவனை-கீழிருந்தும் மேலேறியும் காக்கும் பாகர்களை இல்லாத களிறுபோலத் தனியனாய் வந்த தலைவனை பனியலைத்தலான் வருந்தும் நிலையைப் பார்த்து அவன் நல்ல மார்பை முழுமையும் முயங்கி மெல்ல மெல்லத் திரும்பி வருவோம், வா குறியிடம் போகலாம்.

மின்னிவர் பெரும்பூண் கொண்கனொடு
இன்னகை மேவிநாம் ஆடிய பொழிலே''[1]

(நற்றிணை-187)

இது பகற்குறிக் கண்....தலைவன் நீங்கிய வழிக் கூறியது.

எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும் என்பது—எண்ணுதற்கு அரிய பல நகையாட்டுக்களைத் தலைவனிடம் குறித்த வகையுங் கூற்று நிகழும் என்றவாறு.

அஃது அலராகுமென்று கூறுதல். இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயினால் அவர் தூற்றி நகைப்பராகலின் நகையாயிற்று.

(உ-ம்)

''நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்''[2]

(குறள்-1138)

எனவும்,

''அன்னையும் அறிந்தனள் அலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள உயிர்க்கும்
இன்னா வாடையும் மலையும்
நும்மூர்ச் செல்க எழுகமோ தெய்யோ''[3]

(ஐங்குறு-238)

எனவும் வரும்.

---

1. கருத்து: தலைவி தன்னுட் கூறியது. நெய்தற்பூக் குவியவும் நிழல் கிழக்கில் சாயவும் மேலை மலையிற் சேரும் ஞாயிறும் சிவந்து காட்டிய வெப்பம் நிலம் தணியவும் கடற்கரைச் சோலையும் தன் பொலிவு குறைந்தது. பொழுது மறையவே மணிகள் ஒலிக்கக் குதிரைபூட்டிய தலைவன் தேரும் இப்போது யாம் உடம்பு முழுதும் பரவிய காமத்தைத் தணிக்கப் பெறாமல் தொழுது இங்கே நிற்கும்படிச் செல்லுகின்ற இடமும் மறைந்தது. இந்த ஊரும் நாம் அவனொடு மகிழ்ச்சியுண்டாகக் கூடி ஆடிய பொழிலும் எப்படித் தோன்றுமோ அறிகிலேன்.

2. கருத்து: நிறுத்த இயலாதவர் மிகவும் இரங்கத் தக்கவர் என்று கருதாமல் காமமானது நெஞ்சத்து மறைதலைக் கடந்து ஊர்ப் பொதுமன்றத்துக்கு வெளிப்பட்டு விடும்.

3. கருத்து: தாயும் அறிந்தாள்; ஊரில் அலரும் எழுந்தது.

புணர்ச்சி வேண்டினும் என்பது—மேற் சொல்லப்பட்ட பல்லாற்றானும் தலைவற் கறிவுறுத்தவழிப் பின்னும் புணர்ச்சி வேண்டினும் ஆண்டுத் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

''நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றாற் கௌவையாற்
காமம் நுதுப்பேம் எனல்''[1]
(குறள்-1148)

''இவளே, நின்சொற் கொண்ட என்சொல் தேறிப்
பசுநனை ஞாழற் பல்கிளை ஒருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமார் உடையள்
உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானலுந் தோன்றும்
மடல்தாழ் பெண்ணையஞ் சிறுநல் லூரே''[2]
(குறுந்-81)

இது பின்னும் புணர்ச்சி வேண்டிய தலைவற்கு இடமுணர்த்தியது. இரவு வருவானைப் பகல் வாவென்றலும் பகல் வருவானை இரவு வாவென்றலும் குறிபெயர்த்தலும் எல்லாம் ஈண்டே கொள்க.

''ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்று சிறுகான் யாறே
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்
துன்னல் போகின்றாற் பொழிலே யாம்எம்

நல்ல மனைகளையுடைய நகர் வருந்தும்படிக் கொடிய வாடைக் காற்றும் அலைக்கும். அதனால் தலைவ! நும் ஊர் செல்வோம்; எழுக.

1. கருத்து: அலர்ச் சொல்லால் காமத்தை அடக்குவேம் என்பது நெய்யால் நெருப்பை அணைப்பேம் என்பது போலாம்.

2. கருத்து: தலைவ! இவள் நீ என்னையிரந்து கூறிய சொற்களை யான் கூறக் கேட்டுத் தெளிந்து வந்து சுர புன்னை மரநீழலின் ஒரு பக்கத்தில் நின்னைக் கூடியமையால் பெற்ற புதிய நலனை நீ பிரிவதால் இழந்து தனிமையுற்றவளானாள். அதனால் அதோ தோன்றும் எம் ஊர்க்கு நீ அடிக்கடி வருதலை நினைத்தல் வேண்டும்.

கூழைக் கெருமணங் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே''[1]

(குறுந்-113)

இது பகற்குறி நேர்ந்தது. ஆண்டுத் தலைவிக்குக் கூறுமாறு:

''ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சோருந் துன்னருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே''[2]

(குறுந்-88)

எனவரும்.

வேண்டாப் பிரிவினும் என்பது—புணர்ச்சி வேண்டாது பிரிவு வேண்டினும் என்றவாறு.

இது தலைவன் நெஞ்சினாற் பிரியானென்பதனான் வேண்டாப் பிரிவென்றார். அதுதாளா...வென்பது அலராகு மென்று அஞ்சி ஒருவழித்தணத்தலும் ஒன்று. அவ்வழித் தலைவிக்கு உரைத்தனவும் தலைவற்குரைத்தனவும் உளவாம். அவை வருமாறு :—

''இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்முதிர்பு
நன்மான் உழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப
இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்
செலீஇய சேறி யாயின் இவளே

---

1. கருத்து: தலைவ! எம் ஊர்க்கு அணிமையில் உள்ளது ஒரு பொய்கை. அதற்கு அணியது கான்யாறு. அதன் பக்கத்தில் இரைதேடும் குருகு வருவதல்லது மக்கள் வழக்கம் இல்லாத பொழில் உண்டு. அங்கு எம் கூந்தலுக்கு எருமண் கொணர வருவேன். தலைவியும் உடன் வருவாள்.

2. கருத்து: தோழீ! அடைதற்கரிய மலைச்சாரலில் இடையாமத்தும் நின்னைக்காண வருவர். அதனால் ஊர் அலருக்கு நாணும் நாணத்தை விடுவேமாக.

வருவை யூரகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை செல்மே''

(நற்றிணை-19)

இது தலைவன் பிரிவு வேண்டிய வழிக் கூறியது.

''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்
இருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தேன் இறாலொடு சிதறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லும் அன்னாய்''[2]

(ஐங்குறு-214)

இது தலைவிக்கு உரைத்தது.

''கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் எறிமணல் ஏறி ஆனாது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோன் எறிகடல் நாடே''[3]

(ஐங்குறு-199)

இது தலைவியை ஆற்றுவித்தது.

இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறைக்

---

1. கருத்து: இறால் மீனின் முதுகுப்புறம் போன்ற அடிப் பகுதியையும் சுறா முள் போன்ற முள்ளையும் உடைய தாழை யானையின் மருப்புப்போல அரும்பு கொண்டு விழவுக் களம் எங்கும் மணம் வீசும் படியான கடற் கரைத் தலைவனே! நீ நின் பாகன் தேரை இயக்குகை யாலே நின்னூர்க்குச் செல்வையாயின் நீவரும் சிலநாள் வரையும் உயிர் வாழாள் என்பதை நன்கு அறிந்து செல்வாயாக.

2. கருத்து: தோழீ! மலைச்சாரலில் தளிரிடையே பழுத்த பலாப்பழமானது கற்களின் பிளந்த வளைவுகளில் வீழ்ந்ததாக மலையில் கட்டிய தேனிறால் சிதறுகின்ற நாடன் பெரிய மதர்த்த கண் அழுமாறு தன்னுடைய சீருள்ள நன்னகர்க்குச் செல்லும்.

3. கருத்து: தோழீ! நம் செறிந்த வளைகளை நெகிழச் செய்தவனது கடல் எறியும் நாட்டை கானலிடத்துப் பெரிய துறையில் உள்ள வானளவாக உயர்ந்த மணல் மேட்டில் ஏறிக் காண்பாம், வருக.

கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பல்மீன் வேட்டத் தென்னையர் திமிலே[1]

(குறுந்-123)

எனவும் வரும்.

வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தினும் என்பது— வேளாண்மையாவது உபகாரம். பெரு நெறியாவது உபகார மாகிய பெரிய நெறி என்க. அதனைத் தோழி தலைவனை வேண்டிக் கோடற்கண்ணும் என்றவாறு.

"நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கின் நிறைபறை யுகப்ப
எல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழில் மழைக்கண் கலிழ இவளே
பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாணலஞ் சிதைய ஏங்கி ஆனாது
அழல்தொடங் கினளே பெரும அதனாற்
கழிச்சுறா வெறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைய
வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை ஓங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே"[2]

(அகம்-120)

என்பதும்,

---

1. கருத்து: தோழீ! நம் தலைவர் புன்னைமரச் சோலை யில் இருள் குவிந்ததுபோலும் நிழலில் நிலவு குவிந்தது போலும் வெண் மணல் உள்ள ஒரு பக்கமாகிய குறி யிடத்தில் இன்றும் வந்திலர். வரின் அளவளாவுதல் எளிதாம். ஆனால் கடலின் நம் அண்ணன்மாரின் படகுகள் வருகின்றன. எனவே அவர் காலம் தாழ்த்து வருவராயின் நம்மைக் காணல் அரிதாகும்.
2. கருத்து: பெரும! ஞாயிறு மேற்கு மலையைச் சேர்ந் தது. தலைவியும் நின்னைக் காணாமையால் அழத்

''நிலாவின் இலங்கும்'' என்னும் அகப்பாட்டினுள்,

''சேர்ந்தனிர் செல்குவி ராயின் யாமும்
எம்வரை அளவையில் பெட்குவம்
நும்மொப் பதுவோ உரைத்திசின் எமக்கே''[1]

(அகல்-290)

என்பதும் கொள்க.

இதனாற் பயன் இல்லறம் நடத்தல் வேண்டும் என்பது.

புணர்ந்துழி யுணர்ந்த அறிமடச் சிறப்பினும் என்பது—தலைவனொடு தலைவி புணர்ந்தவழி ஆண்டுப் பொருந்திய அறிவுமடம்பட்ட சிறப்பின்கண்ணும் என்றவாறு.

அஃதாவது அல்ல குறிப்படுதல். அவ்வழியும் தோழி கூற்று நிகழும்.

''கொடுமுள் மடல்தாழைக் கூம்பவிழ்ந்த ஒண்பூ
இடையுள் இழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வம் கமழுந் தெளிகடல் தண்சேர்ப்பன்
செய்தான் தெளியாக் குறி''[2]

(ஐந்திணையைம்—49)

''இருமணல் எக்கர் அகன்கானல் சேர்ப்பன்
கடுமான் மணியரவம் என்று—கொடுங்குழை

தொடங்கினள். நின் கோவேறு கழுதையும் சுறாமீன் தாக்கியதால் உண்டான காலிற் புண் காரணமாக வேகம் மெலிந்தது. அதனால் நின்னுடன் வரும் இளையருடன் மேலும் செல்லாமல் இவ்விரவில் எம் நெய்தற் பெருங்கழி நாட்டில் தங்கிப் பின் சென்றால் குறைவது உண்டோ.

1. கருத்து: எம் இல்லில் தங்கிச் செல்வீராயின் யாங்கள் அதனை எம் மலையளவாகக் கருதி விருப்புடன் உப சரிப்போம். நுமக்கு ஒக்குமோ. கூறுமின் எமக்கு.

2. கருத்து: தாழையின் குவிதல் மலர்ந்த ஒள்ளிய பூவினது உள்ளே உள்ள சோற்றால் வெண்ணெய் திரள் ஒப்பத் தோன்றும்படியாகி எங்கும் தெய்வ மணம் போல் கமழும் கடற்சேர்ப்பன் நமக்குத் தெளிய முடியாத குறியிடத்தைச் செய்தான். அதனால் நாம் அல்லகுறிப்பட்டோம்.

புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தாள் சிறுகுடியர்
உள்ளரவம் நாணுவர் என்று''[1]

(ஐந்திணையெழு-57)

''அம்ம வாழியோ அன்னைநம் படப்பை
மின்னேர் நுடங்கிடைச் சின்னிழ லாகிய
புன்னை மென்காய் பொருசினை அரிய
வாடுவளி தூக்கிய அசைவிற் கொல்லோ
தெண்ணீர்ப் பொய்கையுள் வீழ்ந்தென
எண்ணினை யுரைமோ உணர்குவல் யானே''[2]

என வரும்.

ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும் என்பது—ஓம்படுத்துதற் பொருட்பகுதிக் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது ஒரு வழித்தணக்கும் வழி ஓம்படை கூறுதல்.

''பெருநன் றொன்றிற் பேணாரும் உளரே
ஒருநன் றுடையா ளாயினும் புரிமாண்டு
புலவிதீர வளிமதி யிலைகவர்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னல திலளே''[3]

(குறுந்-115)

எனவும்,

---

1. கருத்து: புள்ஒலியைச் சேர்ப்பனது தேரிற்பூட்டிய குதிரை மணியோசை என்று கருதிக் குறியிடம் சென்றவள்; இவ்வொலிதான் இவள் உள்ளத்தில் உள்ள வருத்தத்துக்குக் காரணமாகுமோ எனச் சுற்றத்தார் ஐயுறுவர் என்று கருதி அவ்விடம் விட்டுப் பெயர்ந்தாள்.

2. கருத்து: தோழீ! வாழி! நுடங்கு இடையுடைய நினக்கு இனிய நிழலாகிய புன்னையின் காய் காற்றடித்ததால் பொய்கையுள் வீழ்ந்ததாக அவ்வொலி கேட்டுத் தலைவனின் தேர்க்குதிரை மணியோசையென எண்ணினாயோ. இப்போது அல்ல குறிப்பட்டு வந்தாயே. உரைப்பாயாக. யான் அறிவேன்.

3. கருத்து: நன்மலை நாட! உலகில் பெரிய நன்மையைத் தமக்குச் செய்தாரை விரும்பிப் போற்றாரும் உளரோ?

"எறிந்தெமர் தாமுழுத ஈர்ங்குரல் ஏனல்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவல் நெஞ்சத்துக் கொண்டு"[1]

(ஐந்திணையம்-18)

எனவும் வரும்.

இதனுள் கிளிகடிய யாம் வாரேம் நீ மறவாதொழிதல் வேண்டு மென்றவாறு.

செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினு மென்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ அன்புதலை யடுத்த வன்புறைக் கண்ணும் என்பது—செவ்விய கடிய சொல்லினானே தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்புருகுமாறு பிரியப் பட்டவளிடத்துச் சென்று தலைவன் அன்புடைமையின் அளிப்பன் என ஆற்றுவித்த வற்புறுத்தற்கண்ணுந் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

செங்கடுமொழி என்றது—கொடிய கடுமொழியே யன்றி மனத் தினான் இனியளாகிக் கூறுங் கடுமொழி. அஃதாவது இயற் பழித்தல். அவ்வாறு இயற்பழித்தவழித் தலைவன் அன்பு சிதை வுடைத்தாயினும் என்றவாறு. அன்பு தலையடுத்த வன்புறை யாவது தலைவன் இன்றியமையான் என ஆற்றுவித்தல்.

இயற்பழித்தற்குச் செய்யுள்:—

"மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருதலை சேக்கு நாடன்நீடு

ஆனால் எம் தலைவி ஒரு சிறிதளவான நன்றியை (புணர்ச்சி) நினக்குச் செய்தாள். அதனால், அவளிடம் விருப்பம் மாட்சிமைப்பட்டு அவள் அவ்வப்போது கொள்ளும் புலவியை நீக்கி அவளைப் போற்றுவாயாக; நின்னையன்றி வேறுபற்றுக்கோடில்லை யல்லவா அவ ளுக்கு?

1. கருத்து: மரங்களை வெட்டி உழுது விதைத்த தினை விளைந்த புனத்துக்கு யாங்கள் கிளிகடிதற்பொருட்டு வாராமையே யன்றிக் கிளிகளும் இனி மறந்தும் வாரா. மலை நாடனே! இம் மடமொழியாளின் கேண்மையை நீ நெஞ்சத்து மறவாதே கொள்வாயாக.

நோய்தந் தனனே தோழி
பசலை ஆர்ந்தன குவளையுங் கண்ணே''[1]

(குறுந்-13)

வன்புறைக்குச் செய்யுள்:-

''மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே''[2]

(குறுந்-73)

''மெய்யில் தீரா மேவரு காமமொடு
எய்யாய் ஆயினும் உரைப்பல் தோழி
கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
ஆங்காங் கொழுகா யாயின் அன்னை
சிறுகிளி கடிதல் தேற்றாள் இவளெனப்

---

1. கருத்து: மாசுதீரக் கழுவப்பெற்ற யானையின் தோற்றம் போல் பெருமழையால் கழுவப் பெற்ற பெரிய சொர சொரப்புடைய பாறையின் பசிய ஓரிடத்துத் தங்கி என்னைக் கூடிய தலைவன் என்னைப் பிரிதலால் நோய் தந்தான். அதனால் என் கண்கள் பசந்தன.

2. கருத்து: தோழீ! மகிழ்நனாகிய தலைவன் மார்பையே நீ விரும்புகிறாய். அதனால் அவனொடு நின்னைச் சேர்க்காமல் பிரித்தேன் என நீ வருந்தாதே. இதுவரை கடாவ யான் மேற்கொண்ட சூழ்ச்சியாம். நன்னன் என்பானது மாமரத்தை வெட்டி ஊரில் போக விடக் கோசர் என்பார் செய்த சூழ்ச்சி போல்வதாம் இது. இப்படியும் ஒரு வன்கண்மையுடைய சூழ்ச்சி சிறிது வேண்டுவதே.

பிறர்த்தந்து நிறுக்குவ ளாயின்
உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே''[1]

(அகம்-28)

ஆற்றுவித்தற்குச் செய்யுள் :-

''குறுங்கை இரும்புலி கோள்வல் ஏற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்குகொழுநிழல் ஒளிக்கு நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாகல் எவன்கொல் அன்னாய்''[2]

(ஐங்குறு-216)

எனவும்,

''அழியல் ஆயிழை அன்புபெரி துடையன்
பழியும் அஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற் றாகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாளன் உடைப்பொருள் போலத்

---

1. கருத்து: தோழீ! தலைவன்பால் கொண்ட காமம் காரணமாக என்ன நடக்கும் என்பதை அறியவில்லை. எனினும் நான் சொல்கிறேன். நீ தலைவனைக் கூடுதலிலேயே விருப்பம் கொண்டாய். தினைப் புனத்தில் கிளிகளைக் கடியாமல் இருந்தலால் தினைக் கதிர்களைக் கிளிகள் கொய்து செல்ல வெறுந் தட்டைகளே நின்றன. அதாவது நமர் கதிர்களைக் கொய்யாமுன் தட்டைகள் தோன்றின. இனி நீ நின் மாலை அசைய எழுந்து இங்குமங்குமாகக் கிளிகளைக் கடியும் ஓசையுடன் நடமாடவில்லை யென்றால், நம் தாயானவள் நீ கிளிகடிதற்குத் தெளியமாட்டாய் எனக் கருதி வேறொருவரைக் கிளிகடிய அமர்த்தி விடுவாள். அதனால் தலைவன் மார்பை நீ யுறுதற்கு அரிதாகும்.

2. கருத்து: தோழீ! புதல் அடர்ந்த காட்டிடத்து ஆண் புலியானது பெண் யானை யீன்ற நடுங்கும் நடையுடைய கன்றைக் கொள்ள வேண்டிப் பலாமர நிழலில் ஒளித்திருக்கும்படியான நாடன் பொருட்டு கொய்து போட்ட தளிர்போல நின்மேனி வாடுதல் ஏன்?

தங்குதற் குரிய தன்றுநின்
அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே''[1]

(குறுந்-143)

எனவும்,

''பெருங்கை இருங்களிறு ஐவனம் மாந்திக்
கருங்கால் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க் கேமாப் புடைத்து''[2]

(ஐந்திணையெழு—12)

எனவும் வரும்.

ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்...வரைதல் வேண்டியும் என்பது—தலைவன் வருநெறியினது தீமையைத் தாங்கள் அறிவுற்றதனால் எய்திய கலக்கத்தானும் காவற் கடுமை வரையிறந்ததனானும் குறியிடமும் காலமுமாகத் தாங்கள் வரைந்த நிலைமையை விலக்கித் தலைவி காதல் மிகுதல் உட்படப் பிறவுந் தலைவனது நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் மிகுதியும் நோக்கித் தலைவன் மாட்டுக் கிளக்குங் கிளவியோடே கூட அத்தன்மைத்தாகிய நிலவகையினானே வரைதல் வேண்டியும் தோழி கூறும் என்றவாறு,

அவற்றுள், ஆறின்னாமை கூறியதற்குச் செய்யுள்:—

''சாரற் புனத்த பெருங்குரற் சிறுதினைப்
பேரமர் மழைக்கண் கொடிச்சி கடியவுஞ்
சோலைச் சிறுகிளி உண்ணும் நாட

1. கருத்து: தோழீ! உலகில் நிலையாமையே நிலையுடையது. ஆதலின் நின் மேனியில் பரந்த பசலை நிலையாது நீங்கும். எதுபோல வெனின் புகழை விரும்பும் நல்ல நெஞ்சுடைய ஒப்புரவாளனின் கைப் பொருள் அவனிடமே நில்லாது எல்லார்க்கும் உதவுதலின் நீங்குவது போல் நீங்கும். எதனால் எனின் நம் தலைவனும் நின்னைப் பிரிந்த துன்பம் மிகவுடையன்; அன்றியும் ஊர்ப் பழிக்கும் அஞ்சுவன். அதனால் விரைந்து வருவன் அதுவரை ஆற்றியிருப்பாயாக.

2. கருத்து: ஆண் யானையானது மலை நெற்பயிரை மேய்ந்து, கரிய அடிப்பாகத்தையுடைய மராமரங்கள் நிறைந்த சோலையில் துஞ்சும் படியான அன்புக் காட்சிகளைக் கொண்ட அழகிய மலைநாடனுடன் கொண்ட

ஆரிருள் பெருகின் வாரல்
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே''[1]

(ஐங்குறு-282)

காப்பு வரையிறந்ததற்குச் செய்யுள்:—

''பல்லோர் துஞ்ச நள்என் யாமத்து
உரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ முயறல்
கேளேம் அல்லேங் கேட்டனம் பெரும
ஓரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்குயாம்
முயங்குதொறு முயங்கும் அறனில் யாயே''[2]

(குறுந்-244)

எனவும்,

''கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்குஞ்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே''[3]

(குறுந்-69)

எனவும் வரும்.

நட்பு, அந்த நட்பைக் கொண்டவர்களுக்கு என்றும் பாதுகாவலாக அமையும் பண்பினது.

1. கருத்து: பெருத்த கரிய கண்ணையுடைய கொடிச்சியானவள் மலைச் சாரலில் உள்ள தினைப் புனத்தில் சிறுதினைக் கதிர்களைக் கொய்யாதவாறு கிளிகளைக் கடியவும் அவை உண்ணும்படியான நாடனே! நீ கொம்புடைய விலங்குகள் நடமாடும் காட்டு வழியில் மிக்க இருள் பெருகின் வாராதே.

2. கருத்து: பெரும! பலரும் தூங்கும் நடு இரவில் வலிய களிறுபோல் வந்து நீ கதவைத் தட்டி முயலும்போது அதன் ஓசையைக் கேளாதில்லை. கேட்டேம். ஆனால் உடன் உன்னைச் சேர இயலாமைக்கு வருந்தும்போது அறனில்லாத அன்னையானவள் வலைப்பட்ட மயில் தன் கொண்டை சிதையவும் தோகை மெலியவும் வருந்தியதுபோல யாங்கள் வருந்தும்படி அணைத்துக் கொண்டாள்.

3. கருத்து: சாரல் நாட! நீ நடு இரவில் வாராதே. யாங்கள் வழிக் கொடுமை நினைந்து வருந்துவேம்.

காதன் மிகுதி கூறியதற்குச் செய்யுள்:—

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"[1] (குறுந்-18)

பிறவும் என்றதனான் தலைவனைப் பழித்தலுங் கொள்க:—

"நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெருவும் நாட
வல்லைமன் றம்ம பொய்த்தல்
வல்லாய் மன்றநீ அல்லது செயலே"[2] (ஐங்குறு-287)

இது, தலைவனைப் பழித்தது.

"குன்றக் குறவன் காதல் மடமகள்
மென்தோட் கொடிச்சியைப் பெறற்கரிது தில்ல
பைம்புறப் படுகிளி யோப்பவவர்
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே"[3]
(ஐங்குறு-260)

இது, புனக்காவலினி இன்றென்றது.

கிளைகள் தோறும் தாவும் ஆண் குரங்கு தவறி வீழ்ந்து இறந்ததாகக் கைம்மை கொள்ளாத பெண் மந்தி யானது தன் குட்டியை இனத்தோடு விட்டு வந்து மலையுச்சியிற் சென்று வீழ்ந்து உயிர் துறக்கும் மலைச் சாரல் நாடன் நீ. தாவும் குரங்கே இருளில் தவறுவ தெனின் இருளின் கொடுமை எத்தகையதாகும்.

1. கருத்து: சாரல் நாட! சிறிய கொம்பில் பெரிய பழம் தொங்கினாற்போல இவள் உயிராகிய சிறிய கொம்பில் நின்பாற் கொண்ட காமமாகிய பெரும்பழம் கனிந்து ஈர்க்கின்றது. அதன் தன்மையை நின்னையன்றி யார் அறிந்தவர். ஆதலின் அவள் காமத்தைத் துய்த்தற்குரிய தகுதியுடையனாகுக.

2. கருத்து: நெடிய மலைமேல் உள்ள வருடைமானுக்குத் தினையுண்ணும் கிளிகள் அஞ்சும் படியான நாடனே! நீ நல்லன அல்லாதவற்றைச் செய்தற்கு ஆற்றலு டையையல்லையாயினும் பொய்த்தலுக்கு ஆற்ற லுடையையாவாய்.

3. கருத்து: உழுது பதப்படுத்திய புன்புலத்தில் கொடிச்சி கிளிகளைக் கடிய தினைகள் முற்றி விளைந்தன. அவை

''கொடிச்சி யின்குரல் கிளைசெத் தடுக்கத்துப்
பைங்குரல் ஏனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மாமலை நாட வரைந்தனை கொள்மே''[1]

(ஐங்குறு-289)

இது குறவரியல்பு உணர்த்தி வரைக வென்றது.

''வெறிகமழ் வெற்பன்என் மெய்ந்நீர்மை கொண்டது
அறியாள்மற் றன்னோ அணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய் வேலன்தரீஇ
வெறியோ டலம்வரும் யாய்''[2]

(ஐந்திணையைம்-20)

இது, வெறி யச்சுறுத்தியது.

''இனமீ னிருங்கழி ஓதம் உலாவ
மணிநீர் பரிக்குந் துறைவ தகுமோ
குணநீர்மை குன்றாக் கொடியன்னாள் பக்கம்
நினைநீர்மை இல்லா ஒழிவு''[3]

(திணைமொழி-44)

இஃதருளல் வேண்டுமென்றது.

கொய்யப்பட்டு வீடு சேர்க்கப்படுமாகலின் குன்றக் குறவர் காதன் மடமகளாகிய கொடிச்சியைப் பெறலரிதாகும்.

1. கருத்து: தலைவ; கொடிச்சியின் குரல் கேட்ட கிளிகள் தம் இனக் கிளியின் குரல் என்று எண்ணி தினைப் புனத்துக்கு வரவும் கூடும் என்று எண்ணி எமர் இவளைக் காவலினின்றும் நீக்குவர்; அதனால் நீ இனி இவளை வரைந்து கொள்வாயாக.

2. கருத்து. வெற்பன் என் உடம்பின் நலஇயல்பைப் புணர்ச்சிக் காலத்துக் கொண்டதை அறியாத தாயான வள் என்னை தெய்வம் வருந்தியது என்று எண்ணிக் கொண்டு வேலனை அழைத்து யாட்டையறுத்துக் குருதியைத் தூவி வெறியாடலோடு உழலுகிறாள். ஐயோ!

3. கருத்து: துறைவ! குணத் தன்மை குறையாத கொடியன்னாளாகிய தலைவி பக்கமாக மணந்து கொள்ள வேண்டும் என்னும் நினைவின் தன்மை இல்லாது ஒழியும் ஒழிவு நினக்குத் தகுமோ?

இன்னும் பிறவும் என்றதனால் தலைமகள் தன்னை யழிந்தமை கூறுதலுங் தலைவன் மாட்டு வருமிடையூறு அஞ்சுதலுங் கொள்க. அது வருமாறு:

"...
தன் எவ்வங் கூறினும் நீசெய்த அருளின்மை
என்னையு மறைத்தாள் என்தோழி அதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தான்நாணி"[1]
(கலித்-44)

இது தலைமகள் தன்னை அழிந்ததற்கண் வந்தது.

"கரைபொரு கானியாற்றங் கல்லத ரெம்முள்ளி
வருதி ராயின்
அரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி
யகன்று போக
நரையுருமே றுங்கைவேல் அஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வார லையோ"[2]

இஃது அவனூறு அஞ்சுதற்கண் வந்தது.

நாடு முதலாயின சுட்டித் தலைவன்மாட்டுத் தோன்றுங் கிளவியாவன—நீ இத்தன்மையாகிய நாட்டையுடையை, இத் தன்மையாகிய நகரையுடையை, இத் தன்மைத்தாகிய இல்லையுடையை, இத்தன்மைத்தாகிய குடிப்பிறப்பை யுடையை, இத் தன்மைத்தாகியச் சிறப்புடையை என அவற்றின் மிகுதிபடக் கூறுதல். அவை வருமாறு:

"கோழிலை வாழை" என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

---

1. கருத்து: தனக்குத் துன்பம் மிகுதியாக இருந்தாலும் நீ செய்த அருளில்லாச் செயலைக் கேட்டு யான் பிறர் முன்னிலையில் நின்னைப் பழிகூறுதற்கு நாணி எனக்கும் மறைத்து விட்டாள் என் தோழி.

2. கருத்து: அடுபுலியேறு நுமக்கு அஞ்சி அகன்று போக கரையழிக்கும் காட்டாற்றுக் கல்வழியில் நீவிர் வருவீராயின் உருமஏறு போலும் கைவேலுடைய நும்மை மலையுறை மங்கையராகிய தேவப் பெண்டிர் வவ்விச் செல்வர் என்பதற்கு யாம் அஞ்சுகிறோம். ஆதலின் வாரற்க.

"குறியா வின்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்து நாட
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய

என நாடு சுட்டி வந்தது.

"காமங் கடப்ப உள்ளம் இனைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயின்
ஓங்கித் தோன்றும் உயர்வரைக்கு
யாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ"[1]

(ஐங்குறு-237)

இஃது ஊர்பற்றி வந்தது.

"துணை புணர்ந்தெழுதரும்" என்னும் கலித்தொகைப் பாட்டினுள்,

"கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயால் மற்றுநின்
குடிமைக்கட் பெரியதோர் குற்றமாகக் கிடவாதோ"[2]

இது குடிமைபற்றி வந்தது.

"ஆய்மலர்ப் புன்னைக்கீழ் அணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயால் மற்றுநின்
வாய்மைக்கண் பெரியதோர் வஞ்சமாய்க்
கிடவாதோ"[3]

---

1. கருத்து: தலைவ! எம் காமம் செலுத்துதலால் மனம் வருந்த யாமே வந்து காண்பதோர் காலம் வாய்க்குமானால் தவறாமல் வந்து சேர்தற் பொருட்டு இதோ உயர்ந்து தோன்றும் மலைக்கு நும்மூர் எவ் விடத்துளது கூறுக.

2. கருத்து: புன்னை மரத்தின் கீழ் நீ புணர்ந்ததனால் தன் அழகையிழந்தவளை அவள் தோளினின்றும் தொடி நெகிழ்ந்ததை அறியாதவனாய்த் துறந்து போக நினைப்பாயாயின் அது நின்பிறந்த குடியின் தன்மையில் பெரியதோர் குற்றமாகக் கிடவாதோ? கூறுக.

3. கருத்து: புன்னை மரத்தின் கீழ்ப் புணர்ந்த காலத்துத் தன் அழகு தோற்றவளை அதனால் நோய்மிகும் நிலையளாய் இருக்கவும் நீ துறப்பாயானால் அது நின் வாய்மையிற் பெரியதோர் வஞ்சமாகக் கிடவாதோ

''திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
துகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயால் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ[1]
(கலித்-135)

''.,.......... ....
தாமரைக் கண்ணியைத் தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே''[2]
(கலித்-52)

பிறவுமன்ன.

ஐயச் செய்கை தாய்க் கெதிர்மறுத்துப் பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும் என்பது—தலைவிக்குப் பிறரோடு கூட்டமுண்டெனச் சொல்லி ஐயுற்றவழி அதனை மறுத்துத் தலைவி செய்த செய்கையைப் பொய்யென நீக்கிப் பிறிதோர் ஆற்றான் மெய்வழிக்கட் படுத்தினும் என்றவாறு,

அஃதாமாறு தலைவி குறிவழிச் செல்கின்றதனைக் காண்டல்.

''உரும்உரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிருள் நடுநாள்
மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி
மிடையூர் பிழியக் கண்டனென் இவளென

1. கருத்து: புன்னைக்கீழ் நின்புணர்வால் அழகு தோற்ற வளை நீர்த்துளி மல்கும் கண்ணளாகுமாறு துறப்பா யானால் அது நின் புகழ்மைக்கண் தங்கும் பெரியதோர் குற்றமாகக் கிடவாதோ.

2. கருத்து: தாமரை மாலையுடையனாய் நறுஞ்சாந்தம் பூசியவனாய் நீ தலைவி செய்த குறியிடத்து வருவாயா னால் சிறுகுடியிலுள்ளார் மலையிலிருந்து பலியுணவு பெறும் அணங்கோ என நின்னைக் கண்டஞ்சுவர்.

அலையல் வாழிவேண் டன்னைநம் படைப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே இவள்தான்
சுடரின்று தமியளும் பனிக்கும் வெருவர
மன்ற மராத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரு மதன்றலைப்
புலிக்கணத் தன்ன நாய்தொடர் விட்டு
முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்ல னாக
அஞ்சுவள் அல்லளோ இவளது செயலே''[1]

(அகம்-158)

எனவரும்.

''வேங்கை நறுமலர் வெற்பிடை யாம்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றாங்கெனைத்தும்
பாய்ந்தருவி ஆடினேம் ஆகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக் கண்தாம்''[2]

(ஐந்திணையைம்-15)

என்பதும் அது.

அவள் விலங்குறினும்...தாயிடைப் புகுப்பினும் என்பது—தலைவி காப்பு மிகுதியானுங் காதன் மிகுதியானும் நொதுமலர் வரைவினானும் தமர் வரைவுமறுத்ததினானும் வேறுபட்ட வழி

---

1. கருத்து: அன்னாய்! நடு இரவில் இவள் மலையினிழியும் மயில்போலப் பரண்மீது ஏறி இறங்கி வரக்கண்டேன் என்று கூறி இவளை அடியாதே. நம் படப்பையில் அணங்கு தான் நினைந்த உருவில் வரும். அதற்கு அஞ்சுவாள். கனவுமருட்டவும் அஞ்சுவாள். விளக்கில்லா இருளுக்கும் அஞ்சும். கூகை குழற அஞ்சிப் புகலிடம் சேரும். அதனால் இருளில் இவள் வெளியில் செல்லாள். அன்றியும் நம் தந்தையும் வீட்டில் உள்ளார். ஆக இவள் நீ நினைத்த இச்செயலைச் செய்யாள்.

2. கருத்து: மலையில் வேங்கை மலர் கொய்து அருவியில் உடல் வியர்ப்பப் பாய்ந்து ஆடினேமாக அதனால் பணிமொழியாகிய தலைவிக்குக் கண்கள் சிவந்தன.

இஃது எற்றினான் ஆயிற்று எனச் செவிலி அறிவுரை வினாஅய்க் குறிபார்க்கும் இடத்தினும், அஃதன்றி வெறியாட்டிடத்தினும் பிறர் வரைவு வந்துழியும் அவர் வரைவு மறுத்தவழியும், முன்னிலை வகையானாதல் அறத்தொடு நிலை வகையானாதல் இவ்விருவகையானுந் தலைவற்கும் தலைவிக்கும் தனக்குங் குலத்திற்கும் குற்றந்தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுப் புகுதவிடுத்தலும் என்றவாறு.

புகுதவிடுத்தலாவது நிரம்பச் சொல்லாது தோற்றுவாய் செய்தல்.

அந்நால்வகைப் பொருளினும் முன்னிலைக் கிளவி வருமாறு:-

''பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோன்
ஆண்டகை விறல்வேள் அல்லன் இவள்
பூண்தாங் கிளமுலை அணங்கி யோனே''[1]

(ஐங்குறு-250)

இது, குறிபார்த்த வழிக் கூறியது, கழங்கு முன்னிலையாக.

''அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயின்
என்பயஞ் செயுமோ வேலற்கு வெறியே''[2]

(ஐங்குறு-244)

இது, தலைவியை முன்னிலையாகக் கூறியது.

---

1. கருத்து: பொய்யிற்பட்டு மெய்யறிய மாட்டாத கழங்கே! இவளது பூண் விளங்கும் இளமுலையிற் கூடி வருத்தத்தை யுண்டுபண்ணியவன் யாவன் எனின், மயில் ஆலும் வள்ளியங் கானத்துக் கிழவோனாகிய ஆண்டகையாவான்; வெற்றியுடையவேள் அல்லன். இது மெய்யே.

2. கருத்து: தோழீ! கேட்பாயாக. நறிய தண்ணிய சோலையுடைய நாடனாகிய நெடுந்தகையின் குன்றத்தைப் பாடானாயின் வேலன் வெறியாடுதலால் என்ன பயன் விளையும்?

"நெய்தல் நறுமலர்ச் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழு மார்பன்
அருந்திறற் கடவு ளல்லன்
பெருந்துறைக் கொண்டிவள் அணங்கி யோனே"[1]

(ஐங்குறு-182)

இது, வேலனை முன்னிலையாகக் கூறியது.

"கடவுட் கற்சுனை அடைவிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே"[2]

(நற்றிணை-34)

இது, முருகனை முன்னிலையாகக் கூறியது. பிறவுமன்ன.

"அன்னை வாழிவேண் டன்னை முழங்குகடல்
திரைதரு முத்தம் வெண்மணல் இறைக்குந்

---

1. கருத்து: பெருந்துறையில் கொண்டு கூடிப் பிரிதலால் இவளை வருத்தியவன் கடவுள் அல்லன்; நெய்தல் மலரைச் செருந்தி மலரொடு கலந்து தொடுத்த மாலை கமழும் மார்பனே யாவன்.

2. கருத்து: முருகனே! சூர்மகள் குவளை மலரைக் காந்தளுடன் கட்டிச் சூடி அருவியொலிக்கேற்ப ஆடும் நாடனின் மார்பு (முயங்கியதால்) தரவந்த உடம்பு மிக்க காமநோய்தான் நீ வருத்த வந்ததன்று என்பதை அறிந்தும், வேலனானவன் இவள் நோய்க்காரணம் அறிய வேண்டி கடம்ப மாலைசூடி நீ வரவேண்டும் என வேண்ட வெறியாடு களத்துக்கு வந்தாய். நீ கடவுளாக இருப்பினும் இருக்க; பெரியமுட்டாள் நீ.

தண்ணந் துறைவன் வந்தெனப்
பொன்னினுஞ் சிறந்தன்று கண்டிசின் நுதலே''[1]

(ஐங்குறு-105)

இது, முன்னிலைப்பகுதி, நொதுமலர் வரைவுபற்றி வந்தது.

''குன்றக் குறவன் காதல் மடமகள்
அணிமயி லன்ன அசைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையு மாகில்
கொடுத்தனம் ஆயினா நன்றே
கெடுதல் ஆனாது நன்னுதல் துயரே''[2]

(ஐங்குறு-258)

இஃது, அவன் வரைவு மறுத்துழிக் கூறியது. இனி அறத் தொடுநிலைப் பகுதி எழுவகைப்படும். அவையாமாறு:—

''எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாவுதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்''

(பொருளியல்-102)

எனப் பொருளியலுட் கூறிய சூத்திரத்தானே கொள்க.

எளித்தல் என்பது—தலைவன் நம்மாட்டு எளிய னென்று கூறுதல். அதனது பயம் மகளுடைத்தாயர் தம்வழி ஒழுகுவார்க்கு மகட்கொடை வேண்டுவராதலான் எளியனென்பது கூறி அறத் தொடுநிற்கப் பெறுமென்றவாறு,

---

1. கருத்து: அன்னையே! கேட்பாயாக, அலைதரும் முத்து கள் வெண்மணலில் ஒளி வீசும்படியான தண்ணந் துறைவன் வந்தானாக இவளது நுதல் பொன்னிற மாகச் சிறப்படைந்தது காண்.

2. கருத்து: குன்றக் குறவன் அன்புக்குரிய மகளாகிய மயில்போலும் அசை நடையுடைய கொடிச்சியை பெரிய மலை நாடன் வரைந்து கொள்வானாயின்— அவனுக்கு நாம் மகட் கொடை நேர்ந்தேமாயின் நன்றாம். இன்றேல் நல்ல நெற்றியுடைய இவளது துயர் கெடாது.

''அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினுங் கேட்க
பிறிதொன் றின்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவல் நினக்கே கானல்
தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைத்துஞ் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருந்தந் தீர யாம்சிறிது
இருந்தன மாக எய்த வந்து
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின் றசைவுமிக உடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ
எனமொழிந் தனனே ஒருவன் அவற்கண்டு
இறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக் குரிய அல்ல இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம் இழுமென
நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ
காணா மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர் கென்ன நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றுமென் கட்கே''[1]

(அகம்-110)

எனவரும். அன்னை என்றது நற்றாயை.

---

1. கருத்து: அன்னையே! கானலில் தோழியர் கூட்டத்துடன் கடலாடியும் சிற்றிலிழைத்தும் சிறு சோறாக்கிக் குவித்தும் வருந்திய வருத்தம் தீர யாங்கள் சிறிதுபோது இளைப்பாறினோம். ஒருவன் இளைப்பு மிகவுடையேன் பொழுதும் போயிற்று. விருந்துண்டு இச்சிறுகுடியில் நான் தங்கினால் வரும் குறையாது என்று கூறினான்.

ஏத்தல் என்பது—தலைவனை உயர்த்துக் கூறுதல். அது மகளுடைத் தாயர் 'தலைவன் உயர்ந்தான்' என்றவழி மன மகிழ்வராகலின், அவ்வாறு கூறப்பட்டது. உயர்த்துக் கூறி அறத்தோடு நிற்கப் பெறும் என்றவாறு.

*"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி அதன்திறம்
யானுந் தெற்றென உணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி என்னும் பூசல் தோன்ற

அப்போது தலை தாழ்ந்த முகத்தினராய்ச் சற்றுப் புறம்பே சேர்ந்து மெல்லிய குரலில் இழிந்த மீன் உணவு ஆதலின் நுமக்கு ஏற்றது அல்ல என்று கூறினேம். அப்போது நாவாய்களைக் காண்போம் என்று கூறி சிற்றில் முதலிய சிதைத்து அங்கு நில்லாதுபோன தோழியர் பலருள்ளும் என்னையே குறித்த பார்வை யொடு யான் போகட்டுமா என வருந்தக்கூற, செய்க என்று யான் கூறலும் தேரின் கொடிஞ்சி பற்றி நின் றான். அக்காட்சி இன்றும் என் கண் முன் நிற்பதா யிற்று. இதை அன்னை (நற்றாய்) அறியினும் அறிக! சேரியே கேட்பினும் கேட்க. வேறு ஒன்றும் நடந்த தில்லை என்று அறியக் கூறிப் புகார்த் தெய்வம் நோக்கி நினக்குச் சூள் உரைப்பேன்—செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

* கருத்து: அன்னையே! நின் மகள் பற்றிப் பாலும் உண்ணாள் துன்பத்தால் பசந்துள்ளாள் காரணம் என் என வினவுகின்றாய். யானும் தெளிவாக உணரேன். முன்பொருநாள் மலைச் சாரலில் தோழியருடன் வேங்கைப் பூக் கொய்யச் சென்றபொழுது புலி புலி என்னும் பேரொலி தோன்ற அது கேட்டு ஒருவன் அங்கு வந்து அப்புலி சென்ற இடம் யாது எனக் கேட்டான். அவனைக் கண்டு ஒருவர் முதுகில் ஒருவர் உடல் மறைய நாணங்கொண்டு நின்றேமாக, அவன் உங்கள் வாயில் பொய்யும் உண்டோ என்று கேட்டான். பின்னர் நின் மகளின் கண்களை அடிக்கடி எதிர்நோக்கலாகப் பல முறை நோக்கி நின்று பகல் மறையும் வேளையில் சென்று மறைந்தான். அவன் மறையும் திசை நோக்கி என்னைப் பார்த்துத் தோழீ! இவன் மகனே என்றாள், அறிவுடையார்க்கு அவள் சொல்லின் அளவாக ஒரு கோட்பாடு உண்டாம்,

ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றனெ மாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்து
நின்மகள் உண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றஅக் குன்று கிழவோனே
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்
அதனள வுண்டுகோள் மதிவல் லோர்க்கே''

(அகம்-48)

இதனுள் கழுநீர் மாலையன், வெட்சிக் கண்ணியன் எனக் கூறினமையால், அவன் நாட்டிற்கும் மலைக்குந் தலைவன் என்பது படவும் ஒருகணை தெரிந்து கொண்டு புலி யாதென்ற அவனது வீரியமுங்கூறி உயர்ந்தவாறுங் காண்க.

வேட்கையுரைத்தலாவது—தலைவன் மாட்டுத் தலைவி வேட்கையும் தலைவி மாட்டுத் தலைவன் வேட்கையும் கூறுதல். வேட்கை கூறி அறத்தொடு நிற்கும் என்றவாறு.

''நின் மகளுண் கண் பன்மாணோக்கிச் சென்றோன்'' என்பது தலைவன் வேட்கை கூறியவாறாம்.

''அன்னாய் வாழிவேண் டன்னை என்தோழி
நனிநா ணுடையள் எனினும் அஞ்சும்
ஒலிவெள் ளருவி யோங்கு மலைநாடன்

மலர்ந்த மார்பிற் பாயல்
தவநனி வெய்ய நோகோ யானே''[1]

(ஐங்குறு-205)

இது தலைவி வேட்கை கூறியது.

கூறுதலாவது—தலைவியைத் தலைவற்கு கொடுக்க வேண்டுமென்பது படக் கூறுதல்.

(உ-ம்)

''வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பின் அல்லது—வாடா
எழிலும் முலையும் இரண்டிற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து''[2]

(திணைமாலை-15)

எனவரும்.

''கறிவளர் சிலம்பிற் கருவுட் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
அதுமனங் கொள்குவை அன்னையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே''[3]

(ஐங்குறு-243)

எனவும் வரும்.

---

1. கருத்து: அன்னாய்! யான் கூறுவதைக் கேள். என் தோழியானவள் மிக்க நாணம் உடையவள்; என்றாலும் நினக்கு அஞ்சுவள். அவள் மலை நாடனின் மலர்ந்த மார்பாகிய பாயலில் துஞ்சுதலிலே மிக விருப்பம் உடையள். யான் நோவேன்.

2. கருத்து: வாடுதலில்லாத சான்றோர் (தலைவன் உறவினர்) மணம் பேசிவர அவர்களை மறாமல் எதிர் கொண்டு தலைவற்கு நும்மகளை மணந்து கொடுப்பீராயின் அல்லாமல் இவள் அழகுக்கும் முலைக்கும் உலகமே பெற்றாலும் தக்க விலையாகுமோ?

3. கருத்து: அன்னையே! புதிய மலர்போலும் கருங்கண்ணுடைய இவளது நோய்க்குக் காரணம் யாதென வினவின் கடவுளை வழிபட்டு வெறியாடுதலையன்றி வேறு அறியாத வேலன் வெறியாட்டயரின் வெளிப்படும் எனக் கூறுவான். அதையே மனங்கொள்வாய் நீயும். அதுவன்று என்பதை நீ அறியாய்,

உசாவுதல் என்பது — வெறியாட்டுங் கழங்கும் இட்டுரைத்துழி வேலனோடாதல் பிறரோடாதல் தோழி உசாவுதல்.

''முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி தோன்றிய கொன்றிவள்நுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
விண்டோர் மாமலைச் சிலம்பன்
தண்டார கலமும் உண்ணுமோ பலியே''[1]

(குறுந்-362)

இது, வேலனோடு உசாவுதல்.

''இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண்ணமை தூமணி பெறூஉ நாடன்
அறிவுகாழ்க் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்மில் வருகுவை நீயெனப்
பொம்மல் ஓதி நீவி யோனே''[2]

(குறுந்-379)

இது செவிலி கேட்பத் தலைவியொடு தோழி உசாவியது. பிறவுமன்ன.

ஏதீடு தலைப்பாடு என்பது—யாதானுமோர் ஏதுவை இடையிட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல்.

---

1. கருத்து: முதுவாய் வேல! ஒன்று கேட்பதுடையேன்; சினவாதே. நீ பல்வகை நிறத்தோடு கூடிய சோற்று மடையோடு ஆட்டைக் கொன்று இவள் நெற்றியைத் தடவிக் கொடுத்துத் தெய்வத்தை வணங்கித் தெய்வத்துக்குப் பலி கொடுத்தாய். நீ கொடுத்த பலியை மலைச் சிலம்பனாகிய ஒருவன் மார்பும் உண்ணுமோ?

2. கருத்து: தோழீ! பழங்குழி தோண்டிய குறவன் கிழங்கோடு மணிகளையும் பெறும்படியான நாடன் நின் கூந்தலைத் தடவிக் கொடுத்து நீ அறிவு காழ்க் கொள்ளும்போது எம் இல்லிற்கு வருவாயாக என்றான். அவன் இப்போது எங்குள்ளானோ?

(உம்) :

"காமர் கடும்புனல் கலந்தெம் மோடாடுவாள்

....

அருமழை தரல்வேண்டிற் தருகிற்கும் பெருமையளே

(கலித்-39)

இது புனலிடை உதவினானெனத் தலைப்பாடு கூறியது.

"சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
அள்ளி அளகத்தின் மேலாய்ந்து—தெள்ளி
இதணாற் கடியொடுங்கா ஈர்ங்கடா யானை
உதணாற் கடிந்தான் உளன்"[1]

(திணைமாலை நூற்-2)

இது களிற்றிடை உதவினானெனத் தலைப்பாடு[2] கூறியது.

"அன்னாய் வாழிவேண் டன்னை என்னை
தானு மலைந்தான் எமக்குந்தழை யாயின
பொன்வீ மணிஅரும் பினவே
என்ன மரங்கொலவர் சாரல் அவ்வே"[3]

(ஐங்குறு-201)

இது தழையும் கண்ணியுந் தந்தானென்பது படக்கூறியது

உண்மை செப்பும் கிளவியாவது—பட்டாங்கு கூறுதல்.

"அல்கன் மழைபொழிந்த அகன்கண் அருவி
ஆடுகழை அடுக்கத் திழிதரு நாடன்

---

1. கருத்து: பரண் மீதிருந்து கடிய முடியாத யானையைத் தனது மொட்டம்பால் கடிந்து, நறவம் நீலம் சோபாலிகை அசோகு ஆகியவற்றை எடுத்து இவள் கூந்தலில் ஆய்ந்து சூடினான் ஒருவன் இவள் மனத் தகத்தே உள்ளான்.

2. தலைப்பாடு—தலைவனை எதிர்ப்பட்ட காரணம்.

3. கருத்து: அன்னையே! விரும்பிக் கேட்பாயாக. அவர் மலைச்சாரல் மரங்கள் பொன்போலும் மலர்களுடன் மணிபோலும் அரும்புகளையுடையனவாகும். அம் மரப் பூக்களை எந்தலைவனும் சூடினான். அம் மரங்களின் தழைகள் எமக்கும் ஆடையாயின. அம்மரங்கள் எத் தன்மையுடையன? கூறுக.

பெருவரை அன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவள்
மயங்கிதழ் மழைக்கண் கலிழும் அன்னாய்''[1]

(ஐங்கூறு-220)

இவ்வகையெல்லாம் தத்தங் குடிமைக் கேற்றவழிக் கொள்க.

வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டியும் என்பது—தமர் வரைவுடன்பட்டமையைத் தலைவற்கு உரைக்க வேண்டியும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

ஆங்கதன் றன்மையின் வன்புறை என்பது—அவ்வாறு வரைவுடம்பட்ட தன்மையினால் தலைவியை வற்புறுத்தற் கண்ணும் என்றவாறு.

''கூர்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலற முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயும்நனி வெய்யள்
எந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே''[2]

(குறுந்-51)

''அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மென்தோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும்

---

1. கருத்து: அன்னையே! இரவில் பெய்த மழை அகன்ற இடத்து அருவியாக அசையும் மூங்கில் உள்ள மலை யடுக்கத்து இழியும் நாடனது மலைபோலும் மார்பை முயங்காது கழிந்த நாளில் இவள் கருத்த கண்கள் அழா நிற்கும்.

2. கருத்து: தோழீ! சேர்ப்பனை யானும் விரும்புகிறேன். தாயும் விரும்புகிறாள். தந்தையும் நின்னை அவனுக்குக் கொடுக்க விரும்புகிறான். மேலும் இவ்வூரும் நின்னை யும் அவனோடு சேர்த்தே அலர் தூற்றுகிறது. ஆதலின் விரைவில் வரைவு நிகழும். வருந்தாதே.

பொன்போல் விறற்கவின் தொலைத்த
குன்ற நாடற் கயர்ந்தனர் மணனே''[1]

(ஐங்குறு-230)

எனவரும்.

பாங்குற வந்த நாலெட்டு வகையும் என்பது—பகுதிப்பட வந்த முப்பத்திரண்டு வகைப்பட்ட பொருண்மையும் என்றவாறு.

அவையாவன மேற்சொல்லப்பட்ட முன்னுறவுணர்தல் வகை, குறையுற வுணர்தற்கண் பெருமையிற் பெயர்த்தல், உலகுரைத் தொழித்தல், அருமையினகற்றல், பின்வாவென்றல், பேதைமை யூட்டல், முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்துரைத்தல், அஞ்சியச் சுறுத்தல், உரைத்துழிக் கூட்டம் எனச் சொல்லப்பட்ட எண் வகை மாயஞ் செப்பி வந்த கிழவனைப் பொறுத்த காரணம் குறித்தலாகிய இருவருமுள்வழி அவன் வர வுணர்தல், புணர்ந்த பின் அவன் வயின் வணங்கல், குறைநயப்பச் சேறல், குறைநயப்பு வகை, நயந்தமை கூறல், அலராமென்றல், புணர்ச்சி வேண்டிய வழிக் கூறல், பிரிவு வேண்டிய வழிக் கூறல், வேளாண் பெருநெறி வேண்டிக் கூறல், அல்ல குறிப்பட்ட வழிக் கூறல், ஓம்படை கூறல், இயற்பழித்து வற்புறுத்தல், ஆறின்னாமை கூறல், காப்பு மிகுதி கூறல், காதல் மிகுதி கூறல், அவன்வயிற் றோன்றிய கிளவி, ஐயச் செய்கை தாய்க் கெதிர் மறுத்தல், குறிபார்த்தல், விலக்கல், வெறி விலக்கல், பிறன் வரைவு மறுப்பித்தல், அவன் வரைவுடம்படுத்தல், வரைவுடம்பட்டமை தலைவற்குக் கூறல், உடம்பட்டமை தலைவிக்குக் கூறி வற்புறுத்தல் என இவை.

தாங்கருஞ் சிறப்பிற் றோழிமேன என்பது—இவை முப்பத்தி ரெண்டு பொருண்மையும் தலைவிக்கு இன்றியமையாத தோழி மேலன என்றவாறு.

நச்.

இது, முறையானே தோழிகூற்று நிகழும் இடம் பலவுந் தொகுத்துக் கூறுகின்றது.

---

1. கருத்து; தோழீ! வாழி. நம்மொடு சிறிய தினைப் புனத்துக் காவலனாக இருந்து கூடிப் பின்னர் நின்மென் தோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும் பிரிந்து பொன் போலும் அழகைத் தொலைத்த நாடனுக்கு நம்மவர் நின்னை மணந்து கொடுக்க இசைந்தனர்.

(இ-ள்): நாற்றமும், தோற்றமும், ஒழுக்கமும், உண்டியும், செய்வினை மறைப்பும், செலவும் பயில்வும்—தலைவன் பெட்ட வாயில் பெற்று இரவு வலியுற்று முன்னுறு புணர்ச்சியை உரைப் பின் இன்னது நிகழுமென்று அறியாது அஞ்சிக் கரந்து மதியுடம் படுப்பத் தோழி மதியுடம் படுங்கால் அவள் ஆராயும் ஆராய்ச்சி யெல்லாம் நாட்டமாம். அஃது எட்டாம். அவற்றுண் முன்னுறு புணர்ச்சியை உணர்தற்குக் காரணம் எழுவகைய, அவை நாற்ற முதலிய ஏழும்.

நாற்றமாவது, ஓதியும் நுதலும் பேதைப் பருவத்துக்குத் தக நாறாது தலைவன் கூட்டத்தான் மான்மதச் சாந்து முதலியன வும் பல பூக்களும் விரவி நாறுதல்.

தோற்றமாவது, நீண்டும் பிறழ்ந்தும் பிள்ளைப் பருவத்து வெள்ளை நோக்கின்றி உள்ளொன்று கொள்ள நோக்குங் கண்ணும், தந்நிலை திரிந்து துணைத்து மெல்கிப் பணைத்துக் காட்டுந் தோளும் முலையுமென்ற இன்னோரன்ன.

ஒழுக்கமாவது, பண்ணையாயத்தோடு முற்றிலான் மணற் கொழித்துச் சோறமைத்தன் முதலியன முனிந்த குறிப்பினளாய்ப் பெண்டன்மைக்கு ஏற்ப ஒழுகுதல்.

உண்டியாவது, பண்டு, பான் முதலிய கொண்டு ஒறுத்து ஊட்ட உண்டு வருகின்றாள், இப்பொழுது ஆசாரமும் நாணுங் காதலும் மீதூர அதன்மேல் உவப்பு ஆண்டு இன்றி மிக ஒறுத்த உள்ளத்தளாதல்.

செய்வினை மறைத்தலாவது, முன்பு போலாது இக்காலத்து நினைவுஞ் செயலுந் தலைவனோடு பட்டனவே யாகலான் அவை பிறர்க்குப் புலனாகாமை மறைத்தல். அஃது ஆயத்தோடு கூடாது இடந்தலைப் பாட்டிற்கு ஏதுவாக நீங்கி நிற்றலாம்.

செலவாவது, பண்டுபோல் வேண்டியவாறு நடவாது சீர் பெற நடந்து ஓரிடத்துச் சேறல்.

பயில்வாவது, செவிலி முலையிடத்துத் துயில் வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துப் பயிறல். இன்—சாரியை.

புணர்ச்சி எதிர்ப்பாடு: எதிர்ப்பாட்டுப் புணர்ச்சியென மாறுக. அஃது கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவருந் தமிய ராய் எதிர்ப்பட்டுப் புணரும் புணர்ச்சி. இவ்வொழுக்கம் பாங்கற் கூட்டத்திற்கு ஏதுவாகா.

உள்ளுறுத்து வரூஉம் உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை– அப்புணர்ச்சி யெதிர்ப்பாடு நிகழ்ந்ததனைத் தோழி தன்னுள் ளத்துள்ளே வினாவி வருகின்ற ஐயவுணர்வினை அவ்வேழனா னுந்தெளிந்து புணர்ச்சி உண்டென்பதனை உணர்ந்த பின்றை:

இன்னதும் இன்னதுமாகிய ஏழென்க. அங்ஙனந் துணிந்த பின்னல்லது தலைவி மாட்டுத் தோழி சொன்னிகழ்த்தாளென் றற்குப் 'பின்றை' என்றார்.

(உ-ம்)

''காம்பிவர் தோளுங் கருமதர் மழைக்கணும்
வீங்கிள முலையும் வேறுபட் டனவே
தாங்கரு நாற்றந் தலைத்தலை சிறந்து
பூங்கொடிக் கிவர்ந்த புகற்சியென வாங்கிற்
பகலுங் கங்குலு மகலா தொழுகுமே
நன்றி யளவைத் தன்றிது
எவன்கொன் மற்றிவட் கெய்திய வாறே''[1]

இதனுள் நாற்றமுந் தோற்றமுஞ் செலவும் வந்தன.

''கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலு
நுண்வியர் பொடித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோண் மடந்தை
யாங்கா யினள்கொ லென்னுமென் னெஞ்சே''[2]
(சிற்றெட்டகம்)

''தெய்வத்தி னாயதுகொ றெண்ணீர் புடையுடுத்த
வையத்து மக்களி னாயதுகொ—ஐயவுற்று

1. கருத்து: தனக்குள் சொல்லியது. இவள் தோளும் கண்ணும் முலையும் முன்னிலும் இப்போது வேறு பட்டன. தடுத்தற்கரிய நறுமணமும் மேலும் மேலும் சிறந்து காண, பூங்கொடிக்குப் படர்ந்து செல்லும் விருப்புடையாள்போல ஆங்குப் பகலும் இரவும் அகலாது செல்லும். இவளிடம் வந்த நல்லனவெல்லாம் முன்னர் இருந்த அளவினவல்ல. இவளுக்கு எய்திய வகைகள் யாவை?

2. கருத்து; பக்கம் 292-ல் காண்க.

வண்டார்பூங் கோதை வரிவளைக்கை வாணுதலாள்
பண்டைய ளல்லள் படி''[1]

இவையும் அவை.

''ஏனல் காவ லிவளு மல்லண்
மான்வழி வருகுவ னிவனு மல்ல
னரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
வெம்மு னாணுநர் போலத் தம்முண்
மதுமறந் துண்டோர் மகிழ்ச்சி போல
வுள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே''[2]

இது புணர்ச்சி உணர்ந்தது.

''இவள்வயிற் செலினே யிவற்குடம்பு வறிதே
யிவன்வயிற் செலினே யிவட்கு மற்றே
காக்கை யிருகணி னொருமணி போலக்
குன்றுகெழு நாடற்குங் கொடிச்சிக்கு
மொன்றுபோன் மன்னிய சென்றுவா ழுயிரே''[3]

இதுவும் அது.

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்-அங்ஙனம் உணர்ந்த பின் தோழி தலைவியுடன் ஆராயுங்காற் றன்மனத்து நிகழ்ந்தனவற்றை

---

1. கருத்து : வண்டொலிக்கும் பூமாலையும் வரிவளைக் கையும் திருநுதலையும் உடைய இவள் பண்டைத் தன்மையுடையள் அல்லள். இம்மாற்றம் தெய்வத்தான் ஆயதோ அன்றி உலகத்து மக்களான் ஆயதோ?

2. கருத்து: பக்கம் 299-ல் காண்க.

3. கருத்து: இவளை ஆராய நம் எண்ணம் சென்றால் இவனுக்கு உடம்பு உயிர்இன்றி வறிது போலாகின்றது. இவனை ஆராய நம் எண்ணம் சென்றால் இவள் உடம்பு வறிதாகின்றது. காக்கையின் இரு கண்களுக்கும் மணி ஒன்றானதுபோல குன்ற நாடற்கும் இக் கொடிச்சிக்கும் இரண்டுடலினும் சென்று வாழும் உயிர் ஒன்றாகப் பொருந்தியது.

மறைத்துக் கூறவேண்டுதலில் உண்மைப் பொருளானும் பொய்ப் பொருளானும் விராவிவரினும் அவட்குக் குற்றேவல் செய்யுந் தன்மையில் தப்பாதவாற்றான் வேறு பல்கவர்பொருள் படக்கூறி ஆராயும் ஆராய்ச்சிக் கண்ணும்:

நாணால் இறந்து படாமற் கூறுதற்கு 'வழிநிலை பிழையாது' என்றார்.

பிறைதொழுவா மெனவும், கணை குளித்த புண்கூர் யானை கண்டனெனெனவும், தன் பெருமைக்கு ஏலாத சிறுசொற் கூறிக் குறைவுற்று நிற்கின்றான் ஒருவனுளன் அவனை நீயுங் காண்டல் வேண்டுமெனவும், அவன் என்னைத் தழுவிக் கொண்டு குறை கூறவும் நான் மறுத்து நின்றேனென்றாற் போலவும் மெய்யும் பொய்யும் விராயும் பிறவாறாகவுங் கூறுவன பல்வேறு கவர் பொருளாம்.

(உ-ம்)

''முன்னுந் தொழத்தோன்றி முன்வெயிற்றா யத்திசையே
யின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்—மன்னும்
பொருகளிமால் யானைப் புகார்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை''[1]

இது பண்டு கூறியவாறு கூறலின் மெய்யும், பிறை தொழாமை அறிந்து கூறலிற் பொய்யுமாய் வழிநிலை பிழையாத கவர்பொருளாயிற்று.

''பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற்—றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணா
யுதிர முடைத்திதன் கோடு''[2]

(சிற்றெட்டகம்)

---

1. கருத்து: புகார் நகரத்துக் கிள்ளி வளவனது பூண் போலப் பெருகும் ஒளியுடைய பிறையே முன்னம் இவள் தொழுமாறு தோன்றினாய். ஆனால் இனிமேல் இவள் தொழத் தோன்றுவாயானால் தீதாக முடியும் அறிக. (தீது என்றது கற்புக்கெடும் என்பதாம்)

2. கருத்து : திண்டிக் கதிரனது பழையனூர் நீலமலர் போலும் கண்ணுடைய தோழீ! ஒரு நாள் பகலில் இத் தினைப் புனத்தின்கண் இக் களிற்றைக் கண்டேன்.

இது நடுங்க நாட்டம். இஃது இறந்துபாடு பயத்தலின் கந்தருவத்திற்கு அமையாது.

"தொய்யில் வனமுலையுந் தோளுங் கவினெய்தித்
தெய்வங் கமழுமா லைம்பாலு—மையுறுவல்
பொன்னங் கொடி மருங்குற் பூங்கயற் கண்ணினாய்க்
கென்னை யிதுவந்த வாறு"

என வழிநிலை பிழையாமற் கவர்பொருளாக நெறிபடு நாட்டம் நிகழ்ந்தவழித் தலைவி சுனையாடினேற்கு இங்ஙனம் ஆயிற்றென்னும். அது கேட்டுத் தோழி, யானும் ஆடிக் காண்பல் என்னும்.

(உ-ம்)

*"பையுண் மாலைப் பழுமரம் படரிய
நொவ்வுப்பறை வாவ லோன்சிற கேய்க்கும்
மடிசெவிக் குழவி தழீஇப் பெயர்தந்
திடுகுகவுண் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை மிளிரக் குத்தி வான்கேழ்
உருவ வெண்கோடு யக்கொண்டு கழியுங்
கடுங்கண் யானை காலுற வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
பேஎ நாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை
தோளா ரெல்வளை தெளிர்ப்ப நின்போல்

இப்போது இது குருதி படிந்த கொம்பினையுடையதாயிற்று.

* கருத்து: கொடிய சிங்கத்துக்கு அஞ்சி வெளவால் சிறகு போலும் மடிந்த காதுகளையுடைய குட்டியானையைத் தழுவிப் பெண் யானையாது வெருவியோட ஆண் யானையானது தன் கொம்பால் சந்தன மரத்தின் அடிப்பாகத்தைக் குத்தி, அக் கொம்பைப் பிடுங்கியோடும்போது தன் காலால் ஏற்றுதலின் கோவா ஆர (சந்தன) மரமானது விழுந்து ஊற அதனால் குளிர்ந்த சுனையில், வேல் உடைய முருகனது திருச்சீரலைவாயில் மேகம் கண்டு மகிழ்ந்த மயில்போலும் அழகை அதிற் குளிப்பதால் பெறுவதுண்டெனின் நின்போல யானும் வளைகள் ஒலிக்க ஆடிப்பார்ப்பேன்.

யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த சுடரிலை நெடுவேற்
றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் கலித்த
வொண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே''

எனவரும்.

''நெருந லெல்லை யேனற் றோன்றித்
திருமணி யொளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுந் தோற்ற முறழ்கொள
விரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றிச்
சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண்
குளிர்கொ டட்டை மதனில புடையாச்
சூரர மகளிரி னின்ற நீமற்
றியாரை யோவெம் மணங்கியோ யுண்கெனச்
சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டிகுபெயன் மண்ணின் ஞெகிழ்பஞ ருற்றவென்
னுள்ளவ னறித லஞ்சி யுள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ
வெரூஉமான் பிணையி னொரீஇ நின்ற
வென்னுரத் தகைமையிற் பெயர்த்துப்பிறி தென்வயிற்
சொல்ல வல்லிற்று மிலனே யல்லாந்
தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தோ னின்றுந்
தோலா வாறிலை தோழிநாஞ் சென்மோ
சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றாதலு மறியா னேசற்
றென்குறைப் புறனிலை முயலு
மண்க ணாளனை நகுகம் யாமே''[1]

(அகம்-32)

---

1. கருத்து: தோழீ! அணிகலன் அணிந்த ஒருவன் வந்து தன் அரசத் தோற்றத்துக்கு மாறாக இரவுலன்போல் பணிந்த சொற்களைச் சொல்லி, ''சூரர மகளிர்போல் நின்று என்னை வருத்தியவளே நீ யார்? உன்னை

''எழாஅ வாகலி னெழினலந் தொலைய
வழாஅ தீமோ நொதுமலர் தலையே
யேனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்க
ணல்ல பெருந்தோ ளோயே கொல்ல
னெறிபொற் பிதிரிற் சிறுபல தாஅய்
வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி
மயிலறி பறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே''[1]

(நற்றிணை-13)

இது, தலைவி வேறுபாடு கண்டு ஆராயுந் தோழி தனது ஆராய்ச்சியை மறைத்துக் கூறியது. 'நாட்டத்தானும்' என்னும் உம்மை முற்று, நாட்டமெல்லாந் தழீஇயினமையின். ஆறனுருபு இடப் பொருட்டாம். அஃது இடமாக வருகின்ற எட்டனையும் இடத்தியல் பொருளாக உரைக்கவே அவளை நாடுகின்ற காலமும் மேல் வருகின்ற எட்டனையுந் தலைவற்கு உரைக்குங் காலமும் ஒருங்கு நிகழுமென்பதாம். இங்ஙனம் நாடி மதியுடம் படுக்குந்துணையுந் தலைவற்கு இக்குறை முடிப்பல் என்னாது ஒழுகும்.

''நுகர்வேன்'' என்று கூறி அணைத்தானாக, அவன்பால் நெகிழ்ந்த உள்ளத்தை அவன் அறிதலை அஞ்சி மனசில்லாமலே கடிய சொற்களைக் கூறி விலகி நின்ற என் நிலையைக் கண்டு, தன் காதலை உள்ளடக்கிக் கொண்டு பிறிதொரு சொல்லும் சொல்ல வலியில்லாமல் வருந்தி இனத்திலிருந்து நீங்கும் களிறுபோல் மீண்டான். அவன் இன்றும் வந்து நம்மால் தோல்வியடையாமல் இரான். அத் தலைவனைப் பழித்து மகிழ்வோம் வா.

1. கருத்து; சிவந்த அரிகள் பரந்த கருங் கண்களையும் பெருந்தோள்களையும் உடைய தோழீ! கொல்லன் உலைக் களத்தில் காய்ச்சிய இரும்பையடிக்கும்போது பிதிரும் நெருப்புப் பொறிகள்போல வேங்கை மலர்கள் உதிரும் உயர்ந்த மலையில் கட்டிய கூட்டிலிருந்து கொண்டே மயில் பார்ப்பதை அறியாவாய்க் கிளிகள் தினைக் கதிர்களைக் கொய்தலை நீ கடிய எழாதிருந்தாய். அது போகட்டும். இனி மற்றவர் எதிரில் நின் அழகு தொலையுமாறு அழாதே.

குறையுறற்கு எதிரிய கிழவனை மறையுறப் பெருமையிற் பெயர்ப்பினும்—இரவு வலியுற்றுக் குறைகூறத் தொடங்கிய தலைவனைத் தோழி தான் இவ்வொழுகலாறு அறிந்தும் அறிந்திலள் போலத் தலைவன் பெருமைகூறி அவன் குறிப்பினை மாற்றினும்:

தான் அறிந்ததனை மறைத்துச் கூறுதலன்றி அன்பின்மை ஒருதலையாக உடையளல்லள்.

(உ-ம்)

''கல்லோங்கு சாரற் கடிபுனங் காத்தோம்பு
நல்கூர்ந்தார் மாட்டு நயந்தொழுகித்—தொல்வந்த
வான்றோய் குடிக்கு வடுச்செய்த றக்கதோ
தேன்றோய்பூங் கண்ணியீர் நீர்''[1]

''மறுவொடு பட்டன மாமலை நாட
சிறுகுடியோர் செய்வன பேணார்—சிறுகுடிக்கு
மூதான் புறத்திட்ட சூடேபோ னில்லாதே
தாதாடு மார்ப பழி''[2]

''தகைமாண் சிறப்பிற் சான்றோர்க் கொத்த
வகையமை வனப்பினை யாகலி னுலகமொடு
பாற்படற் பாலை மன்னோ காப்புடுத்
தோங்குய ரடுக்கத்துச் சாந்துவளர் நனந்தலை
நெடுவரை மருங்கிற் குடிமை சான்றோ
ரின்னா ரென்னா தின்பம் வெஃகிப்

1. கருத்து: தேன்தோய் பூமாலையுடையீர்! நீவிர் புனங் காக்கும் ஏழையரிடத்து குறைநயந்து இரந்து நுமது பழைமையான குடிக்குக் குற்றத்தை விளைவிப்பது தக்கதோ?

2. கருத்து: மாமலை நாட! சிறுகுடியிலுள்ளோர் குற்றத் தொடுபட்ட செயல்கள் செய்வதை விரும்ப மாட்டார். நீயோவெனில் முதிய பசுவின் முதுகில் இட்ட சூடு மறையாமல் இருப்பதுபோலச் சிறு குடிக்கு நிலைக்குமாறு செய்த பழி நின்னைச் சார்ந்ததேயாகும்.

பின்னிலை முயற்சியின் வருந்தினு
நும்மோ ரன்னோர்க்குத் தகுவதோ வன்றே''[1]

எனவரும்.

''இவளே, கான னண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்கவுள் புக்கு
மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதன் மகனே
நிணச்சுறா வறுத்த வுணக்கல்வேண்டி
யினப்பு ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ வன்றே
யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே''[2]

(நற்றிணை-45)

இதுவும் அது.

உலகு உரைத்து ஒழிப்பினும்—அவ்வொழுக்கம் அறியாள் போற் கரந்த தோழி உலகத்தாரைப்போல் வரைந்து கொள்ளெனக் கூறித் தலைவனை நீக்கினும்

(உ-ம்):

''கோடீ ரெல்வளைக் கொழுமணிக் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறாப் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ''[3]

(ஐங்குறு-196)

---

1. கருத்து: சிறந்த சான்றோர்க்கமைந்த வகை மாண்டவனப்புடையையாதலின் நீ உயர்ந்தோரிடமாக அமைக. மூங்கிலும் பக்கமலைகளும் சந்தனம் வளரும் சாரலையும் உடைய மலையிடத்து குடிப்பிறப்புடையோர் இன்பம் ஒன்றையே விரும்பி விரும்படுவார். இன்ன குலத்தினர் என்பதும் கருதாமல் இரந்து பின் நிற்கும் முயற்சியால் வருந்தினாலும் நும்போல்வார்க்கு அவ்வாறு பின்னிலை இரந்து நிற்பது தகுவது அன்று.

2. கருத்து: பக்கம் 293-ல் காண்க.

3. கருத்து; தெளிந்த கழியிடத்து இறால்மீன் படும் கடற்

அருமையின் அகற்சியும்—அவை கேட்டுப் பிற்றை ஞான்றும் வந்தவன்மாட்டுச் சிறிது நெஞ்சு நெகிழ்ந்த தோழி அங்ஙனங் கூறாது இவள் அரியளெனக் கூறுதலும்.

இருவருமுள்வழி யவன் வரவுணர்தலின் இருவருள்ளமும் உணர்ந்து அங்ஙனம் கூறினாள்.

''நெருநலு முன்னா ளெல்லையு மொருசிறைப்
புதுவை யாகலிற் கிளத்த னாணி
நேரிறை வளைத்தோ ணின்றோழி செய்த
வாருயிர் வருத்தங் களையா யோவென
வெற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகி னமலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரு
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே''[1]

(பொருளியல்)

''தழையொடு தண்கண்ணி தன்மையாற் கட்டி
விழையவுங் கூடுமோ வெற்ப—விழையார்ந்து
இலங்கருவி பொன்கொழிக்கு மீர்ங்குன்ற நாட
குலங்கருதி வாழ்வார் மகள்''[2]

அவள் அறிவுறுத்துப் பின்வர என்றலும்—தலைவனை நோக்கி நீ காதலித்தவட்கு நீயே சென்று அறிவித்துப் பின்னர் என் மாட்டு வருகவென்றலும்,

'அவன் அறிவுறுத்து' என்று பாடமோதுவாரும் உளர்.

சேர்ப்பனே! மடவரலைக் கூட விரும்புவாயாயின் மணந்து கொண்டு செல்வாயாக.

1. கருத்து: பக்கம் 294-ல் அடிக்குறிப்பிற் காண்க.

2. கருத்து: பலராலும் விழைவு பொருந்தி விளங்கும் அருவியானது பொன்னைக் கொழித்து வரும் குன்ற நாட! குலப் பெருமையையே கருதி வாழ்வார் மகளைத் தழையுடையும் தண்ணிய மாலையும் கட்டிவந்து கூட விரும்பவும் ஆகுமோ?

(உ-ம்):

"தன்னையுந் தானாணுஞ் சாயலாட் கீதுரைப்பி
னென்னையு நாணப் படுங்கண்டாய்—மன்னிய
வேயேய்மென் றோளிக்கு வேறா யினியொருநாள்
நீயே யுரைத்து விடு"[1]

இது நீயே யுரையென்றது.

"நாள்வேங்கை பொன்சொரியு நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடிய ரென்னைமார்—
கோள்வேங்கை
யன்னையா னீயு மருந்தழ்யா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது"[2]
(திணை-நூற்-20)

இது கையுறை மறுத்துப் பின்வருக என்றது.

இவை ஒரு கூற்றாக வருவன வுளவேற் காண்க.

பேதைமை ஊட்டலும்—அங்ஙனம் பின்வருக வென்றுழி முன் வந்தானை அறியாமை ஏற்றிக் கூறலும், தலைவியையும் அங்ஙனம் அறியாமை யேற்றிக் கூறலும்:

(உ-ம்)

"நெடுந்தேர் கடாய்த் தமியராய் நின்று
கடுங்களிறு காணிரோ வென்றீர்—கொடுங்குழையார்
யானை யதருள்ளி நிற்பரோ தம்புனத்து
ஏனற்கிளி கடிகு வார்"[3]

"வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மகளிரேஞ்

1. கருத்து: தன் தமையனுக்குத் தான் நாணப்படுவாள்; அப்படிப்பட்டவள் தன் ஒழுக்கம் வெளிப்பட்டது என்று எனக்கும் என்னைக் காணும்போது நாணப்படுவாள். அதனால் நின் எண்ணத்தை நீயே சென்று உரைப்பாயாக.

2. கருத்து: பக்கம் 295-ல் காண்க.

3. கருத்து: பக்கம் 299-ல் காண்க,

சோர்ந்த குருதி யொழுகமற் றிப்புனத்திற்
போந்தில தைய களிறு''[1]

(திணை-ஐம்-8)

இவை தலைவனைப் பேதைமை ஊட்டின.

''நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வெட்டி—யெறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு''[2]

(திணை மாலை-24)

இது தலைவியைப் பேதைமை யூட்டியது. 'இளையள் விளைவிலள்' என்பதூஉம் இதன்கண் அடங்கும்.

''புன்றலை மந்திக் கல்லா வன்மறழ்
குன்றுழை நண்ணிய முன்றிற் போகா
தெரியகைந் தன்ன வீததை யிணர
வேங்கையம் படுசினைப் பொருந்திக் கைய
தேம்பெய் தீம்பால் வெளவலிற் கொடிச்சி
யெழுதெழில் சிதைய வழுத கண்ணே
தேர்வண் சோழர் குடந்தை வாயின்
மாதயங் கிடங்கி னீரிய மலர்ந்த
பெயலுறு நீலம் போன்றன விரலே
பாஅ யவ்வயி றலைத்தலி னானா
தோடுமழை தவழுங் கோடுயர் பொதியி
னோங்கிருஞ் சிலம்பிற் பூத்த
காந்தளங் கொழுமுகை போன்றன சிவந்தே''[3]

(நற்றிணை-379)

முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்து உரைத்தலும்—அங்ஙனம் பேதைமை யூட்டியவழி இவள் இக்குறை முடிப்பளென்று இரந்து

---

1. கருத்து: பக்கம் 298-ல் காண்க.
2. கருத்து: வெறும் புதரை வெட்டுவதுபோல தகரம் வகுளம் எனும் இவற்றை வெட்டிச் செந்தினை விதைப்பார் தங்கையானவள் பிறர் நோய்க்காக நொந்து வருந்துவளோ-நோக்குவாயாக, தோழீ.
3. பக்கம் 296-ல் காண்க.

ஒழுகினேற்கு இவள் புணர்ச்சி யறிந்திலள்போற் கூறினாளென ஆற்றானாயவனை யான் அப்புணர்ச்சி நிகழ்ந்தமை அறிவலென்று கூறி வருத்தந் தீர்த்தலும்.

(உ-ம்)

''நறுந்தண் கூந்தற் குறுந்தொடி மடந்தை
சிறுமுதுக் குறைவி யாயினள் பெரிதென
நின்னெதிர் கிளத்தலு மஞ்சுவ லெனக்கே
நின்னுயி ரன்ன ளாயினுந்
தன்னுறு விழுமங் காத்தலானே''[1]

நின்னெதிர் கிளத்தல் அஞ்சுவல் நீ அவட்கு உரைத்தியெனக் கருதியென்றலிற் புணர்ச்சி யுணர்ந்தமை கூறினாள்.

அஞ்சி அச்சு உறுத்தலும்—அங்ஙனம் ஆற்றுவித்துங் கடிது குறை முடியாமையைக் கருதுந் தோழி குரவரைத் தான் அஞ்சித் தலைவியும் அவரை அஞ்சுவளெனக் கூறலும்.

அஞ்சுதல்—அச்சென்றாயிற்று. இவ்வச்சங் கூறவே அவன் ஆற்றும்.

(உ-ம்)

''யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்னபால் வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோற் பெருங்குரற்
படுகிளி கடிகஞ் சேறு மடுபோ
ரெஃகுவிளங்கு தடக்கை மலயன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே[2]

(குறுந்—198)

இஃது யாயை அஞ்சியது.

---

1. கருத்து: ஐய! மடந்தையானவள் நின்னால் தானடைந்த துன்பத்தை எனக்கு மறைத்தாள். அதனால் நின் உயிரன்னாளாயினும் அவள் பேரறிவினள் ஆயினாள் என்று நின் எதிர்வந்து கூற யான் அஞ்சுவேன். நீயே அவளிடம் கூறுக.

2. மலையன் கானத்துச் சந்தனம் கமழும் மார்பனே! எம்

"யானை யுழலு மணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரே
மேனலு ளைய வருதன்மற் றென்னைகொல்
காணினுங் காய்வ ரெமர்"[1] (திணை-ஐம்-6)

இது தமரை அஞ்சிக் கூறியது.

உரைத்துழிக் கூட்டமோடு எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்—ஆயத்தினீங்கித் தன்னொடு நின்ற தலைவியை அவனோடு கூட்ட வேண்டி அவளினீங்கித் தலைவற்கு இன்னுழி எதிர்ப்படுதியென உரைத்தவிடத்துக் கூடுங் கூட்டத்தோடே ஒழியாமற் கிளந்த எண்வகைக் கிளவியும்.

"நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பினென்
நின்குறி வந்தனெ னியறேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வல்கலும்
ஆரல் அருந்திய வயிற்ற
நாரை மிதிக்கு மென்மக ளுதலே"[2]
(குறுந்-114)

'வந்தனென்' என்றும் 'என்மகள்' என்றும் ஒருமை கூறிச் 'செல்கம்' என்ற உளப்பாட்டுப் பன்மையால் தலைவி வரவுங் கூறி இடத்துய்த்தவாறு முணர்த்தினாள். 'செலவியங் கொண்மோ' என்றது நீயே அவளைப் போகவிடுவாய் என்றதாம். நாட்டந் தன் மனத்து நிகழாநிற்றலும் அவன் மனத்துக் குறையுணர்த்துதல் நிகழாநிற்றலு மென்னும் இரண்டினையும் எஞ்சாமற் றழீஇ நிற்கும் இவ்வெட்டு மென்றற்கு 'எஞ்சாது' என்றார்.

வந்த கிழவனை மாயஞ் செப்பிப் பொறுத்த காரணங் குறித்த காலையும்—தன் முன்னர் வந்துநின்ற தலைவனைத் தோழி எதிர்ப்பட்டு நின்றேயும் வாராதான்போல மாயமேற்றி அதனைப் பொறுத்த காரணங் குறிப்பினாற் கொள்ளக் கூறுங் காலைக் கண்ணும்.

தாயும் இவ்விடத்து அடிக்கடி வரும்; யாங்களும் கரித் துண்டுகளை எடுக்கும் வளைந்தகோல் போல் பால் முற்று வளைந்த தினைக் கதிர்களைக் கொய்யாதபடிக் கிளிகளைக் கடியச் சென்று விடுவோம். அதனால் அடிக்கடி வரும் இவ்விடம் நீ இனி வாராதே.

1. கருத்து: பக்கம் 297-ல் காண்க.
2. கருத்து: பக்கம் 304-ல் காண்க.

காரணமாவது நீ அரியை யாதலின் இவள் ஆற்றாளா மென்று எதிர்கொள்கின்றோமென்றல். கூட்டம் நிகழ்ந்தபின் தோழி இவ்வாறு கூறுதற்கு உரியளென்று அதன்பின் வைத்தார். இஃது 'அவன் வரவை விரும்பியது' வரைவு கடாயதன்று.

(உ-ம்)

"நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
யுப்பொ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ
பெருமை யென்பது கெடுமோ வொருநாண்
மண்ணா முத்த மரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்துநும்
வண்ண மெவனோ வென்றனிர் செலினே"[1]

(அகம்-30)

இதனால் தம்மால் இடையூறெய்தி வருந்துகின்றானை ஒரு நாள் வந்திலிரென மாயஞ் செப்பியவாறும், நீர் வாராமையின் வண்ணம் வேறுபடுமென ஏற்றுக்கோடுமெனக் காரணங் கூறிய வாறும் காண்க. தம்மேல் தவறின்றாகக் கூறுங்காலத்து இது கூறுவரென்றற்குக் 'குறித்த காலை' என்றார்.

புணர்ந்தபின் அவன் வயின் வணங்கற் கண்ணும்—அக்கூட் டத்தின் பின் முற்காலத்துப் பணிந்து பின்னின்றோனைத் தோழி தானே பணிந்தொழுகுமிடத்தும்.

---

1. கருத்து: துறைவ! ஒரு நாள் கடற்கரைச் சோலையில் வந்து நும் உடல்நலம் எத்தகையது என வினவிச் செல்லின் நின் பெருமை என்பது கெடுமோ?—தலைவன் பால் தோழி கூறியது.

(உ—ம்)

''இவளே, நின்சொற் கொண்ட வென்சொற் றேறிப்
பசுநனை ஞாழற் பல்கிளை யொருசிறைப்
புதுநல னிழந்து புலம்புமா ருடையள்
உதுக்காண் டெய்ய வுள்ளல் வேண்டு
நிலவு மிருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானனுந் தோன்று
மடறாழ் பெண்ணையெஞ் சிறுநல் லூரே''[1]
(குறுந்-81)

'வாங்கு கோனெல்' என்னுங் குறிஞ்சிக்கலி (50)யுள்,

''அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த
வுரவுவின் மேலசைத்த கையை யொராங்கு
நிரைவளை முன்கையென் றோழியை நோக்கிப்
படிகிளி பாயும் பசுங்குர லேனல்
கடிதன் மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டும்.''[2] (கலி-50)

எனவும்,

''கடுமா கடவுறூஉங் கோல்போ லெனைத்துங்
கொடுமையிலை யாவ தறிந்து மடுப்பல்
வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி

---

1. கருத்து: தலைவ! இவள் நீ என்னிடம் சொன்ன குறைநயப்புச் சொற்களை யான் ஏற்று இவனிடம் கூற அதனைத் தெளிந்து வந்து தன் புதிய நலனை நின்னிடம் இழந்து நீ பிரியத் தனிமை கொண்டாள். நிலவு போலும் மணலும் இருள் போலும் கானலும் கொண்ட எம் நல் ஊர் இதோ. அடிக்கடி நினைக.

2. கருத்து: தலைவ! வில்மேல் வைத்த கையுடையையாய் வந்து என் தோழியைப் பார்த்து அவளைத் தினைப் புனத்துக் கதிர்களைக் கொய்யாதபடிக் கிளிகளை ஓட்டுதலை மறக்கச் செய்தாய் என்றதால் இவள் நீ மறவாமல் நினைத்துப் போற்றுதலை விரும்பு வாளானாள்.

யுழையிற் பிரியிற் பிரியு
மிழையணி யல்குலென் றோழியது கவினே''[1]
(கலி-50)

எனவும் வரும். இத்துணையும் ஓர் கூட்டங் கூறினார்.

குறைந்து அவட் படரினும்—தலைவன் இரந்து பின்னின் றமை கண்டு தோழி மனம் நெகிழ்ந்து தான் குறைந்து தலைவி யிடத்தே சென்று குறை கூறினும்.

(உ-ம்)

''வளையணி முன்கை வாலெயிற் றின்னகை
யிளைய ராடுந் தளையவிழ் கானல்
விருந்தென வினவி நின்ற
நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே[2]
(ஐங்குறு-198)

மறைந்தவள் அருக—நாண்மிகுதியால் தனது வேட்கை மறைந்த தலைவி அக்கூற்றிற்கு உடம்படாது நிற்றலால், தன் னொடும் அவளொடும் முதன் மூன்று அளைஇ—தலைவ னோடுந் தலைவியோடும் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சி முதலிய மூன்றனையுந் தான் அறிந்தமை குறிப்பான் உணர்த்தி, பின் னிலை பல்வேறு நிகழும் மருங்கினும்—இரந்து பின்னிற்றல் பல வாய் வேறுபட்டு நடக்குமிடத்தும்.

அவை பெருந்தன்மையானொருவன் யானை முதலியன வினாயுந் தழையுங் கண்ணியுங் கொண்டும் இப்புனத்து வாரா நின்றானெனவும், அவன் என் மாட்டுப் பெரிதுங் குறையுடைய னெனவும், அவன் குறை முடியாமையின் வருந்தாநின்றானென வும், அத்தழை நீ ஏற்றல் வேண்டுமெனவும் அக்குறை

---

1. கருத்து: மலைச் சாரலில் வருடை மான்குட்டியைப் பாராட்டி வளர்ப்பவர்போல நீ இவளைப் பாராட்டிப் பின் இவளிடத்திருந்து பிரிவையாயின் என் தோழியது அழகும் பிரியும். அதனால் இயல்பாகவே வேகமுடைய குதிரையைச் சாட்டையால் வேகப்படுத்துவதுபோல இயல்பாகவே இவளைப் போற்றும் குணம் உடைய நின்னிடத்து யானும் இவளைப் போற்று என்று சொல்லி இவளை நின்பால் சேர்ப்பேன்.

2. கருத்து: பக்கம் 301-ல் காண்க.

முடித்தற்கு இஃதிடமெனவும், யான் கூறியது கொள்ளாயாயின் நினக்குச் செறிந்தாருடன் உசாவிக் குறைமுடிப்பாயெனவும் மறுப்பின் மடலேறுவனெனவும் வரைபாய்வனெனவும் பிறவாற் றானுங் கூறிக் குறைநயப்பித்தலாம்.

(உ-ம்)

''புனைபூந் தழையல்குற் பொன்னன்னாய் சாரற்
றினைகாத் திருந்தேம்யாமாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு''[1]

(ஐந்-ஐம்-14)

''கைதையந் தண்கானற் காலையு மாலையு
மெய்த வரினு மிதுவெங் குறையென்னான்
செய்தழையுங் கண்ணியுஞ் சேர்ந்துழி வைத்திறந்தா
னுய்யலன் கொல்லோ வுணரலனே யென்றியால்''[2]

''ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
னன்னர் நெஞ்ச நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல நன்னாட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலிழுமென் னெஞ்சே''[3]

(குறுந்-176)

''புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
யிணர்ததையும் பூங்கான லென்னையு நோக்கி

1. கருத்து: பக்கம் 302-ல் காண்க.

2. கருத்து: ''கானலில் காலையும் மாலையும் வந்தாலும் இது என்குறை எனக் கூறான். தழையுடையும் மாலையும் நான் இருக்குமிடத்தில் வைத்துச் சென்றான். அவன் குறை முடியாதெனின் உய்ய மாட்டானோ? யான் உணரவில்லை'' என்றாய்.

3. கருத்து: பக்கம் 303-ல் காண்க.

யுணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி யைம்பாலாய் வண்ண முணரேனால்''[1]

(சிலப்-கானல்-31)

''ஓரை யாய மறிய வூரன்
நல்கினன் றந்த நறும்பூந் தண்டழை
யாறுபடி னெவனோ தோழி வீறுசிறந்து
நெடுமொழி விளக்குந் தொல்குடி
வடுநாம் படுத்த லஞ்சுது மெனவே''[2]

இது கையுறை ஏற்பத் தலைவிக்குக் கூறியது.

''சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
வலங்குகுலைக் காந்த டீண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற நாட
னுடுக்குந் தழையீத் தனனே யாமஃ
துடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற்
கேளிடைக் கேடஞ் சுதுமே யாயிடை
வாடுப கொல்லோ தாமே யவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த செயற்கருந் தழையே''[3]

(நற்றிணை-359)

இதுவும் அது.

---

1. கருத்து: பக்கம் 303-ல் காண்க.

2. கருத்து: தோழீ! ஊரனானவன் நம் விளையாட்டு மகளிர் அறியும்படியாக நறும் பூந்தண் தழையைத் தந்தான். அதைப் பெறவில்லையாயின் ஐயத்துக்கிடமாம். நாம் நம் தொல்குடிக்கு வடுவுண்டாக்குதலுக்கு அஞ்சுவோம். ஆதலின் அத்தழையை வழிப்பட்டு அவை ஏற்பதே நன்றாம்.

3. கருத்து: தோழீ! மலையில் மேய்ந்த செந்நிறப் பசுவானது காந்தளைத் தீண்ட அதனால் மலரின் தாதுகள் தன்மேல் உதிர்ந்து தன்நிறம் மாறிப் பொன்னிறமாகக் காணப்பட்டதனால் அதன் கன்றானது தன் தாய் தானோ என்று மருளும்படியான குன்றநாடன் நாம் உடுக்கத் தழையுடை தந்தான். அதை ஏற்று உடுப்பின் தாய்க்கு அஞ்சுவேம். அதை மறுப்பின் அவன் வருத்

''இலைசூழ்செங் காந்த ளெரிவாய் முகையவிழ்த்த
வீர்ந்தண் வாடை
கொலைவே னெடுங்கட் கொடிச்சி கதுப்புளருங்
குன்ற நாட
னுலைவுடை வெந்நோ யுழக்குமா லந்தோ
முலையிடை நேர்வார்க்கு நேருமிடமிது
மொய்குழலே''[1]

''அவ்வளை வெரிநி னரக்கீர்த் தன்ன
செவ்வரி யிதழ சேணாறு பிடவி
னறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரை கல்லி னன்னிறம் பெறூஉம்
வளமலி நாட னெருந னம்மொடு
கிளைமலி சிறுதினைக் கிளிகடிந் தசைஇச்
சொல்லிடம் பெறாஅன் பெயர்ந்தனன் பெயர்ந்த
தல்ல லன்றது காதலந் தோழி
தாதுண் வேட்கையிற் போதுதெரிந் தூதா
வண்டோ ரன்னவவன் தண்டாக் காட்சி
கண்டுங் கழறொடி வலித்தவென்
பண்பில் செய்தி நினைப்பாய் நின்றே''[2]
(நற்றிணை-25)

தத்துக்கு அஞ்சுவேம். இவ்விரு வேறு கருத்தால் நாம் வாளாஇருக்க மானும் பாய முடியாத சூர்த்தெய்வம் உள்ள மலையடுக்கத்தில் கொய்து வந்த அத்தழையுடை வாடுவதுதான் மிச்சமோ.

1. கருத்து: பக்கம் 302-ல் காண்க.

2. கருத்து: தோழீ! வளமலை நாடன் நேற்று நம்மொடு சிறுதினைப் புனத்துக் கிளிகடிந்து தங்கியும் தன்கருத்தை சொல்ல இடம் பெறாமல் அகன்றனன். இப்போது நான் சொல்ல வந்த அது அவன் பெயர்ந்ததாகிய அல்லலைப் பற்றியது அன்று. தேனுண்ணும் வேட்கை யினால் தக்க மலரை ஆராயாது எங்கும் விழுகின்ற வண்டைப்போல அவன் தகுதியில்லா என்பால் அன்பு கொண்டு நின்ற காட்சியைக் கண்டு என் தொடி கழன்றது. அதனைச் சரிவரச் செறித்து வந்த என் பயனற்ற செய்தி நினைக்க நகையாகின்று என்பது தான்.

''மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி
யம்மலைக் கிழவோ னந்நயந் தென்றும்
வருந்தின னென்பதோர் வாய்ச்சொற் றேறாய்
நீயுங் கண்டு நுமரொடு மெண்ணி
யறிவறிந் தளவல் வேண்டு மறுத்தரற்
கரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தா மொட்டியோர் திறத்தே''[1]

(நற்றிணை-32)

''மறவல் வாழி தோழி துறைவர்
கடல்புரை பெருங்கிளை நாப்பண்
மடல்புனைந் தேறிநிற் பாடும் பொழுதே''

இன்னும் வேறுபட வருவனவெல்லாம் ஈண்டு அடக்கிக் கொள்க.

நன்னயம் பெற்றுழி நயம் புரியிடத்தினும் — அங்ஙனந் தோழி கூறிய குறையினை அவள் அருளப் பெற்றவழி அதனைத் தலைவற்குக் கூறுதற்கு விரும்புமிடத்தும்.

அவை, தலைவனாற்றாமை கண்டு தோழி கையுறையெதிர் தலும், இரவுக்குறியும் பகற்குறியும் நேர்தலும், குறியிடங் காட்டலும், பிறவுமாம்,

(உ-ம்):

''பொன்மெலியு மேனியாள் பூஞ்சுணங்கின்
மென்முலைகள்
என்மெலிய வீங்கினவே பாவமென்—றென்மெலிவிற்
கண்கண்ணி வாடாமை யானல்ல வென்றுரைத்தால்
உண்கண்ணி வாடா ளுடன்று''[2]

(திணை-நூற்-21)

இதனுட் கண்கண்ணி—குறுங்கண்ணி.

---

1. கருத்து: பக்கம் 304-ல் காண்க.
2. கருத்து: ''பொன்மேனியானது சுணங்குடைய மென் முலைகள் யான் வருந்த ஏன் பருத்தன? பாவம்'' என்று இப்படிச் சொல் நீ மெலிதற்குக் காரணம்

''நிலாவி ன்லங்கு மணன்மலி மறுகிற்
புலாலஞ் சேரிப் புல்வேய் குரம்பை
யூரென வுணராச் சிறுமையொடு நீருடுத்
தின்னா வுறையுட் டாயினு மின்ப
மொருநா ளுறைந்திசி னோர்க்கும் வழிநாட்
டம்பதி மறக்கும் பண்பி னெம்பதி
வந்தனை சென்மோ வளைமேய் பரப்ப
பொம்மற் படுதிரை கம்மென வுடைதரு
மரனோங் கொருசிறைப் பலபா ராட்டி
யெல்லை யெம்மொடு கழிப்பி யெல்லுற
நற்றேர் பூட்டலு முரியி ரற்றன்று
சேர்ந்தனிர் செல்குவி ராயின் யாமு
மெம்வரை யளவையிற் பெட்குவ
நும்மொப் பதுவோ மேவரி தெமக்கே''[1]

(அகம்—200)

''கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க தடம்புலாந்
தாழைமா ஞாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னோக்கி யிடம்''[2]

(திணை-நூற்-44)

என்ன? தலைவ! நீ தந்த குறுங்கண்ணிகள் வாடாதபடி அவளிடம் இவை நல்லன என்று சொல்லிக் கொடுத்தால் அவள் மாறுபட்டுத் துன்புறாமல் வாங்குவாள்.

1. கருத்து: கடற் பரப்புத் தலைவ! எம்சேரி ஊர் என்று உணரும்படியில்லாத சிறியதாய் நீர் சூழ்ந்து அழகில்லாத உறையுள் உடையதாயினும் இன்பம் தரும் வகையில் ஒருநாள் தங்கியவர்க்கும் பின்னாளில் தம் ஊரையே மறக்கச் செய்யும் பண்பினதாதலால் எம்மூர்க்கு வந்து செல்க. பகலெல்லாம் எம்மோடிருந்து இரவுப்போதில் தேர் பூட்டிச் செல்வீராக. அன்றி இரவும் தங்கிச் செல்வீராயின் எங்களுக்கு இயன்ற அளவில் விரும்பி உதவுவோம். நும் கருத்து யாது?

2. கருத்து: பக்கம் 305-ல் காண்க.

எனவரும், இன்னும் 'நயம்புரியிடத்தும்' என்றதனால் அவன் வரவினைத் தலைவிக்குக் கூறுதலுங் கொள்க.

"இவர்பரி நெடுந்தேர் மணியு மிசைக்கும்
பெயர்பட வியங்கிய விளையரு மொலிப்பர்
கடலாடு வியலணிப் பொலிந்த நறுந்தழை
திதலை யல்கு னலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்ப
னிறைபட வோங்கிய முழவுமுதற் புன்னை
மரவரை மறைகம் வம்மதி பானாட்
பூவிரி கானற் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணா
வல்ல லரும்படர் காண்கநாஞ் சிறிதே"[1]

(நற்-307)

இது, தோழி தலைவிக்குப் பகற்குறிக் கண் தலைவன் வருகின்றமை காட்டி அவன் வருத்தங் காண யாம் மறைந்து நிற்பாம் வம்மோ வெனக் கூறியது.

எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்—தலைவன் இளிவந்தொழுகுதற்குப் பொறாத தோழி அவன் இளி வரவு உணர்த்துங் கருத்தினளாய்ச் செயற்கையாக ஆராய் தற்கு அரியவாய்வரும் ஒன்றல்லாப் பலநகை குறித்த பகுதிக் கண்ணும்:

அவை 'என்னை மறைத்த லெவனாகியர்' (இறை-சூ-12) என்றலும், அறியாள் போறலும், குறியாள் கூறலும், படைத்து மொழி கிளவியும், குறிப்பு வேறு கொளலும் பிறவுமாம்.

(உ-ம்)

"நிறைத்திங்கள் சேர்ந்தோடு நீண்மலை நாட
மறைக்கப் படாதேனை மன்னு—மறைத்துக்கொண்
டோடினா யாதலால் ஒண்டொடியாள் தன்பக்கங்
கூடக் கிடந்ததொன் றில்'[2]

---

1. கருத்து: பக்கம் 305-ல் காண்க.
2. கருத்து: மலை நாட! மறைக்கப்படாத எனக்கு நின் ஒழுக்கத்தை மறைத்துக் கொண்டு ஓடினாய். ஆதலால் ஒண்டொடியாளைக் கூடுமாறு கிடந்த தொன்று இல்லை.

"மன்னேர்மன் சாய லவருண் மருள்திர
வின்னார் கணெண் பதறியேனான்—மின்னுருங்
கார்கெழு தோன்றற் கணமலை நன்னாட
யார்கண்ண தாகுங் குறை"[1]

"தன்னெவ்வங் கூறினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றானாணி"[2]
(கலி-44)

இது, பழி கூறுவேனென்று தலைவி குறியாததொன்றைத் தோழி கூறினது.

"விருந்தின ராதலின் வினவுதி ரதனெதிர்
திருந்துமொழி மாற்றந் தருதலு மியல்பெனக்
கூறுவ தம்மயா னூறுபல வருமென
வஞ்சுவன் வாழி யறைய வெஞ்சா
தெண்ணில ரெண்ணியது முடிப்பர்
கண்ணிலர் கொடியர்இவ டன்னை மாரே"[3]

இது, நிகழாது நிகழ்வதாகப் படைத்து மொழிந்தது.

"நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ னாட்ட லுமாட்டாள்

---

1. கருத்து: தோன்றலே! நின்குறை யார் கண்ணதென்று அறியேன் நான். யார் கண்ணது என்பதை நீயே கூறுக.

2. கருத்து: தலைவ! நீ செய்த அருளொடுபடாத செயலை யான் பிறரிடம் கூறிப் பழிதூற்றுவேன் என்று கருதித் தலைவி அதை எனக்கும் மறைத்தாள்.

3. கருத்து: நீர் புதியவராதலின் இவளைப் பற்றி வினவுதிர். அதற்கு எதிர்மொழி கூறுவது இயல்பே என என் நெஞ்சம் கூறுவதாயிற்று. என்றாலும் இவள் தமையன்மார் யாதும் எண்ணாதவராய்த் தாம் எண்ணியதை முடிப்பவர்; இரக்கமில்லாதவர்; கொடியர். ஆதலால் அவர்க்கு அஞ்சுவேன். சொன்னால் பல இடையூறு வருமென அஞ்சுவேன்.

சிறுநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றாட்
கெறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச்
செல்கோ''[1]

இது குறிப்பு வேறு கொண்டா ளென்றது.

புணர்ச்சி வேண்டினும்—தலைவன் பகற்குறியையும், இரவுக் குறியையும் விரும்பிக் கூறுமிடத்தும். தோழிமேன கிளவி. அவை பல வகைய.

(உ-ம்)

''நன்னலஞ் சிதைய நாடொறும் புலம்பப்
பொன்னிணர் வேங்கை துறுகற் றாஅ
யிரும்பிடி வெரூஉ நாடற் கோர்
பெருங்க ணோட்டஞ் செய்தன்றோ விலமே''[2]

இது தோழி தலைவியைப் பகற்குறி நயப்பித்தது.

''மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணாயோ—கான
லிடையெலா ஞாழலுந் தாழையு மார்ந்த
புடையெலாம் புன்னை புகன்று''[3]

(திணைமாலை-58)

''ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
யிரைதேர் வெண்குரு கல்ல தியாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெங்

1. கருத்து: பக்கம் 297-ல் காண்க.

2. கருத்து: வேங்கை மரம் சூழ்ந்த அடர்ந்த பாறை வழியில் பெண் யானை வரும் மலை நாடன் நலம் சிதைந்து தனிமைப்பட்டு நிற்கவும் அவனுக்கு நாம் பெரிய கண்ணோட்டம் செய்கின்றிலேம்; என்னே!

3. கருத்து: மாயவனும் பலராமனும் போலே கடலும் கானலும் வெண்மணலும் விளங்கக் காணாயோ? சோலையில் இடையில் எல்லாம் ஞாழலும் தாழையும் நிறைந்தன. பக்கமெலாம் புன்னைகள் நிறைந்தன. இவற்றையும் பார்ப்பாயாக.

கூழைக் கெருமண் டொணர்கஞ் சேறு
மாண்டும் வருகுவள் பெரும்பே தையே''[1]

(குறுந்-113)

இவை பகற்குறி நேர்ந்து இடங் காட்டியன.

''செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே''[2]

(குறுந்-1)

இது, தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது.

''ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் னருவி யாடுத லினிதே
நிரையிதழ் பொருந்தாக் கண்ணோ டிரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
யன்னை முயங்கத் துயலின் னாதே''[3]

(குறுந்-354)

இஃது, இரவுக்குறி நயந்த தலைவன் சிறைப்புறமாகப் பகற்குறி நேர்வாள்போல் இரவுக் காப்புமிகுதி கூறியது.

---

1. கருத்து: பக்கம் 308-ல் காண்க.

2. கருத்து: போர்க்களம்பட எதிரிகளைக் கொன்று அவுணர்களை யழித்த செங்குருதி படிந்த அம்புபோல் சிவந்த கொம்பினையுடைய யானைகளையுடைய கழலும் தொடியும் உடைய ஆஅய் வள்ளலது குன்றம் இரத்தம் போலும் செந்நிறத்தையுடைய காந்தட் பூக்களையுடையதாகும்.

3. கருத்து: தோழீ! பகலில் மலையின் தாழ்வரையில் தலைவன் மார்பு புணையாகக் கொண்டு அருவியில் ஆடுதல் இனியது; இரவில் தாயின் தழுவலுடன தூங்குதல் இன்னாததாம்.

'பாடின்னருவி ஆடல்' என்றாள் அதன்கண் உதவினா னென்பது பற்றி அல்லது களவிற்கு உடன் ஆடுதலின்று.

''செறுவார்க் குவகை யாகத் தெறுவர
வீங்கும் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா வெண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
விருங்கழி நெய்தல் போல
வருந்தின ளளியணீ யருந்திசி னோளே''[1]

(குறுந்-336)

இது தலைவன் இரவுக்குறி நயந்தவனைத் தோழி மறுத்தது.

''நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்ற நண்ணிக் குறவ ரார்ப்ப
மன்றம் போழு நாடன் றோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்துந்
தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியுங்
காலை வந்து மாலைப் பொழுதி
னல்லக நயந்துதா னுயங்கிச்
சொல்லவு மாகா தஃகி யோனே''[2]

(குறுந்-346)

இது தோழி கிழத்தியை இரவுக் குறி நயப்பித்தது.

''தண்ணந் துறைவன் கடும்பரி மான்றேர்
காலை வந்து மாலை பெயரினும்

---

1. கருத்து: துறைவ! பகைவர்க்கு மகிழ்ச்சியுண்டாம் படியும் கேளிர்க்குத் துன்பம் உண்டாம்படியும் இப்படி யாகச் சான்றோர் வருவரோ! நீ பிரிந்த தலைவி தேர்ச் சக்கரத்தால் மிதிபட்டு அழியும் நெய்தற்கழிப்பூப் போல வருந்தினள்.

2. கருத்து: தோழீ! நாடன் பகற்குறியிடத்துக் காலை வந்து நமக்குக் குவளைப் பூமாலை தந்தும் நம்மொடு தினைப் புனத்தில் கிளிகளைக் கடிந்தும் உடன் இருந்து மாலைப் பொழுதில் நம் நல்ல நெஞ்சத்தை விரும்பி வருந்தி இன்னது தன் விருப்பம் என்பதைச் சொல்லவும் இயலாது குறைவுற்றான்,

பெரிது புலம்பின்றே கானல்
சிறிது புலம்பினமாற் றோழி நாமே''[1]

இது தலைவியது ஆற்றாமை கண்டு நம் வருத்தந் தீர்தற்கு இரவுக் குறியும் வேண்டுமென்றது.

''ஏன மிடந்திட்ட வீர்மணிகொண் டெல்லிடைக்
கானவர் மக்கள் கனலெனக் கைகாய்த்தும்
வானுயர் வெற்பன் வருவான்கொ றோழிநம்
மேனி பசப்புக் கெட''[2] (திணை-ஐம்-4)

இது தலைவன் வருவனென்றது.

''சுறவுப்பிற ழிருங்கழி நீந்தி வைகலு
மிரவுக்குறிக் கொண்கன் வந்தனன்
விரவுமணிக் கொடும்பூண் விளங்கிழை யோயே''[3]
(சிற்றெட்டகம்)

இஃது இரவுக்குறி. தலைவன் வந்தமை தலைவிக்குக் கூறியது.

''அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்கயத் தமன்ற கூதளங் குழைய
வின்னிசை யருவிப் பாடு மென்னதூஉங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
யூட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை
யோங்குசினைத் தொடுத்த வூசல் பாம்பென

1. கருத்து: தோழீ! துறைவனின் தேர் காலையில் வந்து மாலையில் திரும்பினாலும் இக்கானலிடம் மிகவும் பொலிவிழந்ததாகும். நாமும் சிறிது தனிமையால் பொலிவிழந்தவராவேம்.

2. கருத்து: தினைப் புனத்தில் உழுது உழவர் அங்கே போட்டுச் சென்ற மாணிக்கத்தை மக்கள் நெருப்பாகக் கொண்டு இரவில் குளிர்காயும் வானுயர் வெற்பனான வன் நம் தோழியின் பசலை கெடுமாறு வருவானோ?

3. கருத்து: மணிவிரவிச் செய்த பூணும் பிற அணியும் உடையவளே! நம் தலைவன் சுறாமீன் பிறழும் கழி யிடங்களை நீந்தித் தினமும் இரவுக் குறிக்கண் வந்தான்.

முழுமுத றுமிய வுருமெறிந் தன்றே
யின்னுங் கேட்டியோ வெனவுமஃ தறியா
என்னையுங் கனைதுயின் மடிந்தன ளதன்றலை
மன்னுயிர் மடிந்தன்றாற் பொழுதே காதலர்
வருவ ராயிற் பருவ மிஃதெனச்
சுடர்ந்திலங் கெல்வளை ஞெகிழ்ந்த நம்வயிற்
படர்ந்த வுள்ளம் பழுதின் றாக
வந்தனர் வாழி தோழி யந்தரத்
திமிழ்பெய றலைஇய வினப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளந் தலைத்தலை சிறப்பக்
கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவு
மகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
பகலு மஞ்சும் பனிக்கடுஞ் சுரனே''[1] (அகம்-68)

இது, தாயது துயிலுணர்ந்து தலைவன் வந்தமை தோழி தலைவிக்குக் கூறிக் குறிவயிற் சென்றது.

''சேய்விசும் பிவர்ந்த செங்கதிர் மண்டில
மால்வரை மறையத் துறைபுலம் பின்றே
யிறவருந்தி யெழுந்த கருங்கால் வெண்குருகு
வெண்குவட் டருஞ்சிறைத் தாஅய்க் கரைய
கருங்கோட்டுப் புன்னை யிறைகொண் டனவே
கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்

---

1. கருத்து: தோழீ தலைமகளுக்குச் சொல்லியது. அன்னாய்! நம் படப்பையில் அருவி பாடும் ஒலியைச் சிறிதேனும் கேட்டாயோ எனவும், அசோக மரத்தில் கட்டப்பெற்ற ஊஞ்சற் கயிற்றைப் பாம்பாக நினைத்து மேகமானது மரத்தின் அடிப்பாகம் துணிபட இடித்து வீழ்ந்தது அதனைக் கேட்டாயோ எனவும் கூறிய கூற்றுகளை அறியாளாய் அன்னை மிக்க தூக்கத்தில் அழுந்தியுள்ளாள். ஏனைய உயிர்களும் உறங்கின. காதலர் வருவாராயின் சந்திக்கும் சமயம் இதுவென வளை நெகிழ்ந்திருந்த நம்மிடத்தும் படர்ந்த உள்ளம் பழுது இல்லாததாகச் சுரவழி வந்துள்ளனர்,

துணைச்சுறா வழங்கலும் வழங்கு மாயிடை
யெல்லிமிழ் பனிக்கடன் மல்குசுடர்க் கொளீஇ
யெமரும் வேட்டம் புக்கன ரதனாற்
றங்கி னெவனோ தெய்ய பொங்கதிர்
முழுவிசைப் புணரி யெழுதரு
முழைகடற் படப்பையெம் முறைவி னூர்க்கே''

(நற்றிணை-67)

இஃது இரவுக்குறி வேண்டிய தலைவற்குத் தோழி உடன் பட்டுக் கூறியது.

''ஆம்ப னுடங்கு மணித்தழையு மாரமுந்
தீம்புன லூரன் மகளிவ—ளாய்ந்த
தேமலர் நீலம் பிணையல் செறிமலர்த்
தாமரை தன்னையர் பூ''[1]

(திணை-ஐம்-40)

இஃது இரவுக்குறி நேர்ந்த தோழி இந்நிலத்தின்கண் நீ வருங்கால் இன்னபெற்றியான் வருவாயாக வென்றது.

''கடற்கானற் சேர்ப்ப கழியுலாஅய் நீண்ட
வடற்கானற் புன்னைதாழ்ந் தாற்ற—மடற்கான
லன்றி லகவு மணிநெடும் பெண்ணைத்தே
முன்றி லிளமணன்மேன் மொய்த்து''[2]

(திணைமாலை-56)

இஃது இரவுக் குறியிடங் காட்டித் தோழி கூறியது.

---

1. கருத்து: தலைவ! தனழயுடை அல்குலிலும் ஆரம் முலையிடத்தும் அசைய வரும் இவள் தீம்புனலூரன் மகள். இவர் ஐயன்மார் ஆய்ந்த மலர் நீலம். சூடும் மாலை தாமரை. அதனால் நீயும் தாமரை மாலை அணிந்து இரவுக்குறியிடம் வருக.

2. கருத்து: கடற்கரைச் சேர்ப்ப! எம் முன்றிலில் மணல் மிக்குக் கிடக்க, மீனைக்கொல்லும் கானலிடத்துப் புன்னை மிகத்தாழ, மடலில்தங்கி அன்றில்கள் கூவும் பனைமரத்தையுடையதாம் இரவுக்குறியிடம்.

''எம்மூர் வாயி லொண்டுறைத் தடைஇய
கடவுண் முதுமரத் துடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கட் கூருகிர்
வாய்ப்பறை யசாவும் வலிமுந்து கூகை
மையூன் றெரிந்த நெய்வெண் புழுக்க
லெலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்
எஞ்சாக் கொள்கையெங் காதலர் வரனசைஇத்
துஞ்சா தலமரும் போழ்தி
னஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே''[1]

(நற்றிணை-83)

இஃது இரவுக்குறிவந்த தலைவன் சிறைப்புறமாகக் கூகைக்கு உரைப்பாளாய்த் தோழி கூறியது.

''நிலவு மறைந்தன் றிருளும் பட்டன்
றோவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன நிற்புறங் காக்குஞ்
சிறந்த செல்வத் தன்னையுந் துஞ்சினள்
கெடுத்துப்படு நன்கல மெடுத்துக் கொண்டாங்கு
நன்மார் படைய முயங்கி மேன்மேற்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
கிழு மேலுங் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு போலத்
தமியன் வந்தோன் பனியலை நீயே''[2]

(நற்றிணை-182)

---

1. கருத்து: எம் ஊரின் எல்லைத் தொடக்கத்திலேயுள்ள பொய்கைத் துறையருகில் உள்ள பெரிய முதிய கடவுள் தங்கும் மரத்தில் தங்கி எம்முடன் உடனுறைந்துபழகிய வாய் ஒலியால் பிறரை அஞ்சச் செய்கிற கூகையே! உனக்கு யாட்டிறைச்சியுடன் நெய் கலந்த சோற்றை எலியின் சூட்டிறைச்சியுடன் கலந்து தருகின்றோம். குறைய கொள்கையுடைய எம் காதலர் வருவதை விரும்பித் தூங்காது துன்புறும் பொழுதில் நின் குரல் கேட்டு அஞ்சி இவ்வூரார் எழும்படியாகக் கூவாதிருப் பாயாக.

2. கருத்து பக்கம் 366-ல் காண்க.

இது தலைவனைக் கண்டு முயங்குகம் வம்மோ என்றது.

வேண்டாப் பிரிவினும்—தலைவன்றான் புணர்ச்சியை விரும் பாது பிரிவை விரும்பிய இடத்தும்.

அப்பிரிவு தண்டாதிரத்தலை முனிந்த மற்றைய வழி 'இட்டுப் பிரிவும் அருமை செய்தயர்த்தலு' (111)மாம். ஆண்டுத் தலைவற்குந் தலைவிக்குங் கூறுவன கொள்க.

(உ-ம்) :

''முத்த மரும்பு முடத்தாண் முதிர்புன்னை
தத்துந்திரை தயங்குந் தண்ணங் கடற்சேர்ப்ப
சித்திரப் பூங்கொடியே யன்னாட் கருளீயாய்
வித்தகப் பைம்பூணின் மார்பு''[1]

(திணை-ஐம்-42)

''இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பினன்ன வரும்பு முதிர்பு
நன்மா னுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழு முரவுநீர்ச் சேர்ப்ப
வினமணி நெடுந்தேர் பாக னியக்கச்
செலீஇய சேறி யாயி னிவளே
வருவை யாகிய சின்னாள்
வாழ்வா ளாத லறிந்தனை சென்மே''[2]

(நற்றிணை-19)

இது பிரிவு வேண்டிய வழிக் கூறியது.

''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை வீழ்ந்தன வெற்பிற்
பெருந்தே னிறாலொடு சிதறு நாடன்

---

1. கருத்து: தண்கடற் சேர்ப்ப! சித்திரக் கொடியன்ன எம் தலைவிக்கு நின் வித்தகப் பூண் அணிந்த மார்பை அருள்வாயாக.

2. கருத்து பக்கம் 310-ல் காண்க.

பேரமர் மழைக்கண் கலுழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னாய்''[1]

(ஐங்குறு-214)

எனவும் வரும்.

வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தும்—தலைவற்குத் தாஞ்சில கொடுத்தலைத் தலைவி வேண்டியவிடத்தும்.

அது தலைவி 'வேளாணெதிரும் விருந்தின் கண்' (107) தோழி கூறுவதாம்.

(உ-ம்)

''பன்னா ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்ப ரின்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணாய்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்
செல்விருப் புறுத லொழிகதில் லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யன்னவிவ
ணல்லெழி லிளநலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்குஞ்
சென்றோர் மன்ற மான்றின்று பொழுதென
நின்றிறத் தவலம் வீட வின்றிவட்
சேப்பி னெவனோ பூக்கேழ் புலம்பப்
பசுமீ னொடுத்த வெண்ணெல் மாஅத்
தயிர்மிதி மிதவை வார்குவ நினக்கே
வடவர் தந்த வான்கேழ் வட்டங்
குடபுல வுறுப்பிற் கூட்டுபு நிகழ்த்தி
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவந் திண்டிமி
லெல்லுந்தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூருவிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்

1. கருத்து: பக்கம் 310-ல் காண்க.

''கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதோறும் வினைவிட்டு
முன்றிற் றாழைத் தூங்குந்
தெண்டிரைப் பரப்பினெம் முறைவி னூர்க்கே''[1]

(அகம்—340)

இதனுள் தனக்கும் புரவிக்குங் கொடுப்பன கூறித் தடுத்த வாறு காண்க.

'நாள்வலை முகந்த' (அகம்-300) என்பதும் அது.

புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்—இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலத்து அவன் தீங்கு உணராது அவனை நன்றாக உணர்ந்த அறிவினது மடப்பங் கூறித் தங் காதற் சிறப்பு உரைத்த இடத்தும்.

(உ-ம்)

''சுரஞ்செல் லியானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியா
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோ
லெமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே''[2]

(குறுந்-169)

---

1. கருத்து: ஊர! திரையன் என்பானின் பவத்திரி என்னும் ஊர்போல வளமிக்க தலைவியின் அழகுநலம் தொலையு மாறு நீவரும் வழியானது மிக்க ஒலியுடன் நீர் பெருகப் பெற்றுளது. பாம்பொடு சுறாமீன் திரியும் பொழுதும் ஒருவாறாக மயங்கும் மாலையாயிற்று. இந்நிலையில் தலைவர் சென்று விட்டனரே என்று நின்னிடத்துக் கொள்ளும் துன்பம் ஒழிய உறைவதற்கு இனிய எம் ஊரில் தங்கிச் செல்லின் வரும் குறையாது. நின் குதிரைகள் நெல்லின் மாவை (தவிடு) நயிரிட்டுப் பிசைந்த கூழை உண்பனவாகுக. நினக்கு நறிய சாந்தினை அணிவிப்போம். ஆதலால் நீயும் பாகன் செலுத்தத் தேரிற் செல்லும் செலவை ஒழிவாயாக.

2. கருத்து: ஐய! நும்மொடு மகிழ்ந்து சிரித்த எம் தூய வெள்ளிய பற்கள் மலையிற் குத்தி யொடிந்த யானைத்

இஃது அவனோடு நகுதற்குத் தோன்றிய உணர்வு இன்றி யமையாமை கூறிக் காதற்சிறப்பு உரைத்தது.

ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும் — தலைவற்குத் தலைவியைப் பாதுகாத்துக்கொள் ளெனக் கூறுங் கிளவியது பகுதிக் கண்ணும், தோழிமேன கிளவி.

பகுதியாவன வரைவிடைப் பிரிவு முதலிய பிரிவிடத்தும், புனத்திடைப் புணர்ச்சியின்றி நீங்குமிடத்தும், பிறவிடத்துங் கூறுவனவாம்.

(உ-ம்)

''நனைமுதிர் ஞாழற் றினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்த போல
வூதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
வின்னா செயினு மினிதுதலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே''[1]

(குறுந்-397)

''பெருநன் றாற்றிற் பேணாரு முளரே
யொருநன் றுடைய ளாயினும் புரிமா
ணடுபுலவி தீர வளிமதி யிலைகவர்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரன்

தந்தம்போல் முறிக. நும்மொடு நட்புக்கொண்ட எம் உயிர் பாணர் பிடித்த பச்சைமீன் பெய்து வைக்கப் பட்ட கலம் பிறர்க்கும் வெறுப்பைத் தருவதுபோல எமக்கு வெறுப்பைத் தந்தது. நும்மையும் அடையப் பெற்றிலேம். ஆதலின் அது கெடுக.

1. கருத்து: பெரும! தாய் சினந்து அடிக்கும் காலத்தும் குழந்தையானது அன்னாய் என் அவளையே விளிப்பது போல நீ இவளை அருளினும் அருளாது விடினும் நீயே புகலிடம். இவள் துயரைக் களைவார் பிறர் யார்? ஒருவரும் இலர்.

மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட நின்னல திலளே''[1]

(குறுந்-115)

''எறிந்தெமர் தாமுழுத வின்குர லேனன்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துட் கொண்டு''[2]

(ஐந்-ஐம்-18)

''அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கா
லிருவி நீள்புனங் கண்டும்
பிரித றேற்றாப் பேரன் பினவே''[3]

(ஐங்குறு-284)

இது தினை அரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள்போற் சிறைப்புறமாக ஓம்படுத்தது. இன்னும் 'ஓம்படைக் கிளவி' என்றதற்கு இவளை நீ பாதுகாத்துக் கொள்ளென்று தலைவன் கூறுங் கிளவியது பகுதிக்கண்ணுமென்றும் பொருள் கூறுக.

''பிணங்கரில் வாடிய பழவிற லனந்தலை
யுணங்கூ ணாயத் தோரான் றெண்மணி
பைப்பய விசைக்கு மத்தம் வையெயிற்
றிவளொடு செலினோ நன்றே குவளை
நீர்சூழ் மாமல ரன்ன கண்ணழக்
கலையொழி பிணையிற் கலங்கி மாறி

1. கருத்து: பக்கம் 313-ல் காண்க.

2. கருத்து: எமர் தினைக்கதிர் கொய்து உதவினால் மறந்தும் கிளிகள் இங்கே வாரா. யாமும் வருதல் இல்லை. அதனால் மலை நாடனே! எம்மடமொழி பால்கொண்ட நின் கேண்மையை நெஞ்சிற் கொண்டு மறவாதே.

3. கருத்து: செவ்வாய்ப் பைங்கிளிகள் குன்றக் குறவரால் கதிர்கள் கொய்யப்பட்டு நின்ற தாள்களையுடைய புனங்களைப் பார்த்தும் அப்புனத்திடம் விட்டுப் பிரிய மாட்டாவாயின. அதனால் அவை இரங்கத் தக்கன.

யன்பிலி ரகறி ராயி னென்பர
மாகுவ தன்றிவ ளவல நாகத்
தணங்குடை யருந்தலை யுடலி வலனேர்
பார்கலி நல்லேறு திரிதருங்
கார்செய் காலை வரூஉம் போழ்தே''[1]

(நற்றிணை-37)

இதுவரைவிடைப் பிரிகின்றான் ஆற்றுவித்துக் கொண்டிரு என்றாற்குத் தோழி கூறியது.

செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்—தோழி செவ்வனங் கூறுங் கடுஞ் சொற்களால் தலைவி நெஞ்சு சிதை வுடைத்தாயினும் ஆண்டுந் தோழிமேன கிளவி.

அவை தலைவனை இயற்பழித்தலுந் தலைவியைக் கழறலு மாம்.

(உ-ம்)

''கௌவையம் பெரும்பழி தூற்ற நலனழிந்து
பைதலஞ் சிறுநுதல் பசலை பாய
நம்மிதற் படுத்த வவரினு மவர்நாட்டுக்
குன்றங் கொடியகொ றோழி
யொன்றுந் தோன்றா மழை மறைந்தனவே''[2]

---

1. கருத்து: தலைவ! உணவின்றி வாடும் பசுக் கூட்டத்துள் ஒரு பசுவின் மணியொலி மட்டும் பைய ஒலிக்கும் சுரவழியில் நீ போக நினைப்பின் இவளைக் கொண்டு செல்லின் நன்று. அப்படியின்றி இவள் கண்கள் நீர்சூழ் குவளை மலர்கள்போல் நீர் ஒழுக அழுமாறும் கலை மானைப் பிரிந்த பெண் மான் உறும் துயர் உறும்படியும் அன்பின்றிப் பிரிவாயாயின் இவள் அவலம் என்னால் ஆற்றுவிக்கும் தன்மையுடைய தன்றாம். எப்போதெனின் பாம்பின் தலை துமிய இடியேறு அடிக்கடி உண்டாம் கார் காலத்து மாலைக் காலம் வரும்போது.

2. கருத்து: தோழீ! ஊர் தூற்றும் அலராகிய பழிக்கு நம் நுதல் பசலை பரவ நம்மைத் துன்பப் படுத்திய அவரினும் அவர் குன்றம் கொடியதுவோ? ஏன் எனின் அவரைப் பார்ப்பதுபோல அவர் குன்றத்தைப் பார்த்திருப்போம் என்றால் மழையில் மறைந்து சிறிதும் தோன்றாதாயிற்று.

இது வரைவிடைப் பருவங் கண்டழிந்த தோழி இயற் பழித்தது.

"மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்
பைத லொருதலை சேக்கு நாட
னோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே"[1]

(குறுந்-13)

"கேழ லுழுத கரிப்புனக் கொல்லையுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்தயருந்
தாழருவி நாடன் றெளிகொடுத்தா னென்றோழி
நேர்வளை நெஞ்சூன்று கோல்"[2].

(ஐந்-எழு-11)

இஃது அவன் சூளுறவு பொய்த்ததென இயற்பழித்தது.

"மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
யழியல் வாழி தோழி நன்ன
னறுமா கொன்று நாட்டிற் போக்கிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே"[3]

(குறுந்—73)

"மெய்யிற் றீரா மேவரு காமமொ
டெய்யா யாயினு முரைப்ப றோழி
கொய்யா முன்னுகுங் குரல்வார்பு தினையே
யருவி யான்ற பைங்கா றோறு
மிருவி தோன்றிய பலவே நீயே
முருகு முரண்கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்

---

1. கருத்து: பக்கம் 315-ல் காண்க.
2. கருத்து: பன்றி யுழுத புனத்தில் கடுவனானது வாழைக் குலைக்காயைப் புதைத்துப் பின் புதைத்த இடம் தெரியாமல் வருந்தும்படியான நாடன் என் தோழிக்குத் தன் நெஞ்சில் ஊன்றிய கோல்போலக் கொள்ளுமாறு சூளுறவு மூலம் பிரியேன் எனத் தெளிவித்தான்.
3. கருத்து: பக்கம் 315-ல் காண்க.

பரிபன் னாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
யாங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடித றேற்றா ளிவளெனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயி
னுறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே''[1]

(அகம்-28)

எனவரும். இதனானே வரையும் பருவமன்றெனக் கூறுதலுங் கொள்க.

என்பு நெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ அன்பு தலைப்படுத்த வன்புறைக் கண்ணும்—என்பு உருகுமாறு தலைவனாற் பிரியப்பட்ட தலைவிக்கு வழிபாடாற்றிச் சென்று தான் கூறும் மொழியை அவள் மனத்தே செலுத்தித் தலைவன் அன்பை அவளிடத்தே சேர்த்துக் கூறிய வற்புறுத்துதற் கண்ணும்.

அப்பிரிவு வரைந்துகோடற்குப் பொருள்வயிற் பிரிதலும், வேந்தர்க்குற்றுழிப் பிரிதலும், காவற்குப் பிரிதலுமாம். ஆண்டு வற்புறுத்துங்கால் இயற்பழித்தும் இயற்பட மொழிந்தும் பிறவாறும் வற்புறுத்தும், முன் 'செங்கடு மொழியால்' என்புழி இயற்பழித்தனவும் வற்புறுத்துதல் பயனாகக் கூறியன வென்றுணர்க.

(உ-ம்)

''யாஞ்செய் தொல்வினைக் கென்பே துற்றனை
வருந்தல் வாழி தோழி யாஞ்சென்
றுரைத்தனம் வருக மெழுமதி புணர்திரைக்
கடல்விளை யமிழ்தம் பெயற் கேற்றாஅங்
உருகி உகுதல் அஞ்சுவல் உதுக்காண்
தம்மோன் கொடுமை நம்வயி னேற்றி
நயம்பெரி துடைமையிற் றாங்கல் செல்லாது

1. கருத்து: பக்கம் 316-ல் காண்க.

கண்ணீ ரருவி யாக
கலுழுமே தோழியவர் பழமுதிர் குன்றே''[1]

(நற்றிணை-88)

இது பிரிவிடைத் தோழி இயற்பழித்து வற்புறுத்தது.

''தோளுந் தொல்கவின் றொலைந்தன நாளு
மன்னையு மருந்துய ருற்றன ளலரே
பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமா
னெழுவுறழ் திணிதோ ளியறேர்ச் செழிய
னேரா வெழுவ ரடிப்படக் கடந்த
வாலங் கானத் தார்ப்பினும் பெரிதென
வாழல் வாழி தோழி யவரே
மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத் தும்ப
ரறையிறந் தகன்றன ராயினு நிறையிறந்
துள்ளா ராகலோ வரிதே செவ்வேன்
முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வி
லோரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவு ளாக்கிய
பலர்புகழ் பாவை யன்னநின் னலனே''

(அகம்-209)

''அழிய லாயிழை யிழிபுபெரி துடையன்
பழியு மஞ்சும் பயமலை நாட
னில்லா மையே நிலையிற் றாகலி
னல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்

---

1. கருத்து: தோழீ! நாம் செய்த பழவினை அதுவாயிருக்க நீ ஏன் மயங்கினாய். வருந்தாதே. நாம் அவன்பாற் சென்று கூறிவருவோம் வா. கடலில் விளைந்த உப்பு மழையேற்றுக் கரைந்தாற்போல நீ கரையாதே. யான் அதற்கு அஞ்சுவேன். நம் தலைவன் நம்மிடம் செய்த இக் கொடுமையை நினைந்து அவன் மலையும் கண்ணீர் அருவியாக கலுழும்.

கடப்பாட் டாள னுடைப் பொருள்போலத்
தங்குதற் குரிய தன்றுநின்
னங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே''[1]

(குறுந்-143)

என்னும் குறுந்தொகையும் கொள்க.

''பெருங்கை யிருங்களி றைவன மாந்திக்
கருங்கான் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க் கேமாப் புடைத்து''[2]

(ஐந்-எழு-12)

இவை இயற்பட மொழிந்து வற்புறுத்தன. இன்னும் 'அன்பு தலையடுத்த வன்புறை' என்றதனாற் பிறவுங் கொள்க.

''பெறுமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குரீஇப் போலக்
கோல்கொண் டலைப்பப் படீஇயர் மாதோ
வீரை வேண்மான் வெளியன் றித்தன்
முரசுமுற் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோ டியம்ப நுண்பனி யரும்பக்
கையற வந்த பொழுதொடு மெய்சோர்ந்
தவல நெஞ்சி னஞ்சினம் பெயர
வுயர்திரை நீடுநீர்ப் பனித்துறைச்
சேர்ப்பனொடு நுண்ணுக நுழைத்த மாவே''[3]

(நற்றிணை-58)

---

1. கருத்து: பக்கம் 317ல் காண்க.
2. கருத்து: பக்கம் 317ல் காண்க.
3. கருத்து: தலைவ! வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்பவனின் முரசத்தோடு சங்குகள் ஒலிக்க வரிசையாக விளக்குகள் ஒளிவிட பிரிந்தார் துயுருறவந்த மாலைப் பொழுதோடு யாம் துன்புற்றுப் பெயருமாறு செல்லுந் தலைவனுடைய தேரிற் பூட்டிய குதிரைகள், பெரிய வழிவழிச் செல்வர் புதல்வர்கள் கழுத்தில் தொங்க

இது பகற்குறி வந்து போகின்ற தலைவன் புறக்கிடை நோக்கி ஆற்றாத தலைவி குறிப்பறிந்து மாவின்மேல் வைத்து வற்புறுத்தது.

''விளையா டாயமொ டோரை யாடா
திளையோ ரில்லிடத் திற்செறிந் திருத்த
லறனு மன்றே யாக்கமுந் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமல ருந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண வாடுகம்
வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே
செல்கென விடுநண்மற் கொல்லோ வெல்லுமிழ்ந்
துரவுரு முரறு மரையிரு ணடுநாட்
கொடிநுடங் கிலங்க மின்னி
யாடுமழை யிறுத்தன்றவர் கோடுயர் குன்றே''[1]
(நற்றிணை-68)

இது வரைவுநீட ஆற்றாத தலைவி வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகாமையும் இய்யும் இங்ஙனங் கூறுவாரைப் பெறினெனக் கூறி வற்புறுத்தது.

''மறுகுபு புகலு நெஞ்ச நோயின்
றிறுகப் புல்லி முயங்குகஞ்
சிறுபுன் மாலை செயிர்ப்ப நாமே''[2]

விட்ட பறையின் நடுவில் எழுதிய குருவி அப்பறையைக் குறுந்தடி கொண்டு அடிக்குந்தோறும் படும் தொல்லை போலக் கோல் கொண்டடிக்குந்தோறும் அவலமுறுவன வாக.

1. கருத்து: தோழி! அவர் மலையில் மழையும் பெய்தது. இப்போது நம் அன்னையிடம் சென்று விளையாட்டுத் தோழியருடன் பஞ்சாய்ப் பாவை கொண்டு ஆடும் ஓரையாட்டத்தை ஆடாமல் மகளிர் இற்செறிக்கப் பட்டிருத்தல் அறமும் அன்று. இருக்கும் செல்வமும் தேயும் என்று சொல்லுவாரைப் பெற்றால் அதற்கு அன்னை நம்மை வெளியிற் செல்க என விடுமோ? விடுமாயின் நாம் நுரை சுமந்து மலர்களை உந்திவரும் புதுநீரில் மனம்கொள்ளும் அளவில் மூழ்கி ஆடுவோம்.

2. கருத்து: நம் நெஞ்சம் சுழன்று சுழன்று அவனையே விரும்பும். இஃதோர் நன்னிமித்தம். அதனால் நாம் சிறிய

இது பிரிவிடையாற்றாத தலைவியைத் தோழி நன்னி மித்தங்கூறி வற்புறுத்தது.

ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்—தலைவன் வருகின்ற நெறியினது தீமையைத் தாங்கள் அறிதலுற்றதனானே எய்திய கலக்கத்தின் கண்ணும் தோழி மேன கிளவி.

(உ-ம்)

''கழுதுகால் கிளர வூர்மடிந் தன்றே
யுருகெழு மரபிற் குறிஞ்சி பாடிக்
கடியுடை வியனகர்க் கானவர் துஞ்சார்
வயக்களிறு பொருத வாள்வரி யுழுவை
கன்முழைச் சிலம்பிற் குழுமு மன்னோ
மென்றோ ணெகிழ்ந்துநாம் வருந்தினு மின்றிவர்
வாரா ராயினு நன்றுமற் றில்ல
வுயர்வரை யடுக்கத் தொளிறி மின்னிய
பெயல்கான் மயங்கிய பொழுதுகழி பானாட்
டிருமணி யரவுத்தேர்ந் துழல
வுருமுச்சிவந் தெறியு மோங்குவரை யாறே''[1]

(நற்றிணை-255)

''கொடுவரி வேங்கை பிழைத்துக் கோட்பட்டு
மடிசெவி வேழம் வெரீஇ—யடியோசை
யஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்''[2] (ஐந்–ஐம்-16)

இவை இரவுக்குறி வரவால் தலைவி வருந்துவளென்றது.

புல்லிய மாலைக் காலம் நம்மைக் கோபிக்கும்படி நீண்ட காலம் துன்பமில்லாமல் அவனை இறுக்கப் புல்லிப் புணர்வோம்.

1. கருத்து: தோழி! பேய்கள் உலவ ஊர் தூங்கா நின்றது. ஊர்க் காவலர் குறிஞ்சிப் பண்பாடித் தூங்காது திரிவர். களிற்றைத் தாக்கிய புலி மலையடியிலிருந்து முழங்கும். மலையடுக்கங்களில் உயர்ந்து சென்று மின்னி முன்னிரவு கழிந்த பாதியிரவில் மழை பெய்யப் பாம்பானது தன் மணியைக் கக்கித் தேடி யுழலுமாறு இடியானது இடிக்கும் அவர் மலைவழி. அதனால் இன்று அவரை நினைந்து நம் மென்தோள் நெகிழ நாம் வருந்தினும் அவர் வாராராகுதல் நன்று.

2. கருத்து: பக்கம் 217-ல் காண்க.

''கரைபொரு கான்யாற்றங் கல்லதர்'' (யா-வி-76)

என்பதும் அது. 'கூருகிரெண்கின்' என்னும் (112) அகப் பாட்டுங் காண்க.

'கலக்கம்' எனப் பொதுப்படக் கூறியவதனால் ஆற்றிடை ஏதமின்றிச் சென்றமை தோன்ற ஆண்டு ஓர் குறிசெய் எனக் கூறுவனவுங் கொள்க.

*''கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை யுருமுநனி யுரறு
மரவும் புலியு மஞ்சுதக வுடைய
விரவழங்கு சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாடொடு பிரச
முழவுச்சேர் நரம்பி னிம்மென விமிரும்
பழவிற னனந்தலைப் பயமலை நாட
மன்றல் வேண்டினும் பெறுகுவை யொன்றோ
வின்றுதலை யாக வாரல் வரினே
யேமுறு துயர நாமிவ ணொழிய
வெற்கண்டு பெயருங் காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை
யூதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயில ழுவத்துப் பிரிந்தநின்
னாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே''.

என்னும் (அகம்-318) நித்திலக் கோவையுள் 'வரினே ஏமுறு துயரம் நாமிவ ணொழிய, நின் னாய்பயிர் குறிநிலை

* கருத்து: பயமலை நாட! இரவில் நீ வரும் வழியில் யானைகள் நடமாடும். மேகம் இடிக்கும். பாம்பும் புலி யும் அஞ்சும்படியுள்ளன. சிறு நெறியில் நீ தனித்து வரு கின்றாய். இவளை மணந்து கொள்ள வேண்டினும் நீ எளிதில் பெறுவாய். ஆதலினால் இன்று முதல் வருவ தைத் தவிர்க. வருவதாய் இருந்தால் எம் தனிமைத் துயர் ஒழியக் கண்டு செல்லும்போது நின்சிறு குடியை யடைந்தவுடன் குறித்தவிடத்தில் வருமாறு நின் வேட்டுவர்களையும் நின் நாயையும் அழைக்கும் ஊது கொம்பை ஊதி எமக்குக் கேட்கச் செய்து நீ ஊறு இன்றிச் சென்றதை யாம் அறியச் செய்க.

கொண்ட கோட்டை ஊதல் வேண்டுமாற் சிறிது' என்றவாறு காண்க.

காப்பின் கடுமை கையற வரினும்—காத்தற்றொழிலால் உண்டாங் கடுஞ்சொற்கள் களவொழுக்கத்திடத்தே எல்லையற வருமிடத்தும், தோழிமேன கிளவி. அவை பல வகைய:

(உ-ம்)

''கடலுட னாடியுங் கான லல்கியுந்
தொடலை யாயமொடு தழூஉவணி யயர்ந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே யலர்ந்தன்று மன்னே
துத்திப் பாந்தட் பைத்தக லல்குற்
திருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுங்கழைத்
தழையினு முழையிற் போகான்
றான்றந் தனன்யாய் காத்தோம் பல்லே''[1]

(குறுந்-294)

இது பகற்குறிக்கட் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

''கணமுகை கையெனக் காந்தள் கவின
மணமுகை யென்றெண்ணி மந்திகொண் டாடும்
விறன்மலை நாட வரவரிதாங் கொல்லோ
புனமு மடங்கின காப்பு''[2] (திணை-ஐம்-2)

இது தினை விளைந்தமை கூறிச் செறிப்பறிவுறீஇயது.

---

1. கருத்து: தோழீ! நம் தலைவன் நாம் கடலாடுமிடத் மிடத்தும், கடற்சோலையில் தங்கும் இடத்தும், ஆயமொடு ஆடுமிடத்தும் ஏதிலான்போல வந்து திடீரென நம்மைத் தழுவி நீங்கின் அலராகும். அங்ஙன மன்றியும் நின்தழையுடை நீங்காததுபோல் நம்மருகு வந்து நீங்கானாய்க் காண்பதால் நம் தாயால் நம்மை இற்செறிக்கச் செய்தான்.

2. கருத்து: கைகள்போலக் காந்தள் அரும்பி யழகுதர அதனை மணம் உள்ள மொட்டாகக் கருதி மந்தி கொண்டு விளையாடும் படியான மலை நாடனே! இனி இத்தினைப் புனம் எம்மால் காக்கப்படுதல் நீங்கியது. அதனால் நீ வருதல் அரிதாகும்.

''அறையருவி யாடா டினைவனமுங் காவாள்
பொறையுயர் தண்சிலம்பிற் பூந்தழையுங் கொய்யா
ளுறைகவுள் வேழமொன் றுண்டென்றா ளன்னை
மறையறநீர் வாழிய மையிருங் குன்றே''[1]

இது குன்றத்திற்குக் கூறுவாளாகச் செறிப்பறிவுறீஇயது

''சாந்த மெறிந்துழுத சாரற் சிறுதினைச்
சாந்த விதண மிசைச்சார்ந்து—சாந்தங்
கமழக் கிளிகடியுங் கார்மயி லன்னா
ளிமிழக் கிளியெழா வார்த்து''[2]

(திணை-நூற்-3)

இது பிறரைக் காத்தற்கு இடுவரெனச் செறிப்பறிவுறீஇயது.

''பல்லோர் துஞ்சு நன்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவு முயறல்
கேளே மல்லேங் கேட்டனெம் பெரும
வோரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியா
முயங்குதொறு முயங்கு மறனில் யாயே'',[3]

(குறுந்-244)

இஃது இரவுக்குறிக் காப்பின் கடுமை கூறியது.

''வினைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய

---

1. கருத்து: அன்னையானவள் வேழம் ஒன்று இப்பக்கம் உண்டு என்று சொல்லி வீட்டில் இருக்கச் செய்து விட்டாள். அதனால் இங்கே வந்து அருவியாடாள். புனங்காவாள். பூந்தழை கொய்யாள். குன்றமே நீரா னது வற்றல் இலாதபடி நீ வாழ்க.

2. கருத்து: சந்தன மரங்களை வெட்டி உழுத மலைச் சாரலில் விதைத்த தினையில் பரந்த கிளிகளை, சந்தன மரக்கிளைக் கால்களாகக் கொண்டு செய்த பரண் மிசையிருந்து பூசிய சந்தம் கமழ உலாவிக் கடிகின்ற மயிலன்னாள் ஆயோ என இயம்பும் ஓசை கேட்டுத் தம் இனம் என்று கருதிக் கிளிகள் போகாவாயின.

3. கருத்து: பக்கம் 318-ல் காண்க.

மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்''[1]

(திணை-நூற்-5)

இஃது இவ்வொழுக்கத்தினை வேங்கை நீக்கிற்றெனத் தலைவிக்குக் கூறியது. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

''புன்னையம் பூம்பொழிலே போற்றவே பாதுகா
வன்னப் பெடையே யறமறவன்—மன்னுங்
கடும்புதர்மான் காவலி கானலஞ் செல்லூர்
நெடுங்கடலே நீயு நினை''[2]

இது புனங் கைவிட்டுப் போகின்றுழிச் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

''பண்டைக்கொ ணல்வினை யில்லேம் பதிப்பெயர்துங்
கண்டற் குலங்காள் கழியருகேர்—முண்டகங்கா
ணாணி யிராதே நயந்தங் கவர்க்குரைமின்
பேணி யவர்செறித்த லான்''[3]

இது தலைவற்குக் கூறுமினென்றது.

களனும், பொழுதும் வரைநிலை விலக்கிக் காதன் மிகுதி உளப்பட: (காதன் மிகுதி உளப்படக் களனும் பொழுதும் வரை நிலை விலக்கி)—அவரிடத்துக் காதன் மிகுதி மனத்து நிகழாநிற்க

---

1. கருத்து: மயிலன்ன தோழீ! பனையென்னும் பேரெண்ணின் அளவாக நாம் இன்பத்தைக் கருதிக் கொண்டிருக்க நல்வினை விளையச் செல்வம் பெருகுதல்போல் பாத்தியில் தினை மிகவிளைய வேங்கை மரமானது பூத்துத் தினை கொய்யும் காலத்தை அறிவித்து நம்மை இப்புனத்தினின்று பிரிவித்தலைப் பாராய்.

2. கருத்து: புன்னைச் சோலையே! யாம் போற்றுமாறு நீ எம் தலைவனைக் காப்பாயாக. பெடையன்னமே எம்மை முழுதும் மறவேல் செல்லூரின் நெடுங்கடலே நீயும் எம்மை நினைக.

3. கருத்து: எம்மை விரும்பிய தாயர் எம்மை இற்செறித்தலான் யாங்கள் பண்டை நல்வினை யில்லாமையால் எம்மூர் செல்கிறோம். தாழைக் குலமே, தாமரைகாள் இங்கு வரும் எம் தலைவர்க்கு வெட்கப்படாமல் எம் நிலையைச் சொல்லுங்கள்.

இருவகையிடத்தையும் இருவகைக் காலத்தையுந் தாம் வரைந்து கூறும் நிலைமையைத் தவிர்த்து அவன் வயின் தோன்றிய கிளவி யையும், பிறவும்—கூறியவாறன்றிப் பிறவாறாக அவன் வயின் தோன்றிய கிளவியையும், நாடும் ஊரும் இல்லுங் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ—அவன் பிறந்த நாடும் அதன் பகுதி யாகிய குடியிருப்பும் அவ்வூர்க்கு இருப்பாகிய மனையும் பார்ப் பார் முதலிய நால்வகை வருணமும் அவ்வருணத்துள் இன்னவழி இவனென்றலும் ஒரு வயிற்றுப் பிறந்தோர் பலருள்ளுஞ் சிறப் பித்துக் கூறலும் பிறரின் ஒவ்வாதிறந்தனவாதல் நோக்கித் தலைவனிடத்தே தோழி கூறிய கிளவியோடே கூடி, அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்—அத்தன்மைத்தாகிய நிலை மையின் கூறுபாட்டானே வரைந்து கோடலை விரும்பிய வழி யும், தோழி மேன கிளவி.

'பகற் புணர்களனே' (132) 'இரவுக் குறியே' (131) குறி 'யெனப்படுவது' (130) என்னுஞ் சூத்திரங்களாற் களனும் பொழுதும் உணர்க.

''புன்னை காத்து மன்ன மோப்பியும்
பனியிருங் கானல் யாம்விளை யாட
மல்லலம் பேரூர் மறுகின்
அல்கலு மோவா தலரா கின்றே''[1]

இது பகற்குறி விலக்கியது.

''நெடுமலை நன்னாட நின்வேல் துணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு
ளின்னா வதர்வர வீர்ங்கோதை மாதராள்
என்னா வாளென்னு மென்னெஞ்சு''[2]

(ஐந்-ஐம்-19)

இஃது இரவுக்குறி விலக்கியது.

---

1. கருத்து : புன்னையின் கீழிருந்து புனம்காத்தும் அன்னத்தை ஓட்டியும் இப்படிக் குளிர்ந்த கானலிடத்து யாம் விளையாட ஊர்த் தெருவில் நாளும் அலராகா நின்றது.

2. கருத்து: மலைநாட! நடுஇரவில் வேல் துணையாக அருவி நீந்திக் கொடிய வழியில் நீ வர, குளிர்ந்த மாலையுடைய எந்தோழி என் ஆவளோ என்று வருந்தும் என்நெஞ்சம்.

''இரவு வாரலை யைய விரவுவீ
யகலறை வரிக்குஞ் சாரற்
பகலும் பெறுதியிவ டமென் றோளே''[1] (கலி-49)

இது பகற்குறி நேர்வாள்போல் இரவுக்குறி விலக்கியது.

''திரைமேற்போந் தெஞ்சிய தெண்கழிக் கானல்
விரைமேவு பாக்கம் விளக்காக்—கரைமேல்
விடுவாய்ப் பசும்புற விப்பிகான் முத்தம்
படுவா யிருளகற்றும் பாத்து''[2] (திணை-நூற்-48)

இதுவும் அது. இவை வரவுநிலை விலக்கின.

''வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே''[3] (குறுந்-18)

இது காதன் மிகுதி கூறியது.

'பிறவும்' என்றதனால்,

''கோடீ ரிலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழ்ந்து பனியா னாவே
துன்னரு நெடுவரை ததும்பிய வருவி
தண்ணென் முழவி னிமிழிசை காட்டு
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்கனாட நின்னயந்தோள் கண்ணே''[4]
(குறுந்-365)

இஃது 'யான் வரையுந் துணையும் ஆற்றுவளோ' என்றாற்கு ஆற்றாளென்றது.

---

1. கருத்து: ஐய! புணர்ச்சி வேண்டி இரவில் வாரற்க. இவள் மென்தோளைப் பலமர்கள் அழகுபடுத்தும் மலைச்சாரலில் பகலிலும் பெறுவாய்.

2. கருத்து: இப்பி கக்கிய முத்துகள் பாக்கத்து இருள்படும் இடம் எல்லாம் அவ்விருளைப் போக்கும்.

3. கருத்து: பக்கம் 319-ல் காண்க.

4. கருத்து: அருவி முழவுபோல இசைக்கும் பலாமரம் உடைய மலைநாடனே! நீ விரும்பியவள் கண்கள் வளைகழல அழுது நீர் ஒழுகுதல் அடங்காவாம்.

''நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட
வல்லைமன் றம்ம பொய்த்தல்
வல்லாய் மன்றநீ யல்லது செயலே''[1]

(ஐங்குறு-287)

இது தலைவனைப் பழித்தது.

''கானற் கண்டற் கழன்றுகு பைங்காய்
நீனிற வருங்கழி யுட்பட வீழ்ந்தெழ
வுறுகா றூக்கக் தூங்கி யாம்பல்
சிறுவெண் காக்கை யாவித் தன்ன
வெளிய விரியுந் துறைவ வென்று
மளிய பெரியோர் கேண்மை நும்போற்
சால்பெதிர் கொண்ட செம்மை யொருத்தி
தீதி னெஞ்சங் கையறுபு வாடி
நீடின்று விரும்பா ராயின்
வாழ்தன்மற் றெவனோ தேய்கமா தெளிவே''[2]

(நற்றிணை-345)

இஃது ஆற்றாத தலைவியைக் கடிதின் வரைவேனென்று தலைவன் தெளிவிக்கப் புக்குழித் தோழி தெளிவிடை விலக்கியது.

''குன்றக் குறவன் காதன் மடமகள்
வென்றோட் கொடிச்சியைப் பெறற்கரிது தில்ல

---

1. கருத்து: பக்கம் 319-ல் காண்க.

2. கருத்து : துறைவ ! இரங்குதலையுடைய பெரிய கேண்மையுடைய நும்மைப் போலும் பெரியோர் தாம் உரைத்த சூளுறவினைத் தெளியாந் நெஞ்சத்துடனே சூளுறப் பெற்றார் செயலிழந்து வாடும்படி நெடுங் காலம் அவரை விரும்பாதிருப்பாராயின் அவர் வாழ்தல் என்பது எப்படி? அதனால் நீ எமக்குச் சூளுறவு செய்து தெளிவித்தலை விடுக.

பைம்புறப் படுகிளி யோப்பலர்
புன்புல மயக்கத்து விளைந்தனை தினையே''[1]

(ஐங்குறு-260)

இது புனங்காவல் இனியின்று என்றது.

''என்னாங்கொ லீடி விளவேங்கை நாளுரைப்பப்
பொன்னாம்போர் வேலவர் தாம்புரிந்த—தென்னே
மருவியா மாலை மலைநாடன் கேண்மை
யிருவியா மேன லினி''[2]

(திணை-நூற்-18)

இது தினை அரிகின்றமையுஞ் சுற்றத்தார் பொருள் வேட்கையுங் கூறியது.

''வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்னோ வணங்கணங்கிற் றென்று
மறியீர்ந் துதிரந்தூய் வேலற் றரீஇ
வெறியோ டலமரும் யாய்''[3] (ஐந்-ஐம்-20)

இது வெறி யச்சுறுத்தியது.

''இனமீ னிருங்கழி யோத முலாவ
மணிநீர் பரக்குந் துறைவ தகுமோ
குணநீர்மை குன்றாக் கொடியன்னாள் பக்க
நினைநீர்மை யில்லா வொழிவு''[4]

(திணைமொழி-44)

இஃது அருள வேண்டும் என்றது.

---

1. கருத்து: பக்கம் 319-ல் காண்க.
2. கருத்து: பொல்லாத வேங்கை தினை கொய்யும் நாளைப் பூத்துத் தெரிவித்தது. கதிர் கொய்யப்பட்டு தாள்களாகத் தினைப்புனம் ஆகும். நம் தந்தையும் தமையன்மாரும் நினக்குப் பரிசமாகப் பெரிதும் பொன்னை விரும்புவர். எனவே இனி அடிக்கடி வந்து பழகிய நாடனொடு கொண்ட நட்பு என்னவாய் முடியுமோ?
3. கருத்து: பக்கம் 320-ல் காண்க.
4. கருத்து: துறைவ! நற்குணத் தன்மை குறையாத மலை போலும் வளமுடைய தன் தோழியிடம் நீ நினைக்கும் தன்மையில்லாமல் விட்டுப் பிரியும் பிரிவு தகுதிய தாகுமோ?

"மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
யிளையோ ராடும் வரிமனை சிதைக்குந்
தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைச்
சில்செவித் தாகிய புணர்ச்சி யலரெழ
வில்வயிற் செறித்தமை யுணராய் பன்னாள்
வருமுலை வருத்த வம்பகட்டு மார்பிற்
றெருமர லுள்ளமொடு வருந்து நின்வயி
னீங்குக வென்றியான் யாங்ஙன மொழிகோ
வருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாண
ரிரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கட் கோசர் நியம மாயினு
முறுமெனக் கொள்குவ ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே"[1]

(அகம்-90)

இது பொருண்மிகக் கொடுத்தல் வேண்டுமென்றது.

இன்னும் வரைவுகடாவுதற் பொருட்டாய் வேறுபட வருவன வெல்லாம் இதனான் அமைக்க.

"கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையோ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேற

---

1. கருத்து: தலைவ! முதியோர் நரைத்தலை போல வெள்ளிய அலையுடைய கடலானது தன் அலையால் இளமகளிர் ஆடும் சிற்றிலைச் சிதைக்கும்படியான தாழையுடைய கடற் கானல் துறையில் நம் சிலர் காதளவில் நின்ற நும் புணர்ச்சியானது பலர் காதுகளுக்கும் எட்டிய அலராகியது. அதனால் தாய் எம்மை இல்லில் செறித்தமையை நீ யுணராய். அதனால் பல நாளும் தலைவியின் மார்பு நின்னை வருத்த வருத்த முறும் உள்ளத்தோடு வரும் உன்னிடம் இனிவாராதே என யான் எப்படிக் கூறுவேன். செல்லூர் கிழக்கேயுள்ள கோசரது கடைத் தெருவாக இருந்தாலும் தலைவிக்குப் பரிச விலையாக அதை எமர் கொள்ள மாட்டார். அதனால் இனி நீ மிக்க பொருளுடன் விரைந்து வந்து வரைந்து கொள்க.

லறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்
குறியா வின்ப மெளிதி னின்மலைப்
பல்வேறு விலங்கு மெய்து நாட
குறித்த வின்ப நினக்கெவ னரிய
வெறுத்த வேஎர் வேய்மருள் பணைத்தோ
ணிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளு மினைய ளாயிற் றந்தை
யருங்கடிக் காவலர் சோர்பத னொற்றிக்
கங்குல் வருதலு முரியை பைம்புதல்
வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே''

(அகம்-2)

'விலங்கும் எய்துநாட' என்று அந்நாட்டினை இறப்பக் கூறி இந்நாடுடைமையிற் 'குறித்த இன்பம் நினக்கெவ னரிய' என வரைதல் வேண்டியவாறும், வேங்கை விரிந்ததனால் தினையறுத்தலின் இற்செறிப்புக் கூறியவாறும், 'கங்குல் வருதலும் உரியை' எனப் பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்வாள்போற் கூறி 'நெடு வெண்டிங்களு மூர்கொண்டன்றே' என்று அதனையும் மறுத்து வரைதற்கு நல்ல நாளெனக் கூறி வரைவு கடாயவாறுங் காண்க.

''காமங் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயி
னோங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ''[1]

(ஐங்குறு-237)

இஃது ஊரை இறப்பக் கூறியது.

'துணை புணர்ந்தெழுதரும்' என்னும் நெய்தற்கலி (135) யுட்.

---

1. கருத்து: பக்கம் 322-ல் காண்க.

"கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ் தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கட் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ;

ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ;

திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ."

என இவை ஒழுக்கமும் வாய்மையும் புகழும் இறப்பக் கூறியன. குடிப்பிறந்தார்க்கு இம்மூன்றுஞ் சிறப்பக் கூறல் வேண்டும். ஏனைய வந்துழிக் காண்க.

இன்னும் 'அனைநிலை வகை' என்றதனானே தலைவி யாற்றாமை கண்டு வரைவு கடாவவோவென்று தலைவியைக் கேட்டலும் சிறைப்புறமாகவுஞ் சிறைப்புறமன்றாகவுந் தலைவி யாற்றாமை கூறி வரைவு கடாவுவனவும் பிறவும் வேறுபட வருவனவும் இதனான் அமைக்க.

"கழிபெருங் கிழமை கூறித் தோழி
யொழியா யாயினொன் றுரைக்கோ தெய்ய"

கடவு ளெற்றிய கருங்கால் வேங்கை
தடவுநிலைப் பலவொடு தாழ்ந்த பாக்கத்துப்
பின்னீ ரோதி யிவடமர்க் குரைப்பதோர்
பெண்யாப் பாயினு மாக வொண்ணுத
லிலங்குவளை மென்றோட் கிழமை
விலங்குமலை நாடநீ வேண்டுதி யெனினே"[1]

---

1. கருத்து: தோழீ! நின்மிகப் பெரிய உரிமையைச் சொல்லி நின் துயர் ஒழியாய் என்றால் யான் தலைவனிடம் சென்று இப்படி யொன்றைக் கூறுவேன். "மலை நாட! எம் தலைவியின் மெல்லிய தோளுக்கு உரிமையை விரும்புவாயானால் தெய்வம் உறையும் உச்சியுடைய வேங்கை மரம் பலா மரத்துடன் உள்ள பாக்கத்தில் உள்ள இவள் தமர்க்கு நின் விருப்பத்தை உரைப்பேன். அது பெண்ணை இற்செறிப்புக்குரியதாயினும் ஆக" என்பதே அக்கூற்றாகும்.

''நிலவு மிருளும் போல நெடுங்கடற்
கழியுங் கானலு மணந்தன்று
நுதலுந் தோளு மணிந்தன்றாற் பசப்பே''[1]

எனவரும்.

ஐயச் செய்கை தாய்க்கு எதிர்மறுத்துப் பொய் என மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்—தலைவிக்குக் கூட்டம் உண்டு கொலென்று தாய் ஐயுற்றவழி அவ்வையப்பட்ட செய்கையைத் தாய்க்கு எதிரே நின்று மறுத்து அதனைப் பொய்யெனவே கருதும்படி அவள் மனத்தினின்றும் போக்கி மெய்யல்லன சில சொற்களை மெய்வழிப்படுத்து அறிவு கொள்ளக் கொடுப் பினும்.

(உ-ம்)

''உருமுரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிரு ணடுநாண்
மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை யிமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலி னொல்குவ ளொதுங்கி
மிடையூர் பிழியக் கண்டனெ னிவளென
வலையல் வாழிவேண் டன்னைநம் படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவி னணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலு முண்டே யிவடான்
சுடரின்று தமியளாய்ப் பனிக்கும் வெருவர
மன்ற மராத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரு மதன்றலைப்
புலிக்கணத் தன்ன நாய்த்தொடர் விட்டு
முருகி னன்ன சீற்றத்துக் கடுந்திற

1. கருத்து: நிலவுபோல வெண்மணலும் இருள்போல உப்பங்கழியிடமும் அழகு பெற்றன. ஆனால் இவள் நுதலும் தோளும் பசலையால் அழகு பெற்றன. ஐயோ பாவம்!

லெந்தையு மில்லா னாக
வஞ்சுவ னல்லலளோ விவளிது செயலே''[1]

(அகம்-158)

இது மிடையை ஏறி இழிந்தாளென்றது காரணமாக ஐயுற்ற தாயைக் கனவு மருட்டலும் உண்டென்றது முதலாகப் பொய் யென மாற்றி அணங்கும் வருமென மெய்வழிக் கொடுத்தது. இது சிறைப்புறமாகக் கூறி வரைவுகடாதலின் அதன்பின் வைத் தார்.

''வேங்கை நறுமலர் வெற்பிடையாங் கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றாங்கெனைத்தும்
பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் டாம்''[2]

(ஐந்-ஐந்-15)

இதுவும் அது.

அவன் விலங்குறினும்—தன்னானுந் தலைவியானும் இடை யீடு படுதலின்றித் தலைவனாற் கூட்டத்திற்கு இடையூறு தோன்றினும்; அது வரைவிடைப் பொருட் பிரிவும், வேந்தற் குற்றுழியும், காவற் பிரிவுமாம்.

(உ-ம்):

''செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான்றவை யெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைஇய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி''[3]

(கலி-19)

---

1. கருத்து: பக்கம் 324-ல் காண்க.
2. கருத்து: பக்கம் 324-ல் காண்க.
3. கருத்து: இனியன சொல்லி முயங்கிய முதற்புணர்ச்சி நாளில் கூறிய யாவும் பொய் என்பதை யான் எப்படி அறிவேன். ஊராரிடத்து அலர் தூற்றத்தந்து நீ வெஞ் சுரம் போக நினைத்தலை அறிந்தேன். நீ நல்ல மகன் அல்லை.

''நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண வியையுங்கொ லென்றோழி
வண்ணந்தா வென்கந் தொடுத்து''[1]

(ஐந்-எழு-66)

களம்பெறக் காட்டினும்—காப்பு மிகுதியானுங் காதன் மிகுதியானுந் தமர் வரைவு மறுத்ததினானுந் தலைவி ஆற்றா ளாயவழி இஃதெற்றினா னாயிற்றெனச் செவிலி அறிவரைக் கூஉய் அவர் களத்தைப் பெறாநிற்கத் தலைவியை அவர்க்கு வெளிப்படக் காட்டினும்.

களமாவது—கட்டுங் கழங்கும் இட்டுரைக்கும் இடமும் வெறி யாட்டிடமுமாம்

(உ-ம்)

''பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயி லாலுநம்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோ
னாண்டகை விறல்வே ளல்லனிவள்
பூண்டாங் கிளமுலை யணங்கி யோனே''[2]

(ஐங்குறு-250)

இது கழங்கு பார்த்துழிக் கூறியது.

''கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
யறியா வேலன் வெறியெனக் கூறு

---

1. கருத்து: என் தோழீயே! பரதவர் தந்த பன்மீன் வற்றல்களைப் புட்கள் கவரும் கடற்றுறைவனை நம் கண்காண இியையுமோ. கண்டால் அவனை வளைத்து நீ கவர்ந்து சென்ற எம் அழகைத் தா எனக் கேட்பேம்.

2. கருத்து : பொய்ம்மையிற்பட்டு மெய்ம்மையையறியாத கழங்கே; இவளுடைய முலை வருந்தப் புல்லி நட்புற் றவன் மலைச்சாரலில் மயில்கள் ஆடும் வள்ளிக்கொடி நிறைந்த கானத்துக்குரிய ஆண்மகனாவான். செவ்வேள் அல்லன். அறிக.

மதுமனங் கொள்குவை யனையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே''[1]

(ஐங்குறு-243)

இது தாயறியாமை கூறி வெறி விலக்கியது.

''அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயி
னென்பயஞ் செய்யுமோ வேலற்கு வெறியே''[2]

(ஐங்கு-244)

இது தலைவிக்குக் கூறியது.

''நெய் தனறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழு மார்ப
னருந்திறற் கடவு ளல்லன்
பெருந்துறைக் கண்டிவ ளணங்கி யோனே''[3]

(ஐங்-182)

இது வேலற்குக் கூறியது.

''கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பக் குறமக
ளருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்

---

1. கருத்து: அன்னாய்! இவள் கண்கள் தனிமையுற்று அழக்காரணம் கடவுளைப் பரவி வெறியாடுவதல்லது வேறு அறியாத வேலனைக் கேட்டு அவன் வெறி எனக் கூறும் இயல்புடையான் ஆகலின் வெறி எடுத்தல் வேண்டும் என்றாக நீ அவன் சொல்வதையே மனத்திற் கொள்ளாநின்றாய். இவள் நோய்க்கு மருந்து வெறி யன்று எனத் தெளிக.

2. கருத்து: பக்கம் 325-ல் காண்க.

3. கருத்து: பெருந்துறையில் இவளைக் கூடி வருத்தமுறு வித்தவன் கடவுள் அல்லன். நெய்தல் மலரை செருந்தி மலரோடு விரவித் தொகுக்கப்பட்ட நறிய மாலை மணம் கமழும் மார்புடைய மகனாவான்.

நின்னணங் கன்மை யறிந்து மண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறியிடை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே''[1]

(நற்றிணை-34)

இது முருகற்குக் கூறியது,

''அன்னை தந்த தாகுவ தறிவென்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயி
னருவரை நாடன் பெயர்கொலோ வதுவே''[2]

(ஐங்குறு-247)

இது தமர் கேட்பக் கூறியது.

பிறன் வரைவு ஆயினும்—நொதுமலர் வரையக் கருதிய வழித் தலைவி சுற்றத்தார் அவ்வரைவினை ஆராயினும் தோழி தலைவற்குந் தலைவிக்குங் கூறும்.

(உ-ம்)

''கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை
முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பைக்
கொழுமீன் கொள்பவர் பாக்கங் கல்லென
நெடுந்தேர் பண்ணி வரலா னாதே
குன்றத் தன்ன குவவுமண னீந்தி
வந்தனர் பெயர்வர்கொ றாமே யல்க
லிளையரு முதியருங் கிளையுடன் குழீஇக்
கோட்சுறா வெறிந்தெனச் சுருங்கிய நாட்பின்
முடிமுதிர் பரதவர் மடமொழிக் குறுமகள்
வலையுந் தூண்டிலும் பற்றிப் பெருங்காற்

---

1. கருத்து: பக்கம் 326-ல் காண்க.

2. கருத்து: அன்னை வேலனை வெறியாட அழைத்ததும் அவன் சொல்வது இன்னதென்பதும் யான் அறிவேன். அவ்வேலன் இவள் வருத்தத்துக்கு முருகன் காரணம் ஆவான் எனின் அம்முருகு என்னும் பெயர் மலைநாடன் பெயராகுமோ கூறுக.

றிரையெழு பௌவ முன்னிய
கொலைவெஞ் சிறாஅர் பாற்பட் டனளே''[1]

(நற்றிணை-207)

இது நொதுமலர் வரைவு மலிந்தமை தோழி சிறைப் புறமாகக் கூறியது. 'பாற்பட்டனள்' எனத் தெளிவுபற்றி இறந்த காலத்தாற் கூறினாள்.

''இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கின்
கண்ணகன் றூமணி பெறூஉ நாட
னறிவுகாழ்க் கொள்ளு மளவைச் செறிதொடி
யெம்மில் வருகுவை நீயெனப்
பொம்ம லோதிநீவி யோனே''[2]

(குறுந்-379)

இது தாய் கேட்பத் தோழி தலைவிக்குக் கூறியது.

அவன் வரைவு மறுப்பினும்—தலைவி சுற்றத்தார் தலைவற்கு வரைவு மறுத்த வழியும், தோழி அறத்தொடு நிலையாற் கூறும்.

(உ—ம்).

''அலங்குமழை பொழிந்த வகன்க ணருவி
யாடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலுழு மன்னாய்''

(ஐங்குறு-220)

''குன்றக் குறவன் காதன் மடமக
ளணிமயி லன்ன வசைநடைக் கொடிச்சியைப்

---

1. கருத்து: கொழுமீன் கொள்பவர் பாக்கத்தில் நெடிய தேரை அலங்கரித்து வருதலை அமையார் அவர். குன்றம்போலும் உயர் மணலை நீந்தி வந்த அவர் வறிதே பெயர்வர் போலும். இனிப் பரதவர் குறுமகள் வலையும் தூண்டிலும் பற்றிய பரதவச் சிறார்பால் அகப்பட்டொழிந்தாள். என்னே துயர்.

2. கருத்து: பக்கம் 332-ல் காண்க.

பெருவரை நாடன் வரையு மாயிற்
கொடுத்தனெ மாயினோ நன்றே
யின்னு மானாது நன்னுத றுயரே''[1]

(ஐங்குறு-230)

என்வரும். தலைவிக்குக் கூறுவனவுங் கொள்க.

''அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்பவ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே''[2]

(குறுந்-146)

இது தமர் வரைவு மறுப்பரோவெனக் கவன்றாட்குத் தோழி கூறியது.

''நுண்ணேர் புருவத்த கண்ணு மாடு
மயிர்வார் முன்கை வளையுஞ் செற்றுங்
களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி
யெழுதரு மழையிற் குழுமும்
பெருங்க னாடன் வருங்கொ லன்னாய்''[3]

(ஐங்குறு-218)

இது தமர் வரைவு மறுத்துழி ஆற்றாத தலைவிக்குத் தோழி தீயகுறி நீங்கி நற்குறி தனக்குச் செய்யக் கண்டு கடிதின் வரைவரெனக் கூறியது.

---

1. கருத்து: பக்கம் 327-ல் காண்க.
2. கருத்து: தோழி! நம் ஊரவையிடத்துப் பிரிந்தவரைச் சேர்த்து வைக்கும் சான்றோரும் உளர் போலும். நம் தலைவனின் தமர் நம் தந்தையர் தமையன்மார் கூறுவனவற்றை நன்று நன்று என்று கூறுதலும், நம்மவர் தலைவன் தமருடன் நும் வருகை பெரிது எனக் கூறுவது செய்தனர். அதுவே காரணம்.
3. கருத்து: அன்னாய்! என் கண் துடித்தலாலும் வளைகள் கைகளை விட்டு நெகிழாது செறிதலினாலும் பெருமலைநாடன் வருவான். ஆகலின் நீ வருந்துதல் ஒழிக.

முன்னிலை அறன் எனப்படுதல் என்றிருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்: அறனெனப்படுதல் இருவகைப் புரைதீர் முன்னிலையென்று கிளவி தாயிடைப் புகுப்பினும்— அறனென்று சொல்லப்படுந் தன்மை இருவர் கண்ணுங் குற்றந் தீர்ந்த எதிர்ப்பாடென்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்துஞ் செலுத்தினும்.

என்றது, புனறருபுணர்ச்சியும், பூத்தருபுணர்ச்சியும், களிறு தருபுணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவளை நற் றாய்க்குக் கூறுதலை நிகழ்த்துவித்தலாம். எனவே அவள் தந்தைக்குந் தன்னையர்க்கும் உணர்த்துதலும் அதனை மீண்டு வந்து தலைவிக்கு உணர்த்துதலும் பெற்றாம். அவ்வறத்தொடு நிலை எழுவகைய (207) எனப் பொருளியலுட் கூறுப.

(உ-ம்)

''காமர் கடும்புனல் கலந்தெம் மொடாடுவாள்''

என்னுங் குறிஞ்சிக் கலி (39)யுள்.

''தெருமந்து சாய்த்தார் தலை''

எனப் புனறரு புணர்ச்சியால் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பச் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப அவள் ஏனை யோர்க்கு அறத்தொடு நின்றவாறு காண்க.

''வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா
வெழிலு முலையு மிரண்டற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து''[1]
(திணை-நூற்-15)

''சான்றோர் வருந்திய வருத்தமு நமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
திருமணி வரன்றுங் குன்றுங் கொண்டிவள்
வருமுலை யாகம் வழங்கினோ நன்றே

1. கருத்து: வாடாத சான்றோர் வரவை எதிர்கொண்ட வராகி மனம் கோணாமல் நீவிர் இவளை மணந்து கொடுப்பின் அல்லது இவள் அழகும் முலையுமாகிய இரண்டிற்கும் இவ்வுலகமும் விலையாகுமோ?

யஃதான் றடைபொருள் கருதுவிராயிற் குடையொடு
கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோ
டுள்ளி விழவி னுறந்தையுஞ் சிறிதே''[1]

இவை நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நின்றன.

''அன்னாய் வாழிவேண் டன்னை யென்னை
தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
யென்ன மரங்கொலவர் சார லவ்வே''[2]

(ஐங்குறு-201)

இது தழை தந்தமை கூறிற்று.

''சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து—தெள்ளி
யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணாற் கடிந்தா னுளன்''[3]

(திணை நூற்-2)

இது களிற்றிடையுதவி கூறிற்று.

''வில்லார் விழவினும் வேலாழி சூழுலகி
னல்லார் விழவகத்து நாங்காணே—நல்லா
யுவர்க்கத் தெறிதிரைச் சேர்ப்பனோ டொப்பார்
சுவர்க்கத் துளராயிற் சூழ்''[4] (திணை-நூற்-62)

---

1. கருத்து: தலைவன் அனுப்பிய சான்றோர் நம்மிடம் பெண் கேட்டு வந்து வருந்திய வருத்தத்தையும் நமது குடிமையையும் நோக்கி அவர் தரும் மணி கொழிக்கும் மலையைப் பரிசமாகக் கொண்டு இவள் முலையா கத்தை மணந்து கொடுப்பின் நல்லது. இல்லையேல் மிக்க பொருளையே பரிசமாகக் கருதுவீராயின் செம்பி யனின் விழவுடைய வஞ்சி நகரமும் உள்ளி விழா நடை பெறும் உறையூரும் சிறியனவேயாகும்.
2. கருத்து; பக்கம் 333-ல் காண்க.
3. கருத்து: நறவ மலர் நீலமலர் ஆகியவற்றை அசோக மலருடன் கொய்து கட்டி இவள் கூந்தலின்மேல் ஆய்ந்து சூடியதுடன் பரண் இருந்து இவளால் காவ விருந்து கடியப் படாத கடா யானையையும் தன் அம்பால் கடிந்தான் ஒருவன் உளன்.
4. கருத்து: அன்னையே! உவர்க் கடற்கரையில் இவளுக்கு

இது செவிலி தலைவியைக் கோலஞ் செய்து இவள் நலத்திற்கு ஒப்பான் ஒருவனைப்பெற வேண்டுமென்றாட்குத் தோழி கூறியது.

''பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
துறைபடி யம்பி யகமனை யீனுந்
தண்ணந் துறைவ னல்கி
னொண்ணுத லரிவை பாலா ரும்மே''[1]

(ஐங்குறு-168)

இது, நொதுமலர் வரைவுழி ஆற்றாது பசியட நின்றுழி இதற்குக் காரணமென் னென்ற செவிக்குத் தோழி கூறியது.

''எந்தையும் யாயு முணரக் காட்டி
யொளித்த செய்தியின் வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் றலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கை யினொன்றோ வின்றே
முடங்க விறைய தூங்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணை தொடுத்த
கூடினு மயங்கிய மைய லூரே''[2]

(குறுந்-374)

இஃது அறத்தொடு நின்றமை தலைவிக்குக் கூறியது.

ஓர் உதவி செய்த சேர்ப்பனைப்போல்வாரை வில்வீரர் விழா விடத்தும் மகளிர் விழாவிடத்தும் யாம் காண வில்லை. ஒரு கால் சுவர்க்கத்தில் உள்ளாராயின் நீ சென்று பார்ப்பாயாக.

1. கருத்து: பெரிய கடற்கரையில் உள்ள சிறு வெண் காக்கையானது கடற்றுறையில் உள்ள தோணியில் கூடமைத்து முட்டையிடும்படியான தண்ணந் துறைவன் இவளை வரைந்து கொண்டு அருள் செய்வானாயின் ஒள்ளிய நுதலுடைய அரிவையாகிய இவள் பால் உண்டுத் துயர் ஒழிவாள்.

2. கருத்து: தோழி! நம் மறைந்த ஒழுக்கத்தை தந்தையும் தாயும் அறியுமாறு யான் கூறத் தலைவனும் அவரிடம் வந்து நின்னை மணம் வேண்டியிரக்க இதுவரை தூக்கணங் குருவிக் கூடுபோல பின்னி மயங்கிக் கிடந்த இவ்வூரும் நம் பக்கமாக ஒத்து வந்தது.

வரைவு உடன்பட்டோற் கடாவல் வேண்டினும்—தலைவி தமர் வரைவுடன்படத் தானும் வரைவுடன்பட்ட தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்துழி இனி நீட்டிக்கற்பாலை யல்லையெனக் கடுஞ்சொற் கூறி வரைவு கடாவல் வேண்டிய இடத்தும்.

(உ-ம்) :

''மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்:
ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்:

ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைத
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ பூண்கநின் றேரே''[1]

(கலி-133)

---

1. கருத்து: கானலிடத்து மணல் மேலே தாழம்பூப்பூத்தது போலத் தோன்றும்படியாகக் குருகுகள் தங்கும் தாழையையுடைய துறைவனே! கேட்பாயாக. இல்லறம் நடத்துதல் என்பது வறியர்க்கு ஒன்று உதவுதலாம். பாதுகாத்தல் என்பது கூடினாரைப் பிரியாமை. பண்பென்று சொல்லப்படுவது உலக நடையறிந்து நடத்தல். அன்பு எனப்படுவது தன் சுற்றத்தாரைக் கெடாமல் பார்த்தல். அறிவு எனப்படுவது அறியாமையுடையார் தன்னைக் கூறும் சொல்லைப் பொறுத்தல். உறவு

இது முற்காலத்து வரைவு கடாவுமாறு போலன்றி வரைவு கடாயது.

''யாரை யெலுவ யாரே நீயெமக்
கியாரையு மல்லை நொதும லாளனை
யனைத்தாற் கொண்கவெம் மிடையே நினைப்பிற்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் குட்டுவன்
வேந்தடு மமயத்து முரசதிர்ந் தன்ன
வோங்கற் புணரி பாய்ந்தாடு மகளி
ரணிந்திடு பல்பூ மரீஇ யார்ந்த
வாபுலம் புகுதரு பேரிசை மாலைக்
கடல்கெழு மரந்தை யன்னவெம்
வேட்டனை யல்லையா லலந்தந்து சென்மே''[1]

(நற்றிணை-395)

இது நலந்தொலைவுரைத்து வரைவு கடாயது.

எனப்படுவது உறவுடையார் கூறியதை மறாமை. நிறை எனப்படுவது தாம் மறைத்து வைத்த ஒன்றைப் பிறர் அறியாமல் வைத்திருப்பது. நீதி என்பது தமராயினும் அவர் செய்த குற்றத்துக்கேற்ப உயிர் வௌவுதல். பொறை எனப்படுவது பகைவரைக் காலம்வரும் துணையும் பொறுத்திருத்தல். அக் குணங்களையெல்லாம் நீ அறிந்தனை என்றால் யான் கூறுவதைக் கேள். நீ என் தோழியின் நலன் உண்டு அவளைத் துறத்தலானது பாலை யுண்டு கலத்தைத் துறப்பது போலாம். நின்னால் வருத்தம் உற்ற என் தோழியை வரைந்து கொள்வதால் துயர் போக்குவாயாக. அதற்காக நின் தேர் விரைவில் பூட்டப்படுவதாக.

1. கருத்து: எலுவ! (நண்பனே) யாரை நீ நட்பாக வுடையை. எமக்கு நீ என்ன உறவு? எமக்கு எந்த உறவினனும் இல்லை. நொதுமலாளனே யாவாய். நீ எம்மிடையே நடந்து கொள்வதை நினைப்பின் அப்படிப் பட்டதாயிருந்தது. குட்டுவனது பகைக் களத்து முரசு ஒலிப்பதுபோல் ஒலியுடைய கடலில் மகளிர் ஆடிக் கழித்த மலர்களையுண்ட பசு தம்பதி திரும்பும் மாலைக் காலத்தையுடைய கடல் பொருந்திய மாந்தை நகர் போலும் வளமுடைய எம்மை நீ விரும்பினாய் என்றால் நின்னால் யாங்கள் இழந்த நலனைத் திரும்பத் தந்துவிட்டுச் செல்வாயாக.

ஆங்கு அதன் தன்மையின் வன்புறை உளப்பட—அங்ஙனம் கடாவியவழி அவ்வரைந்துகோடல் மெய்யாயினமையின் வதுவை முடியுமளவும் ஆற்றுதற்கு வற்புறுத்துக் கூறுதல் உளப்பட:

தன்மை — மெய்ம்மை. எனவே முன் பொய்மையான வற்புறுத்தலும் பெற்றாம்.

(உ-ம்)

''நெய்கனி குறும்பூழ் காய மாக
வார்பதம் பெறுக தோழி யத்தை
பெருங்க னாடன் வரைந்தென வவனெதிர்
நன்றோ மகனே யென்றனெ
னன்றே போலு மென்றுரைத் தோனே''[1]

(குறுந்-389)

இது தலைவன் குற்றேவன் மகனான் வரைவு மலிந்த தோழி தலைவிக்குரைத்தது.

(உ-ம்)

''கூன்முண் முண்டகக் கூனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரிக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயுநனி வெய்ய
ளெந்தையுங் கொடீஇயர் வேண்டு
மம்ப லூரு மவனொடு மொழிமே''[2]

(குறுந்-51)

எனவும் வரும்.

''கொடிச்சி காக்கு மடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி

---

1. தோழீ! தலைவன் வரைவுக் குரியவற்றை மேற்கொண்டானாக அவன் ஏவலனைப் பார்த்துக் குறிப்பாக நன்றோ என வினவினேன். அவனும் வரைவு உறுதி என்பான் நன்று என்றான். அதனால் அவ்வேவலன் குறும்பூழ்ப் பறவைக் குழம்புடன் சோறு பெறுவானாக.

2. கருத்து: பக்கம் 334-ல் காண்க.

கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி
யங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்
றிரையணற் கொடுங்கவு ணிறைய முக்கி
வான்பெய னனைந்த புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையிற் றோன்று நாடன்
வந்தனன் வாழி தோழி யுலகங்
கயங்க ணற்ற பைதறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே''[1]

(நற்றிணை-22)

இதனுள் தினை விளைகாலம் வதுவைக் காலமாயினும் வம்பமாரி இடையிடுதலான் அன்று யான் கூறிய வரைவு பொய்த்தனரேனும் இன்று மெய்யாகவே வந்தனரென்றாள்.

''உரவுத்திரை பொருத பிணர்படு தடவுமுத
லரவுவாள் வாய முள்ளிலைத் தாழை
பொன்னேர் தாதிற் புன்னையொடு கமழும்
பல்பூங் கானற் பகற்குறி வந்துநம்
மெய்கவின் சிதையப் பெயர்ந்தன னாயினுங்
குன்றிற் றோன்றுங் குவவுமணல் வேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
தண்டா ரகலம் வண்டிமிர் பூதப்
படுமணிக் கலிமாக் கடைஇ
நெடுநீர்ச் சேர்ப்பன் வரூஉ மாறே''[2]

(நற்றிணை-235)

---

1. கருத்து: முதலில் முற்றிய தினைக்கதிர்களைப் பறித்துக் கொண்ட மந்தியானது தன் ஆண் கடுவனுடன் மலை மீது ஏறி கதிரை ஞெமிடிக் கொண்டு தினைகளைக் கவுளில் அடக்கி மழையில் நனைந்த முதுகுடன் காணும் காட்சியானது நோன்பு மகளிர் தைம்மாதத்து நோன் பிருந்து உண்ண இருக்கும் இருப்புப்போல் தோன்றும் படியான நாடன் இதோ நின்னை வரைந்தெய்த வந்தான். மழையற்ற வறண்ட காலத்தில் இரவில் சூல் கொண்ட நெற்பயிருக்கு மழை பொழிந்தது போல நாம் மகிழ வந்தான்.

2. கருத்து: தோழீ! தாழையானது புன்னையொடு கமழும் பூங்கானலில் பகற்குறியிடம் வந்து நம்மை

இது தலைவன் வரைவொடு வருகின்றமை காண்கம் வம்மோ வென்றது.

பாங்குற வந்த நாலெட்டும்—பாங்கியர் பலருள்ளும் பாங் காந் தன்மை சிறப்பக் கூறிய முப்பத்திரண்டும். 'நாலெட்டும்' என் உம்மை விரிக்க.

வகையும்—இக்கூற்றுக்களிலே வேறுபட வருவனவும், தாங் கருஞ் சிறப்பின் தோழிமேன—பொறுத்தற்கரிய சிறப்பினை யுடைய தோழியிடத்தன என்றவாறு.

எனவே, ஒன்றிய தோழிக்கன்றி ஏனையோர்க்கு இக்கூற்று இன்றென்றான். தாய்த்தாய்க் கொண்டுவருஞ் சிறப்பும், இருவர் துன்பமுந் தான் உற்றாளாகக் கருதுஞ் சிறப்பும் உடைமையின் 'தாங்கருஞ் சிறப்பு' என்றான். உரைத்துழிக் கூட்டத் தோடே அகற்சியும் என்றலும் ஊட்டலும் உரைத்தலும் அச்சுறுத்தலும் எஞ்சாமற் கிளந்த இருநான்கு கிளவியும் பாங்குற வந்த என்க, நாட்டத்தின்கண்ணும் எஞ்சாமற் கிளந்த என்க. என்றது, ஆராய்ச்சியுடனே இவ்வெட்டுங் கூறுமென் றான். பெயர்ப்பினும் ஒழிப்பினும் உரைத்துழிக் கூட்டத் தோடு எஞ்சாமற் கிளந்த என்க. ஏனைப் பொருள்கள் ஏழனு ருபும் வினையெச்சமுமாய் நின்றவற்றைப் பாங்குற வந்த என்பத னோடு முடித்து, அப்பெயரெச்சத்தினை நாலெட்டென்னும் பெயரோடு முடித்து அதனைத் தோழி மேனவென முடிக்க.

இனி 'வகை' யாற் கொள்வன வருமாறு:—

''அன்னை வாழிவேண் டன்னை நெய்த
னீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவ
னெந்தோ டுறந்த காலை யெவன்கொல்
பன்னாள் வருமவ னளித்த போழ்தே''[1]

(ஐங்குறு-109)

நுகர்ந்து நம் மெய்யின் நலம்கேடச் சென்றானாயினும் இனிவரைவோடு வருதலைக் குன்றம்போல் உயர்ந்து தோன்றும் வெண்மணலில் ஏறி நின்று காண்போம் வா தோழி.

1. கருத்து: அன்னாய்! வாழி துறைவன் எம் தோளை மணந்த காலத்தில் என்னைத் தெளிவித்துக் கூறிய சொற்கள் வரைவிடை வைத்துப் பிரிந்த இக்காலத்தில் பல முறையும் நெஞ்சில் வருகின்றன. என்ன காரணம்?

இஃது அறத்தொடு நின்றபின் வரைவான் பிரிந்து நீட்டித் துழி ஐயுற்ற செவிலி அவன் நும்மைப் பிரிந்தான் போலும்' நுங்கட்கு அவன் கூறிய திறம் யாது என்றாட்குத் தோழி கூறியது.

''அன்னை வாழிவேண் டன்னை கழனிய
முண்டக மலரும் தண்கடற் சேர்ப்பன்
எந்தோள் துறந்தன னாயின்
எவன்கொல் மற்றவ னயந்த தோளே[1]

(ஐங்குறு-108)

இஃது அறத்தொடு நின்றபின் வரைவுநீட மற்றொரு குலமகளை வரையுங்கொல் என்று ஐயுற்ற செவிலிக் குறிப் பறிந்த தோழி அவட்குக் கூறியது.

''அன்னை வாழிவேண் டன்னை புன்னையொடு
ஞாழல் பூக்குந் தண்ணந் துறைவ
னிவட்கமைந் தனனாற் றானே
தனக்கமைந் தன்றிவண் மாமைக் கவினே''[2]

(ஐங்குறு-103)

இது வதுவை நிகழாநின்றுழித் தாய்க்குக் காட்டித் தோழி கூறியது.

''கன்னவி றோளான் கடிநாள் விலக்குதற்
கென்னை பொருணினைந்தா ரேந்திழாய்—பின்ன
ரமரேற்றுக் கொள்ளுமென் றஞ்சினே னஞ்சார்
நமரேற்றுக் கொள்ளாத ஞான்று''[3]

இது சுற்றத்தார் பொருள் வேண்டி மறுத்தா ரென்றது.

---

1. கருத்து: அன்னாய்! வாழி! இதனைக்கேள், எம் தோளைச் சேர்ப்பன் துறந்தானாயின் அவன் விரும்பிக் கூடிய எம் தோள்கள் இனி என்னாகும்?

2. கருத்து: அன்னாய்! விரும்பிக் கேள். புன்னையுடன் ஞாழல் பூக்கும் குளிர்ந்த அழகிய துறைவன் இவட்கே அமைந்தானாகலின், இவள் மாமைக்கவினும் தானே அமைவதாயிற்றுக் காண்.

3. கருத்து: மலைபோலும் தோளுடைய நம் தலைவ னுக்கு மணந்து கொடுக்கும் நாளை நமர் மறுத்தார்கள்.

''நொதும லாளர் கொள்ளா ரிவையே
யெம்மொடு வந்து கடலாடு மகளிரு
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையா
ருடலகங் கொள்வோ ரின்மையிற்
றொடலைக் குற்ற சில பூவினரே''[1]

(ஐங்குறு-187)

இது கையுறை மறுத்தது.

''அம்ம வாழி தோழி நம்மலை
வரையா மிழியக் கோட னீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியுந்
தண்பனி வடந்தை யச்சிர
முந்துவந் தனர்நங் காத லோரே''[2]

(ஐங்குறு-223)

இது வரைவிடைப் பிரிந்தோன் குறித்த பருவத்திற்கு முன் வருகின்றமையறிந்த தோழி தலைவிக்குக் கூறியது.

எவ்வளவு பொன்னை விரும்புகிறார்கள்? ஏந்திழையே! நமர் அவருடன் மணத்தை ஏற்காத நாளில் பின்னர் அமர் வரும் என்று அஞ்சினேன்.

1. கருத்து: பெரும! நீ கொண்டு வந்துள்ள நெய்தல் மலரே தலைமை மலராகக் கொண்டு புனைந்துள்ள இந்த பகைமையான தழை மாலையை எம்முடன் வந்து புனலாடும் மகளிர் தம் பாவைக்கும் புனையார். வேறு மலர் விரவாமல் நெய்தல் மலரே தொடுத்து அணிந்து கொள்வோரும் இலர். ஆகலின், மாலை தொடுப்போரும் இதனிற் சில மலரே கொள்வர். ஆகலின் இத்தழை மாலையை யாம் ஏற்பின் நொதுமலாளரும் ஆராய்தற்கு இடமாமே.

2. கருத்து: தோழீ! கேட்பாயாக மலையினின்றும் அருவி யிழியச் செங்காந்தள் மலர காதலர்ப் பிரிந்தோர் துன்புற வருத்தும் குளிர்ந்த வாடைக் காற்று வரும் முன்பனிக் காலத்து வருவதாகப் பிரிந்து சென்ற காதலர் சொன்ன அப்பருவம் வருவதற்கு முன்னரே வந்தார்.

செவிலி கூற்று

113. களவுஅலர் ஆயினும் காமம்மேற் படுப்பினும்
அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்
கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்
காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்
தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்து மகள்நெஞ்சு வலிப்பினும்
இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு
அன்னவை பிறவும் செவிலி மேன (25)

ஆ. மொ.

இல.

When the secret love becomes a subject of talk among the public, when the love makes marks upon the body, when the love becomes excess, when seeing the lovers at their meeting, at the action of two who being possessed by the spirit of Velan perform the ceremony by 'Kattu' and Kaḷangu', when the evil comes upon the lady-love even after performing the veṟi dances, when the lady love prattles in the dream because of the excess of love, at the questioning of the maid-friend, at the worship of God, after knowing the elopement and consulting the maid-servant, when upholding the chastity of the lady-love, on the separation of the lady-love when she is being leftout, when the daughter determines to elope with her lover, and when the families of both sides are being equal-these thirteen and such other occasions are the places of the expressions for the foster-mother.

இளம்.

என்றது, மேற் றலைவற்குந் தலைவிக்குந் தோழிக்குமுரிய கிளவியெல்லாங் கூறி இனிச் செவிலிக்குரிய கிளவி யுணர்த்துதல் நுதலிற்று.

களவலராதல் முதலாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று கிளவியும் அத்தன்மைய பிற கிளவியும் களவுகாலத்துச் செவிலியின் மேலன என்றவாறு. இவற்றுள் தோழியை வினாத லென வேறொரு கிளவியாக ஓதினாராயினும், அதன் முன்பு நிகழும் கிளவியெல்லாம் அவளை வினாதற்குக் காரணமாதலின் அவை யீண்டுப் பதின்மூன்றென வெண்ணப்பட்டன வென்க.

(இ-ள்) : களவலராயினும் என்பது—தலைவன் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப்பட்டவிடத்துத் தோழியை வினாவும் என்றவாறு.

(உ-ம்) :

''பாவடி உரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவ தெவன்கொல்இப் பேதை ஊர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை எழுதிய
நல்லியற் பாவை அன்னஎன்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே''[1]

(குறுந்-89)

காம மேற்படுப்பினும் என்பது—தலைவி மாட்டுளதாகிய வேட்கை அளவிறப்பினும் தோழியை வினாவும் என்றவாறு.

---

1. கருத்து: பொறையனது கொல்லி மலையின் மேற்குப் பக்கத்தில் தெய்வமானது தன்போற் செய்து வைத்த பாவைபோல்வாளாகிய என் மகள் பாடிக் கொண்டே தினையைக் குற்றினால் அவள் ஒருவனைப் பற்றிப் புகழ்ந்த நிலையில் பாடிய வள்ளைப் பாட்டைக் கேட்டு இவ்வூர் மாக்கள் பேசவும் பேசுவர். அவர்கட்கு வரும் அழிவு யாது? தோழியிடம் செவிலி வினவியது.

''மணியில் திகழிதரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு''[1]

(குறள்-1273)

அளவு மிகத் தோன்றினும் என்பது—பெதும்பைப் பருவத்த ளாகிய தலைவி புணர்ச்சியாற் கதிர்த்து வீங்குகின்ற முலையும் புதிதுற்ற கவினுங் கண்டவிடத்துந் தோழியை வினாவும் என்ற வாறு.

''கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட்
பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது''[2]

(குறள்-1272)

தலைப்பெய்து காணினும் என்பது—தலைவனோடு தலைவி யைத் தலைப்பெய்து காணினும் வினாவும் என்றவாறு.

பெய்தென்பதனைப் பெயவெனத் திரிக்க.

''..
மிடையூர் பிழியக் கண்டனென்''

(அகம்-158)

எனவரும்.

கட்டினும் என்பது—கட்டு வைப்பித்தவழியும் அவர் சொற் கேட்டுத் தோழியை வினாவும் என்றவாறு.

கழங்கினும் என்பது—கழங்கு வைத்துழியும் அவர் சொற் கேட்டுத் தோழியை வினாவும் என்றவாறு.

வெறியென விருவரு மொட்டிய திறத்தாற் செய்திக் கண் ணும் என்பது—செவிலியும் நற்றாயும் பொருந்தியபக்கத்துக் கண்டு வெறியாடுவாமென்றவழித் தலைவிசெய்திக் கண்ணுந் தோழியை வினாவும் என்றவாறு.

ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும் என்பது—வெறி யாடிய சென்றவழி அதற்கழிவுறுவிடத்து வரினும் என்ற வாறு.

---

1. கருத்து: மாலையில் உள்ள மணியின் உள்ளே விளங்கும் நூல்போல என் மகளின் அழகில் உள்ளே விளங்குவ தான ஓர் எண்ணம் உண்டு; அஃது யாது?

2. கருத்து: கண் நிறைந்த அழகையும், மூங்கில் போன்ற தோளையும் உடைய பேதைக்குப் பெண்களிடத்தில் நிறைந்த மடமை அளவுக்கு மிஞ்சியுள்ளது.

அஃதாவது "கடவுட் கற்சுனை" எனத் தொடங்கும் நற்றிணைப்பாட்டில்,

"நின்னணங் கன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே"[1]

(நற்றிணை-34)

எனத் தோழி கூறுதல். அவ்வாறு கூறியவழியுங் காரண மென்னை யென வினாவும்.

காதல் கைம்மிகக் கனவி னரற்றலும் என்பது—காதன் மிகுதியால் தலைவனையுள்ளிக் கனவின்கண் அரற்றுதற்கண் ணும் வினாவும்.

தோழியை வினாதலும் என்பது—இவை நிமித்தமாகத் தோழியை வினாதலும் என்றவாறு. எனவே களவலராதல் முதற் கனவினரற்றலீறாக ஓதிய வொன்பது கிளவியும் தோழியை வினாதற் பகுதி. அவை நிகழாதவழி வினாதலில்லை. அதனால் தோழியை வினாதலென ஒரு கிளவியாக எண்ணற்க.

தெய்வம் வாழ்த்தலும் என்பது—இவ்வாறு பட்டதெனத் தோழியுரைத்தவழி; யிதனை நற்றாய்க்கும் தந்தைக்கும் கூற லாற்றாதாள் தெய்வத்தை வேண்டிக் கோடல்.

போக்குடன் அறிந்த பின்...நிற்றற் கண்ணும் என்பது—தலைவனுடன் போயினாள் என்று அறிந்தவழித் தானும் தோழி யோடு கெழுமி இல்லறத்தின்க ணிறுத்தற்கண்ணும் என்ற வாறு.

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி ஆய்கழற்

1. கருத்து: முருகனே! இவட்கு வந்த நோய் நின் வருத்து தலால் வந்ததன்று என்பதை நீ அறிந்திருந்தும் வெறிக் களத்தில் வேலன் வேண்ட வந்தாய். நீ கடவுளா யினும் ஆக. அறியாமையுடையவன்தான்,

சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே''[1]

(குறுந்-15)

பிரிவி னெச்சத்து மகனெஞ்சு வலிப்பினும் என்பது-தலைவன் வரையாது பிரிந்தவழி யொழிந்த தலைமகள் அவராகுதலு மின்றி வேறுபாடுமின்றி ஒருமனைப்பட்டிருந்த வுள்ளக்கருத்தை யறிந்தவழியும் என்றவாறு. வலித்தல் என்பது தெளிதல்.

இருபாற் குடிப்பொரு ளியல்பின்கண்ணும் என்பது—தலைவன் குடிமை தன் குடிமையோ டொக்குமென வாராய்தற் கண்ணும் என்றவாறு.

குடியென்னாது பொருள் என்றதனால் பொருளாங் குண மும் ஆயப்பெறு மென்றவாறு.

அன்னவை பிறவும் என்றதனான்,

''நாற்றம் பெற்று நிலைப்புக் காண்டல்[2]
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கோலஞ் செய்யாமை''

முதலாயின கொள்க. இவையும் வினாதற்கேதுவாம். இவற்றிற் கெல்லாஞ் செய்யுள் வந்துழிக் காண்க.

நச்.

இது செவிலி கூற்று நிகழுமாறு கூறுகின்றது. அக் கூற்றுச் செவிலிதானே கூறப்படுவனவும், தலைவியுந் தோழியுங் கொண்டு கூற்றாகக் கூறப்படுவனவுமென இருவகையவாம். இக் கூறப் பட்ட பதின்மூன்று கிளவியும் அவை போல்வன பிறவுஞ் செவிலி

---

1. கருத்து: வேலுடைய விடலையொடு வளையணிந்த மடந்தைக்கு உண்டான நட்பு அவ்விடலையின் ஊரில் மணப்பறையும் சங்கும் ஆர்ப்பரிப்ப மணந்து அவன் வீட்டில் தங்கியிருக்க நேர்ந்ததால் ஆலமர நிழலில் பொது மன்றத்தில் தோன்றிக் கூறிய நாலூர்க்கோ சர்வாய்மொழி போல உண்மையாகியது.

2. நிலைப்புக் காண்டல்—ஓரிடத்திலேயே நிலைத்திருத்த லைக் கொள்ளல். தன் உடற் பொலிவை அடிக்கடிக் கண்ணாடியிற் காணல் எனினும் ஆம்.

தானே கூறப்படுவனவுந் தலைவியுந் தோழியும் அவள் கூற்றாய்க் கொண்டெடுத்து மொழியப்படுவனவுமாய்ச் செவிலிக்குரியவா மென்றவாறு. 'இன்னவகை' என்றார் தன்கூற்றுங் கொண்டு கூற்றுமாய் நிகழுமென்றற்கு.

(இ-ள்) : களவு அலர் ஆயினும்—களவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாய் அலர் தூற்றப்படினும்.

(உ-ம்)

பாவடி யுரல பகுவாய் வள்ளை
யேதின் மாக்க ணுவறலு நுவல்ப
வழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவென்
மெல்லியற் குறுமகள் பாடிநள் குறினே''[1]

(குறுந்-89

இது செவிலி தானே கூறியது.

''அம்ம வாழி தோழி நென்ன
லோங்குதிரை வெண்மண லுடைக்குந் துறைவற்கு
ஊரார் பெண்டென மொழிய வென்னை
யதுகேட் டன்னா யென்றன ளன்னை
பைபைய வெம்மை யென்றனென் யானே''[2]

(ஐங்குறு-113)

---

1. கருத்து: பொறையனது கொல்லி மலையின் மேற்கே தெய்வம் எழுதி வைத்த கொல்லிப் பாவை போன்ற எம் தலைவியானவள் பரந்த அடிப்பாகம் உடைய உரலில் உள்ள தினையை வள்ளைப் பாட்டுப் பாடிக் கொண்டே குற்றினால் அப்பாடலில் வரும் கருத்துகளைக் கண்டு அயற்பெண்டிர் இவள் களவொழுக்கம் அறிந்து தூற்றினும் தூற்றுவர். அப்படித் தூற்றும் பேதையர் வாழும் ஊர்க்காக நாம் வருந்துவதிற் பயன் என்னை?

2. கருத்து: தோழீ! கேட்பாயாக. ஊரார் துறைவற்குரிய பெண்டு இவள் எனக் கூறும் அலர் கேட்டு அன்னை என்னைப் பார்த்து 'அன்னாய் என்ன இது' என வினவினாள், நான் அதற்கு மெல்ல மெல்ல 'எம்மை'

இதனுள், பெண்டென்றதனைக் கேட்டு அன்னாயென்றனள் அன்னையென அலர் தூற்றினமை கண்டு செவிலி கூறிய கூற்றினைத் தலைவி கொண்டு கூறியவாறு காண்க.

காமம் மெய்ப்படுப்பினும்—தலைவி கரந்தொழுகுங் காமத் தானே அக்களவினை நன்றாயுந் தீதாயும் மெய்க்கண் வெளிப் படுப்பினும்.

(உ-ம்) :

''மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு''[1]

(குறள்-1273)

இது காமத்தால் திகழ்ந்த பொலிவினைச் செவிலி தானே கூறியது.

அளவு மிகத் தோன்றினும்—கண்ணுந் தோளும் முலையும் பிறவும் புணர்ச்சியாற் கதிர்த்துக் காரிகை நீரவாய் அவளிடத்து அளவை மிகக் காட்டினும்:

(உ-ம்)

''கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட்
பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது''[2]

(குறள்-1272)

இது கதிர்ப்புக் கண்டு செவிலி தானே கூறியது.

''பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
வாகத் தரும்பிய சுணங்கும் வம்புடைக்

என்றேன். இதுதான் நேற்று நடந்தது. (எம்மை எனத் தலைவனை உளப்படுத்தி எங்களைப்பற்றி ஊரார் தவறாகக் கூறுகின்றனர் எனக் கூறத் தொடங்கி எம்மை என்ற அளவில் நிறுத்தினாள்)

1. கருத்து: பக்கம் 409-ல் காண்க.

2. கருத்து: கண்ணுக்கு நிறைந்த அழகும் மூங்கில் போலும் தோளும் உடைய இப் பேதைப் பெண்ணுக்கு—காதலிக்குப் பெண்மைத் தன்மை நிறைந்துவிளங்கும் இயல்பு மிகுதியாகவுள்ளது.

கண்ணுருத் தெழுதரு முலையு நோக்கி
யெல்லினை பெரிதெனப் பன்மாண் கூறிப்
பெருந் தோளடைய முயங்கி நீடுநினைந்
தருங்கடிப் படுத்தனள்
,.......... ....
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே''[1] (அகம்-150)

இது தோழி கொண்டுகூறியது.

தலைப்பெய்து காணினும்—இருவர்க்குங் கூட்டம் நிகழ்த லானே தலைவனை இவ்விடத்தே வரக்காணினுந் தலைவியைப் புறத்துப் போகக் காணினும்.

பெய்தென்பது காரண காரியப் பொருட்டாய்ப் பிறவினை கொண்டது.

(உ-ம்)

''இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்கு
லருவி தந்த வணங்குடை நெடுங்கோட்
டஞ்சுவரு விடர்முகை யாரிரு ளகற்றிய
மின்னொளி ரெஃகஞ் சென்னெறி விளக்கத்
தனியன் வந்து பணியலை முனியா
னீரிழி மருங்கி னாரிடத் தமன்ற
குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி
யசையா நாற்ற மசைவளி பகரத்
துறுக லண்ணிய கறியிவர் படப்பைக்
குறியிறைக் குரம்பைநம் மனைவயிற் புகுதரு
மெய்ம்மலி யுவகைய னந்நிலை கண்டு
முருகென வுணர்ந்து முகமன் கூறி
யுருவச் செந்தினை நீரொடு தூஉய்

1. கருத்து: தாரணிந்த மார்புடைய தலைவனே! நீ இவளைக் கூடிப் பிரிந்த காலத்துத் தாயானவள், பின்னலுடைய கூந்தலும் உடம்பிற் சுணங்கும் எழும் முலையும் பார்த்து மிகவும் ஒளியையுடையையானாய் எனப் பல தடவை கூறித் தோளைத் தழுவி ஏதோ பெரிதாக நினைந்து இற்செறிப்புப் படுத்தினாள்.

நெடுவேட் பரவு மன்னை யன்னோ
வென்னா வதுகொ றானே பொன்னென
மலர்ந்த வேங்கை யலங்குசினை பொலிய
மணிநிற மஞ்ஞை யகவு
மணிமலை நாடனோ டமைந்த நந்தொடர்பே''

(அகம்-272

இம் மணிமிடைபவளத்துத் தலைவனைச் செவிலி கண்டு முருகெனப் பராவினமை தோழி கொண்டுகூறினாள்.

'உருமுரறு கருவிய' (158) என்னு மகப்பாட்டினுள்

''மிடையூர் பிழியக் கண்டனெ னிவளென
வலையல் வாழிவேண் டன்னை''

என்றது, தலைவி புறத்துப் போகக் கண்டு செவிலி கூறிய தனைத் தோழி கொண்டுகூறினாள். தானே கூறுவன வந்துழிக் காண்க.

கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும் ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்—கட்டுவிச்சியும் வேலனுந் தாம் பார்த்த கட்டினானுங் கழங்கினானுந் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யாக்கால் இம்மையல் தீராதென்று கூறுதலின் அவ்விரு வருந் தம்மினொத்த திறம்பற்றியதனையே செய்யுஞ் செய்தி யிடத்தும்.

'திறம்' என்றதனான் அவர் வேறு வேறாகவுங் கூறப்படும்.

(உ-ம்)

''பொய்ம்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் கோட்ட சினைஇய வேலன்
கழங்கினா னறிகுவ தென்றா
னன்றா லம்ம நின்றவிவ ணலனே''[1]

(ஐங்குறு-248)

இது வேலன் கழங்கு பார்த்தமை கூறிற்று

---

1. கருத்து: மலையும் வானும் வென்று கொண்ட முருக னது வேலையுடையவன் புதுமணல் பரப்பிய முற்றத்தில் கழங்கினை அழகுபெற இயற்றி அக்கழங்கினால் அறியப் படுவது இவள் நலம் (கற்பு) என்றால் அந்நலம் மிக நன்றாகும்.

''அறியா மையின் வெறியென மயங்கி
யன்னையு மருந்துய ருழந்தன ளதனா
லெய்யாது விடுதலோ கொடிதே நிரையித
ழாய்மல ருண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே''[1]

(ஐங்குறு-242)

இது வெறியென அன்னை மயங்கினமை கூறிற்று.

'அணங்குடை நெடுவரை' என்னும் (22) அகப்பாட்டினுட் கட்டுக்கண்டு வெறியெடுத்தமை கூறிற்று.

'பனிவரை நிவந்த' என்னும் (98) அகப்பாட்டினுட் 'பிரப் புளர்பிரீஇ' எனக் கட்டுவிச்சியைக் கேட்டவாறும் 'என் மகட்கு' எனச் செவிலிகூற்று நிகழ்ந்தவாறுங் காண்க. இதனுள் 'நெடு வேணல் குவனெனினே' எனத் தலைவி அஞ்ச வேண்டியது, இருவரும் ஒட்டிக்கூறாமல் தெய்வந்தான் அருளுமென்று கோடலின்.

''இகுளை கேட்டிசிற் காதலந் தோழி
குவளை யுண்கண் டெண்பனி மல்க
வறிதியான் வருந்திய செல்லற் கன்னை
பிறிதொன்று கடுத்தன ளாகி வேம்பின்
வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி
யுடலுநர்க் கடந்த கடலந் தானைத்
திருந்திலை நெடுவேற் றென்னவன் பொதியி
லருஞ்சிமை யிழிதரு மார்த்துவர லருவியிற்
றதும்புசீ ரின்னியங் கறங்கக் கைதொழு
துருகெழு சிறப்பின் முருகு மனைத்தரீஇக்
கடம்புங் களிறும் பாடி நுடங்குபு
தோடுந் தொடலையுங் கைக்கொண் டல்கலு

---

1. கருத்து: உண் கண் பசப்ப மலை நாடன் தன் பிரிவாற் செய்த நோயினை அறியாமையால் வெறியயர்தலால் தீர்க்க முயன்று தாயும் துயருழந்து வருந்தினாள். அதனால் அவன் செய்த நோயினை வேலன் அறியாது விடுதல் கொடிதாகும். ஆதலின் அதனை அறிவித்தல் வேண்டும்.

மாடின ளாத னன்றோ நீடு
நின்னொடு தெளித்த நன்மலை நாடன்
குறிவர லரைநாட் குன்றத் துச்சி
நெறிகெட வீழ்ந்த துன்னருங் கூரிருட்
டிருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட்
கொழுமடற் புதுப்பூ வூதுந் தும்பி
நன்னிற மருளு மருவிட
ரின்னா நீளிடை நினையுமெ னெஞ்சே''[1]

(அகம்-138)

என்னும் மணிமிடைபவளம் விதந்து கூறாமையின் இரண்டும் ஒருங்கு வந்தது.

ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்—அங்ஙனம் வெறியாடுதல் வேண்டிய தொழின் முடிந்தபின்னுந் தலைவிக்கு வருத்தம் மிகினும்:

(உ-ம்)

''வேங்கை யிரும்புனத்து வீழுங் கிளிகடியாள்
காந்தண் முகிழ்விரலாற் கண்ணியுங் கைதொடா
ளேந்தெழி லல்குற் றழைபுனையா ளெல்லேயென்
பூந்தொடி யிட்ட புலம்பு மறிதிரோ''

எனவும்,

''புனையிருங் குவளைப் போதுவரி நாற்றஞ்
சுனையர மகளி ரவ்வே சினைய

---

1. கருத்து: தோழீ! கேட்பாயாக. நன்மலைநாடனானவன், மணியினை உமிழ்ந்த நாகப் காந்தளை யூதிய வண்டு அதன் செவ்விய மகரந்தம் புளையப் பெற்றமையால் செம்மை நிறமாகத் தோன்ற அதைத் தன் செம் மணி என மருளும்படியான விடர்களையுடைய கொடிய வழியைக் குறியிடம் வருதற்கு பாதியிரவில் இருளில் வருவது எண்ணியதால் கண்ணில் நீர் வந்தது. அதனைக் கண்டதாய் அதற்கு வேறு கருத்துக் கொண்டாளாகக் கட்டுவிச்சியும் வேலனும் முருகனை அழைத்து அவன் கடம்ப மாலையையும் வாகனமாகிய களிற்றினையும் பாடி நாளும் ஆடினராயும் பாடினராயும் வெறியயர்தல் நல்லதாமோ?

வேங்கை யொள்வீ வெறிகமழ் நாற்றமொடு
காந்த ணாறுப கல்லர மகளி
ரகிலு மாரமு நாஅ றுபவன்
றிறலரு மரபிற் றெய்வ மென்ப
வெறிபுனங் காவ லிருந்ததற் றொட்டுத்
தீவிய நாறு மென்மக
ளறியேன் யானிஃ தஞ்சுதக வுடைத்தே''[1]

எனவும் வரும்.

இவை ஆற்றாமை கண்டு அஞ்சிச் செவிலி பிறரை வினாயின.

''அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி யதன்றிறம்
யானுந் தெற்றென வுணரேன் மேனாண்
மலிபூஞ் சாரலென் றோழி மாரோ
டொலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூசு றோன்ற
வொண்செங் கழுநீர்க் கண்போ லாயித
ழூசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்ல னொருகணை தெரிந்துகொண்
டியாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே யவற்கண்
டெம்மு ளெம்முண் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றன மாகப் பேணி
யைவகை வகுத்த கூந்த லாய்நுதன்

1. கருத்து: என் மகளணிந்த குவளையின் மணம் சுனையர மகளிரிடம் போய்விட்டது. வேங்கை மலர் காந்தள் மலர்களின் மணம் மலையர மகளிரிடம் போயிற்று. அகில் மணமும் சந்தன மணமும் வீசுபவன் தெய்வமாவான். தினைப்புனங் காவல் இருந்த காரணத்துக்காக மேற்கூறிய மணங்களை யிழந்து என் மகள் இனிய மணம் நாற நிற்பள். இதன் காரணம் யான் அறியேன்.

மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யு முளவோ வென்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்ந்த தேரனெதிர் மறுத்து
நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகன்மா யந்திப் படுசுட ரமயத்
தவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றன
ளதனள வுண்டுகோன் மதிவல் லோர்க்கே"[1]

(அகம்-48)

இது செவிலிக் கூற்றினைத் தோழி கொண்டுகூறியது.

காதல் கைமிகக் கனவின் அரற்றலும்—தலைவியிடத்துக் காதல் கையிகந்து பெருகுதலால் துயிலா நின்றுழியும் ஒன்று கூறி அரற்றுதலும்.

கனவு—துயில்; துயிலிற் காண்டலைக் கனவிற் காண்ட லென்ப.

(உ-ம்)

'பொழுது மெல்லின்று' (குறுந்-161) என்பதனுட் 'புதல்வற் புல்லி யன்னாய்' என்று தலைவியை விளித்தது கனவின் அரற்ற லாயிற்று.

---

1. கருத்து: அன்னையே! வாழி. யான்சொல்வதை விரும்பிக் கேட்க. நீ என்னைப்பார்த்து நின்மகள் பால் உண்ணாள்; மேனி பசந்தனள்; இதற்குக் காரணம் யாது என வினவு கின்றாய். யானும் தெளியவில்லை உணரவும் இல்லை. முன்னொரு நாளில் தோழியரோடு வேங்கை மலர் கொய்யச் சென்றபோது வேங்கை என்பதைப் புலி எனக் கொண்டு புலிபுலி என்று ஆரவாரிக்க அவ்வொலி கேட்டு ஒருவன் அங்கு வந்து நீயிர் கூறிய புலி சென்ற வழியாது என வினவினான். அவனைத் திடீரென அங்குக் கண்ட மாத்திரத்தில் யாங்கள் ஒருவர்க்குள் ஒருவராக ஒடுங்கினோம். பின்னர் அவன் மடந்தையிர் நும் வாயில் பொய்யும் வருமோ எனக் கேட்டுத் தன் தேரை மெல்ல இயக்கி நின் மகளைப் பலமுறை நோக் கெதிர் நோக்கிய நிலையில் பெயர்ந்தான். அவன் தேர் போகும் திசையையே நோக்கிய நின் மகள் தோழீ! அவன் ஆடவனே என்றாள். இது நான் நடந்தது. இது உணரவல்லோர்க்கு ஒரு கோட்பாட்டை விளக்கும்.

அரற்றல்—இன்னதோர் இன்னாக்காலத்து என் செய்கின்றாயெனக் காதல்பற்றி இரங்குதல்.

தோழியை வினவலும்— நின்றோழிக்கு இவ் வேறுபாடு எற்றினானாயிற்றென்றாற் போலத் தோழியை வினாவுதலும்

(உ-ம்)

''நெடுவே லேந்தி நீயெமக் கியாஅர்
தொடுத லோம்பென வரற்றலு மரற்றுங்
கடவுள் வேங்கையுங் காந்தளு மலைந்த
தொடலைக் கண்ணி பரியல மென்னும்
பாம்புபட நிவந்த பயமழைத் தடக்கைப்
பூம்பொறிக் கழற்கா லாஅய்குன் றத்துக்
குறுஞ்சுனை மலர்ந்த குவளை நாறிச்
சிறுதேன் கமழ்ந்த வம்மெல் லாகம்
வாழியெம் மகளை யுரைமதி யிம்மலைத்
தம்பொதி கிளவியென் பேதை
யாங்கா டினளோ நின்னொடு பகலே''[1]

எனவரும். இது செவிலி தோழியை வினாயது.

''ஓங்குமலை நாட வொழிகநின் வாய்மை
காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
யுறுபகை பேணா திரவின் வந்திவள்
பொறிகிளர் ராகம் புல்லா தோள்சேர்
பறுகாற் பறவை யளவில மொய்த்தலிற்
கண்கோ ளாக நோக்கிப் பண்டு

1. கருத்து : என் மகளே! ஆய் என்பான் குன்றத்துச் சுனைக் குவளை மணம் வீசித் தேன்மணமும் கமழும் மெல்லிய ஆகத்தையும் இனிய சொல்லையும் உடைய என் மகள் (தலைவி) களவில், 'ஏ வேலுடையவனே நீ எமக்கு என்னஉறவு? என்னைத் தொடவும் தொடாதே நீ கொண்டு வந்த வேங்கை மலரும் காந்தளும் விரவிய மாலையை யாங்கள் அணிய மாட்டோம்' என்று இப்படி அரற்றுகிறாள். அவள் நின்னொடு ஆடிய இடம் யாது? கூறுக வாழி.

மினையை யோவென வினவினள் யாயே
யதனெதிர் சொல்லா ளாகி யல்லாந்
தென்முக நோக்கி யோளே யன்னா
யாங்குணர்ந் துய்குவள் கொல்லென மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
யீங்கா யினவா லென்றிசின் யானே''[1]

(நற்றிணை-55)

இது செவிலி வினாயினமையைத் தோழி கொண்டுகூறினாள்.

தெய்வம் வாழ்த்தலும்—இன்னதொன்று நிகழ்ந்ததெனத் துணிந்த பின்னர்த் தன் மகளொடு தலைமகனிடை நிகழ்ந்த ஒழுக்கம் நன்னர்த்தாகவெனத் தெய்வத்திற்குப் பராவுதலும்.

(உ-ம்)

''பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய
செறிமடை யம்பின் வல்விற் கானவன்
பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு
நீரகழ் சிலம்பி னன்பொ னகழ்வோன்
கண்பொரு திமைக்குந் திருமணி கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க
தெண்ணீ ராலி கடுக்கு முத்தமொடு
மூவேறு தாரமு மொருங்குடன் சாற்றிச்
சாந்தம் பொறைமர மாக நறைநார்

1. கருத்து: ஓங்கு மலைநாடனே! நின் வாய்மைக் கூற்றுகளை ஒழிவாயாக. கற்பாறைச் சிறுவழியில் வந்து இவளைப் புணர்ந்தபோது நின் மாலை மலர் மணம் இவள் தோளில் அமைய வண்டுகள் வந்து மொய்த்தலைக் கண்ட தாய் 'இப்படி முன்னரும் வண்டுகள் மொய்க்கும்படி இருந்தனையோ' என வினவினள். அதற்கு விடைகூற இயலாது என் தோழி என்னை நோக்கினள். யான் இவள் எப்படிப் பதில்கூறி உய்வாளோ என எண்ணி உடனே அன்னாய் இச் சந்தன விறகை அடுப்பில் வைக்க எடுத்தபோது அதனிடம் இருந்த வண்டுகள் இப்படி மொய்த்தன என்றேன், இதுவே யான் இவளை ஆற்றியவாறாம்.

வேங்கைக் கண்ணிய விழிதரு நாடற்
கின்றீம் பலவி னேர்செழு செல்வத்
தெந்தையு மெதிர்ந்தனன் கொடையே யலர்வா
யம்ப லூரு மவனொடு மொழியுஞ்
சாயிறைத் திரண்ட தோள்பா ராட்டி
யாயு மவனே யென்னும் யாமும்
வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கூப்பி
யில்லுறை கடவுட் கோக்குதும் பலியே''[1]

(அகம்-282)

இதனுள் 'தோள் பாராட்டி, யாயுமவனே யென்னும்' என்று யாய் தெய்வம் பராயினாளென்பது படக் கூறி யாம் அத் தெய்வத்திற்குப் பலி கொடுத்து மென்றவாறு காண்க.

போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக் கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும் — உடன்போக்கு அறிந்தபின்னர்ச் செவிலி தோழியொடு மதியுடம்பட்டு நின்று தலைவியது கற்பு மிகுதியே கருதி உவந்த உவகைக் கண்ணும்.

அது

''எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே''

(அகம்-195)

என்றாற் போலக் கற்பினாக்கத்துக் கருத்து நிகழ்தல்.

(உ-ம்)

''முயங்குகம் வாராய் தோழி தயங்குபு
கடல்பெயர்ந் தன்ன கானலங் கல்லெனப்
பெயல்கடைக் கொண்ட பெருந்தண் வாடை

---

1. கருத்து: தோழீ! ''கடல் பெயர்ந்தாற்போலக் கல்லென மழைபெய்த கடைசியில் வந்த வாடையின் குளிரைத் தன் முலை வெப்பத்தால் கணவனுக்கு ஆற்றி அவனுடன் சென்றாள் நின் தோழி; இனி என்று நம்மூர் வருமோ'' என்று என் தாய் (செவிலி) என்னிடம் கூறினாள். அவள்நின் கற்பின் ஆக்கத்தில் நின்றாள் ஆதலின் நாம்முயங்குதல் போல் மகிழ்வோம் வாராய்- தோழி தலைவியிடம் கூறியது.

வருமுலை வெப்பங் கொழுநற் போற்றிய
சென்றன ளம்மநின் றோழி யவனோடு
என்றினி வருஉ மென்றனள்
வலந்துரை தவிர்ந்தன் றலர்ந்த வூரே''

இது, செவிலி கற்பினாக்கத்து நின்றமை தோழி கூறியது.

பிரிவின் எச்சத்தும்—தலைவி உடன்போயவழித் தான் பின் செல்லாதே எஞ்சுதலும் உளவாதலின் ஆண்டுக் கூறுவனவும்.

(உ-ம்):

''தெறுவ தம்ம நும்மகள் விருப்பே
யுறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க
நாடிடை விலங்கிய வெற்பிற்
காடிறந் தனணங் காத லோளே''[1]

(ஐங்குறு-313)

இது பின்செல்லாது வருந்தியிருந்த செவிலியைக் கண்ட நற்றாய் கூறியது.

இது, நற்றாய் கூற்றாய்ச் செவிலிமேன' ஆயிற்று.

மகள் நெஞ்சு வலிப்பினும்-உடன் போக்கிற்கு மகள் நெஞ்சு துணியினும்.

தன்மேல் அன்பு நீங்கியது உணர்ந்து செவிலி கூறும்.

(உ-ம்)

''பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெ னென்றன
ளினியறிந் தேனது துனியா குதலே
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்

---

1. கருத்து: மிக்க துன்பத்தோடு நெஞ்சம் உயிர்போமாறு மெலிந்து பாழ்படும். தன்னை நாம் நினைத்தலாற் கலக்கம் எய்த நம் காதலோளாகிய மகள் நாடிடையிட்ட இடங்களையுடைய காட்டு வழியில் தன் கேள்வனுடன் சென்றனள். அவள்பால் (நம் மகள்) கொண்ட விருப்பம் நம்மை வருத்துவதாயிற்று.

வேங்கையுங் காந்தளு நாறி
யாம்பன் மலரினுந் தான்றண் ணியளே''[1]

(குறுந்-84)

எனவரும்.

இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்—தலைவனும் தலைவியுந் தோன்றிய இருவகைக் குடியும் நிரம்பிவருதல் இயல் பாகப் பெற்ற வழியும்.

'பொருள்' என்றார் பிறப்பு முதலிய பத்தையுங் (273) கருதி.

'காமர் கடும்புனல்' என்னும் (39) கலியுள்

''அவனுந்தா னேன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்;

....

எனவாங், கறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்''[2]

எனத் தோழி தான் கூறிய இருபாற் குடிப்பொருளைக் கூறிச் செவலி அறத்தொடுநின்றாளெனக் கொண்டெடுத்து மொழிந்தவாறு காண்க.

இன்னவகையிற் பதின்மூன்று கிளவியோடு அன்னவை பிறவும்-இத்தன்மைத்தாகிய கூறுபாட்டையுடைய பதின்மூன்று கிளவியோடே அவைபோல்வன பிறவாய் வருவனவும்;

---

1. கருத்து: யான் பாயலில் அவளை அணைத்துத் தூங்கப் புரட்டினேன். அதற்கு அவள் வியர்த்தனன் என்று ஒதுங்கினாள். அப்போது அதை உண்மையென நினைத் தேன். அவள் தலைவனுடன் போன இப்போதுதான் அவள் சொன்னது வெறுப்பினால் என்று உணர்ந்தேன். அவள் ஆம்பல் மலரினும் மிக மெல்லியள். எப்படிச் சுரவழிச் சென்றாளோ!

2. கருத்து : அவன் யாரெனின் தினைப்புனப் பரணில் மகளிர் மூட்டும் அகிலின் புகையை உண்ட வண்ணம் இயங்கும் வானின் ஊரும் திங்களைத் தேனிறால் என எண்ணி ஏணியைச் சரிசெய்து வைக்கும் கானக நாடன் மகனாவான் என்றிப்படி அறத்தொடு நின்றேனைப் பார்த்துத் தாயும் நம் ஐயன்மார்க்குச் சென்று நின் ஒழுக்கத்தை உரைத்தாள்.

செவிலி மேன — தன் கூற்றாயும் பிறர்கொண்டுகூறுங் கூற்றாயும் கூறுங் கூற்றுச் செவிலிக்கு உரியவாம் என்றவாறு.

'அன்னபிற' என்றதனால்,

''பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே''[1]

(குறுந்-15)

இஃது உடன்போயபின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

இன்னும் அதனானே,

''வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்''

(அகம்-122-4)

என்றலும்,

''சிறுகிளி கடித றேற்றா ளிவள்'' (அகம்-28-12)

என்றலும்.

''கண்கோ ளாக நோக்கிப் பண்டு மினையையோ''

(நற்றிணை-55-67)

என்றலும் போல்வன பிறவுங் கொள்க.

நற்றாய்க்கும் அக்கூற்றுகள் உரிய

114. தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே (26)

ஆ. மொ.

இல.

These thirteen and other expressions are not forbidden to the mother also if she is in the know of things.

---

1. கருத்து: பக்கம் 411-ல் காண்க.

இளம்.

இது நற்றாய்க்கு உரியதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்): செவிலியுணர்வோடு உடம்பட்ட வுள்ளத்தளாயின், நற்றாய்க்கும் மேற்சொல்லப்பட்டவை யெல்லாம் வரையப்படா வென்றவாறு.

உணர்வுடம் படுதலாவது — தலைவியையுற்று நோக்கம் நிகழ்ந்த வழியின்றித் தானும் செவிலியைப்போல உற்று நோக்காளென்று கொள்க. இப்பொருள்மேற் கிளவி வருவன உள வெனுஞ் செவிலியைப் போல வொருப்பட்ட வுள்ளத்தளாயின் அவள்கண்ணும் இக்கிளவியெல்லாம் நிகழும் என்றவாறு. உடம்படாதவாறு என்னையெனின், யாரிடத்தும் மக்களை வளர்ப்பார் செவிலியராகலானும் தமக்குத் தம் இல்லற நிலைக்குக் கடவ பகுதியான அறனும் பொருளும் இன்பமும் வேண்டுதலானும் கூற்றொடு வேறுபாடு தோன்றாது.

நச்.

இது செவிலிக்கு உரியன கூறி நற்றாய்க்கு உரிய கூற்றுக் கூறுகின்றது.

(இ-ள்) உணர்வு உடம்படின்—அங்ஙனஞ் செவிலி உணர்ந்தாங்கே நற்றாயும் மதியுடம்படில், தாய்க்கும் வரையார்— நற்றாய்க்கும் முற்கூறிய பதின்மூன்று கிளவியும் பிறவுமாகக் கொண்டு எடுத்து மொழிதல் வரையார் என்றவாறு.

'தாய்க்கும்' என்றார் இவட்கு அத்துணை பயின்றுவாரா என்றற்கு. அது நற்றாய் இல்லறம் நிகழ்த்துங் கருத்து வேறு உடைமையின் உற்றுநோக்காள், செவிலியே தலைவியை உற்று நோக்கி ஒழுகுவாளாதலின். இலக்கண முண்மையின் இலக்கியம் வந்துழிக் காண்க.

தாயர் தலைவி யியல்புணர்தல்

115. கிழவோன் அறியா அறிவினள் இவள்என
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே (27)

ஆ. மொ.

இல.

Thinking that she has not the wisdom to find out her partner, the mother and foster-mother may approach the wise people for clearing their doubt about the choice of the partner on the part of the lady-love.

இளம்.

இது நற்றாயும் செவிலியும் துணியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) கிழவோன் அறியா அறிவினள் என்பது—தலைமகன் அறியா அறிவினையுடையவள் என்றவாறு. எனவே ஒரு பக்கம் எதிர்காலம் நோக்கிக் கூறினார்போலத் தோன்றும். ஒரு பக்கம் இறந்தகாலம் தோன்றும். அவன் அறியாத அறிவுரிமை பூண்டு மயங்குதல், அவள் எத்துணையும் மயக்கமிலள் எனவும் அவன் பொருட்டு மயங்கினாள் எனவும் படக் கூறுதல். தலைவன் அறியாத அறிவினையுடையவள் எனக் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோர் மாட்டு உளதாகிய ஐயக் கிளவியால் புணர்ப்பறிதலும் உரித்து, செவிலிக்கும் நற்றாய்க்கும் என்றவாறு.

இஃது எற்றினான் ஆயிற்று எனக்குற்றமற்ற தவரை வினாய வழி அவர் இவ்வாறு பட்டதென மெய்கூறுதலுந் தகுதியன்றாம் பொய் கூறுதலும் தகுதியன்றாம். ஆதலால் ஐயப்படுமாறு சில கூறியவழி அதனானே யுணர்ப என்றவாறு. கிழவோனறியா வறிவின ளென்றவாறு கூறியவழிக் கிழவோனெதிர்ப்பட இறந்த காலத்துள் தலைவன் உளன் என்றவாறாம்

நச்.

இஃது அங்ஙனங் களவு வெளிப்பட்ட பின்னர் நற்றாய்க்குஞ் செவிலிக்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) கிழவோன் அறியா அறிவினள் இவளென ஐயக் கிளவி—நங்குலத்திற்கு ஒத்த தலைவனை அறிந்து கூடாத அறிவினையுடையள் இவளென்று தம் மனத்தை ஐயமுற்றும் பிறரோடு உசாவுங் கிளவியை, மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின் அறிதலும் உரித்தே—குற்றமற்ற சிறப்பினையுடைய அந்தணர் முதலியோரிடத்தே கூறி அதுவும் முறைமையென்று அவர் கூற அறிதலும் உரித்து என்றவாறு.

என்றது, 'மிக்கோனாயினுங் கடிவரை யின்றே' (சூ-93) முற் கூறினமையின் தலைவன் தன் குலத்தின் உயர்ந்தமை அறிந்தவிடத்து இங்ஙனங் கூடுதல் முறையன்றென்று ஐயுற்ற செவிலியும் நற்றாயும் உயர்ந்தோரைக் கேட்டு இதுவுங் கூடு முறைமை யென்றுணர்வர் என்பதாம். இலக்கணமுண்மையின் இலக்கியமும் அக்காலத்து உளவென்றுணர்க.

வெள்.

இது நற்றாயும் செவிலியும் தலைமகளது ஒழுகலாற்றை ஐயுற்றுத் துணியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) : தலைமகன் அறியா அறிவினையுடையாள் இவள் என்று குற்றமறுத்த சிறப்பினையுடைய உணர்ந்தோர் பக்கத்து உளதாகிய ஐயக் கிளவியால் தலைவனொடு தலைவிக்குள தாகிய புணர்ப்பினை யறிந்துகொள்ளுதல் செவிலிக்கும் நற் றாய்க்கும் உரியது, எ-று.

தலைவியின் மெலிவினைக் கண்டு வருந்திய செவிலியும் நற் றாயும் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோராகிய அறி வரைப் பணிந்து மகளது மெலிவு எதனாலாயிற்று என வினவி நிற்பது. அந் நிலையில் முக்கால நிகழ்ச்சிகளையும் ஒருங்குணரும் நல்லுணர்வுடைய அப் பெரியோர்கள், 'இவள் இத் தன்மையின் ஒருவனைக் காதலிக்கின்றாள்' எனத் தலைவியோடு தலைவ னுக்குண்டாகிய தொடர்பினை வெளிப்படச் சொல்லுதல் மர பன்மையானும், நிகழ்ந்ததனை மறைத்தல் தமது வாய்மைக்கு மாறாதலானும் நும் மகள் தலைமகன் அறியா அறிவினை யுடையாள் என்றாற்போன்று ஐயுறுதற்குரிய கவர்த்த பொரு ளுடைய தொடரால் மறுமொழி கூறுவர். 'எதிர் காலத்தில் தன்னை மணந்து கொள்ளும் உரிமையுடைய கணவனாலும் அறியப்படாத பேரறிவினையுடையாள் நும் மகளாகிய இவள்' என வெளிப்படையாக ஒரு பொருளும், 'தன் காதற் கிழமை யுடையவனாக ஒழுகும் தலைமகனாலும் அறியப்படாத அறி வுரிமை பூண்டு அவன் பொருட்டு மயங்குகின்றாள் இவள்' எனக் குறிப்பாக மற்றொரு பொருளும் தரும் நிலையில் அறிவர் கூறிய ஐயக் கிளவியை உய்த்துணர்ந்து, தலைவன் ஒருவனுடன் தலை மகளுக்குரியதாகிய தொடர்பினைச் செவிலியும் நற்றாயும் அறிந்து கொள்ளுதற்கும் உரிய என்பது இந் நூற்பாவினால் அறிவுறுத்தப்படும் நுண் பொருளாகும்.

அது துணிதலின் அருமை

116. தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்
எண்ணுங் காலை கிழத்திக்கு இல்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப. (28)

ஆ. மொ.

இல.

The lady-love has not the habit of making expressions about her ardent love in the presence of her lover if we examine the love code. On trying to find out the same by the help of other people, it will be known as clearly as water in the new pot.

இளம்.

இது தலைவிக்கு உரியதோர் இயல்புணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைவி தனது வேட்கையைக் கிழவன் முன்பு சொல்லுதல் நினைக்குங் காலத்துக் கிழத்திக்கு இல்லை. அங்ஙனம் சொல்லாதவிடத்தும் புதுக்கலத்தின்கட் பெய்த நீர் போலப் புறம்பொசிந்து காட்டும் உணர்வினையுமுடைத்து அவ் வேட்கை என்றவாறு.

எனவே, குறிப்பின் உணரநிற்கும் என்றவாறு. தலைவன் மாட்டுக் கூற்றினானும் நிகழப்படுமென்று கொள்ளப்படும்.

நச்.

இது தலைவிக்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) பிறநீர் மாக்களின்—வேறு வேறாகத் தம்மில் தாம் காதல்செய்து ஒழுகும் அறிவில்லாதாரைப் போல, கிழவன் அறியத் தன்னுறு வேட்கை முற்கிளத்தல் கிழத்திக்கு இல்லை— தலைவன் அறியும்படியாகத் தனக்குற்ற வேட்கையை அவன் முன்னர்க் கூறுதல் தலைவிக்கு இல்லை, ஆயிடை—அங்ஙனங் கூற்றில்லாதவிடத்து, எண்ணுங்காலையும்—அவள் வேட்கையை அவன் ஆராயுங்காலையும், பெய்நீர் போலும் உணர்விற்று என்ப—அவ்வேட்கை புதுக்கலத்துப் பெய்த நீர் புறத்துப்

பொசிந்து காட்டுமாறு போலும் உணர்வினையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

'கிழத்திக்கில்லை' எனவே தோழிக்குத் தலைவி தனது வேட்கையை எதிர்நின்று கூறுதலுளதென்பது பெற்றாம். தலைவிக்குக் குறிப்பானன்றித் தலைவன் முன்னின்று கூறும் வேட்கைக் கூற்றின்மை முற்கூறிய செய்யுட்களுட் காண்க. எனவே தோழி முன்னர்த் தலைவிக்கு வேட்கைக்கூற்று நிகழ்தல் பெற்றாம்.

(உ-ம்)

''சேணோன் மாட்டிய நறும்புகை''

(குறுந்-150)

''ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த''

(அகம்-8)

என்பனவும்.

''இவளே, நின் சொற் கொண்ட''

என்றாற்போல் வருவனவும் முன்னர்க் காட்டினாம்.

''கடும்புனன் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்த மண்ணுநீர் போல
நடுங்கஞர் தீர முயங்கி நெருந
லாக மடைதந் தோளே''[1] (அகம்-62)

என்றாற் போல்வன தலைவி வேட்கையைத் தலைவன் குறிப்பான் உணர்ந்தன.

வெள்.

இது தலைவிக் குரியதோர் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்): வேறு வேறாகக் காதல் செய்தொழுகும் அறிவில்லாதாரைப் போன்று பலர்க்கும் புலனாகத் தனது மிக்க வேட்கையைத் தலைவன் முன்னர்ச் சொல்லும் சொல் நினைக்குங் காலத்துத் தலைவியிடத்து நிகழ்தல் இல்லை. அவ்விடத்துத்

1. கருத்து: நேற்று வேகமாக ஓடும் நீர்மிக்க காவிரியாகிய பெரிய யாற்றில் நீண்டசுழிபுடைய வெள்ளத்தில் மூழ்குபவள்போல நடுங்கும் துயர் ஏற்க நாம் காக்கச் சென்ற போது, நமது நல்ல ஆகத்தை அடைந்து முயங்கினாள்.

தலைவியது வேட்கை. புதுக்கலத்துப் பெய்த நீர் புறம் பொசிந்து காட்டுமாறு போலும் உணர்வினையுடைத் தென்று கூறுவர் புலவர், எ-று.

பிற நீர் மாக்களின் அறியத் தன் உறு வேட்கை கிழவன் முன் கிளத்தல் கிழத்திக்கு இல்லையென இயையும்.

பிற நீர் மாக்கள் என்றது, ஒத்த கிழவனும் கிழத்தியுமாய் எக்காலத்தும் ஒன்றுபட்டு வாழும் அன்பின்றித் தாம் கூடியிருக்கும் காலத்தும் தம்மை வேறு வேறாகக் கருதி வேட்கை வயப்பட்டு மனம் சென்ற வழியொழுகும், தன்மையினராய மடவோரை. மாக்களின் என்புழி 'இன்' உவமையுருபு. அறிய—பலர்க்கும் புலனாக. 'பெய்ந் நீர்' என்பதற்கேற்பப் புதுவதாக நீர் பெய்தற்குரிய புதுக்கலம் என்பது வருவித்துரைக்கப்பட்டது.

சிவ.

இளம்பூரணர் உரையில் ''பிறநீர் மாக்களின் அறிய'' என்னும் தொடர்க்கு உரையில்லை. அதனால் வெள்ளை வாரணனார் ''இளம்பூரணர் உரையின் சிதைவினைக் கூர்ந்து நோக்கின் இந்நூற்பாவின் மூன்றாமடி 'புதுநீர் மட்கலன் அறிய ஆயிடை' எனப் பாடம் இருந்திருக்குமோ என ஐயுற வேண்டியுளது'' என்று அடிக்குறிப்பு எழுதியுள்ளார். அவரே நச்சினார்க்கினியர் உரையை ஏற்றவராய்ப் 'பிற நீர் மாக்களின் அறிய' என்பதற்கு உரையும் எழுதி அதன் விளக்கமாக,

> ''பிறநீர் மாக்கள் என்றது ஒத்த கிழவனும் கிழத்தியுமாய் எக்காலத்தும் ஒன்றுபட்டு வாழும் அன்பின்றித் தாம் கூடியிருக்கும் காலத்தும் தம்மை வேறு வேறாகக் கருதி வேட்கை வயப்பட்டு மனம் சென்றவழி யொழுகும் தன்மையினராய மடவோரை''

எனவும் எழுதினார். இவ்விளக்கத்தால் பிறநீர் மாக்கள் என்பார், ஒத்த அன்பின்றிக் கண்டபொழுது தோன்றிய காம வேட்கையால் கூடுபவர் என்பதும் அவரும் மனம் சென்ற வழிச் செல்பவர் என்பதும் பெறப்படும். இது பிறநீர் மாக்களுக்கு இழிவு தருவதாகும்.

முன்பின் அறியா ஒருவனும் ஒருத்தியும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுக் காணுதல் இருவகை பிறவிதோறும் அன்புற்றுக் கணவன் மனைவியாக இணைந்து வருவோர் இப்பிறவியிலும்

அவ்வாறிணையுமாறு ஊழின் ஆணையால் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுக் காணுதல் ஒரு வகை. பிறவி தோறும் இணைந்து வராமல் அவன் வேறு ஒருத்தியுடனும் அவள் வேறு ஒருவனுடனும் ஆக இப்படி வேறுபட்டு வந்த இருவர் இப்பிறவியில் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுக் காணுதல் ஒரு வகை. இவ்விரு வகையினருள் பின்னவர் எதிர்ப்பட்டபோது ஒருவர் வேட்கையை யொருவர் கூற்று மூலம் அறிவிப்பர். முன்னவருள் கிழவன் கூற்று மூலம் அறிவிக்கக் கிழத்தி புதுமட் கலத்துப் பெய்த நீர் கலத்தின் புறம்பே கசிந்து புலப்படுதல்போலக் கிழத்தி, தன் வேட்கை குறிப்பாகக் கிழவனுக்குப் புலப்படும் படிக் காணப்படுவள். பிறநீர் மாக்கள் என்றது பிறவிதோறும் வேறு வேறு கிழவன் கிழத்தியராக மாறி மாறி வந்தார் இப்பிறவியல் எதிர்ப்பட்டவரைக் குறிக்கும் என்று கொள்ளலாம். இதனால் இவர்க்கு இழிவு தோன்றாது. 'பிற நீர் மாக்களின்' என்பதற்குப் பாட வேறுபாடு காணப்படாமையின் அதுவே பாடமாகக் கொள்வதில் தவறில்லை.

காமக் கூட்டத் தூது

117. காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவர் ஆகலும் உரித்தே. (29)

ஆ. மொ..

இல.

As the love-meeting needs no help from others they themselves may become their messengers.

இளம்.

என்றது, களவிற்புணர்ச்சிக் குரியதோர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொன்னவற்றால் பாங்கனுந் தோழியு நிமித்தமாகக் கூடுதலேயன்றித் தாமே தூதுவராகிய கூட்டங்கள் நிகழப் பெறும். அது சிறப்புடைத்தாதலால் என்றவாறு.

எனவே பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் என்பன நியமமில்லை, யார் மாட்டும் என்றவாறாம். தனிமையிற் பொலிதலின் என்றமையான் இது மிகவும் நன்று.

நச்.

இஃது எய்தாதது எய்துவித்தது, பாங்கனுந் தோழியும் நிமித்தமாக வன்றித் தாமே தூதாகும் இடமும் உண்டென்றலின்.

(இ-ள்) காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்—இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடுங் கூட்டுவாரையின்றித் தனிமையாற் பொலிவு பெறுதலின், தாமே தூதுவர் ஆகலும் உரித்தே—ஒருவருக்கு ஒருவர் தூதுவராகி ஒருவர் ஒருவரைக் கூடுதலும் ஆண்டுரித்து என்றவாறு,

அது மெய்ப்பாட்டினுட் 'புகுமுகம் புரிதல்' (261) முதலிய பன்னிரண்டானும் அறிக. இதன் பயன் இக் கூட்டத்தின் பின்னர் வரைதலும் உண்டென்பதாம்.

சிவ.

இச் சூத்திரம் இடந்தலைப் பாட்டின் சிறப்புக் கூறுகின்றது.

(இ-ள்) இயற்கைப் புணர்ச்சியானது தனிமை காரணமாக அதாவது கூட்டுவிப்பாரையின்றித் தனித் தன்மையான உணர்வு காரணமாகப் பொலிவு பெறுதலினால் அடுத்த நாள் கூட்டத்துக்கும் கூட்டுவாரை நினையாமல் தலைவன் தலைவி யிருவரும் தாமே தமக்குத் தூதுவராக அமைந்து கூடுதலும் உண்டு என்றவாறு. அக்கூட்டம் இடந்தலைப் பாடாகும்,

இயற்கைப் புணர்ச்சியில் தம்மை இடைநின்று ஒருவர் கூட்டுவிக்க வேண்டும் என்னும் எண்ணம் இருவரிடையே இன்மையான் இயற்கைப் புணர்ச்சியில் தாமே தூதுவராதல் உண்டு என்பது பொருந்தாது. ஊழ் வயத்தால் முதல் நாளிற் கூடிப் பிரிந்தோர் மீண்டும் கூட எண்ணும் போதே இடைநின்று கூட்டுவாரை வேண்டும் நிலை வரும். அங்கும் இடைநின்று கூட்டுவாரை வேண்டாது தாமே தூதுவராகிக் கூட்டுவிப்பவராக எண்ணிக் கூடுதல் உண்டு. எனவே காமக் கூட்டம் என்பது இயற்கைப் புணர்ச்சியை மட்டும் குறிக்குமேயன்றி இடந்தலைப் பாட்டையும் உடன் குறியாது.

தலைவி குறியிடம் கூறக் காரணம்

118. அவன்வரம்பு இறத்தல் அறம்தனக்கு இன்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்
தான்செலற்கு உரிய வழிஆக லான (30)

ஆ. மொ.

இல.

As it is not proper on her part to disobey his word of command, she is bound to fix the meeting place (when he is desirous of meeting her) as she knows the place suitable for such meeting.

இளம்.

இது, சொல்லப்பட்ட கூட்டத்திற்குக் குறியிடம் கூறுவா னுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைவன் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்பு தலைவனெல்லையை இறத்தல் தலைவிக்கு அறமாகலின்மை யானே குறியிடம் கூறுதல் தலைமகளதாம். அது தான் சேறற் குரிய இடமாதலான் என்றவாறு.

எனவே, இத்துணைக் கூறின் மிகையன்று என்றவாறாம்.

நச்.

இது முன்னர்க் களனும் பொழுதும் என்றவற்றுட் களங் கூறுதற்கும் உரியாள் தலைவி யென்கின்றது.

(இ-ள்): அவன் வரம்பு இறந்தல்—தலைவன் கூறிய கூற்றின் எல்லையைக் கடத்தல், தனக்கு அறமின்மையின்—தலைவிக்கு உரித்தெனக் கூறிய தருமநூலின்மையின், களஞ் சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்—தலைமகனை இன்னவிடத்து வருகவென்று ஓரிடத்தைத் தான் கருதிக் கூறுங் கூற்று அவன் குறிப்புவழி ஒழுகுந் தலைவியதாம், தான் செலற்கு உரியவழி ஆகலான—தான் சென்று கூடுதற்குரிய இடந்தானே உணர்வள் ஆதலான் என்றவாறு.

'சுட்டுக்கிளவி' என்றதன் கருத்துத் தலைவன் இருவகைக் குறியும் வேண்டியவழி அவனை மறாது தான் அறிந்த விடத்

திணைக் கூற்றானன்றிக் குறிப்பானாதல் சிறைப்புறத்தானாதல் தோழியானாதல் உணர்த்துமென்பதாம். தலைவன் களஞ் சுட்டு மாயின் யாண்டானும் எப்பொழுதானும் அக்களவொழுக்கம் நிகழ்ந்து பிறர்க்கும் புலனாய்க் குடிப்பிறப்பு முதலியவற்றிற்குத் தகாதாம்.

''விரியிணர் வேங்கை''

என்னும் (28) அகப்பாட்டுத் தலைவி களஞ் சுட்டியது. 'மறந்திசின் யானே' என்றலின் இது குறிப்பான் உணர்த்திற்று. பிறவும் வந்துழிக் காண்க.

வெள்.

இது களவொழுக்கத்திற் குறியிடமிதுவெனக் குறிக்கும் பொறுப்பு தலைமகட் குரியது என்கின்றது.

(இ-ள்) இயற்கைப்புணர்ச்சிக்குப்பின் தலைவனது சொல்லின் வரம்பினைக் கடத்தல் தலைமகட்கு அறமன்றாகலானும் தான் செல்லுதற்குரிய வழி அவ்விட மாதலானும் தாங்கள் இருவரும் மீண்டும் கண்டு அளவளாவுதற்குரிய இடத்தைக் குறிப்பிடும் பொறுப்பு தலைமகளைச் சார்ந்ததாகும், எ-று

அவன் என்றது தலைவனை. வரம்பு என்றது அவன் பணித்த சொல்லாகிய எல்லை. இறத்தல்-கடத்தல். அறம் கற்பிற்காகிய நெறிமுறை. 'தனக்கு அறம் அன்மையின்' என இன்னும், 'தான் செலற்குரிய வழி ஆகலான்' என ஆனும் ஏதுப் பொருளில் வந்தன.

தலைவியின் உடன்பாடு பெற்றுத் தோழியாற் குறியிடம் சுட்டப்பட்டுத் தலைவன் தலைவியைக் கூடும் இடம் என்றது, பாங்கியின் உதவி பெற்றுத் தலைமகளைக் கண்டு அளவளாவும் பாங்கியிற் கூட்டத்தின் பகற்குறி இரவுக்குறி யாகிய இடங்களை.

தோழியும் குறியிடம் கூறல்

119. தோழியின் முடியும் இடனுமார் உண்டே (31)

ஆ. மொ.

இல.

There may be places of meeting fixed by the maid-friend.

இளம்.

இது, தோழியிற் கூட்டத்திற்காயதோர் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேல் 'காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலிற் றாமே தூதுவ ராகலும் உரித்'தெனக் கூறிப் போந்தார். அவ்வா றன்றி மேற் சொல்லப்பட்ட இயற்கைப்புணர்ச்சியாவது தோழியின் முடியுமிடத்து ஓரிடத்து உண்டு என்றவாறு.*

''அன்பொடு புணர்ந்த வைந்திணை''

(இறையனார்-களவியல்-1)

என்றதனால் யாண்டும் உள்ளப் புணர்ச்சியான் வேட்கை மீதூர்ந்த வழியே தோழியின் முடியப் பெறுவது என்று கொள்க. அல்லாக்காற் பெருந்திணைப்பாற்படும்.

நச்.

இது தோழிக்குங் களஞ்சுட்டுக் கிளவி உரித்தென்று எய்தாதது எய்துவித்தது.

(இ-ள்) களஞ்சுட்டுக் கிளவி தலைவி குறிப்பால் தோழி கூறுதலன்றித் தானேயுங் கூறப்பெறும் ஓரோவழி என்றவாறு. தோழி குறித்த இடமுந் தலைவிதான் சேறற்குரிய இடமாமென்பது கருத்து.

(உ-ம்)

''செவ்வீ ஞாழற் கருங்கோட் டிருஞ்சினைத்
தனிப்பார்ப் புள்ளிய தண்பறை நாரை
மணிப்பூ நெய்தன் மாக்கழி நிவப்ப
வினிப்புலம் பின்றே கானலு நளிகடற்
றிரைச்சுர முழந்த திண்டிமில் விளக்கிற்
பன்மீன் கூட்ட மென்னையர்க் காட்டிய
வெந்தையுஞ் செல்லுமா லிரவே யந்தி
லணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி
யாயு மாயமோ டயரு நீயுந்

* இச் சூத்திரத்துக்கு நச். உரையே சிறக்கும்.

தேம்பா யோதி திருநுத னீவிக்
கோங்குமுகைத் தன்ன குவிமுலை யாகத்
தின்றுயில மர்ந்தனை யாயின் வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணன் முடுக்கர்ப்
பூவேய் புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே''[1]

(அகம்-240)

எனத் தோழி களஞ்சுட்டியவாறும் காண்க.

தோழியின் துணை

120. **முந்நாள் அல்லது துணையின்று கழியாது**
அந்நாள் அகத்தும் அதுவரைவு இன்றே (32)

ஆ. மொ.

இல.

Except three days of menses there will be no day without their meeting; even during these three days it is not forbidden to the have meeting.

இளம்.

இது பாங்கற் கூட்டம் நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேல், தோழியிற் கூட்டத்தின் விகற்பங் கூறினாராகலின், ஈண்டுத் துணை யென்றது பாங்கன் ஆயிற்று. மூன்று நாளல்லது துணையின்றிக் களவிற் புணர்ச்சி செல்லாது. அந்நாளகத்தும் துணையை நீக்கவும்படாது என்றவாறு*.

---

1. கருத்து: தலைவ! சுரபுன்னைக் கிளையில் உள்ள தன் குஞ்சை நினைத்து நாரைப்புள் நெய்தற் கழியிடத்தை விட்டுப் பரந்தது. அதனால் கடற்கரைப் பகுதியும் தனிமையுற்றது. எம் தந்தையரும் தாம் விளக்குக் கொண்டு பிடித்து வந்த மீன்களை எம் தமையன்மார்க் குக் காட்ட வீடு சென்றனர். எம் தாயும் தோழியர் கூட்டத்துடன் கடல்தெய்வத்தை வணங்கி விழவயர்வள் அதனால் நீ இவள் ஆகத்துத் துயிலுதலை விரும்புவா யாயின் நாளைப் பகலில் புன்னைப் பொழிலிடத்து வருக. கூடிச் செல்லலாம்.

* பாங்கற்கு உணர்த்துவது இயற்கைப் புணர்ச்சி நிகழாது இடையீடு பட்ட காலத்தாம்.

எனவே எதிர்ப்பட்ட தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும் என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டது.

நச்.

இதுவும் அதிகாரத்தால் தலைவிக் கெய்தியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) முந்நாள் அல்லது துணையின்று கழியாது—பூப்பெய்திய மூன்றுநாளும் அல்லது கூட்டமின்றி இக்களவொழுக்கங் கழியாது, அந்நாளகத்தும் அது வரைவு இன்றே—அம் மூன்று நாளின் அகப்பட்ட நாளாகிய ஒரு நாளினும் இரண்டு நாளினுந் துணையின்றிக் கழிதல் நீக்கப்படாது என்றவாறு.

'அது' என்றது, துணையின்றிக் கழிதலை. பூப்பினால் துணையின்றிக் கழிதல் பொருந்திற்றாயினும் பூப்பின்றி ஒரு நாளும் இரண்டு நாளுந் துணையின்றிக் கழிதல் வழுவாமெனக் கருதின் அதுவும் புறத்தார்க்குப் புலனாம் என்று அஞ்சுதலாற் கழிதலின் வழுவாகா வென்றற்கு 'வரைவின்று' என்றார். இன்னோரன்ன காரணந் தலைவற்கின்மையின் அவனால் துணையின்றிக் கழிவது இன்றாயிற்று.

(உ-ம்)

"குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றற்றென றூஉ நெஞ்சந்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றா லெனவே"[1]

(குறுந்-157)

இது, முந்நாளைப் பிரிவாகிய பூப்பிடைப் பிரிவு வந்துழித் தலைவி கூறியது.

இனி அல்லகுறிப்பட்டுழி ஒருநாளும் இரண்டுநாளும் இடையீடா மென்றுணர்க. பூப்பு நிகழாத காலத்துக் கள

1. கருத்து : கோழி குக்கூ எனக் கூவியது. கேட்ட என் நெஞ்சம் துணுக்குற்றது. ஏன் எனின் காதலனை உடன் துயிலினின்றும் பிரிக்கக்கூடிய வாள்போல் வைகறைப் பொழுது வந்து விட்டதே என நெஞ்சம் எண்ணியதால் ஆம்.

வொழுக்கம் பூப்பு நிகழ்காலம் வரையப்பட்டதென்று உரைப்பாரும் உளர். இவ்விதி அந்தணர்க்குக் கூறியதன்று. அரசர் வணிகர் ஆதியவர்க்குச் சிறுபான்மையாகவும் ஏனைய வேளாளர் ஆயர் வேட்டுவர் முதலியோர்க்குப் பெரும்பான்மையாகவுங் கூறிய விதியென்றுணர்க. என்னை பூப்பு நிகழுங்காலத்து வரையாது களவொழுக்கம் நிகழ்த்தினார்க்கு,

> ''அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான
> வந்த குற்றம் வழிகெட வொழுகலும் (146)

என்பதனாற் பிராயச்சித்தம் விதிப்பராதலின், இதனானே அந்தணர் மகளிர்க்கும் பூப்பெய்தியக்கால் அறத்தொடு நின்றும் வரைதல் பெறுதும்.

வெள்.

இது தோழியின் துணை பெற்றாலன்றிக் களவொழுக்கம் தொடர்ந்து நிகழ்தல் இயலாது என்கின்றது.

(இ-ள்) களவிற் புணர்ச்சி மூன்று நாட்கள் என்னும் கால எல்லைக்கு உட்பட்டலல்லது தோழியின் துணையின்றித் தொடர்ந்து நிகழாது. மூன்று நாட்களாகிய கால எல்லைக் குள்ளும் தோழியின் துணை கிடைக்குமாயின் வரைவின்றி ஏற்றுக் கொள்ளப்படும், எ-று.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்னும் மூன்று நாள் எல்லையளவும் தலைவன் தோழியின் துணையின்றித் தலைமகளைக் கண்டு அளவளாவுதல் கூடும் என்பதும், மூன்று நாட்களுக்கு மேலாயின் தோழியின் இசைவின்றித் தலைமகன் தலைமகளை எதிர்ப்படுதல் அரிது என்பதும், மூன்று நாட்களாகிய அவ் வெல்லைக்குள்ளேயே தோழியின் துணையினைப் பெறுதலும் உண்டு என்பதும் இந் நூற்பாவாற் புலனாம்.

இங்குத் துணை என்றது தோழியை. இது, 'துணைச் சுட்டுக் கிளவி' என அடுத்துவரும் நூற்பாவால் இனிது புலனாம்.

சிவ.

இச் சூத்திரத்துக்கு மூன்று வகையில் உரை கூறப் பட்டுள்ளது.

1. இளம்பூரணர், ''துணையில்லாமல் களவுப் புணர்ச்சி யானது மூன்று நாள் நிகழலாம். மேற்கொண்டு துணையில் லாமல் நிகழலாகாது. அம் மூன்று நாள்களுக்குள்ளும் பாங்கனை நீக்கவும் படாது. அதாவது எதிர்ப்பட்ட தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன்முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும் என்றவாறு'' என்றார். அந்நாளகம் என்றது மூன்று நாட் களுக்கு உட்பட்ட நாட்களை.

பாங்கனைத் துணையென ஆசிரியர் கூறியதாகக் கொண் டார் இளம்பூரணர். 'துணை' என்னும் சொல் தோழியைக் குறித்துப் பிறவிடங்களிலும் வந்துளது. பாங்கனைத் துணை யென யாண்டும் ஆளக் காணவில்லை. அன்றியும் பாங்கற்கு அறிவித்துக் கூடுவதாயின் அது பாங்கற் கூட்டம் எனப் படுமேயன்றி இயற்கைப்புணர்ச்சி யெனப்படாது. எனவே இச் சூத்திரம் பாங்கனைக் குறித்தது என்பது பொருந்தாது.

2. நச்சினார்க்கினியர் 'துணை' என்பதற்குக் கூட்டம் எனக் கொண்டு, ''பூப்பின் புறப்பாடு தொடங்கிய மூன்று நாள் களல்லது பிற நாள்கள் புணர்ச்சியின்றிக் கழிதல் இல்லை. அம் மூன்று நாள்களே புணர்ச்சியின்றிக் கழிவனவாம். ஒருகால் இக் களவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாய்விடுமோ எனும் அச்சத்தால் ஒரு நாளோ இரண்டு நாளோ புணர்ச்சியின்றிக் கழியுமாயின் அதுவும் ஆம்; வழுவாகாது'' என்றுரையெழுதி னார்.

நச்சினார்க்கினியர் களவில் புணர்ச்கியின்றிக் கழிதல் இரு வகையெனக் கொண்டு, பூப்புக் காலத்தின் முதல் மூன்று நாள் என்பது ஒரு வகையாகவும், அச்சங் காரணமாகத் தலைவியால் ஒன்று அல்லது இரண்டு நாள் என்பது ஒரு வகையாகவும் கருதி னார்.

நச்சினார்க்கினியர் உரையினால் பூப்பின் புறப்பாடு மூன்று நாள்களே புணர்ச்சியின்றிக் கழிவன; மற்றைய நாள்கள் புணர்ச்சியின்றிக் கழியா என்பது பெறப்படும். அதுபொருந்தாது. புணர்ச்சியின்றிக் கழியும் நாள்கள் அல்ல குறிப்படுதல், ஒருவழித் தணத்தல், பொருள்வயிற் பிரிதல் காலங்களில் களவொழுக் கத்தில் புணர்ச்சியின்றிக் கழிதல் உண்டன்றோ? புறத்தார்க்குப் புலனாகும் எனும் அச்சங் காரணமாக ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ புணர்ச்சியின்றிக் கழிதல் உண்டு என்பதும் பொருந் தாது. அச்சம் நிகழின் அது வரைந்தெய்துதலுக்குத் துணை செய்யும்.

3. வெள்ளை வாரணனார், "இயற்கைப்புணர்ச்சி, இடந் தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்னும் மூன்றுநாளில் அல்லது பிற நாள்களில் தோழியின் துணையின்றிக் களவுநிகழ்ச்சி நிகழாது. அம் மூன்று நாள்களுக்குள் தோழியின் துணை பெறினும் நீக்குதற்கில்லை" என்றார்.

இவ்வுரையே யேற்புடையதாகும்.

துணைச்சுட்டுக் கிளவி

121. பன்னூறு வகையினும் தன்வயின் வருஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்
துணைச்சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்
துணையோர் கருமம் ஆத லான. (33)

ஆ. மொ.

இல.

As it is the duty of the companions to **make** their union a success and as they are in the habit of examining in hundred ways her behaviour in love affairs, the lady love is bound to speak her mind out, when they suspect her of having a lover.

இளம்.

இது தலைவிக்கு உரியதோ ரியல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பன்னூறு வகையினும் என்பது—பலவகையானும் என்றவாறு. நூறு, பத்து, ஆயிரம் என்பன பல்பொருட் பெயர்.[1]

தன்வயின் வருஉ...மாதலான என்பது—தன்னிடத்து வரும் நல்ல நயப்பாட்டுப் பக்கத்தினை ஆராய்தல் தலைவன் மாட்டு வேண்டுமாதலால், துணையைச் சுட்டிக் கூறலுறும் சொல்

1. பத்து, நூறு, ஆயிரம் எண்ணுப் பெயர்களாயினும் அவை பல்பொருள்களை யுணர்த்தும் பெயர்களாகவும் வரும். இங்கு நூறு என்பது அவ்வாறு பல்பொருட் பெயராக வந்தது.

தலைமகளதாகும். தான் கூறும் கருமம் துணையோரால் செய்யப்படும் கருமமாதலான் என்றவாறு.

எனவே[1] தலைமகன் களவுக் காலத்துப் பாங்கற்கு உற்ற துரைத்த பின்பு பாங்கனைச் சுட்டி யாது செய்வாமெனக் கூறப் பெறும் என்றவாறாயிற்று.

நச்.

இது தலைவிக்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) தன் வயின் வருஉம் நன்னய மருங்கின்—தலைவியிடத்தே தோழிக்குஞ் செவிலிக்கும் வருகின்ற அன்பு மிகுதிக் கண்ணே, பல் நூறு வகையினும் நாட்டம் வேண்டலில்—பல நூறாகிய பகுதியானும் ஆக்கமுங் கேடும் ஆராய்தலை அவர் விரும்புதலாலே, துணைச் சுட்டுக் கிளவி கிழவியதாகும்—இவள் ஓர் துணையுடையளென அவர் சுட்டுதலிடத்துக்'[2] கிளக்குங் கிளவி தலைவியதாம், துணையோர் கருமம் ஆகலான—அக்கிளவி அத்தோழியானுஞ் செவிலியானும் முடியும் காரியம் ஆதலான் என்றவாறு.

என்றது, தோழி 'பல்வேறு கவர் பொருணாட்டம்' (114) உற்ற வழியுஞ் செவிலி களவு அலராதல் முதலியவற்றான் (115) நாட்டமுற்ற வழியுந் தலைவி அறத்தொடுநிற்குமென்று அறத்தொடுநிலைக்கு இலக்கணங் கூறியவாறாயிற்று. தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்ப, அவள் செவிலிக்கு அறத்தொடுநிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடுநிற்கு மென்று உணர்க. இதனானே பாங்கற்கு உற்றதுரைத்த பின்னர்த் தலைவன் உரையாமையும் பெற்றாம்[3]

'புனையிழை நோக்கியும்'

என்னும் மருதக் கலி (76)யுள்

'வினவுதியாயின்'

---

1. எனவே-தலைவிக்கு இவ்வாறு கூறவே.
2. சுட்டுதலிடத்து—கருதுதலிடத்து (கருதும்படி)
3. தலைவன் பாங்கற்கு உற்றது உரைத்த பின்னர்ப் பாங்கன் அவன் துயர்களை தற்கருமம் உடையனாதலின் மேலும் தலைவன் உரைத்தல் இல்லை,

என நாட்டம் நிகழ்ந்தவாறும், அதன் சுரிதகத்துக் கூட்ட முண்மை கூறுதலின் துணைச் சுட்டுக் கிளவி கிழவியதாயவாறுங் காண்க.

'கொடியவுங் கோட்டவும், (கலி-54) என்பதன் சுரிதகத்துச் செவிலிக்கு உரையாயெனக் கூறியவாறுங் காண்க,

வெள்.

இது களவொழுக்கத்துக்குரிய துணையினைச் சுட்டுதல் தலைவியின் கடமை என்பது கூறுகின்றது.

(இ-ள்) பல நூறு வகையாலும் தலைமகள்பால் உளவாகும் நன்மைப் பகுதியாகிய விரும்பத்தக்க சூழ்நிலைகளை ஊன்றி நோக்கும் உணர்வு தலைவனுக்கு வேண்டுமாதலானும் தாங்கள் இருவரும் மேற்கொண்ட அன்பின் வழிப்பட்ட களவொழுக்கம் ஒன்றிய அன்புடைய துணையாகிய தோழியால் புறத்தார் அறியாது தொடர்ந்து நிகழ்தல் வேண்டுமாதலானும், தனக்குத் துணையாவாள் இவள் எனத் தன் ஆருயிர்த் தோழியைத் தலைவனுக்குச் சுட்டிக் கூறுஞ் சொல் தலைவிக்கு உரியதாகும், எ-று.

தலைமகளுக்கு நன்மைகள் உளவாதற்குரிய திறங்கள் எல்லாவற்றையும் எஞ்சாமல் தொகுத்துக் கூறும் முறையிற் 'பன்னூறு வகையினும்' என்றார். நாட்டம்— ஊன்றி நோக்கும் உணர்வு. துணையோர் கருமம்— உள்ளம் ஒன்றிய நண்புடைய துணைவரால் நிறைவேற்றுதற்குரிய செயல். 'நாட்டம் வேண்டலின்' என்புழி 'இன்'னும், 'துணையோர் கருமம் ஆகலான்' என்புழி 'ஆனு'ம் ஏதுப் பொருளில் வந்தன.

சிவ.

இச்சூத்திரம் தன் உயிர்த்தோழி இவள் எனத் தலைவி தோழியைச் சுட்டுமாறு கூறுகின்றது.

(இ-ள்) தோழி தலைவி மாட்டு நிகழும் நல்ல நயமான மாற்றங்களை பல வகையிலும் அவ்வப்போது ஆய்ந்து நாடுதல் வேண்டுமாதலாலும், அவ்வாறு நாடி அவளுக்கு உரியன செய்தல் துணையாவார் செயல் ஆதலினாலும் தலைவியானவள் இடந்தலைப் பாட்டின் பின்னரோ பாங்கற் கூட்டத்தின் பின்னரோ தலைவனிடம் 'தனக்கு உயிர்த்துணை இவளே"

எனத் தோழியைச் சுட்டுதலும் கூறுதலும் தலைவியின் செய லாகும் என்றவாறு.

தன் வயின் வரூஉம் நன்னயமருங்கில் பன்னூறு வகையில் நாட்டம் வேண்டலின் துணையோர் கருமம் ஆதலான துணைச் சுட்டுக் கிளவி கிழவியதாகும் எனக் கூட்டுக.

துணைச் சுட்டுக் கிளவி என்பதற்குத் 'துணையாவாள் இவள்'' என்று குறிப்பினால் சுட்டுதலும் சொல்லால் கிளந் துரைத்தலும் எனக் கொள்க.

நன்னயமருங்காவது நல்ல விருப்பமான செயல்கள் மாற்றங் கள் முதலிய நிகழுமிடம் என்றவாறு. நல்ல செயல்கள் மகளி ருடன் மகிழ்ந்து விளையாடுதல் முதலியன. நயச்செயல்கள் உணவு, நடை முதலியவற்றில் வரும் மாற்றங்கள். அம்மாற்றங் களைக் காணும்போது தலைவிக்கு வரும் நன்மைகளாகவே கருதுதலும் உடல் மெலிவு காணும்போது தெய்வ குற்றம் முதலியவாகக் கருதுதலும் போல்வன.

நாட்டம் வேண்டுதலாவது அவற்றைக் காணும்போது மகிழ் தலும் நீக்க வேண்டுவன வுளவாயின் அதற்கு முயல்தலும் போல்வன மேற்கொள்ளல். அந்நாட்டத்தால் தலைவிக்கு உரியன செய்தல் துணையோர் கருமம்.

துணையோர் என்றது தோழியை. துணையர்—துணையார் —துணையோர் என்றாயது.

நச்சினார்க்கினியர் 'துணைச் சுட்டுக் கிளவி' என்றதற்கு, தோழியும் செவிலியும் 'இவள் ஒரு துணையுடையாள் எனச் சுட்டு மிடத்துக் கிளக்கும் கிளவி' எனக் கொண்டு, இச்சூத்திரம், தோழி பல்வேறு கவர்பொருள் நாட்டம் உற்ற வழியும் செவிலி களவலராதல் முதலியவற்றால் நாட்டமுற்ற வழியும் தலைவி அறத்தொடு ''நிற்கும் என்று அறத்தொடு நிலைக்கு இலக்கணம் கூறியவாறு'' என்றார். துணையோர் என்றது தோழியையும் செவிலியையும் என்பது அவர் உரை.

செவிலியைத் துணை என்னும் வழக்கு இல்லையாதலா னும் இதன் முன்னர் உள்ள 'முந்நாளல்லது' என்னுஞ் சூத்திரமும் 'தோழியின் முடியும்' என்னுஞ் சூத்திரமும் தோழி பற்றியன வாதலினாலும் இச்சூத்திரமும் தோழி பற்றிய செய்தியை உட்கொண்டெழுந்தது எனல் வேண்டுமாதலினாலும் அவர் உரை சிறவாது என்க.

தாய் என்பாள் செவிலி

122. ஆய்பெரும் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாய்எனப் படுவாள் செவிலி ஆகும். (34)

ஆ. மொ.

இல.

As the great secret is revealed to the foster-mother, she is said to be the mother.

இளம்.

இது செவிலிக்கு உரியதோர் சிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நல்ல பெரிய சிறப்பினையுடைய அறிதற்கரிய மறைப் பொருள் யாவற்றையுங் கூறும் கடப்பாடுடையளாதலின்[1] தாய் எனப் படுவாள் செவிலியாகும் என்றவாறு.

நற்றாய் இத்துணைச் சிறப்பிலள் என்றவாறு. இதனாற் பயன் களவுக் காலத்தையச்சொ.. ....செவிலித் தாய்க்குங் கைத்தாய்க்கும் பொதுவாயினும் தாயென்று வேண்டப்படுவாள் செவிலி என்றறிவித்தல்.

நச்.

இது முற்கூறிய செவிலி சிறப்புக் கூறுகின்றது.

(இ-ள்) ஆய்பெருஞ் சிறப்பின்—தாய்த்தாய்க் கொண்டு[2] உயிர் ஒன்றாய் வருகின்றாளென்று ஆராய்ந்து துணியப்பட்ட பெருஞ் சிறப்புக் காரணமாக, அருமறை கிளத்தலின்—கூறுதற்கரிய மறைப் பொருளெல்லாங் குறிப்பானன்றிக் கூற்றாற் கூறத் தக்காளாதலின், தாயெனப்படுவோள் செவிலிஆகும்—தாயென்று சிறப்பித்துச் சொல்லப்படுவாள் செவிலியேயாம் என்றவாறு.

---

1. கூறும் கடப்பாட்டுக்குரிமை யுடையளாதலின் என்பது பொருள்.

2. தாய்த் தாய்க் கொண்டு உயிர்ஒன்றாய் வருதல் என்பது தாய்க்கு (பாட்டிக்கு)த் தன் தோழியின் தாய் உயிர்த் தோழியாகவும் தன் தாய்க்குத் (தோழியின் தாய்) உயிர்த் தோழியாகவும் இப்படித் தாயார் வழிவழியாக உயிர் ஒன்றாய் வருதல்.

எனவே, ஈன்ற தாயினுங் களவின்கட் சிறந்தாள் இவளென்றார். கற்பிற்கு இருவரும் ஒப்பாராயிற்று. செவிலி சிறந்தமை சான்றோர் செய்யுளுட் பலருங் கூறியவாறு காண்க.

வெள்.

இது களவொழுக்கத்தில் தாய் எனக் குறிக்கப்படுபவள் செவிலியே என்கின்றது.

(இ-ள்) ஆராய்தற்குரிய பெருஞ் சிறப்பினையுடைய அருமை வாய்ந்ததாய் உலகத்தார் அறியாது மறைவில் நிகழும் அன்புரிமை ஒழுகலாற்றினைக் கூறுதற்குரிமையுடையவளாதலின் (தலைவி தோழி என்னும் இருவராலும்) தாய் எனச் சிறப்பாகக் கூறப்படுபவள் செவிலித்தாய் ஆவாள், எ-று.

அறிவால் நிரம்பிய சான்றோர்களால் ஆராய்ந்து துணிதற்குரிய பெருஞ் சிறப்புடையதாய் ஒத்த அன்பினராகிய ஒருவன் ஒருத்தி என்னும் இருவரிடையே மறைவில் நிகழும் கேண்மை என்பார் 'ஆய் பெருஞ் சிறப்பின் அருமறை' என்றார். மறைந்த ஒழுக்கமாகிய இதனை உய்த்துணர்ந்து தோழியை வினவிக் கேட்டற்கும் அவ் வருமறையை நற்றாய்க்குக் கூறுதற்கும் உரிய பழங்கேண்மையுடையாள் செவிலி என்பார், 'அருமறை கிளத்தலின் தாய் எனப்படுவோள் செவிலி' என்றார். 'கிளத்தல்' என்றது தோழியாற் செவிலிக்குக் கிளக்கப்படுதலையும் நற்றாய்க்குச் செவிலி கிளத்தலையும் பொதுப்படச் சுட்டி நின்றது.

செவிலி மகள் தோழி

123. தோழி தானே செவிலி மகளே (35)

ஆ. மொ.

இல.

The maid-friend is the daughter of the foster-mother.

இளம்.

இது தோழிக்குரியதொரு சிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) களவுக் காலத்தும் இன்றியமையாளாகத் தலைவியால் வேண்டப்பட்டாள்[1] செவிலி மகள் என்றவாறு.

---

1. வேண்டப்பட்டாள்—விரும்பப் பட்டவளாகிய தோழி.

எனவே, பயின்றாரெல்லாருந் தோழியராகார். அருமறை கிளக்கப்படுதலான் உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழி எனப்படுவாள் என்றவாறு. அருமறை கிளத்தல் என்ப தனை யீண்டு வருவிக்க.

நச்.

இது தோழியது சிறப்புணர்த்துகின்றது.

(இ-ள்) தோழி தானே—தோழியர் பலருள்ளும் ஒருத்தி யெனப் பிரிக்கப்படுவாள், செவிலி மகளே—முற்கூறிய செவிலி யுடைய மகள் என்றவாறு.

இதற்கும் அருமறை கிளத்தல் அதிகாரத்தாற் கொள்க.

தாய்த்தாய்க் கொண்டு வருகின்றமையின் (நாலடி-15) உழுவலன்பு போல்வதோர் அன்பு உடையர் இருவருமென்று கொள்க. இதனானே களவிற்குத் தோழியே சிறந்தாளாயிற்று. அது சான்றோர் செய்யுளுட் காண்க.

வெள்.

இது தோழியாவாள் இவள் என்கின்றது.

(இ-ள்) தலைமகளது உணர்வுடன் ஒன்றிய உணர்வின ளாகிய தோழியாவாள் செவிலியின் மகள், எ-று.

'தோழி தானே' என்புழி ஏகாரம் 'ஒன்றித் தோன்றும் தோழி' என அகத்திணையியலிலும் சிறப்பித்துரைக்கப்பட்ட தோழியைத் தனித்து வாங்கிக் கூறுதலின் பிரிநிலையேகாரம்*

தோழி இயல்பு

124. சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே (36)

ஆ. மொ.

இல.

Deliberation regarding the secret love among the faithful companions may extend.

---

* செவிலி மகளே என்புழி ஏகாரம் தோழியர் பலருள் பொதுப்படத் தோழி எனப்படுவாள் செவிலி மகளே மற்றையோர் மகளிர் அல்லர் எனப்படுதலின் பிரிநிலை யேகாரம் என்று கொள்வது சிறக்கும். சிவ.

இளம்.

இது தோழிக்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தோழி தான் சூழ்தற்கும் தலைவி சூழ்ச்சிக்கு உசாத்துணையாகியும் வரும் நிலைமையாற் பொலிவு பெறும் என்றவாறு.

எனவே, செவிலி மகள் என்னுந் துணையாற் பொலிவு பெறாள்; என்றும் தோழியாவாள் செவிலிமகளாதலேயன்றிச் சூழவும் உசாத்துணையாகவும் வல்லள் ஆதல் வேண்டும் என்றவாறு.

செய்யுள் மேற் காட்டப்பட்டன.

நச்.

இதுவுந் தோழி சிறப்பினையே கூறுகின்றது.

(இ—ள்) உசாத்துணை நிலைமையின்—தலைமகனுந் தலைமகளும் உசாவுதற்குத் துணைமை சான்ற நிலைமையினாலே, சூழ்தலும் பொலிமே—புணர்ச்சி யுண்மையை ஏழுவகையானுஞ்[1] சூழ்தற் கண்ணும் பொலிவு பெறும் என்றவாறு.

எனவே இம்மூன்று[2] நிலைக்குந் தோழி உரியள் என்றார். உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க.

வெள்.

இது தோழிக்கு இன்றியமையாததோர் இயல்பு உணர்த்துகின்றது.

(இ-ள்) மேற்குறித்த தோழியானவள் செவிலியின் மகள் என்ற அளவிலன்றித் தலைமகளைக் குறித்துத் தன் மனத்துள்ளே ஆராய்தற்கும், தலைமகளுக்குச் சூழ்ச்சித் துணையாக இருந்து அறிவுரை வழங்குதற்கும் உரிய தோழமை நிலைமையிற் பொலிவு பெற்று விளங்குவாள், எ-று.

தோழியின் சிறப்பிலக்கணம் கூறும் இத்தொடரும் அவள் இன்ன தொடர்புடையாள் எனச் சுட்டும் மேலை நூற்பாவும்

---

1. ஏழுவகை: நாற்றம், தோற்றம், உண்டி, ஒழுக்கம், செய்வினை மறைப்பு, செயல், பயில்வு என்பன. (சூ. 24)

2. மூன்று நிலை—செவிலி மகள், சூழ்தல், உசாதல்.

தொல்காப்பியனாரால் ஒரே சூத்திரமாக இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது,

> ''தோழி தானே செவிலி மகளே
> சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே''

என ஓர் எதுகையில் அமைந்து ஒரு பொருள் குறித்து வருதலால் இனிது புலனாகும். தோழியானவள் இவள் எனவும் அவளது சிறப்பியல்பு இதுவெனவும் பகுத்துரைக்கும் நோக்கில் இரு சூத்திரங்களாகப் பிரித்து உரை வரையப் பெற்றதெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். உசா-சூழ்ச்சி; இனிச் செய்ய வேண்டுவது யாது என எண்ணி ஆராயும் ஆராய்ச்சி. துணை— அவ்வாராய்ச்சிக்குத் துணையாயிருந்து அறிவுரை பகர்தல். செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றாகிய 'பொலியும்' என்பது ஈற்று மிசை யுகரம் மெய்யொடு கெட்டுப் 'பொலிம்' என நின்றது. ''செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்றுமிசை யுகரம் மெய்யொடும் கெடும், (சொல். 238) எனவே செய்யும் என்னும் முற்றுச் சொல்லுக்கு ஈற்றுமிசை யுகரம் மெய்யொடும் கெடும், மெய்யொழித்தும் கெடும்'' எனவரும் சேனாவரையர் உரை விளக்கம் இங்கு நினைக்கத் தகுவதாகும்.

சிவ.

இச்சூத்திரம் தோழியானவள் தலைவியை ஆராய்தற் காரணம் கூறுகின்றது.

(இ-ள்) உசாவு நிலைமையாலும் துணையாகும் நிலைமையாலும் தோழியானவள் தலைவியை ஆராய்தலும் பொலிவு பெறும் என்றவாறு.

உசாவுதல் தலைவி ஒன்றைப் பற்றித் தோழியுடன் கலந்து அளவளாவுதல். துணை தலைவிக்கு உடன் இருந்து நல்லன விளைதற்குத் துணையாதல். இவ்விரு நிலைகளும் தலைவி மாட்டுத் தோழிக்கு அமைதலின் தலைவியைத் தோழி ஆராய்வள் என்பதாம். தோழி ஆராய்தலாவது பின்னர் வரும் முன்னுறவுணர்தல் குறையுறவுணர்தல் இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல் போல்வனவற்றால் ஆராய்தல். உசாத்துணை நிலைமை என்பதை உசா நிலைமை துணை நிலைமை எனக் கூட்டி இருவகைப் படுத்துக.

மதியுடம் பாடு

125. **குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்**
இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்என
மதிஉடம் படுதல் ஒருமூ வகைத்தே. **(37)**

ஆ. மொ.

இல.

'Mathiyudampaduthal' or knowing by inference will be of three ways which are said to be knowing by way of request made by the lover to the maid, knowing by the way of inference and knowing by his sudden arrival in the midst of the two, the lady-love and the maid.

பி.இ.நூ.

இறை. 7.

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல்
அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி

நம்பி. 138.

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல்
ஒருமூன்று வகைத்தே பாங்கி மதியுடன்பாடு.

மாறன் 30

மதியுடன் படலொரு மூன்றன் வகையே
முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல்
ஆம்நெறித் தென்பர் அறிவுடையோரே.

இல. வி.

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல்
ஒருமூன் றென்ப தோழிக் குணர்ச்சி.

இளம்.

இது தலைவன் புணர்ச்சியுண்மை தோழி அறியுந் திறன் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைவன் குறையுற வுணர்தலும் அவன் குறை யுறாவழித் தலைவி குறிப்புக் கண்டு உணர்தலும் தானும் தலைவியுங் கூடி யிருந்துழித் தலைவன் வந்தமை கண்டு உணர் தலும் என மூவகைத்துத் தோழி அறிவுடம்படுதற்கண்ண என்றவாறு.

மதியுடம்படுதல் எனினும் புணர்ச்சியுணர்தல் எனினும் ஒக்கும். இம் மூன்றினும் ஒன்று கண்டுழி அவரவர் குறிப்பினாற் புணர்ச்சி யுணரும் என்றவாறு. 'குறையுணர்தல்' முன் வைத் தார் நன்கு புலப்படுதலின். 'முன்னுறவுணர்தல்' அதன்பின் வைத்தார், தலைவி வேறுபாடு கண்டு பண்டையிற்போலாள் என்னும் நிகழ்ச்சியான் முற்றத் துணிவின்மையின். ''இருவரு முள்வழி யவன் வரவுணர்தல்'' அதன் பின் வைத்தார். ஆண்டுப் புதுவோன்போலத் தலைவன் வருதலானும் தலைவி கரந்த உள்ளத்தளாய் நிற்குமாதலானும் அத்துணைப் புலப்பாடின்மை யின் அக்கருத்தினானே மேற்சொல்லப்பட்ட தோழிகூற்று மூவகையாகப் பொருள் உரைத்ததென்று கொள்க.

நச்.

இஃது அத்தோழி சூழ்ச்சி இத்துணைப் பகுதித்து என் கின்றது.

(இ-ள்) குறையுற உணர்தல்—தலைவன் தோழியை இரந்து குறையுற்றவழி உணர்தல். முன்உற உணர்தல்—முன்னம்[1] மிக வுணர்தல், இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்—தலைவியுந் தோழியும் ஒருங்கிருந்தவழித் தலைவன் வருதலால் தலைவன் குறிப்புந் தலைவி குறிப்புங் கண்டுணர்தல். என மதியுடம் படுத்தல் ஒரு மூவகைத்தே—என்று இருவர் கருத்தினையுந் தன் கருத்தினோடு ஒன்றுபடுத்துணர்தல் ஒரு மூன்று கூற்றினை யுடைத்து என்றவாறு.

---

1. கருத்து: முன்னம்—குறிப்பு. தலைவியின் உள்ளக் குறிப்பு உடம்பு மாற்றமும் உணர்தல் அது நாற்றம் முதலிய மிகுதலால் உணர்தல்.

எண்ணுதல் எண்ணென்றாற்போல முன்னுதல், 'முன்' என நின்றது. உயிர்கலந் தொன்றலிற் குறிப்பின்றியும் பாகமுணர் வாள்[1] குறிப்புப் பெற்றுழி மிகவுணரும் என்று கொள்க. இது மூவர் மதியினையும் ஒன்றுபடுத்துதலின் மதியுடம்படுத்தலென்று பெயராயிற்று. இம்மூன்றுங் கூடிய பின்னரல்லது மதியுடம் படுத் தலின்றென்றற்கு 'மூவகைத்து' என்று ஒருமையாற் கூறினார்[2] 'முன்னுற' என்றதனை 'முந்துறவு[3] என்றலேர்வெனின் குறை யுறுதலான் உணர்தல் அவன் வருதலான் உணர்தலென்று இரண் டற்குங் காரணங் கூறுதலின் இதற்குங் குறிப்பு மிகுதலான் உணர்தலெனக்[4] காரணங் கொடுத்தல் வேண்டுமென்றுணர்க. 'நாற்றமுந் தோற்றமும் (114), என்பதனுட் கூறியவாறன்றி முன்னுறவை இடை வைத்தார். அவ்விரண்டினான் உணருங் காலும் இக் குறிப்பான் உணரவேண்டுமென்றற்கு. இம் மூன்றும் முற்கூறிற்றேனும் ஒரோவொன்றாற் கூட்டமுண்ரில் தலைவியை நன்கு மதித்தில ளாவளென்றற்கு இம் மூன்றும் வேண்டுமென்று ஈண்டுக் கூறினார்.[5]

(உ-ம்)

''கோனே ரெல்வளை தெளிர்ப்ப நின்போல்
யானுமாடிக் காண்கோ தோழி''[6] (பக்-487)

---

1. பாகம் உணர்வாள்—முழுமையாகவுணர்வாள். நன்றாக வுணர்வாள் எனினும் ஆம், சமையல் பாகமாக உள்ளது என்பது போல.
2. மூவகைய என்னாமல் மூவகைத்து என ஒருமையாற் கூறினார்.
3. முந்துறவு—முன்னைய உறவு.
4. முன்னம் மிகுதலான் என்பது காரணம்.
5. மூன்றில் ஒன்று கொண்டு தோழி உணர்ந்தாள் எனின் தலைவி ஒன்றனாலேயேயறியும் அத்துணை எளியள் ஆகிவிடுவாள். அதனால் தோழி அவளை நன்கு மதித் தாள் ஆகாள். எனவேமூன்றும் கொண்டு உணர்ந்தால் தான் தலைவியை நன்கு மதித்தாளாவாள்.
6. ஒளிவளை ஒலிக்க யானும் நீயாடிய சுனையில் ஆடிப் பார்ப்பேன் எனத் தோழி கூறுவது தலைவி சுனை யாடிப் போந்தேன் அதனால் உடல் வெளுத்தது என்பது முதலிய கூறினாளாக அவளது கூற்றின் உட்கிடக் கையையறியத் தோழி இவ்வாறு கூறினாள். இப்படிக் கூறியது நாணத்துக்கு மாறுபட்டதன்று நாணம் உள்ள நிலையிலேயே கூறினாள்.

இது கூட்ட முணராதாள்போல நாணிற்கு மாறாகாமற் கூறலின் முன்னுறவுணர்தல்.

"நின்னின் விடாஅ நிழற்போற் றிரிதருவா
யென்னீ பெறாத திதென்"[1]

(கலி-61)

இது குறையுறவுணர்தல்.

"ஏனல் காவலிவளு மல்லள்" (பக்-485)

என்பது அவன் வரவுணர்தல்.

வெள்.

இது பாங்கிமதியுடம்பாடு முத்திறப்பட்டு நிகழும் என்கின்றது.

(இ-ள்) தலைவன் தன்பால் வந்து இரந்து குறையுற்று நிற்றலால் அவனது உள்ளக் கருத்தினையுணர்தலும், தலைவியின் உள்ளக் குறிப்பினைக் கண்டுணர்தலும், தலைவியும் தானும் ஒருங்கிருந்த நிலையில் வர அந்நிலையில் அவ்விருவரது உள்ளக் கருத்தினையுணர்தலும் எனத் தோழி, தன் கருத்துடன் அவ்விருவரது கருத்தினையும் வைத்து ஒன்றுபடுத்து உணரும் உணர்ச்சி மூவகைப்படும் என்பர் ஆசிரியர், எ-று.

பாங்கி மதியுடம்பாடாவது தலைவன் தலைவி என்னும் காதலர் இருவரது அறிவினையும் தோழி தன்னறிவினால் ஒருங்கு வைத்து ஆராய்ந்து அவ்விருவரிடையே நெருங்கிய தொடர்புண்மை துணிதல்.

குறையுறவுணர்தல் என்பது தலைவன் தோழியின்பால் குறையிரந்து நின்ற நிலையில் 'இவன் என்னை இரந்து பின் நிற்கின்றது எது கருதியோ' என ஆராய்ந்துணர்தல்.

முன்னுறவுணர்தல் எனபது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்னர்த் தலைமகளது வேறுபாடு கண்ட தோழி 'இவளது மேனி வேறுபாடு தெய்வத்தாலாயிற்றோ பிறிதொருவாற்றான் ஆயிற்றோ என ஐயுற்றுக் குறிப்பினால் உணர்தல்.

இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்பது, மேற் குறித்த ஐயவுணர்வுகளோடு நின்ற தோழி தானும் தலைவியு

1. கருத்து: நின்னிற் பிரியா நின் நிழல்போல் இங்குத் திரிந்து கொண்டிருப்பவனே! நீ பெறாதது என்ன இது?

மாகிய இருவரும் உடனிருந்த நிலைமைக்கண் தலைவன் அங்கு வந்து தோழியை நோக்கி ஊரும் பெயரும் பிறவும் வினவி நின்றானாக, அந் நிலையில் அவ்விருவர் குறிப்பும் உணர்ந்து தலைவியொடு தலைவனிடை முன்னேயுள்ள தொடர்பினை யுணர்ந்து துணிதல். தொல்காப்பியனார், தோழிக்குரியவாகச் சுட்டிய இம் மூவகையுணர்வுகளையும்,

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல்என்று.
அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி (கள-7)

எனவரும் நூற்பாவில் இறையனார் களவியலாசிரியர் எடுத்தாண்டுள்ளமை இங்கு ஒப்புநோக்கியுணரத்தகுவதாகும்.

இங்ஙனம் பாங்கி தன் அறிவினுடன் தலைவன் தலைவி என்னும் இருவர் அறிவினையும் ஒன்றுபடுத்து உணர்தலின் மதியுடம்படுத்தல் என்று பெயராயிற்று. மதி—அறிவு. உடம்படுத்தல்—ஒன்றுபடுத்தியுணர்தல்.

126. அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாளென மொழிப, (38)

ஆ. மொ,

இல.

Unless it is known by such methods, he (lover) will not proceed further (in his love-affairs).

இளம்.

இதுவும் தோழிக்கு உரியதோர் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கூறுபாட்டான் இருவர் மாட்டும் அன்புடைமை உணர்ந்தபின் அல்லது வழிபாட்டு நிலைமையாற் கூட்டத்திற்கு முயலப்பெறாள் தோழி என்றவாறு.

அஃதேல், உள்ளப் புணர்ச்சியானின்று மெய்யுறாது கூட்டத்திற்கு முயல்வார் உளர். ஆயின், அஃதெற்றாற் பெறுதும் எனின்

ஆண்டும் இருவர் மாட்டுளதாகிய அன்புடைமையான் மன நிகழ்ச்சியுளவாக அந் நிகழ்ச்சி கண்டுழியும் முயலப் பெறுமென்று கொள்க. அதனானேயன்றே 'முன்னுறவுணர்தல்' என்னும் சூத்திரத்தானும் 'புணர்ச்சியுடம்படுதல்' என்னாது' மதியுடம் படுதலொரு மூவகைய' எனப் பொதுப்பட ஓதுவாராயிற்றென்க. அவ்வன்பினான் வருநிகழ்ச்சி யுள்வழியும் இவ்விட மூன்றினும் காதலுண்மை அறியலாகும்.

நச்.

இது மதியுடம்பட்ட பின்னல்லது தலைவன் கூற்று நிகழ்த்தப் பெறானென்கின்றது,

(இ-ள்) அன்னவகையான் உணர்ந்தபின் அல்லது—அம் மூவகையானுந் தோழி மதியுடம்படுத்தபின்னல்லது பின்னிலை— இவன் ஓர் குறையுடையனென்று தோழி உய்த்துணர நிற்கு மிடத்து, முயற்சி பெறான் என மொழிப—கூற்றான் அக்குறை முடித்தல் வேண்டுமென்று முடுக்குதல் பெறானென்று கூறுப ஆசிரியர் என்றவாறு.

தோழி தன்னை வழிப்பட்டவாறு கண்டு மதியுடம்பட்ட வாறுணர்ந்து கூற்றான் உணர்த்தும்.

அது 'நெருநலு முன்னாள்' (பக். 490) என்பதனுள் 'ஆரஞர் வருத்தங் களையாயோ' என்றவாறு காண்க.

வெள்,

இதுவும் தோழிக்குரியதோர் திறம் உணர்த்துகின்றது.

(இ-ள்) மேற்குறித்த மூவகையாலும் தலைவன் தலைவி என்னும் இருவர்பாலும் ஒத்த அன்புடைமையுணர்ந்தபின் னன்றித் தன்னை இரந்து பின் நிற்கும் தலைவனது முயற்சிக்குத் தோழி இடந்தர மாட்டாள், எ-று.

அகன் ஐந்திணை ஒழுகலாற்றின் இடம்பெறும் தோழியின் செறிவும் நிறையும் செம்மையும் அறிவும் அருமையுமாகிய பெண்மைப் பண்புகள் இந்நூற்பாவால் புலப்படுத்தப் பெற்றமை உணர்தற்குரியதாகும். இத் தொல்காப்பிய நூற்பாவின் கருத்தை அடியொற்றியமைந்தது.

முன்னுற வுணரினும் அவன் குறையுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றாது

எனவரும் இறையனார் களவிய லுரையாகும். மதியுடம் படுப்பக் கூட்டம் உண்மையுணர்ந்த தோழி தலைவன் இரந்து பின்னின்ற பின்னன்றி அவன் குறையினை முடிப்பேன் எனக் கூறமாட்டாள் என்பதாம்.

இனி, 'பின்னிலை முயற்சி பெறான்' எனப் பாடங் கொண்டு 'குறையுறவுணர்தல் முதலாக மூவகையுணர்வால் தலைமகளொடு தனக்குள்ள அன்புரிமைத் தொடர்பினைத் தோழி உணர வேண்டித் தோழியை இரந்து பின்னிற்கும் முயற்சியை மேற்கொள்ளப் பெறான்' எனப் பொருள்வரைந்து, தலைவனது மறை பிறரறியா நிறையுடைமையைப் புலப்படுத்தியதாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

சிவ.

இச் சூத்திரம் தோழிக்குரியதோர் திறன் கூறுகின்றது.

(இ-ள்) தோழி முன்னுற உணர்தல் முதலிய மூன்று வகையாலும் மதியுடம்பட்ட பின் அல்லது தலைவனின் இரந்து பின்னிற்கும் முயற்சியை ஏற்றுச் செயல்பட மாட்டாள் என்றவாறு.

இச் சூத்திரத்தில் 'பின்னிலை முயற்சி பெறாள்' எனப் பாடங் கொண்டு இளம்பூரணர் ''இச் சூத்திரம் தோழிக்குரிய தோர் திறன் உணர்த்துதல் நுதலிற்று'' என்றதும், நச்சினார்க் கினியர் ''பின்னிலை முயற்சி பெறான்'' எனப் பாடங் கொண்டு 'இது மதியுடம் பட்ட பின்னல்லது தலைவன் கூற்று நிகழ்த்தப் பெறான் என்கிறது'' என்றதும் பொருத்தமே. ''தோழி தானே செவிலி மகளே'' என்னுஞ் சூத்திர முதல் 'முயற்சிக் காலத்த தற்பட நாடிப் புணர்த்தலாற்றலும் அவள் வயின்ன'' என்னும் சூத்திரம் வரையுள்ள ஐந்து சூத்திரங்களும் தோழிக் குரியனவாகவே கொண்டு இளம்பூரணர்கூற, நச்சினார்க்கினியர் இவ்வைந்தனுள் 'அன்னவகையான்' என்னும் சூத்திரம் மட்டும் இடையில் தலைவனுக்குரியதாகக் கொண்டு கூறியது அத் துணைச் சிறப்பின்று அதனால் இளம்பூரணர் 'பெறாள்' என்று கொண்ட பாடமே சிறக்கும். நச்சினார்க்கினியர் கருத்தும் கொள்ள வேண்டிப் பின்வருமாறு கொள்ளலாம். ''பின்னிலை முயற்சி கொள்ளாள் என்னாது பெறாள் என்றதனால் தோழி அன்னவகையால் உணர்ந்தபின் அல்லது தலைவன் தோழியிடம் பின்னிலை முயற்சி பெறான் எனவும் கொள்ளலாம். கொள்ளுதல்—தானே கொள்ளுதல். பெறுதல்—பிறர் கொடுக்க வாங்குதல்.

**127. முயற்சிக் காலத்து அதற்பட நாடி
புணர்த்தல் ஆற்றலும் அவள்வயின் ஆன. (39)**

ஆ. மொ.

இல்.

During his attempt to have her, examining the possibility of the Union in the proper way, the maid is capable of making the lady-love to wish for the union.

இளம்.

இதுவும் அது.

(இ-ள்) தோழி வழிமொழிந்து முயலுங் காலத்து அவன் நினைவின்கட் படுந்திறன் ஆராய்ந்து புணர்த்தலைச் செய்யும் அவளிடத்து என்றவாறு.

அஃதாவது, 'இன்னுழிச் செல்' எனவும் 'இன்னுழி வா' எனவும் தலைவியை ஆயத்துணின்றும் பிரித்துத் தனி நிறுத்திப் பட்டாங்கு கூறியும் பிறவாற்றானும் ஆராய்ந்து கூட்டுதல்.

இவ்வைந்து சூத்திரத்தானுந் தோழிக்கு உரிய மரபு[1] உணர்த்தியவாறு காண்க.

நச்.

இது தலைவன் முயற்சி கூறிய முறையே தோழி முயற்சி பிறக்குமிடங் கூறுகின்றது.

(இ-ள்) முயற்சிக் காலத்து—தலைவன் அங்ஙனங் கூடுதற்கு முயற்சி நிகழ்த்துங் காலத்தே, நாடி அதற்படப் புணர்த்தலும்—தலைவி கூடுதற்கு முயலுங் கருத்தினை ஆராய்ந்து அக்கூட்டத்திடத்தே உள்ளம்படும்படி கூட்டுதலும், அவள் வயின் ஆன ஆற்றல்—தோழியிடத்து உண்டான கடைப்பிடி[2] என்றவாறு.

---

1. மரபு—வழிவழி வரும் இலக்கணம்.
2. கடைப்பிடி — கொள்கையாகக் (கடைப் பிடித்துக்) கொண்டு செய்யும் செயல். அது ஆற்றலால் செயப் படுவது ஆதலின் அவ்வாற்றல் கடைப்பிடி எனப் பட்டது.

ஆற்றல்—ஒன்றனை முடிவு போக்கல். உம்மை—எச்சவும்மை[1] மதியுடம்படுத்தலேயன்றிக் கூட்டவும் பெறுமென்க.

இருவகைக் குறியிடம்

128. குறிஎனப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்றது என்ப (40)

ஆ. மொ.

இல.

The act of fixing the meeting place can be either at night or in day—they say.

இளம்.

என்பது, மேல் 'களஞ் சுட்டுக் கிளவி கிழவியதாகும்' என்றார். அதற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குறி என்று சொல்லப்படுவது இரவினானும் பகலினானும் இருவரும் அறியச் சொல்லப்பட்ட இடத்தை யுடைத்து என்றவாறு.

எனவே இரவிற் குறி, பகற்குறி என இருவகைப்படும் என்பது கொள்ளப்படும்.

நச்.

அங்ஙனங் கூட்டுகின்றவட்குக் கூடுதற்குரிய காலமும் இடனுங் கூறுகின்றது.

(இ-ள்) குறியெனப்படுவது—குறியென்று சொல்லப்படுவது, இரவினும் பகலினும்—இரவின்கண்ணும்பகலின்கண்ணும், அறியத் தோன்றும் ஆற்றது என்ப—தலைவனுந் தலைவியுந்தானும் அறியும்படி தோன்றும் நெறியையுடைய இடம் என்றவாறு.

---

1. எச்சவும்மை — இறந்தது தழீஇய எச்சவும்மை. அது 'குறையுறவுணர்தல்' முதலிய முன்னர்க் கூறிய மூன்றையும் தழுவுகிறது.

'நெறி' என்றார் அவன் வருதற்குரிய நெறி இடமென்றற்கு 'அது' என்று ஒருமையாற் கூறினார்.[1] தலைப் பெய்வதோரிட மென்னும் பொதுமை பற்றி. இரவு களவிற்குச் சிறத்தலின் முற்கூறினார். ''அறியத் தோன்றும்' என்றதனாற் சென்று காட்டல் வேண்டா நின்று காட்டல் வேண்டுமெனக் கொள்க.[2]

இரவுக் குறியிடம்

129. இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான (41)

ஆ. மொ.

இல.

When it is not possible to enter into the home, the night-meeting place will be in the premises of the house at such distance as to hear the speech of the people in the house.

இளம்.

என்றது இரவுக் குறிக்கு இடமுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரவுக் குறியாம் இடமே இல்லகத்துள் மனையகம் புகாவிடத்துக்கண்[3] மனையோர் கிளவி கேட்கும் அணிமைத்தாம் என்றவாறு.[4]

---

1. படுவது என்று ஒருமையாற் கூறாமல் 'படுவன' எனப் பன்மையாற் கூறல் வேண்டும்; இரவுக் குறி பகற்குறி என இருவகைக் குறிகளையும் குறித்தலின். இரவுக் குறியிடம் பகற்குறியிடம் என இரு வகையில் இருந்தாலும் 'இடம்' என்பது பொதுச் சொல்லாக அமைதலின் அவ்வாறு ஒருமையிற் கூறினார்.
2. அறியுமாறு தோன்றும் என்பதனால் அக்குறியிடம் இன்னது என்பதை அங்குச் சென்று காட்டுதல் வேண்டுவதில்லை. இருந்த இடத்திருந்தே காட்டுதல் வேண்டும் என்பது புலனாம். 'அறியக் காட்டல்' என்றால் சென்று காட்டல் எனக் கொள்ளலாம்.
3. புகாஅக்காலையான: புகாக்கால் என்பது புகாவிடம் என்னும் பொருளது. கால்-இடம். கால் காலை என ஐசாரியை பெற்றது.
4. இல்லகம்-வீட்டின் எல்லையிடம். அதாவது தோட்டம்,

எனவே, மனைக்கும் எயிற்கும், நடுவணதோரிடம் என்று கொள்ளப்படும்.

நச்.

இது நிறுத்த முறையானே இரவுக் குறியிடம் உணர்த்து கின்றது.

(இ-ள்) அகமனைப் புகாஅக்காலை ஆன இரவுக் குறியே— உண்மனையிற் சென்று கூடுதற்கு உரித்தல்லாத முற்காலத்து உண்டான இரவுக் குறியே.

ஏகாரம்-பிரிநிலை.

இல்லகத்துள்ளும் மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே- இல்வரைப்பினுள்ளதாகியும் மனையோர் கூறிய கிளவி கேட்கும் பிறமனையிடத்ததாம் என்றவாறு.

அல்லகுறிப்பிட்டதனை ஒருவாற்றான் உணர்த்திய காலத்து அவன் அதுகேட்டு ஆற்றுவனென்பது கருதி 'மனையோர் கிளவி கேட்கும்வழியது' என்றார்,[1] ஏகாரம் ஈற்றசை. என்றது, இரவுக் குறி. அம் முயற்சிக் காலத்து அச்ச நிகழ்தலின் அகமனைக்கும் புறமதிற்கும் நடுவே புணர்ச்சி நிகழுமென்றதாம். அகமனையிற் புகாக்காலை யெனவே இரவுக்குறி அங்ஙனஞ் சிலநாள் நிகழ்ந்த பின்னர் அச்சமின்றி உண்மனையிற் சென்று கூடவும் பெறு மென்பதுங் கூறியதாம்,[2]

(உ-ம்) :

> "அஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து
> துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்"

(அகம்-198)

அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, பள்ளியிடம் முதலியன அடங்கிய பேரெல்லைப் பகுதி.

மனையகம் — தோட்டம் முதலிய இன்றி வீட்டினை மட்டும் குறிக்கும் இடம்.

1. மனையோர் கிளவி கேட்கும் வழியது எனக் கூறியதன் நோக்கம் வீட்டிலுள்ளார் பேசும் பேச்சுக் கேட்கும் படியான அணிமையிடம் என்பதையுணர்த்தல் வேண் டும் என்பது மட்டுமன்றி அல்ல குறிப்பட்டதனைத் தலைவி தோழியிடம் கூறும்போது அக் கூற்றைத் தலைவன் கேட்கும்படியான அணிமையிடமாதல் வேண்டும் என்பதை அறிவிப்பதேயாம்,

2. சிவ. விளக்கம் பார்க்க,

''மிடையூர் பிழியக் கண்டனெ னிவளென
வலையல் வாழிவேண் டன்னை''

(அகம்-158)

''அட்டிலோலை தொட்டனை நின்மே''

(நற்றிணை-300)

என வருவன பிறவும் மனையோர் கிளவி கேட்கும் வழியது.

''உளைமான் றுப்பி னோங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
வுரைத்த சந்தி னூர லிருங்கதுப்
பைதுவர லசைவளி யாற்றக் கைபெயரா
வொலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகன் மழகளி றுறங்கு நாட
னார மார்பி னரிஞிமி றார்ப்பத்
தாரன் கண்ணிய னெஃகுடை வலத்தன்
காவல ரறித லோம்பிப் பையென
வீழாஅக் கதவ மசையினன் புகுதந்
துயங்குபட ரகல முயங்கித் தோண்மணந்
தின்சொ லளைஇப் பெயர்ந்தனன் றோழி
யின்றெவன் கொல்லோ கண்டிகு மற்றவ
னல்கா மையி னம்ப லாகி
யொருங்குவந் துலக்கும் பண்பி
னிருங்கூ ழோதி யொண்ணுதற் பசப்பே''

(அகம்-102)

இது மனையகம் புக்கது.

தலைவி புறத்துப் போகின்றாளெனச் செவிலிக்கு ஓர் ஐயம் நிகழ்ந்தவழிப் பின்னர் மனையகத்துப் புணர்ச்சி நிகழுமென் றுணர்க.

சிவ.

இரவுக் குறிக் கூட்டமானது தலைவியின் வீட்டு எல்லையில், வீட்டில் உள்ளார் பேசும் பேச்சுக் கேட்கும் **அணிமையில்,**

ஓரிடத்து நிகழ்வதாகும். அதுவும் தலைவன் தற்செயலாகச் செல் பவன்போல் தலைவியின் மனையகத்துச் செல்லாத காலத்தி லாம்.

மனையகத்துச் செல்லும் காலம் முன்னர் (17), ''புகாஅக் காலைப் புக்கெதிர் பட்டுழிப், பகாஅ விருந்தின் பகுதி'க் என்பதிற் கூறினார். தலைவன் மனையகம் புகும் காலம் புணர்ச் சிக்கு இடையூறாகும்; அவன் பின்னர் வரைதற்கே முயல்வன் ஆதலின்.

நச்சினார்க்கினியர், இரவுக் குறிக் கூட்டமானது, வீட்டின் எல்லையில் மனையோர் பேசும் பேச்சுக் கேட்கும் அணிமையி லான இடத்தில் இரவின் முற்பகுதிக் காலத்தில் நிகழும் என்றும், இங்ஙனம் சில காலம் நிகழ்ந்த பின்னர் வீட்டினுள்ளும் இரவின் பிற்பகுதியில் நிகழும் என்றும் கொண்டு உரை கூறினார். இவர் கூற்றை வெள்ளைவாரணனார் பின்வருமாறு மறுப்பர்:

''களவில் தலைவன் இரவுக்குறியில் மனையகம் புக்க தாக இவ்வுரையில் எடுத்துக் காட்டப்பட்ட அகநானூறு 102ஆம் பாடலில் 'வீழாக்கதவம் அசையினன்' என்பது அடிக் கடித் திறக்கப்படாத புறமனைக் கதவினையே யாதலின் அஃது ஆசிரியர் குறித்த இரவுக்குறிக்குரிய இடமாகவே கொள்ளற் பாலதாம். தலைவி இரவுக் குறியில் இல்வரைப்பினை' கடந்து புறத்துப் போயினள் எனின், அஃது இரவுக்குறி எனப் படாது என்பதும், தலைவி மனையகத்தை நீங்கி மனைப்புறத்தே போகின்றாள் எனச் செவிலிக்கு அச்சம் நிகழ்ந்து அவள் துயிலா ளாகிய பின்னரும் அச்சமின்றி மனையகத்துப் புணர்ச்சி நிகழும் என்பதும் அச்சமும் நாணமும் மடனும் உடைய தலைவியையும் பெருமையும் உரனும் உடைய தலைவனையும் மலரினும் மெலி தாகிய காமப்புணர்ச்சியின் செயலறியாத பொதுமக்கள் குழுவில் சேர்க்கும் ஆதலின் அவ்வுரை விளக்கம் ஏற்புடையதன்று என்று உணர்தல் வேண்டும்.''

இம் மறுப்பு ஏற்புடையதுபோல் தோன்றினும் தலைவன் தலைவியர் இரவினும், பகலினும் கூடுவதும் பொதுமக்கள் செயல்போல்வதே யாதலின் ஏற்பதற்கில்லை.

பகற் குறியிடம்

150. **பகற்புணர் களனே புறன்என மொழிப**
அவள்அறி வுணர வருவழி யான **(42)**

ஆ. மொ.

இல.

The day meeting-place will be outside the house, the way to which being known to her.

இளம்.

என்றது பகற்குறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பகற்குறியாகிப் புணருமிடம் எயிற்புறன்[1] என்று சொல்லுவர். ஆண்டுந் தலைமகள் அறிவுற்று வரும் இடனாகல் வேண்டும் என்றவாறு.

நச்.

இது முறையானே பகற்குறி உணர்த்துகின்றது.

(இ-ள்) அவள் அறிவு உணர வருவழி ஆன பகற்புணர் களனே—களஞ் சுட்டிய தலைவி அறிந்தவிடந் தலைவன் உணரும்படியாக வருவதோரிடத்து உண்டான பகற்புணருங் குறியிடத்தை, புறன்என மொழிப—மதிற்புறத்தே யென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

அறிவு, ஆகுபெயர்[2].

(உ-ம்)

''புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
மின்னே ரோதியென் றோழிக்கு''

எனவும்,

---

1. எயிற்புறம் என்றது வீட்டின் எல்லையாக அமைந்த எயிலின் புறத்தேயுள்ள இடங்களையும், ஊர்ப்புறத்தே தலைவி ஆயத்துடன் போந்து விளையாடும் பொழிலின்கண் அமைந்த மறைப்பிடத்தையும் ஆம்.

2. அறிவு-அறிவு என்பது அறிந்த இடத்துக்கு ஆகி வருதலின் ஆகுபெயர்.

"பூவேய் புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே"

(அகம்-240)

எனவும் வருவன பிறவுங் கொள்க.

வெள்.

இது பகற் குறியாவது இதுவெனக் கூறுகின்றது.

(இ-ள்) பகலிற் காதலர் இருவரும் தனிமையில் கண்டு அளவளாவுதற்குரிய பகற்குறியாகிய இடம் ஊரின்புறம் என்பர் ஆசிரியர். அதுதானும் தலைமகள் அறிவுற்று உணர்ந்து வரும் வழியினையுடையதாம் நிலைமைக் கண், எ—று.

அவள் என்றது தலைமகளை. புறம் என்றது இளமகளிர் புறத்தே போய் விளையாடுதற்குரிய பொழில் சூழ்ந்த ஊர்ப் புறத்தினை. தலைமகள் அறிவுற்று உணர்ந்து தலைவனைத் தலைப்படுதற்குரிய வழியுடன் கூடியவிடமே பகற் குறியாகக் கொள்ளத் தக்கது என்பார், 'அவள் அறிவுணர வருவழியான புறமே பகற்புணர் களன்' என்றார் ஆசிரியர். 'பகற் குறிதானே இருப்பினும் வரையார் (20) எனவரும் இறையனார் களவியல் சூத்திரம் பகற்புணர்களனே புறம் ஆதலைப் புலப்படுத்துவதாம்.

அல்ல குறிப்படுதல்

131. அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே (43)

ஆ. மொ.

இல.

She may be mis-led somtimes when she mistakes some for his sign.

பி. இ. நூ.

இறை. 17.

அல்ல குறிப்படுதலும் அவ்வயின் உரித்தே
அவள்வர வறியுங் குறிப்பின் ஆன.

இளம்.

(இ-ள்) அல்ல குறிப்படுதலுந் தலைமகட்கு உரித்து, தலைவன் செய்த குறி மயங்கிய பொருத்தத்தொடுவரின் என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டது;

மயங்கிய அமைவு ஆவது—அவன் செய்யும் குறியோடமைவுடையன.[1]

நச்.

இது தோழி அல்ல குறிப்படுமாறு கூறுகின்றது. 'இரு வகைக் குறி பிழைப்பாகியவிடத்தும்' என்புழித் தலைவி அல்ல குறிப்படுதல் கூறிற்று.

(இ-ள்) அவன் குறி—தலைவன் தன் வரவு அறிவிக்கும் கருவிகள், மயங்கிய அமைவொடுவரின்—அவன் செயற்கையானன்றி இயற்கைவகையானே நிகழ்ந்து தோழி மயங்கிய அமைதியோடே வருமாயின், அல்ல குறிப்படுதலும் — குறியிடத்துக் கூட்டுங்கால் அவ்வல்லவாகிய குறியிலே மயங்குதலும், அவள் வயின் உரித்து—அத் தோழியிடத்து உரித்து என்றவாறு.

வெறித்தல் வெறியாயினாற் போலக் குறித்தல் குறியாயிற்று.[2] அக்கருவி புனலொலிப்படுத்தல் முதலியன.

(உ-ம்)

''கொடுமுண் மடற்றாழைக் கூன்புற வான்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி''[3] (ஐந்-ஐம்-49)

இஃது அல்ல குறிப்பட்டமை சிறைப் புறமாகக் கூறியது.

---

1. அவன் செய்யும் குறியோடு ஒத்து நிகழ்வன. அவை தலைவன் புள் எழுப்பாத நிலையில் ஏதோ ஒரு காரணத்தால் புட்கள் எழுந்து ஆர்ப்பரித்தலும், குளத்தில் கல்லெறிந்து ஒலியுண்டாக்காத நிலையில் குளக்கரையில் உள்ள மரத்தின் காய் வீழ்ந்து ஒலியெழுப்புதலும் போல்வன.

2. வெறி வெறித்தல்-அதாவது வெறித்துப் பார்த்தல் அது போலக் குறித்தல் குறியாயிற்று.

3. கருத்து: பக்கம் 312-ல் காண்க.

"எறிசுறா நீள்கட லோத முலாவ
நெறியிறாக் கொட்கு நிமிர்கழிச் சேர்ப்பன்
அறிவுறா வின்சொ லணியிழையாய் நின்னிற்
செறிவறா செய்த குறி"[1]

(திணை-ஐம்-43

இஃது அவன் மேற்குறி செய்கின்றமை தலைவிக்குக் கூறியது.

"இடுமண லெக்க ரகன்கானற் சேர்ப்பன்
கடுமான் மணியரவ மென்று—கொடுங்குழை
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தாள் சிறுகுடியர்
உள்ளரவ நாணுவ ரென்று"[2]

(ஐந்-எழு-59)

இஃது இவன் இனி ஆண்டுவரிற் சுற்றத்தார் அறிவரென்றது.

"வீழ்பெயற் கங்குனின் விளியோர்த்த வொடுக்கத்தால்
வாழுநாள் சிறந்தவள் வருந்துதோள் தவறுண்டோ
தாள்செறி கடுங்காப்பிற் றாய்முன்னர் நின்சாரல்
ஊழுறு கோடல்போ லொல்வளை யுகுபவால்"[3]

(கலி-48)

இது தலைவற்குப் பிற்றை ஞான்று கூறியது.

---

1. கருத்து: என் அறிவினைவிட்டு நீங்காத இன்சொல்லையும் அணியிழையையும் உடைய தலைவியே! சுறா மீன் எறிந்து ஆடும் நீண்ட கடலலைகள் முன்னும் பின்னும் உலவ கழியிடங்களில் இறால் மீன் சுழலும் நிமிர்ந்த உப்பங்கழிச் சேர்ப்பன் நம் வீட்டின் புறத்தே செய்த இரவுக் குறியிடங்கள் நிறைதலை நீங்கா (ஆயினும் பயனில்லை).

2. கருத்து: பக்கம் 312-ல் காண்க.

3. கருத்து: தாழிட்டு அடைத்ததுபோலும் காவலிருக்கும் தாய் முன்னர் இவளது வளையல்கள் நின்மலைச் சாரலில் கோடல் மலர் வீழ்வதுபோல் வீழ்கின்றன. இதற்குக் காரணம் நின் வருகைக்காக நீ செய்யும் ஒலியை மழை பெய்யும் இரவில் கேட்டுக் கொண்டிருக்கும் அமைதியால் வாழும் நாள்களாற் சிறந்தவளான இவளது வருத்தம் மிக்க தோள்களிடம் தவறு ஏதேனும் உண்டோ?

''அன்னை வாழியோ அன்னைநம் படப்பை
பொம்ம லோதி யம்மென் சாயல்
மின்னென நுடங்கிடைக் கின்னிழ லாகிய
புன்னை மென்காய் போகுசினை யிரிய
வாடுவளி தூக்கிய வசைவிற் கொல்லோ
தெண்ணீர்ப் பொய்கையுள் வீழ்ந்தென
வெண்ணினை யுரைமோ வுணர்குவல் யானே''[1]

இது தோழி தாய்க்குக் கூறுவாளாய் அல்லகுறி அறிவித்தது.

''மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்ப
னணிநல முண்டகன்றா னென்றுகொ லெம்போற்
றிணிமண லெக்கர்மே லோதம் பெயரத்
துணிமுந்நீர் துஞ்சா தது''[2]

(ஐந்-எழு-60)

இது, தோழி இல்லுளிருந்து சிறைபுறமாகக் கூறியது.

திங்கள்மேல் வைத்துக் கூறுவனவும் ஓதத்தின்மேல் வைத்துக் கூறுவனவும் பிறவுங் கொள்க.

''அரவளை மென்றோ ளனுங்கத் துறந்து
கரவல மென்றாரைக் கண்ட திலையா
லிரவெலா நின்றாயா லீர்ங்கதிர்த் திங்காள்''[3]

''புன்னை நனைப்பினும் பூஞ்சினை தோயினும்
பின்னிருங் கூந்தலென் றோழி நடையொக்கு
மன்னம் நனையாதி வாழி கடலோதம்''[4]

என வருவன பிறவுங் கொள்க.

---

1. கருத்து: பக்கம் 313 -ல் காண்க.
2. கருத்து: கடலானது அலை அலையத் தூங்காத காரணம் எம்மைப் போலவே தானும் தன் சேர்ப்பன் தன் அணி நலம் உண்டு பிரிந்தான் என்பதுவோ?
3. கருத்து: குளிர்ந்த கதிர்களையுடைய திங்களே! நீ இரவெல்லாம் மேலே நின்றாயே என்னுடைய தோள் வருந்தத் துறந்து முன்னாளில் நின்னைப் பிரியேம் என்று சொல்லிப் பிரிந்தாரை வரக் கண்டதில்லையோ.
4. கருத்து: கடலலையே நீ புன்னையை நனைத்தாலும் பூக்களுடைய கிளைகளை மூழ்கத் தோய்ந்தாலும்

'படுதல்' எதிர்ப்படாமையை உணர்த்திற்று. ஆண்டுத் தன்மேல் தவறேற்றாது தலைவன் பொழுதறிந்து வாராமையின் மயங்கிற்றென்று அமைவு தோன்றலின் 'அமைவு' என்றார். அது,

''தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே''[1]

(குறுந்-121)

என்றாற்போல வரும். இதன் பயன் தலைவி துன்பந் தனதாகத் துன்புறுத்தலாயிற்று.

வெள்.

இது தலைமகள் அல்லகுறிப்படுமாறும் அதற்குரிய காரணமும் கூறுகின்றது.

இ-ள் தலைவன் தன்னாற் குறிக்கப்பட்ட அடையாளங்களோடு இயற்கை நிகழ்ச்சிகள் ஒத்துத் தோன்றி மயங்கிய நிலையில் இரவுக்குறிக்கண் வருவானாயின் அவன் செய்த குறியல்லாத இயற்கை நிகழ்ச்சிகளை அவனால் செய்யப்பட்ட குறிகளாகப் பிறழவுணர்ந்து குறியிடத்துச் சென்று தலைவனைக் காணாது திரும்புதலும் தலைமகட்குரித்து, எ-று.

குறிமயங்கிய அமைவொடு அவன் வரின் அல்லகுறிப்படுதலும், அவள்வயின் உரித்து என இயையும். புள்ளெழுப்புதல் புனலொலிப்படுத்தல் முதலாகத் தலைவன் செய்யும் அடையாளங்களை யொத்துப் பறவைகள் வேற்றினப் பறவை கண்டு எழுதலும் காய் முதலிய நீர் நிலையில் துடுமென வீழ்தலும் முதலிய இயற்கை நிகழ்ச்சிகள் மயங்கித் தோன்றிய நிலைமைக்கண் அவற்றைத் தலைவன் செய்த அடையாளங்களாக எண்ணிக் குறியிடத்தே சென்று தலைவனைக் காணப் பெறாது அல்லகுறிப்பட்டு மீளுதலும் தலைமகட்கு உரியதாகும் என்பது இந்நூற்பாவினால் உணர்த்தப்படும் செய்தியாகும்.

அல்லகுறிப் படுதலும் அவ்வயின் உரித்தே
அவன்வர வறியும் குறிப்பினான (17)

என் தோழியின் நடையையொத்து நடக்கும் அன்னத்தை மட்டில் நனையாதே வாழி.

1 கருத்து: தலைவன் தான் குறியிடத்து வந்து சேராத் தவற்றுக்கு என் தோள்கள் பசலையுற்றன.

எனவரும் இறையனார் களவியல் இத் தொல்காப்பிய நூற்பாவை அடியொற்றி அமைந்தமை காண்க.

சிவ.

இச் சூத்திரம் தலைவியும் தோழியும் அல்லகுறிப்படுமாறும் அதன் காரணமும் கூறுகின்றது.

(இ-ள்) தலைவனால் நான் வந்தமை தெரிவிக்கும் அடையாளமாக இன்னது என்று குறிக்கப்பட்ட அடையாளமானது வேறோர் காரணத்தால் மாறுபட்ட அமைவொடு நிகழவரின் அதன் காரணமாக அல்லகுறிப்பட்டுத் தலைவனைக் காணாமல் மீளல் அவளிடத்தும் உரித்து என்றவாறு.

'அல்ல குறிப்படுதலும் அவள்வயின் உரித்து' என்பதில் உம்மையை அல்லகுறிப்படுதல் 'அவள் வயினும் உரித்து' எனப் பிரித்துக் கூட்டுக. 'அவள் வயினும்' என்ற உம்மையால் தோழி வயினும் உரித்து எனக் கொள்க.

அல்லகுறி—அன்மையாகிய அடையாளம். குறியாவது புள்ளெழுப்புதலால் புள்ளொலியெழச் செய்தல் குளத்து நீரில் காய் (கல்) எறிந்து ஒலியெழச் செய்தல் போல்வனவாகிய அடையாளம். நல்ல பொருள்போல அல்லகுறி என்பது குறிப்பு வினைப் பெயரெச்சத் தொடர்.

இச்சூத்திரம் தலைவி அல்ல குறிப்பிடுமாறு கூறுகின்றது என்பர் இளம்பூரணர். இச்சூத்திரத்து அவள் என்றது தலைவியை எனக் கொண்டார். அவள் என்றது தோழியை எனக்கொண்டு தோழி அல்ல குறிப்படுமாறு கூறுகின்றதாகக் கொண்டார் நச்சினார்க்கினியர். அதற்கு அவர் கூறும் காரணம் ''இருவகைக் குறிபிழைப்பாகிய விடத்தும்'' என்னும் சூத்திரத்தில் தலைவி அல்லகுறிப்படுதல் கூறப்பட்டு விட்டது என்பதே. ''இருவகைக் குறி பிழைப்பாகிய'' என்னும் சூத்திரத்தின் இறுதியடியின் முதலில் 'கிழவோன் மேன' என்று இளம்பூரணர் பாடம் கொண்டு அச்சூத்திரம் தலைவன் கூற்று நிகழும் இடம் கூறுவதாகக் கொள்ள, நச்சினார்க்கினியர் 'கிழவோள் மேன' எனப் பாடங் கொண்டு தலைவி கூற்று நிகழும் இடம் உணர்த்துவதாகக் கூறினார். அதனால் அச் சூத்திரத்தில் தலைவிக்கு இருவகைக் குறிபிழைப்பு

(அல்லகுறிப்படுதல்) நிகழ்தல் உண்டு என்பது கூறப்பட்டு விட்டமையின்' அல்ல குறிப்படுதலும்' என்னும் இச்சூத்திரத்தில் மீண்டும் கூறுதல் கூறியது கூறலாகும் என்பதால் தோழி அல்ல குறிப்படுமாறு கூறுவதாகக் கூறினார். 'கிழவோன் மேன என்னும் பாடமே அமையும் எனக் கொள்ளும்போது இச்சூத்திரத்து 'அவள்' என்றது தலைவியையே என்னலாம். எனினும் தலைவன் செய்யாத குறி (அடையாளம்) வேறொன்றால் மயங்கியவழி மனையகத்திலிருந்து தலைவியைக் குறியிடத்து உய்த்துச் செல்லுதலும் தோழியின் கடமையாதலின் அவ்வாறு உய்ப்பதன் முன்னர்த் தலைவன் இருப்பது அறிய அக்குறியிடம் வரும்போது அவன் இல்லாமை கண்டு மீளவும் நேரும். அதனால் தோழியும் அல்ல குறிப்படுதல் உண்டு. எனவே நச்சினார்க்கினியர் கூறிய உரையும் ஓரளவில் ஏற்புடையதே. அதனால் தலைவியும் தோழியும் தான் அவள் என்னும் வேற்றுமையின்றியிருத்தலின் அவள் என்றது தோழியையும் குறிக்கும் எனக்கொண்டு அல்ல குறிப்படுதல் தலைவிக்கு உரியது மட்டுமன்றித் தோழிக்கும் உரியதாகக் கொள்ளலாம். எனினும் இச்சூத்திரத்து 'அவள்' என்றது முதலில் தலைவியையே குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும். ஏன்எனின் 'இருவகைக் குறிபிழைப்பாகிய விடத்தும்' என்பதில் நச்சினார்க்கினியர் கருத்துப்படித் தலைவியின் கூற்று நிகழ் இடங்களுள் ஒன்றாக இருவகைக் குறிபிழைப்பாகிய இடம் என்பது கூறப்பட்டதேயன்றி குறிபிழைப்பாவது யாது என்பதும் காரணமும் கூறப்படவில்லை; அவை இச்சூத்திரத்தில் தான் கூறப்பட்டன, ஆதலின்.

குறியிடப் புறனடை

132. ஆங்குஆங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒருசிறை யான **(44)**

ஆ. மொ.

இல.

He may also wonder here and there mistaking some for her sign in the place of meeting.

இளம்.

இதுவுமது.

(இ-ள்) அவ்வவ்விடத் தொழுகும் ஒழுக்கமுந் தலைவி மாட்டு உண்டு, ஓங்கிய சிறப்பினையுடைய ஒரு பக்கத்து என்றவாறு.

ஒரு சிறையென்றது மனத்தானும் மொழியானும் மெய்யானும் கற்புடை மகளிர் ஒழுகும் ஒழுக்கத்தின் மனத்தான் ஒழுகும் ஒழுக்கமும் உண்டு என்றவாறு.

நச்

இது தலைவனும் அல்லகுறியால் வருந்துவனென்கின்றது.

(இ-ள்) ஓங்கிய சிறப்பின்—தனது மிக்க தலைமைப்பாட்டினாலே பொழுதறிந்து வாராமையின், ஒரு சிறை ஆன ஆங்கு—தான் குறிசெய்வதோரிடத்தே தன்னானன்றி இயற்கையான் உண்டான அவ்வல்ல குறியிடத்தே, ஆங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டு—தலைவியுந் தோழியுந் துன்புறுமாறு போலத் தலைவனுந் துன்புற்று ஒழுகும் ஒழுக்கமும் உண்டு என்றவாறு.

முன்னர் நின்ற 'ஆங்கு' முன்னிற் சூத்திரத்து அல்ல குறியைச் சுட்டிற்று, பின்னர் நின்ற 'ஆங்கு' உவம உருபு.

(உ-ம்)

''தாவில் நன்பொன் தைஇய பாவை
விண்டவ ழிளவெயிற் கொண்டுநின் றன்ன
மிகுகவி னெய்திய தொகுகுர லைம்பாற்
கிளையரி நாணற் கிழங்கு மணற்கின்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
நயவன் றைவருஞ் செவ்வழி நல்யா
ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி
யணங்குசா லரிவையை நசைஇப் பெருங்களிற்
றினம்படி நீரிற் கலங்கிய பொழுதிற்
பெறலருங் குரைய ளென்னாய் வைகலு
மின்னா வருஞ்சுர நீந்தி நீயே
யென்னை யின்னற் படுத்தனை மின்னுவசிப்
புரவுக்கால் கடுப்ப மறலி மைந்துற்று
விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇப்
படைநிலா விலங்குங் கடன்மரு டானை

மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
யோங்குதிரைப் பெளவ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃக நிறத்துச்சென் றழுந்த
கூர்மத னழியரோ நெஞ்சே யானாது
எளிய ணல்லோட் கருதி
விளியா வெவ்வந் தலைத்தந் தோயே''[1]

(அகம்-212)

''வடமலை மிசையோன் கண்ணில் முடவன்
றென்றிசை யெல்லை விண்புகு பொதியிற்
சூருடை நெடுஞ்சுனை நீர்வேட் டாங்கு
வருந்தினை வாழியெ னுள்ளஞ் சாரற்
பொருதுபுறங் கண்ட பூநுத லொருத்தல்
சிலம்பிழி பொழுதி னத்தம் பெயரிய
வல்லிய மடுக்கத் தொடுங்கு நல்வரைக்
கல்லக வெற்பன் மடமகண்
மெல்லியல் வனமுலைத் துயிலுற் றோயே''[2]

---

1. கருத்து: நெஞ்சமே! பொன்பாவை இளவெயிலில் இருந்தது போன்ற மேனியழகும், ஐம்பாலும், முள் எயிறும், இனிய சொல்லும், வருத்துதலும் உடைய அரிவையை பெறாமல் களிறுகள் படியக் கலங்கும் நீர் போல நீ கலக்கம் அடைந்தபொழுது அவள் பெறுதற் கரியள் என்று கருதாமல் கொடிய அரிய சுரவழி யிடத்தை நீந்தி வந்து என்னைத் துன்பப்படுத்தினாய். எளியவளல்லாத அவளையே நினைந்து மீளாத் துயரில் என்னை ஆழ்த்தினாய். அதனால் நீ குட்டுவனது வேல் நின்மார்பில் அழுந்த நின் வலியழிவதாக.

2. கருத்து: பிற விலங்குகளைப் பொருது புறங் கண்ட எருதினைக் கொண்டு மலையின் இழியும்போது வழி பெயர்ந்த புலியானது அடுக்கத்தில் ஒடுங்கும்படியான கானக வெற்பன் மடமகளாகிய மெல்லியலின் அழகிய முலையில் முன்னம் துயில் கொண்ட நெஞ்சமே! வட மலையில் உள்ள கண்ணில்லாத முடவன் தென்திசைப் பொதியில் உள்ள வானைத் தோயும் உச்சியில் உள்ள சூர்மகள் காக்கும் சுனைநீரை வேட்டதுபோல அவ ளைப் பெற இக்குறியிடம் வந்து வருந்தினாய் வாழி.

இவை அல்ல குறிப்பட்டு நீங்குகின்றான் நெஞ்சிற்குக் கூறியன.

வெள்.

இது மேற்கூறிய இருவகைக் குறிகட்கும் எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) காதலர் இருவர் உள்ளத்தே உயர்ந்து வளர்தற் குரிய சிறப்பினதாகிய பேரன்பினைப் பேணி வளர்க்கும் காவல மைந்தன தனிமையிடமாகிய நிலைமைக்கண் அவ்வப் பொழுதும் இடமுமாகிய சூழ்நிலைக்கேற்ப, மறைந்த ஒழுக்கமாகிய களவிற் கூட்டம் நிகழ்தலும் உண்டு, எ-று

இரவுக்குறி பகற்குறி எனத் தம்மாற் குறித்துக் கொள்ளப் பட்ட இடங்களேயன்றி அவ்வாறு குறித்துக் கொள்ளப்படாது காதலர் இருவர் தனிமையிற் கண்டு அளவளாவுதற்கேற்ற சூழ் நிலையும் பாதுகாப்பும் உடையதாய்த் தன்னியல்பில் நேர்படும் இடமும் பொழுதும் களவிற் கூட்டம் நிகழ்தற்குரிய பகற்குறி இரவுக்குறிகளுக்குரிய குறியிடங்களாக அமைதலும் உண்டு என்பது இந் நூற்பாவிற் கூறப்படும் சிறப்பு விதியாகும்.

ஓங்கிய சிறப்பின் ஒரு சிறையான ஆங்காங்கொழுகும் ஒழுக்க மும் உண்டு என இயைத்துப் பொருள் கொள்க. ஓங்கிய சிறப் பாவது, காதலர் இருவரது உள்ளமும் மேல்மேல் உயர்ச்சி பெறு தற்குரியதாய் அவ்விருவர் உள்ளத்தே கிளர்ந்து தோன்றும் பேரன்பாகும். ஒரு சிறை—பிறர் அறியாவாறு பாதுகாவலமைந்த தனியிடம். 'ஒரு சிறை நெஞ்சோடுசாவுங் காலை' (கற்பியல்-4) என்புழி 'ஒரு சிறை' என்னுஞ் சொல் 'தனித்து' என்ற பொரு ளில் வழங்கப் பெறுதல் இங்கு ஒப்பு நோக்கியுணரத் தருவ தாகும்.

தலைவன் இயல்பு

133. மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கங் கிழவற்கு இல்லை (45)

ஆ. மொ.

இல.

During the period of secret love, the lover has no life being deprived of play and festival with his lady-love.

இளம்.

என்றது, தலைவற்கு உரிய இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) களவொழுக்கத்து முகுர்த்தமும் நாளும் துறந் தொழுகும் ஒழுக்கம் தலைவற்கு இல்லை என்றவாறு.

என்றதனான் ஆண்டு அறத்தின் வழுவினானல்லன், தலைவி மாட்டுத் தலையளி குறைதலான் என்றவாறு.

நச்.

இது தலைவற்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) ஓரையும் நாளுந் துறந்த ஒழுக்கம்—தீய இராசி யின் கண்ணுந் தீயநாளின் கண்ணுங் கூட்டத்தைத் துறந்த ஒழுக்கம், கிழவோற்கு மறைந்த ஒழுக்கத்து இல்லை—தலை வற்குக் களவொழுக்கத்தின் கண் இல்லை. எனவே கற்பின் கணுள என்றவாறு.

ஒழுக்கமாவது சீலமாதலிற் சீலங்காரணத்தால் துறப்பது தீதாகிய இராசியும் நாளுமென்பது பெற்றாம். நாளாவது அவ்விராசி மண்டில முழுவதும், கிழத்தி துறந்த ஒழுக்கம் முந்நாளல்லதெ ன (122) முற்கூறிற்று. இதனான் அன்பு மிகுதி கூறினார். இதற்குப் பிராயச்சித்தம் அந்தணர் முதலிய மூவர்க் கும் உண்மை 'வந்த குற்றம் வழிகெட வொழுகலும்' (146) எனக் கற்பியலிற் கூறுப.

வெள்.

இது களவொழுக்கத்தின் கண் தலைமகனுக்காவதோர் கடமை யுணர்த்துகின்றது.

(இ-ள்) உலகத்தார் அறியாது காதலர் இருவரும் மறைந் தொழுகும் ஒழுகலாறாகிய களவொழுக்கம் காரணமாகத் தான் மேற்கொள்ளுதற்குரிய விளையாட்டும் விழாவும் ஆகிய சிறப்புடைய நிகழ்ச்சிகளை நீங்கி யொழுகும் ஒழுகலாறு தலை வனுக்கு இல்லை, எ-று.

மறைந்த ஒழுக்கம் என்றது களவொழுக்கத்தினை. ஓரை என்னும் சொல் விளையாட்டு என்னும் பொருளில் வழங்கும்

தனித்தமிழ்ச் சொல்லாகும். 'கோதை யாயமொடு ஓரைதழீஇ (அகம் 49) எனவும், 'ஓரையாயம்' (அகம் 219, குறுந். 48) எனவும்) 'விளையாடாயத்து ஓரையாடாது (நற்-2) எனவும் ஓரை என்னுஞ் சொல் விளையாட்டு என்னும் பொருளில் சங்கச் செய்யுட்களில் பயின்றுள்ளமை காணலாம். இந்நூற்பாவில் இடம் பெற்றுள்ள 'ஓரை' யென்னுஞ் சொல்லும் விளையாட்டு என்னும் பொருளிலேயே ஆளப் பெற்றுள்ளமை கூர்ந்துணர்தற் குரியதாம். நாள்-திருவிழா. 'மாயோன் மேய ஓண நன்னாள்' (மதுரைக் காஞ்சி 591) எனவும், 'ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய் (தேவாரம் 3-47-4) எனவும் நாள் என்பது திருவிழா என்னும் பொருளிற் பயில வழங்குதல் இங்கு ஒப்புநோக்கற் பாலதாகும்.

தலைவன் தான் விரும்பி மேற்கொண்டொழுகும் களவொழுக்கம் காரணமாகத் தான் தன் தோழர்களுடன் தவறாது கலந்து கொள்ளுதற்குரிய சிறப்புடைய விளையாட்டினையும் ஊர் மக்கள் பலரும் காணத் தான் மேற்கொண்டு நிகழ்த்துதற் குரிய திருவிழாச் செயல்முறைகளையும் கைவிட்டு விலகியொழுகு வானாயின் அந்நிகழ்ச்சிகளில் அவன் கலந்து கொள்ளாமைபற்றி அவனைக் குறித்துப் பலரும் வினவாநிற்க, அது காரணமாக அவனது களவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாம் ஆதலின் களவொழுக்கம் ஒழுகுந் தலைவன் ஓரையும் நாளும் ஆகிய இவற்றை நீங்கி ஒழுகுதல் கூடாது எனத் தலைவனுக்குரிய இன்றியமையாத கடமையினை வற்புறுத்தும் நிலையிலமைந்தது இந்நூற்பாவாகும்.

சிவ.

இச்சூத்திரம் ஓரை நாள் இவற்றின் காரணமாகத் தலைவியைத் தலைவன் காணாது நீங்கி யொழுகும் ஒழுக்கம் தலைவனுக்கு இல்லை என்கின்றது.

(இ-ள்) மறைந்த வொழுக்கமாகிய களவொழுக்கத்தில் ஓரையினாலும் நாளினாலும் தலைவன் தலைவியைக் காணாது நீங்கியொழுகும் செயல் தலைவனுக்கு இல்லை என்றவாறு.

ஓரை-முழுத்தம். நாள்-நாண்மீன். அவை இரண்டும் ஈண்டுத் தீய ஓரையையும் தீயநாளினையும் உணர்த்தும். துறந்து ஒழுகுதல் என்பது நல்லோரைக்கும் நன்னாளுக்கும் ஏலாது. இயற்கைப் புணர்ச்சியன்று இருவரும் ஒருவரையொருவர் காணவேண்டும் என்ற உணர்வின்றித் தற்செயலாய் ஒரு பொழிலகத்து எதிர்ப்

படுதலின் தலைவனுக்கு அன்று ஓரையும் நாளும் கருதும் எண்ணமேயில்லை. இயற்கைப்புணர்ச்சிப் பின்னர்த் தொடர்ந்து இடந்தலைப்பாடு முதலியன நிகழ்தலின் இருவர்க்கும் ஒருவரை யொருவர் கண்டு அளவளாவுவதிலேயே நாட்டமுண்மையின் ஆங்காங்கும் ஓரையும் நாளும் நினைத்தற்கில்லை. எனவே களவோழுக்கத்தில் யாண்டும் அவற்றை நினைத்தற்கு இடம் இல்லை.

ஓரை, நாள் என்பனவற்றுக்கு இளம்பூரணர் பொதுவாக நல்லோரை தீயவோரை, நல்லநாள் தீயநாள் என்பனவற்வைக் கொண்டு அவற்றை கருதாமல் களவொழுக்கம் கொள்ளுதல் தலைவனுக்கு இல்லை எனப் பொருள் கொண்டார். அதனால் நல்லோரை நன்னாள்கருதியே ஒழுகுவான் என்று கூற வேண்டி,

> ''என்றதனால் ஆண்டு அறத்தின் வழுவினானல்லன்
> தலைவி மாட்டுத் தலையளி குறைதலான் என்றவாறு''

என எழுதினார்.

நச்சினார்க்கினியர் ஓரை நாள் என்பனவற்றிற்குப் பின்னர் வரும் 'துறந்த ஒழுக்கம்' என்பதற்கேற்பத் தீயவோரை தீய நாள் எனக் கொண்டார். இது பொருந்துவதே.

வெள்ளை வாரணனார் ஓரை என்பதற்கு 'விளையாட்டு' என்றும், நாள், என்பதற்கு 'விழா' என்றும் பொருள் கொண்டு, களவொழுக்கத்தில் தலைவன் நண்பருடன் கூடி விளையாடும் விளையாட்டையும் ஊரவருடன் கூடி மகிழும் திருவிழாவையும் துறந்து ஒழுகும் ஒழுக்கம் இல்லை எனப் பொருள் எழுதினார்.

ஓரை என்பது விளையாட்டுப் பொருளில் வந்துள்ளமைக்கு அவர் காட்டிய ''கோதையாயம் ஓரைதழீஇ'' (அகம் 49), ஓரையாயம் (அகம்-219, குறுந்-48) என்னும் இலக்கியச் சான்றுகள் பொருந்துவன. ஆனால் நாள் என்பது திருவிழாப் பொருளில் வந்ததற்கு 'மாயோன்மேய ஓண நன்னாள்' (மதுரை-591), ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய் (தேவா 3-47-4) என்னும் இலக்கியச் சான்றுகள் அத்துணைச் சிறப்பினவல்ல. ஓணநாள், ஆதிரை நாள் என வந்தன அவ்வந் நாள்களில் நடத்தப்பெறும் விழாக்களைக் குறிப்பன. தனித்து நாள் எனும் சொல் 'விழா' எனும் பொருளில் வந்தமைக்குச் சான்று வேண்டும்,

இனிக் களவில் ஒருவழித் தணத்தல் என்பது ஒரு பிரிவுண்டு. அதற்குக் காரணம் கூறப்படவில்லை. ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டுத் தலைவன் தலைவியைக் காண வருதல் சில நாள் தடைபடுதல் உண்டு. அக்காரணங்களுள் ஓரை (விளையாட்டு) நாள் (விழா) எனும் காரணங்களும் அமையலாம். அதனால் வெள்ளைவாரணனார் கூறியவுரையையும் இரட்டுற மொழிதலாற் கொள்ளலாம் என்றாலும் ஒரு வழித் தணத்தற் பிரிவு ஒன்றிரண்டு நாள்களில் நிகழ்வதில்லை. பல நாள்களாக அமைவது. ஆதலினாலும், களவொழுக்கத்திருக்கும் தலைவனுக்கு அவை நிகழும் காலம் முன்னரே அறியவருமாதலின் தலைவியிடம் சொல்லியே செல்வன் ஆதலினாலும் அவ்வாறு விழாவும் விளையாட்டும் பற்றிப் பிரிந்ததாகச் சங்கச் செய்யுள்கள் காணப்படாமையாலும் அவர் கருத்து கருதி ஆய்தற் குரியது.

134. ஆறினது அருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உளப்பட அதனோ ரற்றே (46)

ஆ. மொ.

இல,

Difficulty of the route, disheartening. fear, and obstacles also need not deprive of him play and festival with his lady-love.

இளம்.

இதுவும் அது.

(இ-ள்) நெறியினது அருமையும் மனன் அழிவும் அஞ்சுதலும் இடையூறும் தலைவன் மாட்டு நிகழா என்றவாறு.

நச்.

இதுவுந் தலைவற்கு இல்லன கூறுகின்றது.

(இ-ள்) உளப்பட—நிலவும் இருளும் பகைவரும் போல்வன பற்றிச் செலவழுங்குதல் உளப்பட, ஆறினது அருமையும்—நெறியினது அருமை நினைந்து கூட்ட நிகழ்ந்தவழிக் கூறுதலும், அறிவும்—குறைந்த மனத்தனாதலும், அச்சமும்—பாம்பும் விலங்கும் போல்வன நலியுமென்று அஞ்சுதலும், ஊறும்—அக்

கருமத்திற்கு இடையூறு உளவாங்கொலென்று அழுங்குதலும், அதனோரன்ன — கிழவற்கு இல்லை என்றவாறு.

கிழவற்கில்லையெனவே கிழத்திக்குந் தோழிக்கும் உளவா யிற்று. அவை முற்காட்டியவற்றுட் காண்க.

வெள்.

இதுவும் தலைமகனுக்குரியதோர் இயல்புணர்த்துகின்றது.

(இ-ள்) நெறியினது அருமையும் மனன்அழிவும் அச்சமும் இடையூறுகளும் உட்பட உளவாகும் தடைகள் காரணமாகத் தான் மேற்கொண்டுள்ள களவொழுக்கத்தினைத் தவிர்தலும் தலைவனுக்கில்லை, என்றவாறு.

ஆறினது அருமையாவது நடத்தற் கியலாதவாறு ஏற்றிழிவும் பரலும் முள்ளும் புதரும் புனலாறும் செறிந்தவிருளும் உடைய அரிய வழியனதாதல். அழிவு-மனன்அழிவு. சோம்பல். அச்சம்- ஆடவனுக்கு ஏலாத அச்சவுணர்வு. ஊறு-கொடிய விலங்கு முதலியவற்றால் வழியிடையே உளவாம் இடையூறுகள். உளப் பட—இவை காரணமாக ஆற்றின தருமையும் அழிவும் அச்சமும் ஊறும் காரணமாக. மறைந்த ஒழுக்கத்தினைத் துறந்து தலைமக ளைக் களவிற் காணாறு தவிர்தல் தலைவனுக்கு இல்லை என் பார், 'அதனோரற்றே' என்றார். களவொழுக்கம் ஒழுகும் தலைவன் ஆற்றினது அருமை முதலிய தடைகளை எண்ணித் தன் ஆருயிர்க் காதலியாகிய தலைவியைக் கண்டு அளவளாவும் காதற் கேண்மையினைத் தவிர்வான் அல்லன் என அவனது காதற் கடமையினை வற்புறுத்தும் முறையில் அமைந்தது இந் நூற்பாவாகும்.

தந்தை முதலியோர் களவறிதல்

135. தந்தையும் தன்ஐயும் முன்னத்தின் உணர்ப (47)

ஆ. மொ.

இல.

The father and the elder-brother will know her secret lover by inference.

இளம்.

என்றது தந்தையும் தன்னைமாரும் களவு உணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தந்தையும் தன்னையரும் குறிப்பின் உணர்ப என்றவாறு.

எனவே, கூற்றினான் உரைக்கப் பெறார் என்றவாறு.

நச்.

இது தந்தையுந் தன்னையுங் களவொழுக்கம் உணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) தந்தையுந் தன்னையும் ஒருவர் கூறக்கொள்ளாது உய்த்துக் கொண்டுணர்வர் என்றவாறு.

நற்றாய் அறத்தொடு நின்ற வழியும்,
''இருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை''
(கலி-39)

என்றலின் முன்னர் நிகழ்ந்த வெகுட்சி நீங்கி உயத்துக் கொண்டு உணர்ந்தாராயிற்று.

136. தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும் (48)

ஆ. மொ.

இல.

Knowing by her mother is as by the faster-mother.

இளம்.

என்றது, நற்றாய்க்கு உரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நற்றாய் களவொழுக்கம் அறிவுறுதல் செவிலியோடொக்கும் என்றவாறு. செவிலி கவலுந்துணைக் கவலுதலல்லது தந்தையையும், தன்னையன்மாரையும் போல வெகுடலிலள் என்றவாறு. அவர் வெகுள்வரோ எனின்,

"காமர் கடும் புனல்' எனத் தொடங்கும் கலித்தொகைப் பாட்டினுள்,

"அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத் தாள்யாய்" (கலித்-39)

எனத் தாய் வெகுளாமை காணப்பட்டது.

"அவரும் எதிரிகளை நோக்கிக் கண்சேந்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி" (கலி-39)

என்றதனான் வெகுட்சி பெற்றாம்.

நச்.

இது தந்தை தன்னைக்கு நற்றாய் களவொழுக்கம் உணர்த்து மாறு கூறுகின்றது.

(இ-ள்) தாய் அறிவுறுதல்-நற்றாய் களவொழுக்கம் உண் டென்று அறிந்த அறிவு தந்தைக்குந் தன்னைக்குஞ் சென்று உறுந்தன்மை, செவிலியோடு ஒக்கும்—செவிலி நற்றாய்க்கு அறத் தொடு நின்று உணர்த்திய தன்மையோடு ஒக்கும் என்றவாறு.

என்றது, செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாற்போல நற்றாயுந் தந்தைக்குந் தன்னைக்கும் அறத்தொடு நிற்கும் என்ற வாறாயிற்று, அது,

"எனவாங், கறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குற்றுரைத்தாள் யாய்[1] (கலி-39)

என்பதனால் உணர்க.

இனி இதற்கு நற்றாயுஞ் செவிலி உணர்ந்தாற்போல உணரு மென்று பொருள் கூறில் 'தாய்க்கும் வரையார்' (116) என்னுஞ் சூத்திரம் வேண்டாவாம்.

களவு வெளிப்படத் தலைவன் காரணன்

**137. அம்பலும் அலரும் களவு வெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும்** (49)

ஆ மொ.

இல,

As the talk of some or the talk of many about the love-affair makes known the secret love, the cause for such talk devolves upon the lover.

இளம்.

என்றது களவு வெளிப்படுப்பார் அவர் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அம்பல் என்பது முகிழ்த்தல். அஃது ஒருவரொருவர் முகக்குறிப்பினாற் றோற்றுவித்தல். அலராவது சொல்லுதல். அதனானே இவை இரண்டும் களவினை வெளிப்படுத்தலின் அதற்குக் காரணமாவான் தலைவன் என்றவாறு. என்னை, அவனை யறிந்துழியல்லது இவை நிகழாமையின். தலைவி வேறுபாட்டான் ஆகாதோ எனின், ஆண்டு எற்றினான் ஆயிற்று என ஐயம் நிகழ்தலல்லது துணிவு பிறவாதாம் என்று கொள்க.

நச்.

இது களவு வெளிப்படுதற்கு நிமித்தமாவான் தலைமகனென்கின்றது.

(இ-ள்) அம்பலும் அலருங் களவு வெளிப்படுத்தலின்— முகிழ்த்தலும் பலரறியச் சொல் நிகழ்த்தலுங் களவொழுக்கத்தினை வெளிப்படுத்தலான், அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும்—அவ்விடத்து அவ்வெளிப்படை நிகழ்த்துதற்கு நிமித்தமாயினான் தலைமகனாம் என்றவாறு.

தலைவனை அறிந்த பின் அல்லது முற்கூறிய ஐயம் நிகழாமையின் தலைவி வருத்தம் நிமித்தமாகா. ஆண்டு ஐயம் நிகழ்தலன்றித் துணிவு தோன்றாமையின். வரைவு நீட்டிப்போனுந் தலைவி தமர்க்குக் கூறி வெளிப்படுப்போனுந் தலைவனே என்றுணர்க. அது,

''நீரொலித் தன்ன பேஎர்
அலர்நமக் கொழிய அழப்பிரிந்தோரே''

(அகம்-211)

''நெறியறி செறிகுறி புரிதிரி பறியா
வறிவனை முந்துறீஇ (கலி-39)

என்றாற்போல வருவனவும் பிறவும் வெளிப்படையாமாற்றாற் கண்டுணர்க.

வென்.

இது களவு வெளிப்படுதற்கு காரணமாவார் இவர் என்பது உணர்த்துகின்றது.

(இ-ள்) இரவினும் பகலினும் வந்து செல்லும் தலைவனைக் கண்டு புலப்படுத்தும் அம்பலும், இன்னானோடு இன்னாளி டையது நட்பு எனச் சொல்லால் விரித்துரைப்பதாகிய அலரும் காதலர் இருவரது களவொழுக்கத்தினைப் பலரும் அறிய வெளிப் படுத்தலால் அத்தகைய களவு வெளிப்படுத்தற்குக் காரண மாவான் தலைவனே, எ-று.

அம்பல்-அரும்பல், மகளிரது முகக் குறிப்பினால் களவொ ழுக்கம் அரும்பு போன்று சிறிது வெளிப்படுதல். அலர் - அலர் போன்று கூற்றினால் விரிந்து வெளிப்படுதல். அங்கு அதன் முதல்வன்-அந் நிலையில் அக்களவின் வெளிப்பாட்டிற்குக் காரண மாவான். முதல்-காரணம். அம்பலும் அலரும் தோன்றிய பின் னல்லது இம் மறை வெளிப்படாதாதலின், இக் களவு வெளிப் பாட்டிற்குத் தலைவனே காரணம் ஆவான் என்பது கருத்து.

அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின் எனவரும் இத் தொல்காப்பியத் தொடரை

அம்பலும் அலரும் களவு (22)

எனவும்,

'வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி' எனவும் இரண்டு சூத்திரங்களாக இறையனார் களவியல் ஆசிரியர் அமைத்துக் கொண்டுள்ளார்.

வரைதல் வகை

138. வெளிப்பட வரைதல் படாமை வரைதல்என்று
ஆயிரண்டு என்ப வரைதல் ஆறே (50)

ஆ. மொ.

இல.

The way of marriage is of two kinds: the marriage after the secret love is known and the marriage before it is known.

இளம்.

இது வரையும்பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) களவு வெளிப்பட்டபின் வரைதலும் களவு வெளிப் படாமை வரைதலும் என அவ்விரண்டென்று சொல்லுவர் வரையும் நெறி என்றவாறு.

இதனால் சொல்லியது இருவாற்றானும் அறன் இழுக்கா தென்றவாறு. அஃது இழுக்காதவாறு வருகின்ற சூத்திரத்தான் உணர்க.

நச்.

இது வரையும்பகுதி இனைத்தென்கின்றது.

(இ-ள்) வெளிப்பட வரைதல்—முற்கூறிய வாற்றானே களவு வெளிப்பட்ட பின்னர் வரைந்து கோடல், படாமை வரை தல்—அக் களவு வெளிப்படுவதன் முன்னர் வரைந்து கோடல், என்று ஆயிரண்டு என்ப வரைதல் ஆறே—என்று கூறப்பட்ட அவ் விரண்டே என்று கூறுவர் ஆசிரியர் வரைந்து கொள்ளும் வழியை என்றவாறு.

> "சேயுயர் வெற்பனும் வந்தனன்
> பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே"
> (கலி-39)

இது வெளிப்பட்ட பின் வரைவு நிகழ்ந்தது[1]

> "கொல்லைப் புனத்த வகில்சுமந்து கற்பாய்ந்து
> வானி னருவி ததும்பக் கவினிய
> நாட னயனுடைய னென்பதனா னீப்பினும்
> வாடன் மறந்தன தோள்"[2] (ஐந்-எழு. 2)

இது வெளிப்படாமல் வரைவு நிகழ்ந்தது.

---

1. 'அம்பலும் களவுப் புணர்ச்சியும் எல்லாம் நீங்கும்படி வெற்பனும் வந்தான் இனிக் கண்ணும் பொலிக' என்ற தில் அலர்நீங்க வெற்பன் வரைவொடு வந்தான் என்ப தால் களவு வெளிப்பட்டபின் வரைதலாயிற்று.

2. இதில் நாடன் நயன் உடையன் என்பதனால் என்தோள் கள் அவன் பிரிந்திருந்த காலங்களில் வாடலை மறந்தன

"எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே"
(அகம்-195)

என்றாற் போல்வன வெளிப்படுவதன் முன்னர்க் கொண்டு தலைக்கழிந்துழிக் கொடுப்போரின்றியுங் கரணம் நிகழ்ந்தமை யின் அதுவும் வெளிப்படாமல் வரைந்ததாம்.

களவில் பிரிவு

**139. வெளிப்படை தானே கற்பினொடு ஒப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருள்ஆக
வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை (51)**

ஆ. மொ.

இல.

Though the love being known publicly is to be considered as equal to the wedded love, the lover will not have the right of parting with her for the sake of three aims mentioned above before the celebration of the marriage.

இளம்.

இது தலைவற்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) களவு வெளிப்படுதல் கற்பினோடொப்பினும் மேற் சொல்லப்பட்ட மூன்று பொருளாக வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை என்றவாறு.

அவையாவன முற்கூறிய ஓதற்பிரிவும், பகைவயிற்பிரிவும் தூதிற்பிரிவும். எனவே பொருள்வயிற்பிரிதலும் வேந்தர்க்

என்றதால் தலைவியுடல் மெலிவு காணாமல் மறைத்தாள் என்பதும் அதனால் ஊரவர் இவர் களவையறிந்திலர் என்பதும் புலனாகும். இது தலைவி தோழியிடம் மணந்து இல்லறம் நிகழ்த்தும் காலத்தில் கூறியதாம்,

குற்றுழிப்பிரிதலும் காவற் பிரிதலும் நிகழப்பெறும் என்ற வாறாம்.

நச்.

இது முதற் கூறிய வரைவு நிகழ்த்தாது பிரியும் இடம் இது வெனவும் பிரியலாகாவிடம் இதுவெனவுங் கூறுகின்றது.

(இ—ள்) வெள்ப்படைதானே கற்பினொடு ஒப்பினும்— முற்கூறிய வெளிப்படைதானே கற்பினுள் தலைவி உரிமை சிறந் தாங்கு அருமை சிறந்து கற்போடொத்ததாயினும், ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக—முற்கூறிய ஓதல் பகை தூதென்ற மூன்றும் (25) நிமித்தமாக, வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை—வரைவிடை வைத்துப் பிரிதல் தலைமகற்கில்லை என்ற வாறு.

மூன்றுமென முற்றும்மை கொடாது கூறினமையின் ஏனைப் பிரிவுகளின் வரையாது பிரியப்பெறும் என்றவாறாயிற்று. அவை வரைதற்குப் பொருள்வயிற்பிரிதலும் வேந்தற்குற்றுழியும் காவற்குப்பிரிதலுமென மூன்றுமாம்.

(உ-ம்)

''பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதைய
டிணிமண லடைகரை யலவ னாட்டி
யசையின ளிருந்த வாய்தொடிக் குறுமக
ணலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும்
பெறலருங் குரைய ளாயி னறந்தெரிந்து
நாமுறை தேஎ மரூஉப்பெயர்ந் தவனோ
டிருநீர்ச் சேர்ப்பி னுப்புட னுழுதும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தன மடுத்தன மிருப்பிற்
றருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
கண்டிரண் முத்தங் கொண்டு ஞாங்கர்

தேனிமி ரதன்கரைப் பகுக்குங்
கானலம் பெருந்துறைப் பரதவன மக்கே''

(அகம்-280)

இதனுள், ஈண்டுள்ள பொருள் கொடுத்தாற் பெறல் அரிய ளாயின் தன்னை வழிப்பட்டால் தந்தை தருவனோ? அது நமக்கு அரிதாகலின் இன்னும் பொருள் நாம் மிகத் தேடிவந்து வரைதுமெனப் பொருள்வயிற் பிரியக் கருதியவாறு காண்க.

''பூங்கொடி மருங்குற் பொலம்பூ ணோயே
வேந்து வினைமுடித்து வந்தனர்
காந்தண் மெல்விரற் கவையினை நினைமே''

(அகம்)

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தான் வரைவு மலிந்தமை தோழி கூறியது,

ஏனைய வந்துழிக் காண்க.

ஓதுதற்கு ஏவுவார் இருமுது குரவராதலின் அவர் வரையாமற் பிரிக வென்றார்.

பகைவென்று திறைகோடற்குப் பிரியுங்கால் அன்புறு கிழத்தி துன்புற்றிருப்ப வரையாது பிரிதலின்று. இது தூதிற்கும் ஒக்கும்.

மறை வெளிப்படுதல் கற்பென்று (499) செய்யுளியலுட் கூறுதலின் இதனை இவ்வோத்தின் இறுதிக் கண் வைத்தார். கற்பினோடொப்பினும் பிரிவின்றெனவே கற்பிற்காயிற் பிரிவு வரைவின்றாயிற்று.

வெள்.

இது தலைமகனுக்குரியதோர் இயல்பு உணர்த்துகின்றது.

(இ-ள்) களவு வெளிப்பாடு கற்பியல் வாழ்க்கையோடு ஒப்பதாயினும் முன்னர்க் கூறப்பட்ட ஓதல், பகை, தூது என்னும் இம்மூன்றும் காரணமாகத் தலைவியை மணந்து கொள்ளாது நெட்டிடைப் பிரிந்து செல்லுதல் தலைவனுக்குரிய செயலாதல் இல்லை, எ-று.

'ஞாங்கர்க் கிளந்த மூன்று' என்பன 'ஓதல் பகையே தூது இவை பிரிவே (அகத்-27) என முன்னர்க் கூறப்பட்ட மூவகைப் பிரிவுகள். ஞாங்கர்-முன். பொருள்-காரணம். ஓதல் பகை தூது என்னும் இம்மூன்றும் காரணமாகத் தலைமகளை வரையாது பிரிதல் இல்லையெனவே, வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலும் வேந்தற்கு உறுதுணையாகப் பிரிதலும் நாடு காத்தற்குப் பிரிதலும் தலைமகனுக்கு உண்டு என்றவாறாம்.

களவு வெளிப்பட்டபின் வரையுங் காலத்து 'இவற் குரியவள் இவள்' என எல்லாராலும் முன்னமே அறியப் பெற்றமையால் அவ்விருவரும் வரைதற்கு முன்னரே கற்புக் கடம் பூண்டவரா யினமையின் அவர் தம் வாழ்க்கை கற்பியல் வாழ்க்கையொடு ஒத்ததாயிற்று என்பார், 'வெளிப்படைதானே கற்பினோடொப் பினும்' என்றார் ஆசிரியர். இத்தொடரை

> வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும் தந்தை
> தாமே தின்னைய ரென்றாங்கு அன்னவர் அறியப்
> பண்பாகுமே (26)

எனவரும் நூற்பாவில் இறையனார் களவியல் ஆசிரியர் இவ்வாறே எடுத்தாண்டுள்ளமை தொல்காப்பியத்திலுள்ள களவியலையும் கற்பியலையும் அடியொற்றியெழுந்தது இறைய னார் களவியல் என்னும் உண்மையை நன்கு புலப்படுத்துவ தாகும்.

களவியல் முற்றிற்று.

சூத்திர முதற் குறிப்பகராதி

(எண்-பக்க எண்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
புதிய வெளியீடுகள்

		ரூ	பை
1.	Chieftains of the Sangam Age	20	00
2.	காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீயும்	18	00
3.	பாரெலாம் பரந்த தமிழர்	25	00
4.	Selected Poems of Bharathidasan-Translation		
	Tamil-English	60	60
5.	Tamil-Malayalam	60	00
6.	Tamil-Kannada	60	00
7.	Tamil-Telugu	60	00
8.	உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள்-அடைவு	35	00
9.	சங்கத் தமிழரின் மனித நேய மணிநெறிகள்	24	00
10.	தோட்டுக்காரி கதை	28	00
11.	குணவாகடம்	40	00
12.	குசலவர் சுவாமி கதை	36	00
13.	தேரையர் அந்தாதி	33	00
14.	புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை	27	00
15.	சிவகிரி குமர சதகம்	39	00
16.	எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-1	47	00
17.	A Comparative Study of Tamil and Japanese		
18.	தமிழும் பிற துறைகளும்	15	00
19.	பெண்ணியம் (அ.சொ.) முனைவர் இரா. பிரேமா வெ.எண். 190	25	00
20.	விலங்கியலும் தமிழியலும் (அ.சொ.) டாக்டர் ஏ.த. சோதிநாயகம், வெ.எண். 189	10	00
21.	தமிழும் தெலுங்கும் (அ.சொ.) முனைவர் தா. சா. மாணிக்கம், வெஎண். 188	15	00
22.	தமிழ் ஆய்வுக் களங்கள் (தொ.நூ.) முனைவர் ந. கடிகாசலம், வெ.எண். 187	70	00
23.	வ.உ.சி.யும் தமிழும் (அ சொ.) முனைவர் அ. சங்கரவள்ளி நாயகம் வெ.எண். 186	18	00
24.	தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள் (அ.சொ.) முனைவர் வீ.ப.கா. சுந்தரம், வெ.எண். 185	14	00
25.	புதுமைப் பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம் (அ.சொ.) டாக்டர் நா. ஆறுமுகம், வெ.எண். 184	20	00
26.	கனகாபிஷேக மாலை திறனாய்வு (அ.சொ.) முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன் வெ.எண். 183	16	00
27.	இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு (அ. சொ.) முனைவர் து. சீனிச்சாமி, வெ.எண். 182	20	00
28.	பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்இலக்கியம் முனைவர் ச. சிவகாமி, வெ. எண். 181	60	00
29.	தொல்காப்பியம்-பொருளதிகாரம்-பொருளியல் பேரா. ஆ. சிவலிங்கனார் (தொ.கு.) வெ.எண். 180	32	00